த. பா. நி. (க. வெ) வரிசை எண் -801

பொதுத்துறைத் தொழிலமைப்புகள்

(பட்டப்படிப்பிற்குரியது)

(திருத்தப்பட்ட பாடத்திட்டத்தின்படி வெளியிடப்படுகின்றது)

2

ஆசிரியர்
இர. அன்பழகன், எம்.காம்.,
வணிகவியல் பேராசிரியர்,
அ. அ. அ. கலைக் கல்லூரி,
செய்யாறு, வ. ஆ.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

First Edition — April, 1978
Number of Copies— 2,000

T.N.T.B.S. (C. P.) No. 801

© Government of Tamilnadu

PUBLIC ENTERPRISES

R. ANBALAGAN

Price Rs. 8-20

Published by the Tamilnadu Text book Society under the Centrally Sponsored Scheme of Production of books and literature in regional languages at the University level, of the Government of India in the Ministry of Education and Social Welfare (Department of Culture), New Delhi.

This book has been printed on concessional paper made available by the Government of India.

Printed by
Stree Seva Mandir Press,
T. Nagar, Madras-17.

அணிந்துரை

(திரு. செ. அரங்கநாயகம், தமிழகக் கல்வி அமைச்சர்)

தமிழைக் கல்லூரிக் கல்வி மொழியாக ஆக்கிப் பதினேழாண்டுகள் ஆகிவிட்டன. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் இளங்கலை வகுப்புவரை மாணவர்கள் தங்கள் பாடங்கள் அனைத்தையும் தமிழிலேயே கற்று வந்தனர். 1969ஆம் ஆண்டிலிருந்து அறிவியல் பாடங்களையும் தமிழிலேயே கற்பிக்க ஏற்பாடு செய்துள்ளோம். தமிழிலேயே கற்பிப்போம் என முன்வந்துள்ள கல்லூரி ஆசிரியர்களின் ஊக்கம், பிற பல துறைகளில் தொண்டு செய்வோர் இதற்கெனத் தந்த உழைப்பு, தங்கள் சிறப்புத் துறைகளில் நூல்கள் எழுதித்தர முன்வந்துள்ள நூலாசிரியர்கள் தொண்டுணர்ச்சி இவற்றின் காரணமாக இத் திட்டம் நம்மிடையே மகிழ்ச்சியும் மன நிறைவும் தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது. இவ்வகையில் கல்லூரிப் பேராசிரியர்கள் கலை, அறிவியல் பாடங்களை மாணவர்களுக்குத் தமிழிலேயே பயிற்றுவிப்பதற்குத் தேவையான பயிற்சியைப் பெறுவதற்கு, மதுரைப் பல்கலைக்கழகமும், சென்னைப் பல்கலைக்கழகமும் ஆண்டுதோறும் எடுத்துவரும் பெருமுயற்சியைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும்.

வரலாற்றியல், அரசியல், உளவியல், பொருளியல், மெய்ப் பொருளியல், புவியியல், புவியமைப்பியல், மனையியல், கணிதவியல், இயற்பியல், வேதியியல், உயிரியல், வானியல், புள்ளியியல், விலங்கியல், தாவரவியல், பொறியியல், சட்டவியல் ஆகிய எல்லாத் துறைகளிலும் மூல நூல்கள், மொழிபெயர்ப்பு நூல்கள் என்று இரு வகையிலும் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் நூல்களை வெளியிட்டு வருகிறது.

இவற்றுள் ஒன்றான பொதுந்துறைத் தொழிலமைப்புகள் என்னும் இந்நூல் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தின் 801 ஆவது வெளியீடாகும். கல்லூரித் தமிழ்க் குழுவின் சார்பில் வெளியான 35 நூல்களையும் சேர்த்து இதுவரை 836 நூல்கள் வெளிவந்துள்ளன. இந் நூல் மைய அரசு, கல்வி, சமூக நல அமைச்சகத்தின் 'மாநில மொழியில் பல்கலைக்கழக நூல்கள் வெளியிடும் திட்ட'த்தின்கீழ் வெளியிடப்படுகிறது.

தமிழில் பயிலும் மாணவர்கள் உலக மாணவர்களிடையே சிறந்த இடம்பெறவேண்டும் என்பதே நம் குறிக்கோளாகும். கல்லூரிகளிலும் பல்கலைக் கழகங்களிலும் கலையியற் பாடங்களையும், அறிவியற் பாடங்களையும், தொழில்நுட்ப அறிவுப் பாடங்களையும் பயிலுகின்ற மாணவர்கள், அவற்றைத் தமிழில் பயில வேண்டும் என்பதை வலியுறுத்தி வருவதற்குக் காரணம், தமிழறிவு வளர வேண்டும் என்பதைவிட, தமிழ் மக்களின் அறிவு ஆற்றல் எளிதாக, விரைவாக வளரவேண்டும் என்பதுதான். 'எதிலும் தமிழ்; எங்கும் தமிழ்' என்னும் குறிக்கோளை நிறைவேற்ற வேண்டிய கடப்பாடு தமிழக ஆசிரியப் பெருமக்களையும் மாணவர்களையும் சார்ந்ததாகும். தமிழ்நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பல்வகை உதவிகளுக்கும் ஒத்துழைப்புக்கும் நம் மனம் கலந்த நன்றி உரியதாகுக!

செ. அரங்கநாயகம்

முன்னுரை

அற்றைய நாள்களில் ஆங்கிலேய அரசு தலையிடாமை (Laissez - Faire) என்ற கொள்கையின் போர்வையில், நமது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு, எவ்வித முயற்சியும் மேற்கொள்ளவில்லை. நாம் சுதந்திரம் பெற்றபோது, நமது நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திப் பொருளாதார நடவடிக்கைகளை விரிவுபடுத்துவது இந்திய அரசின் தலையாய கடமைகளுள் ஒன்றாகியது. நாட்டில் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தவும், சமதர்மப் பொருளாதாரத்தை உருவாக்கவும் வாணிகத்தில் தானே நேரடியாக ஈடுபடவேண்டுவதன் இன்றியமையாமையை அரசு உணர்ந்தது. அதன் விளைவே பொதுத்துறைத் தொழிலமைப்புகளாகும். பொருளாதார வளர்ச்சியில் பங்கு கொண்டு, அதை விரைவுபடுத்துவது, நாட்டில் சரிசமத் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துவது, வேலைவாய்ப்புகளை அதிகரிக்கச் செய்து மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகிய முக்கிய நோக்கங்களுடன் தோற்றுவிக்கப்பட்டதே, 'பொதுத்துறைத் தொழிலமைப்புக'ளாகும்.

பொதுத்துறை தேவையா? பொதுத்துறைத் தொழிலமைப்புகளால் இலாபமீட்ட முடியுமா? தனியார்துறைத் தொழில்களைப் போன்று திறமையுடன் நடைபெறுமா? என்பன போன்ற வினாக்கள் அனைவர் மனத்திலும் நிலவின. இவ் வினாக்களுக்கெல்லாம், விடையளிக்கும் வகையில் இற்றைய பொதுத்துறைத் தொழிலமைப்புகள் செயற்படுகின்றன. பொதுத்துறையில் அமைக்கப்படாத தொழிலே இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது.

'பொதுத்துறைத் தொழிலமைப்புகள்' என்னும் இந்நூல் அவைகளின் அமைப்பு முறை, விலைக்கோட்பாடு, தன்னுட்சியுரிமை, பொதுப் பொறுப்புடைமை, சாதனைகள், நிருவாகப் பிரச்சினைகள் போன்றனைத்து விவரங்களையும் விளக்கும் வகையில் எழுதப் பெற்றிருக்கிறது, வாணிகவியலைச் சிறப்புப் பாடமாகக் கற்று வரும் பி. காம். மாணவர்களின் தேவையைக் கருதி எழுதப் பெற்றிருப்பினும், பொதுத்துறையைப்பற்றி அறிய விரும்பும் வணிகர்களும், பொதுமக்களும் படித்துப் பயனுறும் வண்ணமும் அமைக்கப்பெற்றிருக்கிறது. தேவையான விவரங்களை அளிக்கும் வகையில் பல அட்டவணைகள் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

ஆசிரியர்

பொருளடக்கம்

பக்கம்

1. அறிமுகம் ... 1

அறிமுகம்—தொழிலமைப்பு என்பதன் பொருள்—தனியார்துறைத் தொழிலமைப்புகள் — பொதுத் துறைத் தொழிலமைப்புகள் — பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் சிறப்பியல்புகள்— நோக்கங்கள்— வரலாறு.

2. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் பொதுத் துறையின் பங்கு ... 15

பொதுத்துறையின் நோக்கங்கள் — பொதுத் துறைக்கு எதிரான வாதங்கள்.

3. பொதுத்துறைத் தொழில்களின் அமைப்பு முறைகள் ... 35

பொதுத்துறைக்கேற்ற தொழில்கள் — அமைப்பு முறைகள் — துறைவழி நிருவாகம் — நன்மைகள், குறைபாடுகள் — ஏற்ற தொழில்கள் — பொதுப் பொறுப்புரிமைக்குழு — தனி முகவர் வழி நிருவாக முறை — பொதுக் கூட்டுரு முறை — நன்மைகள், குறைபாடுகள்—மற்றச் சில நாடுகளில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறை— நமது நாட்டில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் வளர்ச்சி- கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை — அரசு நிறுமம் — வகைப்படுத்தப்படுதல் — பொருந்தும் விதிகள் — சிறப்பியல்புகள் — நன்மைகள், குறை பாடுகள் — தொழிலமைப்பு முறையைத் தேர்ந் தெடுத்தல்— கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறைக் குகந்த தொழில்கள் — நம் நாட்டில கூட்டு நிறு மத்தின் முக்கியத்துவம்— நிருவாக மறுசீரமைப்புக் குழு— அமைப்புகளை ஒப்பிட்டு நோக்குதல்.

பக்கம்

4. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நிதி ஆட்சி முறை ... 75

நிதித் திட்டமென்பதன் பொருள் — நிதி பெறும் வழிகள் — நடைமுதல் தேவைகள் — பொது முதலீடு கள் — கடன்பெறும் அதிகாரங்கள் — தேசிய நிதிக் கூட்டுரு — வட்டி விகிதம் — அகச் சேமிப்புகளின் மூலம் தொழிலை விரிவுபடுத்துதல்.

5. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் விலைக் கொள்கை ... 89

சிறப்பியல்புகள் — செலவு நிபந்தனைகள் — விலைக் கோட்பாடுகள் — இலாப, நட்டமில்லாக் கோட்பாடு — எல்லைநிலை உற்பத்திச் செலவுக் கோட்பாடு — சராசரி உற்பத்திச் செலவுக் கோட்பாடு — இலாபமீட்டும் கோட்பாடு — திறமை நிர்ணயித்தல் — இலாபமீட்டுவதன் நோக்கங்கள் — இலாபமீட்டும் கொள்கைக்கு எதிரான வாதங்கள் — இலாபமீட்டும் கோட்பாடு — சட்டநிலை — வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாடு — நிபந்தனைகள் — விலை நிர்ணயப் பொறுப்பு — விலைக் கோட்பாட்டின் தத்துவங்கள் — பொதுத்துறை நிறுவனங்களின் விலைக் கோட்பாடு — சிறப்பியல்புகள் — பொதுத் துறையில் விலைக் கொள்கை நிர்ணயிக்கப்பட வழிகாட்டும் தத்துவங்கள்.

6. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தன்னாட்சி யுரிமை ... 140

தன்னாட்சியுரிமை என்பதன் பொருளும், மற்ற உள்ளடக்கக் கருத்துகளும் — குறிக்கோள்கள் — தன்னாட்சியுரிமைபற்றி வல்லுநர்களின் கருத்து — பொதுத்துறையில் தன்னாட்சியுரிமை.

7. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பொறுப் புடைமை ... 158

பொறுப்புடைமைக் கொள்கையின் முக்கியத் துவம் — பொறுப்புடைமை, பொருளும் நோக்கங் களும் — விதிமுறைகள் — வல்லுநர்களின் கருத்து கள் — பொறுப்புடைமை, கட்டுப்பாட்டு முறைகள் - அமைச்சரவைக் கட்டுப்பாடு — நாடாளுமன்றக்

பக்கம்

கட்டுப்பாடு — நாடாளுமன்றக் குழுக்கள் — நிதிக் கட்டுப்பாடு—தணிக்கைமுறை—அரசு நிறுமங்களின் தணிக்கை — பொதுக் கூட்டுரு நிறுவனங்களில் தணிக்கை — தணிக்கை விதிமுறைகளின் சுருக்கம்— துறைவழி நிருவாக அமைப்பு முறையில் அமைந்த தொழிலமைப்புகளின் தணிக்கை— பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் புள்ளிவிவரச் சேகரப் பணியகம்.

8. பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஆளினர் மேலாண்மை ... 209

உள்ளமைப்பு — கொள்கைகள் — செயல்முறை மற்றும் நிருவாகப் பிரச்சினைகள்—பணியாளர்களைப் பணியிலமர்த்தல் — உயர்நிலை அதிகாரிகளின் நியமனம்—இளநிலைப் பணியாளர்களின் நியமனம்— பணியிலமர்த்தும் வழிகள் — இந்திய எண்ணெய்க் கூட்டுருவில் பணியிலமர்த்தும் முறை — வட்டார அடிப்படையில் வேலைவாய்ப்பு — பயிற்சித் திட்டம்- பதவி உயர்வுக் கொள்கை — பணி முன்னேற்றத் திட்டங்கள் —மனித சக்தியைத் திட்டமிடுதல்— தொழில் நுட்ப வல்லுநர்களின் இடப் பெயர்ச்சி— ஆளினர் துறைகள் — வேலைவாய்ப்பு — ஒழுங்கு முறை.

9. பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஊக்கத் திட்டங்கள் ... 239

ஊக்கத் திட்டங்களின் நோக்கங்கள் — வல்லுநர்களின் கருத்துகள் — சில பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஊக்கத் திட்டங்கள் — இந்துஸ்தான் எஃகு ஆலையில் ஊக்கத் திட்டம் — சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களில் ஊக்கத் திட்டங்கள்— பாரத மின்னணுச் சாதனங்கள் உற்பத்தி நிறுவனத்தில் ஊக்கத் திட்டங்கள்.

10. பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் தொழிற் பூசல்களும், தொழிலுறவும் ... 254

தொழிற்பூசல்கள் — காரணங்கள் — தொழிற் பூசல்களைத் தீர்க்கும் முறைகள்.

பக்கம்

11. அயல்நாடுகளில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள்... 265

இங்கிலாந்தில் பொதுத்துறை — ஆஸ்திரேலியாவில் பொதுத்துறை — கனடாவில் பொதுத்துறை— பிரான்சில் பொதுத்துறை—அமெரிக்க ஐக்கிய நாட்டில் பொதுத்துறை — ஜப்பானில் பொதுத்துறை— ருஷ்யாவில் பொதுத்துறை — யோகோஸ்லாவியாவில் பொதுத்துறை.

12. நமது நாட்டின் முக்கியப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளும் அவற்றின் பணிகளும் ... 294

முக்கியப் பொதுத்துறைத் தொழிலமைப்புகள்— பணிகள்.

13. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் சாதனைகள் — ஒரு கண்ணோட்டம் ... 348

பொதுத்துறையின் மீதான முதலீட்டின் வளர்ச்சி—அரசின் அதிகரித்த வருமானம்—கனரகத் தொழிலமைப்புகளின் சாதனைகள் — மின்னணுச் சாதனங்கள் உற்பத்தியில் பொதுத்துறையின் சாதனைகள் — எண்ணெய்வள ஆராய்ச்சிப் பணி— பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் உச்ச எல்லையைக் கடந்த இலாபங்கள்.

14. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செயல் முறைகளில் உள்ள குறைபாடுகளும், அவற்றை நீக்கும் வழிமுறைகளும் ... 359

செயல்முறைகளில் உள்ள குறைபாடுகள் — குறைபாடுகளை நீக்கும் வழிமுறைகள்.

பிற்சேர்க்கை ... 365

மேற்கோள் நூற்பட்டியல் ... 372

கலைச்சொற்கள் ... 373

1. அறிமுகம்

அறிமுகம்

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம் பெரும் அளவில், அந் நாட்டின் தொழிலமைப்புகளின் வளர்ச்சியைச் சார்ந்துள்ளது. எந்த ஒரு நாட்டில் தொழிலமைப்புகள் சீரான வளர்ச்சியடைந்துள்ளதோ, அந் நாட்டில் உற்பத்தி பெருகி, மக்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட்டு, சிறந்த பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டிருக்கும் எனத் திட்டவட்டமாகக் கூறலாம். எனவே, ஒரு நாட்டில் உள்ள தொழிலமைப்புகள் அந் நாட்டின் வளர்ச்சியைக் கணிக்கும் அளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்தவையாகும்.

தொழிலமைப்பு என்பதன் பொருள்

ஆக்க வேலைக்கு ஆதரவான மூலதனம், இயற்கை வளம், உழைப்பு இம் மூன்றினையும் மிகப் பொருத்தமான அளவில் ஒன்றுசேர்த்து உற்பத்தியைப் பெருக்குவதையே அமைப்பு என்று கூறலாம். பல்வேறு வகையான தொழில்களின் சிறப்பிற்கு அடிப்படையாக விளங்குவது இவ்வமைப்பேயாகும். அமைப்புச் செம்மையாக இருந்தால்தான் தொழில் முன்னேறும். தொழிலமைப்புகள் அனைத்துமே வாணிக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு ஏற்படுத்தப்படுகின்றன. இப்படித் தோற்றுவிக்கப்படும் தொழிலமைப்புகள் இரண்டு வகைப்படும். அவைகள் முறையே (1) தனியார்துறைத் தொழிலமைப்புகள், (2) பொதுத்துறைத் தொழிலமைப்புகள்.

1. தனியார்துறைத் தொழிலமைப்புகள்

ஒரு தனி மனிதனாலோ, கூட்டு வாணிக முறையிலோ அல்லது கூட்டுப் பங்கு நிறுமம் மூலமோ தோற்றுவிக்கப்பட்டு, தனி மனிதர்களின் அல்லது பங்குதாரர்களின் நலனைக்கருதிச் செயல் படுகின்ற தொழிலமைப்பினைத் தனியார் துறைத் தொழிலமைப்பு என்று கூறலாம். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் இப்படிப்பட்ட தனியார் துறைத் தொழிலமைப்புகளும் பெரும் பங்கு வகிக்கின்றன. அரசும், இவ்வகைத் தொழிலமைப்பு களுக்குப் பல வகையிலும் ஆர்வத்துடன் உதவி புரிந்து

வருகின்றது. இவ்வகைத் தொழிலமைப்புகளை முதலாளித்துவக் கொள்கையைக் கடைப்பிடிக்கும் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் அதிக அளவில் காணலாம்.

2. பொதுத்துறைத் தொழிலமைப்புகள் (Public Enterprises)

ஒரு நாட்டில் தனியார்துறைத் தொழிலமைப்புகள் மட்டும் தோற்றுவிக்கப்பட்டால், அதில் சில நன்மைகள் ஏற்பட்டாலும் கூட, பல்வேறு வகையான தீமைகள் ஏற்பட வாய்ப்புகள் அதிகம். உதாரணமாக,பொருளாதாரத்தில் மந்தநிலைமை ஏற்படுகின்றது. வேலையின்மை, பணவீக்கம், குறைவான உற்பத்தி, இயற்கைச் செல்வங்களை நன்கு பயன்படுத்தாத நிலை போன்ற குறைபாடுகளும் ஏற்படும். மேலும், தனியார்துறைத் தொழிலமைப்புகள் இலாப நோக்கத்துடன் செயல்படுகின்றனவே தவிரப் பொருளாதாரத்தில் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றத்தைப் பெற உதவி புரிவதில்லை.

எனவே, ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றம், தனியார் துறைத் தொழிலமைப்புகளால் மட்டும் ஏற்பட்டுவிடும் என்பது முற்றிலும் தவறானதொரு கருத்து என்பதும், நாட்டை விரைவாகத் தொழில்மயமாக்கி, பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த, அரசின் நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவை என்பதும் புலனாகின்றது.

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டத்தைச் செயற்படுத்த, சிலவிதத் தொழிலமைப்புகளை அரசே ஏற்று நடத்துவது அவசியமாகின்றது. இப்படி அரசால் அமைக்கப்பட்டு, பொது நலனுக்காகவும் பொருளாதார முன்னேற்றத்திற்காகவும் நிர்வகிக்கப்பட்டு வரும் தொழிலமைப்புகளே 'பொதுத்துறைத் தொழிலமைப்புக'ளாகும்.

மேலும், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் (Public Enterprises) அல்லது அரசு நிறுவனங்கள் (State Enterprises) அல்லது நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்கள் (Nationalised Enterprises) என்பவை அனைத்துமே ஒரு பொருளைத் தருவன என்பதை இவண் நினைவுகூர்தல் நலம்.

வரைவிலக்கணம்

'பொதுத்துறைத் தொழிலமைப்புகள் என்பவை பொதுநலங் கருதி, உற்பத்தி, வாணிகம் ஆகியவற்றை மேற்கொள்ள

அரசால் நிறுவப்பட்டு, நிருவகிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்படும் தொழிலமைப்புகளாகும்.'

சிறப்பியல்புகள்

மேற்கண்ட வரைவிலக்கணத்தை ஆராயும்போது, பொதுத் துறைத் தொழிலமைப்புகள் பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டவை என்பது புலனாகின்றது:

(1) அரசுடைமையும் அரசின் கட்டுப்பாடும் ஒரு பொதுத் துறைத் தொழிலமைப்பின் முதன்மையான சிறப்பியலாகும்.

(2) இவ்வகைத் தொழிலமைப்புகள் புதிதாக அரசால் ஏற்படுத்தப்பட்டவைகளாக இருக்கலாம் அல்லது,

(3) நடந்து கொண்டிருக்கும் ஒரு தொழிலமைப்பு நாட்டுடைமையாக்கப்பட்டும், பொதுத்துறைத் தொழிலமைப்பாக மாற்றப்படலாம்.

முக்கிய நோக்கங்கள்

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை முற்றும் உணர அவற்றின் முக்கிய நோக்கங்களை அறிந்துகொள்ளல்வேண்டும். சுருங்கக் கூறின், பின்வரும் நோக்கங்கள்தாம் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் ஏற்படக் காரணங்களாக அமைந்துள்ளன:

(1) நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவிபுரிதல்.

(2) இலாபகரமான அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல்.

(3) மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தல்.

(4) ஏழை, பணக்காரர் என்ற ஏற்றத்தாழ்வை நீக்கிச் சமதர்மத்தை அடைய உதவுதல்.

(5) பொருளாதார நன்மைகளைப் பலருக்கும் பகிர்ந்து கொடுப்பதன் மூலம், முற்றுரிமையை நீக்குதல்.

(6) பொதுமக்களின் சேமிப்புகளை ஒன்றுசேர்த்து, நாட்டின் வளர்ச்சிக்கு முதலீடு செய்தல்.

இவைகளைத் தவிர வேறுபல முக்கியக் காரணங்களாலும் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில், பொதுத்துறை முக்கியத்துவம் பெறுகின்றது. அவைகளை விரிவாக அடுத்து வரும் பகுதிகளில் காண்போம்.

நம்நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் ஏற்பட்ட வரலாறு

நமது நாட்டில் பொதுத்துறை படிப்படியாக வளர்ந்து வருகின்றது. அரசின் தொழிற்கொள்கை பொதுத்துறையின் வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாக உள்ளது. வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் பொதுத்துறையின் முன்னேற்றம் இன்றியமையாதது என்பதை உணர்ந்த நமது மத்திய அரசு, பொதுத்துறையில் அதிக முதலீடு செய்துவருகின்றது. நமது ஐந்தாண்டுத் திட்டங்கள் அனைத்திலும், பொதுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகின்றது. எடுத்துக்காட்டாக, முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 59 கோடியாக இருந்த பொதுத்துறை முதலீடு (46.4%) மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 1,275 கோடியாக (63.1%) உயர்ந்தது. தற்போது நம் நாட்டில் சுமார் 105-க்கும் மேற்பட்ட பொதுத்துறைத் தொழிலமைப்புகள் வெற்றிநடை போடுகின்றன.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் வளர்ச்சி

எண்	காலம்	எண்ணிக்கை
1.	முதல் ஐந்தாண்டுத் திட்ட காலத் தொடக்கத்தில் ...	5
2.	முதலாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் ...	21
3.	இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் ...	48
4.	மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கால முடிவில் ...	74
5.	1973ஆம் ஆண்டு மார்ச்மாதம் 31ஆம் தேதி முடிய...	105
6.	1975ஆம் ஆண்டு மார்ச்மாதம் 31ஆம் தேதி முடிய...	127

ஆனால் இவ் வளர்ச்சி உடனடியாக ஏற்பட்டது என்றோ அல்லது தற்செயலாக ஏற்பட்டது என்றோ எண்ணினால் அது முற்றிலும் தவறான ஒரு கருத்தாக அமையும். ஏனெனில், இது மிகவும் திட்டமிடப்பட்டுப் பல்வேறு வகையான இடர்ப்பாடுகளைக் கடந்து படிப்படியாக ஏற்பட்ட வளர்ச்சியாகும். எனவே, இந்தப் பொதுத்துறை ஏற்பட்ட வரலாற்றையும் பொதுத்துறை ஏற்பட்ட முறையையும் அறிந்துகொள்வது நம் அனைவரின் கடமை என்ற காரணத்தால், அவ் வரலாற்றைச் சுருக்கமாக இவண் காண்போம்.

ஒரு சில நூற்றாண்டுகளுக்கு முன்புவரை உலக நாடுகள் அனைத்தும் 'தலையிடாமை' (Laizze-faire) என்ற கொள்கையைக் கடைப்பிடித்து வந்தன. பொருளாதாரத்தின் தந்தை எனப் போற்றப்படும் ஆடம்சுமித் (Adam Smith) போன்ற பொருளாதார

நிபுணர்கள்கூட இக் கொள்கையைத்தான் வலியுறுத்திவந்தனர். தலையிடாமைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலம், நாட்டின் தொழிலமைப்பு மற்றும் வாணிகத்தில் ஈடுபடாமல், மிகவும் விலகி நிற்கும் நாடு செல்வச் செழிப்பில் திளைத்து விளங்கும் என்பது ஆடம் சுமித் அவர்களின் கருத்து. மேலும் அவர், தனி மனிதன் பெரும் அளவில் செல்வம் ஈட்ட வேண்டும் என்ற நோக்குடன் வாணிகம் செய்தால்தான், நாட்டின் செல்வம் பெருகும் என்றும் கூறினர். அற்றைய நாள்களில், பொருளாதார நிபுணர்கள் அனைவருமே நாட்டில் அமைதியை நிலைநாட்டுவது, பகைவர்களிட மிருந்து நாட்டைக் காப்பது, நாணயங்களை அச்சிட்டு வெளி யிடுவது, ஒப்பந்தங்களை நிலைநாட்டும் உரிமையைக் காப்பது, பொருளாதார நடவடிக்கைகள் தங்கு தடையின்றிச் செம்மையாக இயங்க அடிகோலுவது இவையே அரசின் கடமை என்று கருதி வந்தனர்.

ஆனல், அனைத்துநாடுகளிலும், மக்கள்தொகைப்பெருக்கத்தின் காரணமாகவும், 'தொழிற் புரட்சி'யின் (Industrial Revolution) விளைவால் ஏற்பட்ட அதிக உற்பத்தியின் காரணமாகவும் பல பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டன. 'முறையான பகிர்வு' கடைப்பிடிக்கப்படாததால் மக்களிடையே ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு எழுந்தோங்கியது. இவைகளின் காரணமாக எந்த ஓர் அரசும், 'தலையிடாமை'க் கொள்கையை விட்டொழித்து, பொது நலனுக்காகத் தொழிலமைப்புகளிலும் வாணிகத்திலும் ஈடுபட்டுப் பொருளாதாரத்துறையில் நிலவும் சீர்கேடுகளை அகற்றி, பொருளாதார வளர்ச்சியில் பங்குகொண்டு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல் வேண்டும் என்ற எண்ணம் பரவலாக ஏற்படத் தொடங்கியது. முதலாளித்துவக் கொள்கைக்கு முதன்மையிடம் தந்த அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகள்கூடப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளை அமைக்கத் தலைப்பட்டன. 1917ஆம் ஆண்டு ஏற்பட்ட புரட்சி, ரஷ்யாவில் தனியார்துறைக்கு முற்றுப்புள்ளி வைத்தது. முதல் உலகப்போர் முடிவுற்றவுடன் கெயின்ஸ் (Keynes) போன்ற பொருளாதார வல்லுநர்கள், ஒரு நாடு சுபிட்சமடைய, பாரபட்ச மற்ற செல்வப் 'பகிர்வு' வேண்டும் என்றும், அதற்குத் தலையிடா மைக் கொள்கை விட்டொழிக்கப்படல் வேண்டும் என்றும் வலி யுறுத்தினர். இதற்குப் பிறகு, கிட்டத்தட்ட உலக நாடுகள் அனைத்துமே, தொழில்துறையில் ஈடுபட்டுப் பொது நலனுக்காக, தொழிலமைப்புகளை ஏற்படுத்தத் துவங்கின. இந்த வகை அரசுகள் 'நலங்காக்கும் அரசுகள்' (Welfare States) என்று அழைக்கப் பட்டன. இவ்வகை அரசுகளில் முதன்மையிடம் வகித்தது

இங்கிலாந்தாகும். 1945ஆம் ஆண்டில், இங்கிலாந்தில் போக்கு வரத்துத் துறை நாட்டுடைமையாக்கப்பட்டதோடு மருத்துவம், இரும்பு, நிலக்கரி போன்ற தொழில்துறைகளிலும், பல பொது நலன் நல்கும் சீர்மிகு திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

இவ்வாறு படிப்படியாக உலகப் பொருளாதாரத்தில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு இந்தியாவும் விதிவிலக்கன்று. இரண்டாம் உலகப்போர் ஏற்படும் வரையில் நம் நாட்டில் தனியார்துறை, எந்தவித அரசு கட்டுப்பாட்டிற்கும் உட்படாமல் செயற்பட்டு வந்தது. நம் நாட்டில் ஆட்சி செலுத்திவந்த இங்கிலாந்து அரசு, தொழில்துறை வளர்ச்சிக்கு எந்தவிதமான முயற்சியும் மேற்கொள்ளவில்லை. தலையிடாமை என்ற கொள்கையின் போர்வையில் அரசு, தனியார்துறைத் தொழிலமைப்புகளுக்கு முழுச் சுதந்திரம் அளித்துவந்தது. எனவே, தனியார் துறைத் தொழில்முயல்வோர்கள், எந்தெந்தத் துறைகளில் அதிக இலாபம் ஈட்ட வாய்ப்புகள் இருந்தனவோ, அந்தந்தத் துறைகளில் மட்டும் அதிகக் கவனம் செலுத்தி, மற்றத் துறைகளைப் புறக்கணித்தனர். இதன் விளைவால் நாட்டின் தொழில் வளர்ச்சி சில துறைகளில் சிறந்து விளங்கியும், மற்றத் துறைகளில் வெகுவாகப் பின்தங்கியும் இருந்தது. இங்கிலாந்து அரசும், அரசைப் பற்றி அதிகம் கவலைப்படாமல் ஆட்சி செலுத்திவந்தது. இங்கொன்றும், அங்கொன்றுமாகச் சில முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டனவென்றாலும், அம் முயற்சிகளால் பலன்கள் ஏதும் நிகழவில்லை. எடுத்துக்காட்டாக, 1916ஆம் ஆண்டில், 'இந்தியத் தொழிற்குழு' (Indian Industrial Commission) நியமிக்கப்பட்டு, 1918ஆம் ஆண்டு அக் குழுச் சமர்ப்பித்த அறிக்கையில், நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அரசு மேற்கொள்ளவேண்டிய பல முயற்சிகளை வலியுறுத்தியிருந்தும்கூட, எந்த விதமான 'தொழிற் கொள்கை'யும் (Industrial Policy) ஏற்படுத்தப்படவில்லை.

பிறகு 1921ஆம் ஆண்டு அரசு நிதிக் கூட்டுரு (Fiscal Commission) அமைத்தது. அந்தக் குழுத் தன்னுடைய அறிக்கையில், பல இன்றியமையாத தொழிலமைப்புகளை அரசு பாதுகாக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது. பருத்தித் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலைகள், நெருப்புப் பெட்டித் தொழிற்சாலைகள் போன்ற பல தொழிலமைப்புகள் இதனால் ஓரளவிற்குப் பயன் அடைந்தன என்று கூறலாம். இதற்குப் பிறகு இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டது. அப்போதுதான் இங்கிலாந்து அரசு, இந்தியாவில் தொழிலமைப்புகள் செம்மையாக அமைக்கப் பட்டிருந்தால், தன்னுடைய போர்த்தளவாடங்கள் அதிக அளவில்

பெற்றிருக்கலாமென உணர்ந்தது. இதன் விளைவால் 1940ஆம் ஆண்டு 'விஞ்ஞானம் மற்றும் தொழிலமைப்பு ஆராய்ச்சிக் குழு' (The Board of Scientific and Industrial Research) தோற்றுவிக்கப் பட்டது. இந்தக் குழு, தொழிலமைப்புகளில் ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்கும் வகை செய்தது. பிறகு, மிகவும் குறிப்பிடத் தக்கதொரு முயற்சியை அரசு மேற்கொண்டது. 1946ஆம் ஆண்டு திரு. கே. சி. நியாஜி (K. C. Neogy) என்பவரின் தலைமையில் ஓர் 'ஆலோசனைத் திட்டக் குழு' (Advisory Planning Board) அமைக்கப் பட்டது. இக் குழு, தன் அறிக்கையை 1947ஆம் ஆண்டு சமர்ப் பித்தது. அதில் நாட்டில் 'சமநிலை வளர்ச்சி' (Balanced Regional Development) ஏற்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி, அரசியல் சார்பற்ற ஒரு திட்ட ஆணைக் குழு (Planning Commission) அமைக்கப்படல் வேண்டும் என்று பரிந்துரைத்தது.

பிறகு 1947ஆம் ஆண்டில் நாம் சுதந்திரம் பெற்றபோது, தொழிலமைப்புகள் அனைத்தும் மிகவும் நலிந்த நிலையில் இருந்தன. தொழிலுறவு நன்முறையில் இருக்கவில்லை. மேலும், கச்சாப் பொருள்களுக்குப் பற்றுக்குறை ஏற்பட்டு, உற்பத்தியில் பல இடர்ப்பாடுகள் ஏற்பட்டிருந்தன. சுருங்கக்கூறின், அது ஒரு மிகவும் நலிவடைந்த காலமாக இருந்தது. இவைகளினால் ஏற்பட்ட நெருக்கடியின் மூலம் நம் மத்திய அரசு, தொழிலமைப்பு களின் வளர்ச்சியின் அவசியத்தை உணர்ந்து, உடனடியாக 1947ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒரு 'தொழிற் கருத்தரங்கு' (Industrial Conference) நடத்தியது. இக் கருத்தரங்கு, பல கருத்துகளிடையே தனியார்துறை, பொதுத்துறை ஆகியவற்றின் அவசியத்தை வலியுறுத்தியது. இவ் வடிப்படையில்தான் 1948ஆம் ஆண்டு, பல இடர்ப்பாடுகளுக்கிடையே, நம் அரசு முதலாவது 'தொழிற் கொள்கை'யை (Industrial Policy) அறிவித்தது.

1948ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கை (Industrial Policy, 1948)

1948ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், முதன்முதலாக அறிவிக் கப்பட்ட தொழிற்கொள்கையின் சிறப்பியல்புகளைச் சுருக்கமாகக் காணலாம்.

1. பொதுத்துறை மற்றும் தனியார் துறையின் பங்கு: நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அரசின் தீவிரமான முயற்சி தேவை என்பதே, 1948ஆம் ஆண்டு தொழிற்கொள்கையின் அடிப்படைக் கருத்து. ஆனால் அனைத்துத் தொழிலமைப்புகளையும் அரசே ஏற்று நடத்தல் வேண்டும் என்ற கருத்துத் தவறானது என்று உணர்ந்து, முன்னரே அரசின் கட்டுப்பாட்டில் இருந்த தொழி

லமைப்புகளையும், சில புதிய தொழிலமைப்புகளையும் மட்டுமே அரசு நிருவகிக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தனியார்துறைத் தொழிலமைப்புகளைக் கட்டுப்படுத்தி, பொருளாதார வளர்ச்சிக்குப் பயன்தரும் வகையில் அமைக்கவும் முடிவு செய்யப்பட்டது.

2. பொதுத்துறைக்கும் தனியார் துறைக்கும் எனத் தொழிலமைப்புகளை ஒதுக்குதல்: மேற்கண்ட கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, நம் நாட்டில் இருந்த தொழிலமைப்புகள் அனைத்தும், தனியார்துறைக்கும் பொதுத்துறைக்கும் ஒதுக்கப்படுவதற்காகப் பின்வருமாறு நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன.

(அ) போர்த்திற முக்கியத்துவம் வாய்ந்த மற்றும் அடிப்படைத் தொழிலமைப்புகள்: எடுத்துக்காட்டாக, போர்த் தளவாடங்கள் உற்பத்தி செய்யும் தொழிலமைப்புகள், அணுசக்தி உற்பத்தியுடன் தொடர்புற்ற தொழிலமைப்புகள், இருப்புப்பாதைப் போக்குவரத்து முதலியவைகளைக் கூறலாம். இவ்வகைத் தொழிலமைப்புகள் அனைத்துமே பொதுத்துறைக்காக ஒதுக்கப்பட்டன.

(ஆ) அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தொழிலமைப்புகள்: இரும்பு, எஃகு, கனவகை இரும்பு, இயந்திரக் கருவி தயாரிப்பு, நிலக்கரி, கனவகை மின்திறன் சாதனம், விமானப் போக்குவரத்து, கப்பல் கட்டும் தொழில், தொலைபேசி, கம்பியில்லாத்தந்திச் சாதனங்கள் போன்றவை இந்த இரண்டாம் வகையைச் சார்ந்தவையாகும். இவைகளில் முன்பே தனியார் துறையில் தோற்றுவிக்கப்பட்டு, நிருவகிக்கப்பட்டு வருபவை தனியார் துறைக்கு ஒதுக்கப்படுமென்றும், குறைந்தது பத்து ஆண்டுகளுக்கு அரசின் தலையீடு இருக்காது என்றும் உறுதிமொழி அளிக்கப்பட்டது. ஆனால், இவ்வகைத் தொழிலமைப்புகள் புதிதாகத் தோற்றுவிக்கப்படுமானால் அவை பொதுத்துறைக்கு ஒதுக்கப்படும் எனவும் கூறப்பட்டது.

(இ) அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டுச் செயல்புரியும் தொழிலமைப்புகள் மூன்றும் வகையைச் சார்ந்தன. நாட்டின் முக்கியமான இருபது தொழிலமைப்புகள் இவ்வகையில் சேர்க்கப்பட்டன. அவை அரசின் கட்டுப்பாட்டுடன் பணிபுரியும். சர்க்கரை ஆலைகள், பருத்தி, கம்பளி

ஆலைகள், சிமெண்ட் மற்றும் காகிதத்தொழில், உப்புத் தொழில் முதலியவைகளை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

(ஈ) தனியார்துறை மற்றும் கூட்டுறவுத் தொழிலமைப்புகள் நான்காவது பிரிவாக ஒதுக்கப்பட்டன. அதாவது, மேற்கண்ட மூன்றுவகைப் பிரிவுகளிலும் உள்ள தொழிலமைப்புகளைத் தவிர, மற்றனைத்துத் தொழில் களும் கூட்டுறவுத் துறையும் இதிலடங்கும். இவை அரசின் பொதுவான கட்டுப்பாட்டில், தனியார் துறையில் செயல்படுவன.

(3) சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழிலமைப்புகளுக்கு, 1948ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதோடு பெரும்பாலானவை கூட்டுறவுத் துறையில் அமைக்கப்படல் வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

(4) 1948ஆம் ஆண்டில் நடந்த 'தொழிற் கருத்தரங்'கின் பரிந்துரையின்படி, தொழிலாளர்களுக்கு இலாபத்தில் பங்கு அளிப்பதன் மூலமும், நிருவாகத்தில் வாய்ப்பளிப்பதன் மூலமும் நல்லதொரு தொழிலுறவை ஏற்படுத்தவும் இத் தொழிற் கொள்கை வகை செய்தது.

1956ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கை (Industrial Policy, 1956)

1948ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கை பல சிறப்பியல்பு களைக் கொண்டிருந்தாலும்கூட, 1956ஆம் ஆண்டு, அரசு இரண்டா வதாக மற்றொரு தொழிற்கொள்கையை அறிவித்தது. இதற்குப் பல காரணங்கள் இருந்தன. முதலாவதாக, நம் அரசு ஏற்றத் தாழ்வற்றதொரு ஜனநாயக சமுதாயத்தை அமைத்திட முடிவு செய்தது. இம் முடிவின்படி, நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அதி தீவிர முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, புதியதொருதொழிற்கொள்கை தேவைப்பட்டது. இரண் டாவதாக 1948ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் நமக்கென்று ஓர் அரசியல் சாசனம் ஏற்படுத்தப்பட்டது. எனவே, அதற்கேற்ப தொழிற் கொள்கையை மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. மூன்றாவதாக 1951ஆம் ஆண்டிலிருந்து ஐந்தாண்டுத் திட்டங் களின் மூலம் நாட்டில் பல துறைகளிலும் வளர்ச்சியை ஏற்படுத் தவும் முடிவுசெய்யப்பட்டது. இம் முடிவிற்குச் சாதகமாக, 1948ஆம் ஆண்டு தொழிற்கொள்கையை மாற்றியமைக்கும் தேவை ஏற்பட்டது.

மேற்கண்ட காரணங்களால், 1956ஆம் ஆண்டு ஏப்ரல் 30ஆம் நாள், அரசின் இரண்டாவது தொழிற்கொள்கை அறிவிக்கப்பட்டது.

1956ஆம் ஆண்டுத் தொழிற் கொள்கையின் சிறப்பியல்புகள்:

(1) நோக்கங்கள்: 1956ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கை பின்வரும் நோக்கங்களை மையமாகக் கொண்டது:

(அ) தொழில் வளர்ச்சியைத் தீவிரப்படுத்துவதன் மூலம், விரைவான சமுதாய வளர்ச்சிக்கு வழிவகுத்தல்.

(ஆ) இயந்திரக் கருவித் தயாரிப்பு மற்றும் கனவகைத் தொழிலமைப்புகளை அமைத்தல்.

(இ) பெருமளவில், வளர்ச்சியடையக் கூடிய கூட்டுறவுத் துறையைத் தோற்றுவித்தல்.

(ஈ) பொதுத்துறையை விரிவுபடுத்துதல்.

(உ) தனியார் துறையில் முற்றுரிமையை ஒடுக்குவதன் மூலம் சமதர்மச் சமுதாயம் அமைத்தல்.

(2) பொதுத்துறைக்கும், தனியார் துறைக்கும் எனத் தொழிலமைப்புகளை ஒதுக்குவதற்காகத் தொழிலமைப்புகள் அனைத்தும், மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பின்வருமாறு பிரிக்கப்பட்டன:

(அ) முதலாவது பிரிவு பொதுத்துறையில் அமைக்கப்பட்டு நிருவகிக்கப்படவேண்டிய சுமார் 17 தொழிலமைப்புகளைக் கொண்டது. அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தொழிலமைப்புகளாகிய போர்த்தளவாடங்கள், அணுசக்தி, இரும்பு, எஃகு, கனரகத் தொழில்கள், நிலக்கரி, இருப்புப்பாதைப் போக்குவரத்து, தொலைபேசி, கப்பல் கட்டுதல், மின்சார உற்பத்தியும் பகிர்வும் முதலியவை இப் பிரிவில் அடங்கும். ஆனால், முன்பே அமைக்கப்பட்டு, தனியார்துறையில் நிருவகிக்கப்பட்டுவரும் இவ்வகைத் தொழிலமைப்புகள், நாட்டுடைமையாக்கப்படா எனவும் இத் தொழிற்கொள்கை அறிவித்தது.

(ஆ) படிப்படியாகப் பொதுத்துறையில் அமைக்கப்படவேண்டிய சுமார் பன்னிரண்டு தொழிலமைப்புகள் இரண்டாவது பிரிவில் அடங்கும். வெள்ளீயம், காரீயம், இயந்திரக்கருவித்தயாரிப்பு, சாலை மற்றும் கடல்போக்கு

வரத்து முதலிய தொழிலமைப்புகள் இப் பிரிவைச் சார்ந்தன.

(இ) மேற்கண்ட இரு பிரிவுகளையும் சாராமல் எஞ்சியிருக்கும் தொழிலமைப்புகள் அனைத்தும், தனியார் துறைக்கென ஒதுக்கப்பட்டன. இவ்வகைத் தொழிலமைப்புகள் செம்மையான வளர்ச்சியடைய, அரசு அனைத்து உதவி களையும் புரியும் எனவும் இத் தொழிற் கொள்கை விளக்கியது.

(3) பொதுத்துறையும் தனியார்துறையும் ஒன்றையொன்று சார்ந்து, ஒற்றுமையுடன் செயல்பட வேண்டியதன் அவசியத்தை யும் இத் தொழிற்கொள்கை வலியுறுத்தியது. எவ்வகையான தொழிலையும் அமைத்து, உற்பத்தியைப் பெருக்க, அரசிற்கு முழு அதிகாரம் அளிக்கப்பட்டது. அதுபோலவே முதலாவது பிரிவில் கூறப்பட்ட பொதுத்துறையில் அமைக்கப்படவேண்டிய தொழில் களைத் தனியார் துறையில் ஏற்படுத்தவும் அரசு அனுமதி வழங்கலாம். மேலும், பொதுத்துறையில் உற்பத்தி செய்யப் படும் சில ஆக்கக் கூறுகளைத் (components) தனியார்துறைக்கு வழங்கவும், பொதுத்துறையின் தேவைகளைத் தனியார்துறை யிலிருந்து பெறவும் வகைசெய்யப்பட்டது.

(4) பொருளாதார முன்னேற்றத்திற்கு, சிறுதொழில் மற்றும் குடிசைத் தொழில்களின் பங்கு அவசியம் என்று இத் தொழிற் கொள்கை கருதியது. நம் நாட்டுப் பொருளாதாரத்தைப் பொறுத்தவரை, இச் சிறு தொழிலமைப்புகளும் குடிசைத் தொழில்களும் மிகவும் அவசியமானவையென்றும், அவைகளைப் பெருமளவில் அமைப்பதன்மூலம் அதிக வேலைவாய்ப்பு, பயன் படுத்தப்படாமல் தேங்கிக்கிடக்கும் இயற்கைச் செல்வங்களை உற்பத்திக்கு ஈடுபடுத்துதல், சரிசம செல்வப் பகிர்வு போன்ற பல சிறப்புப் பயன்களைப் பெறமுடியுமெனக் கருதப்பட்டது. மேலும் இவ்வகைத் தொழிலமைப்புகளைக் கூட்டுறவுத் துறையி லமைத்து வரிச்சலுகை, மானியம் (subsidy) முதலியவைகளை வழங்க அரசு முடிவுசெய்தது.

(5) சரிசம தொழில் வளர்ச்சியை நாட்டின் அனைத்துப் பகுதி களிலும் ஏற்படுத்தி, சீரான சமுதாய முன்னேற்றத்திற்கு வழி வகுக்கவும் வகை செய்யப்பட்டது.

(6) மேலும், இத் தொழிற்கொள்கை, நாட்டின் சீரான தொழில் வளர்ச்சிக்கு முறையான தொழிலுறவும், தொழிலாளர் நலம் பேணலும் மிகவும் அவசியமென்பதை உணர்ந்து தொழிலாளர்

களுக்கு நிருவாகத்தில் பங்கு கொடுக்கவும், ஊக்கப்படிகள் அளிப்பதற்கும், அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும் வகைசெய்யப்பட்டது.

(7) அடுத்ததாக, தொழிலமைப்புகளின் முறையான வளர்ச்சிக்கு, மேலாண்மை இயக்குநர்களும் (Managing Directors), தொழில் நுணுக்கப் பணியாளர்களும் முக்கியப் பங்கு வகிக்கின்றனரெனவும், அவர்களுக்குப் பல்கலைக்கழகங்களிலும் தொழிற்சாலைகளிலும் தேவையான பயிற்சி அளிக்கப்படல் வேண்டுமெனவும் கூறப்பட்டது. இம் முயற்சியினால், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் விரிவாகவும், விரைவாகவும் வளர்ச்சியடையுமெனக் கருதப்பட்டது.

(8) இறுதியாக, வளர்ந்துவரும் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் மேம்பட்ட மேலாண்மை மிகவும் தேவை என வலியுறுத்தப்பட்டது. மேலாண்மை அமைப்பில் ஆணையுரிமையைப் பன்முகப்படுத்தல் (Decentralisation of authority), சிறந்த வாணிகக் கொள்கைகளைக் கடைப்பிடித்தல் போன்ற முயற்சிகளை மேற்கொள்வதன் மூலம், பொதுத்துறையின் செயல்திறன் மேம்பட்டு உற்பத்தி பெருகுமெனக் கருதப்பட்டது.

சுருங்கக் கூறின், 1956ஆம் ஆண்டு தொழிற்கொள்கையின் மூலம், விரைவான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த அரசு முடிவு செய்தது. மேலும், எவ்வகைத் தொழிலமைப்பையும் ஏற்படுத்தும் உரிமையையும், தனியார்துறைத் தொழிலமைப்புகளைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தும் உரிமையையும், அரசு பின்பற்ற முடிவு செய்ததால், ஜனநாயக சமதர்மமும் கலப்புப் பொருளாதாரமும்தான் (Mixed Economy) அரசின் கோட்பாடுகள் எனத் தெளிவாகின்றது. இத் தொழிற் கொள்கையின்படி, அரசு படிப்படியாகப் பல்வேறு வகையான பொதுத்துறைத் தொழிலமைப்புகளை நாட்டின் பல பகுதிகளிலும் தோற்றுவித்தது.

1973ஆம் ஆண்டின் புதிய தொழிற்கொள்கை (New Industrial Policy, 1973)

மீண்டும் 1973ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள், ஒரு புதிய தொழிற் கொள்கையை ஏற்படுத்தி, அரசு பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு மதிப்பிற்குரியதொரு முக்கியத்துவத்தையளித்தது. 'கூட்டுத் துறை' (Joint Sector) மூலமும், 1970ஆம் ஆண்டின் அனுமதி வழங்கல் மற்றும் முறைப்படுத்தும் கொள்கையைச் சிறிது தளர்த்துவதன் மூலமும், பொதுத்துறைக்கு ஓர் ஏற்றத்தை அளிக்கவும் அரசு முடிவு செய்தது.

1973ஆம் ஆண்டு தொழிற்கொள்கையின் சிறப்பியல்புகள் பின்வருபவையாகும்:

(1) 1956ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கை விளம்பிய தொழிலமைப்புகளின் மூன்று வகையான பிரிவுகளை, இத் தொழிற்கொள்கை அடிப்படையாகக் கொண்டது.

(2) 1956ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையில், முதலாம் பகுதியில் கூறப்பட்ட பதினேழு அடிப்படை மற்றும் போர்த் தளவாடத் தொழிலமைப்புகள் தொடர்ந்து, இத் தொழிற் கொள்கையிலும் பொதுத்துறைக்கென ஒதுக்கப்பட்டது.

(3) ஐந்தாண்டுத் திட்டங்களின் சிறப்பான நோக்கங் களாகிய சமுதாய நீதி, தன்னிறைவு, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்தல் முதலியவைகளையடையப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டது.

(4) இருபது கோடி ரூபாயும், அதற்கு மேலும் மூலதனத் தைக்கொண்ட பேரளவுத் தொழிலமைப்புகள் முக்கிய மற்றும் கனரக முதலீடுகளில் மட்டும்தான் தனியார்துறை பங்குகொள்ள லாம் எனவும் அறிவிக்கப்பட்டது. அதாவது, 1956ஆம் ஆண்டின் தொழிற்கொள்கையில், பொதுத்துறைக்கென ஒதுக்கப்பட்ட தொழிலமைப்புகளைத் தவிர, மற்ற அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தொழிலமைப்புகளைப் பேரளவுத் திறன் வாய்ந்த தனியார்துறை நிறுவனங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

(5) சிறு தொழிலமைப்புகளுக்கும், துணைத் தொழிலமைப்பு களுக்குமெனச் சிலவகைத் தொழில்கள் ஒதுக்கப்பட்டன.

(6) ஐந்தாண்டுத் திட்டம் எதிர்நோக்கிய உற்பத்தியை ஏற்படுத்த, 'கூட்டுத்துறை'யை (Joint Sector) ஏற்படுத்த அரசு முடிவு செய்தது. இக் கூட்டுத்துறையென்பது பொதுத்துறையும், தனியார்துறையும் இணைந்து செயல்படுவதைக் குறிக்கும். தனியார்துறைத் தொழிலமைப்புகளுக்கு, பொதுத்துறை நிதி உதவி அளித்து அவைகளின் நிருவாகத்தில் பங்கேற்று, உற்பத்தியைப் பெருக்குதலே இதன் நோக்கமாகும்.

எனவே, இப் புதிய தொழிற்கொள்கையும், சமுதாய முன்னேற்றத்திற்குப் பொதுத்துறையின் வளர்ச்சி இன்றியமை யாதது என்ற கருத்தை ஆணித்தரமாக வலியுறுத்தியது. மேலும், தனியார்துறையைக் கட்டுப்படுத்திச் சீரான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த, 'தொழில் வளர்ச்சி மற்றும் ஒழுங்கு

முறைச் சட்டம்: (Industrial Development and Regulation Act, 1951) 1951ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. தனியார்துறைத் தொழிலமைப்புகளைச் செம்மையான கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவரவும், அவைகளுக்குரிய உரிமத்தை (Licence) வழங்கவும், நீதிக்குப் புறம்பாகச் செயற்படும் தனியார்துறைத் தொழிலமைப்புகளை ஒழுங்குபடுத்தவும், அரசின் விதிமுறைகளைக் கடைப்பிடிக்க மறுக்கும் தனியார்துறைத் தொழிலமைப்புகளை அரசே ஏற்று நடத்தவும் இச் சட்டம் வகைசெய்தது. சீரான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்த, அரசே மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளில், அறிவுரைகூற ஒரு 'மத்திய அறிவுரைத் தொழிற் குழு'வும் (A Central Advisory Council of Industries) ஏற்படுத்தப்பட்டது.

இவ்வாறுகப் பல நிலைகளை வெற்றியுடன் கடந்து விரைவாக வளர்ச்சியுற்றதுதான், இப்பொழுது இயங்கும் நம் பொதுத் துறையாகும். மேற்கண்ட வரலாற்றைப் பார்க்கும்போது, பொதுத்துறைத் தொழிலமைப்புகளை விரிவுபடுத்தி, விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளைப் பாராட்டாமல் இருக்க முடியாது. மேலும், மேற்கண்ட தொழிற்கொள்கைகளும் ஒழுங்குமுறைச் சட்டங்களும் ஏற்படுத்தப்படாமலிருந்திருந்தால், இற்றை நாளில் பீடு நடை போடும், பொதுத்துறைத் தொழிலமைப்புகள், தோன்றியிருக்கமாட்டா எனவும், நாட்டின் பொருளாதாரம் இத்துணை வளர்ச்சியை அடைந்திருக்காதெனவும், அயல்நாடுகளுடன் போட்டியிடும் அளவிற்கு நம் நாட்டில் தொழிலமைப்புகள் முன்னேற்றமடைந்திருக்கமாட்டா வெனவும் திட்டவட்டமாகக் கூறலாம்.

2. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் பொதுத்துறையின் பங்கு

ஒரு நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசின் நடவடிக்கைகள் மிகவும் அவசியமானவை என்பதை இன்று அனைவரும் ஏற்றுக்கொண்டுள்ளனர். வளர்ந்து வரும் நாடுகளில் பொருளாதார முன்னேற்றத்தின் முதற் சில நிலைகளில் அரசு பலவகைப்பட்ட முதலீடுகளைச் செய்து, தொழிலமைப்புகளைத் தோற்றுவிப்பது இன்றியமையாததாகும். நன்கு வளர்ச்சியுற்றுள்ள மற்ற நாடுகளின் பொருளாதார முன்னேற்றத்தின் வரலாற்றைப் பார்ப்போமாயின், இவ்வுண்மையை எளிதில் அறியலாம். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற ஒரு சில நாடுகளைத்தவிர ஏனைய நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தை அரசின் தீவிர நடவடிக்கைகளாலேயே அடைந்தன. பொருளாதார முன்னேற்றத்தில், தீவிர அக்கறை கொண்ட நாடாகிய சோவியத் ருஷ்யாதான் முதன் முதலில் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டமிடத் தொடங்கியது. இதன்மூலம் ருஷ்யாவின் பின்தங்கியிருந்த வேளாண்மைப் பொருளாதாரம், முன்னேற்றமடைந்த தொழிற் பொருளாதாரமாக மாற்றப்பட்டது. தற்போது ருஷ்யாவில், அனைத்துத் தொழிலமைப்புகளும் பொதுத்துறையைச் சார்ந்தனவாய் அமைந்துள்ளன. ருஷ்ய நாட்டின் அரசியல் சாசனமே, தனியார் துறையின் முற்றுரிமையை ஒழிப்பதன் மூலமும், முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையை மாற்றியமைத்துச் சமதர்மக் கொள்கையைக் கடைப்பிடிப்பதன் மூலமும் தான் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தையடைய முடியுமென அறிவிக்கின்றது.

முதலாளித்துவக் கோட்டை எனப்படும் அமெரிக்காவில்கூட ஒரு சில தொழிலமைப்புகளைப் பொதுத்துறையில் அரசு ஏற்படுத்துவதன் மூலம், பொருளாதார முன்னேற்றத்திற்கு வழி வகுத்தது என்று கூறலாம். எடுத்துக்காட்டாக, அமெரிக்க அரசின் 'டென்னசீ பள்ளத்தாக்கு ஆணைக்குழு'வைக் (Tennessee Valley Authority) கூறலாம்.

ஃபிரெஞ்சு நாட்டைப் பார்த்தோமானால், பொதுத்துறை அந் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பரவியுள்ளதை அறியலாம். மின்சாரம், எரிவாயு, நிலக்கரி, இருப்புப்பாதைப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, விமானப்போக்குவரத்து, பாரிஸ்போக்கு வரத்து முறை, பொட்டாசியச் சுரங்கங்கள், வங்கிகள், காப்பீடு, பட நிறுவனங்கள் என எண்ணிறைந்த தொழில்கள் பொதுத் துறையிலமைக்கப்பட்டுச் சிறப்பாகப் பணிபுரிந்துவருகின்றன.

இங்கிலாந்து நாட்டில் 1945-50ஆம் ஆண்டுகளில், 'தொழிற் கட்சி அரசு' (Labour Government) நிலக்கரி, எரிவாயு, போக்கு வரத்து, ஆகாயப் போக்குவரத்து, மின்சாரம், இரும்பு, எஃகு, வங்கித் தொழில் ஆகியவைகளை நாட்டுடைமையாக்கிப் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுத்தது.

இதுபோன்றே பின்தங்கிய நாடுகளாகிய இலங்கை, பாகிஸ்தான், பர்மா, துருக்கி போன்ற நாடுகளிலும் பலவகைப் பட்ட தொழில் அமைப்புகள் பொதுத்துறையில் செயற் படுகின்றன. துருக்கியில், துருக்கி விவசாய வங்கிகள் (Turkey Agricultural Bank), 'விவசாயக் கருவிகள் முகமை' (Agricultural Equipment Agency) ஆகிய தொழில் அமைப்புகள் பொதுத் துறையில் ஏற்படுத்தப்பட்டு, விவசாயிகளுக்குப் பல வழிகளிலும் உதவி புரிந்துவருகின்றன.

தென் ஆப்பிரிக்கா, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து முதலிய நாடுகளில் பல முக்கிய, ஆனால் இடர்ப்பாடுகளும் இலாபம் ஈட்டுவதில் உறுதியின்மையையும் கொண்ட தொழில் அமைப்புகளை, தனியார் தொழில்முயல்வோர்கள், அமைக்க முன்வராததால், அத் தொழில்கள் பொதுத்துறையில் தோற்று விக்கப்பட்டன.

இப்படி, உலக நாடுகள் பலவற்றிலும் பொதுத்துறை வகிக்கும் பங்கைப் பார்க்கும்போது பொருளாதார நடவடிக்கை களில் ஈடுபட்டு, தொழிலமைப்பை ஏற்படுத்தாத அரசே இல்லை எனக் கூறலாம். வளர்ந்து வரும் நாடுகளில் மட்டுமல்லாமல் முன்னேற்றமடைந்த நாடுகளிலும் கூடப் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் பங்கு அவசியமெனக் கருதப்படு கின்றது. பொருளாதார வளர்ச்சியை நிரந்தரமாக நீடிக்கச் செய்யவும் வளர்ச்சியில் உறுதியான நிலையை ஏற்படுத்தவும் பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு இன்றியமை யாததாகின்றது. மேலும், தனி மனிதனின் சொத்துகளைப் பாதுகாத்தல், சமுதாய நலப் பணிகளை மேற்கொள்ளல், கல்வி,

போக்குவரத்து, செய்தித் தொடர்பு ஆகிய அனைத்திலும் அரசின் பங்கு அத்தியாவசியமாகின்றது. வேலைவாய்ப்புகளைப் பெருக்கவும், நுகர்வோர்களுடைய நலங்களைப் பாதுகாக்கவும், வாணிகச் சுழல்களைக் (Business Cycles) கட்டுப்படுத்தவும், சிறந்த நிதிக் கொள்கை, பணக்கொள்கை ஆகியவைகளைப் பின்பற்றவும் அரசு பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது.

ஹேன்ஸன் (Hanson) என்ற பொருளாதார நிபுணர், எந்த ஒரு நாடும் பொருளாதார முன்னேற்றத்தைக் குறுகிய காலத்திலடையப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளை ஏற்படுத்தித்தான் ஆக வேண்டும் என்று கூறுகிறார். மேலும் அவர் கூறுவதாவது: எவ்விதத் திட்டமும் இல்லாத பொதுத்துறைகூட ஓரளவு பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தக்கூடும். ஆனால், பொதுத்துறை இடம்பெறாத எந்தத்திட்டமும் கருத்தளவில் தான் இருக்க முடியுமே தவிர நடைமுறையில் பொருளாதார வளர்ச்சியைச் சிறிதுகூட ஏற்படுத்த முடியாதெனக்கருதுகின்றார். எனவே, நல்லதொரு பொருளாதாரத் திட்டத்தைப் படிப்படியாக நடைமுறைப்படுத்த விரும்பும் எந்த ஒரு நாடும், பொதுத்துறைத் தொழில் அமைப்புகளைத் தோற்றுவிப்பது மிகவும் இன்றியமையாததாகும்.

இவ்வாறு சமுதாய வளர்ச்சிக்கு முதுகெலும்பாக விளங்கும் பொதுத்துறை, பல நாடுகளில் பல்வேறு நோக்கங்களுடனும், பலவகைப் பணிகளை மேற்கொள்ள ஏற்படுத்தப்பட்டன. பொதுத்துறையின் நோக்கங்கள் நாட்டிற்கு நாடு, இடத்திற்கு இடம், மிகவும் மாறுபடுகின்றன. நம் நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பின்வரும் நோக்கங்களை மையமாகக் கொண்டு அமைக்கப்பட்டன.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நோக்கங்கள் (Objects of Public Enterprises)

1. பாதுகாப்புத் தேவைகள் (Defence Requirements)

எந்த ஒரு அரசும் நாட்டின் பாதுகாப்பிற்கு அதிகக் கவனம் செலுத்துதல் அத்தியாவசியப் பணிகளிலொன்றாகும். ஆகவேதான், நம் நாட்டிலும், பாதுகாப்பிற்காக அரசு பலவித நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகின்றது. போர்த் தளவாடங்களையும், மற்றப் பாதுகாப்புக் கருவிகளையும், அதிக அளவில் உற்பத்தி செய்து இராணுவத்திற்கு வழங்கி, எப்பொழுதும் பகைவர்களிடமிருந்து நாட்டைக் காக்கத் தயார்

நிலையில் இருப்பது அரசின் தலையாய கடமையாகின்றது. இப் போர்த் தளவாடங்களைத் தனியார்துறைத் தொழிலமைப்புகள் தயாரிக்க முற்பட்டால், அது பல தீங்குகளை விளைக்கும். தனியார்துறைத் தொழிலமைப்புகள் அனைத்துமே இலாப நோக்குடனேயே செயற்படுவதால், போர்த் தளவாடங்களின் தரத்தைப் பற்றியோ, அத் தளவாடங்களின் உற்பத்தியில் பின்பற்ற வேண்டிய தொழில் இரகசியத்தைப் பற்றியோ அதிகம் கவலைப்படமாட்டா. இது சில சமயங்களில் பகைவர்களுக்கு அனுகூலமாக அமைந்து, நம் நாட்டிற்கு அபாயத்தை ஏற்படுத்தும். எனவே, பாதுகாப்பு மற்றும் போர்த் தளவாடங்கள் தொடர்புற்ற அனைத்து உற்பத்தியையும் பொதுத் துறையே மேற்கொள்ள வேண்டும். நம் நாட்டில், அரசு பல இடங்களிலும், போர்ப்பாதுகாப்பு நடவடிக்கைகளைச் செம்மையான முறையில் மேற்கொள்ளத் தேவைப்படும் தளவாடங்களை உற்பத்தி செய்யப் பல தொழிலமைப்புகளை அமைத்துள்ளது.

2. அடிப்படைத் தொழிலமைப்புகள்

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அடிப்படை மற்றும் கனரகத் தொழிலமைப்புகள் அத்தியாவசியமானவையாகும். இவ்வகைத் தொழிலமைப்புகள்தாம் உற்பத்தியைப் பெருக்கி நாட்டில் அபரிதமான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். ஆனல் இவ்வகைக் கனரகத் தொழிலமைப்புகளை அமைக்கப் பல கோடி ரூபாய் மூலதனமாகத் தேவைப்படும். மேலும், பல ஆண்டுகளுக்குப் பிறகுதான், இவ்வகைத் தொழிலமைப்புகள் இலாபத்தை நல்கும். எனவே, தனியார்துறைத் தொழில் முயல்வோர், மேற்கண்ட காரணங்களால், இத் துறைகளில் முதலீடு செய்யத் தயங்குவார்கள். இவ்வாறு, தனியார்துறையில் அமைக்கப்படாது விடப்பட்ட துறைகளை அரசு மேற்கொள்ள வேண்டியது மிக அவசியம். பின்தங்கிய நாடுகளில் வளர்ச்சியடையாத் துறைகள் மிகுதியாயிருக்கின்றன. இத் துறைகளை வளர்ச்சியடையச் செய்வது அரசின் கடமையாகும். இக் காரணத்தினல்தான், இந்திய அரசு, 1948ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையிலும், 1956ஆம் ஆண்டுத் தொழிற் கொள்கையிலும், பல அடிப்படைத் தொழில்களைப் பொதுத்துறைக்கென ஒதுக்கியது. இரும்பு, எஃகு, கனவகை இரும்பு, சுரங்கத் தொழில், இயந்திரக் கருவித் தயாரிப்பு, நிலக்கரி, தாது எண்ணெய், கந்தகம், பொன், வைரச் சுரங்கத் தொழில், செம்பு, காரீயம், வெள்ளீயம், துத்தநாகம், ஆகாயப்போக்குவரத்து, கப்பல் கட்டுதல், தொலைபேசி, கம்பியில்லாத் தந்திச் சாதனங்கள் (வானெலிப் பெட்டிகள் நீங்கலாக,)

மின் திறனாக்கமும் வழங்கலும் என எண்ணிறைந்த அடிப்படை மற்றும் கனரகத் தொழிலமைப்புகள் பொதுத்துறையிலமைக்கப் பட்டுச் செம்மையாகப் பணிபுரிந்து வருகின்றன.

3. பொதுப்பயன் நிறுவனங்கள் (Public Utility Concerns)

நாட்டு மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான தேவைகளை அளிக்கும் நிறுவனங்களைப் பொதுப்பயன் நிறுவனங்கள் அல்லது பொதுப்பயன் தொழிலமைப்புகள் என்று கூறலாம். எடுத்துக்காட்டாக, குடிநீர் வழங்கல், எரிவாயு (Gas), மின்சாரம், போக்குவரத்து, தபால் தந்தி மற்றும் செய்தித் தொடர்பெனப் பல இன்றியமையாப் பணிபுரியும் தொழி லமைப்புகளைக் கூறலாம். மக்களின் சீரான பொருளாதார வாழ்க்கைக்கு, இவ்வகைத் தொழிலமைப்புகளின் இடைவிடாப் பணி மிக்க அவசியம். குடிநீர் வழங்கு முறையிலோ, மின்சாரப் பகிர்விலோ, இருப்புப்பாதைப் போக்குவரத்து வசதிகளிலோ, அல்லது தபால் தந்தி தொடர்பிலோ ஏதேனும் இடர்ப்பாடுகள் ஏற்பட்டால், அது மக்களின் அன்றாடப் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்து, அவர்களின் நிம்மதியான வாழ்க்கைக்குப் பெருந் தீங்கு விளைக்கும். எனவே, இவ்வகைப் பொதுப்பயன் நிறுவனங்களை அரசே ஏற்று நடத்துவதன் மூலம், மக்களின் இன்றியமையாத் தேவைகளை, எவ்வித இடர்ப்பாடு களுமில்லாமல், பூர்த்தி செய்யலாம். நாட்டின் அனைத்துப் பொதுப்பயன் நிறுவனங்களும், பொதுத்துறையில் அமைக்கப் பட்டால், ஒருங்கிணைந்த, செம்மையான நிருவாகத்தின் மூலம், மக்கள் நலனைச் சிறந்த முறையில் அரசு பேணிக் காக்க முடியும். மாறாக, இவ் வகை நிறுவனங்கள் தனியார்துறையிலமைக்கப் பட்டால், அவை இலாபத்தையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு, மக்கள் நலனை முற்றிலும் புறக்கணிக்க ஏதுவாகும். ஆகவே, பொதுப்பயன் நிறுவனங்கள், பொதுத்துறையில்தான் அமைக்கப்படல் வேண்டுமெனத் திட்டவட்டமாகக் கூறலாம். இக் கருத்து வலுவுற்றதால்தான், 1956ஆம் ஆண்டுத் தொழிற் கொள்கை முடிந்தவரை, அனைத்துப் பொதுப்பயன் நிறுவனங் களும், பொதுத்துறையில்தான் ஏற்படுத்தப்படல் வேண்டுமென வலியுறுத்திற்று.

நம் நாட்டில் பொதுப்பயன் நிறுவனங்களாகிய இருப்புப் பாதைப் போக்குவரத்து, தபால் தந்தி மற்றும், செய்தித் தொடர்பு போன்றவை பொதுத்துறையில் அமைக்கப்பட்டு, சீருடன் பணிபுரிந்து வருவதை இவ்விடத்தில் நினைவுகூரலாம்.

4. முற்றுரிமையைத் தவிர்த்தல் (Elimination of Monopoly)

அரசு, பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடாமல், 'தலையிடாக் கொள்கை'யைக் கடைப்பிடித்து, தனியார்துறைக்கு அனைத்துத் தொழில்களையும் ஒதுக்கிவிடுமாயின், அது, நிச்சயமாகத் தனியார்துறையில் முற்றுரிமையை ஏற்படுத்தி விடும். இதனால் ஒரு சில தனி மனிதர்களின் சுயநலத்திற்காகப் பொதுநலம் மிதிக்கப்பட்டு, நுகர்வோர்கள், தொழிலாளர்கள், பின் தங்கிய மக்கள் ஆகிய அனைவருக்கும் பெருந் தீங்கை ஏற்படுத்தும். முற்றுரிமையினால், பொருள்களின் விலைகள் எவ்வித நியாயமான வரைமுறைகளுக்கும் கட்டுப்படாமல் உயர்த்தப்படும். அதே சமயத்தில், பொருள்களின் தரம் குறைக்கப்படும். ஒரு சில மனிதர்கள் மட்டும், தொழில்களில் கொள்ளை இலாபம் பெறுவதனால், வருவாயிலும், செல்வப் பங்கீட்டிலும், அதிக அளவில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்படும். எனவே முற்றுரிமை, ஜனநாயகச் சமுதாய வளர்ச்சித் திட்டங்களுக்குகந்ததல்ல என்பது தெளிவாகின்றது.

எனவேதான், நம் தொழிற்கொள்கைகளில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம், தனியார் துறையில் முற்றுரிமைகளைத் தவிர்க்க முடிவு செய்யப்பட்டது. அரசு, தனியார்துறைத் தொழில்களைக் கட்டுப்படுத்துவதற்காக, 1951ஆம் ஆண்டில் தொழில் (விரிவுபடுத்தும் மற்றும் கட்டுப் படுத்தும்) கொள்கையை [Industries (Development and Regulation) Act, 1951] இயற்றியது. மேலும், உரிமம் வழங்கல் தொடர்பான பல சட்டங்களையும் ஏற்படுத்தியது.

மேற்கண்டவாறு, தனியார்துறையில் முற்றுரிமையை அறவே நீக்குவதன் மூலம், சரிசம செல்வப் பகிர்வை ஏற்படுத்து வதும், பொதுத்துறையின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று எனக் கூறலாம்.

5. சிறந்ததோர் உள்ளமைப்பை ஏற்படுத்துதல் (Infra Structure)

பொருளாதார வளர்ச்சி ஏற்படாத நாடுகளில், போக்கு வரத்து, செய்தித் தொடர்பு, நீர்ப்பாசனம், மின்சாரம் முதலிய வசதிகள் சிறப்பான முறையில் அமைந்திருப்பதில்லை. இதன் காரணமாக நாட்டில் சிறந்ததோர் உள்ளமைப்பு ஏற்படாமல், பொருளாதார முன்னேற்றத்தின் தொடக்கநிலைகளில் உற்பத்தித் திட்டங்கள் வெற்றியடைவதில்லை. போக்குவரத்து, நீர்ப் பாசனம், மின்சார உற்பத்தி ஆகிய தொழில்களையமைக்க, மிக அதிகமான மூலதனம் தேவைப்படுவதால், தனியார் தொழில்

முயல்வோர்கள், இத்தொழில்களில் முதலீடு செய்யத் தயங்குவர். பல சமயங்களில் தனியார்துறையினரால், அதிக அளவில் மூலதனத்தைத் திரட்ட முடிவதில்லை. இதனால், சில குறிப்பிட்ட தொழில்கள் வளர்ச்சியடையாமல், பின்தங்கிய நிலையில் இருக்கின்றன. இது நாட்டின் சரிசமப் பொருளாதார வளர்ச்சியையும், உள்ளமைப்பையும் மிகவும் பாதிக்கின்றது. எனவே, இது போன்று பின்தங்கிய தொழில்களைப் பேரளவு உற்பத்தியின் அடிப்படையில், பொதுத்துறையில் தோற்றுவிப்பது அரசின் கடமையாகின்றது. நம் நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செய்தித் தொடர்பு, மின்சார உற்பத்தி, நீர்ப்பாசனம், சாலைப் போக்குவரத்து போன்றவை பொதுத்துறையில் ஏற்படுத்தப் பட்டு, சிறந்ததொரு உள்ளமைப்பை ஏற்படுத்தியிருக்கின்றன.

6. தேவையில்லாப் போட்டியைத் தவிர்த்தல்

தனியார்துறைத் தொழிலமைப்புகளுக்கு, அதிக அளவில் சுதந்திரம் அளிக்கப்படும்போது, அவைகளிடையே தேவையில்லாததும், பயனற்றதுமான போட்டி ஏற்படுகின்றது. இதனால் தொழிலமைப்புகள் உத்தம நிலையை (Optimum Level) அடைவது இயலாததாகின்றது. எனவே, அனைத்துத் தொழிலமைப்புகளையும் நாட்டுடைமையாக்கி, பொதுத்துறையை விரிவு படுத்துதல் மூலம், பேரளவு உற்பத்தியின் மற்றப் பல நன்மைகளையும் அடைந்து, பயனற்ற போட்டிகளைத் தவிர்க்க முடிகின்றது.

7. சமநிலைப் பொருளாதார முன்னேற்றத்தை அடைதல்

தொழிலமைப்புகள் தனியார் தொழில்முயல்வோர்களால் தோற்றுவிக்கப்படும்போது, சில குறிப்பிட்ட மாநிலங்கள் அல்லது பகுதிகள் மட்டும் வளர்ச்சியடைந்து, மற்றப் பகுதிகள் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கிவிடுகின்றன. தனியார் துறையினர் தொழிலமைப்பிற்குத் தேவையான காரணிகளையும், இலாபம் ஈட்டும் திறனையும்தான் கருத்திற் கொள்வாரேயன்றி, நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சமநிலை வளர்ச்சி (Balanced Regional Development) போன்ற பொது நலனைப் புறக்கணிப்பர். எனவேதான், சமநிலைப் பொருளாதார முன்னேற்றத்திற்கு, பொதுத்துறை மிகவும் அவசியமாகின்றது. அரசு, சீரானதொரு திட்டத்தின் மூலம், பின்தங்கிய மாநிலங்களில் புதிய பொதுத்துறைத் தொழிலமைப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம், நாட்டில் சமநிலைப் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த முடியும். இதன் மூலம், தொழிற் செறிவில் (Localisation) ஏற்படும் தீமைகளையும் களையலாம். நம் நாட்டில், பல பொதுத்

துறைத் தொழிலமைப்புகள் பின்தங்கிய மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டு, சமநிலைப் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியிருக்கின்றன. மத்தியப் பிரதேசம், ஒரிஸ்ஸா, மேற்கு வங்காளம், பீகார் போன்ற மாநிலங்களில் அமைக்கப் பட்ட எஃகு ஆலைகளையும், பீகார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், உத்தரப் பிரதேசம், கேரளா, பஞ்சாப், மகாராஷ்டிரம் போன்ற மாநிலங்களில் உரத் தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டதையும், இயந்திரக் கருவிகள் உற்பத்தித் தொழிற்சாலை இராஜஸ்தானில் அமைக்கப்பட்டதையும் இக் கருத்தினை வலியுறுத்தும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகக் கூறலாம்.

8. பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துதல்

சமுதாயத்திற்குப் பயனளிக்கக் கூடிய கல்வி, மருத்துவம், போக்குவரத்து, செய்தித் தொடர்பு, நீர்ப்பாசனம், மின்சார உற்பத்தி போன்ற தொழில்களைப் பொதுத்துறையில் அரசு அமைப்பதன் மூலம், அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யலாம். மேற்கண்ட வசதிகளைப் பெருக்குவதற்காக அரசு மேற்கொள்கின்ற செலவுகள், பொருளாதார முன்னேற்றத்தை எளிதில் ஏற்படுத்துவதற்கான சாதகச் சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கின்றன. எடுத்துக்காட்டாக, போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்றவைகளின் முன்னேற்றம், விரிவான சந்தையை ஏற்படுத்தி அதன் மூலம், உற்பத்தியை அதிகரிக்கச் செய்கின்றது. இது போன்றே மின்சார உற்பத்தியின் மூலம், இயக்கச் சக்தியைப் பெருக்கி, நாட்டைத் தொழில்மயமாக்க நல்ல வாய்ப்பு ஏற்படுகின்றது. கல்வி, மருத்துவ வசதிகள் போன்றவை முன்னேற்றமடையும் பொழுது, தொழிலாளர்கள் பெரும் பயன் எய்துகின்றனர். இதனால், தொழிலாளர்கள் ஊக்கமுடன் பணியாற்றி உற்பத்தி யைப் பெருக்கித் தொழிலமைப்புகளின் வளர்ச்சிக்கு வழி வகுக் கின்றனர். மேலும் அதிக வருவாயின் மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரம் உயர வாய்ப்பேற்படுகிறது.

இவ்வாறு, பொதுத்துறையின் வளர்ச்சி, நாட்டுப் பொருளா தாரத்தில் அமைந்திருக்கும் 'வறுமை வாட்டத்'தைக் களைந்து, பொருளாதார முன்னேற்றத்திற்குப் பேருதவி புரிகின்றது.

9. வேலைவாய்ப்புகளைப் பெருக்குதல்

பின்தங்கிய நாடுகளில் வேலைவாய்ப்பு விகிதம் மிகவும் குறைந்த அளவிலேயே இருக்கின்றது. எனவே, இதுபோன்ற நாடுகளில், அரசு வேலைவாய்ப்புகளைப் பெருக்கும் வகையில்

திட்டங்களைத் திட்ட வேண்டும். பேராசிரியர் கே.டி.ஷா (K. T. Shah) என்பவர், 'சமதர்ம சமுதாய அமைப்பு முறையில் தான், நாட்டிலுள்ள வயதடைந்த தொழிலாளர்களனைவருக்கும் போதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்த முடியும்' எனக் கூறுகிறார். சமதர்ம சமுதாயம் அமைக்க, பொதுத்துறையின் பங்கு இன்றியமையாததாகும். எனவே அரசு, பொதுத் துறையை விரிவுபடுத்துவதன் மூலம் சமதர்ம சமுதாயத்தைப் பாங்குற அமைத்து, வேலைவாய்ப்புகளைப் பெருக்கி விரைவான பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும். பலவகைப் பட்ட பேரளவு உற்பத்தித்திறன் வாய்ந்த தொழிலமைப்பு களையும், சிறிய அளவு தொழிலமைப்புகளையும், குடிசைத்தொழில் களையும் வளர்ச்சியடையச் செய்வதன் மூலம், வேலையின்மைச் சிக்கலைத் தீர்க்க முடியும். பல துறைகளிலும், குறிப்பாகப் பொதுத்துறையில் பேரளவில் மூலதனத்தை முதலீடு செய்ய அரசினால் மட்டுமே முடியும். எனவே, பொதுத்துறையில் பல்வேறு வகையான தொழிலமைப்புகளைத் தோற்றுவிப்பதன் மூலம், அரசு, முழு வேலைவாய்ப்பிற்கு (Full Employment) வழி வகுக்க முடியும். நம் நாட்டில், பொதுத்துறைத் தொழிலமைப்பு கள் மட்டும் 1966-'67ஆம் ஆண்டில் சுமார் 4,05,000 தொழி லாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்தன. இவ்வெண்ணிக்கை 1973-'74ஆம் ஆண்டில் சுமார் 13,00,000 ஆக உயர்ந்தது. எதிர்காலத்தில் இவ் வேலைவாய்ப்பு பன்மடங்கு அதிகரிக்கும் எனக் கூறுவது மிகையாகாது.

10. தொழிலாளர் நலம் பேணல்

நாட்டு மக்களின் முகவர் என்ற முறையில், அரசு, தொழி லாளர்களின் நலனைப் பேணிக் காத்து மேம்படுத்த பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் அவசியமாகும். நிரந்தர வேலைவாய்ப்பின்மை, சுயநலத்திற்காகத் தொழிலாளர்களைச் சுரண்டல், மிகவும் மோசமான பணிபுரியும் நிலைமை போன்ற வற்றை நீக்கி, நியாயமான கூலியும் வேலைப் பாதுகாப்பும் மேம்பாடடைந்த பணிபுரியும் நிலைமையையும் தொழிலமைப்பு களில் ஏற்படுத்துதல் அரசின் இன்றியமையாக் கடமையாகும். தொழிலாளர் நலம்பேணும் நடவடிக்கைகளையும், தொழிலாளர் களுக்கு ஊக்கச் சன்மானம் (Incentive Bonus) அளித்தல், இலாபத்தில் பங்களித்தல், நிருவாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்களித்தல் முதலிய புதிய திட்டங்களைப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் நடைமுறைப்படுத்தலாம். அரசு மேற் கொள்ளும் இந் நடவடிக்கைகள், தனியார் துறைத் தொழிலமைப்பு களுக்கு வழிகாட்டுவனவாய் அமையும். இதன் மூலம் கலப்புப்

பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்படும் நமது நாட்டில், பொதுத்துறை, தனியார்துறை ஆகிய இருதுறைத் தொழிலமைப்புகளிலும் தொழிலாளர்களின் நலம் காக்கப்பட்டு, மேம்படுத்தப்பட வாய்ப்பு ஏற்படுகின்றது. தொழிலாளர்களும் ஆர்வத்துடன் தத்தம் பணிகளில் திறமையனைத்தையும் ஈடுபடுத்தி உற்பத்தியை அதிகரிக்கச் செய்வர். இதனால் நாட்டின் பொருளாதார முன்னேற்றம் விரைவடையும்.

11. இயற்கை வளங்களைப் பாதுகாத்தல்

பொதுத்துறையின் மற்றொரு முக்கிய நோக்கம் நாட்டின் இயற்கை வளங்களைப் பாதுகாத்தலாகும். கனிப்பொருள், உலோகத் தாதுப்பொருள் முதலிய இயற்கைச் செல்வங்கள் குறிப்பிட்ட அளவில்தான் இயற்கையால் படைக்கப்பட்டிருக்கின்றன. நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு இக் கனிவளங்கள் மிகவும் இன்றியமையாதனவாகும். எனவே, நாட்டின் எதிர்காலப் பொதுநலனுக்கு, இவ்வகைச் செல்வங்களை மிகவும் திட்டமிட்டுச் சிக்கனமாகப் பயன்படுத்துதல் வேண்டும்.

தனியார்துறைத் தொழிலமைப்புகள் இலாபம் ஈட்டுதலையே முக்கியக் குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவதால், இயற்கைக் கனிவளங்களைப் பயன்படுத்துவதில் சிக்கனத்தைப் புறக்கணித்து நாட்டின் நலனுக்கு ஊறு விளைவிக்கும் எனக் கூறலாம். எனவேதான் கனிச்செல்வங்களைப் பகிர்ந்தளிக்கும் உரிமையும், நிருவாகமும் பொதுத்துறைக்கு ஒதுக்கப்படல் வேண்டும். சிறந்த திட்டங்களின் மூலம், கனிவளங்களைச் சிக்கனமான முறைகளில் பயன்படுத்த, பொதுத்துறையில் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

இதன் காரணமாகத்தான், பல நாடுகளிலும், நிலக்கரிச் சுரங்கங்களும், எண்ணெய்க் கிணறுகளும் நாட்டுடைமையாக்கப்பட்டுப் பொதுத்துறையில் நிருவகிக்கப்பட்டு வருகின்றன. நமது நாட்டிலும்கூட, அனைத்து நிலக்கரிச் சுரங்கங்களும், உலோகத் தாதுப்பொருள்கள் கிடைக்கும் சுரங்கங்களும் பொதுத்துறையைச் சார்ந்துள்ளன. நிலக்கரியைச் சிக்கனமாகவும், திட்டமிட்டும் பயன்படுத்துவதற்காக 'இந்திய நிலக்கரி வளர்ச்சிக் கூட்டுரு' (National Coal Development Corporation) ஏற்படுத்தப்பட்டது. மேலும் 'இந்தியக் கனிப்பொருள், உலோக வாணிகக் கூட்டுரு'வும் (The Minerals and Metals Trading Corporation of India Ltd.) ஏற்படுத்தப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், நம் நாட்டின் கனிப்பொருள் ஏற்றுமதியைப் பெருக்குவதும் விரிவுபடுத்துவதுமாகும். இவ்வாறு நாட்டின் நலனுக்காக, இயற்கை வளங்களைச்

சிக்கனமாகப் பயன்படுத்திப் பாதுகாக்கப் பொதுத்துறை மிகவும் உதவி புரிகின்றது.

12. இலாப விகிதமில்லாத் தொழிலமைப்புகளை அமைத்தல்

நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியமான சில தொழிலமைப்புகளில் இலாப விகிதம் குறைவாகவும், இடர்ப்பாடுகள் மிகுதியாகவும் இருக்கின்றன. இது போன்ற தொழில்களில் முதலீடு செய்யத் தனியார்துறைத் தொழில்முயல்வோர் முன்வரமாட்டார்கள். எனவே, அரசு, இத் தொழில்களைப் பொதுத்துறையில் தோற்றுவித்து, சரிசம தொழில் வளர்ச்சிக்கு வழிவகுத்தல் வேண்டும். பொதுத்துறையின் முக்கிய நோக்கம், நாட்டின் பொதுநலனும், பொருளாதார முன்னேற்றமுமே தவிர, இலாபமீட்டுதலன்று. இலாப விகிதமில்லா அல்லது இலாப விகிதம் குறைவாகவுள்ள தொழில்களைப் பொதுத்துறையில் அமைப்பதே சாலச் சிறந்ததாகும். நமது நாட்டில், உணவு உற்பத்தியை அதிகரிக்க ஏற்படுத்தப்பட்டது தான் 'சிந்திரி உரத் தொழிற்சாலை'யும், 'இந்துஸ்தான் பூச்சி கொல்லி மருந்து உற்பத்தி நிறுவன'மும். இதுபோன்று, நாட்டின் நலனுக்காகத் தொழில்களை ஏற்படுத்தப் பொதுத்துறையால் தான் முடியுமென்று கூறலாம்.

13. சமதர்ம சமுதாயத்தை உருவாக்குதல்

இந்திய அரசு மக்களாட்சி சார்ந்த பொதுவுடைமைத் தத்துவத்தை (Democratic Socialism) வரித்துக்கொண்டு விட்டது. இதனால், செல்வப் பங்கீட்டில் அமைந்திருக்கக் கூடிய ஏற்றத் தாழ்வுகளைக் களைய, அரசு பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொள்வது அவசியமாகிறது.

அரசின் நடவடிக்கைகள் முதலீட்டையும், உற்பத்தியையும் பாதிக்கா வண்ணம் அமைந்து, பொருளாதாரத்தின் பல துறைகளிலும் சரிசம வளர்ச்சி ஏற்படுமாறு பார்த்துக்கொள்ளுதல் வேண்டும். சமதர்ம சமுதாயத்தை அமைக்க விரும்பும் எந்த ஒரு அரசும், பல முக்கியத் தொழிலமைப்புகளை நாட்டுடைமையாக்குதல் மூலமும், பொதுத்துறையில் புதிய தொழில்களைத் தோற்றுவிப்பதன் மூலமும்தான், முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எனவேதான், நமது அரசும் பொது நலனுக்காக உற்பத்தி, வாணிகம் ஆகியவைகளைக் கட்டுப்படுத்துவதோடு, இத் துறைகளில் அரசுத் தொழிலமைப்புகளைப் படிப்படியாக விரிவு படுத்திக் கொண்டும் வருகின்றது. ஆயுள் காப்பீடு, ஆகாயப்

போக்குவரத்து, வங்கிகள், பொதுக்காப்பீடு போன்ற பல்வேறு தொழிலமைப்புகள் நாட்டுடைமையாக்கப்பட்டு, பொதுத் துறையில் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றன.

14. இன்றியமையாப் பொருள்களைப் பங்கிடு செய்தல்

மக்கள் நலங்காக்கும் எந்த ஒரு அரசும், தேவைப்படும் காலங்களில், சில இன்றியமையாப் பொருள்களை, மக்களனை வருக்கும் பங்கீடு செய்யவேண்டும். குறைந்த அளவே அளிப்பைக் கொண்டிருக்கும் அத்தியாவசியப் பொருள்களை, அரசு பங்கீடு செய்வது, மக்கள் நலனைக் காப்பதாக அமையும். இதன் மூலம் தனியார்துறைத் தொழில்முயல்வோர்கள் கொள்ளை இலாபம் பெறுவதும், கள்ளச்சந்தை நடவடிக்கைகளும் தவிர்க்கப்படு கின்றன. முக்கியமாக, போர்க்காலங்களிலும் பஞ்சக்காலங் களிலும் பொருள்கள் பதுக்கப்படும் பொழுது, அரசு பொதுத் துறையின் மூலம் பங்கீட்டு முறையை ஏற்படுத்துகின்றது. தனியார்துறையினர், பொருள்களைப் பதுக்கி, கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு விற்பது இதனால் கட்டுப்படுத்தப்படுகின்றது. இந் நோக்கத்தை மையமாகக்கொண்டுதான், நம் நாட்டில் 1965ஆம் ஆண்டில், இந்திய உணவுக் கூட்டுரு (Food Corporation of India) தோற்றுவிக்கப்பட்டது. இப் பொதுத்துறைத் தொழி லமைப்பு, நம் நாட்டில் உணவுப் பொருள்கள் பங்கீட்டில் போற்றத்தகும் சாதனைகள் பலவற்றைப் புரிந்துள்ளது.

15. ஏற்றுமதியைப் பெருக்கல், வகையகற்சி (Diversify) செய்தல்

நாட்டின் தொழில் வளத்தைப் பெருக்கி, வளர்ச்சியடைய விரும்பும் நாடுகள், ஏற்றுமதியைப் பெருக்கி, இறக்குமதியைக் குறைத்தல் வேண்டும். பின்தங்கிய நாடுகள் ஒரு சில பாரம்பரியப் பொருள்களை மட்டுமே ஏற்றுமதி செய்வதால், ஏற்றுமதி அதிகரிப்பதில்லை. ஏற்றுமதிகள் பெருகிட, வளர்ந்து வரும் நாடுகள், பலவகைப்பட்ட நுகர்வோர் பொருள்களையும் உற்பத்தி செய்தல் வேண்டும். இதற்கு அரசு பலவிதமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நமது நாட்டில், முதல் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் நாட்டின் வாணிகம் தனது நேரடிக் கட்டுப்பாட்டில் இருக்கவேண்டுமென அரசு விரும்பியது. குறிப்பாக, ஏற்றுமதியைப் பெருக்கி, நமது வெளிநாட்டு வாணிகத்தை வளர்ப்பதற்கு, வாணிகத்தில் தானே நேரடியாக ஈடுபட வேண்டுவதன் இன்றியமையாமையை அரசு உணர்ந்தது. அதன் வாயிலாக, அது ஈட்டும் இலாபம், வெளிநாட்டுச் செலாவணி ஆகியவை நாட்டின் பொருளாதாரத் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்த மிகவும் உதவியாகயிருக்குமென

அரசு உணர்ந்தது. எனவேதான், நாட்டின் வெளிநாட்டு வாணிகத்தை விரிவுபடுத்த பொதுத்துறையில் பற்பல தொழிலமைப்புகளை அரசு ஏற்படுத்தியது. மேலும், வெளிநாட்டு வாணிகப் பொறுப்பை மேற்கொண்டு, ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்ய 'இந்திய அரசு வாணிகக் கூட்டுரு' (State Trading Corporation of India Ltd.), 'இந்தியக் கைத்திறத்தொழில் மற்றும் கைத்தறி ஏற்றுமதிக் கூட்டுரு' (The Handicrafts and Handlooms Exports Corporation of India Ltd.), 'இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கூட்டுரு' (The Indian Motion Pictures Export Corporation Ltd.) முதலிய பொதுத்துறைத் தொழிலமைப்புகளை அரசு தோற்றுவித்தது.

16. ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்

வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில், பொருளாதார முன்னேற்றத்திற்கு, ஆராய்ச்சிப் பணிகளும், புதிய கண்டுபிடிப்புக்களும் பெருமளவில் உதவி புரிகின்றன. விஞ்ஞான வளர்ச்சியில் முதன்மையில் இருப்பதற்காகவும், பலதரப்பட்ட அறிவியல் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஆனால், இவ்வாராய்ச்சிப் பணிகளுக்கு, அதிக நிதி வசதியும், முதலீடும் தேவைப்படுகின்றன. மேலும், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுவதில், பற்பல இடையூறுகள் ஏற்படுகின்றன. இவ்விடையூறுகளைத் தகர்த்து, ஆராய்ச்சிப் பணிகளில் வெற்றி காணும் திறன், தனியார்துறையைவிடப் பொதுத்துறைக்குதான் அதிகமுண்டு. தனியார்துறைத் தொழில்முயல்வோர்கள் இத்தகைய இடையூறுகளை ஏற்க முன்வரத் தயங்குவர். ஆராய்ச்சிப் பணிகள் வெற்றி பெறுவிடில் ஏற்படும் பெரும் இழப்பைத் தனியார்துறையினரால் ஏற்றுக்கொள்வது சாத்தியமாகாது. ஆனல், பொதுத்துறை நிறுவனங்கள் பேரளவில் முதலீட்டைக் கொண்டவைகளாகும். அவை மேற்கொள்கின்ற ஆராய்ச்சிகள் வெற்றிபெற அதிக வாய்ப்புகள் உள்ளன. ஆகவேதான், பொதுத்துறையில் ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல் தவிர்க்க முடியாததாகின்றது. இவ்வாராய்ச்சிப் பணிகளின் மூலம், மேம்பட்ட உற்பத்தி வழிகளும், பொருள்களின் தரத்தை உயர்த்தும் வழிமுறைகளும் கண்டுபிடிக்கப்படுகின்றன.

விஞ்ஞான வளர்ச்சியும், ஆராய்ச்சிப் பணிகளும் பொதுத்துறையில் வெற்றிகரமாக நடைபெற முடியும் என்பதற்கு ருஷ்ய நாடு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. அணு ஆராய்ச்சியும், விண்வெளி ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, சாதனைகள் புரியப்பட்டு வருகின்றன. நமது நாட்டில் 'தேசிய

ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கூட்டுரு' (National Research and Development Corporation Ltd.) ஏற்படுத்தப்பட்டதன் நோக்கம், மேற்கூறப்பட்டவைகளுக்காகும்.

பொதுத்துறைக்கு எதிரான வாதங்கள்

பொதுத்துறைத் தொழிலமைப்புகளை ஏற்படுத்துவதன் மூலம் அடையக்கூடிய பல்வேறு வகையான நன்மைகளையும், அவைகளின் மூலம் ஏற்படக்கூடிய பொருளாதார வளர்ச்சியையும் பார்த்தோம். இவைகளனைத்தும், பொதுத்துறைக்குச் சாதகமான வாதங்களாகும். அதே சமயத்தில் பொதுத்துறைக்கு எதிரான வாதங்களும் பலவுள்ளன. பொதுத்துறையை விரிவுபடுத்துதல், பல தீய விளைவுகளைத் தோற்றுவிக்கும் என்று கருதிய சில பொருளாதார நிபுணர்கள், எதிரான வாதங்களைக் கூறுகின்றனர். எனினும், எதிர்வாதங்கள் அனைத்துமே ஏற்றுக் கொள்ளப்படத் தக்கவை அல்ல. அவற்றில் பல வாதங்கள் உண்மைக்குப் புறம்பானவைகளாக இருப்பினும், பொதுத்துறையைப்பற்றி நிலவும் சில தவறான எண்ணங்களைக் களையும் பொருட்டு, அவ் வகையான வாதங்களைக் கீழ்க்கண்டவாறு ஆராயலாம் :

(1) தனியார்துறைத் தொழிலமைப்புகளைப் போல், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இலாபகரமாகச் செயற்படுவதில்லை என்பது, பொதுத்துறைக்கெதிரான வாதங்களில் முக்கியமானதாகும். இதற்குக் கூறப்படும் காரணம், தனியார் துறையில் இலாப நோக்கமும், நிருவாகத் திறமையும் கணிசமான அளவில் இருக்கின்றனவென்றும், பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் இக் காரணிகள் முற்றிலும் இல்லை என்பதாகும்.

மேற்கண்ட கூற்றில் ஓரளவு உண்மை இருந்தபோதிலும், முற்றிலும் ஏற்றுக்கொள்ளக் கூடியதென்று கூறுவதற்கில்லை. ஏனெனில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தோற்றுவிக்கப் படுவதன் நோக்கம் இலாபமீட்டுதலன்று. நாட்டு மக்களின் நலனைப் பாதுகாத்தலும், விரைவான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்துதலுமே பொதுத்துறையின் அடிப்படைக் குறிக்கோளாகும். சில குறிப்பிட்ட தொழில்களில் இலாப விகிதம் குறைவாகவோ அல்லது முற்றிலும் இன்றியோ இருக்கும். இருந்தாலும்கூட, நாட்டின் சரிசம சமுதாய முன்னேற்றத்திற்கு, இலாப விகிதமில்லாத் தொழில்களையும் அமைத்தல் அரசின் தலையாய கடமையாகும். இக்கருத்தை மையமாகக் கொண்டு தான், பல்வேறு வகையான தொழில்களையும் பொதுத்துறையில் அரசு அமைத்து வருகின்றது. மேலும், உற்பத்தி மற்றும் வாணிகத்

தொழிலை மேற்கொண்டிருக்கும் சில பொதுத்துறைநிறுவனங்கள், கடந்த சில ஆண்டுகளில் அதிக இலாபத்தை ஈட்டியுள்ளன என்பதைப் பின்வரும் புள்ளி விவரத்திலிருந்து அறியலாம்.

முடிவுற்ற ஆண்டு	மொத்த இலாபம் (ரூ. கோடியில்)
1972-'73	18
1973-'74	64.42
1974-'75	150 (திட்டமிடப்பட்டது)

ஆகவே, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இலாபமீட்டா எனக் கருதுதல் முற்றிலும் தவறு என முடிவாகக் கூறலாம்.

(2) நம் 'மைய அரசிற்கு' பொருளாதாரக் கடமைகள் அதிக அளவில் இருக்கின்றன. சமுதாயம் வளர்ச்சியுறும்போது, அரசின் கடமைகளும் பெருகுகின்றன. இதன் காரணமாக, நிருவாகச் செலவின் சுமையும் அதிகரித்து வருகின்றது. இந் நிலையில் பொதுத்துறையை விரிவுபடுத்திக்கொண்டே சென்றால், அரசின் நிருவாகப் பளு அதிகரித்துவிடும். திறமையான நிருவாகமும் செயல்முறைகளும் ஏற்படும் வாய்ப்புகள் குறைந்து விடுகின்றன. இது பொருளாதார முன்னேற்றத்திற்குப் பெரும் தடையாக விளங்குகின்றது என்பது மற்றொரு எதிரான வாதம்.

மேற்கண்ட கருத்தும் முற்றிலும் தவறானதெனப் பின்வரும் காரணங்களால் முடிவு செய்யலாம். சமுதாயம் வளர்ச்சியடையும் பொழுது, அரசு பற்பல நிலைகளிலும், பொருளாதார நடவடிக்கை களில் ஈடுபடுவதால், அரசின் நிருவாகப் பளு அதிகரிப்பதென்பது ஓரளவு உண்மைதான். எனினும், நிருவாகப் பளு அதிகரித்து விடுகின்றதே என்ற காரணத்திற்காக, அரசு பொருளாதார நடவடிக்கைகளையோ அல்லது முக்கியத் தொழில்களை நாட்டுடைமையாக்கிப் பொதுத்துறையை விரிவுபடுத்தும் நடவடிக்கை களையோ புறக்கணித்துவிட முடியாது. விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய, அரசு, தனக்கென ஒரு சிறந்த தொழிற் கொள்கையை ஏற்படுத்தியும், தனியார்துறைத் தொழில்களைக் கட்டுப்படுத்தி முறைப்படுத்தியும், பொதுத்துறையை விரிவு படுத்துதல் மிக அவசியமாகும். நமது நாடு சுதந்திரமடைந்த போது, பல்வேறு பிரச்சினைகளும், நிதிப் பற்றாக்குறையும் பெருமளவில் இருந்தபோதிலும், 1948ஆம் ஆண்டின் தொழிற் கொள்கையிலும், 1956ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கையிலும் பொதுத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, பல முக்கிய அடிப்படைத் தொழில்களைப் படிப்படியாக நாட்டுடைமையாக்க அரசு முடிவு செய்தது. நிருவாகச் செலவின் சுமை கணிசமான

அளவில் இருந்தும்கூட, ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவும் (State Bank of India), ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவும் (Life Insurance Corporation), பதினொன்கு முக்கிய வணிகவங்கிகளும் ஒன்றன் பின் ஒன்றாக நாட்டுடைமையாக்கப்பட்டுப் பொதுத்துறை விரிவடைந்தது. மேலும், பல்வேறு வகையான தொழில்நிதிக் கூட்டுரு அமைப்புகளும், தொழில் முன்னேற்றக் கூட்டுருவும், ஏற்றுமதி வளர்ச்சிக் கூட்டுருவும், இந்திய யூனிட் டிரஸ்ட்போன்ற நிறுவனங்களும் பொதுத்துறையில் அமைக்கப்பட்டன. இவைகளனைத்தும் நாட்டின் சமுதாய முன்னேற்றத்தில் பெரும் பங்கு வகிக்கின்றன.

(3) வளர்ச்சியடையாத நாட்டில், அரசு குறைந்த அளவு வசதிகளையே கொண்டுள்ளது. குறைந்த வசதிகளைக் கொண்ட அரசு, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் அதிகப் பங்கு ஏற்க முடியாது. எனவே, பொதுத்துறையை விரிவுபடுத்தல் அரசின் பளுவை அதிகப்படுத்திப் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்குமென மற்றோர் எதிர்வாதம் நிலவுகின்றது.

உலக நாடுகளைப் பார்க்கும்பொழுது, பல வளர்ச்சியடைந்து வரும் நாடுகள் பொதுத்துறையில் பற்பல தொழிலமைப்புகளை ஏற்படுத்தி, விரைவான சமுதாய முன்னேற்றத்தையடைந்து வருகின்றனவென்பது புலனாகும். குறைந்த அளவு வசதிகள் இருக்கும்போதுதான், ஒரு நாட்டில் பொதுத்துறை அத்தியாவசியமாகின்றது. தனியார்துறைத் தொழிலமைப்புகள் இக் குறைந்த அளவில் இருக்கும் வசதிகளைச் சிக்கனமாகப் பயன்படுத்தாமல், எவ்விதத் திட்டமுமின்றி, ஆடம்பரப் பொருள்களைத் தேவைக்கதிகமாக உற்பத்தி செய்து, அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தியைக் குறைத்துவிடுகின்றன. இதன் காரணமாக, பொருளாதார வளர்ச்சி சீராக அமையாமல், தேக்க நிலை ஏற்படுகின்றது. ஆகவேதான், பின்தங்கிய நாடுகளில், அரசு பொதுத்துறையை விரிவுபடுத்துவதன் மூலம் திட்டமிட்ட உற்பத்தி, சரிசமப் பகிர்வு முதலியவற்றையடைந்து, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது.

(4) அடுத்ததாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் எண்ணிக்கையில் பெருகும்போது, தனியார்துறையின் முன்னேற்றம் பாதிக்கப்படக்கூடுமென்றும், இதனால் பொருளாதார வளர்ச்சிக் குன்றிவிடும் என்றும் பொதுத்துறைக்கு எதிராக வாதிடப்படுகின்றது.

நம் நாட்டைப் பொறுத்தவரை, மேற்கண்ட கருத்து முற்றிலும் தவறானது எனத் திட்டவட்டமாகக் கூறலாம். நம்

அரசு கலப்புப் பொருளாதாரக் கொள்கையையும் (Mixed Economy Policy), சமதர்ம சமுதாயம் அமைப்பதையும் தன்னுடைய முக்கியக் குறிக்கோள்களாக வரித்துக்கொண்டு விட்டது என முன்பகுதியில் கண்டோம். கலப்புப் பொருளாதார அமைப்பில், தனியார்துறைக்கும் பொதுத்துறைக்கும் சரிசம முக்கியத்துவம் கொடுக்கப்படும். 1956ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை, இந்தியப் பொருளாதாரத்தில் தனியார்துறைத் தொழில்களுக்கென ஒரு நிரந்தர இடத்தை ஒதுக்கிற்று. மேலும், பொதுத்துறை என்பது தனியார்துறையின் எதிரியன்று; தனியார் துறையின் வளர்ச்சிக்கு உற்றுழி உதவும் நண்பன் எனவும் தெளிவாக விளக்கப்பட்டது. இதுபோன்றே 1973ஆம் ஆண்டின் தொழிற் கொள்கை 'கூட்டுத்துறை' (Joint Sector) என்றவொரு புதிய துறையைத் தோற்றுவிக்க வழி முறைகளை வகுத்தது. இக் கூட்டுத்துறைக் கொள்கையின் மூலம், போதிய நிதி வசதி யில்லாத் தனியார்துறைத் தொழிலமைப்புகளுக்குப் பொதுத் துறை, அனைத்து வசதிகளையும் ஏற்படுத்தி, ஒரு சிறந்த கூட்டாளியாக இணைந்து செயற்படுவதன் மூலம், அவற்றின் வளர்ச்சிக்குப் பேருதவி புரியுமெனக் கருதப்பட்டது. எனவே, வளர்ந்துவரும் நாடுகளில், பொதுத்துறையின் வளர்ச்சி தனியார்துறையைப் பாதிக்குமென்ற கருத்து முற்றிலும் தவறானது என்று முடிவு செய்யலாம்.

(5) பொதுத்துறைத் தொழிலமைப்புகளில், புதிய கண்டு பிடிப்புகளுக்கும், மேம்பாடடைந்த நவீன வழிமுறைகளை உற்பத்தியில் கடைப்பிடிப்பதற்கும், வாய்ப்புகள் மிகவும் குறைவு எனவும், பொதுத்துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தரம் குறைபாடுடையதாய் இருக்கிறது என்பதும், பொதுத்துறையைச் சாடும் நிபுணர்களின் கருத்தாகும்.

முன்னேற்றமடைந்த நாடுகளில் முன்னணியில் நிற்கும் சோவியத் ருஷ்யாவின் வளர்ச்சியை நோக்குவோமானால், மேற் கண்ட கருத்து எத்துணைத் தவறானது என்பது புலனாகும். ருஷ்யாவில் அனைத்துத் தொழில்களுமே பொதுத்துறையைச் சார்ந்தனவாகும். ஆனால், அறிவியல் வளர்ச்சியில், மற்ற நாடுகளுக்கு வழிகாட்டும் நாடாக அது இன்று விளங்குகின்றது. விண்வெளிக் கலத்தை முதன் முதலில் சந்திரனுக்கு அனுப்பும் முயற்சிகளில் மாபெரும் வெற்றியையடைந்து, மற்ற உலக நாடுகளை வியப்பிற்குள் ஆழ்த்தியது இந்த ருஷ்ய நாடாகும். நமது நாட்டிலும்கூட பொதுத்துறை ஆராய்ச்சி நிறுவனங்கள், மற்ற நாடுகள் வியக்கும் வகையில் அணுசக்தி ஆராய்ச்சி களிலும், மற்ற அறிவியல் ஆராய்ச்சிகளிலும் சாதனைகள் பல

புரிந்துள்ளன. சமீபத்தில் நம் அரசால் மேற்கொள்ளப்பட்ட அணுசக்தி ஆராய்ச்சியும், விண்வெளியில் ஏவப்பட்டுச் சுழன்று கொண்டிருக்கும் 'ஆர்யப்பட்டா'வும் நம் பொதுத்துறையின் ஆராய்ச்சித் திறமைக்கோர் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

அடுத்ததாக, பொதுத்துறையில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தரம் குறைபாடுடையன எனக் கூறுவதும் முற்றிலும் தவறாகும். பல பொதுத்துறைத் தொழிலமைப்புகள், தனியார்துறையின் பொருள்களுடன் போட்டியிடும் அளவிற்கு, மேம்பாடடைந்த தரத்துடன் பொருள்களை உற்பத்தி செய்து குவிக்கின்றன. மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக, பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான 'இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனம்' (Hindustan Machine Tools) உற்பத்தி செய்யும் கைக்கடிகாரங்களைக் கூறலாம். தரத்தில் மிகவும் சிறந்து விளங்கி, அயல் நாடுகளிலும் பெருமளவில் விரும்பப்படுமளவிற்கு இக் கைக்கடிகாரங்களின் தரம் அமைந்துள்ளது பொதுத் துறைக்கே பெருமை சேர்க்கும் ஒரு செய்தியாகும்.

(6) செயல்முறைகளில் தாமதமும், திறமையின்மையும், ஊழல்களும் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் மலிந்துள்ளனவென்பதும், மற்றொரு குற்றச்சாட்டாகும். இக் கருத்தும் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படத் தக்கதல்ல. நடைமுறையில், ஒரு சில பொதுத்துறைத் தொழிலமைப்புகளில், மேற்கண்ட குறைபாடுகள் இருந்தபோதிலும், முறையான நிருவாகத்தாலும், அரசின் தகுந்த நடவடிக்கைகளாலும், இக் குறைபாடுகளை முற்றிலும் நீக்கிவிடலாம். பொதுத்துறையில், அதிகாரிகளும், தொழிலாளர்களும் திறமையுடன் பணிபுரிவதில்லை என்பதும், நேர்மையற்ற முறையில் செயற்படுகின்றனர் என்பதும் முற்றிலும் தவறானதொரு கருத்தாகும். கணிசமான வருவாய் இல்லாதபோது, ஒரு சில ஊழியர்கள் நேர்மை தவறக் கூடும். ஆனால், போதுமான அளவில் வருவாயை அளிப்பதன் மூலம், அவர்களை நேர்மை தவறாதவர்களாக்கி, ஆர்வத்துடனும், திறமையுடனும் பணிபுரியச் செய்யமுடியும். மேலும், தனியார்துறைத் தொழிலமைப்புகளில் திறமையின்மையும், நேர்மையின்மையும் முற்றிலுமில்லை என்றும் கூறிவிட முடியாது. மக்களின் கவனத்தைத் தனியார்துறை அதிகம் ஈர்க்காததால், அத்தொழிலமைப்புகளிலுள்ள குறைபாடுகள் அனைவருக்கும் தெரிவதில்லை. அதே சமயத்தில், பொதுத்துறையின் பணிகளையும், செயல் முறைகளையும் அனைவரும் ஆர்வத்துடன் கண்காணித்து வருவதால், அவற்றின் அன்றாட நடவடிக்கைகளில் ஏற்படும்

சாதாரணக் குறைபாடுகள்கூடத் தெளிவாகத் தெரிந்து விடுகின்றன. எனவே, தனியார்துறையில் குறைபாடுகளே இல்லை என்றும், பொதுத்துறையில்தான் அவைகள் அதிக அளவிலுள்ளன என்றும் கூறுவது தவறு. சிறந்த அமைப்பு முறையாலும் மேம்பட்ட நிருவாகத் திறமையாலும், பொதுத் துறையில் காணப்படும் குறைபாடுகளை நீக்குதல் மிகவும் எளிதாகும்.

(7) இறுதியாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் அன்றாட அலுவல்களிலும், நிருவாகத்திலும் எதிர்க்கட்சிகள் குறுக்கிடுகின்றன என்றும், இதனால் பொதுத்துறையின் செயல்முறைப் பணிகள் செம்மையாக அமைவதில்லை எனவும் ஒரு கருத்து நிலவுகின்றது. ஆளும் கட்சியின் தலையீட்டாலும், கட்டுப்பாடுகளாலும் பொதுத்துறை நிறுவனங்களின் முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றதென்றும், இதனால் பொதுத் துறையால் பல நன்மைகளையும் சமுதாயத்திற்கு அளிக்க முடிவதில்லை எனவும் சில பொருளாதார வல்லுநர்கள் கருதுகின்றனர்.

இக் கருத்திலும் ஓரளவு உண்மையிருப்பினும், பொதுத் துறைத் தொழில்களுக்கு முழுமையான தன்னாட்சியுரிமையை அளிப்பதன் மூலம் இவ்விடர்ப்பாடுகள் நீக்கப்படலாம். அரசும் பல முன்னேற்பாட்டு நடவடிக்கைகளின் மூலம், அரசியல் கட்சி களின் ஆதிக்கம் பொதுத்துறையைப் பாதிக்காதவாறு செய்ய முடியும்.

இவ்வாறு, பொதுத்துறையின் குறைபாடுகள் எனக் கூறப் படும் கருத்துக்களை ஆராயும்பொழுது, அவைகளில் அனைத்தும் உண்மையானவைகளல்ல என்பதும், அப்படியே ஒரு சில கருத்து களில் சிறிதளவு உண்மையிருப்பினும்கூட அவைகள் நிவர்த்திக் கப்படக்கூடியவைகளே என்பதும் தெளிவாகின்றது. பொது வாக, பின்தங்கிய நாடுகள் விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப்பெற விரும்புகின்றன. எனவே பொருளா தார வளர்ச்சி நிலைகளில் அரசின் தீவிர நடவடிக்கைகளும், தொழிற்கொள்கைகளும் இன்றியமையாதவைகளாகின்றன. விரைவான பொருளாதார முன்னேற்றத்தைப்பெற, துரிதமான பல நடவடிக்கைகளை, உரிய காலங்களில் அரசு மேற்கொள்ள வேண்டும். பொருளாதார முன்னேற்றத்தைப் பெற பொதுத் துறையை விரிவுபடுத்துதல் மிகவும் அவசியமானதாகும். சமுதாய நலனைக்கருதி, அரசு அதிகப் பொருட்செலவையும், நிருவாகப் பளுவையும் பொருட்படுத்தாமல், பொதுத்துறைத் தொழிலமைப்புகளை அமைத்திடல் வேண்டும். இதன் காரண

மாக, பல துறைகளிலும் உற்பத்தி அதிகரித்து மக்களின் வருவாய் உயர்ந்து சமுதாயம் சமதர்ம வளர்ச்சியை அடைவது திண்ணம். தொழிலமைப்புகளை நாட்டுடைமையாக்கிப் பொதுத் துறையை விரிவுபடுத்துவதன் மூலம், மக்களின் வருவாயிலும், செல்வப்பங்கீட்டிலும் அமைந்திருக்கக்கூடிய பெருமளவு ஏற்றத் தாழ்வுகளைக் குறைக்கமுடியும். மேலும், கலப்புப் பொருளா தாரக் கொள்கை கடைப்பிடிக்கப்படும் நம் நாட்டில் தனியார் துறையின் வளர்ச்சிக்குப் பொதுத்துறை சிறந்த வழிகாட்டியாய் விளங்கமுடியும். தனியார்துறை ஏற்று நடத்த முடியாத பல அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களை, அரசு பொதுத்துறையில் ஏற்படுத்துவதன் மூலம், விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கலாம். சாலைகள், இருப்புப்பாதைகள் அமைத்தல், மின்சார உற்பத்தி, தபால் தந்தி, நீர்ப்பாசனம், உர உற்பத்தி, இரும்பு, எஃகு ஆலைகள் போன்றவற்றைப் பொதுத்துறையில் அமைப்பதன் மூலம் நாட்டைத் தொழில்மயமாக்க முடியும்.

எனவே, முடிவுரையாக எந்த ஒரு நாடும், விரைவான பொருளாதார வளர்ச்சிக்குப் பொதுத்துறையை விரிவுபடுத்துதல் அவசியமென்றும், குறிப்பாக, நமது நாட்டில் பொதுத்துறையை வளர்ப்பதன் மூலம் ஜனநாயக சமதர்ம பொருளாதார முன்னேற்றத்தை அடைய முடியுமென்றும் திட்டவட்டமாகக் கூறலாம்.

3. பொதுத்துறைத் தொழில்களின் அமைப்பு முறைகள்

(Forms of Organisation of Public Enterprises)

ஒரு நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பெனக் கருதப்படும் அடிப்படைத் தொழில்களையும், பேரளவுத் தொழில்களையும் பொதுத்துறையில் தோற்றுவிக்க வேண்டிய அவசியத்தையும் விரைவான சமதர்ம பொருளாதார முன்னேற்றத்தைப் பெறுவதில் பொதுத்துறை வகிக்கும் முக்கியப் பங்கு பற்றியும் முன் பகுதியில் கண்டோம். ஆனால் பொருளாதார முன்னேற்றத்தில் பொதுத்துறையின் பங்கு எந்த விகிதத்தில் அமையவேண்டுமென்பதில் கருத்து வேறுபாடுகளுள்ளன. முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளில் ஒரு சில முக்கியத் தொழிலமைப்புகள் மட்டும் பொதுத்துறையில் ஏற்படுத்தப் பட்டு, ஏனைய தொழில்கள் அனைத்தும், தனியார்துறைக்கு ஒதுக்கப்படுகின்றன. பொதுவுடைமைத் தத்துவத்தைப் பின்பற்றும் ருஷ்யா போன்ற நாடுகளில், அனைத்துத் தொழில்களும் பொதுத்துறையில் அமைக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, தனியார்துறையில் தொழில்கள் அமைக்கப் படுவதில்லை. இவ்விரு துருவங்களுக்குமிடையில் இந்தியா போன்ற சமதர்ம கொள்கையைப் பின்பற்றும் (Socialistic Principle) நாடுகளில் பொதுத்துறை, தனியார்துறை, கூட்டுறவுத்துறை என மூன்று வகைகளில் தொழில்கள் அமைக்கப் படுகின்றன.

நமது நாட்டில் 'கலப்புப் பொருளாதார'க் கொள்கையை அரசு பின்பற்றுகின்றது. பொதுத்துறையும் தனியார்துறையும் இணைந்து செயற்படுகின்றன. ஒரு சில முக்கிய அடிப்படைத் தொழில்களும், பொதுப்பயன் நிறுவனங்களும், பொதுத் துறையில் அமைக்கப்பட்டு, மற்றவகைத் தொழில்கள் தனியார் துறைக்கு ஒதுக்கப்படுகின்றன.

மேலும், நாட்டிலுள்ள எல்லாவிதமான தொழில்களையும் பொதுத்துறையில் அமைப்பதென்பதும் இயலக்கூடிய செய லல்ல. சில குறிப்பிட்டவகைத் தொழில்களைப் பொதுத் துறையில் அமைப்பதில் பல நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படு கின்றன. எனவே, பொதுத்துறையின் இயல்பிற்கும், நிருவாக முறைக்கும் உகந்த தொழில்களை மட்டுமே அரசு பொதுத் துறையில் தோற்றுவிக்க வேண்டும். எவ்வகைத் தொழில்களைப் பொதுத்துறையில் அமைப்பது என்பது பற்றி சிறிது காண்போம்.

பொதுத்துறைக்கேற்ற தொழில்கள்

பேராசிரியர் சார்ஜன்ட் ப்ளோரன்ஸ் (Professor Sargant Florence) என்பவர், பின்வரும் சிறப்பியல்புகள் கொண்ட தொழில்கள் பொதுத்துறைக்கு மிகவும் ஏற்றவை எனக் கூறுகின்றார்:

(1) இயல்பான முறைப்படுத்தப்பட்ட நிருவாகத்தைக் கொண்டிருத்தல்.
(2) பேரளவு மூலதன முதலீடு தேவைப்படல்.
(3) தொழில்நுட்ப வல்லுநர்கள் தேவைப்படல்.
(4) பேரளவு உற்பத்தியைக் கொண்டிருக்கும் தொழில்கள்.
(5) திறமையின்றிச் செயற்படும் தனியார்துறைத் தொழில்கள்.

மேற்கண்ட இயல்புகளைக்கொண்ட தொழில்கள் நாட்டுடைமை யாக்கப்பட்டால், ஆடம்பரப் பொருள்களின் உற்பத்தியைக் குறைத்து, அத்தியாவசியப் பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்தி நாட்டு மக்களின் நலனைக் காக்க முடியுமெனவும் கூறுகின்றார்.

மேலும் அவர், பின்வரும் தொழில்களைப் பொதுத்துறையில் அமைத்தல் மிகவும் அவசியமானதெனக் கூறுகின்றார்.

(1) பொதுத்துறையில் மட்டுமே அமைக்கப்பட வேண்டிய தொழில்கள்.
எடுத்துக்காட்டு: போர்த்தளவாடங்கள் மற்றும் போர்ப்படைக் கருவிகளை உற்பத்தி செய்யும் தொழில்கள்.

(2) நாட்டின் பொதுவான பொருளாதார வளர்ச்சிக்கு அத்தியாவசியமான தொழில்கள்.

எடுத்துக்காட்டு: இருப்புப்பாதைப் போக்கு வரத்து, இரும்பு எஃகு உற்பத்தி சுரங்கத் தொழில் முதலியன.

(3) தனியார்துறையினரால் திறமையுடன் நிருவகிக்கப்பட முடியாத தொழில்கள்.

(4) தனியார்துறையினரால் முற்றுரிமை ஏற்படுத்தப்பட்டு, பொதுமக்களின் நலனைப் பாதிக்கும் தொழில்கள்.

(5) நாட்டு மக்களுக்கு எந்நேரமும் அதிக அளவில் தேவைப் படும் அத்தியாவசியமான பணிகளையும், பொருள் களையும் வழங்கும் பொதுப்பயன் தொழில்கள்.
எடுத்துக்காட்டு: குடிநீர் வழங்கல், மின்சாரம் வழங்கல் முதலியன.

(6) தனியார்துறைக்கு வழிகாட்டியாகவும் அளவுகோலா கவும் செயற்படும் தொழில்கள்.

(7) உலகநாடுகளுடன் போட்டியிட்டு, ஏற்றுமதியை அதி கரிக்கும் தொழில்கள்.

(8) அதிக இலாபமீட்டுதல் மூலம் அரசின் வருவாயை அதிகரிக்கச் செய்யும் தொழில்கள்.

எனவே, மேற்கண்ட சிறப்பியல்புகளைக் கொண்ட தொழில்களைப் பொதுத்துறையில் தோற்றுவிப்பதன் மூலம் சீரான தொழில் வளர்ச்சியும், இலாபகரமான நிருவாகமும், அதிக உற்பத்தியும், விரைவான சமுதாய வளர்ச்சியும் ஏற்படு மென உறுதியாகக் கூறலாம்.

அமைப்பு முறைகள் (Forms of organisation)

பொதுத்துறையில் அமைக்கப்பட வேண்டிய தொழிலைப் பற்றி முடிவு செய்தபிறகு, அத்தொழிலை அமைக்கும் முறைபற்றி ஆராயவேண்டும். அமைத்தல் என்றால் ''ஆக்கவேலைக்கு ஆதரவான இயற்கைவளம், உழைப்பு, மூலதனம் இம்மூன்று காரணிகளையும் மிகப் பொருத்தமான அளவில் ஒன்று சேர்த்து உற்பத்தியைப் பெருக்குதல்'', என முன்பே கண்டோம். ஒரு தொழிலமைப்பின் சிறப்பிற்கு அடிப்படையாக விளங்குவது இவ்வமைப்பாகும். அமைப்பு செம்மையாக அமைந்தால்தான் தொழில் வளர்ச்சி யடையும். ஒரு தொழிலைத் தேர்ந்தெடுத்த பின்னர், அத் தொழிலை எப்பொழுது, எங்கு, எவ்வண்ணம் அமைப்பது என முடிவு செய்ய வேண்டும். அமைப்பு முறை சிறந்ததாக அமைந்துவிட்டால்,

தொழிலின் நிருவாகமும், திறமையான மேலாண்மையும், மேம்பட்ட உற்பத்தியும் ஏற்படும். ஆனால், தவறானதோர் அமைப்புமுறை நிருவாகத்தைப் பெரிதும் பாதித்து, உற்பத்தியில் சிக்கனமின்மையையும், செயல்முறையில் திறமையின்மையையும், குறைபாடுடைய மேலாண்மையையும் ஏற்படுத்திவிடும்.

பொதுத்துறைத் தொழிலின் அமைப்புமுறை நாட்டுக்கு நாடு மாறுபடுகின்றது. ஒவ்வொரு நாட்டிலும் அரசியலமைப்பு, அரசியல் வரலாறு, பொருளாதாரச் சூழ்நிலை, சமுதாயத் தேவைகள் முதலியவை வெவ்வேறாக உள்ளன. எனவேதான், தொழில்களின் அமைப்பு முறைகளிலும் மாறுபாடு ஏற்படுகின்றது. அதுபோன்றே, ஒரு நாட்டில் செயற்படும் பல தொழிலமைப்புகளிடையேகூட, சட்ட அமைப்பு, செயல்முறை, நிதிக்கொள்கை, கட்டுப்பாடு, பொதுப் பொறுப்புரிமை ஆகியவை பெருமளவில் மாறுபடுகின்றன.

பொதுத்துறைத் தொழில்களை அமைக்கப் பின்வரும் ஐந்து விதமான முறைகள் பின்பற்றப்படுகின்றன.

(1) துறைவழி நிருவாகம் (Departmental Management)

(2) பொதுப் பொறுப்புரிமைக் குழு (Public Trust)

(3) தனி முகவர் வழி நிருவாகம் (Private Agency)

(4) பொதுக் கூட்டுரு (Public Corporation)

(5) கூட்டுப்பங்கு நிறும முறை (Joint Stock Company)

மேற்கண்ட அமைப்புமுறை ஒவ்வொன்றிலும் பல நன்மைகளும் சில குறைபாடுகளும் உள்ளன. எனவே ஒவ்வொரு அமைப்பு முறையையும் பற்றிச் சுருக்காகப் பின்வருமாறு காணலாம்.

1. துறைவழி நிருவாகம் (Departmental Management)

இம் முறை மிகவும் பழைமையானதும் பொதுத்துறையில் வழி வழியாகப் பின்பற்றப்பட்டு வந்ததுமாகும். நமது நாட்டில், முதன் முதலாக தபால் தந்தி, இருப்புப்பாதைப் போக்குவரத்து, நெடுஞ்சாலைப் போக்குவரத்து முதலியவைகள் நாட்டுடைமையாக்கப்பட்டபோது துறைவழி நிருவாக முறையில் தான் அமைக்கப்பட்டன. ஆரம்ப நிலைகளில் அரசின் பணிகளுக்கும், பொதுத்துறையின் பணிகளுக்கும் வேறுபாடுகள் இருந்ததாகக் கருதப்படவில்லை. இவ்வமைப்புமுறையைக் கூர்ந்து ஆராய்ந்தால், எவ்விதத் தொழில்கள் அடிப்படை

முக்கியத்துவம் வாய்ந்தவையோ அல்லது அரசுக்கு அதிக வருவாயை ஈட்டுகின்றனவோ அவ்வகைத் தொழில்களை நிருவகிக்க இம் முறை சாலச்சிறந்தது என்பது புலனுகும். மேலும் நிலையானதோர் அரசியலமைப்பு ஏற்பட்டுள்ள நாடுகளில் இம் முறை மிகவும் பயனுள்ள வகையில் செயற்பட்டு வருகின்றது.

இவ்வமைப்பு முறையில் தொழிலமைப்பின் அனைத்து நடவடிக்கைகளும், அரசின் ஒரு குறிப்பிட்ட துறை மூலம் நிருவகிக்கப்பட்டு மேற்கொள்ளப்படுகின்றன. இத் துறைவழி நிருவாகத்தில், பல உயர்மட்ட அரசு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற தேவையான செயல் முறை அதிகாரங்களும் அவர்களுக்கு வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு நடவடிக்கையும் அரசின் முன் அனுமதியுடனும், வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்களுக்குட்பட்டும் மேற்கொள்ளப் படுவதால், இம் முறையில் அமைக்கப்படும் தொழில் நிறுவனங் கள் பொதுநலனுக்கு ஊறு விளைவிக்காத வகையிலும், பொதுச் சொத்துக்கள் தவருன வழிகளில் உபயோகப்படுத்தப்படாமலும் செயற்படுகின்றன.

துறைவழி நிருவாக அமைப்பு முறையின் சிறப்பியல்புகள் :

(1) அரசின் மத்திய அமைச்சகத்தைச் சார்ந்த துறை களுள் ஒன்ருக இத்துறையும் கருதப்படுகின்றது.

(2) இத்துறையின் அனைத்து நடவடிக்கைகளும் உயர்மட்ட அரசு அதிகாரி ஒருவரால் மேற்கொள்ளப்படுகின்றன.

(3) மத்திய அரசு அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப் பாட்டிற்குட்பட்டு இத்துறை இயங்குகின்றது.

(4) இத்துறைக்குத் தேவையான நிதி, மத்திய அரசின் ஆண்டு பொது வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. அதுபோன்றே, இத்துறையின் வருவாய் அனைத்தும் அரசின் கருவூலத்தில் செலுத்தப் பட்டு விடுகின்றது.

(5) இத்துறையின் வரவு செலவுத்திட்டம், கணக்குப்பதிவு தணிக்கை ஆகியவை பொது விதிமுறைகளுக்குட்பட்ட தாகும்.

(6) இத்துறைவழி நிருவாகத் தொழிலமைப்பில் பணி யாற்றும் அலுவலர்கள் அனைவரும் சாதாரண குடிமகன் களாகவும், வழக்கமான முறையில் பணியிலமர்த்தப் படுபவர்களாகவும் உள்ளனர்.

எடுத்துக்காட்டு: நமது நாட்டில், பல பொதுத்துறைத் தொழில்கள் இத்துறைவழி நிருவாக முறையில் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. இருப்புப்பாதைப் போக்குவரத்து, தபால்-தந்தித் துறை, செய்தி-ஒலிபரப்புத் துறை, போர்ப் படைச் சாதனங்கள் உற்பத்தித் துறை போன்றவை இத் துறைவழி நிருவாகத்தில் செம்மையாகச் செயற்பட்டு வருகின்றன.

துறைவழி நிருவாக அமைப்பு முறையின் நன்மைகள்

(1) கட்டுப்பாடு ஒரே இடத்தில் குவிந்தும் (Centralised) நேரடியாகவும் (Direct) உள்ளதால் மிகவும் தீவிரமாகச் செயற் படுத்தப்படுகிறது.

(2) அனைத்து அதிகாரிகளும், அமைச்சகத்தின் நேரடி நிருவாகக் கட்டுப்பாட்டில் பணி புரிவதால், நம்பிக்கையுடனும் பொறுப்புடனும் செயற்படுகின்றனர்.

(3) துறையின் நிதி நடவடிக்கைகள் அனைத்தும் அமைச்சகத்தின் முன் அனுமதி பெற்று மேற்கொள்ளப்படுவதாலும் வரவு-செலவுத் திட்டம், கணக்குகள், தணிக்கை முறை போன்றவை அமைச்சகத்தின் இசைவு பெற்று பின்பற்றப்படுவதாலும், பொதுப்பணம் தவருன வழிகளில் செலவிடப்படும் ஆபத்தில்லை.

(4) துறையின் வருவாய் அனைத்தும் அரசின் கருவூலத்தில் செலுத்தப்படுவதால், அரசின் நிதி நிலை மேம்பட்டு, மக்களின் வரிச்சுமை பேரளவில் குறைகிறது.

(5) இத் துறைவழி நிருவாகம், அரசின் ஓர் அங்கமாகத் திகழ்வதால், அரசின் அனுமதியின்றி எவரும் துறையின்மீது வழக்குத்தொடுக்க இயலாது.

துறைவழி நிருவாக அமைப்புமுறையின் குறைபாடுகள்

துறைவழி நிருவாகத்தில், மேற்கண்டவாறு பல நன்மைகள் ஏற்பட்ட போதிலும், சில குறைபாடுகளும் தோன்றுகின்றன. அவைகளில், முக்கியமான குறைபாடுகளைக் காணலாம்:

(1) அதிகாரங்கள் மையமாகக் குவிக்கப்பட்டுள்ளதால் நிருவாகத்தில் நெகிழுந்தன்மை, ஊக்க முயற்சி, விரைவான முடிவுகள் ஆகியவை பாதிக்கப்பட்டு, தொழிலமைப்பின் நோக்கங்கள் தோல்வியடைகின்றன.

(2) துறைவழி நிருவாகம் ஈட்டும் வருவாய் அனைத்தும் அரசின் கருவூலத்தில் செலுத்தப்பட்டுவிடுவதால் தொழிலமைப்பு நிதி நிலையில் தன்னிறைவு பெற முடியாது; மேலும், வருவாயை அதிகரிக்கச்செய்ய போதிய ஊக்கமுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டா.

(3) இலாப நோக்கமின்மையும், போட்டியின்மையும் துறைவழி நிருவாகத்தில் நட்டத்தை ஏற்படுத்துகின்றன; இதன் காரணமாக நிருவாகத்திறன் குறைந்து, பொதுமக்களின் நலன் புறக்கணிக்கப்படுகிறது.

(4) துறைவழி நிருவாகத்தில் ஏற்படும் இழப்புகள் கருவூலத்தில் ஈடு செய்யப்படுகின்றன; இதன் காரணமாக, நாட்டு மக்களின் வரிச்சுமை அதிகரித்து மக்கள் நலனைப் பாதிக்கிறது.

(5) துறைவழி நிருவாக அதிகாரிகள் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில், கடமை மனப்பாங்கின்றிப் பணிபுரிவதால், தொழிலமைப்பின் வெற்றிக்கு அத்தியாவசியமான நுகர்வோருடன் உள்ள நல்லுறவு பாதிக்கப்படுகிறது.

(6) அதிகார இனஆட்சி முறையும் (Bureaucracy), தாமத முடிவுகளும் இத்துறைவழி நிருவாக முறையின் மாபெரும் குறைபாடுகளாகும். நிரந்தரமான தேவையற்ற நிருவாகச் செயல்முறைகளினால் துறைவழி நிருவாகத்தில் நெகிழும் தன்மை ஏற்படுவதில்லை; இதன் காரணமாக முன்னேறிவரும் தொழில்நுட்பம், மக்களின் விருப்பு. வெறுப்பு ஆகியவை புறக்கணிக்கப்படுகின்றன.

(7) துறைவழி நிருவாக அமைப்பு முறையில் அதிகாரிகளுக்கிடையே அனுமதிகள் பெற, மேலும் – கீழும் அனுப்பப்படும் கடிதங்கள், தாமதத்தை ஏற்படுத்தி தொழிலமைப்பின் திறனைக் குறைக்கின்றன.

(8) தொழிலமைப்பின் கொள்கைகளைத் தீர்மானிக்கும் அதிகாரிகளும், தொழிலை நிருவகித்து, செயல்முறைகளை மேற்கொள்ளும் அதிகாரிகளுக்கிடையே நெருங்கியத் தொடர்பின்மையால், ஒருவரின் பிரச்சினைகள் மற்றவருக்குப் புரிய வாய்ப்பில்லை.

(9) துறைவழி நிருவாகத்தின் பெரும்பான்மையான மேலாளர்கள் (Managers), குறிப்பிட்ட தொழிலைப் பற்றிய அனுபவ அறிவோ, மற்ற விவரங்களையோ அறிந்திருப்பதில்லை

இதனல் நிருவாகத் திறமையின்றி, தொழிலமைப்பின் செயல் விளைவுகள் வெற்றி பெறுவதில்லை.

(10) துறைவழி நிருவாகத்தின் மேலாளர்கள் அரசால் நியமிக்கப்படும் அதிகாரிகளாவர். அரசுப்பணியின் விதிமுறைகளுக்கேற்ப, இவ்வதிகாரிகள் அடிக்கடி பல்வேறு வகைப்பட்ட துறைகளுக்கிடையே மாற்றப்படுவதால், தொழிலமைப்புகள் நிலையானதொரு தொழிற்கொள்கையைப் பின்பற்ற முடிவதில்லை; திறமையான நிருவாகம் ஏற்படவும் வாய்ப்பில்லை.

மேற்கண்டவற்றைத் தவிர வேறு சில குறைபாடுகளும் துறைவழி நிருவாக முறையில் உள்ளன. நிலையான அரசியலமைப்பு அமையாவிடில் துறைவழி நிருவாகம் செம்மையாக நடைபெற முடியாது. ஆளும் கட்சி மாறுதல் அடைந்து அரசு மாறும்போது, துறைவழி நிருவாகத்தின் தொழிற்கொள்கைகளும், வழிமுறைகளும் மாற்றப்பட்டு, குழப்பமும், நிருவாகத் திறமையின்மையும் தோன்றுகின்றன. மேலும், துறைவழி நிருவாகத்தின் செயல்முறைகள், கணக்குகள் போன்றவை நாடாளுமன்றத்தின் வரைமுறையில்லாத் திறனாய்வுக்குட்படுவதால், அத் துறையுடன் தொடர்புற்ற அதிகாரிகளும் தொழிலாளர்களும் ஆர்வமிழக்கின்றனர். துறைவழி நிருவாகத்தில் அதிகாரிகள் எந்நேரமும் நாடாளுமன்றத்தில் தொழிலமைப்பைப் பற்றி உறுப்பினர்கள் எவ்வகை வினாக்களை எழுப்புவர்; அவ் வினாக்களுக்கு என்ன விடையளிப்பது; திறனாய்வுக் கருத்துகளுக்கு என்ன விளக்கவுரைகளைக் கூறுவது என்பது போன்ற மனக்கவலைகளுடன் செயற்படுவதால், ஆக்கப்பணிகள் மேற்கொள்ளப்படுவதிலும், தொழில் நடவடிக்கைகளின் முடிவுகளிலும் தாமதமுண்டாகின்றன.

துறைவழி நிருவாக அமைப்பு முறையில் உள்ள குறைபாடுகளைக் கூறும்போது ஏர்னஸ்ட் பென் (Earnest Benn) என்ற நிபுணர், தொழிலமைப்பின் நிதி நடவடிக்கைகள், அரசின் வரவு-செலவுத் திட்டத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டு தனித்தியங்க வகை செய்யப்படவேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிருர்.

ஆர்.கே.ஜெயின் (R.K.Jain) என்ற பொருளாதார வல்லுநர் துறைவழி நிருவாக முறையில், அதிகார இன ஆட்சியின் (Bureaucracy) ஆக்கிரமிப்பினல், ஆர்வமின்மையும், நெகிழுந் தன்மையின்மையும் ஏற்பட்டுவிடுகின்றன என்றும், இதன் விளைவால் காலதாமதம், சிகப்பு-நாடா (Red-Tape) முறை முதலியவை மலிந்துவிடுகின்றன எனவும் கூறுகிருர்.

ஏ. டி. கோர்வாலா (A. D. Gorwala) என்ற நிபுணர், துறை வழி நிருவாக முறையில் பல்வேறு வகையான குறைபாடுகள் ஏற்படுவதால், தவிர்க்க முடியாத ஒரு சில தொழிலமைப்புகள் மட்டுமே, இம் முறையில் அமைக்கப்படவேண்டுமென்றும், இதை ஒரு பொதுவான முறையாகக் கருதலாகாது எனவும் வலியுறுத்துகிறார்.

இங்கிலாந்து நாட்டில், முதன் முதலில் தபால் துறையானது துறைவழி நிருவாகத்தில்தான் ஏற்படுத்தப்பட்டு செயற்பட்டு வந்தது; ஆனால், மேற்கண்டவாறு குறைபாடுகள் பல ஏற்பட்டதால் அம்முறை மாற்றப்பட்டுவிட்டது.

மேற்கண்டவாறு துறைவழி நிருவாக அமைப்பு முறையின் குறைபாடுகளை ஆராயும்போது, இயற்கையாக ஒரு வினா நம் அனைவர் மனத்திலும் எழுகிறது; அதாவது அமைப்பு முறையிலும், நிருவாக முறைகளிலும் ஒரு சில மாறுபாடுகளை ஏற்படுத்துவதன் மூலம், துறைவழி நிருவாகத்தில் ஏற்படும் குறைகளை அகற்றிப் பொதுத்துறைத் தொழில்களை அம் முறையிலமைத்து வெற்றிகரமாக நடத்த முடியாதா? இவ் வினாவிற்குப் பேராசிரியர் டிமாக் (Dimock) விடையளிக்கிறார்: "துறைவழி நிருவாக முறையில் போதுமான அளவில் தன்னாட்சியுரிமை, நெகிழுந்தன்மை போன்ற சிறப்பியல்புகளை நடைமுறைப் படுத்துவதன்மூலம் இம் முறையில் தோன்றும் குறைபாடுகளை அகற்ற முடியும்."

ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு விதமான நடவடிக்கை மூலமாக இத் துறைவழி நிருவாகத்தின் குறைபாடுகளை நீக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிக முக்கியமான தொரு திட்டம், 'சுழல் நிதி' (Revolving Fund) ஒன்று ஏற்படுத்தி, தொழிலமைப்பொன்றின் வருவாய் அனைத்தையும் அக் காப்பில் செலுத்தி, தேவையேற்படும்போது அனுமதிக்கப்பட்ட செலவு களுக்கு அக் காப்பிலிருந்து நிதி உதவி பெறுதலாகும். இதனால் தொழிலமைப்பிற்குத் தேவையான நிதி, எந்நேரமும் தயார் நிலையில் இருப்பதால், அரசின் முன் அனுமதி பெறுதல் அல்லது பொது வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு பெறுதல் போன்ற காலதாமதங்கள் தவிர்க்கப்படும். வேறு சில நாடுகளில், துறைவழி நிருவாக அமைப்புமுறையில் செயற்படும் தொழி லமைப்புகளுக்கு, வழக்கமான சட்டச் செயல்முறைகளிலிருந்து விதிவிலக்களிக்கப்படுதல் மூலமாக, காலதாமதங்கள் தவிர்க்கப் படுகின்றன. மேலும், வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் முறையிலும், கணக்குப் பதிவியல் முறையிலும், துறைவழி

நிருவாக முறையில் அமைக்கப்படும், தொழில்களுக்குப் போதிய சலுகைகள் அளிக்கும் வகையில் சில நாடுகளில் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன.

மற்ற ஒரு சில நாடுகள், இவ்வமைப்புமுறையில் செயற்படும் தொழிலமைப்புகள் பின்பற்ற வேண்டிய செயல் முறைகளையும், விதிகளையும் எளிமையாக்கியுள்ளன. மற்றொரு முக்கிய முறை, இயக்குநரவைகளை அமைப்பதன் மூலமாக, துறை வழி நிருவாகத்தை மேற்கொள்ளுதல் ஆகும். தேவையற்ற காலதாமதங்களைத் தவிர்க்கவும், நெகிழுந்தன்மையை ஏற்படுத்தவும், இயக்குநரவை அமைக்கப்படலாம். அக்குறிப்பிட்ட துறையுடன் தொடர்புற்ற உயர்நிலை அதிகாரிகள் அமைச்சர்கள் ஆகியோர் இயக்குநரவையில் இடம் பெறுவர்; முழு மேலாண்மை அதிகாரமும், முடிவுகளை மேற்கொள்ளும் உரிமையும் இக் குழுவிற்கு வழங்கப்படும். இதன் மூலமாக, விரைவான முடிவுகள் உடனுக்குடன் மேற்கொள்ளப்படுகிறது. தனிப்பட்ட அமைச்சர்கள் அல்லது அதிகாரிகளைவிட, சிறந்த முடிவுகளை இயக்குநரவை ஆராய்ந்து மேற்கொள்ளவும் வாய்ப்புகள் அதிகம். இம் முறைக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக, நமது நாட்டில் பல்வேறு தொழிலமைப்புகளில் செயற்படும் 'பக்ரா கட்டுப்பாட்டுக் குழு' (Bhakra Control Board), 'சம்பல் கட்டுப்பாட்டுக் குழு' (Champal Control Board) ஆகியவைகளைக் கூறலாம்.

இருந்தபோதிலும், பெரும்பான்மையான நாடுகளில் இத் துறைவழி நிருவாக அமைப்புமுறையின் முக்கியத்துவம் குறைந்துகொண்டே வருகிறது. இம் முறையில் உள்ள குறைபாடுகளே இவ்விளைவிற்குக் காரணமாகும். இங்கிலாந்து நாட்டில், முதலில் 'அணுசக்தி' (Atomic Energy) ஆராய்ச்சி துறைவழி நிருவாக முறையில்தான் அமைக்கப்பட்டது. ஆனால் 1954ஆம் ஆண்டு 'அணுசக்தி அதிகாரச் சட்டம்' (Atomic Energy Authority Act) இயற்றப்பட்டு, தன்னுட்சியுரிமை நிறைந்த நிருவாக முறைகளுக்கு மாற்றப்பட்டது.

ஜப்பான் நாட்டில், துறைவழி நிருவாக முறையில் அமைக்கப் பட்ட தொழில்கள், பெரும்பாலும் திறமையின்மைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கின.

நமது நாட்டில்கூட, முதலில் துறைவழி நிருவாக முறையில் அமைக்கப்பட்ட 'இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுரு' செம்மையாகச் செயல்புரியாததால், பொதுக் கூட்டுரு (Statutory Corporation) முறைக்கு மாற்றப்பட்டது.

எனவே முடிவுரையாக, பின்வரும் நோக்கங்களைக் கொண்ட தொழில்களை மட்டும், துறைவழி நிருவாக முறையில் அமைத்து, மற்றவகைத் தொழில்களைப் பிற அமைப்பு முறைகளில் ஏற்படுத்துவதே சாலச் சிறந்ததாகும் எனக் கூறலாம்.

துறைவழி நிருவாக அமைப்புமுறைக்குகந்த தொழில்கள்

(1) அரசின் வருவாயை அதிகரிக்கச் செய்யும் தொழில்கள். எடுத்துக்காட்டு: ரெயில்துறை, தபால்-தந்தித்துறை, தொலைபேசி, ஒலிபரப்பு முதலியன.

(2) அரசு அதிகாரத்திற்குட்பட்டு, கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டிய தொழில்கள். எடுத்துக்காட்டு: போர்ப்படைத் தளவாட உற்பத்தி, செய்தி ஒலிபரப்பு ஆகியவை.

(3) அடிப்படை முக்கியத்துவத்துடன் தொழில் இரகசியத்தைப் பாதுகாக்க வேண்டிய தொழில்கள். எடுத்துக்காட்டு: அணுசக்தி ஆராய்ச்சி, விண்வெளி ஆராய்ச்சி, போர்த்தளவாடக் கருவிகள் உற்பத்தி முதலியன.

(4) தீவிர முயற்சியும், பேரளவு நிதித் தேவைப்படும் ஆரம்பத்திட்ட நிலையிலுள்ள தொழில்கள். எடுத்துக்காட்டு: அனல்மின் திட்டங்கள், அணைக்கட்டுத் திட்டங்கள், நீர்மின் திட்டங்கள், சுரங்கத் தொழில்கள் போன்றவை.

(5) நாட்டின் உள் அமைப்பைச் சீர்ப்படுத்தி, மேம்படுத்தக் கூடிய தொழில்கள் (Infra Structure). எடுத்துக்காட்டு: போக்குவரத்து, (சாலை, ரெயில் துறை) செய்தித் தொடர்பு, தொலைபேசி, தபால்-தந்தி முதலியன.

2. பொதுப் பொறுப்புரிமைக் குழு (Public Trust)

நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கக்கூடிய தொழில்கள், பொதுப்பயன் நிறுவனங்கள் ஆகியவை, 'பொதுப் பொறுப் பாண்மைக் குழு' முறையில் அமைக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக துறைமுகப் பொறுப்புரிமைக் குழுவைக் (Port Trust) கூறலாம். நிதித்துறையிலும்கூட ஒரு சில 'முதலீட்டுப் பொறுப் புரிமைக் குழுக்கள்' (Investment Trust) உள்ளன. பெரும்பாலும் உற்பத்தித் தொழில்கள் இம் முறையில் அமைக்கப்படுவதில்லை.

அரசுக்குச் சொந்தமான சொத்துக்களை நிருவகிக்கும் பொறுப்பும், தன்னாட்சியுரிமையும் பெற்றதுதான் இவ்வகைப் பொறுப்புரிமைக் குழுக்கள். இங்கிலாந்தில், வழி வழியாக இவ்வகைப் பொறுப்புரிமைக் குழுக்கள் பல வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றன.

நமது நாட்டில், 'முதலீட்டு பொறுப்புரிமைக் குழு' போன்ற ஒரு சில தொழிலமைப்புகளே இவ்வமைப்புமுறையில் செயற் படுகின்றன. ஆனால், அவை செம்மையான நிருவாக முறையுடன் இயங்கவில்லை. அதற்கு முக்கியக் காரணம், இவ்வகைக் குழுக் களின்மீது, அரசு அளவுக்கதிகமான அதிகாரத்தைச் செலுத்த விரும்புவதேயாகும். பொறுப்புரிமைக் குழுக்களில் இடம்பெறும் அரசு அதிகாரிகள் அல்லது அமைச்சர்கள் அதிகார இனவெறிக்கு ஆளாகிவிடுகின்றனரேயன்றி, உறுப்பினர்களுக்குரிய கட்டுப் பாட்டுடன் பணிபுரிவதில்லை.

கப்பல் போக்குவரத்து, கப்பல் கட்டும் தொழில், துறைமுகத் தொழில் போன்றவை இவ்வமைப்புமுறையில் தோற்றுவிக்கப் படுகின்றன. மேம்பட்ட திறமை ஏற்பட, அதிகாரங்கள் அனைத்தும் இக் குழுவிடம் ஒப்படைக்கப்படுகின்றன. பொறுப் புரிமைக் குழுவின் நிருவாகத் தலைவர் அரசால் நியமிக்கப் படுகிறார். மற்ற உறுப்பினர்கள் ஆலோசனைகளை வழங்கும் நோக்கத்துடன் நியமிக்கப்படுகின்றனர். இப் பொறுப்புரிமைக் குழுக்கள், தனிச்சட்டங்கள் மூலமாகவோ அல்லது நாடாளு மன்றத்தின் மூலமாகவோ கட்டுப்படுத்தப்படுகின்றன.

முடிவுரையாக, கப்பல் போக்குவரத்து, துறைமுகத் தொழில் போன்ற ஒரு சில தொழில்களுக்கே இவ்வமைப்புமுறை ஏற்ற தாக விளங்குகிறது; மற்றவகைத் தொழில்கள் இவ்வமைப்பு முறையில் ஏற்படுத்தப்பட்டு திறமையுடன் நிருவகிக்கப்பட முடியாதெனக் கூறலாம்.

3. தனி முகவர் வழி நிருவாக முறை (Private Agency Method)

ஒரு சில பொதுத்துறைத் தொழில்கள், அரசினால் அமைக்கப் பட்டு, தனி முகவரால் நிருவகிக்கப்படுகின்றன. பெரும்பாலும், தனியார்துறையில் அமைக்கப்பட்டு நடந்துவரும் தொழில் ஒன்று, நாட்டுடைமையாக்கப்படும்போது இவ்வகைத் தனி முகவர் வழி நிருவாக முறை பின்பற்றப்படுகிறது.

தனி முகவர் ஒருவரை நியமித்துத் தொழிலை நடத்துவதைவிட தனியார்துறையினருக்கே அத் தொழிலை ஒதுக்கிவிடலாமே

என்ற வினா நம் மனத்தில் எழுவது இயற்கையே. தனியார் துறையில் நடத்தப்படுவது என்றால் முதலீடு செய்தவர்கள் ஆர்வத்துடனும், மிகுந்த அக்கறையுடனும் தொழிலை நடத்துவர். ஆனால், பொதுத்துறைத் தொழிலமைப்பில் முதலீடு செய்வது அரசு; நிருவாகம் செய்வது தனியார்துறை என்றிருந்தால், அதில் நிருவாகத் திறமை, சிக்கனம் முதலியவைகளில் குறைபாடுகள் ஏற்படக்கூடுமே என்றெல்லாம் கருதுவது இயற்கை.

தனியார்துறையில் அமைக்கப்பட்டு, நிருவகிக்கப்பட்டுவரும் தொழிலொன்றை, அரசு நாட்டுடைமையாக்குவதன் மூலமாக பொதுத்துறைக்கு அத் தொழிலை ஒதுக்கிவிடலாம். ஆனால், அத் தொழிலை இதுவரை நடத்திவந்த தனியார்துறையினருக்கு, அதிலுள்ள நுட்பங்கள், சிக்கல்கள், அவற்றைத் தீர்க்கும் முறைகள் முதலியன நன்கு தெரிந்திருக்கும். எனவே அவ்வனுபவத்தின் பயனைப்பெற, அரசு அத் தொழிலைப் பொதுத் துறையில் அமைத்தபோதிலும், அதனை இதுவரை நடத்திவந்த தனியார்துறையினரைத் தமது முகவராக நியமித்து, அவர்கள் மூலமாக நிருவாகத்தைச் செம்மையாக நடத்தலாம். இதுவே 'தனி முகவர் வழி நிருவாக முறையாகும்.'

இவ்வாறு அமைக்கப்படும் நிருவாகம் ஏறத்தாழ 20 ஆண்டுகள் வரை நீடிக்கலாம். முகவராகப் பணியாற்றுபவர், ஆர்வத்துடன் செயல்புரிய ஊக்கமளிக்கும் வகையில், ஒரு நியாயமான அளவுத் தொகையைத் தொழிலில் அவர்கள் முதலீடு செய்யும்படி ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்வது மிகவும் சிறந்தது. இம்முறையைத் தெளிவாகப் புரிந்துகொள்ள பின்வரும் எடுத்துக்காட்டைக் காணலாம். இந்திய அரசு கிழக்குப் பகுதி கப்பல் போக்குவரத்துக் கூட்டுறுவில் 75% பங்குகளை வாங்கியிருந்தது. மீதியுள்ள 25% பங்குகள், அத் தொழிலைத் தோற்றுவித்து நிருவகித்துவந்த சிந்தியா கூட்டு நிறுமத்தாரிடமே இருந்தன. சிந்தியா நிறுமத்தார் இத்துறையில் சிறப்பான அனுபவத்தைப் பெற்றிருந்ததால், அரசு சிந்தியா கூட்டு நிறுமத்தைத் தனது முகவராக நியமித்து, அவர்கள் மூலமாக நிருவாகம் மேற்கொள்ளப்படுமாறு ஏற்பாடு செய்யப் பட்டது.

வங்கிகள், போக்குவரத்துத் தொழில்கள் முதலியவை தனியார்துறையிலிருந்து பொதுத்துறைக்கு மாற்றப்படும் போது (நாட்டுடைமையாக்கப்படும்போது), அரசு இம் முறையைப் பின்பற்றலாம். நாளடைவில், அரசு அதிகாரிகள் அத் தொழில்களில் போதிய அனுபவமும், நிருவாகத் திறனும் பெற்ற

பிறகு, தனி முகவரை நீக்கிவிட்டு, நிருவாகத்தின் முழுப் பொறுப்பையும் பொதுத்துறைக்கே மாற்றிவிடலாம்.

ஆனால், தனியார்துறையில் நிருவகிக்கப்பட்டு வரும் தொழில்கள் நாட்டுடைமையாக்கப்படும்போது மட்டுமே, தனி முகவர் வழி நிருவாகம் தேவைப்படுகிறது. புதிய தொழில்களை அரசு பொதுத்துறையில் தோற்றுவிக்கும்போது, இம்முறை அவசியமில்லை. எனவேதான், இம்முறை பொதுத்துறைத் தொழில்களின் அமைப்பில், முக்கியமானதொரு முறையாகக் கருதப்படுவதில்லை.

4. பொதுக் கூட்டுரு முறை (Public Corporation Method)

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் திறமையுடனும் இலாபகரமாகவும் செயல்பட, சட்டத்திற்குட்பட்டு, அதிகாரங்களைப் பயன்படுத்தி, தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏற்றதொரு நிருவாக முறை தேவை. அவ்வமைப்புமுறை, செயல்முறை நடவடிக்கைகளில் தன்னாட்சியுரிமையையும், அதே நேரத்தில், அரசுக்கும் மக்களுக்கும் பொறுப்புடையதாகவும் இருக்க வேண்டும். தனியார்துறையில், தொழிலமைப்புகள் பங்குதாரர்களுக்கு மட்டும் பொறுப்புடையவைகளாக நடந்து கொண்டால் போதுமானதாகும். ஆனால், பொதுத்துறைத் தொழிலமைப்போ ஒருபுறம் அரசுக்கும், மற்றொருபுறம் நாடாளுமன்றத்திற்கும், அதன் மூலமாக நாட்டு மக்களுக்கும் பொறுப்புடையதாகும். எனவே, பொதுத்துறைத் தொழிலின் அமைப்புமுறை மேற்கண்ட சிறப்பியல்புகளைக் கொண்டதாக இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. பொதுக் கூட்டுரு அமைப்புமுறை, இக்கருத்துக்களைக் கொண்டதாக உள்ளது. நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டத்தின் மூலமாகத் தோற்றுவிக்கப்பட்டதே இப் பொதுக் கூட்டுரு முறையாகும். முன்பு நாம் கண்ட துறைவழி நிருவாக அமைப்புமுறை, ஆட்சித் துறையினரால் எவ்விதத் தனிச் சட்டமும் இயற்றப்படாமல் தோற்றுவிக்கப்படுகிறது. ஆனால், பொதுக் கூட்டுரு தோற்றுவிக்கப்பட, நாடாளுமன்றத்தில் தனிச் சட்டம் இயற்றப்பட வேண்டும். இவ்விரண்டு முறைகளுக்குமுள்ள அடிப்படை வேறுபாடே இச் சட்ட அமைப்புமுறையாகும்.

வல்லுநர்களின் கருத்துக்கள்

பொதுக் கூட்டுரு என்றால் என்ன என்பதற்குப் பல பொருளாதார வல்லுநர்கள், தத்தம் கருத்துக்களைக் கூறியுள்ளனர். அவைகளில் சில முக்கியமான கருத்துக்களைப் பின்வருமாறு காண்போம் :

ஹர்பர்ட் மோரிஸான் (Herbert Morison) "பொது நலனுக்காக, பொதுவுடைமை, பொதுப் பொறுப்புடைமை, வாணிக மேலாண்மை ஆகியவைகளை ஒன்று சேர்த்து அமைக்கப்படுவதே, பொதுக் கூட்டுரு"வாகும் எனக் கூறுகிறார்.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் "பொதுக் கூட்டுரு என்ற அமைப்பு, அரசு அதிகாரத்தால் ஏற்படுத்தப்பட்டு, தனியார்துறையின் நெகிழ்ந்தன்மையுடன் நடைபெறுவதாகும்" என்ற கருத்தைத் தெரிவித்தார்.

ராப்ஸன் (Robson) என்பவர் "பொதுக் கூட்டுரு என்பது அரசியலமைப்பால் ஏற்படுத்தப்பட்டவொரு புதிய முறை" எனக் கூறுகிறார்.

ஏர்னஸ்ட் டேவிஸ் (Earnest Davies) என்ற பொருளாதார வல்லுநர், கீழ்க்கண்டவாறு கூறுகிறார்:

"பொதுக் கூட்டுரு என்பது, பொது ஆணையால் வரையறுக்கப்பட்ட அதிகாரங்களுடனும், சுயச்சார்பு நிதி அமைப்பையும் கொண்டு ஏற்படுத்தப்பட்டவொரு சட்ட அமைப்பு."

பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் சிறப்பியல்புகள்

மேற்கண்ட வல்லுநர்களின் வரைவிலக்கணங்களைக் கூர்ந்தாராயும்போது, பொதுக் கூட்டுரு அமைப்பு முறை, பல சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது எனத் தெளிவாகிறது. எனவே, அச்சிறப்பியல்புகளைப் பின்வருமாறு காணலாம்.

(1) நாடாளுமன்றத்திலோ அல்லது மாநிலச் சட்டமன்றங்களிலோ, தனிச் சட்டங்கள் இயற்றப்படுவதன் மூலமாகப் பொதுக் கூட்டுரு அமைப்பு ஏற்படுத்தப்படுகிறது.

இவ்வாறு அமைக்கப்படும் பொதுக் கூட்டுருவின் அதிகாரங்கள், நிறைவேற்ற வேண்டிய பணிகள், அமைச்சகத்துடனும் நாடாளுமன்றத்துடனும் ஏற்படக்கூடிய தொடர்பு போன்ற விதிமுறைகள், 'தனிச்சட்டத்தில்' வரையறுக்கப்படுகின்றன.

(2) பொதுக் கூட்டுரு அமைப்பை சட்டம் ஒரு தனி ஆளாகக் கருதுகிறது. இக்கூட்டுரு தன் பெயரில் ஒப்பந்தங்களை மேற்கொள்ளலாம்; தன் பெயரிலேயே சொத்துக்களை வாங்கவும், விற்கவும், மாற்றித்தரவும், நிருவகிக்கவும் அதிகாரம் பெற்றுள்ளது. மேலும், சுயச் சார்பு உரிமைகளுடன் நிதிவசதிகளைப் பெறமுடியும்.

(3) இக்கூட்டுருவின் முழு உரிமையும் மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது அரசுகளைச் சார்ந்ததாகும். தொழிலுக்குத் தேவையான மூலதனம் மத்திய அரசிலோ அல்லது மாநில அரசிலோ வழங்கப்படுகிறது. ஆனால், ஒரு சில சந்தர்ப்பங்களில் மூலதனத்தின் ஒரு பகுதி பொதுமக்களிடமிருந்தோ அல்லது மற்ற தனியார் துறை நிறுவனங்களிடமிருந்தோ பெறப்படுவதும் உண்டு. எனினும் பொதுநிலைப் பங்குகள் (Equity Shares) அரசின் பெயரில்தான் வழங்கப்படும்.

(4) அரசினால் நியமிக்கப்படும் இயக்குநரவை, இக்கூட்டுருவின் மேலாண்மைப் பணியை மேற்கொள்கிறது. முழுநேர அல்லது பகுதிநேரப் பணி இயக்குநர்கள், அரசு அதிகாரிகள், அமைச்சர்கள் ஆகியோர் இயக்குநரவையில் இடம் பெறுவர்.

(5) சட்டம் வழங்கியுள்ள அதிகாரங்களைச் செயற்படுத்தும் போது, அரசு, நாடாளுமன்றம், அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரின் குறுக்கீடுகள் ஏதும் ஏற்படமாட்டா. எனவே நிருவாகத்தில் அதிகப்பட்சத் 'தன்னாட்சியுரிமை' அளிக்கப்பட்டுள்ளது.

(6) அரசின் பொது வரவு-செலவுத் திட்டத்திற்கும், இக்கூட்டுருவின் நிதி அமைப்பிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை. தனக்கெனத் தனியாகவொரு வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிக்கவும், ஈட்டப்பட்ட இலாபத்தைத் தொழிலமைப்பின் முன்னேற்றத் திட்டங்கள், வளர்ச்சிகள் ஆகியவற்றிற்குச் செலவிடவும் அதிகாரங்களை இக்கூட்டுரு பெற்றுள்ளது. எனவே நிதி நடவடிக்கைகளில் தற்சார்புவியல்பைப் பெற்றுள்ளது எனக் கூறலாம்.

(7) இக்கூட்டுருவின் பணியாளர்கள், அரசுத் துறையைச் சார்ந்த பணியாளர்களாகத்தான் இருக்கவேண்டுமென்ற கட்டாயம் ஏதுமில்லை. தனக்கென தனியானதொரு முறையில், பணியாளர்களைத் தெரிந்தெடுத்து நியமிக்கும் உரிமையை இக்கூட்டுரு பெற்றுள்ளது.

(8) இக்கூட்டுரு முற்றிலும் வாணிகஞ் சார்ந்தக் கொள்கைகளின் அடிப்படையில்தான் செயற்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. "பொதுக் கூட்டுருவும், தனியார் துறையைப் போன்றே வாணிக மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும்" என ஹான்ஸன் கூறுவதை இங்கு நினைவு கூர்தல் நலம்.

(9) திறமையின் காரணமாக, இலாபமீட்டுதல் வரவேற்கப் பட்டால்கூட, இதன் முக்கிய நோக்கம் இலாபமன்று. நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் வகையில் தொழிலைத் திறமையாக நடத்துவதே இதன் நோக்கமாகும்.

(10) இக்கூட்டுருவின் மற்றொரு முக்கியச் சிறப்பியல்பு, 'பொதுப் பொறுப்புடைமை'யாகும் (Public Accountability). நிருவாகத்திலும், நிதி நடவடிக்கைகளிலும், தன்னுட்சியுரிமை பெற்றிருப்பினும்கூட, நாடாளுமன்றத்திற்கும் அதன் மூலம் நாட்டு மக்களுக்கும் பதில் கூறும் பொறுப்புடையன பொதுத் துறைத் தொழில்களாகும். தொழில் நடவடிக்கைகளைப் பற்றிய கணக்குகளும், ஆண்டறிக்கையும், தணிக்கை அறிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும், பொதுப் பொறுப்புடைமைக் கொள்கையை வலியுறுத்தும் வகையில், இக்கூட்டுருவின் கணக்குகள், 'இந்தியத் தலைமைக் கணக்கு ஒழுங்குமுறைப் படுத்துநர் மற்றும் தணிக்கையாரால்' (Controller and Auditor General of India) தணிக்கை செய்யப் படுகிறது. தொழிலமைப்பின் நடவடிக்கைகள், நாடாளுமன்றத் தின் விவாதத்திற்கும், வினாக்களுக்கும், திறனாய்வுக்கும் உட் பட்டவையாகும்.

பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் நன்மைகள்

(1) பொதுக் கூட்டுரு அமைப்பு முறை, மற்றெந்த வகை அமைப்பு முறையையும்விட அதிகப் பட்ச அளவில் 'தன்னுட்சி யுரிமை' பெற்றுள்ளது. இதனால் நிருவாக நடவடிக்கைகளில் முழுச் சுதந்திரமும், மேம்பட்ட திறமையும், பணியாளர்களிடையே ஊக்கமும் நெகிழ்ந்தன்மையும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

(2) துறைவழி நிருவாக முறையில் மலிந்து காணப்படும் காலதாமத முடிவுகள், அதிகார இன ஆட்சிமுறை போன்ற இடர்ப்பாடுகள், பொதுக் கூட்டுருவில் முற்றிலும் இல்லை. இதன் காரணமாக, தொழிலமைப்பைப் பாதிக்கக்கூடிய பிரச்சினை களுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்படுகின்றது ; தொழிலமைப் பின் பொதுவான திறமை மேம்பட்டு, விரைவான வளர்ச்சியை அடைய முடிகிறது.

(3) தனியார்துறையின் முக்கியக் குறைபாடுகளாகிய, நெருக்கடி நிலையில் கொள்ளை இலாபமீட்டல், சுரண்டும் தன்மை, சட்டத்திற்குப் புறம்பாக ஊகவாணிகம் செய்தல் (Speculation) ஆகியவை பொதுக் கூட்டுரு முறையில் முற்றிலும் களையப் படுகின்றன.

(4) தன்னாட்சியுரிமை பெற்றிருப்பினும்கூட, நாடாளுமன்றத்திற்கும், அரசுக்கும் பொதுப் பொறுப்புடைமையுடன் நடப்பதால், பொதுக் கூட்டுரு அமைப்பு முறைகளின் நடவடிக்கைகள் நாட்டு மக்களின் நலனைப் பேணிக் காக்கின்ற வகையில் அமைகின்றன.

(5) பொதுக் கூட்டுரு அரசுரிமை பெற்றிருப்பதால் தொழிலுக்குத் தேவையான அதிகாரம் பெற்ற மூலதனம் (Authorised Capital), நடைமுதல் போன்றவை எளிதாகவும், தேவைப்படும் அளவிலும் கிடைத்துவிடுகின்றன. கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலமும் பணம் திரட்டப்படுகிறது. இக் கடன் பத்திரங்களின் அசல், வட்டி இரண்டுக்கும் அரசு பொறுப்புறுதி அளிப்பதால், பொது மக்களின் நம்பிக்கையை வளர்த்து, கடன் பத்திரங்களை எளிதாகச் சந்தைப்படுத்த முடிகிறது.

(6) மற்ற அமைப்பு முறைகளைவிட, பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில், தொழிலாளர் நலன் சிறப்பாகக் காக்கப்படுகிறது; எண்ணிறைந்த வசதிகள், மருத்துவ உதவி, மேல் ஊதியம் போன்றவைகளைத் தொழிலாளர்களுக்கு இக் கூட்டுருக்கள் நல்குகின்றன. மேலும், நிருவாகத்தில் தொழிலாளர்களுக்குப் பங்கு, இயக்குநரவையில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் பங்கு பெறுதல் போன்ற நவீனத் திட்டங்களும், செயற்படுத்தப்படுகின்றன. இலாபம் மதிப்பிடப்பட்ட அளவை விட அதிகமாகும்போது, தொழிலாளர்களுக்குப் பரிவாதார ஊதியங்கள் (Ex-Gratio) அளிக்கப்படுகின்றன.

(7) பொதுக் கூட்டுருவின் விலைக் கோட்பாடு, வாணிகஞ் சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில், அடக்கவிலைக் கோட்பாட்டின்படி தீர்மானிக்கப்படுவதால், குறைந்த விலையில், நிறைந்த பொருள்களை நுகர்வோருக்கு வழங்க முடிகிறது; கொள்ளை இலாபம் தவிர்க்கப்பட்டு நுகர்வோர் நலன் பாதுகாக்கப்படுகிறது.

(8) மேம்பட்ட திறமையும், தகுந்த தகுதிகளும் உடையவர்களுக்கே இயக்குநரவையில் இடம் அளிக்கப்படுவதால், அதிகரித்த நிருவாகத் திறமையுடனும், மிகவும் பொறுப்புடைமையுடனும் மேலாண்மை அமைகிறது.

(9) நியாய உணர்ச்சி, நடுநிலை முடிவுகள் போன்ற பண்புக் கூறுகளிலிருந்து இயக்குநரவை சிறிதும் மாறுபடுவதில்லை.

மேலும், இயக்குநரவையில் தொழிலாளர்களின் பிரதிநிதிகள், நுகர்வோர் குழுக்களின் பிரதிநிதிகள் போன்ற அனைத்து நிலை உறுப்பினர்களும் இடம் பெறுவதால், தொழிலமைப்பின் முன்னேற்றத்திற்கான சிறந்த முடிவுகள் எடுக்கப்படுகின்றன. தொழிலுறவும் சீராக அமைகிறது.

(10) எல்லாவற்றிலும் முக்கிய நன்மையாகப் பேரளவு உற்பத்தியின் நன்மைகளனைத்தும் இக்கூட்டுரு அமைப்புமுறையில் ஏற்படுகின்றன. பல்வேறு தொழில்கள் ஒருங்கிணைந்து செயற்படுவதால், மேலாண்மையில் அகச்சிக்கனங்களையும் தொழில் நடவடிக்கைகளில் புறச்சிக்கனங்களையும் கூட்டுரு பெற முடிகிறது.

பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் குறைபாடுகள்

(1) தன்னாட்சியுரிமையும், நெகிழ்ந்தன்மையும் பொதுக் கூட்டுருவின் அடிப்படைச் சிறப்பியல்புகள் எனக் கண்டோம். ஆனால், இக்கொள்கைகள் பெயரளவிற்குத்தான் உள்ளன. நடைமுறையில் செயற்படுத்தப்பட அரசு அதிகாரிகளும் அமைச்சர்களும் அனுமதிப்பதில்லை. கூட்டுருவின் நிருவாகத்திலும், அன்றாட நடவடிக்கைகளிலும், அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சித் தலைவர்களின் குறுக்கீடுகள் அதிக அளவில் ஏற்படுகின்றன. பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் தன்னாட்சியுரிமை பற்றி ஆராய அமைக்கப்பட்ட 'சாக்ளா குழு' (Chagla Commission) தன்னுடைய அறிக்கையில், "இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (L.I.C.) நடைமுறையில் தன்னாட்சியுரிமையைப் பயன்படுத்த முடியாமல், அமைச்சகத்தின் தலையீடுகள் ஏற்பட்டன என்றும், அரசின் மற்ற துறைகளைப் போலவேதான், பொதுக் கூட்டுரு அமைப்பு முறைகளும் அரசால் நடத்தப்படுகின்றன" எனவும் கூறியது.

(2) பொதுக் கூட்டுருவின் 'இயக்குநரவை'கள் அடிப்படைக் கொள்கைகளுக்குப் புறம்பாகவும், விரும்பத்தகாத வழி முறைகளிலும், 'தன்னாட்சியுரிமை'யைப் பயன்படுத்துகின்றன.

(3) பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் பொதுவாக, போட்டியும், இலாபநோக்கும் கிடையாதாகையால் நட்டம் ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். மேலும், இலாப நோக்கின்மை திறமையின்மையைத் தோற்றுவித்து விடுகிறது. தொழிலமைப்புகளில் ஏற்படும் இழப்புகள் அரசின் மானியத்தொகை மூலம் சரிக்கட்டப்படுகின்றன.

(4) பேரளவு அடிப்படையில், பல கோடி ரூபாய்கள் முதலீடு செய்யப்பட்டு, பேரளவு உற்பத்தியை நோக்கமாகக் கொண்டு தோற்றுவிக்கப்படும் பொதுத்துறைத் தொழில்களுக்கே இவ்வமைப்பு முறை ஏற்றதாகும்; மற்றத் தொழில்களை இம் முறையில் அமைப்பது இயலாததாகும்.

(5) பொதுத்துறையின் மிக முக்கியமான நோக்கங்களுள் ஒன்று தொழிலாளர் நலன் காப்பதாகும். ஆனால் நடைமுறையில், பொதுக் கூட்டுருமுறையில் அமைக்கப்படும் பொதுத் துறைத் தொழில்கள் பல சந்தர்ப்பங்களில் தொழிலாளர் நலனைப் புறக்கணித்து வருகிறது. இவ்வனுபவம், நமது நாட்டில் மட்டுமல்லாமல் அயல்நாடுகளிலும் ஏற்பட்டுள்ளது.

(6) முற்றுரிமையைத் தவிர்த்து, நுகர்வோர் இடர்களைக் களைந்து, அவர்களின் நலனுக்காகப் பணிபுரிவதே பொதுக் கூட்டுருவின் தலையாய கொள்கையாகும். ஆனால், பொதுக் கூட்டுரு அமைப்புகளே, முற்றுரிமையை ஏற்படுத்தி நுகர்வோர் நலனைப் பாதிக்கும் வகையில் விலைகளையும், பணிக்கட்டணங் களையும் நிருணயிக்கின்றன.

(7) தனியார்துறைத் தொழிலமைப்புகளைவிட, பொதுக் கூட்டுரு முறையிலமைந்த தொழிலமைப்புகளின் வெற்றியையும், செயல் விளைவுகளையும் கணிப்பது நடைமுறையில் கடினமான தொரு செயலாகும். தனியார்துறைத் தொழிலமைப்புகள், இலாபநோக்குடன் செயற்படுவதால், ஈட்டப்படுகின்ற இலாபத்தைக் கொண்டு, அவைகளின் திறனைக் கணிக்கலாம். ஆனால், பொதுத்துறையானது பொதுப்பணிக்கு முதலிடம் அளித்துத் தொழிலை மேற்கொள்வதால், பணியின் தன்மை, பொருள்களின் விலைகள், தொழிலுறவு ஆகியவைகளை ஆராய்வதன் மூலமே திறன் கணக்கிடப்படலாம். இவ்வாறு திறமையைக் கணக்கிடுவதில் பல நடைமுறைப் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

(8). பொதுக் கூட்டுரு அமைப்பு முறை, பேரளவு முறையில் அமைவதால், தொழிலமைப்பின் மேலாண்மையில் பல்வேறு பிரச்சினைகள் தோன்றுகின்றன. நிருவாகத்திற்கும், தொழிலாளர்களுக்கும் இடையே சுமுகமான தொழிலுறவு பல சந்தர்ப்பங்களில் அமைவதில்லை. இரு பிரிவுகளுக்குமிடையேயான இடைவெளி அதிகரித்துக்கொண்டே வருகிறது.

(9) பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் விதிகளும் செயல்முறைகளும், தனிச்சட்டத்தின் மூலமாக வகுக்கப்

பட்டுள்ளதால், ஏதாவதொரு விதியை நடைமுறைக்கேற்றவாறு மாற்றியமைக்க வேண்டுமானலும்கூட, நாடாளுமன்றத்தின் அனுமதியுடன்தான் மேற்கொள்ளப்பட வேண்டும். இது நெகிழுந்தன்மையை மிகவும் பாதிக்கிறது. இக்காரணத்தினுல் தான் பேராசிரியர் ஹான்ஸன் (Prof. Hanson) "தனிச் சட்டங்கள் மூலம், பொதுக் கூட்டுருக்களை அமைத்தல் விரும்பத்தக்கதொரு முறையல்ல" எனக் கூறுகிருர்.

மற்ற சில நாடுகளில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறை

பல நாடுகளில் பொதுத்துறைத் தொழில்கள் பொதுக் கூட்டுரு முறையில்தான் ஏற்படுத்தப்படுகின்றன. எடுத்துக் காட்டாக, பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் வளர்ச்சியைப் பின்வரும் நாடுகளில் காண்போம் :

இங்கிலாந்து நாட்டில், நாட்டுடைமையாக்கப்பட்ட பெரும் பாலான தொழில்கள் பொதுக் கூட்டுரு முறையில்தான் அமைக்கப்பட்டன. மற்றவகை அமைப்பு முறைகளைவிட, பொதுக் கூட்டுரு முறையே சிறந்ததென இங்கிலாந்து அரசு முடிவு செய்தது. இற்றைய நாட்களிலும்கூட, பல புகழ்வாய்ந்த பொதுத்துறைத் தொழில்கள் இவ்வமைப்பு முறையில் செயற்படு கின்றன. இலண்டன் துறைமுக ஆணைக்குழு (Port of London Authority), பிரிட்டிஷ் ஒலிபரப்புக் கூட்டுரு (British Broadcasting Corporation), மைய மின்சாரக் குழுமம் (Central Electricity Board), இலண்டன் பயணிகள் போக்குவரத்துக் குழுமம் (London Passenger Transport Board), பிரிட்டிஷ் கடல்கடந்த வான்வழிக் கூட்டுரு (British Overseas Airways Corporation) போன்றவை களை எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

அமெரிக்க ஐக்கிய நாடுகளிலும்கூட, பொதுக் கூட்டுரு முறையில்தான் பொதுத்துறைத் தொழில்கள் அமைக்கப் பட்டுள்ளன. மிகச்சிறந்த எடுத்துக்காட்டாக, "டென்னசிப் பள்ளத் தாக்கு ஆணைக்குழு" (Tennessee Valley Authority) விளங்குகிறது.

பிரான்ஸ் நாட்டில், நாட்டுடைமையாக்கப்பட்ட பல்வேறு வகைப்பட்டத் தொழில்கள் பொதுக் கூட்டுருமுறையில்தான் அமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் 1957ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 'அரசுத் தொழிற் கூட்டுருச் சட்ட'த்தின் மூலம் (State Industrial Corporation Act, 1957), பொதுத்துறைத் தொழில்கள் அனைத்தும் பொதுக் கூட்டுரு முறையில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இதுபோன்றே, பிலிப்பைன்ஸ் (Phillipines) நாட்டில் 1950 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மறு சீரமைப்புச் சட்டத்தின்படி (Re-Organisation Act of 1950), நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக, ஜனாதிபதியின் ஆணை மூலமாகத் தோற்று விக்கப்படும் தொழிலமைப்புகள் அனைத்தும் பொதுக் கூட்டுரு முறையில்தான் அமைக்கப்படுகின்றன. மேலும் இந் நாட்டில், ஜனாதிபதியால் 'ஒரே மாதிரியான அரசுக் கூட்டுரு சட்ட அமைப்பு' (Uniform Govt. Corporate Charter) ஏற்படுத்தப்பட்டு, ஒரு சில நிறுவனங்களைத் தவிர, மற்றனைத்துத் தொழில்களும் இச் சட்டத்தின்கீழ் கூட்டுரு அமைப்பு முறையில் அமைக்கப் படுகின்றன. மற்ற நாடுகளைப்போல், தனித்தனியாகச் சட்டங்கள் இயற்றப்படுவதில்லை. இது பிலிப்பைன்ஸ் நாட்டுப் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் தனிச் சிறப்பாகும்.

நமது நாட்டில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் வளர்ச்சி

நாடு சுதந்திரமடைந்த பிறகுதான், நமது நாட்டில் பொதுத் துறை விரைவாக விரிவடைந்தது என்றாலும், அதற்கு முன்பேகூட, பொதுக் கூட்டுரு அமைப்பு முறையே பொதுத்துறைக்குகந்தது எனப் பொருளாதார வல்லுநர்கள் கருதினர். நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்குப் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையே சாலச் சிறந்ததெனத 'அகில இந்தியக் காங்கிரஸ் குழு' (All India Congress Committee) பல சந்தர்ப்பங் களிலும் வலியுறுத்திவந்தது.

நாடு அடிமைத்தளையைக் களைந்தவுடன், நமது அரசால் அறிவிக்கப்பட்ட 1948ஆம் ஆண்டுத் தொழிற்கொள்கை பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில்தான் பொதுத்துறை விரிவுபடுத்தப்படுமென அறிவித்தது. சுதந்திரம் அடைவதற்கு முன், நமது நாட்டில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் நடந்துவந்த ஒரே தொழிலமைப்பு 'இந்திய ரிசர்வ் வங்கி'யாகும் (R. B.I.). ஆனால், 1948ஆம் ஆண்டிற்குப் பிறகு, பொதுத்துறை யிலமைக்கப்பட்ட பெரும்பான்மையான வாணிகம், உற்பத்தித் தொழில்கள் ஆகியவை பொதுக்கூட்டுரு முறையிலேயே அமைக் கப்பட்டன. நிருவாகத் திறமைக்கும், நெகிழுந்தன்மைக்கும் ஏற்ற தோர் அமைப்புமுறை பொதுக் கூட்டுருவே என அரசு முடிவு செய்தது. எனவேதான் நாட்டுடைமையாக்கப்பட்ட பல்வேறு வகையானத் தொழில்கள், தனித்தனியான சட்டங்கள் மூலமாகப் பொதுக் கூட்டுரு முறையிலேயே அமைக்கப்பட்டன. அவைகளில் முக்கியமான சில அமைப்புகளைக் காண்போம்:

(i) இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுரு (Oil & Natural Gas Commission of India).

(ii) ஸ்டேட் பாங்க் (State Bank).

(iii) இந்தியத் தொழில்வள வங்கி (Industrial Development Bank of India).

(iv) இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation of India).

(v) மத்திய மற்றும் மாநில பண்டகச் சாலைக் கூட்டுருக்கள் (Central & State Warehousing Corporations).

(vi) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation of India).

(vii) தாமோதரப் பள்ளத்தாக்குக் கூட்டுரு (Damodar Valley Corporation).

மேற்கண்ட தொழிலமைப்புகள் அனைத்தும் நமது நாட்டில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் வகையில் இயங்கிவருகின்றன. 1975-ல், நமது நாட்டில் 27 பொதுக் கூட்டுரு அமைப்பு முறைப் பொதுத்துறைத் தொழில்கள் உள்ளன எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

5. கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை (அரசு நிறுமங்கள்) (Joint Stock Company Type of Organisation)

உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் பொதுத்துறைத் தொழிலமைப்புகள், கூட்டுப் பங்கு நிறும முறையில் அமைக்கப் படுகின்றன. இவைகளை அரசு நிறுமங்கள் (Government Companies) என்றும் அழைக்கலாம். தொழிலமைப்பொன்று தனியார்துறையிலமைக்கப்பட்டாலும் அல்லது பொதுத்துறையிலமைக்கப்பட்டாலும், அதன் முக்கிய நோக்கம், அதிகபட்ச உற்பத்தியை ஏற்படுத்தி, திறமையான நிருவாகத்துடன் அதிக வாணிகப் புரள்வை (Turn Over) ஏற்படுத்துவதேயாகும். பொதுத்துறைத் தொழிலமைப்புகளும், தனியார்துறையைப் போன்றே திறமையுடனும், சீரான வளர்ச்சியுடனும் நடைபெற வேண்டுமாயின், அவைகளும் வாணிகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படவேண்டும்; தன்னாட்சி யுரிமையும், நெகிழ்ந்தன்மையும் அதிகபட்ச அளவில் அளிக்கப் படவேண்டும். பொதுத்துறைத் தொழில்களைக் கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையில் நிறுவுவதன் மூலமாக அவைகளுக்கு அதிகபட்ச அளவில் தன்னாட்சியுரிமை கிடைக்க வாய்ப்பேற்

படுத்தலாம் எனக் கருதப்பட்டது. தென்கிழக்கு ஆசிய நாடுகளில் (South East Asian Countries) இம்முறை அதிக அளவில் பின்பற்றப்படுகிறது. நமது நாட்டிலும் உற்பத்தி மற்றும் வாணிகத் தொழில்கள் இவ்வமைப்பு முறையில் அமைக்கப்படலாமென்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

சிந்திரி உர ஆலையும் (Sindiri Fertilizers Factory), இந்தியத் தொலைபேசி நிறுமமும்தான் (Indian Telephones Ltd.), நமது நாட்டில் முதன் முதலில் கூட்டுப்பங்கு நிறும முறையில் தோற்றுவிக்கப்பட்டன. அதற்குப் பிறகு, பல நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில்களும், புதிதாகப் பொதுத்துறையில் தோற்றுவிக்கப்பட்ட தொழில்களும் இவ்வமைப்பு முறையில் அமைக்கப்பட்டன.

அரசு நிறுமம் - வகைப்படுத்தப்படுதல் (Govt. Company - Classification)

1956ஆம் ஆண்டின் இந்திய நிறுமச் சட்டத்தின்கீழ் (Indian Companies Act, 1956), பதிவு செய்யப்பட்டு அரசுரிமை பெறும் நிறுமங்கள். பல்வேறு வகையான நோக்கங்களுடன் தோற்றுவிக்கப்படுகின்றன. கட்டுப்பாட்டு வீதமும் (Degree of Control) அவைகளுக்கிடையே பெருமளவில் மாறுபடுகின்றது. எனவே அரசு நிறுமங்கள் பலவகைப்படும் என்பது தெளிவாகிறது. பின்வரும் முறையில் அரசு நிறுமங்களைப் பாகுபடுத்தலாம் :

(1) உற்பத்தி நிலையில் உள்ள உற்பத்தித் தொழில்கள்.

எடுத்துக்காட்டு : சிந்திரி உர ஆலை, இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் உற்பத்தி நிறுவனம், கனரக மின்சாதனங்கள் உற்பத்தி நிறுவனம், இந்தியத் தொலைபேசி போன்ற எண்ணிறைந்த நிறுவனங்களைக் கூறலாம்.

(2) நாட்டில் விரைவான தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் அமைந்த தொழிலமைப்புகள். இவைகள் நேரடியாக உற்பத்தியில் ஈடுபடாமல், தனியார்துறை, மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சிக்கு ஏற்ற திட்டங்களைச் செயற்படுத்துவதே இவைகளின் நோக்கமாகும்.

எடுத்துக்காட்டு : தேசியத் தொழில் முன்னேற்றக் கூட்டுரு (National Industrial Development Corporation),

தேசியச் சிறுதொழில்கள் கூட்டுரு (National Small Industries Corporation).

(3) ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உள்நாட்டு வாணிகத்தை வளர்ச்சியுறச் செய்வதற்காக அமைக்கப் பட்ட தொழிலமைப்புகள்.

எடுத்துக்காட்டு: 'அரசு வாணிகக் கூட்டுரு' (State Trading Corporation), 'இந்தியக் கனிப்பொருள் உலோகக் கூட்டுரு' (The Minerals & Metals Trading Corporation of India Ltd.)

(4) தனியார்துறைத் தொழிலமைப்புகள் நிதிப் பற்றுக் குறையால் பாதிக்கப்படும்போது அல்லது இலாப கரமாகச் செயற்படாதபோது, அல்லது நாட்டு நலனுக்கு அவைகளின் பணிகள் தேவைப்படும்போது, அரசு அவைகளை நாட்டுடைமையாக்கலாம்.

எடுத்துக்காட்டு: 'நேபா ஆலை' (Nepa Mills), 'கிழக்குக் கப்பல் தொழிற் கூட்டுரு' (Eastern Shipping Corporation).

(5) தனியார்துறையினரிடமிருந்து தொழில் நுட்பங்களை யும், மேம்பட்ட வாணிக வழிமுறைகளைப் பெறவும், பொதுத்துறையை அவைகளுடன் இணைத்துத் தொழி லமைப்பைத் தோற்றுவிக்கலாம். இவைகளைக் கலப்புரிமைத் தொழிலமைப்புகள் (Mixed Ownership Companies) அல்லது நிறுமங்கள் எனக் கூறலாம். தொழிலமைப்பின் உரிமை தனியார்துறையையும், பொதுத்துறையையும் சார்ந்துள்ளது.

(6) இறுதியாக, நாட்டின் நலனைக்காக்க, அரசின் முழு உரிமையுடன் அமைக்கப்படும் தொழிலமைப்புகள், இந் நிறுமங்களுக்குத் தேவையான மூலதனம் முழுவதை யும் அரசே அளிக்கிறது.

எடுத்துக்காட்டு: இந்தியத் தொலைபேசி, இந்துஸ்தான் சிமெண்ட் நிறுமம் போன்றவைகளாகும்.

அரசு நிறுமத்தின் வரைவிலக்கணம்

1956ஆம் ஆண்டு இந்திய நிறுமச்சட்டத்தின் 617ஆம் பிரிவு, அரசு நிறுமத்திற்குப் பின்வருமாறு வரைவிலக்கணம் தருகிறது.

"ஒரு நிறுமத்தின் பங்குத் தொகையில் 51% பங்குகள் மத்திய அல்லது மாநில அரசுக்கோ அல்லது அரசுகளுக்கோ அல்லது இருவகை அரசுகளுக்குமோ உரியதாக இருந்தால் அந்நிறுமம், அரசு நிறுமம் எனப்படும்".

அரசு நிறுமத்திற்குத் துணை நிறுமங்களாகச் செயற்படும் தொழிலமைப்புகளும் இதில் அடங்குவனவாகும். எனவே, அரசு நிறுமத்தில் மத்திய அல்லது மாநில அரசே பெரும்பான்மைப் பங்குகளைப் பெற்ற பங்குதாரராக விளங்குகிறது. மற்ற பதிவு செய்யப்பட்ட நிறுமங்களைப் போலவே, அரசு நிறுமமும், இந்திய நிறுமச் சட்டத்தின்கீழ், அதன் விதிகளுக்கும், கட்டுப்பாட்டுக்குட் பட்டும் செயல்படுகின்றது. ஆனால் சில குறிப்பிட்ட விதிகளோ அல்லது கட்டுப்பாடுகளோ, ஒரு சில குறிப்பிட்ட அரசு நிறுமங் களுக்குப் பொருந்தாதென இந்திய நிறுமச் சட்டத்தின் கீழ், அரசிதழில் (Gazatte) அரசு அறிவிக்கலாம். மேலும், இந்திய நிறுமச் சட்டவிதிகளை சிறிது மாற்றத்துடனும் அரசு நிறுமங்கள் பின்பற்றலாம். ஆனால், இவ்வறிவிப்பின் படிவமொன்றைக் குறைந்தது முப்பது நாட்களுக்குள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து ஒப்புதல் பெறுதல் வேண்டும். நாடாளுமன்றம் ஒப்புதல் வழங்காவிடில் அக்குறிப்பிட்ட அறிவிப்பை அரசிதழில் வெளியிட முடியாது; அல்லது நாடாளுமன்றம் குறிப்பிடும் மாற்றங்களுடன் வெளியிடவேண்டும்.

அரசு நிறுமத்திற்குப் பொருந்தும் விதிகள்

அரசு நிறுமத்திற்குக் குறிப்பாகப் பொருந்தக்கூடிய ஒரு சில முக்கிய விதிகளைக் காண்போம்:

(1) அரசு நிறுமத்தின் தணிக்கையர் மத்திய அரசால், இந்தியத் தலைமைக் கணக்கு ஒழுங்குமுறைப்படுத்துநர் மற்றும் தணிக்கையரின் ஆலோசனையுடன் நியமிக்கப்படுகிறார்.

(2) அரசு நிறுமத்தின் தணிக்கையர் நிறைவேற்ற வேண்டிய பணிகளையும், பின்பற்ற வேண்டிய தணிக்கைமுறை களையும் தீர்மானம் செய்ய இந்தியத் தலைமைத் தணிக்கையருக்கு அதிகாரம் உண்டு. தன்னுடைய அதிகாரிகளின் மூலமாகத் தணிக்கை செய்யப்பட்ட கணக்குகளை மீண்டும் ஆராயவும் அவருக்கு அதிகாரமுண்டு.

(3) அரசு நிறுமத்தின் தணிக்கையர், தன்னுடைய தணிக்கை அறிக்கையின் படிவமொன்றை இந்தியத் தலைமைத் தணிக்கை யருக்குச் சமர்ப்பிக்கவேண்டும். பிறகு, இத் தணிக்கை அறிக்கை

தலைமைத் தணிக்கையரின் கருத்துக்களுடன் பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

(4) அரசு நிறுமத்தில், மத்திய அரசும் ஒரு பங்குதாரராக இருந்தால், ஆண்டு இறுதியில், அரசு நிறுமத்தின் பணிகளைப் பற்றியும், செயல் விளைவுகளைப்பற்றியும்ஆண்டறிக்கை ஒன்றைத் தயாரித்து தணிக்கையாளரின் அறிக்கையையும் அத்துடன் இணைத்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும். நிறுமத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் நடந்துமுடிந்த மூன்று மாதத்திற்குள், இவ்வாண்டறிக்கை அரசினால் தயாரிக்கப்பட்டு நாடாளு மன்றத்தில் வைக்கப்படவேண்டும். நிறுமத்தில் மாநில அரசு பங்குதாரராக இருந்தால், இவ்வறிக்கை மாநிலச்சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும்.

அரசு நிறுமத்தின் சிறப்பியல்புகள்

அரசு நிறுமத்தின் முக்கியச் சிறப்பியல்புகள் பின்வருபவை களாகும் :

(1) மற்ற தனியார் நிறுமங்களைப் போலவே, அரசு நிறுமமும் 1956ஆம் ஆண்டு நிறுமச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுகிறது. பதிவு செய்தல், அமைப்புமுறையேடு தயாரித்தல், செயல்முறை விதிகளேடு தயாரித்தல், தகவலறிக்கை வெளியிடல், மூலதனம், கணக்குப் பதிவுமுறைத் தணிக்கை ஆகிய வழிமுறைகள் அரசு நிறுமத்தால் இந்திய நிறுமச் சட்டத்திலுள்ளதுபோல் பின்பற்றப்படுகின்றன. நாடாளு மன்றத்தின் அனுமதியுடன் அரசிதழில் அறிவிப்பதன் மூலமாக, ஒரு சில விதிகளுக்கு விலக்களிக்கப்படலாம்.

(2) நிறுமத்தின் பங்குகளில் 51 சதவீதமோ அல்லது அதைவிட அதிகமாகவோ, மத்திய அரசோ அல்லது மாநில அரசோ பெற்றிருக்கிறது. சில நிறுமங்களில் மைய அரசும் மாநில அரசும் கூட்டாகவும் பங்குகளைப் பெற்றுள்ளன. பெரும்பாலான அரசு நிறுமங்களில் அனைத்துப் பங்குகளையும் இந்திய ஜனாதிபதியின் பெயரில் மைய அரசு பெற்றுள்ளது. சில நேரங்களில், தொழில் வல்லுநர்களுக்கும் உடன் உழைப்பவர்களுக்கும் ஒரு சில பங்குகள் வழங்கப்படுகின்றன.

(3) அரசு நிறுமத்தின் இயக்குநர்கள் அரசினால் நியமிக்கப் படுகின்றனர். பெரும்பான்மையான பங்குகள் அல்லது அனைத்துப் பங்குகளையும் அரசே பெற்றிருப்பதால், நிறுமத்தின் இயக்குநரவையின் இயக்குநர்கள் அனைவருமோ அல்லது அதிக

பட்ச எண்ணிக்கை இயக்குநர்களையோ அரசு நியமிக்கிறது. அமைச்சகத்தைச் சார்ந்த உயர் அதிகாரிகள், பல சந்தர்ப்பங்களில் இயக்குநர்களாக நியமிக்கப்படுகின்றனர். மேலும் தொழில் வல்லுநர்கள், தொழிலாளர் பிரதிநிதிகள், நுகர்வோர் குழுச் செயலாளர்கள், வெளிநாட்டு உடனுழைப்பாளர்கள் போன்ற பல வகையினருக்கும் இயக்குநரவையில் இடமளிக்கப் படுகிறது.

(4) துறைவழி நிருவாக முறையில் மலிந்துள்ள குழப்பமான விதிமுறைகளும், செயல்முறைகளும் அரசு நிறுமத்தால் பின்பற்றப்பட வேண்டியதில்லை. மாறாக, நிறுமத்தின் செயல்முறை நிருவாகத்தில், உடனுக்குடன் முடிவுகளை மேற்கொள்ள தன்னுட்சியுரிமை வழங்கப்பட்டுள்ளது. தனிச் சட்டங்கள் மூலமாகத் தோற்றுவிக்கப்படும் பொதுக் கூட்டுருக்களைப் போன்று, தனியானதொரு சட்டமிலை இல்லாவிடில்கூட, அரசு நிறுமங்கள் நிருவாகத்திலும், நிதி நடவடிக்கைகளிலும் தன்னுட்சியுரிமை பெற்றுள்ளன.

(5) அரசு நிறுமம் நிறுமச் சட்டத்திற்குட்பட்டு செயற் பட்டாலும்கூட, அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகும். அக்குறிப்பிட்ட துறையைச் சார்ந்த அமைச்சரும், நிறுமத்தின் இயக்குநர்களை நியமிக்கும் உரிமையையும், தேவையான விவரங்களை நிறுமத்திடமிருந்து பெறும் அதிகாரத்தையும் பெற்றுள்ளது. குறிப்பிட்ட அதிகாரம் பெற்ற அமைச்சர் நிறுமத்தின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்து கண்காணிக் கும் பொறுப்புடையவராவார்.

கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறையின் நன்மைகள்

நாம் முன்பே கண்ட பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் நன்மைகள் பல ஏற்பட்டாலும்கூட, பொதுத்துறைக்கு மிகவும் ஏற்ற அமைப்பு முறை, கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறையே என்ற கருத்து நமது நாட்டில் வலுப்பெற்று வருகிறது. இதற்குக் காரணமாக அமைவது இவ்வமைப்பு முறையின் நன்மைகளேயாகும். பின்வரும் நன்மைகள் மிக முக்கிய மானவைகளாகக் கருதப்படுகின்றன:

(1) மிக விரிவானதும், காலதாமதமானதுமான வழிமுறைகள் அரசு நிறும அமைப்பு முறையில் தவிர்க்கப்படுகின்றன. அரசின் தொடர்ச்சியான கண்காணிப்பால், சீரான திறமையுடன் கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறை செயற்படுகிறது. பொது நிருவாகம் பணியாளர்களை நியமித்தல், நிதி

நடவடிக்கைகள் ஆகியவற்றில் தன்னுட்சியுரிமையை அரசு நிறுமம் பெறுகிறது.

(2) தேவைப்படும் சந்தர்ப்பங்களில், பொருத்தமான மாற்றங்களை நிறுமச் சட்டத்தின்கீழ் செய்து கொள்ளலாம். பொதுக் கூட்டுரு முறையிலுள்ளதுபோல் நாடாளுமன்றத்தின் அனுமதி தேவையில்லை. இந்திய நிறுமச் சட்டத்தின் ஒரு சில வழிமுறைகள் அரசு நிறுமத்தின் தன்னுட்சியுரிமையையோ, பொதுநலப் பணியையோ பாதித்தால், அவ் விதிமுறைகளி லிருந்து, நிறுமத்திற்கு விலக்களிக்க அரசுக்கு அதிகாரமுண்டு.

(3) அரசு நிறுமத்தின் அன்றாட அலுவல்களில் அமைச் சகத்தின் தேவையற்ற குறுக்கீடுகள் ஏற்படுவதில்லை. அரசு நிறுமத்தின் நிருவாகம், நிதிவசதி, வரிகள், தணிக்கைமுறை ஆகியவை தனியார்துறைத்தொழிலமைப்புகளின் கொள்கைகளைப் போலவே அமைந்துள்ளன. எனவே, இவ்வமைப்பு முறையில் நெகிழ்தன்மை, தன்னுட்சியுரிமை போன்ற சிறப்பியல்புகளால் திறமையான நிருவாகம், விரைவான முடிவுகள் போன்ற நன்மைகள் ஏற்படுகின்றன.

(4) தேவைக்கதிகமானத் தன்னுட்சியுரிமையைப் பெற் றுள்ள பொதுக் கூட்டுரு அமைப்பு முறைக்கும், நெகிழுந் தன்மை சிறிதுமில்லாத் துறைவழி நிருவாக அமைப்பு முறைக் கிடையே, சிறந்த நடுநிலை அமைப்பு முறையாகக் கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறை அமைகிறது.

(5) அரசு நிறுமம், தனியார்துறை நிறுமங்களுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் நிருவாகத் திறனையும், தொழிலுக்கு வேண்டிய நுணுக்க அறிவையும் பெறமுடிகிறது.

இவ்வாறு, பொதுத்துறைத் தொழிலைக் கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறையில் தோற்றுவிப்ப தன் மூலமாகத் தனியார் துறையின் திறமையையும், பொதுத்துறையின் பொதுநலனையும் அளவான வீதத்தில் இணைத்து வெற்றிகரமாகச் செயல்பட முடியும்.

குறைபாடுகள்

நன்மைகள் பல ஏற்பட்டாலும், அரசு நிறுமத்தில் குறை பாடுகளே இல்லை எனக் கூறிவிட முடியாது. ஒரு சில முக்கியக் குறைபாடுகளைக் கீழ்வருமாறு ஆராய்வோம்:

(1) அரசு நிறுமத்தின் சிறப்பியல்புகளில் ஒன்று தன்னாட்சி யுரிமை என முன்பே கண்டோம். ஆனால், இவ்வுரிமை கொள்கை யளவில்தான் உள்ளது; நடைமுறையில் கிடையாது. அரசு நிறுமத்தின் ஒரே பங்குதாரராகவோ அல்லது பெரும்பான்மை யான பங்குகளைப் பெற்ற பங்குதாரராகவோ இருப்பதால், எண்ணிக்கையில் அதிகபட்ச இயக்குநர்களை நியமித்து, அவர் களின் மூலமாக நிறுமத்தைத் தன் கொள்கைகளுக்கேற்ப அரசு நடத்திச்செல்ல முற்படுகிறது.

(2) அரசு நிறுமத்தின் நிருவாகத்தில், அமைச்சகத்தின் குறுக்கீடுகள் அதிக அளவிலும் அடிக்கடியும் ஏற்பட்டு நிருவாகத் திறனைச் சீர்குலைத்துவிடுகின்றன. மேலும், அரசு நிறுமத்தின் கொள்கைகளைத் தங்களுடைய விருப்பு வெறுப்புகளுக்கேற்ப மாற்றியமைக்க, அமைச்சர்களும், உயர்நிலை அதிகாரிகளும் வரைமுறையில்லா ஆணைகளைப் பிறப்பிக்கின்றனர். இதனால், அரசு நிறுமம் வாணிகக் கோட்பாடுகள், நிருவாகத் திறமை, ஒழுங்குமுறை ஆகியவைகளை விடுத்து, அதிகார இனஆட்சியின் ஆதிக்கத்திற்குட்பட வேண்டியுள்ளது.

(3) இயக்குநரவையின் அதிகாரங்கள், குறிப்பிட்ட துறை யின் அமைச்சகத்தின் இசைவைப் பொறுத்து அமைகிறது. குறிப்பாகக் கடன்பெறும் அதிகாரங்கள், பேரளவு ஒப்பந்தங் களை ஏற்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் அமைச்சகத்தின் அனுமதியுடன்தான் மேற்கொள்ளப்படவேண்டும். எனவே அரசு நிறுமம், நடைமுறையில் நெகிழ்ந்தன்மையையும், தன்னாட்சி யுரிமையையும் பெறுவதில்லை.

(4) அரசு நிறுமங்களின்மீது, அரசு செலுத்தக்கூடிய அதிகாரங்களைப் பார்க்கும்போது அரசு நிறுமங்களும், அரசின் மற்றத் துறைகளைப் போன்றுதான் நடத்தப்படுகின்றன என்ற உண்மை தெளிவாகிறது.

(5) நாடாளுமன்றத்தின் இசைவில்லாமல் அரசு, பல ஆணைகளை நிறுமங்களுக்குப் பிறப்பிக்கிறது. இது நிறுமங்களின் தன்னாட்சிக் கொள்கைக்கு எதிர்மறையான செயலாகும்.

(6) அரசு நிறுமங்களின் இயக்குநரவைகளில், பதவிமுறை யில் (Ex - Officio Capacity) இயக்குநர்களாக நியமிக்கப்படும் அமைச்சகத் துறை அதிகாரிகளின் ஆதிக்கமே வளர்ந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது. ஆனால், இவ்வதிகாரிகள் நிறுமத்தின் மூலதனத்துடன் எவ்விதத் தொடர்புமின்றி,

செயற்படுவதால், தொழிலமைப்பைப் பற்றியோ, அது ஈட்டக் கூடிய இலாபத்தைப் பற்றியோ சிறிதும் கவலை கொள்வதில்லை.

(7) அரசு நிறுமங்களின் உயர்நிலை அதிகாரிகள், தங்கள் நிருவாகத்தின்கீழ் உள்ள தொழிலமைப்புகளின் சீரான வளர்ச்சிக்கு விசுவாசத்துடன் பணிபுரிவதில்லை. எந் நேரத்திலும், திரும்பவும், தாங்கள் முன்பிருந்த பதவிகளுக்கே திரும்பவும் மாற்றப்படலாம் என்ற எண்ணத்துடன் அதிகாரிகள் செயற்படுவதால் எவ்விதக் கடும் உழைப்பிலும் ஈடுபடுவதில்லை.

(8) அரசு நிறுமங்கள், அரசு மற்றும் நாடாளுமன்றத்தின் அரசியலமைப்புக் கண்காணிப்பிலிருந்து, பல சந்தர்ப்பங்களில் தப்பித்துவிடுகின்றன. மேலும், நிறுமத்தின் ஒரே பங்குதாரராக அரசு செயல்படுவதால், பங்குதாரர்களின் சாதாரண உரிமைகளும், அதிகாரங்களும் அரசிடம் குவிந்துவிடுகின்றன. இதன் காரணமாக, நிறுமச் சட்டத்தின் விதிமுறைகளுக்கும் அரசு நிறுமம் உட்படுவதில்லை.

(9) கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையிலமைந்த தொழிலமைப்புகளின்மீது நாடாளுமன்றம் தனது கட்டுப்பாட்டைச் செலுத்த முடிவதில்லை. பல நேரங்களில் அரசு நிறுமங்கள், தணிக்கை செய்யப்பட்ட ஆண்டு அறிக்கையை மட்டும்தான் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றன. ஆனால், இவ்வாண்டு அறிக்கைகளிலிருந்து, நிருவாகத்துடன் தொடர்புடையப் பிரச்சினைகள், நிறுமத்தின் செயல்முறைகள் ஆகியவைகளைப் பாராளுமன்றம் அறிந்துகொள்ள முடிவதில்லை. எனவேதான், முன்னாள் தலைமைத் தணிக்கையர் ஒருவர் "அரசுத் தொழிலமைப்புகளைத் தனியார்துறைத் தொழிலமைப்புகளைப் போன்று தோற்றுவிப்பதென்பது, நிறுமச் சட்டத்தையும் அரசியலமைப்பையும் ஏமாற்றும் செயலாகும்" எனக் கூறுகிறார்.

கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையின் மேற்கண்ட குறைபாடுகளில், பெரும்பாலான கருத்துக்கள், நடைமுறையில் அரசின் மற்ற துறைகள் செயற்படும் முறையை மனத்திற்கொண்டு கூறியவைகளாகும். ஆனால், அரசு நிறுமங்களுக்கென இந்திய நிறுமச் சட்டம் வகுத்துள்ள விதிமுறைகளைத் தணிக்கை முறையிலும், ஆண்டறிக்கைத் தயாரிக்கும் முறையிலும் அரசு நிறுமங்கள் பின்பற்றினால் மேற்கண்ட குறைபாடுகள் அனைத்துமே களையப்படலாம். அரசு நிறுமங்களைக் கண்காணிப்பதற்கென நாடாளுமன்றத்தில் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டது.

நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புடைமையிலிருந்து அரசு நிறுமங்கள் முற்றிலும் பாதுகாப்புப் பெற்றுள்ளன. அரசு அதிகாரிகள் அரசு நிறுமங்களின் அன்றாட அலுவல்களில் குறுக்கிட அதிகாரம் பெற்றுள்ளனர். நிறுமத்தின் ஒரே பங்குதாரர் என்ற வகையில், நிறுமத்தைப் பற்றிய அனைத்து விவரங்களையும் அரசு அறிந்துகொள்கிறது. ஆனால், நாடாளுமன்றத்தின் கவனத்திலிருந்து அவ் விவரங்கள் மறைக்கப்பட்டுவிடுகின்றன.

எனவே கூட்டுப் பங்கு நிறும முறையில் செயற்படும் அரசு நிறுமங்கள், ஒரு ஒழுங்கான நடைமுறையைப் பின்பற்றுதல் அவசியமாகிறது. அரசு நிறுமங்கள் ஏற்படுத்தும் கொள்கைகள், செயல்முறைகள் ஆகியவை நாடாளுமன்றத்தின் மறு சீராய்வுக்கும், இசைவிற்கும் உட்படுகிற ஒழுங்கு முறையை அரசு நிறுமங்கள் பின்பற்றவேண்டும்.

தொழிலமைப்பு முறையைத் தேர்ந்தெடுத்தல்

நாம், இப்பகுதியில் கண்ட ஐந்து வகையான அமைப்பு முறைகளுள் மூன்று வகையான அமைப்பு முறைகள் மிக முக்கியமானவைகளாகக் கருதப்படுகின்றன. அவையாவன :

(i) துறைவழி நிருவாக அமைப்பு முறை

(ii) பொதுக் கூட்டுரு அமைப்பு முறை

(iii) கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை

மேற்கண்ட வகைகளில், பொதுத்துறைக்கென எவ்வகை அமைப்பு முறையை அரசு தேர்ந்தெடுக்கவேண்டும் என்பது மிகவும் சிக்கலானப் பிரச்சினையாகும். ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான அமைப்பு முறை சிறந்ததாகக் கருதப்படுகிறது. இங்கிலாந்தில் பொதுத்துறைத் தொழில்கள் பொதுக் கூட்டுரு முறையில் அமைக்கப்பட்டுள்ளன. தென்கிழக்காசிய நாடுகளில், கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை புகழ் பெற்று விளங்குகின்றது. வேறு சில நாடுகளில் துறைவழி நிருவாக அமைப்பு முறையில் அடிப்படைத் தொழில்கள் அமைக்கப்படுகின்றன. எனவே, மற்ற நாடுகளைப் பார்த்து அதுபோன்ற அமைப்பு முறையைத் தேர்ந்தெடுத்தல் என்பது குழப்பத்தையே விளைவிக்கும்.

அமைப்பு முறையைத் தேர்ந்தெடுக்க உதவும் கருத்துக்கள்

பொதுத்துறைத் தொழிலமைப்பு திறமையுடன் நடைபெற, சிறந்ததோர் அமைப்பு முறை மிகவும் அவசியம் என்ற கருத்து

மறுக்க முடியாத உண்மையாகும். எனவே தொழிலமைப்பின் வெற்றியே சரியான அமைப்பு முறையைத் தெரிந்தெடுத்தலில் தான் அடங்கியுள்ளது என்ருல் அது மிகையாகாது. ஏற்றதோர் அமைப்பு முறையைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, பின்வருபவை களில் கவனம் செலுத்தவேண்டும்.

(1) தொழிலமைப்பின் தன்மை

(2) பொருளாதார முக்கியத்துவம்

(3) நாட்டின் ஜனநாயக மரபுகள்

(4) குறிப்பிட்ட தொழிலமைப்பின் மூலமாக ஏற்படக் கூடிய சமுதாயப் பொறுப்புகள்

(5) அரசின் நிருவாகத் திறமை மற்றும் பிற வசதிகள்

மேற்கண்ட கருத்துக்களை நன்கு ஆராய்வதன் மூலமாகக் குறிப்பிட்ட பொதுத்துறைத் தொழிலுக்கேற்றதோர் அமைப்பு முறையைத் தேர்ந்தெடுக்கலாம். ஆனுல் நமது நாட்டில் இவ்வாறு தேர்ந்தெடுப்பதிலும் பல பிரச்சினைகள் உள்ளன. இதற்கு முக்கியக் காரணம் போதிய தொழில் நிருவாக அனுபவ மின்மையேயாகும்.

தனியார்துறைத் தொழிலமைப்புகளைப் போன்றே பொதுத் துறைத் தொழிலமைப்புகளும் திறமையுடனும், இலாபத்துடனும் நடைபெற முடியும் என்ற கருத்தை அரசு நிரூபிக்கவேண்டும். விரைவான முடிவுகள், நெகிழுந்தன்மையுடைய கொள்கைகள், நவீனத் திட்டங்கள், சமுதாய நீதி, பொறுப்புடைமை போன்ற வைகள் பொதுத்துறையின் திறமையை நிர்ணயிக்கும் சோதனை களாகும். குறிப்பிட்ட தொழிலின் தன்மைகளைக் கருத்தில் கொண்டு, மேற்கண்ட அனைத்துச் சோதனைகளிலும் வெற்றி பெறக்கூடிய அமைப்பு முறையே சிறந்த முறையென முடிவு செய்யப்படலாம்.

மூன்றுவித அமைப்பு முறைகளையும் பின்பற்றி, ஒவ்வொரு முறையிலும் ஏற்படும் நன்மைகள், குறைபாடுகளை ஆராய்ந்து, பிறகு, இறுதியாக சிறந்ததோர் அமைப்பு முறையை எல்லா விதமான பொதுத்துறைத் தொழில்களுக்கும் பொதுவான தோர் அமைப்பு முறையாகவும் கொள்ளலாம்.

இந்திய அரசு பலவகைப்பட்ட பொதுத்துறைத் தொழில் களை மேற்கண்ட மூன்று விதமான அமைப்பு முறைகளிலும்

அமைக்க முயற்சிகளை மேற்கொண்டது. தன்னுடைய தொழிற் கொள்கையில், அனைத்துப் பொதுத்துறைத் தொழில்களும் பொதுக் கூட்டுரு முறையில்தான் அமைக்கப்படுமென அரசு அறிவித்தது. '1960ஆம் ஆண்டு மதிப்பீட்டுக் குழு'வும் (Estimates Committee-1960) பொதுத்துறைத் தொழில்களைப் பொதுக் கூட்டுரு முறையில்தான் அமைக்கவேண்டுமென வலியுறுத்தியது. மேலும், அக்குழு பின்வரும் தன்மைகளைக் கொண்ட பொதுத்துறைத் தொழில்களை மட்டும், வேண்டுமானால் 'கூட்டுப் பங்கு நிறும முறை'யில் அமைக்கலாம் என்ற கருத்தையும் தெரிவித்தது.

கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறைக்குகந்த தொழில்கள்

(1) செயற்பட்டுக்கொண்டிருக்கும் தனியார் துறைத் தொழிலமைப்பொன்றை அரசு மேற்கொள்ளும்போது கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை மிகவும் ஏற்றதாகும்.

(2) தனியார்துறை முதலீட்டுடன், அரசும் இணைந்து ஒரு தொழிலமைப்பை ஏற்படுத்தும்போது இம்முறையைப் பின்பற்றலாம்.

(3) பிற்காலத்தில் தனியார்துறைக்கு மாற்றும் எண்ணத்துடன், அரசு ஒரு தொழிலை அமைக்கும்போதும் இம்முறை மிகவும் சிறந்ததாகும்.

ஆனால், 'மதிப்பீட்டுக் குழு'வின் கருத்தை அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. பொதுக் கூட்டுரு அமைப்பு முறையைவிடக் கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையே பல வழிகளிலும் சிறந்ததென அரசு கருதியது. இதன் காரணமாக, நம் நாட்டில் பெரும்பான்மையான பொதுத்துறைத் தொழில்கள் கூட்டுப் பங்கு நிறும முறையில்தான் அமைக்கப்பட்டன. எடுத்துக்காட்டாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில், நம் நாட்டில் மொத்தம் 70 பொதுத்துறைத் தொழிலமைப்புகள் செயற்பட்டு வந்தன. அவைகளில் 64 தொழிலமைப்புகள் கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையில் தோற்றுவிக்கப்பட்டவைகளாகும். மற்ற 6 தொழிலமைப்புகள் மட்டும்தான் பொதுக் கூட்டுரு முறையிலும், துறைவழி நிருவாக முறையிலும் அமைக்கப்பட்டிருந்தன. இது போன்றே, 1975ஆம் ஆண்டு புள்ளி விவரங்களின்படி, பின்வருமாறு நம் பொதுத்துறைத் தொழில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

துறைவழி நிருவாக அமைப்பு முறையில் செயற்பட்டுவரும் தொழில்கள்.	... 31
பொதுக் கூட்டுரு முறையில் அமைக்கப் பட்டுள்ள தொழில்கள்.	... 27
கூட்டுப் பங்கு நிறும முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ளவை.	... 140
கூடுதல் :	... 198

மேற்கண்ட விவரங்களிலிருந்து நம் நாட்டில் மற்ற அமைப்பு முறைகளைவிட, கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையே விரும்பப்படுகின்றது என்பது தெளிவாகின்றது.

நம் நாட்டில் கூட்டுப் பங்கு நிறும முறையின் முக்கியத்துவம்

இந்திய அரசு, பல்வேறு காரணங்களால் கூட்டுப் பங்கு நிறும முறையே எளிமையானதென்றும், நன்மை பயக்கக்கூடிய தென்றும் முடிவுசெய்தது. அரசு, இம்முறையின் முக்கிய நன்மைகளெனக் கீழ்க்கண்டவற்றைக் கருதியது:

(1) தொழிலமைப்பின் வெற்றிகரமான செயல்முறைக்குத் தேவையான நெகிழுந்தன்மையும், தன்னுட்சியுரிமையும் போதிய அளவில் இம்முறையில் உள்ளன. மேலும், அரசு நிறுமங்கள் நாடாளுமன்றத்தின் அதிகாரத்திற்குட்பட்டு செயற்படுகின்றன வாகையால் சிறந்த கட்டுப்பாடு நிலவுகிறது.

(2) தனியார்துறையின் தொழிலனுபவங்களையும், தொழில் நுட்பங்களையும் பெறமுடிகிறது.

(3) அயல்நாட்டுத் தனியார்துறை நிறுவனங்களுடன், நமது நாட்டுப் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இணைந்து செயற்பட முடிகிறது. இதன்மூலம் மேம்பட்ட அயல்நாட்டுத் தொழிலறிவைப் பெறமுடிகிறது.

எனவே, மற்றவகை அமைப்பு முறைகளைவிட, கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை பல நன்மைகளை விளைவிக்கும் என்று திட்டவட்டமாகக் கூறலாம். அதே நேரத்தில், அனைத்துத் தொழில்களையுமே இம்முறையில் அமைத்துவிட முடியுமெனக் கருதுவதும் தவறாகும். சில குறிப்பிட்டவகைத் தொழிலமைப்புகளுக்கு இம்முறையைவிடப் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையோ அல்லது துறைவழி நிருவாக அமைப்பு முறையோ சிறந்ததாக விளங்கும். ஆகவே, சிறந்ததோர் அமைப்பு முறையைத் தேர்ந்தெடுக்கும்பொழுது, அக்குறிப்பிட்ட

பொதுத்துறைத் தொழிலின் தன்மை, உற்பத்தித் திறன், செயல்முறைத் தேவைகள், நிதித் தேவைகள், தொழில் நுட்பம், தொழிற்கொள்கை போன்றவற்றைக் கருத்திற்கொள்ள வேண்டும். இக்கருத்தையே ஏ. டி. கோர்வாலா (A. D. Gorwala) பின்வருமாறு கூறுகின்றார்: "நீர்ப்பாசனம், அனல் மின் திட்டம், போக்குவரத்து போன்ற அரசுப்பணிகளை விரிவுபடுத்தும் தன்மையுள்ள பொதுத்துறைத் தொழில்களைப் பொதுக் கூட்டுரு முறையிலும், வாணிகக் கொள்கைகளுடன் செயற்படும் மற்ற தொழில்களை அரசு நிறும முறையிலும் அமைக்க வேண்டும்."

நிருவாக மறுசீரமைப்புக் குழு (The Administrative Reforms Commission)

ஆட்சி சீரமைப்பு ஆணைக்குழுவால், 'பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மீதான ஆய்வுக் குழுமம்' (A Study Team On Public Sector Undertakings) என்றவொரு குழுமம் தோற்றுவிக்கப் பட்டது. 1967ஆம் ஆண்டில் இக்குழுமம் தன்னுடைய அறிக்கையினைச் சமர்ப்பித்தது. இவ்வறிக்கையில் கூறப்பட்ட கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு, 'ஆட்சி சீரமைப்புக் குழு', பொதுத் துறைத் தொழில்களை ஐந்து தொகுதிகளாகப் பிரித்தது. பிறகு ஒவ்வொரு தொகுதிக்கும் ஏற்ற அமைப்பு முறையைப் பரிந்துரைத்தது. அவைகளைப் பின்வருமாறு பாகுபடுத்தலாம்:

வரிசை எண்	தொகுதி	ஏற்ற அமைப்பு முறை
(1)	உற்பத்தித் தொழில்கள்	பொதுக் கூட்டுரு
(2)	பொதுப்பயன் நிறுவனங்கள் (Public Utilities)	பொதுக் கூட்டுரு
(3)	முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியுறும் தொழில்கள்	துறைவழி நிருவாக முறை (அல்லது) பொதுக் கூட்டுரு
(4)	வாணிகத் தொழில்கள்	கூட்டுப் பங்கு நிறுமம்
(5)	நிதி நிறுவனங்கள்	பொதுக் கூட்டுரு

மேற்கண்ட அமைப்பு முறைகளைத் தவிர, 'துறைக் கூட்டுரு' (Sector Corporation) என்றவொரு புதிய அமைப்பு முறையையும்

'ஆட்சி மறுசீரமைப்பு ஆணைக்குழு' பரிந்துரைத்தது. தனித் தனியாக உற்பத்தித் தொழில்களைப் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் தோற்றுவிப்பதைவிட, ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள அனைத்து உற்பத்தித் தொழில்களையும் ஒன்றாக இணைத்து, 'துறைக் கூட்டுரு' என்ற ஓர் அமைப்பின்கீழ் ஏற்படுத்தலாமென்பதே இக்குழுவின் முடிவான கருத்தாகும். இதன் மூலம், அரசின் தேவையில்லா செலவுகள் குறைகின்றன. மேலும், பொதுவான செயல்முறை வழிமுறைகளால், பேரளவு உற்பத்தியின் நன்மைகளையும், ஆராய்ச்சிப் பயன்களையும், விற்பனை வளர்ச்சியையும் அடையலாம். எளிதான ஒத்துழைப்பும், சிறந்த கட்டுப்பாடும்கூட ஏற்பட வாய்ப்புண்டு.

ஆனால், அரசு மேற்கண்ட பரிந்துரைகளை முழுதும் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், முதலில் ஒரு சில சந்தர்ப்பங்களில் மட்டும்தான் 'துறைக் கூட்டுரு' நன்மைகளை நல்கும். இரண்டாவதாக, பொதுப்பயன் நிறுவனங்கள் போன்ற நாட்டின் உள் அமைப்பை மேம்படுத்துதவும் ஒரு சில தொழில்களுக்கு மட்டும் தான் பொதுக் கூட்டுரு முறை ஏற்றதென அரசு கருதியது.

மூன்றாவதாக, வாணிகக் கொள்கைகளுடன் பணிபுரியும் தொழில்களுக்கு, கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையே மிகவும் சிறந்ததென அரசு முடிவு செய்தது.

இவ்வாறு, நம் நாட்டில் கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையில் பொதுத்துறைத் தொழில்களை அமைத்திட அரசு மிக்க ஆர்வத்துடன் செயற்பட்டு வருகிறது. பொதுப்பயன் நிறுவனங்கள் போன்ற நாட்டு நலனைக் காக்கும் ஒரு சில தொழில்கள் மட்டும்தான் பொதுக் கூட்டுரு முறையில் தோற்றுவிக்கப்படுகின்றன. இதற்கென நாடாளுமன்றத்தில்தனிச் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. போர்த்தளவாட உற்பத்தித் தொழில் போன்ற மிகச் சில நிறுவனங்கள்தான், துறைவழி நிருவாக முறையில் அமைக்கப்படுகின்றன.

'ஆட்சி மறுசீரமைப்புக் குழு'வின் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மீதான அறிக்கையில் கொடுக்கப்பட்டிருக்கும் பின்வரும் புள்ளி விவரங்களை நோக்கினுல், நமது நாட்டில் பொதுத்துறைத் தொழில்கள் அமைக்கப்பட்டிருக்கும் விவரங்களை அறியலாம். (1967ஆம் ஆண்டில் இருந்தபடி)

(Classification of Public Enterprises as at the end of 1966-67)

	தொழிலமைப்பின் தன்மை (Nature of Undertaking)	அரசு நிறுமம் (Govt. Company)	பொதுக் கூட்டுரு (Pulbic Corporation)	கூடுதல் (Total)
(1)	உற்பத்தித் தொழில்கள்	45	—	45
(2)	பொதுப்பயன் மற்றும் பொதுப்பணி நிறுவனங்கள்	4	2	6
(3)	முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியுறும் தொழில்கள்	5	2	7
(4)	வாணிகத் தொழில்கள்	14	1	15
(5)	நிதி நிறுவனங்கள்	2	1	3
	கூடுதல்	70	6	76

(Source: Administrative Reforms Commission : Report on Public Sector Undertakings, 1967)

தற்சமயம் நமது நாட்டில் ஒவ்வொரு அமைப்பு முறையிலும் பொதுத்துறைத் தொழில்கள் அமைக்கப்பட்டு செயற்படுவதைப் பின்வரும் அட்டவணையிலிருந்து அறியலாம் :

(Classification of Public Enterprises as on December, 1975)

	அமைப்பு முறை	தொழிலமைப்புகளின் எண்ணிக்கை
(1)	துறைவழி நிருவாக முறையில்	31
(2)	பொதுக் கூட்டுரு முறையில்	27
(3)	கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறையில் (அரசு நிறுமங்கள்)	140
	கூடுதல் (Total)	198

இறுதியாக, இப்பகுதியை முடிக்குமுன், மூன்றுவகையான அமைப்பு முறைகளையும் ஒப்பிடுதல் மூலம், அவைகளின் முக்கியச் சிறப்பியல்புகளை, கருத்துக்கோப்பாகக் கீழ்க் கண்டவாறு காணலாம் :

அமைப்புகளை ஒப்பிட்டு நோக்குதல் (Comparitive View of Forms of Public Enterprise Organisation)

காரணிகள் (Factors)	அமைப்பு முறைகள் (Forms of Organisation)		
	துறைவழி நிருவாக முறை	பொதுக் கூட்டுரு முறை	கூட்டுப் பங்கு நிறும முறை (அரசு நிறுமங்கள்)
(1) தோற்றுவிப்பு (Establishment)	அமைச்சகத்தின் ஆணை மூலம்	நாடாளுமன்றத்தில் தனிச்சட்டம் இயற்றப் படுதல் மூலம்	அமைச்சகத்தின் ஆணை மூலம் (தனி யார்துறையின் பங்குடனே அல்லது இல்லாமலோ)
(2) சட்ட தகுநிலை (Legal Status)	தனிச்சட்ட தகுநிலை இல்லை-அரசின் ஒரு துறை யாகச் செயற்படுகின்றது.	தனிச்சட்ட அமைப்பு-வழக்குத் தொடுக்கவும், தொடுக்கப்படவும் இயலும்.	தனிச்சட்ட தகுநிலை உண்டு.
(3) மூலதனம்	அரசின் பொது வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது.	முழுத் தொகையும் அரசினால் வழங்கப்படுகின்றது.	மூலதனத்தின் ஒரு பகுதியைத் தனி யார்துறைத் தொழில் முயல்வோர் வழங்கலாம்.
(4) மேலாண்மை	அமைச்சகத்தின் அதிகாரிகள் மூலம்	இயக்குநரவை மூலம்	இயக்குநரவை மூலம் - தனியார் துறைப் பங்குதாரர்களும் அவையில் இடம் பெறலாம்.
(5) கட்டுப்பாடும், பொறுப்பாண்மையும்	அதிகாரம் குறிப்பிட்ட அமைச்சரிடமும், அமைச்சகத்திடமும் குவிந்திருக்கிறது.	நாடாளுமன்றம் அதிகாரங்களைப் பெற்றுள்ளது	அரசு அதிகாரத்திற்குட்பட்டது. (குறிப்பிட்ட அமைச்சகம்)

தொடர்ச்சி : (அமைப்புகளை ஒப்பிட்டு நோக்குதல்)

(6) அலுவலர்களும், பணி நிலையும்.	அரசு அலுவலர்கள் — குடிமுறைப்பணி விதித் தொகுப்பு (Civil Service Code).	அரசு அலுவலர்களல்ல-ஒப்பந்தப் பணி முறை.	அரசு அலுவலர்களல்ல - ஒப்பந்தப் பணி முறை.
(7) செயல் முறை நிதி, மற்றும் கடன் பெறும் அதிகாரம்.	வரவு-செலவுத் திட்டத்தில் செய்யப்படும் ஒதுக்கீடு மட்டும்தான் — கடன் பெறும் அதிகாரமில்லை.	சுயநிதி ஏற்பாடுகள் — கடன் பெறும் அதிகாரம் உண்டு.	சுயநிதி ஏற்பாடுகள்—கடன் பெறும் அதிகாரமுண்டு.
(8) தன்னாட்சி யுரிமை.	— இல்லை —	கணிசமான அளவில் உள்ளது. அன்றாடப்பணிகளில் அரசு குறுக்கீடு இல்லை.	அரசு குறுக்கீடுகளிலிருந்து ஓரளவு சுதந்திரம் உண்டு.
(9) நெகிழுந் தன்மை.	குறிப்பிட்ட அளவில்தான் உண்டு.	மிகுதியான அளவில் உள்ளது.	போதுமான அளவில் உள்ளது.
(10) உகந்த தன்மை (Suitability).	பாதுகாப்பு மற்றும் பொதுப்பயன், பொதுப் பணி நிறுவனங்கள்	உற்பத்தி மற்றும் வாணிகத் தொழிலமைப்புகள் - (நிதி நிறுவனங்கள் உட்பட).	அயல்நாடு அல்லது உள்நாட்டுத் தனியார் துறையுடன் இணைந்து செயற்படும் உற்பத்தி மற்றும் வாணிகத் தொழிலமைப்புகள்.

4. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நிதி ஆட்சி முறை

(Financial Management in Public Enterprises)

இதுகாறும், பொதுத்துறைத் தொழில்களின் அமைப்பு முறைகளைப் பற்றி விரிவாகக் கண்டோம். ஒரு தொழிலை எவ்வமைப்பு முறையில் ஏற்படுத்தவேண்டும் என முடிவு செய்த பிறகு, அத்தொழிலுக்குத் தேவையான நிதித்தேவைகளைக் கணக்கிட்டு, போதிய நிதி வசதிகளுக்கு வகை செய்யவேண்டும். நிதி முன்கணிப்பு (Financial Forecast) செம்மையாக அமையாவிடில், நிதிப் பற்றுக்குறை அல்லது தேவைக்கதிகமான நிதி போன்ற செயல்முறை இடையூறுகள் ஏற்பட்டு தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும். அடுத்து, தேவைப்படும் நிதியைப் பெறுவதற்கான வழிமுறைகளையும் திட்டமிடுதல் வேண்டும். இத்திட்டத்தில் ஏதேனும் குறையிருந்தால் அது அத்தொழிலை வெகுவாகப் பாதிக்கும். எனவே, வெற்றிகரமான செயல் முறைக்குச் சிறப்பான 'நிதித்திட்டம்' மிக அவசியமென்பது தெளிவாகின்றது.

நிதித்திட்டமென்பதன் பொருள்

துவக்கப்படவேண்டிய தொழிலமைப்பிற்குத் தேவையான நிதிவசதிகளைக் கணக்கிட்டு, வரைதிட்டமிடுதலே 'நிதித்திட்டம்' எனப்படும். அவ்வாறு திட்டமிடும்பொழுது, நிதித்தொடர்புள்ள பல முக்கியக் கருத்துக்களை நினைவில் கொள்ளவேண்டும். முதலாவதாக, தொழிலமைப்பின் திட்டங்களைச் செயற்படுத்தத் தேவைப்படும் மூலதனம் எவ்வளவு எனக் கணக்கிடவேண்டும். இதில் தோற்றுவிப்புச் செலவுகள், அமைப்புச் செலவுகள், சொத்துக்களின் மதிப்பு, செயல்முறைச் செலவு முதலியவை களடங்கும். இரண்டாவதாக, இம்மூலதனத்தைப் பெறுவதற்கான வழிமுறைகளை முடிவுசெய்ய வேண்டும். எந்த விகிதத்தில் பங்குகளையும் கடன் பத்திரங்களையும் வெளியிடவேண்டும் என்பனபோன்ற கருத்துக்கள் ஆராயப்பட வேண்டும். மூன்றாவதாக, தேவையான மூலதனத்தைப் பெற்ற பிறகு, அம்

மூலதனத்தை நிருவகிக்கும் முறைபற்றி முடிவு செய்யப்பட வேண்டும். எத்தருணத்தில் கடன் பத்திரங்களை வெளியிடலாம் போன்ற முடிவுகள் இதில் இடம் பெறும். சுருங்கக் கூறுவோமானல், 'நிதித்திட்டத்' திற்குக் கீழ்க்கண்ட அம்சங்கள் மிகவும் முக்கியமானவை :

(1) தேவைப்படும் மூலதனத்தைக் கணக்கிடுதல்.

(2) வெளியிடப்படவேண்டிய பங்குகளையும், கடன் பத்திரங் களையும் பற்றி முடிவு செய்தல்.

(3) மூலதன நிருவாகத்திற்கேற்ற கொள்கைகளை உருவாக்குதல்.

ஒரு தொழிலமைப்பின் வெற்றியில், மேற்கண்ட நிதித் திட்டம் பெரும் பங்கு வகிக்கின்றது என்றால் அது மிகையாகாது. ஆனல், இந்நிதித்திட்டம், தேவைப்படும்பொழுது விரிவுபடுத்தப் படக்கூடியதாக, நெகிழுந்தன்மையையுடையதாயிருத்தல் நன்று. மேலும், தொழிலின் அமைப்பு முறைக்கேற்ப நிதி அமைப்பு முறையும் மாறுபடும். குறிப்பாக, பொதுத்துறைத் தொழி லமைப்புகளுக்கு இக்கருத்து முற்றிலும் பொருந்தும். துறைவழி நிருவாக அமைப்பு முறையில் தோற்றுவிக்கப்பட்ட பொதுத் துறைத் தொழிலமைப்புகளின் நிதித்தேவைகள், குறிப்பிட்ட அமைச்சகத்தின் மூலம் ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இவ் வகைத் தொழிலமைப்புகள், வரவு–செலவுத் திட்டக் கணக்கை மட்டும் தயாரிக்கின்றன. இருப்பு நிலைக்குறிப்பு தயாரிக்கப் படுவதில்லை. அன்றாட அலுவல்களில் அரசின் குறுக்கீடு அதிக அளவில் உள்ளது. அடுத்ததாக, பொதுக் கூட்டுரு முறையிலும், கூட்டுப் பங்கு நிறுமை முறையிலும் அமைக்கப்பட்டுள்ள தொழி லமைப்புகள் கணிசமான அளவில் தன்னாட்சியுரிமையைப் பெற்றுள்ளன. அன்றாட நிதி நடவடிக்கைகளில் முழுமையான சுதந்திரத்தை அனுபவிக்கின்றன. அரசின் அனுமதியுடன் பங்குகள் வெளியிடவும், கடன் பத்திரங்களை வழங்கவும், மற்ற முறைகளில் கடன் பெறவும் இயக்குநரவை அதிகாரம் பெற்றுள்ளது. பல நேரங்களில் அனுமதிக்கப்பட்ட வரம்பையும் கடந்து மூலதனச் செலவுகளையும், நிதி ஒப்பந்தங்களையும் இயக்குநரவை மேற்கொள்கின்றது.

நிதிபெறும் வழிகள் (Sources of Finance)

பொதுத்துறைத் தொழில்களின் நிதிபெறும் வழிகளாவன :

(1) அரசின் நிதி ஒதுக்கீடுகள்.

(2) வங்கிகளிடமிருந்தும், மற்ற நிதி நிறுவனங்களிட மிருந்தும் பெறப்படும் கடன்கள்.

(3) இலாபத்தை மீண்டும் முதலீடு செய்தல்.

அரசின் நிதி ஒதுக்கீடுகள்தான் பெரும்பான்மையான பொதுத்துறைத் தொழில்களுக்கு முக்கிய ஆதாரமாக விளங்கு கின்றன. பின்வரும் முறைகளில், அரசு நிதி ஒதுக்கீடுகளை ஏற்படுத்தி, பொதுத்துறைத் தொழில்களுக்குக் கிடைக்குமாறு செய்கிறது.

(1) நேரடி மானியமாக வழங்கப்படுதல் (Outright Grant).

(2) பங்குகள் வெளியிடுவதன் மூலம் நிதியுதவி.

(3) வட்டியுடன் திருப்பிச் செலுத்தவேண்டிய கடனுதவி.

(4) வட்டியுடன் கூடிய ஆனல் திருப்பிச் செலுத்தத் தேவை யில்லாதக் கடனுதவி.

(5) வட்டியில்லாத ஆனல் திருப்பிச்செலுத்தவேண்டியகடன்.

மேற்கண்ட முறைகளைத் தனித்தனியாக ஆராய்ந்தால் ஒவ்வொன்றின் சிறப்பியல்புகளையும், நன்மை, தீமைகளையும் முழுவதும் அறியலாம்.

முதலாவதாகக் கூறப்படும் நேரடி மானிய முறை சிறந்த தொரு முறையன்று. ஏனெனில், அது நிருவாகத் திறமையின்மை யையும், பொறுப்பின்மையையும் தோற்றுவிக்கும். மேலும், இவ் வகை நிதித் திட்டத்தில், தொழிலின் இலாபமனைத்தும் அரசுக்கே செல்லுகின்றது. முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், தொழிலை விரிவுபடுத்தவும்கூட இலாபத்தைத் திரும்பவும் முதலீடு செய்யும் அதிகாரம் அளிக்கப்படவில்லை. இது நடைமுறையில் ஆர்வமின்மையைத் தோற்றுவிக்கின்றது.

இரண்டாவதாகக் கூறப்படும் முறையில், பங்குகளை விற்பதன் மூலம் மூலதனம் திரட்டப்படுகின்றது. இது ஓரளவு சிறந்த முறை எனக் கூறலாம். நமது நாட்டில் பொதுத்துறை யில் பெரும்பான்மையான உற்பத்தித் தொழில்கள், கூட்டுப் பங்கு நிறும முறையிலமைக்கப்பட்டு, பங்குகள் வெளியிடும் உரிமையைப் பெற்றுள்ளன. அனைத்துப் பங்குகளையுமோ அல்லது அதிகப்படியான பங்குகளையோ அரசு பெற்றுக் கொள்கிறது.

அடுத்துவரும் மூன்று முறைகளிலும், வட்டியுடனே அல்லது வட்டியில்லாமலோ திருப்பிச் செலுத்தவேண்டிய அல்லது

திரும்பவும் செலுத்தத் தேவையில்லாக் கடன்களைப் பெறுதல் செயற்படுத்தப்படுகின்றது. இவற்றில் நன்மைகளுமுண்டு, குறைபாடுகளுமுண்டு. மூலதனத்தின் ஒரு பகுதியை, கடனைப் பெறுவதாலும், அக்கடன் தொகைக்கு வட்டி செலுத்தப்பட வேண்டியிருப்பதாலும், மூலதனத்தின் முக்கியத்துவம் உணரப் பட்டுசெலவுகளில் சிக்கனம் கடைப்பிடிக்கப்படும். மேலும், வட்டித் தொகை அரசின் கருவூலத்தில் செலுத்தப்படுவதால் மற்ற அரசின் ஆக்கப்பணிகளுக்குப் பெரிதும் பயன்படுகின்றது.

பல சந்தர்ப்பங்களில், இலாப விகிதம் குறைவாகவுள்ள பொதுத்துறைத் தொழில்களுக்கு அரசு, வட்டித் தொகையை முழுவதுமோ அல்லது ஒரு பகுதியையோ தள்ளுபடி செய்து விடுகின்றது. தொழிலமைப்புகள் இவ்வுதவியைக் காலத்தினாற் செய்த உதவியாகப் போற்றுகின்றன. ஆனால் கடன் பெறுதல் மூலம், மூலதனத்தின் ஒரு பகுதியைத் திரட்டுதல் பல குறைபாடு களையும் கொண்டுள்ளது. பெரும்பான்மையான நேரங்களில், இலாபம் ஈட்டப்படுகின்றதோ இல்லையோ, வட்டித் தொகையைக் குறிப்பிட்ட தொழிலமைப்பு தவறாமல் செலுத்திவிடவேண்டும். இதனால் நிதித்தட்டுப்பாடும், நிதி நிருவாகப் பளுவும் அதிகரிக் கின்றன.

இருந்தபோதிலும், பொதுத்துறையில் தொழிலொன்றை விரிவுபடுத்தவோ அல்லது புதிய திட்டங்களை நிருமாணிக்கவோ தேவைப்படும் நிதி, கடன் பெறுதல் மூலம்தான் திரட்டப்படு கின்றது. பெரும்பான்மையான பொதுத்துறைத் தொழில்களின் மூலதனத்தின் ஒரு பகுதி பங்கு வெளியிடல் மூலமும், எஞ்சி யுள்ள பகுதி கடன் பத்திரங்கள் வழங்கப்படுதல் மூலமும்தான் பெறப்படுகின்றன. மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு முன் வரை, பொதுத்துறைத் தொழிலமைப்பின் மூலதனத்தில், பங்கு-கடன் எவ் விகிதத்தில் இருக்கவேண்டும் என்பது பற்றி விரிவான கொள்கைகள் ஏதும் பின்பற்றப்படவில்லை. 1961ஆம் ஆண்டில், இந்திய அரசு பங்கு-கடன் விகிதம் பற்றி ஒரு சிறந்த கொள்கையை ஏற்படுத்தியது. அதாவது, பொதுத்துறைத் தொழில்களின் மூலதனத்தில் 50% பங்குகளும், எஞ்சியுள்ள பகுதி கடன் தொகையாகவும் அமைந்திடல் வேண்டுமென அறிவிக்கப்பட்டது. அதன்பிறகு ஏறத்தாழ அனைத்துத் தொழிலமைப்புகளும், மூலதனத்தின் 'பங்கு-கடன்' விகிதத்தை, சரிபகுதிகளாக அமைத்திட முயற்சிகள் பலவும் மேற்கொள் கின்றன. எனினும், சில புதிய பொதுத்துறைத் தொழில்களில் இவ் விகிதம் பின்பற்றப்படவில்லை.

மூன்றாவதாக, ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இறுதியில் 74 அரசு நிறுவனங்கள் செயற்பட்டுவந்தன. அவைகளின் மூலதனத் திட்ட விகிதம் கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தது:

பங்கு மூலதனம்.....	ரூ. 1,368	கோடி
நீண்டகாலக் கடன்......	ரூ. 1,047	கோடி
கூடுதல்	ரூ. 2,415	கோடி

ஆனால், அனைத்துப் பொதுத்துறைத் தொழில்களுக்கும் பொதுவான விகிதமாக, பங்கும்-கடனும் 1:1 என்ற அளவில் அமையவேண்டுமெனக் கருதுதல் பொருத்தமானதெனக் கூறுவதற்கில்லை. பொதுத்துறைத் தொழில்கள், அமைப்பு முறையிலும், உற்பத்தித் தன்மையிலும் பெரிதும் வேறுபட்டிருப்பதால் மூலதன விகிதமும் மாறுபடும். எடுத்துக்காட்டாக, 'இந்துஸ்தான் இரும்பாலை' (Hindustan Steel), 'கனரக பொறியமைப்புக் கூட்டுரு' (Heavy Engineering Corporation) முதலிய பொதுத்துறைத் தொழில்களுக்கும், அரசு வாணிகக் கூட்டுரு (State Trading Corporation), இந்தியக் கனிப்பொருள், உலோக வாணிகக் கூட்டுரு (The Minerals and Metals Trading Corporation of India Ltd.) ஆகிய நிறுவனங்களுக்குமிடையே மூலதன விகிதம் பெருமளவில் மாறுபட்டுத்தான் அமையும். எனவே, மூலதனத்தின் பங்கு-கடன் விகிதம் 1:1 என்று நிரந்தரப் பொதுக்கொள்கையாக அமைந்துவிடாமல், நெகிழுந்தன்மையைக் கொண்டதாயிருத்தல் மிகவும் அவசியமானதாகும்.

நடைமுதல் தேவைகள் (Working Capital Requirements)

பொதுத்துறைத் தொழில்களின் நடைமுதல் தேவைகளை 'அரசு மாநில வங்கி'களோ அல்லது அவற்றின் துணை நிறுவனங்களோ, ரொக்கக் கடன்களாக வழங்குகின்றன. சில குறிப்பிட்ட தொழிலமைப்புகளைத் தவிர, மற்ற நிறுவனங்களுக்கு அரசு குறுகியகாலக் கடன்களை அளிப்பதில்லை. இது ஓரளவிற்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய முறையாயிருப்பினும், நடைமுறையில் பல தொழிலமைப்புகள், குறிப்பாக ஆரம்பக் காலங்களில் மேற்கண்ட முறையில் நடைமுதலைப் பெற முடிவதில்லை. எடுத்துக்காட்டாக, 'பாரத கனரக மின்சாதன' நிறுவனம் (Bharat Heavy Electricals) தோற்றுவிக்கப்பட்டபொழுது, அரசின் பொறுப்புறுதி (Guarantee) இன்றி, 'ஸ்டேட் பாங்கி'டமிருந்தோ அல்லது அதன் துணை நிறுவனங்களிடமிருந்தோ நிதி உதவிகளைப் பெறமுடியாமல் பெரிதும் அல்லலுற்றது. எனவே இதுபோன்ற நிறுவனங்களுக்கு அரசு பொறுப்புறுதி அளிக்க முன்வர

வேண்டும். மேலும், போதிய நடைமுதலின்றி அல்லது நடைமுதலைப் பெறவழியில்லாமல் செயற்படும் தொழிலமைப்புகளுக்கு அரசே போதிய நிதி உதவியை வழங்கவேண்டும். இதன் மூலம் உற்பத்தித் தாமதம் அல்லது உற்பத்தி நட்டம் முதலியவைகளை முற்றிலும் தவிர்க்கலாம்.

இப்பொழுது பொதுத்துறைத் தொழிலமைப்புகளனைத்தும், 'ஸ்டேட் பாங்கு'டனோ அல்லது அதன் துணை வங்கிகளுடனோ வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. சில சந்தர்ப்பங்களில், ரூ.10 கோடிக்குமேல் வைப்புகளைப் (Deposits) பெற்றிருக்கும் ஏதாவதொரு வணிக வங்கியிடம் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தங்களுடைய நடப்புக் கணக்கைத் தொடங்கலாம் என அறிவிக்கப்படுகின்றது. மிகச் சமீப காலங்களில் பொதுத்துறையின் வைப்புகளைப் பெற்றுக்கொள்ள ஸ்டேட் பாங்கைப் போலவே, கூட்டுறவு வங்கிகளும் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் நடைமுதலுக்கு அரசை எதிர்நோக்கக் கூடாது என ஒரு கொள்கை வகுக்கப்பட்டிருக்கும்பொழுது, அந்நிறுவனங்கள் ஸ்டேட் பாங்கிடம் அல்லது கூட்டுறவு வங்கிகளிடம் மட்டும்தான் வைப்புகளைச் செலுத்தவேண்டுமெனக் கூறுதல் பொருளற்றதாகிவிடுகின்றது. ஏனெனில், சில இடங்களில் மற்ற வங்கிகள் பொதுத்துறை நிறுவனங்களுக்கு சிறந்த நிதி உதவிகளையும், பணிகளையும் வழங்க முன்வந்தும், அரசின் கட்டுப்பாட்டால் அந்நிறுவனங்கள் அப் பயன்களைப் பெற முடிவதில்லை. எனவே, ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல் வைப்புகளைப் பெற்றிருக்கும் எந்த ஒரு பட்டியலிலிடப்பட்ட (Scheduled Bank) வங்கியிடமும் நடப்புக் கணக்கைத் தொடங்க பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு அனுமதி வழங்கப்படவேண்டும். மேலும், அவ்வங்கிகளிடமிருந்து ரொக்கக் கடன்களைப் பெற்று, நடைமுதலைத் திரட்டும் உரிமையும் நிறுவனங்களுக்கு அளிக்கப்படவேண்டும். தேவையானால், இந் நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களனைத்தையும் தொழிலமைப்புகள் அரசுக்கு அனுப்பவேண்டுமென ஓர் ஆணையைப் பிறப்பிக்கலாம்.

பொது முதலீடுகள் (Public Investments)

பொதுத்துறை நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து முதலீடுகளைப் பெறலாமென ஒரு கருத்து கூறப்பட்டது. முதன் முதலில் இக்கருத்து 'மதிப்பீட்டுக் குழு'வின் (Estimate Committee) பதினாறும் அறிக்கையில் கூறப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்களின் மூலதனத்தில் 25% பொதுமக்களிடமிருந்து பெற்றுக்

கொள்ளப்படலாம் எனப் பரிந்துரைக்கப்பட்டது. ஆனால், தனி மனிதன் வாங்கக் கூடிய பங்குகளுக்கு அதிகபட்ச எண்ணிக்கையையும், இலாப ஈவு கொடுப்பதில் அதிகபட்ச அளவையும் நிருணயித்துக் கொள்ளலாம் எனவும் கூறப்பட்டது. இருந்த போதிலும், பொதுத்துறை நிறுவனங்களில் முதலீடு செய்ய பல காரணங்களுக்காக மக்கள் முன்வரத் தயங்குவார்களென அரசு கருதியது. முக்கியமாக, பொதுத்துறையில் இலாப ஈவு குறைவாக அளிக்கப்படுவதால், தனியார் முதலீடுகளைக் கவர முடியாதென அரசு திட்டவட்டமாகக் கூறியது. எனினும் 'மதிப்பீட்டுக்குழு', மீண்டும் தன்னுடைய 19ஆம் அறிக்கையில் திறமையான செயல்முறைகளுக்குப் பொதுத் துறை நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து முதலீடுகளைப் பெறுதல் அவசியமென வலியுறுத்தியது.

இதன் பயனாக, 1960ஆம் ஆண்டில் அதிகாரிகளையும், நிறுமச் சட்ட நிருவாகத்துறை (Department of Company Law Administration) செயலரையும் கொண்ட குழு ஒன்று அரசால் நியமிக்கப்பட்டு, பொது முதலீடுகளைப் பற்றிய விவரங்கள் ஆராயப்பட்டன. பொதுத்துறை நிறுவனங்களில் பொது முதலீடு அமையவேண்டிய விகிதம், பெரும்பான்மையான பங்குகள் ஒரு சிலரிடம் குவியாதிருக்கப் பின்பற்ற வேண்டிய வழி முறைகள், பங்குதாரர்களின் வாக்களிக்கும் உரிமை, இயக்குநரவையில் இடம்பெறும் உரிமை முதலியவைகளைப் பற்றி ஆராய்ந்து பரிந்துரைகளை வழங்குமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது.

1960ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில், தன்னுடைய அறிக்கையை இக்குழு திட்டக் குழுவிடம் (Planning Commission) சமர்ப்பித்தது. இவ்வறிக்கையில், பொதுத்துறை நிறுவனங்கள் பொதுமக்களிடமிருந்து முதலீடுகளைப் பெற அனுமதிக்கப்பட வேண்டுமென்றும், அதன்மூலம் பொதுத்துறையின் மூலதனத்தில் சாதாரணப் பொதுமக்களும் பங்குபெற வாய்ப்பேற்படும் என்றும் பரிந்துரைக்கப்பட்டது. மேலும், குறைவான முதலீடு செய்பவர்களுக்கு வசதியாக ஒரு பங்கின் விலை அதிகபட்சம் ரூ. 100 ஆக நிருணயிக்கப்படவேண்டுமென்றும், பங்குகளை வெளியிடும் முறைகளில் போதிய கவனம் செலுத்தப்படவேண்டு மென்றும் இவ்வறிக்கை எடுத்துரைத்தது. இறுதியாக, பொது முதலீடு முறை இலாபகரமாக நடைபெற்றுவரும் பொதுத் துறைத் தொழிலமைப்புகளில்தான் முதலில் அறிமுகப்படுத்தப் படவேண்டுமென்றும், அப்பொழுதுதான் குறைந்த அளவில்

முதலீடு செய்யும் பொதுமக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் எனவும் இவ்வறிக்கை குறிப்பிட்டது.

கடன் பெறும் அதிகாரங்கள்

இரண்டாம் உலகப் போருக்குமுன், இருப்புப்பாதைப் போக்குவரத்து, மின்சாரத் திட்டங்கள், நீர்ப்பாசன வசதிகள் போன்ற தொழில்களை மேற்கொண்டிருந்த பொதுப்பணி மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் கடன் பெறும் அதிகாரங்களைப் பெற்றிருந்தன. பொதுமக்களிடமிருந்து முதலீடுகளின் வாயிலாகக் கடன் பெறவும், கடனீட்டுப் பத்திரங்களை (Debentures) வெளியிடவும் தன்னாட்சியுரிமை பெற்றிருந்தன. ஆனால், போர் முடிந்தவுடன் இக்கொள்கையில் பெரிதும் மாறுதல்கள் ஏற்பட்டன. அரசு, ஒருங்கிணைந்த மையக் கட்டுப்பாட்டுடன் கூடிய நிதிக் கொள்கைகளை அறிவித்தது. கூடுதல் நிதித் தேவைக்கும், அவசர நிதித் தேவைகளையும், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் அரசுக் கருவூலத்திலிருந்து கடனோ அல்லது மானியமோ அல்லது வணிக வங்கிகள் மற்றும் மைய வங்கி மூலமோதான் பெற முடியும். அரசின் அனுமதியுடன் சில நேரங்களில் மற்ற, நிதி நிறுவனங்களிடமிருந்தும் கடன் பெறலாம்.

கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையில், வரையறுக்கப் பட்ட பொறுப்புடன் செயற்படும் அரசு நிறுமங்களின் கடன் பெறும் அதிகாரங்கள் முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. பொதுவாக ரூ. 2 இலட்சம் வரை அரசின் அனுமதியின்றியும், அதற்குமேல் தேவைப்படின் அரசின் முன் அனுமதியுடனும் கடன் பெறலாம். பல சமயங்களில் இவ்வரசு நிறுமங்கள் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட அனுமதிக்கப்படுவதில்லை. ஆனால், இக்கொள்கை முற்றிலும் தவறானது எனக் கூறலாம். அரசு நிறுமங்கள் கடன் பெறும் அதிகாரங்களைப் பயன்படுத்த இயலாவிடில், தன்னாட்சியுரிமை அளிக்கப்படவில்லை எனத் தெரிகிறது. மேலும், நிறுமத்தின் இயக்குநரவையின்மீது அரசின் நம்பிக்கையின்மையையும் எடுத்துக்காட்டுகிறது. நிதி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த விரும்பும் அரசு, பொதுவான தொரு மூலதன நிருவாகத்தின் மூலம் எளிதில் அடையமுடியும். அதை விடுத்து நிறுவனங்களின் அன்றாட நிதி நடவடிக்கைகளில் அரசு குறுக்கிடுவதால், அவசர நிதித் தேவைகளைப் பெறுவதில் அவசியமில்லாத கால தாமதங்கள் ஏற்படுகின்றன. எனவே அரசு, பொதுத்துறைக்கு நெகிழுந்தன்மையுடன்கூடிய சுதந்திரமான கடன் பெறும் அதிகாரத்தை அளித்தால் எவ்வித

இடையூறுகளையும், இக்கட்டான நிதி நிலைகளையும் வெற்றியுடன் கடந்து தொழில் முன்னேற்றமடைய வாய்ப்பேற்படும்.

மேலும், வெளிச்சந்தையில் பொதுத்துறை நிறுவனங்கள் கடன்பெற அனுமதிக்கப்பட்டால், அவைகளின் கடன்தீர்வுத் திறமை (Solvency), உற்பத்தித்திறன் ஆகியவைகளை அறிய முடியும். தொழிலின் நன்மதிப்பையும், நாணயத் தகைமையையும் சிறந்த முறையில் உருவாக்கவும், மேம்படுத்தவும் முயற்சிகள் பலவற்றை நிறுவனங்கள் மேற்கொள்ள நல்லதொரு சூழ்நிலை அமையும். நடைமுதல் வழங்கப்படுவதால் அரசுக் கருவூலத்திற்கேற்படும் பளுவும் பெருமளவில் குறையும். கூடுதலான நிதிப் பளுவும், அதிகரித்த வட்டித் தொகையும், நிறுவனத்தின் நிருவாகத்தை, சிக்கனத்தையும், திறமையையும் நோக்கி நடத்திச் சென்று அதிக இலாபத்தை ஈட்டிக் கொடுக்கும்.

கட்டுப்பாடுகளுடன் கூடிய கடன்பெறும் அதிகாரங்கள், பல பொதுக் கூட்டுரு மற்றும் துறைவழி நிருவாக அமைப்பு முறைகளில் அமைக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களைப் பெரிதும் பாதித்துள்ளன. அரசின் நிதி உதவி அளிக்கமுடியாநிலை ஒருபுறமிருக்க, தொழிலமைப்புகள் தங்களுக்குத் தேவையான கடனைப் பெறமுடியா நிலை மறுபுறத்தில் ஏற்படுகிறது. இதனால், பொதுத்துறையின் பணிகள் விரிவடையாமல், பொது மக்களின் நலன் பாதிக்கப்படுகிறது. நமது நாட்டில் இருப்புப் பாதைப் போக்குவரத்துத் துறை, தபால் – தந்தித் துறை, மின்சாரத் திட்டங்கள் ஆகியவை செம்மையான முறையில் செயற்பட்டும்கூட, விரிவடையா நிலையிலிருப்பதற்கு இக் கட்டுப்பாடுகளுடன்கூடிய கடன்பெறும் அதிகாரக் கொள்கையே காரணமாகும். நாட்டு மக்களுக்கு இதன் காரணமாக சீரிய பணிகளையும், வசதிகளையும் வழங்க இந்நிறுவனங்களால் முடிவதில்லை.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் கடன்பெறும் அதிகாரங்கள் எப்படி அமையவேண்டும், வரையறுக்கப்படாத அதிகாரங்கள் வழங்கப்படல் வேண்டுமா ஆகிய வினாக்கள் மிகவும் சிக்கலானவை. பொதுத்துறை நிறுவனமொன்று பெறும் கடன், நாட்டின் பணச்சந்தையையும் (Money Market), அரசின் நிதிக்கட்டுப்பாட்டுக் கொள்கையையும் பெருமளவில் பாதிக்கும். எனவே, அரசின் நிதிக்கொள்கைகளைப் பாதிக்கும் வகையில், பொதுத்துறையின் கடன்பெறும் அதிகாரங்கள் வரையறுக்கப் படாமல் அமைந்திருத்தல் கூடாதெனத் தெளிவாகிறது.

நாட்டின் பொதுவான பணக்கொள்கைக்கும், நிதிக்கொள்கைக்கும் ஏற்றவாறு, ஓரளவுக் கட்டுப்பாட்டுடன்கூடிய ஒருங்கிணைந்த கடன்பெறும் அதிகாரங்கள் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்படவேண்டும்.

தேசிய நிதிக் கூட்டுரு (National Finance Corporation)

ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும், நிதிச்சந்தையில் கடன்பெறும் அதிகாரம் வழங்கப்பட்டால் சந்தையின் செயல் முறையில் பலவித இடர்ப்பாடுகள் தோன்றும். எனவே, பொதுத்துறைக்கு நிதி திரட்டும் முறை, திட்டமிட்ட ஒருங்கிணைந்ததாக (Planned and Co-ordinated) அமைதல் வேண்டும். அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும், பொதுவானதொரு முகமை நிறுவனத்தின் (Common Agency) மூலம் நிதி திரட்டினால்தான் மேற்கூறிய ஒருங்கிணைந்த நிதி திரட்டும் முறை சாத்தியமாகும். அம்முகமை நிறுவனம் அயல்நாட்டு உதவிகளையும், மானியங்களையும்கூட பொதுத்துறைக்குப் பெற்றுத் தரக் கூடும். அதற்காக அமைக்கப்பட்டதுதான் 'தேசிய நிதிக் கூட்டுரு' (National Finance Corporation) என்ற நிதி நிறுவனம். இக் கூட்டுரு, அரசுக் கருவூலத்தின் ஒத்துழைப்புடன், பொதுத்துறைக்கும் முதலீட்டார்க்குமிடையே (Investors) பிணைப்புப் பாலமாகப் பணிபுரியும். இதன் முக்கியப் பணிகளைக் கீழ்க்கண்டவாறு முறைப்படுத்தலாம்.

(1) பொதுமக்களிடமிருந்து பலவகைப்பட்ட வைப்புகளைப் பெறுதல்.

(2) முதலீட்டு நிறுவனங்களிடமிருந்தும் வைப்புகளைப் பெறுதல்.

(3) கருவூலத்தின் பொறுப்பு நிதியுடன் கடனீட்டுப் பத்திரங்களை வெளியிட்டு நிதி திரட்டுதல்.

(4) மத்திய அரசின் அனுமதியுடன் அயல்நாட்டு நிதி உதவிகளைப் பெறுதல்.

(5) கடனீட்டுப் பத்திரங்களுக்கு அரசின் பொறுப்பு நிதியைப் பெறுதல்.

(6) பணிகளைச் செவ்வனே நிறைவேற்ற ரிசர்வ் வங்கியிடமிருந்து நிதி உதவிகளைப் பெறுதல்.

மேற்கூறிய முறைகளில் அரசின் அனுமதியுடனும், ஒத்துழைப்புடனும், நிதி திரட்டுதலே இக்கூட்டுருவின் முக்கிய

நோக்கமாகும். இந்நிறுவனத்தின் தொடக்க மூலதனம் அரசால் அளிக்கப்படவேண்டும். இவ்வாறு திரட்டப்பட்ட நிதியை பொதுத் துறைத் தொழிலமைப்புகளுக்கு நியாயமான வட்டி விகிதத்தில் கடனாக அளிக்கும். நிதிப் பற்றுக்குறை ஏதேனும் ஏற்பட்டால் கருவூலம் அதை ஈடு செய்யும். நிறுவனத்தின் செயல்முறை களில் தன்னாட்சியுரிமை கணிசமான அளவில் அமைந்திருக்கும்.

தேசிய நிதிக் கூட்டுருவிடமிருந்து கடன் வசதியைப் பொதுத் துறை நிறுவனங்கள் பெற ஒரு சிறந்த வழிமுறை பின்பற்றப்பட வேண்டும். ஒவ்வொரு நிதியாண்டுத் தொடக்கத்திலும் பொதுத் துறைத் தொழிலமைப்புகள் அனைத்தும் தத்தம் வரவு–செலவுத் திட்டங்களைத் தனித் தனியாகத் தயாரித்து, இக்கூட்டுருவிடம் சமர்ப்பிப்பதன்மூலம் தேவைப்படும் நிதியை முன்கூட்டியே கணக்கிட வாய்ப்பேற்படுத்தலாம். ஆனால், போதிய நிதிவசதி இன்மையின் காரணமாக ஒரு சில பொதுத்துறை நிறுவனங் களுக்கு இக்கூட்டுரு கடன் வசதி அளிக்க இயலாமல் போகலாம். இதைத் தவிர்க்க, ஓர் ‘அறிவுரைக் குழு’வை (Advisory Body) இக்கூட்டுரு ஏற்படுத்தி, பொதுத்துறை நிறுவனங்களின் நிதித் தேவைகளை ஆராய்ந்து உகந்த முடிவுகளை எடுக்கலாம். இதன் மூலம் செயல்முறையில் தோன்றும் முரண்பாடுகளைத் தவிர்க் கலாம்.

வட்டி விகிதம் (Interest Rate)

மற்றுமொரு சிக்கலான பிரச்சினை, பொதுத்துறை நிறுவனங்களிக்கப்படும் கடன்மீதான வட்டி விகிதமாகும். சந்தை விகிதத்தை (Market Rate) விடக் குறைவான வட்டி விகிதத் தில் அரசு கடன் வழங்கும்போது மானியம் தேவைப்படுகின்றது. இது, பொதுத்துறை நிறுவனங்களிடையே திறமையின்மையை ஏற்படுத்துவதுடன், தனியார்துறைக்கும் பொதுத்துறைக்கு மிடையே பாரபட்சத் தன்மையையும் உருவாக்கிவிடுகிறது. எனவே, பல சமயங்களில் அரசு பொதுத்துறை நிறுவனங் களுக்குச் சந்தை வட்டி விகிதத்திலேயே கடன் உதவிகளை அளிக்கின்றது. தேவைப்படும் சந்தர்ப்பங்களில், ஒரு சில பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு அரசு நேரடியாக மானியங்களை வழங்கலாம். வட்டி விகிதத்தில் சலுகை காட்டு வதன்மூலம் மறைமுக மானியம் வழங்கத் தேவையில்லை. தேசிய நிதிக் கூட்டுரு, தான் பெறும் கடன்களின் மீதான வட்டி விகிதத் துடன் ஒன்றுமுதல் ஒன்றரை சதவீதத்தைக் கூட்டி பொதுத் துறைக்கு வழங்கும் கடனுதவிகளுக்கு விதிக்கலாம்.

மேலும், நிலையானதொரு வட்டி விகிதம் பின்பற்றப்பட வேண்டும். அப்பொழுதுதான் நிதிச் சந்தையின் ஏற்ற இறக்கங்களைப்பற்றிக் கவலை கொள்ளாமல், பொதுத்துறை நிறுவனங்கள் முதலீட்டுத் திட்டங்களை வகுக்கமுடியும். எனினும், இந்நிலையான வட்டி விகிதம் குறுகியகால நிலைகளில்தான் பின்பற்றப்பட வேண்டும். நீண்டகால நிலைகளில், முதலீட்டு நிதிகளின் அளிப்பு தேவைகளுக்கேற்ப வட்டி விகிதம் மாற்றப்படலாம்.

அகச் சேமிப்புகளின் மூலம் விரிவுபடுத்துதல் (Expansion with Internal Savings)

அகச் சேமிப்புகளின் மூலம் தொழிலை விரிவுபடுத்துதல், அத் தொழிலமைப்பின் உறுதிவாய்ந்த நிதி அடித்தளத்தையும், திறமையான மேலாண்மையையும் எடுத்துக்காட்டுவதாக அமையும். சேமிப்பு என்றவுடன், தொழிலமைப்பில் இலாபம் ஈட்டப்படுகின்றதென்றும், ஈட்டப்பட்ட இலாபத்தின் ஒரு பகுதி எதிர்காலத் தேவைகளுக்கென ஒதுக்கப்படுகிறதென்றும் முன் கூட்டியே ஊகிக்கலாம். ஆனால், பொதுத்துறையின் இலாபத்தைக் கணக்கிடும் நேரத்தில், கணிசமான அளவில் பொதுத் துறையின் முதலீடுகள் உருவாகிக்கொண்டிருக்கும் தொழில்களிலும் அல்லது வளர்ச்சி மற்றும் முன்னேற்றத் திட்டங்களுக்கான தொழில்களிலும்தான் முடக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் கால இறுதியில் பற்பல பொதுத்துறைத் தொழில்களின் மீதான முதலீடுகள் கீழ்க்கண்டவாறு அமைந்திருந்தன.

	தொழிலமைப்பின் தன்மை	முதலீடு (ரூபாய்-கோடியில்)
(1)	உருவாகிவரும் தொழிலமைப்புகள். (Undertakings Under Construction)	332
(2)	நடைபெற்றுக் கொண்டிருக்கும் தொழிலமைப்புகள்.	1,859
(3)	வளர்ச்சி மற்றும் முன்னேற்றத் திட்ட நிறுவனங்கள்.	217
(4)	நிதி நிறுவனங்கள்	7
	கூடுதல்:	2,415

(Source: Administrative Reforms Commission)

மேலும், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் இலாப விகிதத்தைக் கணிக்கும்பொழுது, அதிக அளவில் முதலீடு

செய்யப்பட்ட தொழில்களையும் நினைவு கூர்தல் வேண்டும். 1965-66-ல் மத்திய அரசு நிறுவனங்களில் முடக்கப்பட்டிருந்த முதலீடுகள், தொழில் வாரியாகப் பின்வருமாறு அமைந்திருந்தது.

	தொழிலின் வகை		முதலீடு (ரூ. கோடியில்)
(1)	இரும்பு	...	981
(2)	பொறியமைப்புத் திட்டங்கள்	...	490
(3)	பெட்ரோல் எண்ணெய்	...	295
(4)	வேதியியல் சார்பான தொழில்கள்	...	220
(5)	சுரங்கம் மற்றும் தாதுப்பொருள்கள்	...	181
(6)	கப்பல் கட்டுதல் மற்றும் வானூர்தி	...	131
(7)	நிதி நிறுவனங்கள்	...	7
(8)	பல்வகைத் தொழில்கள்	...	110

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து பெரும்பான்மையான மூலதன முதலீடுகள், நீண்ட காலத்திற்குப் பிறகு இலாபம் ஈட்டக்கூடிய கனரக உற்பத்தித் தொழில்களில் முதலீடு செய்யப்பட்டிருப்பதை அறியலாம். இவைகளில் சில தொழில்மைப்புகள், நாட்டில் முதன்முறையாகத் தோற்றுவிக்கப்பட்டவையாகும். எனவே, பயிற்சி பெற்ற தொழிலாளர்களோ அல்லது தொழில் நுண்ணறிவோ இப்புதிய தொழிலமைப்புகளை நிருவகிக்க நம்மிடம் இருக்கவில்லை.

தனியார்துறையின் இலாபத்துடன் பொதுத்துறையீட்டிய இலாபத்தை ஒப்பிட்டுப்பார்க்குமுன், வேறு சில கருத்துக்களையும் மனத்திற்கொள்ளவேண்டும். இந்துஸ்தான் இரும்பாலை (Hindustan Steel), இந்திய உர உற்பத்திக் கூட்டுரு (Fertilizer Corporation of India), இந்திய எண்ணெய்க் கூட்டுரு (Indian Oil Corporation) போன்ற பல பேரளவுப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில்தான் மொத்த மூலதனத்தின் கணிசமான தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. எனினும், இந்நிறுவனங்கள் 1965-66-ல் உருவாகிக்கொண்டிருக்கும் நிலையில்தான் இருந்தனவேயன்றி, முழுதும் வளர்ச்சியடைந்து உற்பத்தித் திட்டங்களைச் செயற்படுத்தியிருக்கவில்லை. மேலும், இந்நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களாகிய இரும்பு, உரம், எண்ணெய், நிலக்கரி போன்றவை அத்தியாவசியப் பொருள்களாதலால் அவற்றின் விலைகள் குறைந்த அளவில் அரசால் நிருணயிக்கப்பட்டன. பொதுத்துறைத் தொழில்களின் இலாப விகிதம் குறைந்த அளவிலிருப்பதற்கு இவைகளும் முக்கியக் காரணங்களாய் விளங்குகின்றன.

இருந்தபோதிலும், பொதுத்துறையின் உற்பத்தித்திறனையும் இலாபமீட்டும் திறனையும் மேலும் சிறிது அதிகரிக்கச் செய்ய வாய்ப்புகள் பலவுள்ளன என்பதை மறுக்க முடியாது. பல பொதுத்துறை நிறுவனங்கள் முதலீட்டுச் செலவையும், செயல் முறைச் செலவுகளையும் குறைத்துக் கொள்வதன் மூலம் இலா பத்தை அதிகரிக்கச் செய்யலாம்.

'பொதுத்துறை நிறுவனங்களின்மீதான குழு' (Committee On Public Undertakings) தன்னுடைய எட்டாவது அறிக்கையில், நமது நாட்டு அரசு நிறுவனங்கள் திட்டமிட்டதைவிட, அதிக அளவில் மூலதனச் செலவையும், செயல்முறைச் செலவுகளையும் மேற்கொள்கின்றன எனக் கூறியது. எனவே, இவ்வகைச் செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் பொருள்களின் அடக்கவிலையைக் குறைத்து அதிக இலாபத்திற்கு வழிவகுக்கலாம்.

பொதுத்துறை நிறுவனங்கள் எதிர்காலத் தேவைகளுக்காக ஏற்படுத்தும் சேமிப்புகளின் அளவு, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அரசின் கொள்கைகளைச் சார்ந்துள்ளது. இதன் தொடர்பாக, நமது அரசின் கொள்கை நிறுவனங்களுக்குப் பரிவிரக்கம் காட்டக்கூடியதாகவோ அல்லது உதவிபுரியக் கூடியதாகவோ அமைந்திருக்கவில்லை என்பதை வருத்தத்துடன் இங்கு நினைவுகூர வேண்டும். குறிப்பாகத் துறைவழி நிருவாக முறையிலமைக்கப்பட்ட நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. முதலாவதாக, அந்நிறுவனங்கள் ஈட்டும் இலாபமனைத்தையும் அரசே பெற்றுக்கொண்டதால் சேமிப்பதற்கு வாய்ப்பு இல்லை. இரண்டாவதாக, ஏற்படுத்தப்பட்ட சிறிதளவுச் சேமிப்பு நிதியும் அரசின் பொது-வரவு-செலவுத் திட்டத்தின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு நிறுவனங்கள் பயன்படுத்த முடியாமல் சென்று விட்டது.

ஆகவே, பொதுத்துறை நிறுவனங்களின் வருவாயில் ஒரு பகுதி முன்னேற்றத்திற்கான சேமிப்பு நிதிக்கு மாற்றப்பட்டு, தேவையான நேரங்களில் அந்நிறுவனங்கள் பயன்படுத்தப் போதிய உரிமை அளிக்கப்பட்டால் மேலாண்மையில் சிறப்பான முன்னேற்றம் ஏற்படும். அதிகபட்ச உற்பத்தித் திறனை அடைவதற்கு இது ஒரு தூண்டுகோலாகச் செயற்படும். இதனால், மேலாண்மைக் குழு அதிகாரப் பயனையும், பெருமையையும் அடைவதன் மூலம், மேலாண்மை செயல்முறைகளில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ள சிறந்ததொரு சூழ்நிலை ஏற்படும்.

5. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் விலைக் கொள்கை

(Price Policy Of Public Enterprises)

விலைக் கொள்கை என்பது, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களுக்கு விலை நிருணயிக்கப்படுவதைக் குறிக்கும். இதனை விலைக் கோட்பாடு (Price Theory) என்றும் கூறுவதுண்டு. எனவே, விலைக் கோட்பாடு விலைகளைப் பற்றி விளக்குகிறது. விலைகள், ஒரு பொருளின் பரிவர்த்தனை மதிப்புக்கு ஈடான பணத்தின் அளவினைக் குறிக்கின்றன. முதலாளித்துவ நாடுகளில், விலைகளின் இயக்கம், ஒரு தானியங்கி இயந்திரத்தின் இயக்கத்திற்கு ஒப்பானது. சமுதாயம் என்னென்ன பொருள்களை, எந்தெந்த அளவுகளில், எந்தெந்த தரங்களில் உற்பத்தி செய்யவேண்டும் என்பதை விலைகளின் ஆட்சி நிருணயிக்கின்றது.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் விலைக் கொள்கையின் சிறப்பியல்புகள்

இயல்பான போட்டி நிறைந்த சந்தையில், ஒரு பொருளின் விலை நுகர்வோரின் பயன்பாட்டையும் (Utility), நியாயமான இலாபத்துடன்கூடிய சராசரி உற்பத்திச் செலவையும் குறிக்கும். நுகர்வோர்களைப் பொறுத்தவரை, ஜனநாயகப் பொருளாதார நாட்டில் அமைந்துள்ள பொதுத்துறை நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்களுக்கும் மேற்கூறிய கருத்தே பொருந்தும். கொடுக்கும் விலைக்கேற்ற பயன்பாடு கிடைக்காவிடில், பொருள்களை ஏற்றுக்கொள்ள மறுக்கும் உரிமை நுகர்வோருக்குண்டு. குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தி, பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்டிருந்தால்கூட, ஒரு எல்லைக்குமேல் தேவை நெகிழ்ச்சியுடையதாய் அமைந்துவிடும். எனவே தேவை விதியைப் பொருத்தவரை, தனியார்துறைக்கும் பொதுத்துறைக்கும் அதிக வேறுபாடுகள் கிடையாது.

ஆனால், 'அளிப்பு' நிலையில் பொதுத்துறை நிறுவனங்கள் முற்றிலும் மாறுபடுகின்றன. நீண்டகால எல்லையில், தனியார்

துறையின் விலை, மொத்தச் செலவையும் போதுமான இலாபத்தையும் கொண்டிருக்கும். இதற்கு மாறாக, பொதுத்துறையின் விலை அமைந்திருக்க வாய்ப்புகள் உண்டு. மொத்தச் செலவைக் கருத்தில் கொள்ளாமல் பொதுநலனுக்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் பொதுத்துறைத் தொழில்கள் செயற்படுகின்றன. சில நேரங்களில் பொதுநலனுக்காகப் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் நட்டத்தை ஏற்றுக்கொள்வதுமுண்டு. எடுத்துக்காட்டாக, நமது நாட்டில் 'இந்திய விமானப் போக்குவரத்து நிறுவனம்' (Indian Airlines) 1960-ல் போபால், குவாலியர், இந்தூர் ஆகிய நகரங்களை வானவழிப் போக்குவரத்துமூலம் பிணைப்பதற்காக மிகவும் இலாபகரமாக நடந்துவந்த டில்லிக்கும், பம்பாய்க்குமிடையேயான போக்குவரத்தை நிறுத்திவிட்டது. அரசின் ஆணைக்கு, மேற்கூறியவாறு கீழ்ப்படிந்ததில், இந்நிறுவனம் ஏழு இலட்ச ரூபாய் நட்டத்தை அடைந்தது. இதுபோன்றே, ஸ்டேட் பாங்க் (State Bank of India) நாடாளுமன்றச் சட்டத்தின்படி 400 புதிய கிளைகளை, போதிய வங்கித்தொழில் அற்ற நகர்ப்புறங்களில் உடனடியாகத் தொடங்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அவ்வங்கியும் ஐந்து ஆண்டுக் காலத்திற்குள் 400 கிளைகளையும், சுமார் 25,000 க்கும் குறைவான மக்கள் தொகையைக் கொண்ட நகர்ப்புறங்களில் துவங்கியது. இதனால் சுமார் 337 கிளைகள் நட்டத்தில் நடைபெற்றன. இருந்தபோதிலும் பொதுநலனுக்காக நட்டம் ஒரு பொருட்டாக மதிக்கப்படவில்லை.

இக்கருத்தை வலியுறுத்தும் மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டாக, 1958ஆம்ஆண்டில், 'ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு' (Life Insurance Corporation) செயற்படுத்திய 'ஜனதா திட்டாவணை' (Janatha Policy) முறையைக் கூறலாம். குறைந்த வருவாயையுடைய மக்களுக்குப் பயனளிப்பதற்காக எவ்வித மருத்துவச் சோதனையுமின்றி, மற்ற சட்ட மரபுகளுமின்றி காப்பீடு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பினை அனைவருக்கும் அளித்தது. இதனால் ஏற்பட்ட இழப்பிடர்களைப் (Risk) பொருட்படுத்தவில்லை.

போட்டி நிறைந்த சந்தையில், பொதுத்துறையின் பொருள்களை வழங்கல் வாணிகம் செய்ய முற்படும்போது, விலைக் கொள்கையில் சில தனிப்பிரச்சினைகள் தோன்றுகின்றன. முக்கியமானதோர் இடர்ப்பாடு தனியார்துறையின் போட்டியினால் ஏற்படுகின்றது. ஆனால், பொதுத்துறை முற்றுரிமையைப் பெறும்போதோ, பல்வேறு பிரச்சினைகள் விலைக் கொள்கையில் ஏற்படுகின்றன. முற்றுரிமைச் சூழ்நிலை இரண்டு முக்கியமான இடர்ப்பாடுகளைத் தோற்றுவிக்கிறது. முதலாவது, போட்டி

நிறுவனங்கள் இல்லாமையால், இது அடக்கச் செலவை ஒப்பிட்டுப் பார்க்கும் வாய்ப்புகள் இல்லை. இது அளிப்புப் பகுதியில் ஏற்படுவது. இரண்டாவதாக, தேவைப் பகுதியில் வேறுபாடு காட்டும் இயல்புகளும் (Discrimination), சுரண்டல்களும் (Exploitation) ஏற்படுகின்றன.

நமது நாட்டில், முற்றுரிமையின் இயல்பு பொதுத்துறை நிறுவனங்களிடையே பெரிதும் வேறுபடுகின்றது. வான்வழிப் போக்குவரத்து, இருப்புப் பாதைப் போக்குவரத்து, தொலை பேசிக் கருவிகள் உற்பத்தி, அனல் மின் திட்டங்கள் முதலிய பொதுத்துறைத் தொழில்களில் தூய முற்றுரிமை நிலவுகிறது. இவை முதலாம் வகையைச் சார்ந்த முற்றுரிமைத் தொழில்கள். இரண்டாம் வகைப் பொதுத்துறைத் தொழில்கள் பகுதி முற்றுரிமை அல்லது இடமுற்றுரிமையைப் (Regional Monopoly) பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, சாலைப் போக்குவரத்து, கனரக மின்சாதனங்கள் உற்பத்தி முதலியவற்றைக் கூறலாம். மூன்றும் வகைப் பொதுத்துறை நிறுவனங்கள் தங்களுக்குள்ளோ அல்லது தனியார்துறைத் தொழில்களுடனே கூடிய பெயரளவுப் போட்டி நிலையில் பணிபுரிகின்றன. எடுத்துக்காட்டு: இரும்பு, இயந்திரக் கருவிகள், இரசாயன உர உற்பத்தி, உயிர் எதிரிக் கொல்லிகள் உற்பத்தி (Antibiotics) முதலிய தொழில்கள். நான்காம் வகையில் சோப்புத் தயாரித்தல், உப்பு உற்பத்தி, சர்க்கரை உற்பத்தி, உணவு விடுதிகள் போன்ற தொழில்கள் பொதுத்துறையில் போட்டி நிலைகளில் செயற்படுகின்றன. இவ்வகை நிறுவனங்கள் பெரும்பான்மையான சமயங்களில் மாநில அரசுகளால் நிருவகிக்கப்படுகின்றன. மத்திய அரசு நிறுவனங்கள், மாநில அரசுகளின் நிறுவனங்களைவிட சிறந்த முற்றுரிமையைப் பெற்றிருக்கின்றன. பெரும்பான்மையான பொதுத்துறை நிறுவனங்கள், முழு முற்றுரிமையைப் (Complete Monopoly) பெற்று செயற்படுகின்றன. அதனால், தனியார்துறை நிறுவனங்கள், இவ்வகைத் தொழில்களைத் தோற்றுவிக்க அனுமதிக்கப்படுவதில்லை. இருப்புப் பாதைப் போக்குவரத்து, உள் நாட்டு வான்வழிப் போக்குவரத்து, மின்சார உற்பத்தி, பல் நோக்குத் திட்டங்கள் (Multipurpose Projects) ஆகிய நிறுவனங்கள் முழு முற்றுரிமையைப் பெற்று செயற்பட்டு வருகின்றன.

செலவு (அடக்க) நிபந்தனைகள் (Cost Conditions)

பொதுத்துறைத் தொழிலமைப்பொன்றின் செலவு அல்லது அடக்க நிபந்தனைகளின் சிறப்பியல்புகளை மூன்று தலைப்புகளில் காணலாம். அவைகள் முறையே,

(1) செலவு அல்லது அடக்க இயங்குமுறை (The Cost Behaviour)

(2) ஆக்கக் கூறுகளின் விலைகளின் நிலை (The Level Of Factor Prices).

(3) செலவு அல்லது அடக்க விலை இணைப்பாக்கத்தின் கூறுகள் (The Anatomy Of Cost Composition)

1. செலவு (அடக்க) இயங்குமுறை (The Cost Behaviour)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மேலாளர்களுக்கு (Managers) உற்பத்தியை, முழுத்திறன் அளவுவரை விரிவுபடுத்த வேண்டுமென்ற எண்ணம் உள்ளது. எனவே, பயன்படுத்தாத திறன் (Unutilised Capacity) விலைகளின் நிலையில் மாறுதல்களை ஏற்படுத்துகிறது. பொதுத்துறைத் தொழில்களைப் பேரளவு அடிப்படையில் தோற்றுவித்து, உற்பத்தியை முழுத்திறன் நிலைக்கு விரிவாக்க வேண்டும் எனக் கருதப்பட்டது. இதற்கு முக்கியக் காரணம், தொழில் விரிவுபடுத்தப்படும்போது பேரளவு உற்பத்தியின் சிக்கனங்கள் பல ஏற்படுகின்றன. இந் நன்மைகளைப் பெறுவதற்காக, பல சமயங்களில் உற்பத்தி அதிகரிக்கப் படுகின்றது. குறிப்பிட்ட திறன் நிலை வரை உற்பத்தி அதிகரிக்க, அதிகரிக்க, செலவு அல்லது அடக்க விலை குறைகின்றது. இவ்வாறு அடக்கவிலை இயக்கம் அமைகின்றது.

2. ஆக்கக் கூறுகளின், விலைகளின் நிலை (The Level Of Factor Prices)

அடுத்ததாக அடக்க விலை, ஆக்கக் கூறுகளின் (Factors) விலைகளைப் பொறுத்து அமைகின்றது. ஆனால், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பெரும்பாலும் அதிக விலை கொடுத்துத்தான் ஆக்கக் கூறுகளைக் கொள்முதல் செய்கின்றன. உண்மையில் தனியார்துறையைவிட பொதுத்துறைதான், ஆக்கக் கூறுகளைக் குறைந்த விலையில் பெறுவதற்குரிய வாய்ப்புகளைப் பெற்றுள்ளன. மொத்தமாகக் கொள்முதல் செய்வதன்மூலம் விலையில் பல சலுகைகளையும், தள்ளுபடிகளையும் பொதுத்துறை நிறுவனங்கள் பெற முடியும். ஆக்கக் கூறுகளின் கொள்முதல் விலைகள் குறைவாக அமையும்போது, உற்பத்தி அல்லது அடக்க விலையும் கணிசமான அளவில் குறைகின்றது. எனவே, பொதுத்துறை நிறுவனங்கள் ஆக்கக் கூறுகளைக் கொள்முதல் செய்யும்பொழுது அளிப்பு மற்றும் வழங்கு தலைமை இயக்குநரைக் (Director General of Supplies & Disposals) கலந்து ஆலோசித்து, அவருடைய அறிவுரைகளைப் பெறவேண்டும். குறிப்பாக, அயல்

நாட்டிலிருந்து பொருள்களைக் கொள்முதல் செய்யும்பொழுது, இது முற்றிலும் அவசியமாகும். மேலும், பொதுத்துறை நிறுவனங்கள் தங்களின் உற்பத்திக்குத் தேவைப்படும் கச்சாப் பொருள்களை மற்ற பொதுத்துறைத் தொழிலமைப்புகளிடமிருந்து குறைந்த விலைகளில் கொள்முதல் செய்யலாம். எடுத்துக்காட்டாக, மைசூர் இரும்பு மற்றும் எஃகு ஆலை உற்பத்திக்குத் தேவைப்படும் எரிபொருள்களை, வனத்துறை (Forest Department) யிடமிருந்து சலுகை விலைகளில் பெறுகின்றது.

3. அடக்கவிலை இணைப்பாக்கத்தின் கூறுகள் (Anatomy of Cost Composition)

பொதுத்துறைத் தொழிலமைப்பொன்றின் அடக்க விலை இணைப்பாக்கத்தை நிருணயிக்கும் அல்லது இயக்கும் சிறப்புக் கூறுகளைப் பின்வருமாறு காணலாம்:

(அ) பொது நலச் செலவுகள் (Social Costs)

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பின்வரும் காரணங்களுக்காக, பொதுநலச் செலவுகளை மேற்கொள்கின்றன.

(i) தொழிலாளர்களுக்கு அதிகக் கூலி கொடுத்தல்.

(ii) அதிக தொழிலாளர்களுக்கு, தேவைப்படும் எண்ணிக்கையைவிட வேலைவாய்ப்புத் தருதல்.

(iii) நுகர்வோர் வசதிகளை அதிக அளவில் அளித்தல்.

(iv) தனியார்துறைத் தொழில்கள் பொதுத்துறைக்கு மாற்றப்பட்டு நிருவகிக்கும்போது ஏற்படும் சில செலவுகள்.

(i) அதிகக் கூலி கொடுத்தல்

தொழிலாளர்களுக்குப் போதிய கூலியும், மற்ற வசதிகளையும், வழங்குவதில் தனியார்துறைக்குப் பொதுத்துறை வழிகாட்டியாய் செயற்படவேண்டும். எனவே, சமுதாய நலனுக்காகப் பொதுத்துறை நிறுவனங்கள் அதிக அளவில் கூலியை தொழிலாளர்களுக்கு வழங்குகின்றன. இதனால் அடக்கவிலை உயர்கின்றது.

(ii) தேவைப்படும் எண்ணிக்கையைவிட அதிக அளவில் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பளித்தல்

ஆய்வுக் குழுவின் அறிக்கையிலும் பல பொதுத்துறை நிறுவனங்களின் அறிக்கைகளிலும் தேவைப்படும் அளவைவிட

அதிக எண்ணிக்கையில், தொழிலாளர்கள் பொதுத்துறையில் பணிபுரிகின்றனர் என்பதற்குப் போதிய சான்றுகள் உள்ளன. அதுபோல், பொதுத்துறையில் வேலைக்குறைப்பும் (Retrenchment) செய்யப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக, சிந்திரி உரத் தொழிற்சாலையில் (Sindri Fertilisers) வேலைக்குறைப்பு மேற்கொள்ளப்படாமல் மிக அதிக அளவில் தொழிலாளர்கள் பணி புரிந்தனர். அதுபோலவே, 1959-60-ல் 'இந்திய அரசு வாணிகக் கூட்டுரு'வில், (State Trading Corporation of India Ltd.) தேவைக்குச் சிறிது அதிக அளவில் கீழ்நிலைத் தொழிலாளர்கள் பணியிலிருந்தனர் என 'ஆய்வுக்குழு' தன்னுடைய அறிக்கையில் கூறியுள்ளது. இவ்வாறு தேவைக்கதிகமாக வழங்கப்படும் கூலி அடக்க விலையை உயர்த்துகின்றது.

(iii) நுகர்வோர் வசதிகளை அதிக அளவில் அளித்தல் (By Providing Larger Consumer Amenities)

இக்கருத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக, 'பம்பாய் மாநிலப் போக்குவரத்துக் கூட்டுரு' (Bombay State Road Transport Corporation) பல இடங்களிலும் அமைத்துள்ள ஆடம்பர வசதிகளைக்கொண்ட பேருந்து நிலையங்களைக் கூறலாம். இது போன்றே 'இந்திய வான்வழிக் கூட்டுரு' (Indian Airlines Corporation) பயணிகளுக்கு ஏற்படுத்தித்தந்துள்ள ஆடம்பர வசதிகளைக் கூறலாம். இதன் காரணமாகவும் பொதுத்துறைத் தொழிலின் அடக்க விலை அதிகரிக்கின்றது.

(iv) தனியார்துறைத் தொழிலமைப்புகள் பொதுத்துறைக்கு மாற்றப்படும்போது, சில அதிகப்படியான செலவுகள் ஏற்படுகின்றன. பல பொருள்கள் சலுகை விலைகளில் விற்கப்படுகின்றன. இக்காரணங்களாலும் பொதுத்துறைத் தொழில்களின் அடக்க விலை அதிகரிக்கின்றது.

(ஆ) ஒழுங்கு முறைமைச் செலவுகள் (Propriety Costs)

பொதுத்துறை நிறுவனங்கள் நடவடிக்கைகளின் வெளிக் கண்காணிப்பை மேற்கொள்ளும் செலவுகள் அவசியமாகின்றன. ஜனநாயக நாட்டில் இக்கண்காணிப்பு நடவடிக்கைகள் தவிர்க்க முடியாதவையாகிவிடுகின்றன. நாடாளுமன்றக் குழுக்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், செய்தித்தாள்கள் ஆகியவை மூலம், பொதுத்துறையின் நடவடிக்கைகள் ஆய்வுரை செய்யப் படுகின்றன.

செலவு நடவடிக்கைகள் அனைத்தையும் பொதுத்துறை நிறுவனங்கள், விதிமுறைகளின்படியும், முறைகேடின்றியும்

மேற்கொள்ளும்படி வற்புறுத்தப்படுகின்றன. எல்லாவித முக்கிய நடவடிக்கைகளும், படிப்படியாக ஏற்படுத்தப்பட்டுள்ள வழிமுறைகளின்படிதான் மேற்கொள்ளப்படவேண்டும். இதனால், பல நேரங்களில், முன் அனுமதி பெறுவதிலும், முடிவுகளை மேற்கொள்வதிலும் காலதாமதங்கள் ஏற்படுகின்றன. இக் கால தாமதங்கள் நடைமுறைச் செலவை அதிகரித்து பெரும் பண நட்டத்தைத் தோற்றுவிக்கின்றன. இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் 1961-ல் புதுடில்லியில் நடந்த "பொதுத்துறையும் பொது நிருவாகமும்" என்ற கருத்தரங்கில் "குறித்த காலந் தவறாமையும் குறுகிய வழிமுறைகளும்தான் பொதுத்துறைக்கு அவசியம்" என பேராசிரியர் ஜே. கே. கால்பிரைத் (J. K. Galbraith) கூறியதை இங்கு நினைவு கூரலாம். மேலும், காலதாமத முடிவால் ஏற்படும் நட்டத்தை விளக்கக் கீழ்க்கண்ட எடுத்துக் காட்டையும் கூறலாம். நெய்வேலி நிலக்கரி சுரங்கத் திட்ட வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பொழுது சில முக்கிய இயந்திரக்கருவிகளை, ஜெர்மனிநாட்டு உற்பத்தியாளர்களிடமிருந்து பெற முடிவுசெய்யப்பட்டது. ஆனால், இம்முடிவு அரசின் கால தாமதத்தால் ஜெர்மனிநாட்டு உற்பத்தியாளர்கள் குறிப்பிட்டிருந்த தேதிக்குப் பிறகு எடுக்கப்பட்டதால், அவ்வியந்திரங்கள் விற்கப்பட்டுவிட்டன. இதனால் தொழிலமைப்பிற்கு ஏற்பட்ட நட்டம் ரூ. 60 இலட்சத்திற்கும் மேல். இத்தகவலை, இரும்பு, சுரங்கம் மற்றும் எரிபொருள் அமைச்சகத்தின் இணைச் செயலாளர் (Joint Secretary, Ministry of Steel, Mines & Fuel) "நெய்வேலி நிலக்கரி கூட்டுரு"வின் மீதான 'ஆய்வுக் குழு'விற்கு (Estimates Committee on the Neyveli Lignite Corporation Ltd.) அனுப்பிய அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். எனவே, ஒழுங்கு முறைமைச் செலவுகளும் பொதுத்துறையின் உற்பத்தி விலையை அதிகரித்து விடுகின்றன.

(இ) பொது அமைப்புச் செலவுகள் (Cost of Public Organisation)

பொதுத்துறை நிறுவனங்களின் நிருவாக முறை அளவிற்கு மேல் மையக்குவிவு (Centralisation) முறையில் அமைந்திருப்பதாலும் அமைப்புச் செலவுகள் அதிகரிக்கின்றன.

விலைக் கோட்பாடுகள் (Theories of Pricing)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் எண்ணிறைந்த விலைக் கோட்பாடுகள் பின்பற்றப்படுகின்றன. அவைகளில் சில முக்கிய விலைக் கோட்பாடுகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்:

(1) இலாப-நட்டமில்லாக் கோட்பாடு (No Profit No Loss Theory)

(2) எல்லை நிலை உற்பத்திச் செலவுக் கோட்பாடு (Marginal Cost of Production Theory)

(3) சராசரி உற்பத்திச் செலவுக் கோட்பாடு (Average Cost Of Production Theory)

(4) இலாபமீட்டும் கோட்பாடு (Theory Of Making Profits)

(5) வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாடு (Discriminating Price Policy)

இக்கோட்பாடுகள் ஒவ்வொன்றும் பல சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளன. அவைகளைப் பற்றி தனித் தனியே, சுருக்கமாகக் காண்போம்.

1. இலாப - நட்டமில்லாக் கோட்பாடு (No Profit No Loss Theory)

நீண்ட காலமாகவே பொதுத்துறையின் சிறந்த விலைக்கோட்பாடாக, இலாப நட்டமில்லா விலைக் கொள்கை பின்பற்றப்படுகிறது. இலாபமீட்டுவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டு தனியார்துறை செயற்படுகிறது. ஆனால், பொதுத்துறையின் முக்கிய நோக்கம் பொதுநலனும், பொருளாதார முன்னேற்றமுமாகும். எனவேதான், பொதுத்துறை நிறுவனங்கள் இலாப நட்டமில்லா விலைக் கோட்பாட்டைப் பின்பற்றவேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. பொதுத்துறை நிறுவனத்தின் விலைக் கொள்கை, பின்வரும் விதிகளைப் பின்பற்றவேண்டுமென ஆர்தர் லீவிஸ் (Arthur Lewis) கூறுகின்றார்.

"(1) மூலதனக் கட்டணங்கள் அனைத்தையும் செலுத்திய பின், நிறுவனம், இலாபமோ அல்லது நட்டமோ ஈட்டக்கூடாது.

(2) பல பணிகளுக்கும் நிருணயிக்கப்படும் விலைகள் அடக்கச் செலவைவிட அதிகமாயிருத்தல் கூடாது."

இலாபமீட்டுவதை முற்றிலும் விடுத்து, பொதுநலனுக்காகச் செயற்படுதல்மூலம் தனியார்துறையிலிருந்து பொதுத்துறை நிறுவனங்கள் தங்களை வேறுபடுத்திக்காட்ட வேண்டும். பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இலாபமீட்டுதல், பொதுநலனுக்குப் பெருந்தீங்கை விளைவிக்கும். "பொதுத்துறை நிறுவனங்களில் இலாபமோ அல்லது நட்டமோ ஏற்படும்பொழுது, விலைகளைச் சரிசெய்வதன் மூலம் அந்த இலாபம் அல்லது நட்டம் நீக்கப்படவேண்டும்" என லீவிஸ் மேலும் கூறுகின்றார். இக்கொள்கையைப்

பின்பற்றுவதன்மூலம், தொழிலமைப்பு தேவைக்கதிகமாக அல்லது குறைவாக விரிவடைதலையும், பணவீக்கம் அல்லது பணத்தளர்வு நிலைத் (Inflationery or Deflationary Condition) தோன்றுவதையும் தவிர்க்கமுடியும் எனவும் கருதுகின்றார்.

"பொதுத்துறை நிறுவனங்களில் விலை நிர்ணயித்தல்" என்ற தனது அறிக்கையில் INRICE என்ற கோட்பாட்டுக் குழு (INRICE Theory Committee), பொதுத்துறைத் தொழிலமைப்புகள் அதிக இலாபமீட்டும் கொள்கையை விடுத்து பொதுநல வளர்ச்சிக்காகச் செயற்படவேண்டுமெனக் கூறுகின்றது.

அதே நேரத்தில் தன்னுடைய செயல்முறைகள் நட்டத்தில் முடிவதையும் பொதுத்துறை நிறுவனம் தவிர்க்கவேண்டும். நிறுவனங்களின் விலைகள், உற்பத்திச் செலவைவிடக் குறைவாக நிர்ணயிக்கப்படும்பொழுது ஏற்படும் நட்டம், அரசின் அதிக வரிகளின் மூலம் சரிசெய்யப்படுகின்றது. தொழிலில் ஏற்படும் அனைத்து மூலதன மற்றும் நடைமுறைச் செலவுகளை ஈடுகட்டும் வகையில் விலைகள் நிர்ணயிக்கப்பட்டால், நட்டம் தோன்றுவது தவிர்க்கப்படும்.

அடக்கச் செலவைவிட விலைகள் குறைவாக நிர்ணயிக்கப் பட்டால் பொதுத்துறையில் நட்டம் தோன்றுகிறது. இந்நட்டத்தைச் சரிசெய்ய அரசு பலவித நிதிநடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். இதனால், பணவீக்கப் பொருளாதாரம் ஏற்பட்டுவிடும். பற்றுக்குறை நிதித்திட்டத்தினால் அரசு அல்லலுற வேண்டியிருக்கும். அதேசமயம், அடக்கச் செலவைவிட விலைகள் அதிகமாக நிர்ணயிக்கப்பட்டால், பொதுநலன் பாதிக்கப்பட்டு சமுதாயச் சுரண்டல் ஏற்படுகின்றது. மேலும், அதிகவிலைகள் பொருள்களின் தேவையை மாற்றுப்பொருள்களுக்கு (Substitutes) மாற்றிவிடுகின்றது. இதனால், பொதுத்துறைப் பொருள்களின் தேவை குறைந்து, உற்பத்தி பாதிக்கப்பட்டு இறுதியில் தொழிலமைப்புகள் செம்மையான முறையில் செயற்பட முடியாத சூழ்நிலைகள் ஏற்படக்கூடும்.

எனவே, பொதுத்துறை நிறுவனங்கள் இலாப-நட்டமில்லா விலைக் கோட்பாட்டைப் பின்பற்றவேண்டும். தேவைக்கதிகமான அல்லது குறைவான தொழில் விரிவடைவதைத் தவிர்க்க, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் விலைகள், அடக்க விலையைச் சரிக்கட்டும் விதத்தில் அமைந்திருக்கவேண்டும். உண்மையில் விலைக் கொள்கை என்பது, செயல்முறைத் திறனையும், தேவை நெகிழ்ச்சியையும் சார்ந்திருக்கவேண்டும். சில

நேரங்களில், இலாபமீட்டப்பட்டால் நுகர்வோர் பயனடையும்படி அந்த இலாபம் செலவிடப்படவேண்டும். ஆனால், நியாயமற்ற கூலியைத் தொழிலாளர்களுக்கு அளிப்பதன்மூலமோ அல்லது தரக்குறைவான பொருள்களை நுகர்வோருக்கு வழங்குதல் மூலமோ விலைகளைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் படக்கூடாது. விலைக் கொள்கையும் நியாயமானதாக இருக்க வேண்டும். தொழிலும் திறமையுடன் நிருவகிக்கப்படவேண்டும்.

இக்கொள்கைக்கு விதிவிலக்கு

சில நேரங்களில் மேற்கண்ட கொள்கைக்கு விதிவிலக் களிக்கப்படவேண்டும். அவைகளாவன :

(1) தொழிலமைப்பு தேவைக்கதிகமான மூலதனத்தைத் திரட்டிவிடும்பொழுது நட்டம் ஏற்படுவதைத் தவிர்த்தல் கடினம். படிப்படியாகத்தான், அளவுக்கதிகமான மூலதனம் நீக்கப்பட்டு நட்டம் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

(2) திடீரென தொழில்நுட்பம் மாறுபட்டால், முன்பு இயங்கிக்கொண்டிருந்த இயந்திரத் தொகுதிகள் பயனற்றதாகிவிடும். அச்சமயத்தில் தொழிலில் நட்டம் ஏற்படுவதைத் தவிர்க்க இயலாது. மறுபடியும் புதிய தொழில் நுட்பங்கள் ஏற்படுத்தப்படும்வரை இந் நட்டம் நீடிக்க வாய்ப்புண்டு.

(3) தொழிலை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் சேமிப்பு நிதி ஏற்படுத்தப்பட்டால், இலாபமீட்டுதல் நியாயமானக் கொள்கையாக அமையலாம்.

(4) மறைமுக வரிக் கொள்கையின் ஒரு கருவியாய் இலாப மீட்டுதல் பயன்படுத்தப்படலாம்.
எடுத்துக்காட்டு: ருஷ்ய நாடு

(5) பணப்புழக்கத் தளர்வை (Deflation) அகற்றுவதற்கு சில நேரங்களில் இலாபமீட்டும் கொள்கை உதவி புரியும்.

(6) ஒரு பொருளின் நுகர்வைக் குறைக்க விலைகள் அதி கரிக்கப்படலாம். அப்பொழுது இலாபமேற்படுதலைத் தவிர்க்கமுடியாது.

(7) போர்த்தளவாடங்கள் உற்பத்தித் தொழில்கள் நட்டத் தில் நடைபெற்றாலும் சமுதாயத்தால் பொறுத்துக் கொள்ளப்படுகிறது.

(8) சில நேரங்களில் அந்நியச் செலாவணியை ஈட்டுவதற்காக அல்லது சேமிப்பதற்காக, உள்நாட்டில் குறிப்பிட்ட பொருள்களின் விலைகள் வெகுவாகக் குறைக்கப்படலாம். அதுபோன்ற நேரங்களில் தொழிலமைப்பில் நட்டம் ஏற்படுவது இயற்கையே.

(9) சில குறிப்பிட்ட பொருள்களின் நுகர்வை அதிகரிக்கச் செய்ய மானியங்கள் அளிக்கப்பட்டு விலைகள் குறைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, கிராமப் பகுதிகளில் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் விநியோகிக்கப்படுதல்; இதுபோன்ற நேரங்களிலும், தொழிலமைப்பு நட்டத்தைச் சந்திக்கவேண்டியிருக்கும்.

மேற்கண்ட சந்தர்ப்பங்களைத் தவிர, மற்ற நேரங்களில் பொதுத்துறையின் விலைக் கொள்கை நடைமுறை அடக்கச் செலவுடன் ஒத்திருத்தல் வேண்டும்.

திறனாய்வு

பல ஆண்டுகளுக்கு முன்புவரை, பொருளாதார நடவடிக்கைகளில் அரசின் தலையீடு ஒரு கட்டாயத் தேவையாகத்தான் கருதப்பட்டு வந்தது. ஒரு சில அத்தியாவசியப் பணிகளைப் புரியவும், நாட்டுமக்களுக்கு மிகவும் இன்றியமையாத் தேவைகளை உற்பத்தி செய்வதற்காகவும்தான், ஒரு சில தொழில்களை அரசு பொதுத்துறையில் அமைத்தது. அதுபோன்ற நேரங்களில், இலாப-நட்டமில்லா விலைக் கொள்கை பொருத்தமானதாகக் கருதப்பட்டது. ஆனால் இப்பொழுது பொருளாதார வாழ்வில் அரசின் குறுக்கீடு முற்றிலும் தேவை என்ற கருத்து அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது. வளர்ந்துவரும் நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு அரசின் நடவடிக்கைகள் அவசியமென முடிவு செய்யப்பட்டுவிட்டது. இக்கருத்து, பொதுத்துறையின் விலைக் கொள்கையைப் பெரும் மாறுதலுக்குள்ளாக்கிவிட்டது. முன்பு தனியார்துறையினரால் நிருவகிக்கப்பட்டு வந்த எண்ணிறைந்த இலாபகரமான தொழில்களை, சமுதாய முன்னேற்றத்திற்காக அரசு பொதுத்துறையில் அமைத்து வருகிறது. வாணிகத்தில் ஈடுபடவும் அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதுபோன்ற இலாபகரமான தொழில்களில், இலாப-நட்டமில்லா விலைக் கொள்கை பின்பற்றப்பட்டால், அது முதலீடு செய்யப்படக்கூடிய இலாபத்தையும், மூலதன அமைப்பின் வேகத்தையும் வெகுவாகப் பாதித்துவிடும். எனவே, இலாப மீட்டும் திறன்கொண்ட தொழிலமைப்புகள் இலாப-நட்டமில்லாக் கொள்கையைக் கைவிடல்வேண்டும்.

மேலும் சமீப காலங்களில் பல பொதுத்துறைத் தொழில்கள், அயல்நாட்டு மற்றும் உள்நாட்டு தனியார்துறையினருடன் இணைந்து செயற்படத் துவங்கியுள்ளன. பொருளாதார வளர்ச்சி மேம்பட 'கூட்டுத்துறை'க் கருத்து வலிவு பெற்றுவரும் இன்றைய நாளில், இலாப-நட்டமில்லா விலைக் கொள்கை, சிறிதும் பொருத்தமுடையதாயிருக்காது. போதுமான இலாப மில்லாவிடில், தனியார் தொழில்முயல்வோர்கள் பொதுத்துறையுடன் இணைய முன்வரமாட்டார்கள்.

பொருளாதார வளர்ச்சியில், முன்னணியில் நிற்கும் நாடுகளில், தொழில்களின் முன்னேற்றத்தை ஆராய்ந்தால், பல தொழிலமைப்புகள் இலாபமீட்டுதல் மூலம்தான் நிதி வசதியைப் பெற்றன என்பது தெளிவாகும். இலாபகரமாக இயங்கிவரும் தனியார்துறைத் தொழிலமைப்புகள், நாட்டு மக்களின் சேமிப்பை அதிகரிக்கச்செய்து முதலீடுகளை விரிவடையச் செய்கின்றன. இதனால், தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்கள் வளர்ச்சியடைகின்றன. பொதுத்துறைத் தொழிலமைப்புகள், இலாப-நட்டமில்லாக் கொள்கையில் செயற்பட்டால் பொது முதலீடுகளின் வளர்ச்சிக்கு எவ்வகையிலும் ஊக்கமளிக்க முடியாது. அரசின் கருவூலத்திற்குத்தான் நிதிச்சுமை அதிகரிக்கும்.

பொதுத்துறைத் தொழிலமைப்பொன்று இலாபமீட்டாவிடில், அதன் வளர்ச்சி பணவீக்கத்தினாலோ அல்லது அதிகரிக்கப்பட்ட வரிகளினாலோதான் ஏற்படவேண்டும். வரிகள் அதிகரிக்கப்பட்டால் நாட்டு மக்களின் வரிச்சுமை அதிகரிக்கும்; பணவீக்கம் நாட்டில் ஆபத்தான விளைவுகளைத் தோற்றுவிக்கும். எனவே இரண்டுமே விரும்பத்தக்கதல்ல. பேராசிரியர் லீவிஸ், நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில்கள், இலாபமீட்டாமல் செயற்படுதலென்பது அறிவுக்குப் பொருத்தமற்ற கருத்து எனக் கூறுகிறார்.

பொதுத்துறை நிறுவனங்கள் இலாப நோக்கோடு செயற்படவேண்டுமென்றும், இன்றைய சமதர்மச் சமுதாயத்திற்கு இலாப-நட்டமில்லா விலைக் கொள்கை முற்றிலும் பொருத்தமற்றது எனவும் அனைவராலும் கருதப்படுகிறது. இலாப-நட்டமில்லா விலைக் கொள்கை, நல்லதொரு 'கலப்புப் பொருளாதாரம்' ஏற்படுவதைத் தவிர்த்துவிடும் எனவும், இதனால் சமதர்மச் சமுதாயக் கொள்கை பாதிக்கப்படுமெனவும் அனைவராலும் கருதப்படுகிறது.

மேலும், நட்டத்தில் நடக்கும் ஒரு பொதுத்துறைத் தொழில், குறைந்த விலையில் எரிவாயு, மின்சாரம், தபால்-தந்தி வசதிகள், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை நாட்டு மக்களுக்கு வழங்கி பொதுநலனுக்குப் பணிபுரியலாம். நாட்டு மக்கள் பயனடைந்தபோதிலும், இப் பொதுத்துறைத் தொழிலின் நட்டம் பொருளாதார நடவடிக்கைகளைப் பாதித்து பேராபத்தை விளைவிக்கும். முதலாவதாக, இந்நட்டக் கொள்கை நாட்டில் பணவீக்கத்தைத் தோற்றுவிக்கும். பொதுத்துறைத் தொழிலொன்று, கூலிவழங்கல் போன்ற நடவடிக்கைகளின் மூலம், பணச் சுழலை (Money Circulation) ஏற்படுத்துகிறது. அதுபோலவே, உற்பத்தி செய்யப்படும் பொருள்களுக்கும், மற்றப் பணிகளுக்கும், விலைகளையும், கட்டணங்களையும் நிர்ணயித்து, பணச் சுழலிலிருந்து பணத்தைத் திரும்பப் பெறுகின்றனர். இவ்வாறு நடைபெறும் பொழுது அதிகப் பணத்தைச் சுழலவிட்டு, குறைந்த விலைகள் அல்லது கட்டணங்கள் மூலம் குறைவான பணத்தை, பணச் சுழலிலிருந்து திரும்பப்பெறும்பொழுது கணிசமான அளவில் பணம் சுழலில் தங்கிவிடுகின்றது. இதனால் பணவீக்கம் ஏற்படுகிறது.

இரண்டாவதாக, தொடர்ந்து ஒரு பொதுத்துறை நிறுவனம் நட்டத்தில் இயங்கினால், அந் நட்டத்தை ஈடுசெய்யக் கூடுதலான வரிகள் விதிக்கப்படுகின்றன. இதனால் நாட்டு மக்களின் வரிச் சுமை அதிகரிக்கிறது.

மூன்றாவதாக, அடக்கச் செலவைவிடக் குறைவாக விலைகள் நிர்ணயிக்கப்படும்பொழுது தேவைக்கதிகமான அளவில் தொழில் விரிவடைந்து விடுகிறது. இது பல இடையூறுகளைத் தோற்றுவிக்கும்.

எனவே, மேற்கண்ட திறனாய்வுக் கருத்துக்களை நோக்கும் பொழுது, இலாப - நட்டமில்லா விலைக்கோட்பாடு, திருப்திகரமான கொள்கையல்லவெனத் தெளிவாகிறது.

2. எல்லை நிலை உற்பத்திச் செலவுக் கோட்பாடு (Marginal Cost of Production Theory)

முதன் முதலில் பொதுத்துறையில் எல்லை நிலை உற்பத்திச் செலவுக் கோட்பாடு, ஏ. பி. லேர்னர் (A.P.Lerner), பேராசிரியர் ஹோட்டலிங் (Prof. Hotelling) போன்ற பொருளாதார வல்லுநர்களால் பரிந்துரைக்கப்பட்டது.

இக்கோட்பாட்டில், பொருள்களின் விலைகள் எல்லை நிலை உற்பத்திச் செலவை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப் படுகின்றன. விலைகளும், எல்லை நிலை உற்பத்திச்செலவும் ஒன்றுக அமையும்பொழுது, தொழிலமைப்பில் அனைத்து உற்பத்திக் காரணிகளும் முழு அளவில் பயன்படுத்தப்பட்டு உற்பத்தி உத்தம நிலையை (Optimum Output) அடையும்; இலாபம் அதிக பட்ச அளவில் ஈட்டப்படும்.

கொள்கையளவில் விலைகளும், எல்லை நிலை உற்பத்திச் செலவும் ஒன்றுயிருக்கும்பொழுது, உத்தம உற்பத்தியும் அதிக பட்ச இலாபமும் ஏற்படும். ஆனல், நடைமுறையில் இவ்வாறு நிகழ வாய்ப்புகள் மிகக் குறைவு. நிறைவுப் போட்டியில், சராசரி மற்றும் எல்லை நிலை உற்பத்திச் செலவுகள் ஒரே நிலையில் அமையவும், விலைகள் அதற்கேற்றவாறு நிர்ணயிக்கப் பட்டு உத்தம அளவை ஏற்படுத்தவும் முடியும். ஆனல், போட்டி யில்லா நிலையில், உற்பத்தியின் அளவைப் பொறுத்து, எல்லை நிலை உற்பத்திச் செலவு சராசரி உற்பத்திச் செலவைவிட அதிகரித்துவிடும். மேலும், பொதுத்துறை நிறுவனங்கள் அதிக அளவில் மூலதனத்தைத் திரட்டிவிடுவதால் அவைகளின் செலவுகள் கிட்டத்தட்ட நிரந்தரமாக அமைந்துவிடுகின்றன. அவசரத் தேவைகளைச் சமாளிப்பதற்காகப் பயன்படுத்தப் படாமல் உற்பத்தித் திறன் சிறிதளவாவது தேங்கியிருக்கும். அத்திறன் பயன்படுத்தப்படும்பொழுது, உற்பத்தி அதிகரித்து பொருள்களின் அடக்க விலை குறைகிறது. இதுபோன்ற நேரங்களில் சராசரி உற்பத்திச் செலவைவிட, எல்லை நிலை உற்பத்திச் செலவு குறைந்துவிடுகிறது. எனவே, எல்லை நிலை உற்பத்திச் செலவின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலைகள், செயல்முறை செலவுகள், தேய்மானம், வட்டி, வரிகள் போன்றவைகளை உள்ளடக்க முடியாது. இதன் காரணமாக நட்டங்கள் ஏற்படுகின்றன. அந் நட்டத்தைச் சரிசெய்ய அரசு மானியங்களை அளிக்கின்றது. பொது நிதிக் கொள்கைக்கு (Public Finance) இது உகந்ததல்ல; பற்றுக்குறை நிதித்திட்டம் ஏற்படுகிறது. இப்பற்றுக்குறையை ஈடு செய்வதற்கு அரசு கூடுதல் வரிகளை விதிக்கின்றது. நாட்டு மக்களின் வரிச்சுமை இதனல் அதிகரித்துவிடுகிறது.

நிறைகுறைப் போட்டியில் செயற்படும் தனியார்துறை உள்ள வரை, பொதுத்துறை நிறுவனங்கள் எல்லை நிலை உற்பத்திச் செலவின் அடிப்படையில் உத்தம அளவு உற்பத்தியை அடைய முடியாது. மேலும், மாறிவரும் சிக்கலான உற்பத்தித்

தொழில்களில் விலைகளுக்கும், எல்லை நிலை உற்பத்திச் செலவு களுக்குமிடையேயான விகிதத்தை நிர்ணயித்தல் இயலாத செயலாகும்.

மேற்கண்ட குறைபாடுகளைத் தவிர, எல்லை நிலை உற்பத்திச் செலவை நிர்ணயிப்பதிலும், மற்ற செலவு விகிதங்களைப் பாகு படுத்துவதிலும்கூட பல பிரச்சினைகள் தோன்றுகின்றன. எடுத்துக்காட்டாகப் பின்வருபவைகளைக் காணலாம். சில பொதுத்துறை நிறுவனங்கள் பல்வேறு வகைப்பட்ட பொருள் களையும் அல்லது பணிகளையும் (Multiple Products or Services) உற்பத்தி செய்கின்றன. ஒவ்வொருவகைப் பொருளுக்கும் தனித் தனியே செலவுகளைக் கணக்கிடுதல் என்பது மிகவும் சிக்கலான, பெருஞ்செலவு பிடிக்கின்ற ஒரு செயலாகும். இதனால் நிருவாகச் சிக்கனங்கள் தோன்ற வாய்ப்புகள் குறைந்துவிடும்.

மேலும், உற்பத்திக் காரணிகள் பாகுபடுத்திப் பிரிக்கக் கூடிய தன்மையற்றனவாக இருப்பதால், அவைகளின் மீதான எல்லை நிலை அடக்கச் செலவை துல்லியமாகக் கணக்கிட முடியாது. எனவே, எல்லை நிலை உற்பத்திச் செலவை அடிப் படையாகக் கொண்டு விலைகளை நிர்ணயிக்க இயலாது.

விலைகள், எல்லை நிலை அடக்கச் செலவுக்கேற்றவாறு நிர்ணயிக்கப்படும்பொழுது, தேவை மற்றும் அளிப்பில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், விலைகளிலும் அடிக்கடி ஏற்றத் தாழ்வுகளை (Fluctuations in Prices) ஏற்படுத்திவிடுகிறது. இவ்வாறு எதிர்பாராமலும், எவ்வித வரையறையின்றியும் ஏற்படும் விலை மாறுதல்கள் பல இடையூறுகளைத் தோற்றுவிக்கின்றன.

எல்லை நிலை உற்பத்திச் செலவுக் கோட்பாடு பின்பற்றப்படும் பொழுது, அரசு முதலீட்டுக் கொள்கையை முடிவு செய்வதில் மிகவும் சிரமப்படுகிறது. பொதுத்துறைத் தொழில் ஒவ்வொன் றையும் எந்த அளவிற்கு விரிவுபடுத்துவது? அப்படி விரிவு படுத்தத் தேவையான நிதியை எவ்வாறு திரட்டுவது? போன்ற பல சிக்கலான பிரச்சினைகள் தோன்றுகின்றன..

இறுதியாக, பல பொதுத்துறை நிறுவனங்களில் எல்லை நிலை உற்பத்திச் செலவு, இன்மைக் குறி இலக்க அளவில் (Zero Level) அமைந்துவிடுகின்றது. அப்பொழுது, விலைகளை எல்லை நிலை உற்பத்திச் செலவின் அடிப்படையில் நிர்ணயிக்கமுடியாது.

இவ்வாறு, பல்வேறு வகையான குறைப்பாடுகளைக்கொண்டு செயற்படுவதுதான் 'எல்லை நிலை உற்பத்திச் செலவு விலைக்

கோட்பாடு.' எனவே, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் உற்பத்தி செய்யும் பொருள்களின் விலைகளை நிர்ணயிக்க இம் முறை ஏற்றதல்ல என்பது தெளிவாகிறது.

3. சராசரி உற்பத்திச் செலவுக் கோட்பாடு (Average Cost of Production Theory)

முழுத்திறனையும் உற்பத்தியில் பயன்படுத்த முடியாத் தொழிலமைப்புகளைக்கொண்ட பின்தங்கிய நாடுகளில், சராசரி உற்பத்திச் செலவுக் கோட்பாட்டைப் பொதுத்துறை பின்பற்ற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. மேற்கண்ட எல்லை நிலை உற்பத்திச் செலவுக் கோட்பாட்டில் பல்வேறு வகையான செலவுகளும் விலையில் அடங்குவதில்லை. எனவே, பொதுத்துறை நிறுவனங்கள் சராசரி உற்பத்திச் செலவுக் கொள்கையைக் கடைப்பிடிக்கவேண்டுமெனக் கூறப்படுகின்றது.

பின்வரும் காரணங்களால், இக்கோட்பாடு நியாயமானதும் பொருத்தமானதுமாகும் எனக் கருதப்படுகிறது.

(1) எவ்வித இலாப நோக்கமுமின்றி, நியாயமான விலைகளில் தேவைப்படும் பொருள்களை வழங்குதலே பொதுத்துறையின் நோக்கமாதலால், சராசரி உற்பத்திச் செலவுக் கோட்பாடு முற்றிலும் பொருத்தமானதாகும்.

(2) நுகர்வோர் அளிக்கும் விலை, அனைத்துச் செலவுகளையும் உள்ளடக்கி விடுவதாலும் இம் முறை ஏற்றதாகும்.

(3) உற்பத்திச் செலவைவிட, அதிகமாக பொருள்களுக்கு நுகர்வோர் அளிக்கத் தேவையில்லாததால் இம் முறையில் சுரண்டல் கிடையாது.

(4) முதலீடு செய்யப்பட பல நேரங்களில் சராசரி விலைக் கோட்பாடு நம்பகரமான கொள்கையாக இருக்கிறது.

(5) பல்வேறு வகையான செலவுகளும், சராசரி விலைக் கோட்பாட்டின் விலையில் அடங்கிவிடுவதால், தொழிலமைப்பு வளம்பெறும் தன்மையையும், தன்னாட்சியுரிமையையும் பெறுகிறது.

இருந்தபோதிலும், இக்கோட்பாட்டில் பின்வரும் குறைபாடுகளும் நிறைந்துள்ளன.

முதலாவதாக, கோட்பாட்டின்படி சராசரிச் செலவுகளை நிர்ணயிப்பது நடைமுறையில் மிகவும் சிக்கலானதொரு செயலாகும்.

இரண்டாவதாக, தேய்மானத்திற்கு வகைசெய்வதில் கருத்து வேறுபாடுகள் உள்ளன. உண்மையான விலையில் தேய்மானத்தைக் கணக்கிடுவதா அல்லது சந்தை மதிப்பு விலையில் தேய்மானத்தை ஏற்படுத்துவதா என்ற வினா ஒரு பிரச்சினையாக எழுகின்றது.

மூன்றாவதாக, சமுதாயச் செலவுகள் கணக்கிடப்படுவதிலும் கருத்து வேறுபாடுகள் தோன்றுகின்றன. பொதுத்துறை நிறுவனங்கள், விலைகளை நிர்ணயிக்கும்பொழுது, சமூகச் செலவுகள் அல்லது பொதுநலச் செலவுகள் (Social Costs) அனைத்தும் கவனிக்கப்படவேண்டுமெனக் கருதப்படுகிறது. ஆனால், நடைமுறையில் இச்சமுதாயச் செலவுகளைத் துல்லியமாக மதிப்பிடுதல் இயலாது.

நான்காவதாக, விலைகளுக்கேற்றவாறு நெகிழுந்தன்மை இக் கோட்பாட்டில் முற்றிலுமில்லை. மேலும், மேலாண்மை புரியும் மேலாளர்களுக்குப் போதிய ஊக்கம் அளிக்கப்படுவதில்லை.

இவ்வாறு, மேற்கண்ட குறைபாடுகள் நிறைந்திருப்பதால் இச் சராசரி உற்பத்திச் செலவுக் கோட்பாடும், பொதுத்துறை நிறுவனங்களுக்கு ஏற்றதொரு கோட்பாடு அல்ல என முடிவுரையாகக் கூறலாம்.

4. இலாபமீட்டும் கோட்பாடு (Theory of Making Profits)

சமீப காலங்களில், திட்டமிட்டப் பொருளாதார நாடுகளில் பொதுத்துறை நிறுவனங்கள் கணிசமான அளவில் இலாபத்தை ஈட்டுதல்மூலம் அரசின் வருவாயை அதிகரிக்கச் செய்கின்றன. ருஷ்ய நாட்டில் 90% வருவாய் பொதுத்துறையில்தான் ஈட்டப்படுகிறது. முதலாளித்துவக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளில்கூட, கணிசமான அளவு இலாபம் பொதுத்துறைத் தொழிலமைப்புகளால் ஏற்படுகின்றது. தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் (South-East Asian Countries), தூரக்கிழக்கு (Far East) நாடுகளிலும் உள்நாட்டு உற்பத்தித் தொழில்களில் மட்டுமல்லாமல் வெளிநாட்டு வாணிகத்திலும், பொதுத்துறை ஈடுபட்டு அதிக அளவில் அந்நியச் செலாவணியை ஈட்டி வருகின்றன. பர்மாவில் பொதுத்துறை நிறுவனங்கள் அரிசி மற்றும் மர வியாபாரத்தில் முற்றுரிமையை நிலைநிறுத்தி, செம்மையாகச் செயற்பட்டு அரசின்

பெரும்பான்மையான வருவாய்க்கு வகை செய்கின்றன. தாய்லாந்து நாட்டின் பொருளாதாரத்தில் அரிசி மற்றும் புகையிலை ஏற்றுமதியில் முற்றுரிமையைப் பெற்றதன்மூலம், பொதுத்துறைத் தொழில்கள் மிகவும் இலாபகரமாகச் செயல்புரிந்து விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

தனியார்துறையின் அடிப்படை நோக்கம், இலாபத்தை அதிகரிக்கச் செய்வதாகும். பொதுத்துறையின் நோக்கம் இலாபமீட்டுதலன்று; எனினும் அதிகரித்துவரும் மூலதனச் செலவுகளைச் சமாளிக்கவும், மற்றப் பொதுத்துறை நிறுவனங்களின் வளர்ச்சிக்குத் தேவையான கூடுதல் முதலீட்டை ஈட்டவும், பொதுத்துறை சிறிதளவாவது இலாபமீட்டுதல் இற்றைய நாட்களில் இன்றியமையாததாகின்றது. பொதுத்துறைத் தொழிலமைப்புகள் அவசியம் இலாபகரமாகச் செயற்பட வேண்டுமென வலியுறுத்தும்பொழுது, டாக்டர் ராவ் (Dr. Rao) பின்வரும் கருத்தைத் தெரிவிக்கிறார். "நாட்டு வருமானமும், வருமான விகிதமும் அதிகரிக்கும் வகையில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் விலைக் கோட்பாடு அமையவேண்டும்; எந்த அளவிற்கு எண்ணிக்கையில் பொதுத்துறை நிறுவனங்கள் பெருகிவருகின்றனவோ அந்த அளவிற்கு ஏற்றவாறு இலாபமும் பெருகுதல் வேண்டும். இவ்வாறு ஈட்டப்படும் இலாபம், ஒருபுறம் சேமிப்பையும் முதலீட்டையும் அதிகப்படுத்தி, மறுபுறம் நாட்டுப் பொதுநலனைப் பாதுகாக்கும்......... எனவே, பொதுத்துறை நிறுவனங்கள் இலாபமற்ற (No Profit) அடிப்படையில் செயற்படவேண்டுமென்ற அறிவுக்குப் பொருத்தமற்றக் கோட்பாட்டை விட்டொழித்தல் வேண்டும்."

பொருளாதாரத்தில் பின்தங்கிய நாடுகளில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளைத் தோற்றுவிக்க அரசு அளவுக்கதிகமான தொகையைச் செலவிடுவதால் அரசின் வருவாயை அதிகரிக்கச் செய்வது பொதுத்துறையின் கடமை என்று 'வரி விசாரணைக் குழு' (The Taxation Enquiry Commission) கருதுகின்றது.

இதுபோன்றே பேராசிரியர் கால்பிரைத் (Galbraith) போன்ற வல்லுநர்களும், "மேனன் நாடாளுமன்ற மேற்பார்வைக் குழு" (The Menon Committee on Parliamentary Supervision) போன்ற குழுக்களும், பொதுத்துறை நிறுவனங்கள் இலாபமீட்டுதல் மிக அவசியமென்றும், அதில் சிறிதும் ஐயப்பாட்டிற்கிடமில்லை எனவும் கருதுகின்றன.

தனியார்துறை நிறுவனங்களைப் போன்று, சுயநிதி வளர்ச்சியடைய பொதுத்துறை நிறுவனங்களும் இலாபமீட்டுதல் அவசியம். விரைவான பொருளாதார முன்னேற்றத்திற்கு வசதியான நிலைகளில் மூலதனக் குவிப்பு ஏற்படவேண்டும். இதற்குப் பொதுத்துறையின் இலாபமீட்டும் கோட்பாடு பேருதவி புரியும். எதிர்பாராதச் செலவுகளை ஈடு செய்யவும், இலாபமீட்டும் கொள்கையும், சேமிப்பு நிதியும் மிக அவசியமாகின்றன. மேலும், தன்னுடைய இலாபத்தைப் பயன்படுத்துவதன் மூலம், பொதுத்துறைத் தொழில் மேன்மேலும் வளர்ச்சியுற முடியும். நமது நாட்டில், இக்கருத்திற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக, 'ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவிகள்' நிறுவனம் (Hindustan Machine Tools) திகழ்கின்றது. தன்னுடைய இலாபத்தைக் கொண்டு, பெங்களூரில் இரண்டாவது இயந்திரக் கருவிகள் உற்பத்தி நிறுவனத்தையும், பஞ்சாப் மாநிலத்தில் சண்டிகாருக்கருகே பிஞ்சூர் என்ற இடத்தில் மூன்றாவது உற்பத்திக் கிளையையும் தோற்றுவித்துள்ளது. இரண்டாவதாக தோற்றுவிக்கப்பட்ட நிறுவனம், நாட்டிற்கு ஹிந்துஸ்தான் இயந்திரக் கருவி நிறுவனம் அளித்த பரிசு எனக் கருதப்பட்டது.

தொழிலமைப்பொன்றை வளர்ச்சியடையச் செய்யவும், தற்காலச் செயல்முறைக்கேற்றதாகவும் மாற்றுவதற்கு, அத் தொழிலமைப்பு ஈட்டும் இலாபம் மிகவும் தேவையாகும். பல பொதுத்துறை நிறுவனங்கள், மிக அத்தியாவசியப் பொதுப் பயன்களை அளிக்கின்றன; அப்பணிகளின் தரம் அடக்க விலையை விட முக்கியமானதாகும். எனவே பொதுத்துறைத் தொழிலமைப்புகள், தாம் உற்பத்தி செய்யும் பொருள்களின் அல்லது பணிகளின் தரத்தை மேம்படுத்தத் தேவையான செலவை ஈடுசெய்ய இலாபமீட்டுதல் அவசியமாகின்றது.

பொருளாதார வளமானது (Economic Resources) ஒவ்வொரு தொழிலமைப்பிற்கும், அதனதன் இலாபமீட்டும் திறனை அடிப்படையாகக் கொண்டுதான் ஒதுக்கீடு செய்யப் படுகின்றன. எனவே, தனியார்துறைத் தொழிலமைப்புகளைப் போன்று, பொதுத்துறைத் தொழிலமைப்புகளும் இலாபமீட்டாவிடில், வள ஒதுக்கீட்டில் ஏற்றத் தாழ்வுகள் ஏற்படக்கூடும். பொதுத்துறைத் தொழில்களைவிட, தனியார்துறை நிறுவனங்கள் இலாபகரமாகச் செயற்பட்டால், பொதுத்துறை புறக்கணிக்கப் பட்டு, தனியார்துறை பெரும்பான்மையான வள ஒதுக்கீட்டைப் பெற வாய்ப்புகள் உண்டு. எனவே, பொதுநலனுக்கு மிகவும் அவசியமானவை என்று கருதப்படும் ஒரு சில பொதுத்துறை

நிறுவனங்களைத் தவிர, (எடுத்துக்காட்டு: உணவு உற்பத்தி அல்லது பகிர்வு) மற்றவை இலாபமீட்டும் கோட்பாட்டைப் பின்பற்றவேண்டும்.

திட்ட நோக்குடைய இலாபமீட்டும் விலைக் கொள்கை பின்பற்றப்படாவிட்டால், பொதுத்துறை அரசின் வருவாய் அமைப்பைப் பாதித்து, நிதிப்பற்றாக்குறையை ஏற்படுத்திவிடும் எனக் கருதப்படுகிறது. முதலாவதாக, நாட்டுடைமையாக்கப் படுவதன் மூலம், அரசு நிறுவனங்கள் வரிச்சலுகையைப் பெற்று விடுகின்றன. எனவே, அரசின் வருவாய் கணிசமான அளவில் குறைந்து விடுகிறது. இரண்டாவதாக, சில பொதுத்துறை நிறுவனங்கள் தம் பொருள்களைச் சலுகை விலைகளிலும் அல்லது அடக்க விலைகளிலும் விற்பனை செய்கின்றன. இதனால், அரசின் வருமானம் குறைவடைகிறது. மூன்றாவதாக, சில பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஏற்படும் நட்டம், அரசின் வருவாயை வெகுவாகக் குறைத்துவிடுகின்றது. நான்காவதாகப் பொதுத் துறைப் பொருள்களின் மீதான விற்பனை வரிகள், தனியார்துறை யைவிட மிகவும் குறைவாக இருப்பதால், அரசின் வரி வருமானம் குறைகின்றது. இவ்வாறு, பல வழிகளிலும் குறைவடையும் அரசின் வருவாயைச் சரிக்கட்ட பொதுத்துறைத் தொழி லமைப்புகள் இலாபமீட்டுதல் வேண்டும். அல்லது பொதுத்துறை நிறுவனங்களின்மீது விதிக்க, நல்லதொரு வரிக் கொள்கையை அரசு ஏற்படுத்தவேண்டும்.

மேலும், இற்றைய நாட்களில் அதிக அளவில் பொருளா தார நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவதாலும், 'நலங்காக்கும்' கொள்கைகளை வரித்துக்கொண்டுவிட்டதன் காரணமாகவும் அரசின் செலவுகள் பன்மடங்கு அதிகரித்துவிட்டன. இச்செலவு களை ஈடுசெய்ய, அதிகரித்த வருவாய் அரசிற்குத் தேவைப்படு கிறது. திடீரென அதிக வருவாயை ஈட்ட, கூடுதல் வரிகளை அரசு விதிக்க முடியாது. மாறாக, பொதுத்துறை நிறுவனங்களின் இலாபமீட்டும் திறனை அதிகரித்தல்மூலம், இக் கூடுதல் வருவாயைப் பெறமுடியும். சரிசம சமுதாயம் அமைத்திடத் தேவைப்படும் நிதியில், பெரும்பான்மையான பகுதியை அளிப் பதில் பொதுத்துறையின் இலாபம் முக்கியப் பங்கை வகிக்கிறது. டாக்டர் வி. கே. ஆர். வி. ராவ் (Dr. V. K. R. V. Rao) 'பொதுத்துறையில், 'இலாப-நட்டமற்ற'க் (No Profit, No Loss) கோட்பாடு சரிசமப் பொருளாதார வளர்ச்சியைப் பாதித்து, கலப்புப் பொருளாதாரம், சரிசமப் பொருளாதாரமாக உருவாகுவதைத் தடுத்துவிடும்; எனவே, இலாபமீட்டும் கோட்

பாடே பொதுத்துறையின் கொள்கையாக அமையவேண்டும்'' எனக் கூறுகிருர்.

மேற்கண்ட காரணங்களால்தான் ரங்கூனில் நடைபெற்ற ''உற்பத்தித் துறையில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் அமைப்பும், நிருவாகமும்'' (The Rangoon Seminaron "Organisation and Administration of Public Enterprises in the Industrial Field") என்ற கருத்தரங்கு, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இலாபமீட்டுதல் அவசியம் என முடிவு செய்தது.

விலைக் கொள்கையைக்கொண்டு திறமையை நிர்ணயித்தல்

பேராசிரியர் லீவிஸ் (Prof. Lewis) ஒரு பொதுத்துறைத் தொழிலின் திறமையைக் கணிக்க, நிதிச்சோதனை (Financial Test) சிறந்தமுறை எனக் கூறுகிருர். இலாபமீட்டும் திறமையுடன் கூடிய விலைக் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு, தொழிலமைப்பொன்றின் திறனைச் சோதித்தல் சிறந்த தேர்வுமுறையாகும். அளவுக்கதிகமின்றியும் ஆனுல் நடைமுறைச் செலவுகள், மூலதனச் செலவுகள், எதிர்பார்த்த செலவுகள் போன்றவைகளை உள்ளடக்கிக் கணிசமான அளவு உபரி வருவாயை ஏற்படுத்தும் வகையிலும் விலைகள் நிர்ணயிக்கப்படவேண்டும். உத்தம உற்பத்தி நிலையைப் பாதிக்காத வகையில், பொருள்களுக்குப் போதுமான தேவையை உருவாக்கும் வகையில், இலாபமீட்டும் விகிதத்தில் அமைந்திருக்கும் விலைக் கொள்கையே திறமையைச் சோதிக்கும் சிறந்த அளவுகோலாகும். விலைக் கொள்கையைக் கொண்டு, திறனைக் கணிக்கும்பொழுது பின் வரும் கருத்துக்கள் அடிப்படையாக அமையவேண்டும்.

(அ) பொருளின் உற்பத்தி அல்லது அடக்க விலை குறைந்த பட்ச அளவில் (Minimum Level) அமைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) சந்தையின் தேவையைச் சமாளிக்கும் திறமை.

(இ) நுகர்வோரிடையே சிறந்த வரவேற்பைப் பெறும் வகையில், பொருத்தமான பொருள்களின் தரமும், நீண்டகால உழைக்கும் தன்மையும் கொண்டிருத்தல்.

(ஈ) வேறு தொழிலில் முதலீடு செய்யப்பட்டிருந்தால் எந்த அளவு வருமானம் ஈட்டப்படுமோ அந்த அளவில் முதலீட்டின் மீதான இலாப விகிதம் அமைந்திருத்தல்.

இலாபமீட்டப்படுவதன் நோக்கங்கள் (Objectives of Profit Earning)

பொதுப் பொருளாதார மற்றும் சமூகக் கொள்கைகள் ஒருங்கிணைந்து செயற்பட, இலாபமீட்டும் திறமை விலைக் கொள்கையுடன் இணைந்தொன்றாகக் கருதிப் பொதுத்துறை நிறுவனங்கள் உற்பத்தியில் ஈடுபடவேண்டும். பின்வரும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகப் பொதுத்துறை நிறுவனங்கள் இலாபமீட்டுதல் வேண்டும்.

(i) அரசின் முதலீட்டிற்குக் கணிசமான அளவில் இலாப ஈவைக் கருவூலத்தில் செலுத்துதல்.

(ii) அரசிடமிருந்து பெற்ற மானியங்கள் ஏதேனும் இருப்பின் அவைகளைத் திருப்பிச் செலுத்துதல்.

(iii) தொழிலை விரிவுபடுத்தல் அல்லது மாற்றியமைத்தல்.

(iv) திரும்பவும் முதலீடு செய்து, மூலதனத்தை அதிகரித்தல்.

(v) நட்டமேற்படும் ஆண்டுகளில் நட்டத்தை ஈடுசெய்ய சேமிப்பு நிதியை உருவாக்குதல்.

(vi) அனைத்து அல்லது சில நுகர்வோருக்குச் சுமைத் தணிவு (Relief) ஏற்படுத்துதல்.

(vii) தொழிலாளர்களின் வசதிகளை மேம்படுத்துதல்.

(viii) அரசின் பொருளாதார முன்னேற்ற செலவுகளுக்குப் போதிய நிதி அளித்தல்.

(ix) அரசின் நிதிப்பற்றுக்குறை இடைவெளியை நிரப்புவதன் மூலம் கூடுதல் வரிகளைத் தவிர்த்தல்.

(x) மற்றப் பொதுத்துறைத் தொழில்களின் விரிவான வளர்ச்சிக்காகப் பயன்படல்.

முன்னெச்சரிக்கை (Precaution)

ஆனால், நாட்டு மக்களின் ஒரு பகுதியினர் பாதிக்கப் படுவதன்மூலம் பொதுத்துறைத் தொழில்களில் இலாபமீட்ட படக்கூடாது. பின்வரும் முறைகளில் இலாபம் ஈட்டப் படுவதைத் தவிர்க்க, போதிய முன்னெச்சரிக்கைத் தேவை.

(அ) நீண்ட உழைப்பு நேரம், குறைந்த வேலை வசதிகள், குறைந்த கூலி முதலியவைகளைத் தொழிலாளர்களுக்கு வழங்குதல்மூலம் இலாபமீட்டுதல்.

(ஆ) பொதுநலனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்களின் மூலம் இலாபமீட்டுதல்.

(இ) பொருளின் தரத்திற்கொவ்வாத அதிகரித்த விலைகளின் மூலம் இலாபமீட்டப்படுதல்.

இலாபமீட்டும் கொள்கைக்கு எதிரான வாதங்கள்

இலாபமீட்டும் கோட்பாடில் எண்ணிறைந்த நன்மைகள் ஏற்பட்டபோதிலும், அக் கொள்கைக்குச் சில எதிரான வாதங்களும் கூறப்படுகின்றன. ஆனல், இவ்வாதங்கள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளத்தக்கவையல்ல. எனவே சில முக்கிய எதிர் வாதங்களையும், அவைகளின் தன்மையையும் பின்வருமாறு ஆராய்வோம்.

முதலாவதாக, இலாபமீட்டும் நோக்குடன் பொதுத்துறை நிறுவனங்கள் இடைநிலைப் பொருள் மற்றும் மூலதனப் பொருள்களின்மீது அதிக விலைகளை நிர்ணயிக்கும்பொழுது, அப் பொருள்களை மூலப்பொருள்களாகக் கொண்டு உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் மற்ற தொழிலமைப்புகளில் உற்பத்திச் செலவு அதிகரித்து விடுகின்றது. எனவே பணவீக்கம் ஏற்படும் சூழ்நிலைகள் உருவாகிவிடுகின்றன என்பது இலாபமீட்டும் கொள்கைக்கு எதிரான வாதம்.

இக்கருத்து விஞ்ஞான அடிப்படையில் தோன்றிய கருத்தாக அமையவில்லை. சுங்கவரிக் குழு (Tarriff Commission) சிமெண்ட், இரும்பு உற்பத்தி போன்ற அடிப்படைத் தொழில்களில்கூட, தனியார்துறை அதிக இலாப விகிதத்தில் செயற்பட அனுமதி அளித்துள்ளது. எனவே, பொதுத்துறை மட்டும் இத் தொழில்களில் இலாபமீட்டக்கூடாது என வாதிடுதல் பொருத்தமானதாகத் தோன்றவில்லை. மேலும், உற்பத்திச் செலவு அதிகரித்து பொருள்களின் விலை அதிகரிக்கும்பொழுது, நாட்டில் பணவீக்கம் ஏற்படக்கூடும் என்ற கருத்தும் ஏற்றுக்கொள்ளப் படுவதிற்கில்லை. ஏனெனில், பேராசிரியர் ஆர்தர் லீவிஸ் (Prof. Arthur Lewis) உபரி விலைக் கொள்கை, (Surplus Price Policy) நாட்டின் பணப்புழக்கத்தில் பணத் தளர்வை (Deflationary) தோற்றுவிக்கக்கூடும் எனக் கூறுகிறர்.

இரண்டாவதாக, அரசு தன்னுடைய வருவாயை அதிகரிப்பதற்காக, இலாபமீட்டும் கோட்பாட்டை, நிரந்தரக் கொள்கையாக ஏற்படுத்திவிட முயற்சி செய்யும் எனவும், விலைகளை அதிகப்படுத்த நாடாளுமன்றத்தின் அனுமதிகூடப் பெறப்படுவ

தில்லை எனவும் வாதிடப்படுகின்றது. மேலும், நுகர்வோருக்கு வேறு வாய்ப்புகள் இல்லை என்ற காரணத்தினால் முற்றுரிமை பெற்றுள்ள சில பொதுத்துறை நிறுவனங்களின் மேலாளர்கள் பொருள்களின் விலைகளை அதிகரித்துக்கொண்டே செல்வர் என்ற கருத்தும் கூறப்படுகிறது.

ஆனால், மேற்கண்ட கருத்து அளவுக்கதிகமாகத் திரித்துக் கூறப்பட்டதாகும். ஜனநாயக நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நடவடிக்கைகள் அனைத்தும் நாடாளுமன்றம், அரசியல் மேடைகள், பத்திரிக்கைகள் போன்றவைகளின் திறனாய்வுக்குட்பட்டிருப்பதால் தன்னிச்சைக் கொள்கைகள் Despotic Policies) பின்பற்றப்பட வாய்ப்பில்லை. மேலும், பொதுத்துறை நிறுவனங்கள், குறிப்பிட்ட அமைச்சகத்தின் நேரடி மேற்பார்வையில் செயற்படுவதாலும், நுகர்வோர் ஆய்வாராய்வுக் குழுக்களால் (Consumers' Councils) நுண்ணாய்வு செய்யப்படுவதாலும் தன்னிச்சைக் கொள்கைகள் ஏற்பட இயலாது.

மூன்றாவது எதிர்வாதம் திறமைக் குறைவையும், அதிகரித்த செலவுகளையும் ஈடுசெய்ய, பொதுத்துறையின் பொருள்களுக்கு அதிக விலைகள் நிர்ணயிக்கப்படக்கூடுமென்ற கருத்து.

இக்கருத்தில் ஓரளவு உண்மையிருப்பினும், பொருத்தமான நடவடிக்கைகளின் மூலம் விலைகள் அதிகரிப்பதைத் தடுக்க முடியும். எடுத்துக்காட்டாக, சுயாட்சியுரிமை பெற்ற ஒரு குழுவை ஏற்படுத்தி, பொதுத்துறைப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு அக்குழுவின் நுண்ணாய்வுக்குற்பட்டது (Scrutiny) எனவும், அக்குழுவின் அனுமதியுடன்தான் கூடுதல் விலைகள் நிர்ணயிக்கப்படலாம் எனவும் அறிவிக்கப்படலாம்.

இவ்வாறு, ஒரு சில குறைபாடுகள் இலாபமீட்டும் கோட்பாட்டில் ஏற்பட வாய்ப்புகள் உண்டு என்றாலும் நடைமுறையில் பொருத்தமான அமைப்பு முறைகளாலும், விதிமுறைகளாலும் அக்குறைபாடுகள் முற்றிலும் களையப்பட்டுவிடலாம்.

நமது நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் இலாபமீட்டும் கோட்பாடு

நமது நாடு சுதந்திரம் அடைவதற்குமுன், இருப்புப்பாதைப் போக்குவரத்து, தபால்- தந்தி முதலிய ஒரு சிலத் தொழில்களைத் தவிர, மற்றனைத்துத் தொழில்களும் தனியார்துறையில்தான் அமைக்கப்பட்டிருந்தன. இதன் காரணமாக, அரசின் வருவாயில் பெரும்பகுதி, வரிகளின் மூலம்தான் கிடைத்துவந்தது. நாடு

சுதந்திரமடைந்த பிறகுதான், 1948, 1956, 1973 ஆகிய ஆண்டுகளில் தொழிற் கொள்கைகள் அறிவிக்கப்பட்டு பொதுத் துறை விரிவடைந்தது. ஐந்தாண்டுத் திட்டங்களிலும் கணிசமான அளவில் பொதுத்துறையின் வளர்ச்சிக்கு நிதி ஒதுக்கப்பட்டது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், போதிய முக்கியத்துவம் பொதுத்துறைக்கு அளிக்கப்படாததால், அவை ஈட்டக்கூடிய இலாபத்தைப் பற்றிய பிரச்சினை எழவில்லை. இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில், பொதுத்துறைக்கு ஓரளவு முக்கியத் துவம் அளிக்கப்பட்டு, பல அடிப்படைத் தொழில்கள் பொதுத் துறையில் அமைக்கப்பட்டிருந்தாலுங்கூட, அவைகளின் செயல் முறை இலாபநோக்குடன் அமைந்திருக்கவில்லை. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு அத்தியாவசியத் தொழில் களாகிய இரும்பு, உர உற்பத்தி, மூலதனப் பொருள்கள் உற்பத்தி போன்றவைகளை அரசு பொதுத்துறையில் அமைத்து, தனியார் துறைக்கு வழிகாட்டியாகவும், சரிசம தொழில் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையிலும் செயற்பட்டது. ஆனால், பொதுத் துறை ஈட்டும் இலாபம் அரசின் வருவாயை அதிகரிக்கும் என்ற எண்ணமே அப்போது இல்லை. சமீப காலங்களில்தான், அரசின் வருவாயில் கணிசமானதொரு பகுதியை, பொதுத்துறை ஈட்டக் கூடும் என்ற கருத்து வலிவு பெற்றது.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பொதுத்துறையின் வளர்ச் சிக்கு வகைசெய்தது. பொதுத்துறைத் தொழில்கள் இலாப மீட்டுதல்மூலம், அரசின் வருவாயை அதிகரிக்கச் செய்யலாம் என, 'திட்டக் குழு' (Planning Commission) கருத்துத் தெரிவித்தது. 1956ஆம் ஆண்டுத் தொழிற் கொள்கை, பொதுத் துறை ஈட்டும் இலாபம், அரசின் வருவாயை அதிகரிக்கச் செய்து புதிய பொதுத்துறைத் தொழில்களைத் தோற்றுவிக்கப் போதிய நிதி வசதியை ஏற்படுத்தும் என்று கூறியது.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்கப்படும்போது, பொதுத்துறையின் இலாபமீட்டும் விலைக் கோட்பாட்டைப் பற்றி ஆய்வுரை நிகழ்த்தப்பட்டது. பொதுத்துறை இலாப நோக் குடன் செயற்படவேண்டுமென்பதே பெரும்பான்மையோரின் கருத்தாக இருந்தது. இக்கருத்துப் பற்றி திட்டக் குழு (Planning Commission) பின்வருமாறு கூறியது: "பொதுத்துறைத் தொழிலமைப்புகள், பொருத்தமான விலைக் கொள்கையைப் பின்பற்றி திறமையுடன் செயற்பட்டால், அதிக இலாபமும் உபரிவருவாயும் ஏற்படும். வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் இவ்வாறு ஈட்டப்படும் இலாபம், அக்குறிப்பிட்ட தொழி

லமைப்புகளின் கூடுதலான வளர்ச்சிக்கோ அல்லது பொருளாதாரத்தின் மற்றப் பகுதிகளில் தேவைப்படும் தொழில் வளர்ச்சிக்கோ, தேவையான நிதியாகப் பயன்படும். எனவே, திறமையாகச் செயற்பட்டு அதிக இலாபத்தை ஈட்டுதல் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தலையாய கடமையாகும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில், இருப்புப் பாதைப் போக்குவரத்து ரூ. 100 கோடி உபரி வருமானம் ஈட்டக் கூடும் என எதிர்பார்க்கப்பட்டது. மேலும், மைய அரசின் மற்றப் பொதுத்துறை நிறுவனங்களிலிருந்து ரூ. 300 கோடியும், மாநில அரசு நிறுவனங்களிலிருந்து ரூ.150 கோடியும் உபரி வருமானமாக எதிர்பார்க்கப்பட்டது.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் பின்வரும் புள்ளி விவரங்களை அளித்தது:

மைய அரசின் நிறுவனங்கள் ஈட்டக்கூடிய இலாபம்	... ரூ. 760 கோடி
மாநில அரசு நிறுவனங்கள் ஈட்டக்கூடிய இலாபம்	... ரூ. 325 கோடி
கூடுதல்	ரூ. 1,085 கோடி

முதலீட்டின் மீதான வருமான விகிதம் - 11% முதல் 12% வரை.

பின்தங்கிய நாடுகளில் ஒன்றாக விளங்கும் நமது நாட்டின் பொதுத்துறை விலைக் கொள்கை வளர்ச்சியடைந்துள்ள நாடுகளின் விலைக் கொள்கையின் அடிப்படையில் அமையக்கூடாது. வளர்ந்துவரும் நாடுகளில், பொதுத்துறையின் விலைக் கொள்கை, விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் அமைதல் வேண்டும். மற்ற வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. தனியார் துறையின் ஆதிக்கமே அதிகம். எனவே, பொதுத்துறையின் விலைக் கோட்பாடு, 'இலாப-நட்ட' மில்லாக் கொள்கையாக அமைந்தாலும்கூட அதிக இழப்பு ஏற்பட்டுவிடாது. ஆனால் நமது நாட்டில் பொதுத்துறை விரைவாக விரிவடைந்து பொருளாதாரத்தின் பெரும்பகுதியை வளைத்துவிடுவதால், இலாப-நட்ட விலைக் கோட்பாடு முற்றிலும் பொருந்தாது. இலாபமீட்டும் விலைக் கோட்பாட்டைப் பின்பற்றினால்தான், அரசின் வருவாய் அதிகரித்து மேன்மேலும் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான நிதி வசதி ஏற்படும்.

நமது நாட்டில் சட்டநிலை

நமது நாட்டில் இலாபமீட்டும் கோட்பாட்டின் சட்டநிலையைக் காண்போம்.

பொதுத்துறையில், தனிச் சட்டங்களின் மூலம் தோற்றுவிக்கப்பட்டுள்ள பொதுக்கூட்டுரு அமைப்பு முறை நிறுவனங்கள் அனைத்துமே, இலாபமீட்டும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. ஒரு சில நிறுவனங்கள்தான் இலாபத்தின் அடிப்படையில் செயற்படுகின்றன. அவ்வாறு இயங்க தனிச் சட்டங்கள் வகைசெய்கின்றன. எடுத்துக்காட்டாக, 'மாநில நிதிக் கூட்டுருச் சட்டம்-1951', பிரிவு-24 பின்வருமாறு கூறுகின்றது: "இச்சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் இயக்குநரவை வாணிகக் கொள்கைகளின் அடிப்படையில் (Business Principles) செயற்படும்'. ஆனால், 1948 ஆம் ஆண்டு தொழில் நிதிக் கூட்டுருச் (Industrial Finance Corporation Act, 1948) சட்டத்தில் அவ்வாறு வகை செய்யப்படவில்லை. இருந்தபோதிலும் இத்தொழிலமைப்புதான் அதிக இலாபத்தை ஈட்டுகின்றது.

1953ஆம் ஆண்டு வான வழிக் கூட்டுருச் சட்டம் (Air Corporation Act, 1953) முடிந்தவரை, வாணிகக் கொள்கையின் அடிப்படையில் இக்கூட்டுரு செயற்பட வகைசெய்தது. அது போன்றே, சாலைப் போக்குவரத்துச் சட்டத்தின் 22ஆம் பிரிவு, வாணிகக் கொள்கைகளே ஒரு பொதுக் கூட்டுருவின் அடிப்படையாக அமையவேண்டும் எனக் கூறுகிறது.

ஆனால், பொதுக் கூட்டுரு தோற்றுவிக்கப்பட காரணமாக அமைந்த எந்த தனிச் சட்டமும், இலாபமீட்டும் திறமைக்கு அதிகபட்ச எல்லையை நிர்ணயிக்கவில்லை. முற்றுரிமை பெற்றுள்ள பொதுத்துறை நிறுவனங்கள் இவ்வுரிமையைத் தவறாகப் பயன்படுத்தக்கூடும். எனவே, நுகர்வோரின் நலனைக் காக்க, இச்சட்டங்கள் பொதுத்துறை நிறுவனங்கள் ஈட்டக்கூடிய இலாபத்திற்கு அதிகபட்ச எல்லையை நிர்ணயித்தல் வேண்டும். இருந்தபோதிலும் நடைமுறையில் இதுவரை இலாபமீட்டும் உரிமை தவறான முறைகளில் பொதுத்துறையால் பயன்படுத்தப்படவில்லை.

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் உற்பத்திச் செலவுகளை மட்டுமல்லாமல், மூலதனத்தின் மீதான வட்டியையும் திரும்பப்

பெறவேண்டுமென எதிர்பார்க்கப்பட்டாலும் இரண்டு விதச் சட்டங்களில்தான் இக்கருத்து குறிப்பிடப்பட்டுள்ளது.

'மின்சார அளிப்புச் சட்டத்'தின் 59-வது பிரிவு எக்காரணம் கொண்டும் இத்தொழிலமைப்பு நட்டத்தில் நடைபெறக்கூடாது எனக் கூறுகின்றது. அதுபோன்றே "சாலைப் போக்குவரத்துக் கூட்டுருச் சட்டம்" (Road Transports Corporations Act) மூலதனத்தின் மீதான வட்டியும் இலாப விகிதமும் கணக்கிடப் படல்வேண்டுமென விளக்கம் தருகின்றது.

பெரும்பான்மையான பொதுக் கூட்டுருச் சட்டங்கள் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் ஈட்டும் இலாபமனைத்தும் சேமிப்பு நிதிக்கு மாற்றப்பட்டு, பின் அரசின் கருவூலத்திற்கு மாற்றப்படவேண்டும் எனக் கூறுகின்றன. எடுத்துக்காட்டாக, "1948ஆம் ஆண்டு தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுருச் சட்டத்"தின் 37-வது பிரிவு நிகர இலாபம் அனைத்தும், அரசின் கருவூலத்திற்கு அனுப்பப்படவேண்டுமெனக் கூறுகிறது. இது போன்றே 1951ஆம் ஆண்டு மாநில நிதிக் கூட்டுருச் சட்டமும் வகை செய்துள்ளது.

கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையில் தோற்றுவிக்கப் பட்டத் தொழிலமைப்புகளின் (அரசு நிறுவனங்கள்) இலாபக் கொள்கை ஜனாதிபதியால் முடிவு செய்யப்படுகிறது. அரசின் கருவூலத்திற்கு மாற்றப்படும் இலாப விகிதம் பற்றி இயக்கு நரவை மூலம் அரசே முடிவு செய்கிறது.

சில பொதுக் கூட்டுரு நிறுவனங்கள் வட்டிக்குப் பதிலாக இலாப ஈவு வழங்கவும் அனுமதிக்கப்படுகின்றன. இலாப ஈவு விகிதம் குறிப்பிட்ட எல்லைக்குட்பட்டு நெகிழுந்தன்மையுடன் செயற்படுகிறது. இதுபோன்று, இங்கிலாந்து நாட்டின் பொதுக் கூட்டுருச் சட்டங்களில்கூட வகை செய்யப்படவில்லை.

பெரும்பான்மையான சட்டங்கள் தொழிலமைப்பின் இலாபமனைத்தும் சேமிப்பு நிதியில் வரவு வைக்கப்படல் வேண்டுமென்றும், அந்நிதியைப் பயன்படுத்தும் முறைபற்றி அரசு ஆணைகள் பிறப்பிக்கும் எனவும் கூறுகின்றன. ஆனால், சேமிப்பு நிதியின் அளவுபற்றி எவ்வித நிர்ணயமும் செய்யப் படாதது ஒரு குறையாகும். இதனால் சேமிப்பு நிதியமைப்பில் ஒருங்கிணைந்த முறை ஏற்படாமல் ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் தனித் தனியான அளவுகளைப் பின்பற்றக்கூடும். இது சரிசம தொழில் வளர்ச்சியைப் பாதிக்கும்.

வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாடு (Discriminating Price Policy)

பல பொதுத்துறை நிறுவனங்கள் வழங்கும் பொருள்கள் அல்லது பணிகள், நாட்டு மக்களிடையே முக்கியத்துவத்தில் பெருமளவு வேறுபடுகின்றன. பல நிலைகளில் உள்ள நுகர்வோர், ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது பணியைப்பெறப் போட்டியிடும்போது, அப்பொருள் அல்லது பணிக்கு பல விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றது. வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாடு என்பது, ஒரு குறிப்பிட்ட பொருள் அல்லது பணிக்கு நுகர்வோரைப் பொறுத்தும் அல்லது நோக்கங்களைப் பொறுத்தும், வேறுபட்ட விலைகளை நிர்ணயித்தலாகும். எனவே, பொருள் அல்லது பணி ஒரே தன்மையுடையதாய் இருக்கும்; ஆனால் விலைகள் வேறுபடும். ஒரு சில நுகர்வோருக்கு அல்லது நோக்கங்களுக்கு விலை குறைவாகவும், மற்ற நுகர்வோர் அல்லது நோக்கங்களுக்கு அதிக விலையும் நிர்ணயிக்கப்படும். எடுத்துக்காட்டாக, விவசாயத் தேவைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் மின்சாரம் வழங்கப்படுதலும், குடும்ப நுகர்விற்கும் மற்றக் காரணங்களுக்கும் அதிகக் கட்டணத்தில் வழங்கப்படுதலையும் கூறலாம். இது போன்றே போக்குவரத்துத் துறையில், போக்குவரத்துக்கான தேவை நெகிழ்ச்சியற்றதாக இருக்கும்பொழுது அதிகக் கட்டணமும், நெகிழ்ச்சியுடையதாக இருக்கும்பொழுது குறைந்த கட்டணமும் வசூலிக்கப்படுவதைக் கூறலாம். இதை 'ஏற்கும் அளவு விதிக்க' என்னும் கொள்கையின் (The Theory of Charging What the Traffic Will Bear) அடிப்படையில் அமைக்கின்றனர்.

மேலும், போக்குவரத்துத் துறையில் இக்கோட்பாடு முழுமையாகப் பயன்படுத்தப்படுகின்றது. சுமந்து செல்லப்படும் சரக்குகளின் தரம், மதிப்பு, விலை இவற்றிற்கேற்ப போக்குவரத்துக் கட்டணங்கள் விதிக்கப்படுகின்றன. குறைந்த மதிப்பும், தாழ்ந்த தரமும் கொண்ட சரக்குகளுக்குக் குறைவான கட்டணமும், அதிக மதிப்பும் உயர்ந்த தரமும் கொண்ட சரக்குகளுக்கு உயர்ந்த கட்டணமும் விதிக்கப்படுகின்றன. அதாவது, போக்குவரத்தின் தாங்கு வலிமைக்கு ஏற்ப, போக்குவரத்துக் கட்டணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இருப்புப்பாதைப் போக்குவரத்து மற்றும் பிற போக்குவரத்து அமைப்புகளும் வேறுபாடுடைய விலைக் கோட்பாட்டையே பின்பற்றுகின்றன.

வேறுபாடுடைய விலைகள் நிர்ணயிக்கப்படும்பொழுது, பல பொருள்களின்-தேவைகளின் தீவிரம் (Intensity of Demand) அடிப்படையாகக் கொள்ளப்படுகிறது. பல பகுதிகளின் பணிகள்

ஒன்றுடன் ஒன்று போட்டியிடும்பொழுது, எல்லை நிலை உற்பத்திச் செலவின் அடிப்படையில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. சிறிதும் நட்டம் ஏற்படாத வகையிலும், தேவைப்பட்டால், இலாப மீட்டக்கூடிய முறையில் ஒவ்வொரு பொருளுக்கும் அல்லது பணிக்கும் விலை நிர்ணயிக்கப்படவேண்டும். விலைக் கொள்கை ஒருபுறம் 'பணிச் செலவின்' (Cost of Service) அடிப்படையிலும் மறுபுறம் 'பணி மதிப்பின்' (Value of Service) அடிப்படையிலும் நிர்ணயிக்கப்படவேண்டும். சில சந்தர்ப்பங்களில் பணி மதிப்பின் (Value of Service) அடிப்படையில் அமைந்த விலைக் கொள்கை சமுதாயக் கண்ணோட்டத்திலும் நிதிக் கண்ணோட்டத்திலும், நியாயமானதாகக் கருதப்படுகின்றது. ஆனால், நியாயமற்ற அடிப்படையில் அமைக்கப்படும் வேறுபாடுடைய விலைக் கொள்கை சமுதாய நலனைப் பாதிக்கும்.

'வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாடு' நடுநிலைமையுடன் பயன்படுத்தப்பட்டால், விரைவான சமுதாய முன்னேற்றம் ஏற்படும். சில நேரங்களில் சில பணிகள் வழங்கமுடிவதற்குக் காரணமாக அமைவதே இக்கோட்பாடுதான். இல்லாவிடில் அப்பணிகள் வழங்கமுடியாமல் போகலாம். மேலும் வேறுபாடுடைய விலைக் கொள்கை, செல்வந்தர்கள், ஏழை மக்கள் ஆகிய இரு சாராருக்குமே நன்மை பயக்கிறது. பொருள்களின் விலைகளில் அடங்கியிருக்கும் 'பகுபடாச் செலவு'களின் (Indivisible Expenses) ஒரு பகுதி ஏழைமக்களால் பகிர்ந்து கொள்ளப் படுவதால் செல்வம் படைத்த நுகர்வோர்கள் ஓரளவு குறைந்த விலையையே அளிக்கின்றனர். எனவே அவர்கள் பெருமளவில் பயன்பெறுகின்றனர். ஏழை மக்களோ மிகக்குறைந்த விலையில் பொருள்களைப் பெறுவதன் மூலம் பயனடைகின்றனர். இவ்வாறு, சமுதாயத்தின் எல்லா நிலையிலுள்ள மக்களும் வேறுபாடுடைய விலைக் கொள்கையால் நன்மையடைகின்றனர் எனக் கூறலாம். இக்கோட்பாட்டைப் பற்றி ஆர்தர் லீவிஸ் (Arthur Lewis) பின் வருமாறு தனது கருத்தைக் கூறுகிறார்: இக்கோட்பாடு உத்தம அளவு உற்பத்திக்கு வழிவகுத்து, அதிகப் பயன்பெறும் நுகர்வோர் அதிக விலையை அளிக்கும்படி செய்துவிடுகிறது. சில சந்தர்ப்பங்களில் அனைவருமே குறைந்த விலையை அளிக்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

உற்பத்தியை அதிகரிக்கச்செய்ய முதலீட்டை ஊக்குவித்து நுகர்வைக் குறைக்கவேண்டும். நிலக்கரி, தாது எண்ணெய், மின்சாரம் போன்றவை பெருமளவில் உற்பத்திக்கும் பயன் படுத்தப்படுகின்றன; நுகர்வுக்கும் (Consumption) பயன்படுத்தப்

படுகின்றன. எனவே, உற்பத்தித் தேவைகளுக்குக் குறைவான விலையையும், மற்ற நுகர்வுக் காரணங்களுக்கு அதிக விலையையும் நிர்ணயித்தல் மூலம், உற்பத்தியை அதிகரித்து நுகர்வைக் குறைக்கலாம். இதன் பயனாய், விரைவான தொழில் வளர்ச்சி ஏற்பட வாய்ப்பேற்படுகிறது.

வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாடு பல வழிகளில் செயற்படுகிறது. அவைகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம் :

(1) நுகர்வோருக்கிடையே வேறுபாடுடைய விலையை நிர்ணயித்தல்.

(2) இடங்களுக்கிடையே வேறுபாடுடைய விலைக்கொள்கை.

(3) பல தன்மைகள் கொண்ட பணிகளுக்கிடையேயான வேறுபாடுடைய விலைக் கொள்கை.

போக்குவரத்துத்துறை, மின்சாரம் வழங்கல், எரிவாயு விநியோகம் போன்ற பொதுப்பயன் நிறுவனங்களில்தான் இக்கோட்பாடு அதிக அளவில் பின்பற்றப்படுகிறது.

வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாட்டிற்குத் தேவையான நிபந்தனைகள் (Necessary Conditions for Price Discrimination)

வேறுபாடு கண்டறியும் விலைக் கொள்கை வெற்றிபெற பின்வரும் நிபந்தனைகள் இன்றியமையாதவை :

(1) 'அளிப்புப் பகுதியில்' (Supply Side) முற்றுரிமை இருக்கவேண்டும்.

(2) பொருள்கள் அல்லது பணிகளுக்கான தேவை (Demand) தனித் தனியே சந்தைகளின் அடிப்படையில் பாகுபடுத்தக்கூடியதாகவும், ஒவ்வொரு பிரிவும் தனித் தனியே நெகிழ்ந்திறனைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

(3) குறைந்த விலைகளில் கொள்முதல் செய்யப்பட்ட பொருள்கள், அதிக விலைகளில் திரும்பவும் விற்கப்பட முடியாத வகையில் சந்தைகள் பல கூறுகளாகத் தனித் தனியே பிரிக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

இவ்வாறு மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் வேறுபாடு கண்டறியும் விலைக் கோட்பாடு அமையக்கூடுமானால்,

பொதுத்துறையை அது வெற்றிப்பாதையில் அழைத்துச் செல்லும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

விலை நிர்ணயிக்கும் பொறுப்பு

தனியார்துறையில், அரசின் விதிமுறைகளுக்குட்பட்டும், பங்குதாரர்களின் விருப்பப்படியும் மேலாளர்களால் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால், பொதுத்துறையில் விலை நிர்ணயப் பொறுப்பு, குறிப்பிட்ட துறையின் அமைச்சர், மேலாளர் முதலியவர்களிடையே பரவலாக்கப்பட்டுள்ளது (Diffused). இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவைகளில் ஒரு சில முக்கியக் காரணங்களைக் காணலாம்.

(1) பொதுத்துறையின் முற்றுரிமை இயல்பு நுகர்வோரின் நலனைப் பாதிக்காத வகையில் செயற்படவும்,

(2) வரி செலுத்தும் நாட்டு மக்களைப் பொதுத்துறையின் மேலாளர்கள் அதிக அளவில் சுரண்டுதலைத் தவிர்க்கவும்,

(3) பொருத்தமான விலை மற்றும் இலாபமீட்டும் கொள்கையின் அடிப்படையில் சமுதாயப் பொருளாதார நன்மைகளை அடையவுமாகும்.

நமது நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் விலைக் கோட்பாடு (Price Policy of Public Enterprises in India)

நமது நாட்டில், நீண்ட காலமாகப் பொதுத்துறைக்கென நிரந்தர விலைக் கோட்பாடு வகுக்கப்படவில்லை. காரணம் யாதெனில், ஐந்தாண்டுத் திட்டங்களும், தொழிற்கொள்கைகளும் தோன்றுவதற்குமுன் பொதுத்துறைக்கு எவ்வித முக்கியத்துவமும் அளிக்கப்படவில்லை. இருப்புப்பாதைப் போக்குவரத்து, தபால்-தந்தி போன்ற ஒரு சில தொழிலமைப்புகள் மட்டுமே பொதுத்துறையில் இயங்கிவந்தன. இருப்புப் பாதைப் போக்குவரத்துத் துறை, தன் வருவாயிலிருந்து சிறிதளவுத் தொகையை அரசின் கருவூலத்தில் செலுத்துமாறு வகை செய்யப்பட்டிருந்தது. அதற்கு ஏற்றாற்போல் அதன் விலைக் கொள்கை அமைந்திருந்தது.

வளர்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்தைச் சீர்ப்படுத்தவும், அடிப்படைத் தொழில்கள், வாணிகம், வங்கித் தொழில், ஆயுள் காப்பீடு போன்றவை பொதுத்துறையில் அமைக்கப்பட்டு முன்னோடியாகச் செயற்படவும் ஐந்தாண்டுத் திட்டங்களில் போதிய வழிவகைகள் செய்யப்பட்டன. முதல் ஐந்தாண்டுத்

திட்டத்திலும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திலும், பொதுத் துறை நிறுவனங்கள் அரசின் முகவர்களாகக் (Agents) கருதப் பட்டனவேதவிர, இலாபமீட்டும் கொள்கை செயற்படுத்தப்பட வில்லை. உண்மையில் பொருத்தமான விலைக் கொள்கைகளின் மூலம், பொதுத்துறைத் தொழிலமைப்புகளும் இலாபமீட்டக் கூடும் என்ற நம்பிக்கையே இருந்ததில்லை. பொதுத்துறை ஒரு அவசியத் தேவையாகக் கருதப்பட்டு, பொது நலனுக்காகச் செயற்பட்டுவந்தது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில், பொதுத்துறைத் தொழி லமைப்புகள் இலாப-நட்டமில்லா விலைக் கொள்கையைப் பின்பற்றிச் செயற்படவேண்டுமென அறிவித்தது. கோர்வாலா குழுவும் (Gorwala Committee) பொதுத்துறைத் தொழில்கள் இலாப-நட்டமில்லா விலைக் கோட்பாட்டின் அடிப்படையில்தான் இயங்கவேண்டுமெனக் கருதியது.

ஆனல், பொதுத்துறை படிப்படியாக விரிவடைய ஆரம்பித்த வுடன் இலாப-நட்டமில்லாக் கோட்பாடு சிறிது சிறிதாக மறையத் தொடங்கியது. வளர்ந்துவரும் பொருளாதாரத்தில் அரசு பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கிறது. எனவே, அரசின் நிதிப்பளு அதிகரித்தது இயற்கையே. மேன்மேலும் தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தி நாட்டைத் தொழில்மயமாக்க அரசு விரும்பியது. ஆனல், அதற்கு அதிக அளவில் நிதி வசதிகள் தேவைப்பட்டன. குறிப்பாக, பொதுத்துறைத் தொழில்களைத் தோற்றுவிக்க அரசு அதிக அளவில் மூலதனச் செலவுகளை மேற்கொள்ளவேண்டியிருந்தது. எனவே போதிய நிதி வசதியையும், அதிகரித்த வருவாயையும் பெறுவதற்காகப் பொதுத்துறையில் இலாபமீட்டும் கோட்பாடு அறிமுகப்படுத்தப்பட்டது. பல வருடங்களுக்கு முன்பே, 'வரி விசாரணைக் குழு', (The Taxation Enquiry Commission) பொதுத் துறையின் முற்றுரிமைத் தன்மையைப் பயன்படுத்துதல் மூலம், அதிக வருவாயை ஈட்ட அரசு தயங்கவேண்டியதில்லை என தனது கருத்தை வலியுறுத்தியது.

இற்றைய நாட்களில் பொதுத்துறையின் விலைக் கொள்கை உற்பத்திச் செலவின் அடிப்படையில் மட்டும் அமைந்துவிடாமல் உபரி வருவாயை ஈட்டக்கூடிய வகையிலும் செயற்படுகின்றது. பொதுத்துறை ஈட்டக்கூடிய இலாபம் அரசின் வருவாயை அதிகரித்து, விரைவான மூலதன அமைப்பை ஏற்படுத்தும் என நம்பப்படுகிறது. அரசு, பொருளாதார முன்னேற்றத்தைப் பெற பொதுக் கடனையும், வரி வருவாயையும் சார்ந்திருக்கிறது.

அரசின் வரி வருவாயும், பிற வருவாய்களும் போதுமானவைகளாக இல்லாமையால், பொதுக்கடன் (Public Debt) பெறப்படுகிறது. சாதாரண காலங்களில் மேற்கண்ட முறைகளில் திரட்டப்படும் வருவாய் செலவினங்களுக்குப் போதுமானதாக உள்ளது. போர்க்காலங்கள், பொருளாதார முன்னேற்றத் திட்டக் காலங்கள் ஆகியவற்றில் அரசு அதிக மூலதனத் தேவையைக் கொண்டிருக்கிறது. மேலும், வரிகளின் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவுவரைதான், அரசு நிதியைப் பெறமுடியும். அளவுகடந்த விகிதத்தில் வரி விதிக்கப்பட்டால் நாட்டு மக்களின் வரிச்சுமை அதிகரித்துவிடும். அதுபோன்றே, பொதுக்கடனும் ஒரு எல்லைக் குட்பட்டதுதான். பொதுக்கடன் அதிகமானால், வட்டிப்பளு (Interest Burden) அதிகரித்துவிடும். எனவே, அதிக வருவாயை அரசு ஈட்ட சிறந்த வழி, பொதுத்துறையில் இலாபமீட்டும் கோட்பாட்டைப் பின்பற்றுதலாகும். பொதுத்துறை உற்பத்தி செய்யும் பொருள்கள் அல்லது பணிகளின்மீது நியாயமான இலாப அடிப்படையில் விலைகளை நிர்ணயித்தால் அரசு அதிகமான வருவாயை ஈட்டமுடியும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், ரூ. 287 கோடி பொதுத்துறையால் இலாபமாக ஈட்டப்பட்டது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டம், பொதுத்துறை ரூ. 2,029 கோடி உபரி வருவாயை ஈட்டும் என மதிப்பிட்டுள்ளது. டாக்டர் வி.கே.ஆர். வி. ராவ் (Dr. V. K. R. V. Rao) "மாறிவரும் பொருளாதார சமுதாயத்தில், பொதுத்துறை இலாபமீட்டுதல் தவிர்க்கமுடியாத செயல்" எனக் கருதுகிறார். பொதுத்துறை நிறுவனங்களுக்குப் பல வழிகளிலும் அரசு நிதி உதவி அளிக்கிறது. மானியங்கள், கடன்கள், மூலதனத்தில் பங்கு பெறுதல் போன்ற பல வழிகளிலும் நிதி உதவி அளிக்கப்படுகிறது. எனவே, பொதுத்துறை ஈட்டும் நிகர இலாபம், அரசுக்கே சேரவேண்டும் என்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமானதொரு கருத்தாகும். ஆனால், பொதுநலன் பாதிக்கப்படாத வகையில் பொதுத்துறையின விலைக் கோட்பாடு அமையவேண்டும். அவ்வப்பொழுது அரசு பொதுத்துறை நிறுவனங்களுக்கு விலைக் கோட்பாட்டை அமைக்கும் முறைகள் பற்றி அறிவுரை கூறி வழிகாட்டவேண்டும்.

'பொதுத்துறையின் மீதான ஆய்வுக் குழு' (The Study Team on Public Sector) உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள், இலாபகரமாகச் செயற்பட்டு, அரசுக்கு வருவாயை அளித்து, தங்களுடைய வளர்ச்சிக்கும் சுய-

நிதி ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டுமெனக் கூறியது. சில நிறுவனங்கள், விரிவான பொதுநலக் கொள்கைகளின் காரணமாக இலாபமீட்ட முடியாவிட்டாலும்கூட, உற்பத்திச் செலவு போன்ற செலவினங்களை மட்டுமாவது ஈடுகட்டும் வகையில் செயற்படவேண்டும் எனக் கருதப்படுகின்றது.

விலைக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவங்கள் (Criteria of Price Policy)

"பொதுத் துறையின் மீதான ஆய்வுக் குழு," (The Study Team on Public Sector) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் விலைக் கோட்பாட்டின் அடிப்படைத் தத்துவங்களைப் பின் வருமாறு பாகுபடுத்துகின்றது.

(i) பொது நலனைக் காத்தல் போன்ற ஒரு சில கட்டாய சந்தர்ப்பங்களைத் தவிர, மற்ற நேரங்களில் முடிந்த வரையில் பொதுத்துறை நிறுவனங்கள் நட்டத்தில் செயற்படுவதைத் தடுத்தல்வேண்டும்.

(ii) பொதுப்பயன் நிறுவனங்களைப் பொறுத்தவரை, முதலீட்டின் மீதான வருவாயைவிட உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்; எல்லை நிலை உற்பத்திச் செலவுக்குச் சமமாக விலைகள் அமையும் நிலை வரை உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும்.

(iii) இலாபமீட்டும் வகையில் விலைக் கொள்கை நிர்ணயிக்கப்படும்பொழுது, பொருளின் தேவையைப் பொறுத்து, முடிந்தவரை நிர்ணயிக்கப்பட்ட திறன் அளவு வரை உற்பத்தி அதிகரிக்கப்படவேண்டும்.

(iv) உற்பத்தித் தொழில்களில் ஈடுபட்டுள்ள பொதுத்துறை நிறுவனங்கள், மிக அதிக அளவில் இலாபமீட்டுதல் மூலம் மூலதன வளர்ச்சியை ஏற்படுத்துதல் வேண்டும்.

நமது நாட்டில் பொதுத்துறை நிறுவனங்கள், அரசினால் அவ்வப்பொழுது வழங்கப்படும் விதிமுறைகளின்படியும், தத்தம் நிதி நிலையைப் பொறுத்தும், அளிப்பு-தேவை ஆகியவைகளின் தன்மையைச் சார்ந்தும் வெவ்வேறு வகையான விலைக் கோட்பாடுகளைப் பின்பற்றுகின்றன.

சில முக்கிய பொதுத்துறை நிறுவனங்களின் விலைக் கோட்பாடுகள்

விலைக் கோட்பாட்டைப் பற்றிய இப்பகுதியை முடிக்குமுன், நமது நாட்டில் உள்ள சில முக்கிய பொதுத்துறை நிறுவனங்

களின் விலைக் கோட்பாடுகளைப் பற்றி, சுருக்கமாகக் காண்போம்.

1. இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை (Integral Coach Factory)

நமது நாட்டிலுள்ள பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் மிகவும் முக்கியமானதும், வெற்றிகரமாகச் செயற்பட்டு வருவதும்தான் இந்த இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை. இத் தொழிற்சாலை உற்பத்திசெய்யும் பொருள்களனைத்தும், இந்திய இருப்புப்பாதைத் துறையால் கொள்முதல் செய்யப்படுவதால், இத்தொழிலமைப்பில் விலைக் கொள்கைக்கோ அல்லது இலாப நோக்கத்திற்கோ அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை யென இருப்புப்பாதைத் துறை அமைச்சகம் கூறியுள்ளது எனினும், பொருள்களின் விலைகளில், தொழிலின் உற்பத்திச் செலவும் மற்ற நடைமுறைச் செலவுகளும் அடங்குமாறு விலைக் கொள்கை அமைக்கப்படுகிறது. உற்பத்திச் செலவுகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப, விலைகளும் மறு ஆய்வு செய்து மாற்றியமைக்கப்படுகிறது. விற்பனை விலைகளுக்கும், உற்பத்திச் செலவுகளுக்கும் இடையே உள்ள வேறுபாட்டுத் தொகை, 'முன்னேற்ற இடைநிலைக் கணக்கி'ற்கு (Development Suspense Account) மாற்றப்படுகிறது. இக்கணக்கில் உள்ள பற்று அல்லது வரவு இருப்பைப் பொறுத்தும் சில சமயங்களில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

2. இந்துஸ்தான் வான்கலம் லிமிடெட் (Hindustan Aircraft Ltd.)

இப்பொதுத்துறை நிறுவனத்தில், எவ்வித நிரந்தர விலைக் கோட்பாடும் பின்பற்றப்படவில்லை. இயக்குநரவையால் விலைக் கொள்கை நிர்ணயிக்கப்படுகிறது. போர்க்காலங்களில் இந் நிறுவனத்தின் முழுத்திறனும் அரசால் பயன்படுத்தப்படுகிறது. போர் முடிவடைந்தவுடன் பின்தொடர்ந்து மூன்று ஆண்டுகளிலும் 12½% இலாபமீட்டும் நோக்குடன், 'செலவுடன்கூடிய'க் (Cost Plus Basis) கொள்கை, விலை நிர்ணயத்திற்கு அடிப்படையாக விளங்கியது. ஆனால், இந்த அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட விலைகள் அதிக அளவில் இருந்தன என, '1950ஆம் ஆண்டு விமானப் போக்குவரத்து விசாரணைக் குழு' (Air Transport Enquiry Committee) கருதியதால் விலைகள் அனைத்தும் கணிசமான அளவில் குறைக்கப்பட்டன.

'இந்துஸ்தான் வான்கலம்' நிறுவனத்தினுல் பயன்படுத்தப் படும் மூலப்பொருள்கள், வேலையின் அளவு போன்றவைகளின்

அடிப்படையில், 'இந்திய விமானப்படை'யின் உற்பத்தித் திட்டங்களில் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. பொதுவாக, உற்பத்தித் தொழில்களுக்கு அரசு, 5% லிருந்து 6% வரை இலாப மீட்டும் அனுமதியை வழங்கியுள்ளது.

3. இருப்புப்பாதைத் துறை (Railways) (ரெயில் போக்குவரத்து)

இந்தியாவில் இருப்புப்பாதைப் போக்குவரத்து முதன் முதலாகத் துவங்கியது 1853ஆம் ஆண்டிலாகும். அப்போது 22 மைல் நீளமுள்ள இருப்புப்பாதையே அமைக்கப்பட்டிருந்தது. இன்று அதன் நீளம் ஏறத்தாழ 36,500 மைலாக வளர்ந்துள்ளது. நமது நாட்டில் தொடக்கத்தில் இருப்புப்பாதைப் போக்குவரத்து ஆங்கிலேய நிறுமங்களால் நடத்தப்பட்டு வந்தன. தாம் செலுத்தும் மூலதனத்திற்கு 5% இலாபமாவது கிடைக்கும் என்ற பொறுப்புறுதியுடன் செயற்பட்டன. ஆனால், எதிர்பார்த்தபடி போதிய இலாபம் ஏற்படவில்லை. இறுதியாக, அக்வோர்த் குழு (Ackworth Committee) செய்த பரிந்துரையின் பேரில், 1925ஆம் ஆண்டிலிருந்து ரெயில் நிறுமங்கள் ஒவ்வொன்றாக நாட்டுடைமையாக்கப்பட்டு வந்தன. இன்று நம் நாட்டில் ரெயில் போக்குவரத்து அரசின் உரிமைக்கும், நிருவாகத்துக்கும் உட்பட்டு இயங்கி வருகிறது. நிதி சம்பந்தமாக இருப்புப்பாதைத் துறைக்கும் மத்திய அரசுக்குமிடையே ஓர் உடன்பாடு இருந்துவருகிறது. 1960ஆம் ஆண்டில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி, அரசு அளித்துள்ள கடன் மூலதனத்தின் மீது (Loan Capital) 4.25%ஐ பொறுப்புறுதி செய்யப்பட்ட பங்காதாயமாக (Guaranteed Dividend) இருப்புப்பாதைத் துறை அரசுக்கு வழங்கவேண்டும். அத்துடன் தனது இலாபத்திலிருந்து ஆண்டுதோறும் ஒதுக்கீடு செய்வதன் மூலம் ரெயில் வளர்ச்சி நிதி, ரெயில் தேய்மான நிதி என்ற இருவகை நிதிகளை அது ஏற்படுத்தவேண்டும். 1966-'67க்கு முன்புவரை இருப்புப்பாதைத் துறை கணிசமான அளவு இலாபம் ஈட்டி வந்தது. ஆனால் அதற்குப் பிறகு நட்டம் ஏற்பட ஆரம்பித்தது. 1976-'77ஆம் ஆண்டில், கணிசமான இலாபம் இருப்புப்பாதைத் துறையால் ஈட்டப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியதொரு செய்தியாகும்.

இருப்புப்பாதைப் போக்குவரத்திற்குரிய பயணக் கட்டணங்கள் மற்றும் விகிதங்களை நிர்ணயிப்பதில், சில அடிப்படைக் கருத்துக்கள் கவனிக்கப்படவேண்டுமென, 'இருப்புப்பாதைத் துறை அமைச்சகம்' அறிவித்தது. ரெயில் துறை வாணிகஞ் சார்ந்தத் தொழிலாக இருப்பினும், வழக்கத்தில் அதுபோல் கருதப்படுவதில்லை. பொதுநலனைப் பேணிக்காக்கும் நோக்கத்

துடன், நாட்டு மக்களுக்குக் குறைந்த பயணக் கட்டணத்தை நிர்ணயிக்கவேண்டியதொரு பொதுத்துறை நிறுவனமாகச் செயற்படுகின்றது. மற்ற சாதாரண வாணிகஞ் சார்ந்தத் தொழிலமைப்புகளைப் போன்று, அதிக இலாபமீட்டும் கொள்கையுடன் ரெயில்துறை பணிபுரியக்கூடாது. நாட்டின் வாணிக வளர்ச்சிக்கும், விலைவாசிகள் ஒரே சீராக அமைவதற்கும், நாட்டின் பாதுகாப்பை வலுப்படுத்துவதிலும், பஞ்ச காலங்களில் உணவுப் பொருள்களைப் பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட இடங்களுக்குக் கொண்டு செல்வதிலும் ரெயில் போக்குவரத்து பணி ஆற்ற வேண்டும். பெரிய அளவில் நீண்ட தொலைவுக்கு ஏற்றிச் செல்லக்கூடிய பொருள்களுக்குக் கட்டணங்கள் குறைவாக நிர்ணயிக்கப்படவேண்டும். எனவே, 'கட்டணங்கள் மற்றும் சத்தங்கள்' (Fare and Freight) நிர்ணயிப்பதில் ரெயில் துறை பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொள்ளவேண்டும் :

(i) போக்குவரத்து வசதியை அளிப்பதற்காகச் செய்யப் படும் செலவுகளை அக் கட்டணங்கள் ஈடுசெய்ய வேண்டும்.

(ii) போக்குவரத்துக் கட்டணங்கள் போக்குவரத்தைப் பெருக்குவதற்குத் துணைசெய்யவேண்டும். 'குறைந்த கட்டணம், மிகுந்த போக்குவரத்து' என்ற குறிக் கோளோடு அவை செயற்படவேண்டும்.

(iii) போக்குவரத்து வசதிக்காகச் செய்யப்படும் செலவு களில் ஒவ்வொரு கட்டணமும் நியாயமாகத் தனக்குரிய பங்கை ஏற்கவேண்டும். சந்தர்ப்பங்களையும், பொருள் களையும் பொறுத்து போக்குவரத்துக் கட்டணங்கள் ஓரளவு மாறுபடலாமெனினும் நியாயமற்றது எனக் கருதப்படும் அளவுக்கு வேறுபாடு இருக்கக்கூடாது.

(iv) கட்டணங்களைத் தீர்மானிக்கும்பொழுது, ரெயில் துறை யானது தான் இயங்கும் சூழ்நிலைகளையும், தனது தன்னியல்புகளையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

(v) ரெயில் போக்குவரத்தின் செயல்முறையில் குறுகிய காலத்தில் (Short Run) அதன் செலவுகள் பெருமளவில் மாறுதவை. எனவே போக்குவரத்துப் பெருகப் பெருக, ரெயிலின் சராசரிச் செலவு குறையும். அதாவது 'குறைந்து செல் அடக்கவிதி' (The Law of Diminishing Costs) ரெயில் துறைக்குப் பொருந்தும். இக்கருத்தும் விலை நிர்ணயத்தில் இடம் பெறவேண்டும்.

(vi) ரெயில் துறை, விலை நிர்ணயக் கோட்பாட்டில் மற்றொரு முக்கிய கருத்தையும் கவனிக்கவேண்டும். ரெயில் செலவுகள், பொதுச் செலவுகள், தனிச் செலவுகள் என இருவகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. ரெயில் போக்குவரத்தை நடத்துவதற்காகச் செய்யப் படும் செலவுகள் 'பொதுச் செலவு' எனவும், ஒரு குறிப்பிட்ட பாரத்தை (Load) ஏற்றிச் செல்வதற்காக ஏற்படும் செலவுகள் 'தனிச் செலவு' அல்லது 'நேரடிச் செலவு'கள் (Direct Expenses) எனவும் பாகுபடுத்தப் படுகின்றன. எனவே கட்டணங்கள் தீர்மானிக்கப் படும்போது, இவ்விரண்டுவிதமான செலவுகளும் கணக்கிடப்படவேண்டும்.

ரெயில் போக்குவரத்துக் கட்டணங்கள் மூன்றுவித கோட் பாடுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படலாம். அவைகளைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்:

(அ) பணி அடக்கக் கோட்பாடு (The Theory of Cost Service)

ரெயில் போக்குவரத்து தனது சேவைக்கு விதிக்கும் விலைகளே ரெயில் கட்டணமும், சத்தமும் ஆகும். எனவே, உற்பத்தி அடக்கத்தின் அல்லது செலவின் அடிப்படையில்தான் கட்டணங்கள் தீர்மானிக்கப்படவேண்டும். இவ்வாறு ஏற்படுத் தப்படும் கட்டணங்கள் அடக்கத்திற்கும் குறைவாக அமைவ தில்லையாதலால் தொழிலில் நட்டம் ஏற்பட வாய்ப்பில்லை.

இம்முறை எளிமையானதாகவும், நியாயமானதாகவும் தோன்றினும் இதில் சில குறைபாடுகளும் உள்ளன. முதலாவ தாக, பொதுச் செலவுகள், தனிச் செலவுகள் முதலிய செலவு களைத் தனித் தனியே பாகுபடுத்தி, துல்லியமாகக் கணக் கிடுதல் நடைமுறையில் இயலாததொன்றாகும். இரண்டா வதாக, அடக்க அடிப்படையில் அமைந்த கட்டணங்கள் பல வழிகளில் தீமை பயக்கின்றன. எடுத்துக்காட்டாக, அடக்க விலை அடிப்படையில் விதிக்கப்படும் கட்டணங்கள், பொருள் களின் பளு, பருமன் இவற்றிற்கேற்ப மிகவும் மாறுபடுவதால், குறைந்த பருமனும் உயர்ந்த மதிப்பும் கொண்ட பொருள் களுக்கு ரெயில் சத்தம் குறைவாக இருக்கும்; அதிகப் பருமனும் குறைந்த மதிப்பும் கொண்ட கச்சாப் பொருள்கள், கனிப் பொருள்கள் போன்றவைகளுக்கு ரெயில் சத்தம் அதிகமாக அமைந்துவிடும். இதனால் போக்குவரத்து அளவு மிகவும் பாதிக்கப்படும்.

(ஆ) பணிமதிப்புக் கோட்பாடு (The Theory of Value of Service)

சரக்கனுப்புவோர் ஒவ்வொருவருக்கும் ரெயில் போக்குவரத்து ஆற்றும் பணி எவ்வளவு மதிப்பு வாய்ந்ததோ, அதற்கு ஈடாகக் கட்டணம் அமையவேண்டுமென இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. மிகச் சில பயணிகளைத் தவிர, மற்றனைவரும் பொருளாதாரக் காரணங்களை முன்னிட்டுதான் பயணம் மேற்கொள்கின்றனர்; சரக்குகளையும் அனுப்புகின்றனர். அவர்கள் அதன் மூலம் எவ்வளவு பயன் பெறலாம் அல்லது இலாபம் அடையலாம் என எதிர்பார்க்கின்றனரோ அதுவே போக்குவரத்து அவர்களுக்கு ஆற்றும் பணியின் மதிப்பாகும். சரக்குகளை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு சென்று விற்பதன்மூலம் எவ்வளவு நிகர இலாபம் பெறலாம் என்று ஒருவர் எதிர்பார்க்கிறாரோ, அதுவே போக்குவரத்து ஆற்றும் பணியின் மதிப்பாகும்; அதுவே அவர் அதிகப்பட்சம் செலுத்தத் தயாராக இருக்கும் கட்டணத்தின் அளவுமாகும். இதை அவரது 'தேவை விலை' எனக் கூறலாம். சரக்குகளை வெவ்வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதன் வழியாகப் போக்குவரத்து அவற்றிற்கு இடப் பயன்பாட்டை (Place Utility) அளிக்கிறது. சரக்குகளுக்கு வெவ்வேறு இடங்களில் நிலவும் விலைவேறுபாடே போக்குவரத்து அவற்றிற்கு அளிக்கும் இடப் பயன்பாட்டின் மதிப்பாகும். இந்த விலை வேறுபாடுதான் போக்குவரத்துக்கான தேவை எழுவதற்கும் முக்கியக் காரணமாகத் திகழுகிறது. இவ்விலை வேறுபாட்டால் ஏற்படும் இலாபம்தான் போக்குவரத்து ஆற்றும் பணியின் மதிப்பாக அமைகிறது.

எனவே, இக்கோட்பாட்டின்படி போக்குவரத்து வசதியைப் பயன்படுத்துவோர் கண்ணோட்ட அடிப்படையில் அதாவது அதன் தேவைப்பக்கத்தை (Demand Side) அடிப்படையாகக் கொண்டு அதன் கட்டணங்கள் தீர்மானிக்கப்படுகின்றன. பயணிகள் அல்லது சரக்கை அனுப்புநர்கள், போக்குவரத்து வசதியைப் பயன்படுத்துவதற்காக அதிகபட்சம் எவ்வளவு விலை கொடுக்க ஆயத்தமாக இருக்கின்றனரோ, அதுவே அதன் கட்டணமாக அமையவேண்டுமென இக்கோட்பாடு கூறுகின்றது.

பலவித நன்மைகள் இக்கோட்பாட்டின் மூலமாக ஏற்பட வாய்ப்பிருந்தாலும்கூட, நடைமுறைக்கு இக்கோட்பாடு அவ்வளவாகப் பொருத்தமாகத் தெரியவில்லை. ஏனெனில், போக்குவரத்து வசதியைப் பயன்படுத்துவோர் ஒவ்வொருவரும் அதற்காக அதிகபட்சம் என்ன விலை கொடுக்க முன்வருவர் என்று கணக்கிடுவது இயலாத காரியமாகும். மேலும், பணிமதிப்பு

அடிப்படையில் நிர்ணயிக்கப்படும் போக்குவரத்துக் கட்டணங்கள் பொருள்களின் தேவை நிலையில் ஏற்படும் மாறுபாடுகளுக்கேற்ப அப்போதைக்கப்போது மாறுபடவேண்டிய நிலை ஏற்படும்.

மேற்கண்ட குறைபாடுகள் நிறைந்திருப்பினும் பணிமதிப்புக் கோட்பாட்டில் ஒரு சிறப்பு அம்சம் உண்டு. அதாவது, போக்குவரத்துக் கட்டணங்களின் உச்சவரம்பை அது தீர்மானிக்கிறது. நிர்ணயிக்கப்படும் போக்குவரத்துக் கட்டணங்கள் இந்த உச்ச வரம்புக்குக் குறைவாக இருக்கவேண்டுமேயன்றி எந்நிலையிலும் அதைவிட அதிகமாக இருக்கக்கூடாது.

(இ) 'ஏற்கும் அளவு விதிக்க' என்னும் கோட்பாடு (The Theory Of Charging, What the Traffic Will Bear)

சுமந்து செல்லப்படும் சரக்குகளின் தரம், மதிப்பு, விலை இவற்றிற்கேற்ப, அவை ஏற்கும் அளவு போக்குவரத்துக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுவதை இக்கோட்பாடு வலியுறுத்துகிறது. இதன் அடிப்படையில், குறைந்த மதிப்பும், குறைந்த தரமும் கொண்ட சரக்குகளுக்குக் குறைவான கட்டணமும், அதிக மதிப்பும் உயர்ந்த தரமும் கொண்ட சரக்குகளுக்கு உயர்ந்த கட்டணமும் விதிக்கப்படுகின்றன. அதாவது, போக்குவரத்தின் தாங்கு வலிமைக்கு ஏற்ப போக்குவரத்துக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன.

சற்று முன்னர் கண்ட கோட்பாடுகளுள், பணி அடக்க அடிப்படை போக்குவரத்துக் கட்டணங்களின் குறைந்தபட்ச வரம்பையும், பணி மதிப்பு அடிப்படை அவற்றின் அதிகபட்ச வரம்பையும் தீர்மானிப்பதால் நடைமுறைக்கு அவைகள் ஏற்றதல்ல என முடிவு செய்தோம். 'போக்குவரத்து ஏற்கும் அளவு விதிக்க' என்ற கோட்பாடு இவ்விரு வரம்புகளுக்கும் இடைப்பட்ட கட்டணங்களை நிர்ணயிக்கிறது. எனவே, ரெயில் துறை இக்கோட்பாட்டையே நடைமுறைத் தத்துவமாகக் கடைப்பிடிக்கிறது. கட்டணங்கள் போக்குவரத்தை நடத்த ஆகும் செலவுகளை ஈடுசெய்யும் அளவு உயர்வாகவும், போக்குவரத்தைக் கவரும் அளவு தாழ்வாகவும் இருத்தல் வேண்டும் என்ற பொதுவிதியை அடிப்படையாகக் கொண்டது இக்கோட்பாடு. குறைந்த கட்டணம் மிகுந்த போக்குவரத்து என்ற கருத்தை நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றது.

இக்குறிக்கோளுக்கேற்ப குறைந்த விலையுள்ள பொருள்களாகிய நிலக்கரி, எரிபொருள் போன்றவைமீது குறைவான கட்டணமும், இடைநிலை விலையுள்ள பொருள்களாகிய (Medium

Priced Products) உணவுப் பொருள்கள், கச்சாப்பொருள்கள் ஆகியவற்றின்மீது சற்று உயர்வான கட்டணமும், விலையுயர்ந்த பொருள்கள்மீது மிக உயர்ந்த கட்டணமும் விதிக்கப்படுகின்றன. இக்கோட்பாடு, சில பொருள்களின்மீது போக்குவரத்துக் கட்டணங்களைக் குறைத்தும், வேறு சிலவற்றின்மீது கட்டணங்களை அதிகரித்தும் அதிகபட்ச வருவாயை ஈட்டுகின்றது. மேலும் மொத்தச் செலவு, மொத்த வருவாய் இவற்றுக்கிடையே உள்ள பற்றுக்குறையை இக்கோட்பாடு கூடுமானவரை ஈடு செய்ய முயலுகிறது.

இறுதியாக, 'போக்குவரத்து ஏற்கும் அளவு விதிக்க' என்னும் கோட்பாடு எளிய கட்டண அமைப்பை உருவாக்கி பல நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்க்கின்றது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சமன்பட்ட பொருளாதார வளர்ச்சி ஏற்பட இக்கோட்பாடு வழி வகுக்கிறது. எனவேதான், நடைமுறையில் ரெயில் துறையின் கட்டணங்கள் இக்கோட்பாட்டின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகின்றன.

4. வான்வழிப் போக்குவரத்து (Air Transport)

'இந்திய வான்வழி'கள் கூட்டுருவில் (Indian Air-lines Corporation) கட்டணங்கள் எவ்வித அடிப்படைத் தத்துவத்தையும் சார்ந்திராமல் விருப்பப்படி நிர்ணயிக்கப்படுகிறது. இதற்கு முன், "வான்வழிப் போக்குவரத்து அனுமதி வழங்கும் குழு" (Air Transport Licensing Board) விதிக்கும் அதிகபட்ச எல்லைக்குள் வான்வழிக் கூட்டுரு கட்டணங்களை விதித்து வந்தது. எனவே, வான்வழி நிறுமங்கள், 'போக்குவரத்து ஏற்கும் அளவு விதிக்க' என்ற கோட்பாட்டின் அடிப்படையில் கட்டணங்களைத் தீர்மானித்தன. இன்றும்கூட இக்கோட்பாடு கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

மற்ற பன்னாட்டு வான்வழி நிறுவனங்களைப் போன்று, 'பன்னாட்டு இந்திய விமான' (Air India International) நிறுவனத்தின் கட்டணங்களும், பன்னாட்டு வான்வழிப் போக்குவரத்துச் சங்கத்தினால் (International Air Transport Association i.e. I.A.T.A.) நிர்ணயிக்கப்பட்டு இந்திய அரசின் அனுமதியுடன் செயற்படுத்தப்படுகிறது.

5. சாலைப் போக்குவரத்து (Road Transport)

சாலைப் போக்குவரத்து நிறுவனங்களைப் பொறுத்தவரை கட்டணங்களும், சத்தங்களும் சிறிது 'இலாபமீட்டும் வகையிலும், செயல் முறைச் செலவு, தேய்மானம், வட்டி வீதங்கள் போன்ற

வைகளை உள்ளடக்கியும் நிர்ணயிக்கப்படுகின்றன. இதன் மூலம் அரசு சிறிது இலாபத்தை ஈட்டமுடிகிறது.

6. தபால்-தந்தித் துறை (Post and Telegraph Department)

தபால் துறையைப் பொறுத்தவரை, இலாபத்தைவிட பொதுப்பணியே முக்கியக் குறிக்கோளாகக் கருதப்படுகிறது. அதிக மக்கள் தொகையைக்கொண்ட நாடுகளாகிய இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகள் தபால் துறையின் மூலமாகக் கணிசமான இலாபத்தை ஈட்டுகின்றன. ஆனால், அதிக இடப்பரப்பைக் கொண்ட அமெரிக்கா போன்ற நாடுகளில், தபால் துறை நட்டத்தில் நடைபெறுகிறது. நமது நாட்டில் தபால் துறையின் கட்டணங்கள் சிறிதளவு இலாபத்துடனும், செயல்முறைச் செலவுகளை ஈடுகட்டும் வகையிலும் தீர்மானிக்கப்படுகின்றன. இதன் மூலமாக நாட்டு மக்களின் பொதுநலன் பாதுகாக்கப்படுகிறது.

7. தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுரு (Damodar Valley Corporation)

தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுரு மூன்று விதமான முக்கியப் பணிகளை மேற்கொண்டுள்ளது. நீர்ப்பாசன வசதி அளித்தல், தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்குதல், மின்சார உற்பத்தி ஆகிய பணிகளை வெவ்வேறு விலைக் கொள்கையின் அடிப்படையில் மேற்கொண்டுள்ளது. இக்கூட்டுரு தோற்றுவிக்கப்பட்டு பணியைத் தொடங்குவதற்குமுன், அப்போதைய பொதுப்பணி, சுரங்கம் மற்றும் மின்சாரத் துறையின் அமைச்சர் பின்வரும் கருத்துக்களைத் தெரிவித்தார். பொதுப்பணி நிறுவனங்களின் விலைகள், வருவாய் ஈட்டும் அடிப்படையில் மட்டும் நிர்ணயிக்கப்படக்கூடாது. சமூக நலனுக்கும், இலாபமீட்டும் நோக்கத்திற்குமிடையே சரியானதொரு நிலையில் விலைகள் தீர்மானிக்கப்படவேண்டும். அரசுரிமை பெற்ற பொதுப்பயன் நிறுவனத்தின் விலைக் கொள்கை, 'ஏற்கும் அளவு விதிக்க' என்னும் அடிப்படையில் அமையாமல், 'பணி ஏற்கும் அளவு விதிக்க' (What the Service Will Bear) என்னும் கொள்கையின்படி அமையவேண்டும். அதாவது, நிறுவனத்தின் நிதி நிலையைப் பொறுத்து விலைகள் குறைந்தபட்ச அளவில் நிர்ணயிக்கப்பட வேண்டும். இதனால் பொருள்களின் நுகர்வு அதிகரித்து, தேவை உயர்ந்து விடுவதால் நிறுவனம் அதிக வருவாயை ஈட்ட முடியும். இக்கருத்துக்கள் அனைத்தும் ஆராயப்பட்டு, அவற்றின் அடிப்படையில்தான் இக்கூட்டுருவின் விலைக் கொள்கை அமையுமென அமைச்சர் கூறினார்.

நடைமுறையில் இக்கூட்டுருவின் பணிகளுக்கு வெவ்வேறான விலைக் கொள்கை பின்பற்றப்படுகின்றது. நீர்ப்பாசனத் தேவைக்கான நீர் நியாயமான கட்டணங்களில் விநியோகிக்கப் படுகிறது. தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் நீர், சிறிது அதிக அளவுக் கட்டணங்களில் வழங்கப்படுகிறது. எடுத்துக் காட்டாக, 1,000 'காலன்' நீருக்கு 1 பைசா முதல் 2 பைசா வரை வசூலிக்கப்படுகிறது. அதுபோன்றே, நகரசபைக்குத் தேவைப்படும் நீர், 7 பைசா கட்டண அளவில் வழங்கப்படுகிறது. ஆனால் நீர்ப்பாசனத் தேவைக்காக, இலாப - நட்டமில்லா விலைக் கொள்கையில் நீர் வழங்கப்படுகிறது. வட்டி, செயல்முறைச் செலவு, தேய்மானம் போன்றவை மட்டும்தான் கணக்கிடப்படு கின்றனவே தவிர, இலாபம் சிறிதும் சேர்க்கப்படுவதில்லை.

இக்கூட்டுரு உற்பத்தி செய்யும் மின்சக்திக்கு அதிகத் தேவை இருந்தும், சுற்றுப்புற இடங்களின் வளர்ச்சிக்காக குறைந்த கட்டண விகிதத்தில் மின்சாரம் வழங்கப்படுகிறது. 'போக்குவரத்து ஏற்கும் அளவு விதிக்க' என்ற கொள்கை பின் பற்றப்படுவதில்லை.

"குறைந்த கட்டணம்; அதிக வருவாய்" என்ற கொள்கை யின் அடிப்படையில் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுவதால் அதிக வருவாயை இக்கூட்டுரு ஈட்டுகிறது. எடுத்துக்காட்டாக, 1976ஆம் ஆண்டு முடிவில் ரூ. 11 கோடி இலாபமேற்படும் என இக்கூட்டுருவின் அறிக்கை ஒன்றில் கூறப்பட்டுள்ளது.

8. மின்சாரத் துறை (Electricity Department)

மின் கட்டண விகிதம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபட்ட போதிலும்கூட, பணி அடக்கக் கோட்பாடு பொதுவானதொரு கொள்கையாகப் பின்பற்றப்படுகிறது. மின்சார உற்பத்தி, மின் விநியோகம், செயல்முறை மற்றும் பராமரிப்புச் செலவுகள் ஆகியவைகளை ஈடுசெய்யும் வகையில் மின் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படுகின்றன. மேலும் பயன்களுக்குத் தகுந்தவாறும் கட்டணங்கள் மாறுபடுகின்றன. எடுத்துக்காட்டாக, வீட்டு உபயோகங்களுக்கு (Domestic Uses) அதிகக் கட்டண விகிதத் திலும், தொழிற்சாலைப் பயன்களுக்குக் குறைந்த கட்டண விகிதத் திலும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

பக்ரா நங்கல் (Bhakra Nangal) மின் திட்டத்தின் விலைக் கொள்கை பின்வரும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

(i) மூலதனத்தின் மீது நியாயமான வருவாய்.

(ii) மற்ற மாநிலங்களின் கட்டண விகிதம்.

(iii) போக்குவரத்து எவ்வளவு தாங்கக்கூடும் என்னும் கோட்பாடு.

9. பாரத மின்மங்கள் (Bharath Electronics)

இப்பாரத மின்மங்கள் நிறுவனத்தின் விலைகள், அடக்கச் செலவு, செயல்முறைச் செலவுகள் அத்துடன் 10% இலாபம் ஆகியவைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது.

10. இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் (Hindustan Machine Tools)

இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனம் உற்பத்தி செய்யும் பல்வேறு வகையான பொருள்களுக்கு, உற்பத்திச் செலவின் அடிப்படையில் இயக்குநரவையால் விலைகள் தீர்மானிக்கப்படுகின்றன.

இந்நிறுவனத்தின் முக்கிய நோக்கம், பொருள்களின் விலைகள், அயல் நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் விலையைவிடக் குறைவாகவோ அல்லது சரிசமமாகவோ இருக்கவேண்டுமென்பதாகும். இதனால், நுகர்வோருக்குக் கணிசமான அளவில் பயன் கிட்டுகிறது. ஆனால், 'நாடாளுமன்ற மதிப்பீட்டுக் குழு' (Estimates Committee of the Parliament) இக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக, உள்நாட்டில் போட்டி நிலையின்மையால் இந்நிறுவனம், தன்னுடைய பொருள்களுக்குக் குறைந்த விலைகளை நிர்ணயித்தல் நியாயமாகாது எனவும், போதிய இலாபமீட்டும் வகையில் விலைகள் உயர்த்தப்படவேண்டுமெனவும் இக்குழு வலியுறுத்தியது.

11. இந்தியத் தொலைபேசி நிறுவனம் (Indian Telephones Industries)

இந்நிறுவனம் உற்பத்தி செய்யும் சாதனங்களின் விலைகள், உற்பத்திச் செலவையும், அத்துடன் சிறிது இலாபத்தையும் அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படுகின்றன. ஆனால் இந்த இலாப எல்லை, அரசுத் துறைக்கு விற்கப்படும் பொருள்களின் மீது குறைவாகவும், தனியார்துறைக்கு வழங்கப்படும் சாதனங்களுக்கு அதிகமாகவும் தீர்மானிக்கப்படுகிறது.

12. சிந்திரி உர உற்பத்தி நிறுவனம் (Sindiri Fertilizers)

இந்நிறுவனம் உற்பத்தி செய்யும் 'அமோனியம் சல்பேட்' என்ற உரத்தின் விலையானது அடக்கச் செலவு, அயல்நாட்டுச் சந்தைகளில் விலைகளின் நிலை, நுகர்வோரின் வாங்கும் திறன் போன்றவைகளை அடிப்படையாகக் கொண்டு நிர்ணயிக்கப்படு கிறது. குறைந்த விலைகளில், நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு உரங்கள் கிடைக்கவேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் இந்நிறுவனம் விலைகளை நிர்ணயிக்கிறது.

13. நிலக்கரி (Coal)

நிலக்கரிச் சுரங்கங்கள் உற்பத்தி செய்யும் நிலக்கரிக்கு "நிலக்கரிக் கட்டுப்பாட்டு ஆணை—1945"ன் (Colliery Control Order-1945) அடிப்படையில், அடக்கச் செலவு, நியாயமான அளவு இலாபம் ஆகியவைகளின் கூடுதலாக விலைகள் நிர்ண யிக்கப்படுகின்றன.

14. ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation)

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவின் முனைமத் தொகை, தொன்று தொட்டு நடந்துவந்த தனியார்துறை காப்பீட்டு நிறுமங்களின் முனைமத் தொகை நிர்ணய முறையில் தீர்மானிக்கப்படுகிறது. ஆயுள் மதிப்பின் அடிப்படையில் காப்பீடு கணக்கிடுதல் மூலம் முனைமத் தொகை நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, எப் பொழுதுமே ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு இலாபத்தில் நடை பெறுமேயன்றி நட்டம் ஏற்பட வாய்ப்புகள் இல்லை.

15. இந்துஸ்தான் பூச்சிக்கொல்லிகள் (Hindustan Insecticides)

இலாப-நட்டமற்ற அடிப்படையில், இந்நிறுவனத்தின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

16. இந்துஸ்தான் உயிர் எதிரிக்கொல்லிகள் (Hindustan Antibiotics)

இந்நிறுவனமும் இலாப-நட்டமற்ற விலைக் கொள்கையைப் பின்பற்றுகிறது.

17. இந்துஸ்தான் இரும்பு உற்பத்தி நிறுவனம் (Hindustan steel)

அதிக அளவு ஒப்பந்தங்களுக்குச் சலுகை விலைகளும் மற்ற வகை விற்பனைகளுக்கு அதிக விலைகளும் நிர்ணயிக்கப்படு கின்றன.

பொதுத்துறையின் விலைக் கொள்கை- சிறப்பியல்புகளும் திறனாய்வும்

மேற்கண்ட பொதுத்துறை நிறுவனங்களின் விலைக் கொள்கைகளை ஆராயும்பொழுது, கீழ்க்கண்ட கருத்துக்கள் புலனாகின்றன.

(i) நமது நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் எவ்வித விதிமுறையின்றியும், அரைகுறை முடிவுகளுடனும்தான் விலைக் கொள்கைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

(ii) சில பொதுத்துறை நிறுவனங்கள் பெற்றுள்ள முற்றுரிமை இயல்பு, தெளிவற்ற முறையில், தவறான வழிகளில் பயன்படுத்தப்பட்டு, அதன் காரணமாக நுகர்வோர் பாதிக்கப்படுகின்றனர்.

(iii) அனைத்துத் தொழிலமைப்புகளிலும் அரசே அதிகப்படியான பங்குகளைப் பெற்றுள்ளதால், முரண்பாடற்றதொரு விலைக் கோட்பாடு பொதுத்துறை நிறுவனங்களில் பின்பற்றப்படவில்லை.

பல பொதுத்துறை நிறுவனங்களில் ஏற்பட்ட இலாபம் அல்லது நட்டம், தற்செயலாக ஏற்பட்டதேயன்றி எவ்வித நியாயமான திட்டத்தினாலும் ஏற்பட்டதல்ல. 'பொதுக் கூட்டுருச் சட்டங்கள்' (The Public Corporations Act) அனைத்தும், விலைக் கொள்கையைப் பற்றி எவ்வித வழி முறையையும் வகுக்கவில்லை. அப்படி வழிவகை செய்யப்பட்டிருப்பினும்கூட, விலைக் கொள்கை தெளிவற்றதாக இருந்தது. எடுத்துக்காட்டாக, 1953ஆம் ஆண்டு வான்வழிக் கூட்டுருச் சட்டம் (Air Corporation Act – 1953), பிரிவு 7(1)ல் "நியாயமான கட்டணங்கள்" (Reasonable Charges) எனக் கூறுகின்றது. ஆனால் விலைக் கொள்கை நிர்ணயிக்கப்பட எவ்வித அடிப்படைத் தத்துவத்தையும் கூறவில்லை. பல அரசு நிறுவனங்களிலும் இதே நிலைதான்.

நமது நாட்டுப் பொதுத்துறையில் விலைக் கொள்கை நிர்ணயிக்க, பல முறைகள் பின்பற்றப்படுகின்றன. எவ்வித தெளிவான வாணிகக் கொள்கைகளும் பின்பற்றப்படுவதில்லை. சில சந்தர்ப்பங்களில் அடக்கச் செலவுடன்கூடிய இலாபத்துடன் விலைக் கொள்கை நிர்ணயிக்கப்படுகிறது ; மற்ற நேரங்களில் இலாப-நட்டமற்ற விலைக் கொள்கை பின்பற்றப்படுகிறது. போக்குவரத்துத் துறைகளில் சில நிறுவனங்கள் பணி அடக்கக் கோட்பாட்டையும், மற்ற நிறுவனங்கள் 'போக்குவரத்து ஏற்கும் அளவு விதிக்க' என்னும் கோட்பாட்டையும் அடிப்படையாகக்

கொண்டு இயங்கிவருகின்றன. மேலும், பொதுத்துறை நிறுவனங்களின் விலைக் கொள்கை, மற்ற பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கும் அல்லது அரசுத் துறை நிறுவனங்களுக்கும் ஏற்ற வகையில் சாதகமான நிலையில் நிர்ணயிக்கப் படுகின்றன. ஆனால், அதே பொருள்கள் தனியார்துறைக்கோ அல்லது மற்ற நுகர்வோருக்கோ வழங்கப்படும்போது விலைகள் அதிக அளவில் நிர்ணயிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 1957-'58-ல் இந்தியத்தொலைபேசி உற்பத்தி நிறுவனம், ரூ.103 இறக்குமதி-அடக்க விலை கொண்ட தானியங்கித்தொலைபேசியை, ரூ. 82க்கு தபால் - தந்தித் துறைக்கு வழங்கியது. பிறகு, இவ்விலை ரூ. 79 ஆகக் குறைக்கப்பட்டது. மற்றொரு எடுத்துக்காட்டாக, இந்திய அரசு வாணிகக் கூட்டுருவின் (S.T.C.) விலைக் கொள்கையைக் கூறலாம். இக்கூட்டுரு இறக்குமதி செய்யும் போக்குவரத்துச் சாதனங்களை அரசு நிறுவனங்களுக்குக் குறைந்த விலைகளிலும், மற்ற தனியார் நுகர்வோருக்கு அதிக விலைகளிலும் வழங்குகிறது.

சுருங்கக் கூறினல், நமது நாட்டின் பொதுத்துறையில் விலைக் கொள்கை பின்வரும் தத்துவங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்படுகிறது.

(அ) அரசின் அனுமதியுடன் விலைகள் நிர்ணயிக்கப்படுதல்

இரும்பு, உரம் போன்ற பொருள்களுக்கு அரசே விலைகளை நிர்ணயிக்கிறது. அரசினல் அமைக்கப்பட்ட சிறப்புக் குழுக்கள் பரிந்துரைக்கும் கருத்துக்களின் அடிப்படையில் அரசு விலைகளைத் தீர்மானிக்கிறது. இதன் முக்கிய நோக்கம், அத்தியாவசியப் பொருள்கள் குறைந்த விலைகளில் விற்பனை செய்யப் படவேண்டுமென்ற கருத்தேயாகும். எனவே, பொதுத்துறைக்குரிய விலைக் கோட்பாடுகளின் அடிப்படையில் விலைகள் தீர்மானிக்கப்படுவதில்லை. நாட்டின் பொருளாதார வளர்ச்சியின் தேவைக்கேற்ப, இலாபத்தைப் பற்றி சிறிதும் கருதாமல் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

(ஆ) இலாப-நட்டமற்ற கோட்பாடு

பல மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் நிறுவனங்கள், இலாப-நட்டமற்ற கோட்பாட்டின் அடிப்படையில் விலைகளை நிர்ணயிக்கின்றன. எடுத்துக்காட்டாக, பீகார் மாநில மின்சாரத் துறையையும், மத்தியப் பிரதேச மின்சாரத் துறையையும் கூறலாம். நமது மத்திய அரசு, 'உலக நல்வாழ்வு நிறுவனம்' (World Health Organisation), ஐக்கிய நாடுகள்-குழந்தைகளின்

நெருக்கடிநிலை நிதி (United Nations Children's Emergency Fund) ஆகியவற்றின் கூட்டு முயற்சியால் தோற்றுவிக்கப்பட்ட, 'கூட்டுத் திட்ட செயல்முறைகள்' (Joint Plan Of Operations) பிரிவு V(7)ல், இந்துஸ்தான் பூச்சிக்கொல்லிகள் மருந்து உற்பத்தி நிறுவனம் (The Hindustan Insecticides) இலாப-நட்டமற்ற கோட்பாட்டின்படி இயங்கவேண்டுமென வலியுறுத்தியது. இது போன்றே இந்துஸ்தான் உயிர்காப்பு மருந்துகள் உற்பத்தி நிறுவனமும் (Hindustan Antibiotics) இலாப-நட்டமில்லாக் கொள்கையைப் பின்பற்றுகிறது.

(இ) அடக்கச் செலவுடன்-கூடுதல் விலைகள் (Cost-Plus Prices)

இந்தியத் தொலைபேசி நிறுவனம், 'இந்துஸ்தான் வான் கலங்கள்' (Hindustan Aircraft) நிறுவனம் ஆகியவை 'அடக்கச் செலவுடன்-கூடுதல்' (Cost Plus) கொள்கையின் அடிப்படையில் விலைகளை நிர்ணயிக்கின்றன. இதற்கு முக்கியக் காரணம், இந் நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பெரும்பான்மையான பொருள்களை அரசே கொள்முதல் செய்து, மற்ற பொதுத் துறைத் தொழிலமைப்புகளுக்கு வழங்குகிறது.

(ஈ) இலாபத்துடன் கூடிய விலைகள் (Profit - Oriented Prices)

பல பொதுத்துறை நிறுவனங்கள் இலாபமீட்டியுள்ளதைக் காணும்போது, இலாபத்துடன்கூடிய விலைக் கொள்கையும் பின் பற்றப்படுகிறது எனப் புலனுகிறது. ஆனல், இந்த இலாப-விகிதத்தைப் பற்றி எவ்வித நிரந்தரக் கொள்கையும் கிடையாது. சில பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தற்செயலாகக்கூட இலாபமீட்டி விடுகின்றன.

(உ) உதவித்தொகை விலைகள் (Subsidised Prices)

நட்டத்தில் நடைபெறும் தொழிலமைப்புகள் அனைத்தும் இவ் வகையில் அடங்கும். எடுத்துக்காட்டாக, "இந்துஸ்தான் கப்பல் கட்டும் நிறுவனத்"தைக் (Hindustan Shipyard) கூறலாம். விற்கப் படும் ஒவ்வொரு கப்பலின் அடக்க விலைக்கும், விற்பனை விலைக்கும் இடையே உள்ள வித்தியாசத்தை, அரசு உதவித்தொகை வழங்குதல் மூலம் சரி செய்கிறது.

(ஊ) போட்டி விலைகள்

போட்டி நிறைந்த சந்தையில் செயற்படும் மத்திய மற்றும் மாநில அரசு நிறுவனங்கள், சந்தை வழங்கும் விலைகளை ஏற்றுக் கொள்ளவேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனல், ஒரு சில தொழி லமைப்புகளைத் தவிர, மற்ற பொதுத்துறை நிறுவனங்கள்

கடுமையான போட்டியைச் சந்திக்கும் வாய்ப்புகள் நடைமுறையில் தோன்றுவதில்லை. உண்மையான போட்டி, கப்பல் கட்டும் கூட்டுரு, அசோகா உணவகம் (Ashoka Hotel Ltd.) போன்ற சில பொதுத்துறைத் தொழிலமைப்புகளால்தான் எதிர்நோக்கப்படுகிறது. பொதுத்துறையில் இயங்கிவரும் எண்ணெய் நிறுவனங்கள் (Oil Companies) மிதமான போட்டி நிலையில் விலைகளை நிர்ணயம் செய்கின்றன. இதுபற்றி பெட்ரோல் எண்ணெய் முதலியவைகளின் துறை அமைச்சர் திரு.கே.டி. மாளவியா அவர்கள் மக்கள் சபையில் கூறும்போது, "அரசின் கொள்கையானது எண்ணெய் நிறுவனங்களிடையே மிதமான போட்டியை அனுமதித்தலாகும்" என அறிவித்தார். (April-1976). அவருடைய உதவி அமைச்சர் திரு. இ. ர. அன்சாரி அவர்கள், "எண்ணெய் நிறுமங்களிடையே மிதமான போட்டி நிறுவினால், நாட்டிற்குப் பல நன்மைகள் ஏற்படும்" எனக் கூறினார். கால்டெக்ஸ், அஸ்ஸாம் எண்ணெய் நிறுமம் ஆகிய இரு தனியார்துறை நிறுவனங்களையும் பொதுத்துறைக்கு மாற்றி, செம்மையான போட்டி நிலைகளில் விலைகளை நிர்ணயிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அமைச்சர் கூறியுள்ளார். (April-1976). எனவே, நமது நாட்டில் பொதுத்துறையில் போட்டிக்குரிய விலைக் கொள்கையும் பின்பற்றப்படுவது தெளிவாகிறது.

நமது நாட்டுப் பொதுத்துறையில் விலைக் கொள்கை நிர்ணயிக்கப்பட வழிகாட்டும் தத்துவங்கள் (Guiding Principles for Pricing Public Sector in India)

மேற்கண்ட பல்வேறு வகையான விலைக் கொள்கைகளை ஆராய்ந்ததில், நமது நாட்டுப் பொதுத்துறையில் செம்மையானதொரு விலைக் கோட்பாடு பின்பற்றப்படவில்லை என்பது புலனாகிறது. எனவே, முடிவுரையாக இப்பகுதியில் சிறந்ததொரு விலைக் கொள்கை தீர்மானிக்கப்பட வழிகாட்டும் தத்துவங்களைப் பற்றிக் காண்போம்.

பொதுத்துறையில் தோற்றுவிக்கப்படும் தொழிலமைப்புகள் பலவகையான நோக்கங்களுக்காகச் செயல்படுகின்றன. ஒவ்வொரு தொழிலமைப்பின் நோக்கமும், மற்றவகை நிறுவனங்களின் நோக்கங்களிடமிருந்து பெரிதும் வேறுபடுகிறது. மேலும், பொதுத்துறை நிறுவனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள், அவைகளின் முக்கியத்துவத்திலும், பணிகளின் தன்மையிலும், சந்தைகளின் அளவுகளிலும், நுகர்வோரின் வாங்கும் சக்தியிலும், சமுதாய நலன்களிலும் அதிக அளவில் மாறுபடு

கின்றன. எனவே, பொதுத்துறையில் செயற்படும் அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுவாக ஒரு விலைக் கோட்பாட்டைத் தீர்மானிப்பது இயலாத செயலாகும். ஒவ்வொரு தொழிலமைப்பும் தமக்குப் பொருத்தமான விலைக் கொள்கையை நிர்ணயிக்கவேண்டுவது அவசியம். எந்த அடிப்படையில் விலைகளை நிர்ணயிக்கவேண்டும் என்பது ஒரு சிக்கலான வினாவாகும். ஏனென்றால், நடைமுறையில் ஒரு விலைக் கோட்பாடு நிர்ணயிக்கப்பட பல்வேறு வகைப்பட்ட தத்துவங்கள் கவனிக்கப் படவேண்டும். அவைகளை வழிகாட்டும் தத்துவங்கள் (Guiding Principles) எனக் கூறலாம். அவைகளைப் பின்வருமாறு வரிசைப் படுத்திக் கூறலாம்.

(1) விலைக் கொள்கையானது, கிடைக்கக்கூடிய வளங்களை சீரான முறையில் பகிர்வு செய்தல்வேண்டும்.

(2) வளங்கள் அனைத்தும் உத்தம அளவில் (Optimum Level) பயன்படுமாறு அமையவேண்டும்.

(3) அரசிற்கு அதிக வருவாயை ஈட்டிக்கொடுப்பதன் மூலம் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு வகைசெய்ய வேண்டும்.

(4) தொடரும் செலவுகள், தொடராச் செலவுகள் (Recurring and Non-Recurring) ஆகியவைகளை உள்ளடக்கி, மூலதனத்தின்மீது நியாயமான வருவாயைத் திரட்டும் வகையில் விலைகள் அமையவேண்டும்.

(5) தொழிலாளர்களுக்கு நியாயமான கூலிகளை வழங்கும் வகையில் விலைக் கொள்கை நிர்ணயிக்கப்படவேண்டும்.

(6) தொழிலமைப்பு வளர்ச்சியடையக்கூடிய வகையிலும், புதிய தொழில்களை அரசு தோற்றுவிக்கக்கூடிய முறையிலும் விலைக் கொள்கை இருக்கவேண்டும்.

(7) மேம்பட்ட திறமைக்குப் போதுமான ஊக்கங்கள் அளிக்கப்படும் வகையில் விலைகள் அமையவேண்டும்.

(8) சந்தை நிலையைப் பொறுத்தும், பொருள்களின் தேவை, அளிப்பு, தன்மை ஆகியவைகளைப் பொறுத்தும் விலைக் கோட்பாடு தீர்மானிக்கப்படவேண்டும்.

6. பொதுத்துறைத் தொழிலமைப்பு களின் தன்னாட்சியுரிமை

(Autonomy of Public Enterprises)

தன்னாட்சியுரிமை என்பதன் பொருளும் மற்ற உள்ளடக்கக் கருத்துக்களும் (Meaning and Implications of Autonomy)

பொதுத்துறைத் தொழிலமைப்பொன்றைப் பொதுக் கூட்டுரு அமைப்பு முறையிலோ அல்லது கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையிலோ தோற்றுவிப்பதன் முக்கிய நோக்கமே நிருவாக நடவடிக்கைகளில் போதிய தன்னாட்சியுரிமையை அளிப்பதற்காகத்தான். துறைவழி நிருவாக முறையில் அமைக்கப்படும் நிறுவனங்கள், அரசின் வழிமுறைகளுக்கேற்ப எப்பொழுதும் பின்பற்றப்படும் முறைகளில் செயற்படுவன வாகும். ஆனால், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக முழுச் செயல்திறனுடன் பொதுத்துறை நிறுவனங்கள் செயற் படவேண்டும். ஆகவே, அவைகள் வெற்றிகரமாக நடைபெற கோட்பாடுகளில் நெகிழுந்தன்மை, அலுவலக வழிமுறைகளில் நெகிழுந்தன்மை, கொள்கைகளில் வாணிகச் சார்பு ஆகியவை மிகவும் இன்றியமையாதவை. அரசின் கட்டுப்பாடு அதிக அளவில் இருந்தால் பொதுத்துறை நிறுவனங்கள் சீராக வளர்ச்சியடைய முடியாமல் இடர்ப்பாடுகள் பல ஏற்படும். இதன் காரணமாக நாட்டு வருமானம் அதிகரிக்க வாய்ப்பில்லை. எனவேதான் பொதுத்துறையின் திறமையான செயற்பாட்டிற்கு அரசின் குறுக்கீடுகள் இன்றி போதிய தன்னாட்சியுரிமை தேவை எனக் கருதப்படுகிறது.

"பொதுநலனைக் கருத்திற்கொண்டு செயற்படும் பொதுத் துறை நிறுவனங்களின் மேலாண்மைப் பொறுப்புகளிலும், இயக்குநரவையின் நிருவாக அதிகாரங்களிலும் அரசு தலை யிடாமல் அவைகளுக்குப் போதிய தற்சார்பு உரிமையை அளிப்பதே "தன்னாட்சியுரிமை" எனப்படும்.

பொதுக் கூட்டுரு முறையிலோ அல்லது கூட்டுப் பங்கு நிறும முறையிலோ தொழிலமைப்பொன்று அமைக்கப்பட்டு இயக்குநரவை நியமனம் செய்யப்பட்ட பிறகு அரசு அந் நிறுவனத்தின் நிருவாகத்திலும், கொள்கைகள் முடிவு செய்யப் படுவதிலும் தேவையின்றி குறுக்கிடக்கூடாது. தொழிலமைப் பின் அன்றாட அலுவல்களில் அரசின் குறுக்கீடு அதிக அளவில் ஏற்படும்பொழுது அதன் நிருவாகத் திறமையும், செயல்முறை நெகிழ்வும் (Operating Flexibility) மிகவும் பாதிக்கப்படுகின்றன. எனவே பொதுத்துறை நிறுவனங்களின் திறமையான செயற் பாட்டிற்குப் போதிய அளவில் தன்னாட்சியுரிமை தேவை.

தொழிலமைப்பொன்று செம்மையாகச் செயற்பட பல்வேறு வகையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சிறந்த முடிவுகள் உடனுக்குடன் எடுக்கப்பட வேண்டும். மூலதனச் செலவுகள், இயந்திரங்கள், கருவிகள் முதலியவற்றைப் பழுது பார்த்தல், தொழிலை மேம்படுத்துதல், விரிவுபடுத்துதல், புதிய கட்டிடங்கள் கட்டுதல், தேவையான தொழிலாளர்களை நியமித்தல், நிதித்தேவையை ஈடுசெய்யக் கடன் பெறுதல் போன்ற பலவகைப்பட்ட அன்றாட நடவடிக்கைகள் விரைவான முடிவுகளுடன் மேற்கொள்ளப்படவேண்டும்; அதற்குப் போதிய தன்னாட்சியுரிமை வேண்டும். ஒவ்வொரு நடவடிக்கையையும் அல்லது முடிவையும் மேற்கொள்ள அரசின் அனுமதி தேவைப் படும்பொழுது நிருவாகத் தாமதமும், அதிகார இன ஆட்சி முறைகளும் தோன்றி, 'சிகப்பு நாடா' (Red Tapism) போன்ற தேவையற்ற செயல்முறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பெரும்பான்மையான பொதுத்துறைத் தொழில்களின் திறமை யற்ற செயல்முறைக்குப் போதிய தன்னாட்சியுரிமை வழங்கப் படாததும் ஒரு காரணமாகும்.

பொதுக் கூட்டுரு அமைப்பு முறையிலும், கூட்டுப் பங்கு நிறும முறையிலும், கொள்கையளவில் தன்னாட்சியுரிமை இருந்த போதிலும், நடைமுறையில் அவ்வகைத் தொழிலமைப்புகளின் இயக்குநரவை அதிகாரங்களில் அரசும், நாடாளுமன்றமும், எவ்வித வரைமுறையுமின்றி தலையிடுகின்றன. பொதுத்துறையின் அன்றாட நடைமுறை (Routine) அலுவல்களில் அமைச்சகத்தின் குறுக்கீடும், மேலாளர்கள் மற்றும் அலுவலர்கள் நியமனத்தில் தேவையற்ற அரசியல் கட்சிகளின் தலையீடும் நாடாளுமன்றத்தின் எல்லை வரம்பற்ற திறனாய்வும், செய்தித்தாள்களின் கருத்துரை களும், பொதுக் கூட்டுரு-கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை நிறுவனங்களின் 'தன்னாட்சியுரிமை'க் கோட்பாட்டைக் கேலிக் குரியதாக மாற்றிவிடுகின்றன. இக்கருத்தை "இந்தியாவில்

பொதுத்துறைத் தொழிலமைப்புகள்'' என்ற புத்தகத்தில் திரு. அகர்வாலா பின்வருமாறு கூறுகின்றார்: "பொதுக் கூட்டுரு நீற்றும் கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறைகளில், அதிக அளவில் வலியுறுத்தப்படும் 'தன்னாட்சியுரிமை' நடைமுறையில் பின்பற்றப்படுவதில்லை.'' நாடாளுமன்றத்தின் மதிப்பீட்டுக் குழு (The Estimates Committee of Parliament), "நமது நாட்டில் பெரும்பான்மையான பொதுத்துறை நிறுவனங்கள் அரசின் மற்றத் துறைகளைப் போன்றே நடத்தப்பட்டு அமைச்சகத்தின் மேற்பார்வையில் செயற்படுகின்றன'' எனக் கூறுகிறது.

ஆனால், சமீப காலங்களில் பொதுத்துறைக்குப் போதிய தன்னாட்சியுரிமை அவசியம் தேவையென அனைவராலும் கருதப் படுகிறது. இது வரவேற்கத்தக்கதொரு கருத்தாகும்.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தன்னாட்சியுரிமை இரண்டு வகைப்படும். அவை (i) செயல்முறைக்குரிய தன்னாட்சி யுரிமை (Operational Autonomy), (ii) நிதிநிலைக்குரிய தன்னாட்சி யுரிமை (Financial Autonomy) ஆகியவையாகும். இவ்விரு வகைகளையும் பற்றிச் சுருக்கமாகப் பின்வருமாறு காணலாம்.

(i) செயல்முறைக்குரிய தன்னாட்சியுரிமை (Operational Autonomy)

மேலாண்மையில், அமைப்பும், ஒருங்கிணைப்பும் முக்கியத் தொடர்பு கொண்டிருப்பது அலுவலர்களின் நியமனத்துடனாகும். ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை அடைய பல்வேறு வகையான மனிதர்கள் ஒரு குறிப்பிட்ட இடத்தில் பணிபுரிகின்றனர். தொழிலமைப்பின் சீரான செயற்பாட்டிற்கு இவர்கள் அனைவரும் சரியான முறையிலும், ஏற்ற பதவிகளிலும் நியமனம் செய்யப்படவேண்டும். அவர்களுக்குத் தேவையான ஊதியங் களும், மற்ற சலுகைகளும் நிருணயிக்கப்படவேண்டும். ஆனால், ஊதியக் கொள்கைகள் நிரந்தரமாகத் தீர்மானிக்கப்படுவ தென்பது சிறந்த முறையாகாது. ஏனெனில், மனித மனம் மாறுபட்டுக் கொண்டேயிருக்கும். எனவே ஊதிய விகிதம், நியமன விதிகள், ஓய்வுபெறும் விதிகள் போன்றவை காலத்திற்கு ஏற்ப மாறுதல் செய்யப்படவேண்டும். இதற்குத் தொழிலமைப்பில் போதிய தன்னாட்சியுரிமை நிலவவேண்டும்.

பொதுத்துறை நிறுவனங்கள் பாராட்டத்தக்க வகையில் வளர்ந்து வந்தாலும்கூட, அவைகளின் நிருவாகத்திலுள்ள 'அதிகார இன செயல்முறை' (Bureaucracy) ஒரு முக்கியக் குறை யாகக் கூறப்படுகிறது. இக்குறை நீக்கப்படவேண்டுமாயின்

தொழிலமைப்புகள், போதிய தன்னாட்சியுரிமையைப் பெற வேண்டும்.

அடுத்ததாக, பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநரவைகளில் நிருவாகம், வாணிகம், நிதிநிலை, தொழில் நுட்பம் போன்ற அனைத்திலும் திறமை வாய்ந்த இயக்குநர்கள் நியமிக்கப்பட வேண்டும். ஆனால், நடைமுறையில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் இயக்குநர்கள் அனைவருமே அரசினால் நியமிக்கப்படுகின்றனர். நமது நாட்டில் பொதுத்துறையின் இயக்குநர்கள், அரசின் கட்டுப்பாட்டுடன் நியமிக்கப்படுவதால், பயனுள்ள பணிகள் எவையும் அவர்களால் நிறைவேற்றப்படுவதில்லை என மதிப்பீட்டுக் குழு கூறுகிறது. அரசினால் நியமிக்கப்படும் இயக்குநர்கள் நீண்டகால இடைவெளிக்குப் பிறகுதான் ஒன்று சேர்ந்து கலந்தாலோசிக்க முடிகிறது. எனவே, அவர்களால் சிறந்த முடிவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே இம்முறையில், இயக்குநர்கள் நியமிக்கப்படுவது தவிர்க்கப்பட்டு, திறமையான இயக்குநர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை தொழிலமைப்புகளுக்கு வழங்கப்படவேண்டும். திரு. கிருஷ்ணமேனன் தலைமையிலான குழு, இயக்குநரவையில் நிதித்துறை வல்லுநர்களும், தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் இடம்பெறவேண்டுமெனக் கூறியுள்ளதை இங்கு நினைவு கூரலாம். எனவே, இயக்குநர்களின் நியமன உரிமையில் 'தன்னாட்சி' கொள்கை பின்பற்றப்பட வேண்டும்.

(ii) நிதிநிலைக்குரிய தன்னாட்சியுரிமை (Financial Autonomy)

மேற்கண்ட செயல்முறைத் தன்னாட்சியுரிமையுடன், போதிய நிதிநிலைத் தன்னாட்சியுரிமையும் தொழிலமைப்புகளுக்கு வழங்கப்படல்வேண்டும். நிதிநிலைத் தன்னாட்சியுரிமை பின்வரும் கூறுகளைக் கொண்டுள்ளது.

(அ) ஆண்டு நிதி ஒதுக்கீடு முறையிலிருந்து விடுபடுதல்.

(ஆ) குறிப்பிட்ட வகைச் செலவுகளுக்கு அரசின் அனுமதி பெறும் முறை தவிர்க்கப்பட்டு சுய உரிமைகளை அடைதல்.

(இ) நடைமுறையாக வரும் தணிக்கைமுறை மற்றும் கணக்குப் பதிவியல் முறையை மாற்றி, 'திறமைத் தணிக்கை' (Efficiency Audit) முறையை அமைக்கும் உரிமை.

(ஈ) வருவாயை கணக்கிட்டுப் பெறவும், செலவு செய்யவும் தேவையான அதிகாரங்கள்.

(உ) நிர்ணயிக்கப்பட்ட எல்லைக்குள் கடன்பெறும் உரிமை போன்றவை.

பொதுத்துறையின் 'தன்னுட்சியுரிமை' பின்வரும் கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது

(1) வளர்ச்சியை ஊக்குவிக்கவும், திறமையை வளர்க்கவும், தொழில் ஒப்பேறு வாய்ப்பு நிலையை அடையவும் தேவையான முடிவுகளை மேற்கொள்வதில் சுதந்திர உரிமை.

(2) பல்வேறு நிலைகளிலும் அலுவலக அதிகாரிகளை நியமிக்கும் உரிமையும், அவர்களின் பணி நிபந்தனைகளைக் கட்டுப்படுத்தும் உரிமையும்.

(3) பொது வரவு-செலவுத் திட்டத்தில், அரசினால் நிதி ஒதுக்கீடு செய்யப்படும் முறையிலிருந்து விடுபட்டு இயங்கும் உரிமை.

(4) மேலாண்மையில் போதிய ஊக்கத்துடனும், உற்சாகத்துடனும் ஈடுபட்டு, செயற்பட அதிகாரிகளுக்குப் போதிய வாய்ப்புகளை அளிக்கும் உரிமை.

(5) அமைச்சகம் மற்றும் அரசு முகமை நிறுவனங்களின் குறுக்கீடுகளிலிருந்து விலகிச் செயற்படும் உரிமை.

(6) கூடுதல் மூலதனம் பெறுதல், அதிக முதலீடுகளைக் கொண்ட திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற ஒரு சில நடவடிக்கைகளைத் தவிர மற்றவகைச் செயல் முறைகளில் அரசின் அனுமதி பெறும் முறை தவிர்க்கப் படுதல்.

(7) பொதுநலனை நோக்கமாகக் கொண்டு மேற்கொள்ளப் படும் நடவடிக்கைகளைப் பற்றிய இரகசியத்தைப் பாது காக்கவும், தொழிலமைப்பின் மேலாண்மை அதிகாரி களை நாடாளுமன்றத்தின் எல்லை மீறியத் திறனாய்வி லிருந்தும், செய்தித்தாள்களின் தாக்குதல்களிலிருந்தும் காப்பாற்றும் உரிமை.

மேற்கண்ட கருத்துக்களைக் கொண்ட தன்னுட்சியுரிமைக் கோட்பாடு, நமது நாட்டில் பொதுத்துறை நிறுவனங்களின் அடிப் படைத்தத்துவங்களில் ஒன்றாக வரித்துக் கொள்ளப்பட்டு விட்டது. இருந்தபோதிலும், நமது பொதுத்துறையின் 'அதிகார இன நிருவாக' முறையின் காரணமாக தன்னுட்சியுரிமையை நடை முறைப்படுத்துவதில் பல 'இடர்ப்பாடுகள் ஏற்படத்தான் செய்கின்றன.

தன்னாட்சியுரிமையின் குறிக்கோள்கள் (Objectives of Autonomy)

பின்வருபவைகளே தன்னாட்சியுரிமையின் குறிக்கோள்களாகும்:

(1) நெகிழுந்தன்மையை வெற்றிக்கு இன்றியமையாத கொள்கையாகக் கொண்டு செயற்படும் வாணிகம் மற்றும் உற்பத்தி நிறுவனங்களின் மேலாண்மையில் காணப்படும் சிவப்பு-நாடா போன்ற காலதாமதத்தைத் தவிர்க்கவும், அதிகார இனச் செயல்முறை (Bureaucracy) முறையைக் களைவதுமாகும்.

(2) அரசின் உற்பத்தி மற்றும் வாணிகத் திட்டங்கள் வெற்றியடைய, பொதுத்துறை நிறுவனங்களின் மேலாளர்களை ஊக்கமுடன் பணியாற்றவும், ஆர்வத்துடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் செய்தல்.

(3) உடனுக்குடன் விரைவான முடிவுகளையும், தொடர் செயல் (follow up) நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அதன் மூலமாக அக நிருவாகத்தை, வாணிகஞ் சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் நடைபெறச் செய்தல்.

(4) அரசியல் கட்சிகளின் செல்வாக்கு, பாரபட்சத் தன்மை ஆகியவைகளை அறவே நீக்கி, அரசின் அமைச்சகத் துறைகளின் குறுக்கீடுகளின்றி நிருவாகத்தை நடத்துதல்.

(5) மாறிவரும் தொழில் நுட்பம், சந்தை நிலைகள் ஆகியவைகளுக்கேற்ப நுகர்வோரின் வசதிகளை அடிப்படையாகக் கொண்டு, சிறந்த பொருள்களையும் பணிகளையும் அளிக்கவும் தன்னாட்சியுரிமை தேவைப்படுகிறது.

தன்னாட்சியுரிமையைப்பற்றி வல்லுநர்களின் கருத்து

பொதுத்துறை, மேம்பட்ட திறமையுடன் செயற்படத் தன்னாட்சியுரிமை இன்றியமையாதது என்ற கருத்தைப் பல பொருளாதார வல்லுநர்களும் குழுக்களும் வலியுறுத்தியுள்ளன. அவைகளைப் பின்வருமாறு காண்போம்:

திரு. ஏ. டி. கோர்வாலா (A. D. Gorwala) தம்முடைய 'பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செயல்படும் திறன்' என்ற தலைப்பின் மீதான அறிக்கையில் பாதுகாப்புத் தொழில்கள், இருப்புப்பாதைப் போக்குவரத்து போன்ற ஒருசில பொதுத்

துறை நிறுவனங்களைத் தவிர மற்றத் தொழிலமைப்புகள் தன்னாட்சியுரிமையை அடிப்படைக் கோட்பாடாகக் கொள்ள வேண்டும் எனக் கூறுகிறார். பொதுநலனுக்காக மிகவும் அவசிய மான நோக்கங்களுக்காக மட்டும் நாடாளுமன்றமும், அரசும், தொழிலமைப்புகளின் உரிமையைக் கட்டுப்படுத்தலாம் எனக் கருதுகிறார்.

பேராசிரியர் கால்பிரெய்த் (Prof. Galbraith) என்ற பொரு ளாதார வல்லுநர் 1956-ல் நமது நாட்டுக்கு வருகை புரிந்த போது, உற்பத்தித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு அதிக அளவில் தன்னாட்சியுரிமையும், அதிகாரங்கள் பன்முகப்படுத்தப்படும் உரிமையும் அளிக்கப்பட வேண்டுமெனக் கூறினார்.

டாக்டர் பால் ஆப்பிள்பை (Dr. Paul Appleby) பொதுத் துறை நிறுவனங்கள் குறித்த காலத்தில் விரைவான முடிவுகளை மேற்கொண்டு செயற்படும் வகையில், அரசின் வழிமுறைகள் மாற்றி அமைக்கப்படவேண்டுமெனக் கூறினார்.

1957ஆம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவின் (L. I. C.) நடவடிக்கைகளை ஆராயும்பொருட்டு அமைக்கப்பட்ட 'சாக்ளா குழு' (Chagla Commission) பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் ஏற்படுத்தப்பட்ட தொழிலமைப்புகளுக்கு, தன்னாட்சியுரிமை வழங்கப்படுவது குறித்துப் பல பயன்தரும் கருத்துகளைத் தெரிவித்தது. பொதுத்துறை நிறுவனங்களின் செயல்முறைகளில் அரசு தலையிடக்கூடாது என அக் குழு வலியுறுத்தியது. அன்றாட அலுவல்களில் அவைகளுக்கு முழுச் சுதந்திரமும், பொதுநலனைப் பேணிக் காப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதில் தற்சார்பு உரிமைகளும் அளிக்கப்படவேண்டுமெனவும் அக் குழு கருதியது.

'சாக்ளா குழு'வின் தன்னாட்சியுரிமை பற்றிய கருத்துகளைப் பின்வருமாறு காணலாம் :

(1) தன்னாட்சியுரிமை பெற்ற பொதுக் கூட்டுரு நிறுவனங் களின் செயல்முறைகளில் அரசு குறுக்கிடக்கூடாது; அப்படிக் குறுக்கீடுகள் தேவைப்பட்டால், சட்டத்தின் பிரிவுகளின் மூலம் வழிகாட்டும் கொள்கைகள் வலியுறுத்தப்பட வேண்டும்.

(2) பொதுக் கூட்டுருக்களில் நியமிக்கப்படும் அரசு அதிகாரிகள், அக் குறிப்பிட்ட தொழிலமைப்புக்கு

மட்டும்தான் பணிபுரியக் கடமைப்பட்டவரேயொழிய அரசின் மற்றத் துறைகளுக்கல்ல எனவும், அரசின் அமைச்சகத்தைப்பற்றி எவ்விதத் தயக்கமுமின்றி முடிவுகளை மேற்கொள்ளலாம் எனவும் உணர வேண்டும்.

(3) பொதுக் கூட்டுரு நிறுவனங்களுக்குத் தனிச்சிறப்பு வாய்ந்த வழிமுறைகளை அரசு ஏற்படுத்துவதற்குமுன், அவை நாடாளுமன்றத்தில் கலந்தாலோசிக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்படவேண்டும்.

மேற்கண்ட கருத்துகளை ஆராயும்போது, பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்குத் தன்னாட்சியுரிமைக் கோட்பாடு மிகவும் அடிப்படைத் தத்துவமாகக் கருதப்படவேண்டுமெனவும், அதற்கேற்ற வகையில் அரசின் கட்டுப்பாடுகள் அமையவேண்டுமெனவும் தெளிவாகிறது.

நிருவாக மறுசீரமைப்புக் குழு (Administrative Reforms Commission)

பொதுத்துறை நிறுவனங்களின் அமைப்பு முறைகளில் பல அடிப்படை மாற்றங்கள் ஏற்படவேண்டுமென வலியுறுத்தியது. 'துறைக் கூட்டுரு' (Sector Corporation) என்றவோர் அமைப்பைத் தோற்றுவித்து, ஒவ்வொரு கூட்டுருவின் கட்டுப்பாட்டிற்குக்கீழ்ச் சில உற்பத்தித் தொழில்களை அமைக்கவேண்டுமெனவும் இக் குழு கருதியது. 'துறைக் கூட்டுரு' ஒவ்வொன்றிற்கும் அவைகளின்கீழ் இயங்கும் தொழிலமைப்புகளைக் கட்டுப்படுத்தி ஒருங்கிணைந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போதிய அதிகாரங்கள் அளிக்கப்படவேண்டுமெனவும், இதன்மூலம் பொதுத்துறை நிறுவனங்கள் போதிய தன்னாட்சியுரிமையைப் பெறமுடியுமெனவும் இக் குழு பரிந்துரைத்தது.

மேலும், இக் குழு 'துறைக் கூட்டுரு'க்களின் முக்கியப் பணிகள் யாவை எனவும் குறிப்பிட்டது. பின்வரும் பணிகள் மிக முக்கியமாகக் கருதப்பட்டன:

(i) அதிகாரிகள் மற்றும் தொழிலாளர்களுக்குப் போதிய பயிற்சி அளித்தல்.

(ii) ஆராய்ச்சி, அறிவுரை வழங்கல்.

(iii) விற்பனையை அதிகரித்தல்.

(iv) மற்றனைத்து நிறுவனங்களுக்குத் தேவையான சில பொதுப்பணிகளை வழங்கல்.

(v) அதிகாரத்தை முடிந்தவரை பன்முகப்படுத்துதல்.

(vi) உயர்மட்ட அதிகாரிகளையும் மற்ற மேலாளர்களையும் நியமித்தல்.

இவ்வாறு நிருவாக சீரமைப்புக் குழு, 'துறைக் கூட்டுரு முறையின் அமைப்புபற்றியும், அவற்றின் முக்கியப் பணிகளைப் பற்றியும் தனது அறிக்கையை அரசுக்குச் சமர்ப்பித்தது. ஆனால், 'துறைக் கூட்டுரு' என்றதோர் அமைப்பை ஏற்படுத்த அரசு ஒப்புக்கொள்ளவில்லை; இருந்தபோதிலும், பொதுத்துறை நிறுவனங்களுக்குப் போதிய தன்னாட்சியுரிமை அளிக்கப்பட வேண்டுமென்ற பொதுவான கருத்தை ஏற்றுக்கொண்டது. இக் குழுவால் பரிந்துரைக்கப்பட்ட,'துறைக் கூட்டுரு' அமைப்புகளின் பணிகளைத் தேவையான மாறுதல்களுடன் பொதுத்துறையின் முக்கியப் பணிகளாக அரசு ஏற்றுக்கொண்டது. எடுத்துக் காட்டாக, பொதுத்துறை நிறுவனங்களின்பொது மேலாளரையும் மற்ற நிருவாக அதிகாரிகளையும் நியமிக்கும் உரிமை 'துறைக் கூட்டுரு' என்ற தன்னாட்சியுரிமை பெற்ற அமைப்பிற்கு அளிக்கப் படவேண்டுமென நிருவாக மறுசீரமைப்புக் குழு வலியுறுத்தியது. ஆனால் அரசு, பொது மேலாளர்களும் மற்ற இயக்குநர்களும் தலைவருடன் (Chairman) கலந்தாலோசிக்கப்பட்டு அரசால் நியமிக்கப்படுவர் என அறிவித்தது.

எனவே, மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் பொதுத் துறை நிறுவனங்களின் சீரான செயல்முறைக்குத் தன்னாட்சியுரிமை அதிகபட்ச அளவில் தேவையென முடிவுசெய்யலாம்.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தன்னாட்சியுரிமை

நமது நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் முழு அளவில் தன்னாட்சியுரிமை பெற்றுத் திகழ்கின்றன. இயக்குநர் களுக்கு, நிதி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரமும் நிருவாகத்தைச் செம்மையாக நடத்தத் தேவைப்படும் அதிகாரங் களும் அதிகபட்ச அளவில் அளிக்கப்பட்டுள்ளன.

பின்வரும் பகுதியில் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள 'தன்னாட்சியுரிமை' அதிகாரங்களைப் பற்றிச் சிறிது காண்போம்:

நிதிநிலை அதிகாரங்கள் (Financial Powers)

(1) பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநரவைகளுக்கு, அரசின் முன் அனுமதியின்றி அனுமதிக்கப்பட்ட திட்டங்கள் அல்லது பணிகளுக்கு மூலதனச் செலவுகளை மேற்கொள்ளும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அரசினுல் அனுமதிக்கப்பட்ட திட்ட அறிக்கைகளின்படி அனைத்து மூலதனச் செலவுகளை மேற் கொள்ளவும், பத்துச் சதவீதம் வரை மதிப்பீட்டில் மாறுதலுடன் செலவுகளை மேற்கொள்ளவும் இயக்குநரவைகள் அதிகாரம் பெற்றுள்ளன. இப் பணிகளை மேற்கொள்ளத் தேவையான ஒப்பந்தப் புள்ளிகளைப் (tender) பெறவும், அவைகளை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளவும் தேவையான அதிகாரமும் வழங்கப் பட்டுள்ளது.

(2) பற்றுக்குறையுள்ள நிதி வரவு-செலவுத் திட்டங்களைத் தவிர, மற்ற வரவு-செலவுத் திட்டங்களுக்குப் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் அரசின் முன் அனுமதியைப் பெறத் தேவை யில்லை. பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநரவைகளால் அனுமதிக்கப்பட்ட நிதி வரவு-செலவுத் திட்டங்கள், உற்பத்தி, இலாபம் போன்ற தகவல்களை அரசுக்குத் தெரியப்படுத்து வதற்காகத்தான் அனுப்பப்படுகின்றனவே அன்றி முன் அனுமதி பெறுவதற்கு அல்ல.

(3) தொழிலமைப்புகளின் விரிவுபடுத்தும் திட்டங்களுக்குத் தேவையான நிதியை இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation of India), இந்தியத் தொழில்வள வங்கி (Industrial Development Bank of India) ஆகிய நிதி நிறுவனங்களிடமிருந்து பெற பொதுத்துறைத் தொழிலமைப்பு களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஆனுல், இத் தொழி லமைப்புகள் நிலையில் தற்சார்பு உடையவையாகவும், எதிர்கால நிதித் தேவைகளுக்கு அரசை அணுகாத நிலையை அடைந்திருப்ப வையாகவும் இருக்கவேண்டும்.

நிருவாக அதிகாரங்கள் (Administrative Powers)

மிகச் சமீப காலம்வரை, மேலாண்மை இயக்குநர்கள் (Managing Directors), பொது மேலாளர்கள் (General Managers) முதலியவர்களை, பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் நிய மிக்கும் அதிகாரம் அரசிடமே இருந்து வந்தது. மாத வரு மானம் ரூ. 2,250 அல்லது ரூ. 2,500-க்கும் அதிகமாகப் பெறும் மற்றச் சில உயர்நிலை அதிகாரிகளை நியமிக்கவும், பொதுத்துறை நிறுவனங்கள் அரசின் முன் அனுமதியைப்பெற வேண்டி

இருந்தன. ஆனால், இப்போது இயக்குநர்களின் பதவி நிலைக்கும் கீழுள்ள பதவிகளில், பொது மேலாளர் நீங்கலாக மற்ற அதிகாரிகளை நியமிக்கும் உரிமை பொதுத்துறை நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது; அரசின் முன் அனுமதி தேவை இல்லை. நிதி ஆலோசகர்களை (Financial Advicers) நியமிக்கவும் இயக்குநரவைக்கு அதிகாரம் உண்டு. பொதுத்துறை நிறுவனங்களின் தலைவர்கள் (Chairmen), இயக்குநர்கள் (Directors) போன்ற உயர்நிலை அதிகாரிகள் மட்டும்தான் அரசினால் நியமிக்கப்படுவர். அதுபோலவே, 58 வயது கடந்த அதிகாரிகளையும், மாதச்சம்பளம் ரூ. 2,500 / 3,000-க்கும் அதிகம் பெறும் அதிகாரிகளையும் நியமிக்க அரசின் முன் அனுமதி தேவை.

பொதுத்துறையில் பணிபுரியும் தொழிலாளர்கள் மற்றும் அதிகாரிகளின் பணி நிலைகள், அடிப்படைச் சம்பளம், ஊக்கப் படிகள் போன்றவை அனைத்துத் தொழிலமைப்புகளிலும் ஒரே மாதிரியாக அமையாவிடினும்கூட, முடிந்தவரை சீரமைக்கப்பட உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனங்களிலும் செயற்படுத்தப்படும் பணி நிலைகள், அடிப்படை ஊதியம், மற்றப் படிகள் போன்றவற்றைச் சேகரித்துத் தேவைப்படும் நேரங்களில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு வழங்கும் தீர்வகமாக, 'பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் புள்ளி விவரச் சேகரப் பணிமனை' (Bureau of Public Enterprises) செயல்புரிகிறது. தேவை ஏற்பட்டால் மேற்கண்ட விவரங்களைப்பற்றிய வழி முறைகளும் வழங்கப்படுகின்றன.

அமைச்சகத்தின் அனுமதி தேவைப்படும் நடவடிக்கைகள்

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சகத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் :

(i) முழுவதும் அரசுரிமை பெற்ற நிறுமங்கள் அல்லது பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் புதிய பொதுத் துறைத் தொழிலமைப்புகளைத் தோற்றுவித்தல்.

(ii) புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட அல்லது நடந்து கொண்டிருக்கும் தொழிலமைப்பொன்றுக்கு மூலதனம் வழங்குதல்.

(iii) தொழில் ஒன்றிணைப்பு (amalgamation), தொழில் கலைப்பு (winding up) போன்ற அடிப்படை அமைப்பு

முறையில் பொதுத்துறை நிறுவனத்தில் மாற்றம் ஏற்படுத்துதல்.

(iv) மதிப்பீட்டிற்கு மேல் 20% முதலீடு அதிகரிக்கும் சமயம்.

நிதி நிறுவனங்களிடமிருந்து நிதி உதவிகள் பெறும் உரிமை

பொதுத்துறை நிறுவனங்கள் தேவையானபோது இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு, ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, இந்தியத் தொழில்வள வங்கி, இந்திய யூனிட் டிரஸ்ட் முதலிய நிதி நிறுவனங்களை அணுகி அரசின் அனுமதியின்றி நிதி உதவிகளைப் பெற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

நடைமுதல் (Working Capital) தேவைகளைப் பெறும் அதிகாரம்

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தத்தம் நடைமுதல் தேவைகளை இந்திய ஸ்டேட் பாங்கிடமிருந்து (State Bank of India) ரொக்கக் கடனாகப் பெற அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இக் கடனுக்கு அரசு தேவைப்படும் நேரங்களில் பொறுப்புறுதி அளிக்கும். அப்படி ஸ்டேட் பாங்கிடமிருந்து கடன்பெற முடியாத நேரங்களில் அரசே குறுகிய காலக் கடன்களை அளிக்கும்.

விலைகளை நிர்ணயிக்கும் உரிமை

விலைக் கோட்பாட்டைப் பின்பற்றுவதில் பொதுத்துறை நிறுவனங்களுக்குக் கீழ்க்காணும் உரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

(1) மற்றத் தனியார்துறைத் தொழிலமைப்புகளுடன் போட்டி நிறுவனங்களாகச் செயற்பட்டு, அதே வகையிலான நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்யும்போது பொதுத்துறை நிறுவனங்கள் சந்தை நிலைக்கேற்பவும், தேவை-அளிப்பு போன்ற காரணிகளுக்கேற்பவும் விலைகளை நிர்ணயம் செய்யும் உரிமையைப் பெற்றுள்ளன.

(2) முற்றுரிமை அல்லது பகுதி-முற்றுரிமைச் சந்தையில் செயற்படும் பொதுத்துறை நிறுவனங்கள், இறக்குமதி அடக்க விலைக் கொள்கைக்கேற்ப விலைகளை நிர்ணயம் செய்யவேண்டும். குறிப்பிடப்பட்ட உச்சவரம்புக்குள், ஏதாவதொரு நிலையில் விலைகளை நிர்ணயிக்கும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது. இறக்குமதி அடக்க விலை குறைவாக உள்ளது எனக் கருதப்படும் நேரங்களில் அதிக விலைகளை நிர்ணயம் செய்ய அமைச்சகத்திற்குத் தெரியப்படுத்தி, நிதி அமைச்சகம் மற்றும் 'பொதுத்துறைத்

தொழிலமைப்புகளின் புள்ளி விவரச் சேகரப் பணிமனை' ஆகியவற்றின் அறிவுரைகளைப் பெறவும் உரிமை அளிக்கப்பட்டுள்ளது.

பங்காதாயங்கள் வழங்கும் உரிமை

1968 சனவரி 10ஆம் நாளிட்ட தனது ஆணையில், அரசு பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநர்களுக்கு இலாபத்தைப் பகிர்ந்து பங்காதாயம் அளிக்கும் உரிமையை வழங்கியுள்ளது. இயக்குநரவை பங்காதாயங்களை முடிவுசெய்யும்போது, நாட்டு நலனையும் பங்குதாரர்களின் நலனையும் கருத்திற்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஒப்பந்தப் புள்ளிகளைப் பெறும் உரிமை

ஒப்பந்தப் புள்ளிகளைப் பெற்று ஆராய்ந்து, ஒப்பந்தக்காரர்களைத் தீர்மானிக்கும் உரிமையும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. சில நேரங்களில் குறைந்தபட்ச ஒப்பந்தப் புள்ளியைத் தவிர்த்து, அதைவிட அதிக அடக்கச் செலவு கொண்ட ஒப்பந்தங்களைத் தீர்மானிக்கும் உரிமையும் உண்டு. மேலும், சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களில், பொதுத்துறை நிறுவனங்கள் ஒப்பந்தப் புள்ளிகள் பெற்று ஒப்பந்தங்களை ஏற்படுத்தும் வழிமுறையைப் பின்பற்றாமல், நேரடியாகவே ஒப்பந்தங்களைத் தீர்மானித்து ஒப்பந்தக்காரர்களை நியமிக்கும் உரிமையைப் பெற்றுள்ளன.

தலைவர், மேலாண்மை இயக்குநர் ஆகியோரின் பணி நியமனம்

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தலைவர், மேலாண்மை இயக்குநர் ஆகியோரின் ஊதியம், அவர்களின் பணிப்பொறுப்புக் கேற்றவாறு நிர்ணயிக்கப்படவேண்டுமென நிருவாக மறுசீரமைப்புக் குழு வலியுறுத்தியது. இக் கருத்தை அரசு ஏற்றுக் கொண்டது.

உயர்நிலை அதிகாரிகளின் நியமனம்பற்றி நிருவாக மறுசீரமைப்புக் குழு பின்வரும் கருத்துகளைப் பரிந்துரைத்தது:

(i) ஒவ்வொரு பொதுத்துறைத் தொழிலமைப்புக்கும் பகுதி நேரத் தலைவர் ஒருவரும், முழுநேர மேலாண்மை இயக்குநரும் அல்லது முழுநேரத் தலைவரே மேலாண்மை இயக்குநராகவும் நியமிக்கப்படவேண்டும். இவர்களின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாக நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(ii) சில குறிப்பிட்ட தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களைத் தவிர, மற்ற நேரங்களில் அமைச்சகத்தின் எந்த அதிகாரியும் பொதுத்துறைத் தொழிலமைப்பின் தலைவராக நியமிக்கப்படக்கூடாது.

(iii) பேரளவு உற்பத்தி நிறுவனங்களில் முழுநேர இயக்குநர்கள் (Full-time Directors) நியமிக்கப்பட்டுத் துறைத் தலைவராகப் பணிபுரிய வேண்டும். ரெயில் துறை இயக்குநரவைபோல் மற்றப் பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநரவைகளும் செயற்படவேண்டும்.

(iv) அரசுக்கும் இயக்குநரவைக்கும் இடையே மட்டுமல்லாமல், தொழிலமைப்பின் பல்வேறு நிலைகளிலும் அதிகாரங்கள் பன்முனைப்படுத்தப்படவேண்டும்.

மேற்கண்ட உயர்நிலை அதிகாரிகளின் நியமனம்பற்றி வலியுறுத்தப்பட்ட கருத்துகளில், பெரும்பான்மையான கருத்துகளை அரசு ஏற்றுக்கொண்டு செயற்படுத்தியுள்ளது.

அரசு அதிகாரிகள் பிரதிநிதிகளாக நியமிக்கப்படுவதைத் தவிர்த்தல்

பல பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் உயர்நிலை அதிகாரிகள், அரசின் பிரதிநிதிகளாக (Deputation) நியமிக்கப்பட்டிருந்தனர். இது தன்னுட்சியுரிமையை மிகவும் பாதித்ததால் அவ்வதிகாரிகள் தங்களுடைய அரசு அலுவலகப் பதவியை விடுத்து, பொதுத்துறையின் முழுநேர அதிகாரிகளாகப் பணியாற்றவோ அல்லது திரும்பவும் தத்தம் அரசுப் பணிக்குத் திரும்பிவிடவோ முடிவுசெய்யவேண்டும். பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மேல்நிலை அதிகாரிகளாகப் பணிபுரிய இசைவு தெரிவித்தால் உடனடியாக அவர்கள் பொதுத்துறையின் நிரந்தர அதிகாரிகளாக நியமிக்கப்பட்டு, அவர்களின் ஓய்வுக் கால ஊதியம் போன்றவைகளை அக் குறிப்பிட்ட பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து பெற வழிமுறைகள் செய்யப்படும். மேலும், பொதுத்துறைத் தொழிலமைப்புகளிடையே தேவையான சந்தர்ப்பங்களில் நிறுவனங்களின் மேலாண்மைக் குழுவின் அனுமதியுடன் அதிகாரிகளை மாற்றிக்கொள்ளும் உரிமையும் வழங்கப்பட்டுள்ளது.

மற்ற முக்கிய அதிகாரிகளின் நியமனம்

பொதுத்துறையின் விரைவான வளர்ச்சி, திறமை மிகுந்த மேலாளர்களின் தேவையை அதிகரிக்கச் செய்துவிட்டது. ஒரு குறிப்பிட்ட பயிற்சி நிறுவனத்தின் மூலம், இத்துணை எண்ணிக்

கையில் அதிகாரிகளை வழங்குதல் இயலாத காரியமாகும். எனவே, பொதுத்துறைக்குத் தேவைப்படும் அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதில் பல்வேறு வகையான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார்துறையிலிருந்து திறமைமிகுந்த அதிகாரிகளைப்பெற, பல வழிகளிலும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. மூன்று வித இளநிலை மேலாளர்களின் பதவி நிலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அவைகளாவன: (i) அடிப்படைச் சம்பளம் ரூ. 1,300 முதல் ரூ. 1,600 வரை, (ii) ரூ. 1,600 முதல் ரூ. 2,000 வரை, (iii) ரூ.2,000 முதல் ரூ. 2,500 வரை என மூன்று நிலைகளில் அதிகாரிகள் நியமிக்கப்படுவர்.

மேலும், பொதுத்துறை நிறுவனங்களின் புள்ளி விவரச் சேகரப் பணிமனையின்கீழ் மையக் குழுவொன்று அமைக்கப்பட்டு, உயர்நிலை அதிகாரிகளின் நியமனம்பற்றிய விவரங்களைப் பொதுத்துறை நிறுவனங்களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. திறமை மிகுந்த அதிகாரிகளைப் பெறுவதற்காக உயர்நிலைப் பதவிகளின் சம்பளம் அதிகமாக்கப்பட்டது. புதிய சம்பள விகிதங்களை நிர்ணயிப்பதற்காக, பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தும் நான்கு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவுக்கும் ஏற்ப அடிப்படைச் சம்பளம் தீர்மானிக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில் தொழிலமைப்பின் பங்கு, தொழிலமைப்பின் மீதான முதலீடு, வேலைவாய்ப்பு, விற்பனைப் புரள்வு (sales turn over) ஆகியவைகளின் அடிப்படையில் நிறுவனங்கள் பிரிக்கப்பட்டன. அப் பிரிவுகளையும், சம்பள அளவுகளையும் பின் வரும் அட்டவணைமூலம் தெளிவாக அறியலாம் (1-4-1970 - ல்).

தொழிலமைப்பு	சம்பள அளவுகள் (ரூபாய்)	பதவி இடங்களின் எண்ணிக்கை
(1) 'A' பிரிவைச் சார்ந்த தொழிலமைப்புகள்	3,500 - 125 - 4,000	11
(2) 'B' பிரிவைச் சார்ந்த தொழிலமைப்புகள்	3,000 - 125 - 3,500	30
(3) 'C' பிரிவைச் சார்ந்த தொழிலமைப்புகள்	2,500 - 100 - 3,000	76
(4) 'D' பிரிவைச் சார்ந்த தொழிலமைப்புகள்	2,000 - 100 - 2,500	41
	கூடுதல்	158

இந் நான்கு வகைப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலமைப்புகளையும், பதவிகளின் பாகுபாட்டையும் பின்வரும் எடுத்துக்காட்டுகள் மூலம் தெளிவாக அறியலாம்.

1-4-1970-ல், உயர்நிலை அதிகாரிகளின் சம்பள அளவுகளும் அவற்றின் பாகுபாடும்

பிரிவு 'A' வகைத் தொழிலமைப்புகள்
(ரூ. 3,500—125—4,000)

(1) தலைவர், பாரத கனரக மின்சாதனங்கள்
(Chairman, Bharat Heavy Electricals)

(2) தலைவர், இந்திய உணவுப் பொருள் கூட்டுரு
(Chairman, Food Corporation of India)

(3) தலைவர், இந்துஸ்தான் வான்கலங்கள்
(Chairman, Hindustan Aeronautics)

(4) தலைவர், இந்திய எண்ணெய்க் கூட்டுரு
(Chairman, Indian Oil Corporation)

(5) தலைவர், எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுரு
(Chairman, Oil and Natural Gas Commission)

(6) தலைவர்-மேலாண்மை இயக்குநர், இந்திய உரக் கூட்டுரு
(Chairman - Cum - Managing Director, Fertilizer Corporation of India)

பிரிவு 'B' வகையைச் சார்ந்த தொழிலமைப்புகள்
(ரூ. 3,000 – 125 – 3,500)

(1) தலைவர்-மேலாண்மை இயக்குநர், இந்துஸ்தான் தாமிர நிறுவனம்
(Chairman - Cum - Managing Director, Hindustan Copper Ltd.)

(2) தலைவர்-மேலாண்மை இயக்குநர், தேசிய நிலக்கரி முன்னேற்றக் கூட்டுரு.
(Chairman-Cum-Managing Director, National Coal Development Corporation Ltd.)

(3) தலைவர் - மேலாண்மை இயக்குநர், இந்தியக் கப்பல் கூட்டுரு
(Chairman - Cum - Managing Director, Shipping Corporation of India)

(4) பொது மேலாளர், இந்திய வான் வழிகள் கூட்டுரு
(General Manager, Indian Airlines Corporation)

(5) இயக்குநர் (நிதி) இந்திய உரக் கூட்டுரு
[Director, (Finance,) Fertilizer Corporation of India Ltd.]

பிரிவு 'C' வகையைச் சார்ந்த தொழிலமைப்புகள்
(ரூ. 2,500—100—3,000)

(1) தலைவர்—மேலாண்மை இயக்குநர், சென்னை சுத்திகரிப்பு நிறுவனம்
(Chairman-Cum-Managing Director, Madras Refinaries)

(2) தலைவர்—மேலாண்மை இயக்குநர், இந்தியத் தொலைபேசிநிறுவனம்
(Chairman - Cum - Managing Director, Indian Telephones Ltd.)

(3) மேலாண்மை இயக்குநர், நெய்வேலி நிலக்கரிக்கூட்டுரு
(Managing Director, Neyveli Lignite Corporation)

(4) மேலாண்மை இயக்குநர், இந்திய சிமெண்ட் கூட்டுரு
(Managing Director, Cement Corporation of India)

(5) மேலாண்மை இயக்குநர், இந்திய இயந்திரக் கருவிக் கூட்டுரு
(Managing Director, Machine Tool Corporation of India Ltd.)

பிரிவு 'D' வகையைச் சார்ந்த தொழிலமைப்புகள்
(ரூ. 2,000—100—2,500)

(1) தலைவர், தேசிய சிறுதொழில் கூட்டுரு
(Chairman, National Small Industries Corporation Ltd.)

(2) மேலாண்மை இயக்குநர், இந்துஸ்தான் உயிர் எதிரிக் கொல்லி கூட்டுரு
(Managing Director, Hindustan Antibiotics)

(3) மேலாண்மை இயக்குநர், தேசிய விதைகள் கூட்டுரு
(Managing Director, National Seeds Corporation Ltd.)

(4) மேலாண்மை இயக்குநர், நவீன ரொட்டி நிறுவனம்
(Managing Director, Modern Bakeries Ltd.)

(5) பொது மேலாளர், இந்திய இயந்திரக் கருவிக் கூட்டுரு
(General Manager, Machine Tool Corporation of India)

ஒவ்வொரு பிரிவிலும் இன்னும் பலவகைப்பட்ட பொதுத் துறை நிறுவனங்கள் செயற்பட்டாலும், எடுத்துக்காட்டாகத் தான் ஒவ்வொரு பிரிவிலும் ஐந்து வகை நிறுவனங்களையும், சம்பள அளவுகளையும் கண்டோம்.

முடிவுரை: நமது நாட்டுப் பொதுத்துறை நிறுவனங் களுக்குப் போதிய தன்னாட்சியுரிமை வழங்கப்பட்டிருப்பினும் நடைமுறையில் அரசின் குறுக்கீடுகளும், நாடாளுமன்றத்தின் தலையீடுகளும் அதிக அளவில் ஏற்பட்டு, பொதுத்துறையின் அன்றாட அலுவல்களில் சிக்கல்கள் பலவற்றையும், கால தாமதத்தையும் ஏற்படுத்திவிடுகின்றன. பொதுத்துறையின் வெற்றிகரமான இயக்கத்திற்கு அதிகபட்ச அளவு தன்னாட்சி யுரிமைத் தேவை. எனவே, நமது நாட்டில் பொதுத்துறையின் சீரான வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில் தன்னாட்சி யுரிமை அளிக்கப்பட, அரசு பல நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பல முக்கியத் தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வும், நிருவாக முடிவுகளை எடுக்கவும் பொதுத்துறை நிறுவனங் களின் இயக்குநரவைக்கு முழு அளவில் அதிகாரம் வழங்கப் படவேண்டும். மேலும், நிருவாக வழிமுறைகளில் 'அதிகார இன நிருவாக அமைப்பு' மாற்றப்பட்டு, எளிமையான, சிக்கலற்ற முறைகள் பின்பற்றப்படவேண்டும்.

7. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பொறுப்புடைமை

(Public Accountability of Public Enterprises)

பொறுப்புடைமைக் கொள்கையின் முக்கியத்துவம்

நாட்டு மக்கள் அனைவருக்கும் பொருளாதார மற்றும் சமூகப் பணிகளை அளிப்பதற்காகத் தோற்றுவிக்கப்படுவதே பொதுத் துறைத் தொழிலமைப்புகளாகும். எனவே, தொழிலாளர்கள், நுகர்வோர் போன்றனைவருக்கும் சரிசமமாக நன்மை பயக்கும் வகையில் அவைகளின் நிருவாக, நிதிநிலை மற்றும் விலைக் கொள்கை நியாயமானவையாகவும் பாரபட்சமின்றியும் அமைய வேண்டும். சமூகப்பொருளாதார நீதியை அடையப் பொதுத்துறை நிறுவனங்களின் 'தன்னாட்சியுரிமை' கட்டுப்படுத்தப்படுகிறது. அதிகபட்ச அளவில் தற்சார்புக் கொள்கையும் தன்னாட்சியுரிமையும் கொண்ட பொதுத்துறை நிறுவனங்கள், அரசால் கட்டுப் படுத்தப்படாவிடில் சமுதாய நலன் புறக்கணிக்கப்பட்டு, பொதுத்துறைத் தொழிலமைப்புகளைத் தோற்றுவித்ததன் நோக்கங்கள் நிறைவேறாமல் போய்விடும். ஆகவேதான், ராப்ஸன் (Robson) 'திறமை மிகுந்தவொரு பொதுத்துறைத் தொழிலமைப்பு அரசு, நாடாளுமன்றம், பணியாளர்கள், தொழிலாளர்கள், நுகர்வோர் ஆகிய அனைவருக்கும் பொறுப்புடைய வகையில் தன்னுடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்' எனக் கூறுகிறார்.

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தன்னாட்சியுரிமை பெற்றிருப்பினும்கூட, அரசின் கொள்கைகளுக்கேற்பவும், தங்களுடைய பணி நோக்கங்களுக்கேற்றவாறும் நடவடிக்கைகளை உருவாக்க வேண்டும். நிருவாகத் திறமைக்கும் சமுதாய நலனுக்குமிடையே நியாயமான முறையில், அவைகளின் செயல்முறை அமைய வேண்டும். பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் உரிமையும் நிருவாகமும் வெவ்வேறான இடங்களில் அமைந்துள்ளது. தனியார் துறைத் தொழிலமைப்புகளைப்போன்று தொழில் உரிமை

யாளர்களோ அல்லது பங்குதாரர்களோ, இயக்குநர்களாகவும் மேலாளர்களாகவும் செயற்பட்டு வாணிகத்தை நடத்தவில்லை. பொதுத்துறை நிறுவனங்களில் மக்களிடம் திரட்டப்படும் வரிப் பணத்திலிருந்து அரசு முதலீடு செய்கிறது. எனவே, முழு உரிமைகளைப் பெற்ற பங்குதாரராக அரசு விளங்குகிறது. நிருவாகத்தை மேற்கொள்ளும் அதிகாரிகள், மாத ஊதியத்தின் அடிப்படையில் அரசால் நியமிக்கப்படுகின்றனர். ஆனல், தொழிலமைப்பின் உரிமையுடன் அவர்களுக்கு எவ்விதத் தொடர்புமில்லை. இதன் காரணமாக, அதிக அளவில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முதலீடும், தன்னுட்சியுரிமையும் நியாயமான வாணிகக் கொள்கைகளுக்காகப் பயன்படுத்தப்படாமல்போவதற்கு வாய்ப்புகள் அதிகம். எனவே, பொதுத்துறைத் தொழிலமைப்புகள், அரசு மற்றும் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டின் கீழ்ச் செயற்படுதல் அத்தியாவசியமாகிறது. இக் கட்டுப்பாட்டின் மூலம் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் நாடாளுமன்றம், அரசு, நாட்டு மக்கள் ஆகிய அனைவருக்கும் பதில் கூறும் பொறுப்புடன் நடைபெற முடியும்.

நாட்டின் வருமானம், முதலாக்கம் (Capital formation) ஆகியவைகளில் பொதுத்துறை அதிகச் செல்வாக்கைப் பெற்றுள்ளது. நுகர்வோர் பணிகளிலும் அதிக முக்கியத்துவத்தைப் பெற்று விளங்குகிறது. எனவே, எவ்விதப் பொறுப்புடைமையுமின்றி, பொதுத்துறை செயற்படச் சுதந்திரம் அளிக்கப்பட்டு விட்டால் நாட்டுப் பொதுநலனுக்கெதிராகச் சக்திவாய்ந்த மையப்படுத்தப்பட்ட முற்றுரிமையும், அதிகார இன நிருவாகமும் ஏற்பட்டுவிடும். எனவேதான், பொறுப்புடைமைக் கொள்கை அவசியமாகிறது.

இரண்டு முக்கியக் காரணங்களால் இப் பொறுப்புடைமைப் பிரச்சினை சமீப காலங்களில் அதிக முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. முதலாவதாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் அளவிலும் எண்ணிக்கையிலும் பெருகிவிட்டன. இரண்டாவதாக, பொதுத்துறைத் தொழில்களின் அமைப்பு முறைகளில் பல அடிப்படை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. முன்பெல்லாம் பொதுத்துறைத் தொழில்கள் துறை நிருவாக முறையில் அமைக்கப்பட்டன. அத்துறைகள், மைய அமைச்சகத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயங்கிவந்தன. ஆனல், சமீப காலங்களில் அதிகச் சுதந்திரமும், தன்னுட்சியுரிமையும் கொண்ட பொதுக் கூட்டுரு அல்லது கூட்டுப்பங்கு நிறும அமைப்பு முறைகளில் பொதுத் துறை நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. பொதுக்

கூட்டுரு அமைப்பு முறையில் அதிகபட்ச அதிகாரங்களும், தன்னாட்சியுரிமைகளும் அளிக்கப்பட்டுள்ளதால் அவைகளின் செயல்முறைகளில் கட்டுப்பாடு மிகவும் அவசியமாகிறது. இதன் காரணமாகத்தான் பொதுப் பொறுப்புடைமைக் (Public Accountability) கொள்கை வலியுறுத்தப்படுகிறது.

பொறுப்புடைமை—பொருளும் நோக்கங்களும் (Accountability—Meaning and Objectives)

செய்து முடிக்கப்பட்ட நடவடிக்கைகளைப்பற்றி அதற்குரிய அதிகாரக் குழுவிடம் பதில்கூறும் வழிமுறைக்குப் பொறுப்புடைமை எனப் பொருள். இலக்கியக் கண்கொண்டு நோக்கினால் கணக்குகள், புள்ளி விவரங்கள், அறிக்கைகள் ஆகியவைகளைச் சமர்ப்பிப்பதற்குப் பொறுப்புடைமை (Accountability) என்று பொருள். ஆனால், தொழிலமைப்புகள் எதிர்பார்த்த அளவில் பணிபுரிந்திருக்கின்றனவா என்று அறியவும், அதன் வாயிலாகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதுமே பொறுப்புடைமையின் அடிப்படைக் கருத்தாகும். 'இந்தியாவில் அரசு நிறுவனங்கள்' (State Enterprises in India - Agarwal) என்ற நூலில் திரு. அகர்வால் பொறுப்புடைமையைப்பற்றிப் பின்வருமாறு கூறுகிறார்:

'நாடாளுமன்றத்தின் மூலமாக நேரடியாகவும், குறிப்பிட்ட அமைச்சகத்தின் மூலம் மறைமுகமாகவும், அரசு நிறுவனங்களின்மீது கட்டுப்பாடு ஏற்படுத்தப்படுவதைப் பொறுப்புடைமை உட்கருத்தாகக் கொண்டுள்ளது; அதன் மூலமாக நிறுவனத்தின் மேலாண்மை அமைச்சருக்கும், அமைச்சர் நாடாளுமன்றத்திற்கும் பதில் கூறும் பொறுப்புடையவர்களாகின்றனர்.'

தொழில் நடவடிக்கைகளைக் கணக்கேடுகளில் பதிவு செய்தல், தணிக்கை விதிமுறைகளைப் பின்பற்றுதல், நாடாளுமன்றத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் ஆகியவை பொறுப்புடைமையின் முக்கியப் பண்புக் கூறுகளாகும். மூலதனத்தின்மீது கட்டுப்பாடு, நிதி திரட்டுதல், திரட்டிய நிதியைப் பயன்படுத்துதல் போன்றவைகளில் விதிமுறைகளை உருவாக்குதல், உயர்நிலை அதிகாரிகளின் நியமனங்களை ஒழுங்குபடுத்துதல், குறிப்பிட்ட கொள்கைகளை அல்லது திட்டங்களைப் பின்பற்றுமாறு தொழிலமைப்புகளுக்கு ஆணைகளைப் பிறப்பித்தல் போன்றவைகளும் கூடப் பொறுப்புடைமையின் கருத்துக் கூறுகளாகும். மற்றொரு வகையான பண்புக்கூறு நாடாளுமன்றம், செய்தித்தாள்கள், பொதுமக்கள் ஆகியோருக்கு, பொதுத்துறைத் தொழில்களின் செயல்முறைகளைப் பற்றிக் கலந்துரையாடவும், திறனாய்வு

செய்யவும் வாய்ப்பளிப்பதாகும். சுருங்கக்கூறினல், பொதுத் துறை நிறுவனங்கள், பொறுப்புடன் செயல்புரிய ஏற்படுத்தப் பட்ட நிருவாக முறையே பொறுப்புடைமையாகும்.

பொறுப்புடைமையின் விதிமுறைகள்

சாதாரண சந்தர்ப்பங்களில் பொறுப்புடைமை பின்வரும் விதிமுறைகளை உட்கொண்டிருக்கிறது.

(1) உயர்நிலை அதிகாரிகள், இயக்குநர்கள் ஆகியோரின் பணி நியமனம்.

(2) நிதித் திட்டம், நிதி மதிப்பீடு ஆகியவைகளுக்கு ஒப்புதல் பெறுதல்.

(3) மூலதனச் செலவுகளுக்கு அரசின் முன் அனுமதி பெறுதல்.

(4) செயல்முறைகளைப் பற்றி விசாரணை நடத்துதல்.

(5) தொழிலமைப்பின் நடவடிக்கைகளிலும், கணக்குப் பதிவு, நிதி அறிக்கைகள் தயாரித்தல், இலாபத்தைப் பகிர்தல், சேமிப்பு நிதிகளை ஏற்படுத்துதல் போன்ற வைகளிலும் விதிமுறைகளையும், ஒழுங்குபடுத்தும் வழிமுறைகளையும் உருவாக்குதல்.

(6) அரசின் கொள்கைகளுடன் தொடர்புற்ற நடவடிக்கை களில், தொழிலமைப்புகளின் செயல்முறைகளுக்கு ஆணைகளைப் பிறப்பித்தல்.

(7) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செயல்முறை கள் பற்றி, பொது வாதங்கள் மூலமாகவும், குறிப்பான கேள்விகள் மூலமாகவும் நாடாளுமன்றத்தில் கலந் தாராய்தல்; முடிவில் திறனாய்வுக் கருத்துக்களைத் தெரி வித்தல்.

பொதுப் பொறுப்புடைமையின் நோக்கங்கள் (The Objectives of Public Accountability)

பொதுப் பொறுப்புடைமைக் கொள்கை, பல்வேறு வகையான நோக்கங்களை உட்கொண்டிருந்தாலும், மிக முக்கிய மானவைகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்திக் கூறலாம்.

(1) அரசின் கொள்கைகளைச் செயற்படுத்துவதில் நிரந் தரத்தன்மையை (Consistency) ஏற்படுத்துதல்.

(2) தொடர்புடைய திட்டங்களுக்கேற்றவாறு அவைகளின் நடவடிக்கைகளை ஒருநிலைப்படுத்துதல் (Co-ordinate).

(3) சட்டத்திற்குட்பட்டு, திறமையுடன் தொழிலமைப்புகள் செயலாற்றுகின்றன என உறுதிப்படுத்துதல் (Ensure).

(4) நாடாளுமன்றத்திற்கும் பொதுமக்களுக்கும் கிடைக்கக் கூடிய புள்ளி விவரங்களை அளித்தது, அவைகளின் செயல் விளைவுகளை மதிப்பிட (Evaluate) வாய்ப்பளித்தல்.

(5) எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேறும் வகையில் விதிமுறைகளை வகுத்துச் செயற்படுத்துதல்.

(6) நிருவாகக் கட்டுப்பாடுகள் மூலமாகவும், தணிக்கை முறைகளின் மூலமாகவும் பொதுப்பணம், மேலாண்மை புரிபவர்களால் தவறான வழிகளில் செலவிடப்படுவதைத் தவிர்த்தல்.

(7) நியாயமான விலைகளில் பொருள்கள் கிடைக்குமாறு செய்து நுகர்வோரின் நலனைக் காத்தல்.

பொறுப்புடைமை பற்றி வல்லுநர்கள் மற்றும் குழுக்களின் கருத்துக்கள்

1. கோர்வாலா குழு (The Gorwala Committee)

குறிப்பிட்ட அமைச்சகத்தின் மூலமாக, தன்னாட்சி அரசுரிமை பெற்ற தொழிலமைப்புகளைத் தொடர்ந்து கண்காணிப்பது அவசியமென கோர்வாலா குழு தெளிவாகக் கூறியது. பொதுத்துறை நிறுவனங்கள் ஆண்டு அறிக்கைகளையும், கணக்குகளையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும்; அவைகளின் மீது குழு அளவில் விவாதிக்க நாடாளுமன்றம் அனுமதிக்கப்படவேண்டும் எனவும் இக்குழு திட்டவட்டமாகத் தன் கருத்தைத் தெரிவித்தது. மேலும், திரு. கோர்வாலாவால் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தலைவர்களையும், இயக்குநர்களையும் நியமிக்கும் உரிமை, அக் குறிப்பிட்ட துறை அமைச்சர்களிடம் விடப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

2. கிருஷ்ணமேனன் குழு (The Krishna Menon Committee)

நாட்டுடைமையாக்கப்பட்ட தொழில்களின் அமைப்பு முறை, நாட்டுப் பற்றையும், தேசிய உரிமையையும் வளர்க்கும் வகையில் அமையவேண்டுமென கிருஷ்ணமேனன் குழு

கருதியது. அத் துறையுடன் தொடர்புடைய அமைச்சர், அரசின் கொள்கைகளைக் காக்கும் வகையில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் இயக்குநரவைக்கு அவ்வப்பொழுது சிறப்புச் செயல்முறைகளை அறிவுறுத்தும் அதிகாரம் பெறுதல்வேண்டும் எனவும் இக் குழு தன்னுடைய அறிக்கையில் தெரிவித்தது. இக் குழுவின் முக்கியமான பரிந்துரைகளில் ஒன்று, அரசு நிறுவனங்களின் செயல்முறைகளை ஆராய நாடாளுமன்றக் குழுவொன்று அமைக்கப்படவேண்டுமென்ற கருத்தாகும்.

3. ECAFE கருத்தரங்கு (The ECAFE Seminar)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் முன்னேற்றத் திட்டங்கள், மூலதனச் செலவுகள், அடிப்படைக் கோட்பாடுகள் ஆகியவைகளில் அரசின் கட்டுப்பாடு மிகவும் அவசியமானதே என இக் கருத்தரங்கு முடிவுசெய்தது.

4. நிருவாக மறு சீரமைப்புக் குழு (The Administrative Reforms Commission)

பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்புடைமைக் கொள்கையைப் பற்றி பரந்த செயல் விளைவுகளையுடைய கருத்துக்களை நிருவாக மறு சீரமைப்புக் குழு பரிந்துரைத்தது. பொதுத்துறைக்கு அதிகபட்ச அளவில் தன்னாட்சியுரிமை அளிக்கப்படவேண்டுமென வலியுறுத்திய இக் குழு, தொழிலமைப்புகளின் செயல்முறைகளைச் சிறப்பாகக் கட்டுப்படுத்த ஒரு சில அதிகாரங்களை அரசு ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்றும் கருதியது. பின்வரும் அதிகாரங்கள் அரசிடம் இருக்க வேண்டுமென இக் குழு வலியுறுத்தியது.

(i) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம்.

(ii) தலைவர்களுடன் கலந்தாலோசித்து மற்ற இயக்குநர்களை நியமிக்கும் அதிகாரம்.

(iii) பொதுநலனைப் பாதுகாக்கத் தேவைப்படும் பணிகளை மேற்கொள்ள, தொழிலமைப்புகளுக்கு ஆணைகள் பிறப்பித்து, அவைகள் பின்பற்றப்படுகின்றனவா எனக் கண்காணிக்கும் அதிகாரம்.

(iv) அவ்வப்பொழுது பொதுத்துறை நிறுவனங்களின் சொத்துக்கள் மற்றும் நடவடிக்கைகளைப் பற்றிய கணக்குகள், அறிக்கைகள், மற்ற விவரங்கள் ஆகியவைகளைக் கேட்டுப்பெறும் அதிகாரம்.

(v) பொதுத்துறை நிறுவனங்கள் திரட்டும் மூலதனத்திற்கு அதிகாரம் அளித்தல்; அம் மூலதனத்தைத் திரட்டும் பொழுது பின்பற்றப்படவேண்டிய விதிமுறைகளை அறிவிக்கும் அதிகாரம்.

(vi) முன்னேற்றத்திற்கான ஆண்டு அறிக்கைகளுக்கும், மூலதனத் திட்டங்களுக்கும் இசைவளிக்கும் அதிகாரம் (Power to Approve).

(vii) அரசினால் நிரப்பப்படவேண்டிய பற்றுக்குறையுடைய நிதி நடைமுறை வரவு-செலவுத் திட்டத்திற்கு இசை வளிக்கும் அதிகாரம்.

(viii) அயல் நாடுகளுடன் ஒருங்கிணைந்து செயல்புரிய ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்களுக்கு இசைவளிக்கும் அதிகாரம்.

பொதுத்துறைத் தொழில்களின் கட்டுப்பாட்டு முறைகளில், நாடாளுமன்றத்தின் மூலமாக ஏற்படுத்தப்படும் கட்டுப்பாடே மிகவும் முக்கியமென இக் குழு கருதியது. எனவே, பொதுத் துறையின் செயல்முறைகளையும், விளைவுகளையும் கலந்தாராய, நாடாளுமன்றத்தின் விவாதங்களுக்கென சில குறிப்பிட்ட நாட்கள் சிறப்பாக ஒதுக்கப்படவேண்டுமென இக் குழு வலியுறுத்தியது. மேலும், தொழிலமைப்பின் உற்பத்தி, பொருள்களின் அளவு, தரம், தொழிலாளர்களின் எண்ணிக்கை, மூலப் பொருள்கள், உற்பத்தித் திறன் முதலியவைகளைப் பற்றியும், எதிர்காலத் திட்டங்கள், அடக்க விலையைக் குறைக்கும் நடவடிக்கைகள் போன்றவைகளைப் பற்றியும் விரிவான விவரங்கள் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் ஆண்டறிக்கைகளில் இடம் பெறவேண்டுமெனவும் இக் குழு பரிந்துரைத்தது.

பொறுப்புடைமை - கட்டுப்பாட்டு முறைகள் (Accountability Methods of Control)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பொறுப்புடைமைக் கொள்கையை ஆராயும்போது, பின்வரும் முறைகளில் பொதுத் துறையின் பதில் கூறும் பொறுப்பை ஏற்படுத்த முடியுமெனத் தெளிவாகிறது. அவைகளைக் கட்டுப்பாட்டு முறைகள் (Methods of Control) எனவும் கூறலாம்.

(i) அமைச்சரவைக் கட்டுப்பாடு (Ministerial Control)

(ii) நாடாளுமன்றக் கட்டுப்பாடு (Parliamentary Control)

(iii) நிதிக் கட்டுப்பாடு (Financial Control)

இம் மூன்று வகைக் கட்டுப்பாடுகளின் மூலம் பொறுப்புடைமையைப் பொதுத்துறை நிறுவனங்களிடையே ஏற்படுத்த முடியும். இவைகள் ஒவ்வொன்றும் பல சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குகின்றன. இச்சிறப்பியல்புகள் பற்றியும், இம்முறைகள் செயற்படும் விதங்கள் குறித்தும் சுருக்கமாகக் கீழ் வருமாறு காண்போம் :

I. அமைச்சரவைக் கட்டுப்பாடு (Ministerial Control)

பொதுப் பொறுப்புடைமையின் பண்புக் கூறுகளில் முக்கியமானதாகக் கருதப்படுவது பொதுத்துறை நிறுவனங்களின்மீது அமைச்சரவைக்கட்டுப்பாடு. தன்னாட்சியுரிமை என்ற போர்வையில், அமைச்சரவையின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் செயற்பட்டால், பொதுத்துறை, நாட்டுத் திட்டம் மற்றும் கோட்பாடுகளைப் புறக்கணிக்க வாய்ப்பு ஏற்பட்டுவிடும். விரைவான பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டின் அடிப்படைத் தொழில்களில் ஈடுபட்டு, அதிக அளவு மூலதனத்துடன் தனியார்துறைக்கு வழிகாட்டும் துறையாகச் செயற்படவேண்டிய பொதுத்துறைத் தொழிலமைப்புகள் குறிப்பிட்ட அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயற்படுவது இன்றியமையாதவொன்றாகும். குறிப்பிட்ட துறையின்கீழ் செயற்படும் பொதுத்துறை நிறுவனங்களின் பணிகள், இலாப-நட்டம், உற்பத்தித் திறன் போன்றவைகளைப் பற்றி நாடாளுமன்றத்தில் பதில்கூறும் பொறுப்பு அத்துறையுடன் தொடர்புடைய அமைச்சர்களுக்குண்டு.

தன்னாட்சியுரிமை என்பது, இந்தியா போன்ற நாடுகளில் பொதுத்துறையின் அன்றாட நடவடிக்கைகளில் அரசு குறுக்கிடாக் கொள்கையைக் குறிக்குமேயன்றி, சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் கோட்பாட்டை வரித்துக்கொண்டுவிட்ட நமது நாட்டில் முழுச் சுதந்திரம் (Total Freedom) என்பது ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்தாகாது என ஏ.ஆர். தியாகி (A.R.Tyagi) தன்னுடைய 'பொது நிருவாகம்' (Public Administration) என்ற நூலில் கூறுகிறார். அமைச்சரவையின் கட்டுப்பாட்டிலிருந்து பொதுத்துறை நிறுவனங்களுக்கு முற்றிலும் சுதந்திரம் அளிக்கப்பட்டால், அது பொருளாதார குழப்பத்தையும், சமுதாய ஒழுங்கின்மையையும் (Social Anarchy) தோற்றுவித்து, பொதுத்துறையின் சிறந்த நோக்கங்களைத் தோல்வியுறச் செய்துவிடும் எனவும் அவர் குறிப்பிடுகிறார்.

எனவே, பொதுத்துறையின் அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறுகள் ஏற்படாத வகையில், அவைகளின் செயல் முறைகள்மீது அமைச்சரவையின் கவனமான கண்காணிப்புத் தேவை. கட்டுப்பாட்டை ஏற்படுத்துவது எப்படி என்ற வினு ஈங்கு இயற்கையாக எழுகின்றது. அரசின் முக்கியக் கருவி போல் செயற்படும் அமைச்சரவை, கீழ்க்காணும் முறைகளில் அதிகாரத்தைப் பயன்படுத்திக் கட்டுப்பாட்டை ஏற்படுத்து கிறது.

(அ) நிருவாகக் கட்டுப்பாடு (Administrative Control)

(i) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் இயக்குநர் களையும், தலைவரையும், மேலாண்மை இயக்குநர்களையும் நியமிக்கும் அதிகாரம் அமைச்சரவைக்கு உண்டு. எடுத்துக்காட்டாக, நமது நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களுள் முக்கியமானதாகக் கருதப்படும் 'தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுரு'வின் (Damodar Valley Corporation) தலைவர் மற்றும் இயக்குநர்கள், மேற்கு வங்காளம், பீகார்போன்ற மாநில அரசுகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, மத்திய அரசால் நியமிக்கப் பட்டுள்ளனர். அது போன்றே, வான்வழிக் கூட்டுருவின் (Air Corporation) உறுப்பினர்கள் (இயக்குநரவை) மத்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் பல பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் முக்கிய உயர் நிலைப் பதவிகளில் மத்திய அரசின் முன் அனுமதியுடன் தான் அதிகாரிகள் நியமிக்கப்படுகின்றனர்.

(ii) பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநரவைக் கூட்டங்களில் (Board Meetings) பங்கு கொண்டு கலந் துரையாட, ஒன்று அல்லது இரண்டு உறுப்பினர்கள் அரசால் நியமிக்கப்படலாம். ஆனால் இவ்வுறுப்பினர் கள் வாக்களிக்கும் உரிமையைப் பயன்படுத்தமுடியாது.

(iii) திறமையாகச் செயல்புரியத் தவறும் இயக்குநர்களையோ அல்லது அரசு ஏற்படுத்திய ஒப்பந்தங்களில் நிதிநிலை ஈடுபாடு கொண்டிருக்கும் உறுப்பினர்களையோ அல்லது பொதுத்துறையுடன் போட்டி நிலையில் பணிபுரியும் மற்றவகைத் தனியார்துறைத் தொழிலமைப்புகளுடன் தொடர்புகொண்டிருக்கும் மேலாளர்களையோ மேலாண் மைப் பதவிகளிலிருந்து நீக்க அரசுக்கு அதிகாரம் உண்டு.

(iv) நடைமுறையில் உள்ள இயக்குநரவை சரிவரப் பணி புரியத் தவறினுலோ அல்லது அரசின் ஆணைகளைப் புறக் கணித்து பொதுத்துறையின் நோக்கங்களுக்கு மாருக தொழிலமைப்பை நடத்தினுலோ, அந்த இயக்குந ரவையை அகற்றி மற்ருேர் இயக்குநரவையை உருவாக் கும் அதிகாரம் அரசுக்குண்டு. எடுத்துக்காட்டாக, தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுருச் சட்டத்தில் (D. V. C. Act) இதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

(v) விதிமுறைகளை வகுத்தல், மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை அறிவித்தல், வரவு – செலவுத் திட்டத் திற்கு இசைவு அளித்தல், ஆண்டு அறிக்கைகள் மற்றும் கணக்குகளைப் பெறுதல், இலாபத்தைப் பகிர்தல், சேமிப்பு நிதி ஏற்படுத்துதல் போன்ற எண்ணற்ற அதிகாரங்களை அரசு தன்னிடம் இறுத்திக்கொண் டுள்ளது. மேலும், தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளை விசாரணை செய்யும் குழுவையும், ஆலோசனைக் குழுவை யும் அமைக்கும் அதிகாரமும் அரசுக்குண்டு.

(vi) மிக முக்கியமான அதிகாரம் அரசின் ஆணை பிறப்பிக்கும் உரிமை. மத்திய அரசு அவ்வப்பொழுது தன் கொள்கை களுக்கேற்ப பொதுத்துறை பின்பற்றவேண்டிய நடவடிக் கைகளைப் பற்றிய ஆணைகள் மத்திய அரசால் வழங்கப் படும். அவ்வாறு வழங்கப்படும் ஆணைகளை உடனுக் குடன் கவனித்து தக்க நடவடிக்கைகளை இயக்குநர்கள் மேற்கொள்ளவேண்டும். சிந்திரி உரம் மற்றும் இரசாயன நிறுமத்தின் விதிமுறைப் பத்திரத்தில் இவ் வதிகாரங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ளதை ஈங்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

(ஆ) நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள்

மேற்கண்ட நிருவாகக் கட்டுப்பாட்டு அதிகாரங்களுடன், பலநிதிக்கட்டுப்பாட்டு அதிகாரங்களையும் பயன்படுத்தும் உரிமை அமைச்சரவைக்குண்டு. அவைகளில் முக்கியமானவைகளைக் காணலாம் :

(i) உறுப்பினர் அல்லாத ஒருவரை, இயக்குநரவையின் நிதி ஆலோசகராக நியமிக்கும் அதிகாரம் அரசைச் சார்ந் துள்ளது. வருவாய்-செலவுகள் போன்ற நிதி நடவடிக்

கைகளில் தன்னுடைய அறிவுரைகளை நிதி ஆலோசகர் அறிவிப்பார். இயக்குநரவை முடிவெடுக்குமுன், நிதி செலவுத் திட்டங்களை ஆராய்ந்து அறிவுரைகளை வழங்கும் அதிகாரம் அவருக்குண்டு. சில குறிப்பிட்ட நிதி நடவடிக்கைகளை அரசின் அனுமதியுடன்தான் மேற்கொள்ளவேண்டுமென இயக்குநரவைக்குக் கூறும் அதிகாரத்தையும் நிதி ஆலோசகர் பெற்றுள்ளார்.

(ii) பொதுத்துறை நிறுமங்களுக்குத் தேவைப்படும் நிதிகளை அரசு அளிக்கிறது; மேலும், அவை வழங்கும் பங்குகள் அல்லது கடன் பத்திரங்களுக்கும் அரசு பொறுப்புறுதி அளிக்கிறது.

(iii) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் சில குறிப்பிட்ட திட்டங்களை நிறைவேற்ற அரசின் முன் அனுமதி தேவை. எடுத்துக்காட்டாக, வான்வழிக் கூட்டுருக்களையும் (Air Corporations), இந்துஸ்தான் இரும்பு உற்பத்தி நிறுவனத்தையும் கூறலாம். வான்வழிக் கூட்டுருக்கள் ரூ. 15 இலட்சத்திற்கு மேல் உள்ள நிலையான சொத்துக்களை வாங்க முற்படும்பொழுதும், மற்ற அதிக அளவிலான மூலதனச் செலவுகளை மேற்கொள்ளும் முன்பும் அரசின் அனுமதியைப் பெற வேண்டும். மேலும், ஒவ்வொரு நிதியாண்டு தொடங்குவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பாக, வான்வழிக் கூட்டுருக்கள் மேற்கொள்ளப்போகும் வான்வழிப் போக்குவரத்து நடவடிக்கைகள், அவைகளின் முன்னேற்றத் திட்டங்கள், மற்ற முக்கிய நடவடிக்கைகள், அவைகளை மேற்கொள்ளத் தேவைப்படும் நிதிமதிப்பீடு, அலுவலர்களின் எண்ணிக்கையில் உயர்வு போன்ற விவரங்கள் அடங்கிய அறிக்கையை மத்திய அரசிடம் சமர்ப்பித்து அனுமதி பெறவேண்டும்.

இந்துஸ்தான் இரும்பு உற்பத்தி நிறுவனத்தின் பின்வரும் நடவடிக்கைகளுக்கு அரசின் அனுமதி தேவை.

(1) மூலதனத்தை அதிகரித்தல்.

(2) புதிய பங்குகளை விற்பனை செய்தல்.

(3) மூலதனத்தைக் குறைத்தல்.

(4) கடன் பெறுதல்.

(5) கடன் பத்திரங்கள் வழங்கல்.

(6) ரூ. 40 இலட்சத்திற்குமேல் தேவைப்படும் மூலதனச் செலவை மேற்கொள்ளல்.

(7) நிறுவனத்தைக் கலைத்தல் (Winding Up).

(8) ரூ. 2,000 அல்லது அதற்கும் அதிகமாக மாத ஊதியம் பெறும் அதிகாரிகளை நியமித்தல்.

(9) நிறுமத்தின் தணிக்கையாளர்களை நியமித்தல்.

இவ்வாறு, மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து அமைச்சரவையின் நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரங்கள் எவ்வாறு செயற்படுத்தப்படுகின்றன என்பது தெளிவாக விளங்குகிறது.

(iv) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் கணக்குப் பதிவு முறைகள் அரசின் ஆலோசனையுடனோ அல்லது தணிக்கைத் துறைத் தலைவரின் அறிவுரையுடனோ பின்பற்றப்படவேண்டும். வான்வழிக் கூட்டுருவின் கணக்குப் பதிவு முறைகள், அரசின் வழி முறைகளுக் கேற்பவும், இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் அனுமதியுடனும் அமைந்திருப்பதை மேற்கண்ட கருத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

மேலும், பல பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள் அரசினால் நியமிக்கப்பட்ட தணிக்கையாளர்களால் தணிக்கை செய்யப்படுறகிது.

அமைச்சரவையின் பொறுப்புகள் (M nisterial Responsibilities)

அமைச்சரவையின் பொறுப்புகள் மூன்று விதமாகப் பிரிக்கப்படுகின்றன. முதலாவதாக, நாடாளுமன்றத்திற்கு அமைச்சர் பொறுப்புடையவராகிறார். தேசிய ஒருமைப்பாடு, நாட்டு நலன் போன்றவைகளைக் கருத்திற்கொண்டு, நாடாளு மன்றத்தின் உறுப்பினர்களால் கோரப்படும் அனைத்துப் புள்ளி விவரங்களையும் வழங்கவேண்டும். கேட்கப்படும் கேள்வி களுக்குத் தட்டிக்கழிக்கும் வகையில் (Evasion) பதில்களை அளிக்கக்கூடாது.

இரண்டாவதாக, தன் கட்டுப்பாட்டின்கீழ் பணிபுரிபவர் களின் செயல்களுக்குச் சட்டப்பூர்வமாக அமைச்சர் பொறுப் பேற்கவேண்டும். சட்டப்பூர்வமற்ற செயல்முறைப் பொறுப்புக் கள் நான்கு வகைப்படும். அவைகளாவன:

(1) எழுத்து மூலமாக விவரமான ஆணைகளைப் பிறப்பிக்கும் போது, தன் கீழ்ப்பணியாளர்களின் (Subordinates) செயல்களுக்கு முழுப் பொறுப்பையும் அமைச்சர் ஏற்கவேண்டும்.

(2) அரசின் கோட்பாட்டிற்குள் அடங்கும் செயல்முறைகளைக் கீழ்ப்பணியாளர்கள் மேற்கொள்ளும்போது அமைச்சர் பொறுப்பாளியாகிறார்.

(3) பெரும் பாதிப்பை ஏற்படுத்தாத வகையில், சிறிய தவறுகளை அல்லது தவறான முடிவுகளைக் கீழ்ப்பணியாளர்கள் மேற்கொள்ளும்போது, அமைச்சர் அவர்களின் தவறுகளுக்குப் பொறுப்பேற்கிறார்.

(4) கீழ்ப்பணியாளர்கள் வழிமுறைகளைக் கடந்து, கோட்பாட்டிற்குப் புறம்பாக ஒழுங்கற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போதுகூட, அவர்களின் செயல் விளைவுகளுக்கு அமைச்சர் பொறுப்பேற்கவேண்டும்; ஆனால், அக் குறிப்பிட்ட கீழ்ப்பணியாளர்களைத் தண்டிக்கும் அதிகாரம் அமைச்சருக்குண்டு.

அமைச்சர்களின் பொறுப்புகளைப் பற்றிக் கூறும் சாக்ளா குழு, இரண்டு முக்கியப் பண்புக் கூறுகளை அமைச்சரவையின் பொறுப்புடைமைக்குரியதாகக் கருதுகிறது. குறிப்பிட்ட அதிகார எல்லைக்குள் அமைச்சருக்கு தன்னாட்சியுரிமைகள் உண்டு. ஆனால், தன் கீழ்ப்பணியாளர்களின் செயல்களுக்கு முழுப் பொறுப்பையும் அவர் ஏற்கவேண்டும். நடைமுறையில் இக் கருத்து, அமைச்சர்களின்மீது இழப்பாபத்துக்களை (Risks) ஏற்படுத்துமென்றாலும், திறமையான நிருவாகத்திற்கு இப் பொறுப்பு அவசியமாகிறது. அமைச்சரொருவர் ஒரு கொள்கை பற்றி முடிவுசெய்து நடைமுறைப்படுத்தும்போது, அவரின் கீழ்ப் பணியாளர்கள் அனைவரும் அக்கொள்கைக்கேற்ப செயற்பட வேண்டும்; விசுவாசத்துடன் (Loyalty) பணிபுரியவும் வேண்டும். எந்தக் கீழ்ப்பணியாளராவது தவறு செய்தால், அவர் அமைச்சரால் தண்டிக்கப்படலாம் அல்லது பணியிலிருந்து நீக்கப்படலாம். ஆனால், அவரின் செயல்விளைவுக்கு அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும். அதுபோலவே அமைச்சரவையும் பொறுப்பேற்க வேண்டும். ஏனெனில், அமைச்சரொருவர் ஒரு கோட்பாட்டைச் செயல்படுத்துவதற்கு முன் அமைச்சரவையின் அனுமதி பெறுகிறார். இதனால் அனைத்து அமைச்சர்களும் அக்குறிப்பிட்ட கொள்கைக்குப் பொறுப்பாளியாகின்றனர். ஆகவேதான், ஒருகீழ்ப்பணியாளர் புரியும் தவறான செயலுக்கு, அக் குறிப்பிட்ட துறையின்

அமைச்சர் மட்டுமின்றி, அமைச்சரவையே ஒட்டு மொத்தமாகப் பொறுப்பேற்கவேண்டும். இவ்வாறு அமைச்சரவையின் பொறுப் புடைமை பற்றிய பல கருத்துக்களை சாக்ளா குழு வலியுறுத்தியது.

மூன்றாவதாக, அமைச்சர் தனிப்பட்ட முறையில் பொறுப் பாளியாகிறார். கீழ்ப்பணியாளர் ஒருவரின் செயல்முறையை ஏற்றுக்கொள்ள மறுக்கும்போதோ அல்லது தன்னுடைய ஆணை கள் நிறைவேற்றப்படாமலிருப்பதைக் கண்டும் காணாததுபோல் இருந்தாலோ அல்லது தவறான செயல்முறை எனத் தெரிந்தும் போதிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இருந்தாலோ, அமைச்சர் ஒருவர் தனிப்பட்ட முறையில் பொறுப்பாளியாகிறார். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் தன்னுடைய பதவியை விட்டு அமைச்சர் விலகிவிடவேண்டும். காலம்சென்ற பாரதப் பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி அவர்கள், மத்திய அரசின் ரெயில் துறை அமைச்சராகப் பணிபுரியும்போது, 'அரியலூர் ரெயில் விபத்து' என்ற கோர விபத்து ஏற்பட்டது. அதன் காரணமாக அத் துறையின் அமைச்சர்என்ற முறையில், தனிப்பட்ட முறையில்தான் பொறுப்பாளி என அறிவித்து உடனடியாகப் பதவியை விட்டு விலகினார். இந் நிகழ்ச்சியை மேற்கண்ட கருத்திற்குச் சிறந்த எடுத்துகாட்டாகக் கூறலாம்.

முடிவுரையாக, அமைச்சரவைக் கட்டுப்பாட்டு முறையைப் பற்றி பின்வரும் கருத்துகளைக் கூறலாம். அரசு நிறுவனங்களில் ஒழுங்குமுறையை நிலைநாட்ட அமைச்சரவைக் கட்டுப்பாடு தேவை யெனினும், அரசியல் அல்லது தன்னல நோக்கங்களுக்காகப் பொதுத்துறை நிறுவனங்களின்மீது வரைமுறையில்லாக் கட்டுப் பாடு ஏற்பட்டுவிடாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். தொழிலமைப்புகளின் அன்றாட நடவடிக்கைகளில், இடைவிடாமல் குறுக்கிடுதல் அமைச்சரவைக் கட்டுப்பாடாகாது. அரசின் கோட் பாட்டிற்கும் நாட்டின் நலனுக்கும் நன்மை பயக்கக் கூடியவை எனக் கருதப்படும் நடவடிக்கைகளை மட்டும்தான் கட்டுப்படுத்த வேண்டும். மேலும், பாரபட்சம் காட்டும் நோக்குடன் அமைச்சர் களின் அதிகாரங்கள் பயன்படுத்தப்படக்கூடாது. அதுபோன்றே நாடாளுமன்றத்தை அமைச்சர் புறக்கணிக்கக்கூடாது; அல்லது பொறுப்பற்ற முறையில் விவரங்களைக் கூறி, தட்டிக்கழிக்கவும் கூடாது.

எனவே, நாடாளுமன்றத்தினால் இசைவளிக்கப்பட்ட அல்லது அரசினால் உருவாக்கப்பட்ட விதிகளுக்கும், கட்டுப்பாடுகளுக்கும்

உட்பட்டுதான் அமைச்சரவையின் அதிகாரங்கள் பயன் படுத்தப்படவேண்டும். நடைமுறை விதிகளிலிருந்து விலகிச் சென்று செயல்படும்போது, அதுபற்றி நாடாளுமன்றத்திற்குத் தெரிவிக்கவேண்டும். ஏதாவது சிறப்பான அல்லது தனிப்பட்ட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டால், அவை எழுத்து மூலம் அமைய வேண்டும்; அவ்வாணை பிறப்பிக்கப்படவேண்டிய நியாயமான காரணங்கள் அல்லது சந்தர்ப்பங்கள் யாவை எனவும் அமைச்சர் விரிவாகக் கூறவேண்டும். தன் கீழ் பணிபுரியும் செயலாளர் அல்லது மற்ற அதிகாரிகளின் ஆணைகளுக்கும் அமைச்சரே பொறுப்பேற்க வேண்டும். இயக்குநரவையின் தன்னுட்சி யுரிமைக்கு உரிய மதிப்பை அளிக்கும் வகையில் அமைச்சர் செயல்படவேண்டும். அவசியமேற்பட்டாலொழிய, தொழி லமைப்பின் அன்றாட நடவடிக்கைகளில் கட்டுப்பாட்டை ஏற் படுத்தக்கூடாது. இவ்வாறு மேலாண்மையின் தன்னுட்சியுரிமைக் கும் அரசின் கட்டுப்பாட்டிற்குமிடையே நடுநிலைக் கொள்கை கடைப்பிடிக்கப்படவேண்டும்.

II. நாடாளுமன்றக் கட்டுப்பாடு

ஜனநாயக அமைப்பு முறையில் அதிகாரங்களின் உற்பத்திக் கேந்திரமாக நாடாளுமன்றம் கருதப்படுகிறது. பொதுமக்கள், வரி செலுத்துபவர், நுகர்வோர், தொழிலாளர்கள் போன்றவர்களின் நலனைக் காக்கவும்தான் நாடாளுமன்றம் இயங்கி வருகிறது. தனியார்துறைத் தொழிலமைப்புகளில் பங்குதாரர் உள்ளதுபோல், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பங்கு தாரர்களாக பொதுமக்கள் விளங்குகின்றனர். வரி செலுத்து பவர்களிடமிருந்து திரட்டிய பொதுப் பணமே பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மூலதனமாகும். பொதுமக்களின் பிரதி நிதிகளைக் கொண்டு இயங்கும் நாடாளுமன்றம், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செயல்முறைகளை ஆராய்ந்து, மக்களின் பணம் பயனுள்ள வகையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதா, அவர் களின் நலன் பேணிக் காக்கப்படுகிறதா என அறிந்துகொள்ளும் வாய்ப்பைப் பெறவேண்டும். நாடாளுமன்றத்தின் மூலமாகத் தான் பொதுத்துறை பற்றிய திறனாய்வு பொதுமக்களால் மேற் கொள்ளப்படுகிறது. அரசின் கோட்பாடுகள் மற்றும் செயல் முறைகளைப் பொறுத்தவரை, அவைகளைத் தீர்மானிக்கும் இடமாகவும், கட்டுப்படுத்தும் நிலையமாகவும் நாடாளுமன்றம் விளங்குகிறது. தங்களால் வழங்கப்படும் சிறப்பாணைகளுக்கும், பயன்படுத்தப்படும் அதிகாரங்களுக்கும் மத்திய அரசின் அமைச்சர்கள் நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புடையவரா கின்றனர்.

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பின்பற்றவேண்டிய கொள்கைகளை நாடாளுமன்றம்தான் உருவாக்குகிறது; அமைச்சரவையும், பொதுத்துறை நிறுவனங்களும் நாடாளுமன்றத்தின் சட்ட உரிமைக் கட்டளையைப் (Mandate) பின்பற்றவேண்டும்.

நாடாளுமன்றக் கட்டுப்பாட்டின் நோக்கங்கள்

நாடாளுமன்றப் பொறுப்புடைமை பின்வரும் நோக்கங்களை உள்ளடக்கிக் கொண்டுள்ளது.

(1) பொதுத்துறையின் செயல் விளைவுகள் தேசியக் கொள்கைக்கேற்றவாறும், சமுதாய முன்னேற்றத்தை ஏற்படுத்தும் வகையிலும், பொதுமக்கள் நலனைக் காக்கும் முறையிலும் அமைந்துள்ளனவா என ஆராய்ந்து மதிப்பிடுதல் (Evaluate).

(2) தேவைப்படும் நேரங்களில் பொதுத்துறையின் செயல் முறைகளைப் பற்றிய விவரங்களையும், விளக்கங்களையும் அமைச்சரிடமிருந்து பெறுதல்.

(3) பொதுத்துறைத் தொழிலமைப்புகள் மேற்கொண்டுள்ள அல்லது மேற்கொள்ளப்போகும் மூலதனச் செலவுகளையும், திட்டங்களையும் கட்டுப்படுத்துதல்.

(4) பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கைகளின் மூலமாக, நிதி நடவடிக்கைகள் ஒழுங்காகவும், சரியான முறையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என அறிதல்.

(5) நிருவாகத் தவறுகள், நிதி நடவடிக்கைகளின் ஒழுங்கின்மை, பொதுநலன் அல்லது நாட்டுக் கொள்கை பாதிக்கப்படுதல் போன்ற நிகழ்ச்சிகளை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுத்தல்.

நாடாளுமன்றக் கட்டுப்பாட்டின் முறைகள் (Methods of Parliamentary Control)

அரசு நிறுவனங்களின்மீது பின்வரும் முறைகளில் நாடாளுமன்றம் கண்காணிப்பை மேற்கொள்கிறது.

1. வினாக்கள்

நாடாளுமன்ற நடவடிக்கைகளில் முக்கியமானதாகக் கருதப்படும் கேள்வி நேரத்தில் (Question Hour), பொதுத்துறையைப் பற்றிய விவரங்களை வெளியிடச் செய்யலாம். பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் கொள்கைகள், செயல்முறைகள் போன்ற

வைகளை, அத்துறையுடன் தொடர்புடைய அமைச்சரிடம், எந்தவொரு உறுப்பினரும் நாடாளுமன்றத்தின் கேள்வி நேரத்தில் கேள்விகள் மூலமாகக் கேட்டு அறியலாம். இப்படிக் கேட்கப் படும் கேள்விகள் அமைச்சர்களைத் தயார்நிலையில் இருக்கச் செய்கிறது; மேலும், பொதுத்துறைத் தொழிலமைப்புகளுடன் அவர்களுக்குள்ள ஈடுபாட்டை அதிகரிக்கச் செய்கிறது. உறுப் பினர்களின் கேள்விகள் பரந்த அளவில் அமைந்திருக்கலாம்; ஆனால், சபாநாயகர் முக்கியத்துவம் வாய்ந்த அத்துறையின் அமைச்சரின் பொறுப்புடன் தொடர்புடைய கேள்விகளை மட்டும்தான் அனுமதிப்பார். பல நேரங்களில், அமைச்சரின் பதில்கள் பொருள் பொதிந்ததாகவும், போதிய விவரங்களுடனும் அமைந்திருக்கும்; சிற்சில நேரங்களில் பதில்கள் தட்டிக்கழிக்கக் கூடியதாகவும் இருக்கும். அதுபோன்ற சந்தர்ப்பங்களில் அமைச்சரின் பதில்களுக்குப் போதிய விளக்கங்களைப்பெற, துணைக்கேள்விகள் கேட்கப்படுவதும் உண்டு. அமைச்சர்களின் விளக்கங்கள், போதிய விவரங்கள் உடையனவாகவும், குறிப் பாகவும் இருக்கவேண்டும். பொதுவான அல்லது தெளிவற்ற (Vague) பதில்கள் பொறுப்புடைமையின் பயனைக் குறைத்து விடும். நமது நாட்டில் பெரும்பாலான கேள்விகள், உள் பிரச்சினை கள் அல்லது தனிப்பட்ட அசௌகரியங்கள் ஆகியவைகளுடன் தொடர்புடையவையாக விளங்குகின்றன. நாடாளுமன்றத்தின் கேள்விகளின் தன்மையை விவரிக்கவும், அமைச்சர்களின் பதில் கூறும் பொறுப்புடைமையை வலியுறுத்திக் கூறவும் நமது நாட்டில் சட்ட வழிமுறை ஒன்றுமில்லை. பலவகைப்பட்ட கேள்வி களும் அனுமதிக்கப்படுகின்றன. புள்ளி விவரங்களைப் பெறுவதற் கான கேள்விகள், அன்றாட நிருவாகத் தொடர்புடைய கேள்விகள், பொதுத்துறையின் கொள்கையைப் பற்றிய கேள்விகள், அமைச்சர் மேற்கொள்ளாமல் விட்ட நடவடிக்கைகளைப் பற்றிய வினாக்கள் போன்றவை பொதுவாகக் கேட்கப்படுகின்றன.

கேட்கப்பட்ட வினாக்கள், பாதுகாப்பு நடவடிக்கைகள், அணு சக்தி உற்பத்தி போன்ற இரகசியங்களைப் பாதுகாக்கப்பட வேண்டியவைகளுடன் தொடர்புற்றிருந்தாலொழிய, மற்ற நேரங் களில் அமைச்சர் வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும். ஆனால், விடையளிக்கும் முறை பற்றி வரைவிலக்கணம் ஒன்றும் நமது நாட்டில் இல்லை. இது பற்றி சாக்ளா குழு (Chagla Commission) கூறியதை ஈங்கு நினைவுகூரலாம். "தேசியப் பாதுகாப்பு, பொது நலன், நாட்டு நலன் ஆகியவைகளைக் கருத்திற்கொண்டு உறுப்பினர்களால் கேட்கப்படும் வினாக்களுக்கு, அனைத்து விவரங் களையும் ஒளிவு மறைவின்றி கூறவேண்டியது அமைச்சரின்

கடமையாகும். தொழில்நுட்ப விவரங்கள் மட்டும் அமைச்சரின் பதில்களில் அடங்கியிருந்தால் போதாது; குறிப்பிட்ட பிரச்சினையைப் பற்றி, உண்மையான மதிப்பீடுகளைத் தீர்மானம் செய்ய உதவியாக அமைச்சரின் விளக்கவுரை அமையவேண்டும்.

2. விவாதங்கள் (Debates)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மீது நாடாளுமன்றக் கட்டுப்பாட்டை ஏற்படுத்த, விரிவானதும், சிறந்ததுமான முறையே விவாதங்களாகும். விவாதங்களில் அதிக எண்ணிக்கையில் உறுப்பினர்கள் பங்கு கொண்டு தங்களின் கருத்துக்களையும், பொதுத்துறை நிறுவனங்களின் குறைபாடுகளையும் வெளியிடலாம். தொழிலமைப்புகளின் நிருவாகத் திறனை மேம்படுத்தத் தேவையான பல பயனுள்ள கருத்துகள் விவாதங்களில் தோன்ற அதிக வாய்ப்புகள் உள்ளன. நாடாளுமன்றம் எழுப்பும் பிரச்சினைகளுக்குச் சரியான விளக்கங்களைக் கூறவும், தீர்வுகளைக் காணவும் அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் கட்டாயமாகின்றது. எனவே, விவாதங்கள் பெரும்பான்மையான நேரங்களில் பயன் விளைவிக்கக் கூடியவைகளாகவே முடிகின்றன.

விவாதங்களுக்குரிய சந்தர்ப்பங்கள்

பொதுத்துறை பற்றிய பிரச்சினைகளை எழுப்பி விவாதங்களைப் பயன்படுத்திக்கொள்ள பல்வேறு சந்தர்ப்பங்கள் உறுப்பினர்களுக்குண்டு. அவைகளாவன:

(i) ஜனாதிபதி உரையின் மீதான விவாதத்தின்போது, பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றிய ஐயப்பாடுகளை உறுப்பினர்கள் தெரியப்படுத்தலாம்.

(ii) நிதி வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது கலந்துரையாடல் நடைபெறும்பொழுதும், பல அமைச்சகத் துறைகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளின்மீது வாக்கெடுப்பு மேற்கொள்ளப்படும்போதும் வாதங்கள் எழுப்பப்படலாம்.

(iii) நாடாளுமன்றத்தில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் ஆண்டு இறுதிக் கணக்குகளும், அறிக்கைகளும் வைக்கப்படும்போதும் உறுப்பினர்கள் வாதிட வாய்ப்புண்டு.

(iv) பொது முக்கியத்துவம் வாய்ந்த பொதுத்துறையைச் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, உறுப்பினர்கள் சபாநாயகரிடம் சிறப்பு விவாதத்திற்கு அனுமதி

வழங்கும்படியும் கேட்டுக் கொள்ளலாம். தவருன கொள்கையைக் கடைப்பிடித்தாலோ அல்லது பொதுத் துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளால் தொழிலாளர் மற்றும் நுகர்வோர் நலன் பாதிக்கப்பட்டாலோ, உறுப் பினர்கள் விவாதங்கள் புரியவென அரைமணி நேரம் அல்லது ஒரு மணி நேரத்திற்கு அனுமதி பெற்று வாதங்களைக் கிளப்பலாம்; அதுபோன்ற சிறப்புச் சந்தர்ப்பங்களில், அத் துறையுடன் தொடர்புற்ற அமைச்சர் தக்க விளக்கங்களை அளிக்கவேண்டும்.

பொதுத்துறையின் செயல்முறைகளைப் பற்றிய நாடாளு மன்றத்தின் கருத்தினை அறிந்துகொள்ள விவாதங்கள் பேருதவி புரிகின்றன. தொழிலமைப்புகளின் செயல்முறைகளில் நிலவும் குறைபாடுகளைக் குறிப்பாக உணர்த்தவும் விவாதங்கள் வாய்ப் பளிக்கின்றன. ஆனல், பொதுத்துறை நிறுவனங்களின் கோட் பாடுகளைக் கூறுகளாகப் பிரித்து விரிவாக ஆராய விவாதங் களுக்கென ஒதுக்கப்படும் நேரம் போதுமானதாக அமைவதில்லை. அதிகரித்து வரும் பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதில் தாமதம் போன்ற காரணங் களால் குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் ஆண்டு அறிக்கைகளின் மீது விரிவான முறையில் விவாதங்கள் நடத்த முடிவதில்லை. ஒதுக்கப்பட்ட நேரத்திற்குள், ஒரு சில பிரச்சினைகளின் மீது மட்டும்தான் விவாதங்களை மேற்கொள்ள முடிகிறது. மேலும், பல சந்தர்ப்பங்களில், விவாதங்கள் அரசியல் எதிர்க்கட்சி களின் பயனற்ற (Futile) கருத்துகளைப் பரிமாறப் பயன்படுத்தப் படுகின்றனவேயன்றி, ஆக்கச் சார்பான (Constructive) கருத்து களைப் பரிமாற பயன்படுத்தப்படுவதில்லை. இவ்வாறு, நடை முறையில் ஒரு சில குறைபாடுகள் ஏற்பட்ட போதிலும்கூட, பொதுத்துறையின் நிருவாகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டவும், ஆலோசனைகளைக் கூறவும், ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளவும் விவாதங்கள் நாடாளுமன்றத்தின் பயனுள்ள முறையாகக் கருதப்படுகிறது. குறிப்பிட்ட துறையைச் சார்ந்த அமைச்சரும், தேவையான விவரங்கள், புள்ளி விவரங்கள் போன்றவைகளைச் சேகரித்து வாதங்களில் பங்குகொள்ளத் தயார்நிலையில் இருப்பார். இதனல் பொதுத்துறையின் மீது அமைச்சகத்தின் கண்காணிப்புத் தீவிரமடைய வாய்ப்புண்டு.

3. நாடாளுமன்றக் குழுக்கள் (Parliamentary Committees)

நாடாளுமன்றம், குழுக்களை அமைப்பதன் மூலமாகப் பொதுத்துறையின் நடவடிக்கைகளை விரிவாக ஆராய்ந்து

அவற்றின் மீது அதிக அளவில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த முடியும். நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களைக் கொண்டு இக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன.

இக் குழுக்கள் அமைக்கப்படுவதன் முக்கிய நோக்கங்களாவன:

(i) நிதி மதிப்பீடுகளை ஆராய்தல்.

(ii) அரசின் நடவடிக்கைகளை ஆராய்தல்.

(iii) நிறுவனங்களின் செயல்முறைகளைத் திறனாய்வு செய்தல்.

(iv) அடக்க விலையைக் குறைக்க தேவைப்படும் ஆலோசனைகளைக் கூறுதல்.

(v) பொருள்கள் பயனற்ற முறையில் செலவாகாமல் தடுத்தல்.

(vi) தொழிலமைப்புகளின் திறமையை மேம்படுத்த ஏற்ற கருத்துகளைத் தெரிவித்தல்.

நாடாளுமன்றக் குழுக்கள் அமைக்கப்படுவதன் மூலம், விரிவான முறையில் பொதுத்துறையின் செயல் விளைவுகள் ஆராயப்பட்டு கருத்துகள் வெளியிடப்படும். பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகள், முக்கியமாக மூன்று வகைக் குழுக்களால் பரிசீலிக்கப்படுகின்றன. அவைகள்:

(i) மதிப்பீட்டுக் குழு (Estimates Committee)

(ii) பொதுக் கணக்குகள் குழு (Public Accounts Committee)

(iii) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மீதான நாடாளுமன்றக் குழு (Parliamentary Committee on Public Enterprises)

இக் குழுக்கள் ஒவ்வொன்றையும் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்:

(i) மதிப்பீட்டுக் குழு (Estimates Committee)

அரசின் நிதி நடவடிக்கைகளின் மீது நிரந்தரமான கண்காணிப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன், 1950ஆம் ஆண்டில் மதிப்பீட்டுக் குழு அமைக்கப்பட்டது. இக் குழுவின் முக்கிய நோக்கம், திறமையுடன் கூடிய சிக்கனங்களை ஏற்படுத்தும் முறைகள் பற்றி ஆலோசனைகளைக் கூறுவதாகும். ஒரு குறிப்பிட்ட

ஆண்டில் மதிப்பீடு செய்யப்படவேண்டிய அமைச்சகத்தின் துறைகளை முதலில் இக் குழு தேர்ந்தெடுக்கிறது; பிறகு, அத் துறைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்துப் பாகுபடுத்துகிறது. இவைகளின் அடிப்படையில் தொழிலமைப்பை மேம்படுத்தும் திட்டங்கள், நடவடிக்கைகளில் மேற்கொள்ளவேண்டிய சிக்கனங் கள், நிருவாகத்தில் ஏற்படவேண்டிய மறுசீரமைப்புகள் போன்ற வைகளை இக் குழு அறிவிக்கிறது. மதிப்பீடுகளின்படி, குறிப் பிட்ட திட்டங்களுக்குப் பணம் செலவிடப்படுகிறதா எனவும் இக் குழு கண்காணிப்பை மேற்கொள்கிறது. கொள்கைகளில் தேவைப்படும் மாறுதல்களை வலியுறுத்தவும், நாடாளுமன்றத்தில் மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்படும் முறைகள் பற்றிக் கூறவும் இக் குழுவிற்கு அதிகாரம் உண்டு. பொதுத்துறை நிறுவனங் களின் மதிப்பீடுகள் மற்றும் செலவுகளைப் பற்றிய கருத்து களையும்கூட, தன்னுடைய அறிக்கையில் இக் குழு வெளி யிடலாம்.

ஒவ்வோர் ஆண்டும் 30 உறுப்பினர்கள் மக்கள் மன்றத் தால் இக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இக் குழு வின் உறுப்பினர்களுள் ஒருவர் தலைவராக (Chairman) சபா நாயகரால் நியமிக்கப்படுகிறார். இக் குழு பரிசீலனை செய்த மதிப் பீடுகளின்மீதான அறிக்கையைத் தலைவர் மூலம் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கிறது. இதுவரை, ஏறத்தாழ 50 அறிக்கைகளை இக் குழு சமர்ப்பித்துள்ளது. அவைகள், ஆற்றுப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் (River Valley Projects), வான்வழிக் கலன்கள் தொழிற்சாலை (Air Craft Factory), நிருவாக மறு சீரமைப்பு, பொதுத்துறை நிறுவனங்களின் செயல்முறை போன்றவைகளின் மீதான அறிக்கைகளாகும்.

(ii) பொதுக் கணக்குகள் குழு (Public Accounts Committee)

நாடாளுமன்றத்தால் ஒதுக்கப்பட்ட நிதிகள், அரசினால் செலவு செய்யப்பட்ட வகைகளைக் கொண்ட கணக்குகளையும், நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் மற்றவகைக் கணக்குகளை யும் ஆராயும் நோக்குடன் இக் குழு அமைக்கப்பட்டது. ஒவ்வோர் ஆண்டும் இக் குழுவிற்கு, நாடாளுமன்றத்தால் 15 உறுப்பினர் கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். அவர்களுள் ஒருவரைத் தலைவராக சபாநாயகர் நியமிக்கிறார். 1954ஆம் ஆண்டிலிருந்து உறுப்பினர்களின் எண்ணிக்கை 22 ஆக உயர்த்தப்பட்டது. 15 உறுப்பினர்கள் மக்கள் மன்றத்தாலும், 7 உறுப்பினர்கள் மாநில மன்றத்தாலும் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

இக் குழுவின் பணிகள்

அரசுத் துறைகளின் கணக்குகளை ஆராய்ந்து அவைகளின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதே இக் குழுவின் முக்கியப் பணியாகும். ரெயில்துறை, தபால்-தந்தித்துறை, செய்தி ஒலி பரப்பு போன்றவைகளும் இதில் அடங்கும். தற்போது, பொதுக் கூட்டுருக்களின் கணக்குகள், தன்னாட்சியுரிமை பெற்ற அரசு நிறுமங்களின் கணக்குகள் ஆகியவைகளும் இக் குழுவின் உள்ளீட் டெல்லை (Purview) யில் அடங்கியுள்ளன.

நிறுவனங்களின் செலவுகள் மேற்கொள்ளப்பட்ட வழி முறைகளையும், அவைகள் நியாயமான முறையில் நடந்துள்ளனவா எனவும், ஆராயும் பணியே இக் குழுவின் தலையாய பணியாகக் கருதப்படுகிறது. மைய அரசு அல்லது மாநில அரசுகளின் நிறுவனங்களில் செலவுகள் மேற்கொள்ளப்பட்ட பிறகுதான் கணக்குகள் ஆராயப்படுகின்றன. இக் குழுவின் வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும், 'இந்தியக் கணக்குத் தலைமை முறைப்படுத்துநர் மற்றும் தணிக்கையாளர்' (Controller and Auditor General of India) செயல்புரிகிறார். அவருடைய அறிக்கையின் அடிப்படையில்தான் இக் குழு தன்னுடைய ஆராயும் பணியை மேற்கொள்கிறது. கணக்கு களில் காணப்படும் செலவுகள் சட்டப்படியும் அதற்குரிய நோக்கங்களுக்காகவும் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா எனப் பரிசீலித்து அறிக்கை வெளியிடுவது இக் குழுவின் முக்கியக் கடமையாகும். செலவுகள் அனைத்தும் அனுமதிக்கப்பட்டவை யாகவும், வழிமுறைகளுக்கேற்றவாறும் இருக்கின்றனவா எனவும் இக் குழு சரிபார்க்கும். தணிக்கை அறிக்கையில் காணப்படும் நிதி ஒழுங்கின்மை நடவடிக்கைகள், நட்டங்கள், சட்டப்படி செல்லாத நடவடிக்கைகள் போன்றவைகளை விரிவாக ஆராயும் உரிமையும் இக் குழுவுக்குண்டு. அரசு மேற்கொண்டுள்ள செலவுகள் நியாயமானதா அல்லது நியாயத்துக்குப் புறம்பானவைகளா எனக் கருத்தைக் கூறும் அதிகாரமும் உண்டு. மேற்கண்ட பணிகளைச் செவ்வனே நிறைவேற்றப் போதிய அதிகாரங்களையும் இக் குழு பெற் றுள்ளது. தேவைப்படும் விவரங்களைப் பெறவும், அதிகாரிகளை விசாரிக்கவும், சான்றுகளைச் சரிபார்க்கவும் இக் குழுவிற்கு அதிகாரமுண்டு. அரசின் நிருவாகக் குறைபாடுகளையும், பொதுப் பணம் தவறான வழிகளில் செலவிடப்பட்டுள்ளதையும் சுட்டிக் காட்டி, அக் குறைகளைக் களையும் அதிகாரமும் பொதுக் கணக்குகள் குழுவுக்குண்டு.

இவ்வாறு மேற்கண்ட இரு குழுக்களும், அரசின் நிதி நடவடிக்கைகளை அக்கறையுடன் கண்காணிக்கும் (Watch Dog) குழுக்களாகச் செயற்பட்டு, பொதுத்துறை நிறுவனங்கள், அரசுத் துறைகள் ஆகியவற்றின் செயல்முறைகளைக் கட்டுப் படுத்தி, நாட்டு மக்களின் நலனைப் பேணிக்காக்கின்றன.

(iii) பொதுத்துறை நிறுவனங்களின் மீதான நாடாளுமன்றக் குழு (Parliamentary Committee on Public Undertakings)

பொதுத்துறையின் மீதான முதலீடுகளை அரசு அதிகப் படுத்தி விட்டதாலும், அவைகளின் எண்ணிக்கை அதிகரித் துள்ளதாலும், மதிப்பீட்டுக் குழு மற்றும் பொதுக் கணக்குகள் குழுக்களின் பணிப் பளு அதிகரித்து, சரிவர ஆராய்வுப் பணி களை மேற்கொள்ள முடியாதவாறு இடையூறுகள் பல ஏற் பட்டன. மேலும், உற்பத்தி நிறுவனங்கள், வாணிகத் தொழிலமைப்புகள், பொதுப்பயன் நிறுவனங்கள் ஆகிய எண்ணிறைந்தத் தொழிலமைப்புகளை இக் குழுக்கள் ஆராய வேண்டியிருப்பதால் போதிய கண்காணிப்பைப் பல்வேறு வகைப்பட்ட தொழிலமைப்புகளின்மீது செலுத்தமுடியவில்லை.

எனவேதான், 1954-ல், இங்கிலாந்து நாட்டில் பொதுத் துறை நிறுவனங்களின் நடவடிக்கையைத் தொடர்ந்து கவனித்து வர ஒரு 'பொதுத்துறையின் மீதான தேர்ந்தெடுக்கப்பட்ட குழு' (Select Committee on Public Enterprises) அமைக்கப் பட்டது. நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகள், செயல்முறைகள் ஆகியவைகளை ஆராய்ந்து, நாடாளுமன்றத் திற்கு அவ்வப்போது விவரங்களை அறிவிப்பதே இக் குழுவின் பணியாகும்.

நமது நாட்டில் முதன் முதலாக, 1953-ல், டாக்டர் லங்கா சுந்தரம் (Dr. Lanka Sundaram) என்பவர், 'பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மீதான நாடாளுமன்றக் குழு'வை ஏற்படுத்தவேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினர். பொதுத் துறையின் செயல்முறைகளை ஆராய, நாடாளுமன்றத்திற்கு இதன்மூலம் அதிகாரம் கிடைக்கும் எனவும் கருத்துத் தெரிவித் தார். ஆனல், அப்பொழுது அவருடைய கருத்தை அரசு ஏற்றுக் கொள்ளவில்லை.

பிறகு, 1958ஆம் ஆண்டில் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவில் ஏற்பட்ட உள் விவகாரங்களாலும், சாக்ளா குழுவின் திறனாய்வுக் கருத்துகளின் காரணமாகவும், அரசு திரு. கிருஷ்ண மேனன் தலைமையிலான குழுவை அமைத்து, பொதுத்துறையின்

மீது நாடாளுமன்றத்தின் கட்டுப்பாடுகளைப் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்தது. விரிவான ஆராய்ச்சிக்குப் பிறகு, பொதுத்துறை நிறுவனங்களுடன் தொடர்ந்து தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள தேர்ந்தெடுத்த குழு (Select Committee) அமைக்கப்படவேண்டுமென, திரு. கிருஷ்ணமேனன் தலைமையிலான குழு வலியுறுத்தியது. அக் குழுவிற்குப் பொதுத் துறையைப் பற்றிய அனைத்து விவரங்களும் தெரிந்திருக்கப்பட வேண்டுமெனவும் கருதப்பட்டது. முடிவாக, 1963ஆம் ஆண்டு மக்கள் மன்றத்தால் இசைவளிக்கப்பட்ட மசோதாவின் மூலமாக 1964ஆம் ஆண்டு மே மாதத்தில், 'பொதுத்துறையின் மீதான குழு' அமைக்கப்பட்டது.

இக் குழு 15 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. 10 உறுப்பினர்கள் மக்கள் மன்றத்திலிருந்தும் (Lok Sabha), 5 உறுப்பினர்கள் மாநிலங்களின் மன்றத்திலிருந்தும் (Rajya Sabha) தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். இக் குழு சபாநாயகரின் அதிகாரத்திற்குட்பட்டு, பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகளையும் நிருவாக முறைகளையும் ஆராய்ந்து, வாணிகஞ்சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் அவைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என அறிந்து அறிக்கையை வெளியிடும். அரசின் முக்கியக் கோட்பாடுகளும், பொதுத்துறை நிறுவனங்களின் அன்றாட நடவடிக்கைகளும் இக் குழுவின் அதிகாரத்திற்கப்பாற்பட்டதாகும். தொழிலமைப்புகளின் தன்னாட்சியுரிமையை ஏற்றுக்கொள்ளும் நேரத்தில் அவை திறமையாகப் பணிபுரிகின்றனவா எனவும் இக் குழு பரிசீலிக்கும். குறிப்பிட்ட பொதுத்துறை நிறுவனங்களின் அறிக்கைகளையும், கணக்குகளையும் இக் குழு ஆராயும் உரிமை பெற்றுள்ளது. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மீதான 'இந்தியக் கணக்குத் தலைமை முறைப்படுத்துநர் மற்றும் தணிக்கையாள'ரின் அறிக்கைகளையும் இக் குழு பரிசீலனை செய்யும்.

மேற்கண்ட பணிகள் தவிர, சபாநாயகரால் வழங்கப்படும் பணிகளையும் இக் குழு மேற்கொள்ளும். சாதாரணமாக ஒவ்வோர் ஆண்டும் சுமார் 10 பொதுத்துறை நிறுவனங்களை ஆராய்ந்து அறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும். அவ்வறிக்கைகளில் காணப்படும் பிரச்சினைகளுக்கு நாடாளுமன்றம் அரசிடமிருந்து விளக்கங்களைப் பெறும். தொழிலமைப்பொன்றின் மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளின் செயல்முறைகளிலிருந்து இக் குழு தேவைப்படும் விவரங்களைத் திரட்டி, முன்னதாகத் தயாரிக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற பதில்களையும்

இக் குழு பெறுகிறது. நிறுவனங்களின் பணிமனைகளுக்கு நேரடியாகச் சென்றும் இக் குழு விசாரணைகள் நடத்தும். உயர் நிலை அதிகாரிகளையும், ஆவணச் சான்றுகளையும், மற்ற அறிக்கைகளையும் ஆராயவும், அதிகாரிகள் அல்லாத மற்ற அலுவலர்களின் கருத்துகளையும், பொதுமக்களின் கருத்துகளையும் அறிந்து கொள்ளவும் இக் குழுவிற்கு அதிகாரமுண்டு. இக் கருத்துகளின் அடிப்படையில், அறிக்கைகளைத் தயாரித்து நாடாளுமன்றத்தில் இக் குழு சமர்ப்பிக்கிறது. இவ்வாறு நாடாளுமன்றம் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்முறைகளைத் தொடர்ந்து கண்காணிக்க முடிகிறது. இக் குழுவின் அறிக்கைகளில், தொழிலமைப்புகளின் நிருவாகத் தவறுகளும், மேலாண்மைத் தவறுகளும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும். இதனால் அரசும், பொதுத்துறை நிறுவனங்களின் மேலாளர்களும் தவறுகளைத் தவிர்த்து, திறமையுடன் செயற்பட முற்படுவர்.

III. நிதிக் கட்டுப்பாடு (Financial Control)

அளவுகடந்த பொதுப்பணம் பொதுத்துறைத்தொழிலமைப்புகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளதால் அவைகளின் நிதி நிலை நடவடிக்கைகளில் தொடர் இயல்புகொண்ட கவனக் கண்காணிப்பு மிக அவசியம். பயன்தரத்தக்க விளைவுகள் ஏற்பட, நிதிகள் ஒழுங்கான முறைகளில் வரையறுக்கப்பட்ட விதிமுறைகளின்படி செலவு செய்யப்படவேண்டும். இவ்வாறு நிதி நடவடிக்கைகளை விதிமுறைகளுக்கேற்ப கட்டுப்படுத்துவதே நிதிக் கட்டுப்பாடாகும்.

நிதிக் கட்டுப்பாடு மூன்று விதங்களில் செயற்படுத்தப்படுகின்றது. அவை முறையே, (I) வரவு - செலவுத் திட்டம் (II) கணக்குப்பதிவு (III) தணிக்கை முதலியனவாகும். இவைகள் ஒவ்வொன்றின் சிறப்பியல்புகளையும் பற்றிச் சிறிது காண்போம்.

I. வரவு — செலவுத் திட்டம் தயாரித்தல் (Budgeting)

நிதி மேலாண்மையில் வரவு - செலவுத் திட்டம் முதற்படியாகும். தீர்மானிக்கப்பட்ட திட்டங்கள், தொழிலமைப்பின் நடவடிக்கைகள், செயல்முறைகள் ஆகியவைகளுக்குத் தேவைப்படும் நிதியை மதிப்பிடுவதே வரவு-செலவுத் திட்டமாகும். குறிப்பிட்ட காலத்திற்குரிய மதிப்பிடப்பட்ட செலவுகளையும், வரவுகளையும் கொண்ட ஒரு அட்டவணையே வரவு - செலவுத் திட்டமாகும்.

வரவு-செலவுத் திட்டமில்லாவிடில் மூலதனச் செலவுகளும், நிதித் தொடர்புடைய செலவுகளும் ஆபத்திற்குள்ளாக நேரிடும்.

செயல்முறைத் திட்டமாகவும், செயல்விளைவுகளைப் பரிசீலிக்கும் முறையாகவும், எதிர்பார்த்த விளைவுகளுடன் செயல்முறை விளைவுகளை ஒப்பிட்டு நோக்கும் வரையளவாகவும் (Standard) வரவு-செலவுத் திட்டம் திகழ்கிறது. மேற்கொள்ளவேண்டிய செலவுத் திட்டங்களையும், எதிர்பார்க்கும் வரவுகளையும் கொண்டிருப்பதால், வரவு-செலவுத் திட்டம் நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகளுக்கு வழிகாட்டியாய் விளங்குகிறது.

ஒரு நிறுவனத்தின் கடினமான பிரச்சினைகள் அனைத்தையும் உள்ளடக்கும் வகையில், வரவு-செலவுத் திட்டம் விரிவானதாக (Comprehensive) இருக்கவேண்டும். பின்வரும் பண்புக்கூறுகளைக் கொண்டதாய் வரவு-செலவுத் திட்டம் அமையவேண்டும் :

(i) உற்பத்தி மதிப்பீடுகள்.

(ii) விற்பனை மதிப்பீடுகள்.

(iii) அடக்க விலை அல்லது உற்பத்தி விலை மதிப்பீடுகள்-உழைப்பின் மதிப்பீடு, நடைமுறைச் செலவுகளின் மதிப்பீடு, இயந்திரத் தொகுதிகளைப் பராமரிக்கும் செலவுகள், மூலப்பொருள் அடக்கச் செலவு மதிப்பீடுகள் ஆகியவை இவற்றில் அடங்கும்.

(iv) தொழிலாளர்களின் எண்ணிக்கை மதிப்பீடுகள்.

(v) முன்னேற்றம் மற்றும் ஆராய்ச்சிப் பணிகளின் மதிப்பீடுகள்.

(vi) நலங்காக்கும் மதிப்பீடுகள் (Welfare Estimates).

(vii) மூலதனச் செலவுகள் மதிப்பீடுகள்.

(viii) இலாப-நட்ட மதிப்பீடுகள்.

(ix) உள்வரும் ரொக்கத்தின் மதிப்பீடுகள்.

(x) முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பீடுகள்.

வரவு-செலவுத் திட்டங்கள் மூன்று வகைப்படும். அவைகள் பின்வருவனவாகும் :

(அ) வருவாய் வரவு-செலவுத் திட்டம் (Revenue Budget)

நிதிக் கோட்பாட்டை உருவாக்கவும், வரையளவுகளை நிர்ணயிக்கவும் அடிப்படையாகத் திகழ்வதுதான் இந்த வருவாய் வரவு-செலவுத் திட்டமாகும். நிறுவனத்தில் ஏற்படக்கூடிய வரவுகளையும், செலவுகளையும் முன்கணிப்பின் (Forecast) மூலம்

அறிவிப்பதே வருவாய் அல்லது வருமான வரவு-செலவுத் திட்டமாகும். இவ்வாறு தயாரிக்கப்படும் வரவு-செலவுத் திட்டத்தில் பற்றுக்குறை ஏதேனும் ஏற்படின், நாடாளு மன்றத்தில் அப் பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டம் சமர்ப் பிக்கப்பட்டு அரசின் முன் அனுமதி பெறப்படுதல்வேண்டும்.

(ஆ) மூலதன வரவு - செலவுத் திட்டம் (Capital Budget)

அரசின் ஆலோசனையுடன் இம் மூலதன வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கப்படும். வரவு-செலவுத் திட்டத்திற்கேற்ப மூலதனச் செலவுகளும், அட்டவணைப்படி செயல்முறைகளும் அமையவேண்டும்.

(இ) ரொக்க வரவு-செலவுத் திட்டம் (Cash Budget)

மூலதனச் செலவுகள் அல்லது நடைமுறைச் செலவுகளை மேற்கொள்ளத் தேவைப்படும் ரொக்கத்தை முன்கூட்டியே உய்த்துணர்ந்து ஒழுங்குமுறைப்படுத்தும் திட்டமே ரொக்க வரவு-செலவுத் திட்டமாகும். உள்வரும் (Inflow) நிதிகளை ஒழுங்குபடுத்த இத் திட்டம் மிக அவசியமானதாகும்.

வரவு-செலவுத் திட்டத்திலிருந்து விலகி நடைபெறும் நட வடிக்கைகள் அல்லது மதிப்பீட்டிற்கும் உண்மையான செலவு களுக்கும் இடையே ஏற்படும் பெருத்த வேறுபாடுகளினால் தோன்றும் செயல்விளைவுகள் ஆகியவைகளுக்காக குறிப்பிட்ட அதிகாரிகளைப் பொறுப்பாளர்களாக ஆக்கவேண்டும். திட்டங் களுக்குத் தேவையான செலவுகளை, அவைகள் மேற்கொள்ளப் படுவதற்கு முன்பாகவே அறிந்துகொள்ளும் வாய்ப்பு, வரவு-செலவுத் திட்டத்தின் மூலமாக நாடாளுமன்றத்திற்கு ஏற்படு கிறது. அதுபோலவே, மதிப்பீடு செய்யப்பட்ட செலவுகள் எந்த அளவிற்கு மேற்கொள்ளப்பட்டுள்ளன என அறியும் வாய்ப்பை யும் வரவு-செலவுத் திட்டம் ஏற்படுத்தித் தருகிறது. இதன் மூலமாக, குறிப்பிட்ட அதிகாரிகளின் கவனக் குறைவு அல்லது தாமத முடிவுகளைக் குறிப்பாக அறிய முடிகிறது. வரவு-செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டவுடன் கீழ்ப்பணிபுரியும் அதிகாரிகளுக்கு, திட்டத்தின் வரையரைக்குட்பட்டுச் செலவுகளை மேற்கொள்ளும் அதிகாரம் வழங்கப்பட்டு, திட்டங்களை விரைவாகச் செயற்படுத் தும் பொறுப்பும் ஏற்படுத்தப்படவேண்டும்.

II. கணக்குப் பதிவு

வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளபடி நிதிகளைப் பெற்ற விவரங்களையும், பல்வேறு தலைப்புகளின்கீழ்

அவைகள் செலவு செய்யப்பட்டதையும் விவரமாகக் கணக்குப் பதிவு செய்தல்வேண்டும்.

வரையறுக்கப்பட்ட கணக்கு ஏடுகளில் நடவடிக்கைகளைப் பதிவு செய்தல், பொதுப்பணம் பொதுநலனுக்காகச் செலவு செய்யப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்திக்கொள்ள உறு துணை செய்கிறது. சட்டத்தின்படி அனுமதிக்கப்பட்ட கணக்கு முறைகளே பொதுத்துறை நிறுவனங்களால் பின்பற்றப்பட வேண்டும். வரவு—செலவுத் திட்டத்தின் வரையளவுக்குட்பட்டு கணக்குகள் ஏடுகளில் பதிவு செய்யப்படவேண்டும். தொழிலின் உண்மையான நிதி நிலைமை, எஞ்சியிருக்கும் நிதி, நிலையான மற்றும் நிலையில்லாச் சொத்துக்கள், பொறுப்புகள் போன்று அனைத்து விவரங்களையும் தெளிவாகக் காட்டும் வகையில் கணக்குப் பதிவுமுறை அமைந்திருத்தல்வேண்டும்.

மேலும், திட்டத்திற்கு உதவிபுரியக்கூடிய வகையிலும், தேவைப்படும் திருத்தங்களை அல்லது மாற்றங்களை எளிதாக சரி செய்துகொள்ளும் வகையிலும் கணக்குப் பதிவுமுறை அமைதல் வேண்டும். கணக்கு சார்ந்த திருத்தமாக மட்டுமல்லாமல், திட்ட வட்டமான நிதித் திட்டத்தை ஏற்படுத்தும் வகையிலும், மூலதனத் தின் மீது வட்டி, இயந்திரங்களுக்குத் தேய்மானம், எதிர்பாராச் செலவுகளுக்கென சேமிப்பு நிதி போன்றவைகளுக்கும் வழிமுறை கள் செய்யப்படும் விதத்தில் கணக்குப் பதிவு அமையவேண்டும்.

நிகழும் பல்வகைப்பட்ட நடவடிக்கைகளின் நிலையான குறிப் பைப் பெறுதல், குறிப்பிட்ட காலமுடிவில் தொழிலில் ஏற்பட்ட இலாபம் அல்லது இழப்பு எவ்வளவு என்பதை அறிதல், தொழி லமைப்பின் நோக்கம் எந்த அளவில் நிறைவேறியுள்ளது என்பதை உணர்தல், சொத்துக்களின் தன்மையை அறிதல் போன்ற நோக்கங்களுடனும் கணக்குப் பதிவு அமையவேண்டும்.

III. தணிக்கை (Audit)

நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகள் சரிவர மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என அறியும் நோக்கத்துடன் கணக்குப் பதிவுகளை ஆராய்வதற்குத் தணிக்கை என்று பொருள்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 149ஆம் பிரிவு, மத்திய அரசு மற்றும் மாநில அரசுகளின் கணக்குகளையும், பொதுத்துறை நிறுவனங்களின் கணக்குகளையும் தணிக்கை செய்யும் அதி காரத்தை, 'இந்தியக் கணக்குத் தலைமைத் தணிக்கைய'ருக்கு (Auditor General of India) அளித்துள்ளது. தற்போது, மத்திய

மற்றும் மாநில அரசுகளின் நிதி நடவடிக்கைகளையும், வருவாய்—செலவு முதலிய நடவடிக்கைகளையும், அரசுத் துறைகளின் கணக்குகளையும், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் வியாபாரக் கணக்கு, இலாப நட்டக் கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பு (Trading and Profit and Loss Account and Balance Sheet) ஆகியவைகளையும், தணிக்கை செய்யும் அதிகாரங்களையும், உரிமைகளையும் 'தணிக்கை மற்றும் கணக்குகள் ஆணை 1936, (Audit and Accounts Order 1936) மூலம் இந்தியக் கணக்குத் தலைமைத் தணிக்கையர் பெறுகிறார்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் 151ஆம் பிரிவில் 'தலைமைத் தணிக்கையர்' (Auditor General) வெளியிடும் அறிக்கைகள் முறையே மாநில சட்டசபைகளிலும், நாடாளு மன்றத்திலும் சமர்ப்பிக்கப்பட வகைசெய்யப்பட்டுள்ளது.

தன்னாட்சியுரிமை பெற்ற பொதுக் கூட்டுரு நிறுவனங்களைத் தணிக்கை செய்வதில், நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் சட்டங்கள் வழங்கும் அதிகாரங்களையும், உரிமைகளையும் இந்தியத் தலைமைத் தணிக்கையர் பயன்படுத்துகிறார். பொதுத்துறை நிறுமங்களின்மீது மேற்கொள்ளப்படும் தணிக்கைமுறை, 'இந்திய நிறுமச் சட்டத்'தில் வகைசெய்யப்பட்டவாறு அமையவேண்டும்.

தணிக்கையின் நோக்கங்கள் (Scope of Audit)

தணிக்கையின் நோக்க எல்லைகள் எந்தச் சட்டத்திலும் வரையறுக்கப்படவில்லை. தணிக்கையின் தன்மையையும் நோக்க எல்லையையும் நிர்ணயிக்கும் உரிமையை இந்தியத் தலைமைத் தணிக்கையர் பெற்றுள்ளார். அவரால் மேற்கொள்ளப் படும் தணிக்கை, பின்வரும் நோக்கங்களைக் கொண்டுச் செயற் படுகின்றது.

(1) **நிதி ஒதுக்கீடுகளின்மீது தணிக்கை:** ஒதுக்கீடுகள் சரிவரப் பயன்படுத்தப்பட்டுள்ளனவா என ஆராய்வது இதன் நோக்க மாகும்.

(2) **ஒழுங்குமுறையின் மீது தணிக்கை:** இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தின்படி அல்லது நாடாளுமன்றத்தின் சட்டங் களில் வகை செய்யப்பட்டுள்ள விதிமுறைகளுக்கேற்ப, செல வினங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என ஆராய்வதே இதன் நோக்கமாகும்.

(3) செலவுகளுக்குரிய இசைவுகள் அல்லது அனுமதிகளின் மீதான தணிக்கை: ஒவ்வொரு செலவும், தக்க அதிகாரிகளின் அனுமதியுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என ஆராயவே இத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

(4) ஒழுங்கு முறைமையின் மீதான (Propriety) தணிக்கை: ஒவ்வொரு செலவும், நேர்மையுடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என ஆராயும் நோக்குடன் இத் தணிக்கை மேற்கொள்ளப்படு கிறது. பொதுப்பணம், நியாயமான முறைகளிலும், ஒழுங்கு முறைமையுடனும் பயன்படுத்தப்பட்டுள்ளதா என அறிவதே இதன் அடிப்படை நோக்கமாகும்.

(5) திறமைத் தணிக்கை (Efficiency Audit): மதிப்பிடப்பட்ட தொழில்நுணுக்கத் திட்டங்கள் விரிவான முறையில் மேற் கொள்ளப்பட்டுள்ளனவா எனவும், அப்படி சரிவர நிறைவேற்றப் படாமல் விடப்பட்டிருந்தால் அதற்குரிய காரணங்களை ஆராய் வதுமே இதன் நோக்கமாகும். மேலும், இழப்பாபத்து நிறைந்த தாமதங்கள் ஏதேனும் ஏற்பட்டுள்ளனவா எனவும், அடக்கச் செலவு அதிகரித்துள்ளதா எனவும் ஆராயப்படுகிறது. பயன் படுத்தப்படாமல் மூலப்பொருள்கள் புறக்கணிக்கப்படுகின் றனவா அல்லது இயந்திரங்கள் திறமைக் குறைவாகச் செயற் படுகின்றனவா என ஆராய்ந்து அதற்குரிய காரணங்களைக் கணக்கிடுவதும், திறமைத் தணிக்கையின் மற்றொரு நோக்க மாகும். இறுதியாக, தொடர் இயல்புகொண்ட இழப்புகள் ஏதேனும் ஏற்படுகின்றனவா, திட்டமிட்ட நேரத்திற்குள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதா எனவும் இத் தணிக்கை முறையில் ஆராயப்படுகிறது.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தணிக்கைமுறை

பொதுத்துறை நிறுவனங்களின் மூன்று முக்கிய அமைப்பு முறைகளிலும், தணிக்கை முறை பின்வருமாறு அமைகிறது:

1. அரசு நிறுமங்களின் தணிக்கை (Audit of Government Companies)

கூட்டுப் பங்கு நிறும முறையில் அமைக்கப்பட்ட நிறுவனங் களே அரசு நிறுமங்களாகும். 'இந்திய நிறுமச் சட்டம் - 1956'-ல் (Indian Companies Act, 1956), பிரிவு 619-ல், அரசு நிறுமங் களின் தணிக்கைபற்றி வழிமுறைகள் கூறப்பட்டுள்ளன. தலைமைத்

தணிக்கையரின் அனுமதியுடன் நியமிக்கப்படும் தணிக்கையரால் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. அப்படி நியமிக்கப்பட்ட தணிக்கையருக்கு ஆணைகளை வழங்கவும், தணிக்கை செய்யப் பட்ட கணக்குகளை ஆராயவும், இணைக்கூட்டுத் தணிக்கையை (Supplementary Audit) மேற்கொள்ளவும் தலைமைத் தணிக்கை யருக்கு அதிகாரங்கள் உண்டு.

இந்திய நிறுமச் சட்டத்தின் 619ஆம் பிரிவு, அரசு நிறுமங் களில் நியமிக்கப்படவேண்டிய தணிக்கையரின் நியமனம், ஊதி யம், தகுதிகள், அதிகாரங்கள், உரிமைகள், கடமைகள், பொறுப் புகள், தணிக்கை அறிக்கையின் அமைப்புமுறை ஆகியவைகளைப் பற்றிய விரிவான விதிமுறைகளைக் கொண்டுள்ளது.

தணிக்கையரின் நியமன முறைகள்

அரசு நிறுமத்தின் தணிக்கையர், தலைமைத் தணிக்கையரின் அறிவுரையின் அடிப்படையில், மத்திய அரசால் நியமிக்கப் படுவார் என நிறுமச் சட்டத்தின் 619 (2) ஆம் பிரிவு கூறுகிறது. தலைமைத் தணிக்கையர் கூறும் அறிவுரையை அரசு நிராகரிக்கும் உரிமையைப் பெற்றிருப்பினும்கூட, நடைமுறையில் அதுபோல் நிராகரிக்கப்படுவதில்லை. கூறப்போனால், அரசு நிறுமங்களின் தணிக்கையர்களைத் தலைமைத் தணிக்கையரே நியமிக்கின்றார்; நிறுமங்களுக்கும், தலைமைத் தணிக்கையருக்குமிடையே அரசு ஒரு பாலமாகச் செயல்படுகிறது.

தணிக்கை ஊதியத்தை நிர்ணயித்தல்

தற்பொழுதுள்ள சட்டம், தணிக்கை ஊதியத்திற்கு வரையளவு ஏதும் நிர்ணயிக்கவில்லை. தலைமைத் தணிக்கை யருக்கும் அதிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை. எனவே, நடை முறையில் மத்திய அரசே தணிக்கையரின் ஊதியத்தையும் நிர்ணயம் செய்கிறது; அக் குறிப்பிட்ட நிறுமம் தணிக்கையரின் ஊதியத்தைப் பற்றிய மதிப்பீட்டை அரசுக்குத் தெரிவிக்கிறது. ஆனால், இம் முறை சரியானதல்ல எனக் கருதப்படுகிறது. தணிக்கையின் தன்மையைத் தீர்மானித்து, தணிக்கையரை நியமிக்கும் அல்லது நியமிக்க ஆலோசனை கூறும் அதிகாரம் பெற்ற தலைமைத் தணிக்கையரே ஊதியத்தையும் நிர்ணயம் செய்தல் பொருத்தமுடையதாக அமையும். ஆகையால், தணிக்கையரின் ஊதியம் பற்றி மத்திய அரசுக்கு ஆலோசனை தெரிவிக்கும் அதிகாரம் தலைமைத் தணிக்கையருக்கு வழங்கப் படல் வேண்டும்.

தணிக்கையருக்கு ஆணைகள் வழங்கல்

தலைமைத் தணிக்கையரின் அறிவுரையின் அடிப்படையில் நியமிக்கப்படும் தணிக்கையர் பின்பற்றவேண்டிய தணிக்கை முறை பற்றி ஆணைகளை வழங்கும் அதிகாரம், நிறுமச் சட்டத்தின் 619 (3) (a) பிரிவின் கீழ், தலைமைத் தணிக்கையருக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும், அத் தணிக்கையரின் பணிகளுடன் தொடர்புடைய ஆணைகளை வழங்கும் அதிகாரமும் தலைமைத் தணிக்கையருக்குண்டு.

இணைக்கூட்டுத் தணிக்கை Supplementary Audit)

நிறுமச் சட்டத்தின் 619 (3) (b) பிரிவு, தலைமைத் தணிக்கையருக்கு, அவரால் நியமிக்கப்படும் தணிக்கையரால் நிறுமத்தின் கணக்குகளை ஆராயவும் (Test). இணைக்கூட்டுத் தணிக்கையை மேற்கொள்ளவும் அதிகாரம் அளிக்கிறது. எனவே, நிறுமத்தின் வழக்கமான தணிக்கையரோடு, தலைமைத் தணிக்கையரால் நியமிக்கப்படும் தணிக்கையரும் கணக்குகளை ஆராய்வர். முற்றுரிமை பெற்று விளங்கும் தொழிலமைப்புகளில் ஒழுங்கு முறைமை பின்பற்றப்பட்டுள்ளதா என ஆராய இவ்விணைக் கூட்டுத் தணிக்கை முறை ஏற்படுத்தப்படுகிறது.

தணிக்கை அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் (Submission of Audit Reports)

நிறுமச் சட்டத்தின் 619 (4) பிரிவு, நிறுமத்தின் வழக்கமான தணிக்கையர், தன்னுடைய அறிக்கையைத் தலைமைத் தணிக்கையரிடம் சமர்ப்பிக்கவேண்டுமெனவும், அவ்வறிக்கையின் மீது, தலைமைத் தணிக்கையர் தன்னுடைய கருத்தைத் தெரிவிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளார் எனவும் கூறுகிறது. அப்படி கருத்துகள் ஏதும் தெரிவிக்கப்படாவிடினும் கூட, 'கருத்துகள் ஒன்றுமில்லை' (No Comments) என்ற சான்றிதழை அளிக்க வேண்டும். இவ்வாறு, தலைமைத் தணிக்கையரின் கருத்துகளுடன் கூடிய தணிக்கை அறிக்கை, பங்குதாரர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டுமென பிரிவு 619 (5) தெரிவிக்கிறது.

தணிக்கை அறிக்கையின் வடிவ அமைப்பு முறை (The Form of Audit Certificate)

பிரிவு 619-ல் தணிக்கை அறிக்கையின் வடிவம் கூறப்படவில்லை. மற்றக் கூட்டுப் பங்கு நிறுமங்களின் தணிக்கை அறிக்கையைப் போன்று இவ்வறிக்கையும் தயாரிக்கப்படுகிறது.

தணிக்கையரின் கருத்துப்படி பின்வரும் கணக்குகள் நியாயமான தாகவும், சரியான முறையிலும் தயாரிக்கப்பட்டுள்ளனவா எனக் குறிப்பிடவேண்டும்.

(i) இருப்புநிலைக் குறிப்பின்படி நிறுமத்தின் நடவடிக்கைகளும் நிதி நிலைமையும்,

(ii) இலாப-நட்டக் கணக்கின்படி அந்த ஆண்டுக்குரிய இலாபம் அல்லது நட்டம்.

தணிக்கையரின் அறிக்கை கீழ் வருபவைகளையும் தெரிவிக்க வேண்டும்.

(i) அவருடைய அதிகபட்ச அறிவுக்குத் தோன்றியது போல், தணிக்கைக்குத் தேவைப்பட்ட விவரங்களும் விளக்கங்களும் அளிக்கப்பட்டனவா,

(ii) சட்ட விதிமுறைகளின்படி நிறுமத்தின் கணக்கு ஏடுகளும் மற்ற ஆவணங்களும் அமைந்து, அனைத்துக் கணக்கேடுகளும் (கிளை நிறுமங்கள் உட்பட) தணிக்கைக்குச் சமர்ப்பிக்கப்பட்டனவா,

(iii) கணக்கு ஏடுகள் மற்றும் அறிக்கைகளில் உள்ள விவரங்களுக்கேற்றவாறு இலாப-நட்டக் கணக்கும், இருப்புநிலைக் குறிப்பும் தயாரிக்கப்பட்டுள்ளனவா,

என்பதுபோன்ற விவரங்களைத் தணிக்கையர் தணிக்கை அறிக்கையில் வெளியிடவேண்டும். மேற்கண்ட விவரங்களில் ஏவையாவது மாறுகக் கூறப்பட்டிருந்தால், அதற்குரிய காரணத்தை அறிக்கை குறிப்பிடவேண்டும்.

2. பொதுக் கூட்டுரு நிறுவனங்களின் தணிக்கை (Audit of Statutory Corporations)

பொதுக் கூட்டுருத் தணிக்கை முறை, நிறுவனத்திற்கு நிறுவனம் பெரிதும் மாறுபடுகிறது. நான்கு வகையான கூட்டுருக்கள் மட்டும்தான், 'வாணிகத் தணிக்கை இயக்குந'ரின் (Director of Commercial Audit) அதிகாரத்திற்குட்பட்டு இயங்குகின்றன. அவைகளாவன: இரு வான்வழிக் கூட்டுருக்கள் (Two Air Corporations), எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுரு (Oil and Natural Gas Commission), மத்தியப் பண்டக சாலைக் கூட்டுரு (Central Warehousing Corporation) முதலியனவாகும். ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு, உணவுக் கூட்டுரு, ஸ்டேட்பாங்க் போன்ற தொழிலமைப்புகள், மற்றக் கூட்டுருக்கள் தலைமைத்

தணிக்கையரின் அலுவலகத்தால் தணிக்கை செய்யப் படுகின்றன. மேலும், மாநில சாலைப் போக்குவரத்துக் கூட்டுரு (State Road Transport Corporations), மாநில நிதிக் கூட்டுரு (State Finance Corporations) போன்ற ஒரு சில கூட்டுருக் களின் கணக்குகள் மாநிலத் தலைமைக் கணக்காயரால் (Accountants General of States) தணிக்கை செய்யப்படுகின்றன.

பலவகைக் கூட்டுருக்களின் தணிக்கை விதிமுறைகள்

நாம் முன்பே கண்டவாறு, ஒவ்வொரு பொதுக் கூட்டுருத் தொழிலமைப்பிலும் தணிக்கை முறை மாறுபடுகிறது. எனவே, சில தணிக்கை முறைகளை அறிந்துகொள்ள ஒரு சில முக்கியமான பொதுக் கூட்டுருக்களின் தணிக்கை விதிமுறைகளைச் சற்று காண்போம்.

இரு வான்வழிக் கூட்டுருக்களிலும் தணிக்கை முறை, தலைமைத் தணிக்கையரிடம் விடப்பட்டுள்ளது; அரசின் நிறுவனங்களைத் தணிக்கைசெய்யப் பயன்படுத்தப்படும் அதிகாரங் கள், உரிமைகள் யாவும் இதற்கும் பொருந்தும். இவ் வான்வழிக் கூட்டுருக்களின் கணக்குகளும், அவைகளின் மீதான தலைமைத் தணிக்கையரின் அறிக்கையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவேண்டும். ஆனல், நடைமுறையில் தணிக்கை அறிக்கை யின்றி, கணக்குகள் மட்டும்தான் நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படுகிறது; தணிக்கை அறிக்கை பிறகு தனியாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுருவின் தணிக்கை முறை, மேற்கண்ட வான்வழிக் கூட்டுருக்களின் தணிக்கை முறையைப் பின்பற்றியே அமைந்துள்ளது. இக் கூட்டுருவின் கணக்குகளும், தணிக்கை அறிக்கையும்தான் நாடாளுமன்றத்தின் முன் வைக்கப்படுகின்றன; ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படுவ தில்லை.

மத்தியப் பண்டகசாலைக் கூட்டுருவின் கணக்குகள், தணிக்கையைத் தொழிலாகக் கொண்ட தணிக்கையர்களால் (Professional Auditors) தணிக்கை செய்யப்படுகிறது. இத் தணிக்கையர், தணிக்கைத் தலைவரின் ஆலோசனையுடன் மத்திய அரசால் நியமிக்கப்படுகிருர். தேவைப்படும் நேரங்களில் கூடுதல் தணிக்கையை (Additional Audit) அல்லது இணைத்தணிக்கையை மேற்கொள்ளும் அதிகாரம் தலைமைத் தணிக்கையருக்குண்டு. நடைமுறையில் இக் கூட்டுருவின் கணக்குகள் வழக்கமான தணிக்கையராலும், தலைமைத் தணிக்கையராலும்-ஆக இருவ ராலும் தணிக்கை செய்யப்படுகின்றன.

மைய வங்கி அல்லது ரிசர்வ் வங்கிக்கு, இரண்டுக்குக் குறையாத தணிக்கையர்கள் மத்திய அரசால் நியமிக்கப்படு கின்றனர். அவர்களுடைய பணிக்காலம் ஓராண்டாகும்; இருந்த போதிலும் திரும்பவும் அவர்களே நியமிக்கப்பட வாய்ப்புண்டு. எந்த நேரத்திலும், தலைமைத் தணிக்கையரைக் கொண்டு வங்கி யின் கணக்குகளைத் தணிக்கை செய்யும் அதிகாரம் அரசுக்குண்டு.

மாநில வங்கியின் கணக்குகள் அரசின் ஆலோசனையுடன் ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்படும் இரண்டு தணிக்கையரால் தணிக்கை செய்யப்படுகின்றன. அவர்களுடைய ஊதியமும் ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்படுகிறது. பணிக்காலம் ஓராண்டுதான்; எனினும் அதே தணிக்கையர் மறுமுறையும் நியமிக்கப்படலாம். வங்கியின் அறிக்கைகளை ஆராய எந் நேரத்திலும் மத்திய அரசு இணைத்தணிக்கையரை நியமிக்க லாம். ஆனால், நடைமுறையில் இதுவரை இவ்வதிகாரம் அரசால் பயன்படுத்தப்படவில்லை.

ரிசர்வ் வங்கியின் துணை நிறுவனமாகப் பணிபுரியும் 'இந்தியத் தொழில்வள வங்கி'யின் (Industrial Development Bank of India) கணக்குகள், ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்படும் இரு தணிக்கை யரால் தணிக்கை செய்யப்படுகின்றன. ஸ்டேட் பாங்கைப் போல் தணிக்கையர்களை நியமிக்க ரிசர்வ் வங்கி அரசின் அனுமதியைப்பெறத் தேவையில்லை. தணிக்கை அறிக்கை, தணிக்கையர்களால் 'தொழில்வள வங்கி'க்கு அனுப்பப் படுகிறது; பிறகு தொழில்வள வங்கி அவ்வறிக்கையை ரிசர்வ் வங்கிக்குச் சமர்ப்பிக்கிறது. தொழில்வள வங்கியின் கணக்கு களும், தணிக்கை அறிக்கையும் 'அரசிதழில்' (Gazette) வெளியிடப்படுகிறது. தொழில்வள வங்கியின் கணக்குகளை, அரசு, தலைமைத் தணிக்கையரைக் கொண்டு எந்நேரத்திலும் தணிக்கை செய்யலாம்.

'இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு'வின் (Industrial Finance Corporation of India) 50% க்கும் அதிகமான பங்குகளை, தொழில் வள வங்கி பெற்று பெரும்பான்மைப் பங்குதாரராக விளங்கு கிறது. இக் கூட்டுருவின் கணக்குகள் இரண்டு தணிக்கையர் களால் தணிக்கை செய்யப்படுகிறது. தொழில்வள வங்கி ஒரு தணிக்கையரையும், மற்றப் பங்குதாரர்கள் மற்றொரு தணிக்கை யரையும் நியமிக்கின்றனர். தொழில்வள வங்கியின் ஆலோசனை யுடன் அரசு, இத் தணிக்கையர்களுக்கு தேவைப்படும் ஆணைகளை வழங்கவும், நிதிக் கூட்டுருவின் கணக்குகளை, தலைமைத்

தணிக்கையரின் மூலம் தணிக்கை செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. நிதிக் கூட்டுருவின் தணிக்கை அறிக்கை மத்திய அரசிற்கு அனுப்பப்படுகிறது; அரசு அவ்வறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறது.

ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவில் (Life Insurance Corporation) மத்திய அரசின் முன் அனுமதியுடன், தணிக்கையர்கள் கூட்டுருவாலேயே நியமிக்கப்படுகின்றனர். தணிக்கை அறிக்கையைக் கூட்டுரு பெற்று மத்திய அரசிற்கு அனுப்புகிறது; அரசு அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறது. தணிக்கையர்களின் எண்ணிக்கையைப் பற்றிக் குறிப்பேதுமில்லை; ஆனால், நடைமுறையில் 12 தணிக்கையர்கள் இக் கூட்டுருவின் கணக்குகளைத் தணிக்கை செய்கின்றனர்.

இந்திய உணவுக் கூட்டுருவின் (Food Corporation of India) தணிக்கையர்கள், தலைமைத் தணிக்கையரின் ஆலோசனையுடன், மத்திய அரசு ஒப்புதல் அளித்த தணிக்கையர்களின் பட்டியலிலிருந்து உணவுக் கூட்டுருவாலேயே நியமிக்கப்படுகின்றனர். தணிக்கையர்கள் கொண்ட பட்டியல், தலைமைத் தணிக்கையரின் ஆலோசனையுடன் மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்படுவது இக் கூட்டுருவிற்கு மட்டும்தான்; இது ஒரு தனிச்சிறப்பியலாகும். தணிக்கை அறிக்கை அரசுக்கு அனுப்பப்படுகிறது; அரசு அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறது.

தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுருவின் (Damodar Valley Corporation) கணக்குகள், 'கிழக்குப் பகுதி' வாணிகத் தணிக்கை இயக்குந'ரால் (Director of Commercial Audit, Eastern Region) நியமிக்கப்படும் அதிகாரி ஒருவரால் தணிக்கை செய்யப்படுகிறது; தணிக்கை அறிக்கை தலைமைத் தணிக்கையரின் இசைவிற்கு அனுப்பப்படுகிறது.

மாநில தொழிலாளர் காப்பீட்டுக் கூட்டுரு (E.S.I.), தேசியக் கூட்டுறவு முன்னேற்றக் கூட்டுரு (National Co-operative Development Corporation), கதர் மற்றும் கிராமத் தொழில்கள் ஆணைக்குழு (Khadi and Village Industries Commission) போன்ற சட்டமுறை நிறுவனங்களின் கணக்குகள், தலைமைத் தணிக்கையரின் மூலமாகத் தணிக்கை செய்யப்படுகின்றன.

மேற்கண்டவாறு, பொதுக் கூட்டுருக்களின் தணிக்கை முறைகளில் மாறுபாடுகள் உள்ளன. ஒவ்வொரு கூட்டுருவிலும் தணிக்கை விதிமுறைகள், தணிக்கையர் எண்ணிக்கை, தணிக்கை அறிக்கை அனுப்பப்படும் வழிமுறை போன்றவைகளைப் பின்வரும் அட்டவணையின் மூலமாக ஒப்பிட்டு நோக்கலாம்:-

பொதுக் கூட்டுரு தொழிலமைப்புகளின் தணிக்கை விதி முறைகளின் சுருக்கம் (அட்டவணை)

(Summary of Audit Provisions for Statutory Corporation)

வரிசை எண்	தொழிலமைப்பின் பெயர்	(i) நியமிக்கும் அதிகாரம் (ii) தணிக்கையரின் எண்ணிக்கை	தணிக்கை, தலைமைத் தணிக்கை அதிகாரியால் அல்லது வழக்கமான தணிக்கையரால்	(i) தணிக்கையரின் பணிக் காலம் (ii) ஊதியம்	தணிக்கையரின் அதிகாரங்கள், கடமைகள் முதலியன	யாருக்குத் தணிக்கை அறிக்கை அனுப்பப்பட வேண்டும்?	இணைத் தணிக்கை, ஆராய்வு போன்றவைகளில் அரசின் அதிகாரங்கள்
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
1. 2.	இந்திய வான் வழிகள் கூட்டுரு. இந்திய வான் வழி நிறுவனம் (Indian Airlines and Air India).	(i) சட்டம்	தலைமைத் தணிக்கையர்	(i) குறிப்பிடப்பட வில்லை. (i) தலைமைத் தணிக்கையரால் செய்யப்படும் செலவுகளை, கூட்டுருக்கள் ஈடு செய்யும்.	தேவைப்படும் கணக்கு ஏடுகள், ஆவணங்கள், சான்றுச் சீட்டுகள், அலுவலகத்தின் அறிக்கைகள் போன்றவற்றைப் பெறவும், அலுவலகங்களை ஆராயவும் அதிகாரங்கள் உண்டு.	கணக்குகளுடன் தணிக்கை அறிக்கையும் இணைக்கப்பட்டு, அரசுக்கு அனுப்பப்படுகிறது; அரசு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.	இல்லை.

3.	எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுரு (Oil and Natural Gas Commission)	,,	,,	,,	,,	,,	,,
4.	ரிசர்வ் வங்கி (Reserve Bank)	(i) அரசு (ii) இரண்டிற்குக் குறையாமல்	(i) குறிப்பிடப்படவில்லை.	(i) ஓராண்டு வரை; மறுமுறையும் நியமிக்கப்படலாம். (ii) ஊதியம் அரசால் நிர்ணயிக்கப்படுகிறது.	கணக்கு ஏடுகளையும், இருப்பு நிலைக் குறிப்பையும் பெறலாம்; மற்ற ஆவணங்களையும், வங்கியின் அறிக்கைகளையும் பெறலாம்; இயக்குநரையோ அல்லது அதிகாரிகளையோ விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு.	தணிக்கை அறிக்கை அரசிற்கு அனுப்பப்பட வேண்டும்.	தலைமைத் தணிக்கையரை அரசு வங்கிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்ய நியமிக்கலாம்.

அட்டவணை (தொடர்ச்சி)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
5.	ஸ்டேட் பாங்க் (State Bank)	(i) அரசின் ஆலோசனையுடன் ரிசர்வ் வங்கி நியமிக்கிறது. (ii) இருவர்	வழக்கமான தணிக்கையர்கள்.	(i) நியமனம் செய்யப்பட்ட பிறகு வரும் முதல் பொதுக் கூட்டம் வரை. (ii) அரசின் ஆலோசனையுடன் ரிசர்வ் வங்கி நிர்ணயிக்கிறது.	கணக்கு ஏடுகளையும், இருப்பு நிலைக் குறிப்பையும் பெறலாம்; மற்ற ஆவணங்களையும், வங்கியின் அறிக்கைகளையும் பெறலாம்; இயக்குநரையோ அல்லது அதிகாரிகளையோ விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு.	ஸ்டேட் பாங்கிற்கும், அரசிற்கும் தணிக்கை அறிக்கை அனுப்பப்பட வேண்டும்.	வங்கியின் கணக்குகளை ஆராய எந்நேரத்திலும் அரசு தணிக்கையரை நியமிக்கலாம்.
6.	இந்தியத் தொழில் வள வங்கி (Industrial Development Bank of India).	(i) ரிசர்வ் வங்கி (ii) குறிப்பிடப்படவில்லை.	வழக்கமான தணிக்கையர்கள்	(i) ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்படுகிறது. (ii) ,, ,,	,, ,,	தணிக்கை அறிக்கை, தொழில் வள வங்கிக்கு அனுப்பப்படுகிறது; வங்கி அதை ரிசர்வ் வங்கிக்கு அனுப்பி 'அரசிதழில்' வெளியிடச் செய்கிறது.	எந்நேரத்திலும் வங்கியின் கணக்குகள் தலைமைத் தணிக்கையர் மூலம் அரசால் ஆராயப்படும்; அதற்கான செலவுகளை வங்கி ஏற்க வேண்டும்.

7.	இந்திய நிதிக் கூட்டுரு (Industrial Finance Corporation)	(i) ஒரு தணிக்கையர் தொழில் வள வங்கியாலும், மற்றொரு தணிக்கையர், மற்றப் பங்குதாரர்களாலும் நியமிக்கப்படுவர். (ii) இரண்டிற்குக் குறையாமல்.	வழக்கமான தணிக்கையர்கள்.	(i) குறிப்பிடப்படவில்லை. (ii) அரசால் நிர்ணயிக்கப்படும்.	கணக்குஏடுகளையும், இருப்பு நிலைக் குறிப்பையும் பெறலாம்; மற்ற ஆவணங்களையும் பெறலாம்; இயக்குநரையோ அல்லது அதிகாரிகளையோ விசாரணை செய்யும் அதிகாரம் உண்டு.	பங்குதாரர்களுக்கும், அரசிற்கும் தணிக்கை அறிக்கைகள் அனுப்பப்படுகின்றன; அரசு அவ்வறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறது.	தொழில்வள வங்கியின் ஆலோசனையுடன், தேவைப்படும் ஆணைகளை, அரசு தணிக்கையர்களுக்கு அனுப்ப அதிகாரம் உண்டு.
8.	மத்திய மற்றும் மாநிலப் பண்டக சாலைக் கூட்டுருக்கள் (Central & State ware-housing Corpora-tions).	(i) தலைமைத் தணிக்கையரின் ஆலோசனையுடன் குறிப்பிட்ட அரசு நியமிக்கிறது. (ii) ஒருவர்	,, ,,	(i) குறிப்பிடப்படவில்லை. (ii) ,, ,,	இலாப-நட்டக் கணக்கு, இருப்பு நிலைக் குறிப்பு, மற்றக் கணக்கு ஏடுகள் முதலியவைகளைப் பெறவும், அதிகாரிகள் மூலமாகத் தேவைப்படும் விவரங்களைப்	தணிக்கை அறிக்கைகள் பங்குதாரர்களுக்கும், தலைமைத் தணிக்கையருக்கும், குறிப்பிட்ட அரசுக்கும் அனுப்பப்படுகின்றன; மாநில அரசுகள், தணிக்கை அறிக்கையை, மாநிலச் சட்டசபை	(i) தலைமைத் தணிக்கையரின் ஆலோசனையுடன், அரசு, தேவைப்படும் ஆணைகளைத் தணிக்கையருக்கு அனுப்பலாம். (ii) தலைமைத் தணிக்கையர்,

அட்டவணை (தொடர்ச்சி)

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
					பெறவும் அதிகாரம் உண்டு.	யிலும், மத்திய அரசு, நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கின்றன.	தன்னுடைய சார்பாகவோ அல்லது குறிப்பிட்ட அரசின் வேண்டுகோளின்படியோ கூட்டுருக்களின் கணக்குகளைத் தணிக்கை செய்யலாம்.
9.	ஆயுள் காப்பீட்டுகூட்டுரு (Life Insurance Corporation).	(i) அரசின் அனுமதியுடன் கூட்டுருவே நியமிக்கலாம். (ii) குறிப்பிடப்பட வில்லை.	வழக்கமான தணிக்கையர்கள்.	(i) குறிப்பிடப்படவில்லை. (ii) அரசால் நிர்ணயிக்கப்படுகிறது.	கூட்டுருவின் அறிக்கைகள், கணக்குகள் மற்றும் ஆவணங்களைப் பெறும் அதிகாரம் உண்டு.	தணிக்கை அறிக்கை காப்பீட்டுக் கூட்டுருவிற்கும், அரசிற்கும் அனுப்பப் படும்; அரசு அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.	குறிப்பிடப்பட வில்லை.
10.	இந்திய உணவுக் கூட்டுரு (Food Corporation	(i) தலைமைத் தணிக்கையரின் ஆலோசனையுடன், அரசு இசை	வழக்கமான தணிக்கையர்கள்.	(i) ஓராண்டுக் காலம். (ii) குறிப்பிடப் படவில்லை.	பண்டக சாலைக் கூட்டுருவில் உள்ளது போலவே.	தணிக்கை அறிக்கை காப்பீட்டுக் கூட்டுருவிற்கும், அரசிற்கும் அனுப்பப்படும்;	குறிப்பிடப்பட வில்லை.

	of India).	வளித்த தணிக்கையர்களின் பட்டியலிலிருந்து, உணவுக் கூட்டுருவே நியமிக்கிறது. (ii) குறிப்பிடப்படவில்லை.				அரசு அதை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும்.	
11.	மாநில நிதிக் கூட்டுருக்கள் (State Financial Corporations).	(i) தலைமைத் தணிக்கையரின் ஆலோசனையுடன் மாநில அரசு ஒருவரையும், மற்றப் பங்குதாரர்கள் ஒருவரையும் நியமனம் செய்கின்றனர். (ii) இருவருக்குக் குறையாமல்.	,, ,,	(i) குறிப்பிடப்படவில்லை. (ii) மாநில அரசால் நிர்ணயிக்கப்படுகிறது.	ரிசர்வ் வங்கியில் உள்ளது போலவே.	தணிக்கை அறிக்கை, பங்குதாரர்களுக்கும், பின் மாநில அரசுக்கும் அனுப்பப்படுகிறது; மாநில அரசு அவ்வறிக்கையை, மாநிலச் சட்ட சபையில் சமர்ப்பிக்கிறது.	பண்டகசாலைகள் கூட்டுருக்களில் உள்ளபடி.

(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
12.	சாலைப் போக்குவரத்துக் கூட்டுருக்கள் (Road Transport Corporations).	சட்டம்	தலைமைத் தணிக்கையர் அல்லது அவரின் அதிகாரம் பெற்றவர்.	வான்வழிக் கூட்டுருக்களில் உள்ளது போல்.	வான்வழிக் கூட்டுருக்களில் உள்ளது போல்.	தணிக்கை அறிக்கை மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு, மாநில அரசால் சட்ட சபையில் சமர்ப்பிக்கப்படுகிறது.	குறிப்பிடப்படவில்லை.
13.	மாநில மின் சக்திக் கூட்டுருக்கள் (State Electricity Boards).	சட்டம்	தலைமைத் தணிக்கையர் அல்லது அவரால் நியமிக்கப்படும் தணிக்கையர்.	,, ,,	,, ,,	தணிக்கை அறிக்கை மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு, அரசின் கருத்துகள் பெறப்பட்டு, பின் பற்றப்படுகிறது; மாநில அரசு, சட்ட மன்றத்தில் தணிக்கை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்.	,, ,,

14.	தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுரு (Damodar Valley Corporation).	சட்டம்	தலைமைத் தணிக்கையரால் நியமிக்கப்படும் அதிகாரி.	(i) குறிப்பிடப்படவில்லை. (ii) ,, ,,	குறிப்பிடப்பட வில்லை.	குறிப்பிடப்பட வில்லை.	குறிப்பிடப்பட வில்லை.
15.	முக்கியத் துறைமுகப் பொறுப்பாயக் குழுக்கள் (Major Port Trust Boards)	சட்டம்	தலைமைத் தணிக்கையர் அல்லது அவரால் நியமிக்கப்படும் அதிகாரி.	வான்வழிக் கூட்டுருக்களில் உள்ளது போல்.	வான்வழிக் கூட்டுருக்களில் உள்ளது போல்.	தணிக்கை அறிக்கை, பொறுப்பாயக் குழுக்களுக்கும், பின் மைய அரசுக்கும் அனுப்பப்படுகிறது; அரசு அவ்வறிக்கையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கிறது.	

தணிக்கை அறிக்கையின் வடிவமைப்பு (Form of Audit Certificate)

பொதுக் கூட்டுருக்களின் தணிக்கை அறிக்கையின் கருநிலைக் கருத்துகள், நிறுமங்களின் தணிக்கை அறிக்கையிலுள்ளதைப் போன்றே அமைந்துள்ளன. இரு வான்வழிக் கூட்டுருக்களுக்கும், எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுருவிற்கும் தலைமைத் தணிக்கையரே தணிக்கையராகப் பணிபுரிவதால், குறிப்பிட்ட தணிக்கை அறிக்கையின் வடிவமைப்பு ஒன்றும் பின்பற்றப் படுவதில்லை.

வழக்கமான தணிக்கையரால் பொதுக் கூட்டுருவின் கணக்கு கள் தணிக்கை செய்யப்படும்போது, தணிக்கை அறிக்கை நிறுமச் சட்டத்தின் விதிமுறைகளுக்கேற்ப அமைந்திருக்கவேண்டும். ரிசர்வ் வங்கி, இந்திய நிதிக் கூட்டுரு ஆகிய இரு கூட்டுருக் களின் தணிக்கை அறிக்கைகளிலும், இருப்புநிலைக் குறிப்பின் படி தொழிலமைப்புகளின் நிலைமை மட்டும்தான் குறிப்பிடப்படு கின்றது.

3. **துறைவழி நிருவாக முறையில் அமைந்த தொழிலமைப்புகளின் தணிக்கை (Audit of Departmental Enterprises)**

துறைவழி நிருவாக முறையில் அமைக்கப்பட்ட நிறுவனங்கள் சில குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்வதையும், பொருள்களை வழங்குவதையும் தம் நோக்கமாகக் கொண்டு செயற்படுகின்றன. அவைகளின் பணிகள், அரசின் மற்றத் துறைகளின் பணிகளைப் போல் இருக்கவேண்டுமென்பது அவசியமல்ல. வாணிகஞ் சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட நிதித்திட்டத்தின்படி அவை செயற்படுகின்றன.

தலைமைத் தணிக்கையரின் ஆலோசனையுடன் அரசு, ஒரு குறிப்பிட்ட துறைவழி நிறுவனத்தை, வாணிகஞ் சார்ந்தது என்றோ அல்லது வாணிகஞ் சார்ந்த துறையல்ல என்றோ தீர்மானிக்கலாம். எடுத்துக்காட்டாக, 1964-'65ஆம் ஆண்டி லிருந்து, பெங்களூரில் உள்ள தேசியப் பால்வள ஆராய்ச்சி நிறுவனம் (National Dairy Research Institute, Bangalore), கர்னலில் செயல்புரியும், தேசியப் பால் வள ஆராய்ச்சி நிறுவனம் (National Dairy Research Institute at Karnal) ஆகிய நிறுவனங்கள் வாணிகஞ் சார்ந்த கொள்கைகளை யுடைய நிறுவனங்களல்ல என அரசால் அறிவிக்கப்பட்டன. எனவே, அவ் வகை நிறுவனங்கள், வாணிகத் தணிக்கை இயக்கு நரின் (Director of Commercial Audit) கட்டுப்பாட்டிற்குள் இயங்கமாட்டா.

வாணிகஞ் சார்ந்த கொள்கைகளுடன் செயற்படும் துறைவழி நிறுவனங்களின் தணிக்கை முறை, மற்றத் தனியார் நிறுவனங்களின் தணிக்கை முறையைப் பின்பற்றியே அமைந்துள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 149ஆம் பிரிவின்படி, மத்திய அரசு அல்லது மாநில அரசுகளின் துறைவழி அமைப்பு முறையில் இயங்கும் நிறுவனங்களைத் தணிக்கைசெய்ய, தலைமைத் தணிக்கை அதிகாரிக்கு அதிகாரம் உண்டு.

துறைவழி நிருவாக அமைப்பு முறையில் செயற்படும் நிறுவனங்களைத் தணிக்கை செய்வதன் முக்கிய நோக்கம், அரசுத் துறைகளின் செயல் விளைவுகளையும், திறமையையும், மற்ற அரசுத் துறையைச் சாராத நிறுவனங்களுடன் ஒப்பிடுதலும், மூலதனச் செலவுகள், நடைமுறைச் செலவுகள், தேய்மான வீதங்கள், வராக் கடன்காப்புகள் போன்றவை விதிமுறைகளுடன் மேற்கொள்ளப் பட்டுள்ளனவா என ஆராய்வதுமாகும்.

முடிவுரையாக, பொறுப்புடைமைக் கொள்கையைப் பற்றி ஒரு சில கருத்துகளை ஆராய்வோம். பொறுப்புடைமைக் கொள்கை செவ்வனே நிறைவேற்றப்பட, பின்வரும் கருத்துகள் கவனிக்கப்படவேண்டும்.

(1) ஒவ்வோர் ஆண்டும், பொதுத்துறை நிறுவனங்கள் நாடாளுமன்றத்தில் கணக்குகளையும், அறிக்கைகளையும் சமர்ப்பிக்கவேண்டும் என்று சட்டத்தின்மூலம் வகை செய்யப்படவேண்டும். நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள் மிகவும் முக்கியமானவையாகும்; எளிமையாகவும், நேரடியாகக் கருத்துகளைத் தெரிவிப்பவையாகவும் அறிக்கைகள் அமையவேண்டும்.

(2) ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும், குறிப்பிட்ட கால இடைவெளிகளுக்குப் பின் தொழிலாளர்கள், தொழில் வல்லுநர்கள், ஆராய்ச்சிப் பணியாளர்கள் (Research Workers) போன்றவர்களுக்கும், பொதுமக்களுக்கும் தேவைப்படும் விவரங்களை விரிவாக வெளியிடவேண்டும்.

(3) பொதுமக்களிடமிருந்து விவரங்கள் கேட்டு வரும் வாணிகக் கடிதங்களுக்குப் பொதுத்துறை நிறுவனங்கள் உடனுக்குடன் பதில் அளிக்கவேண்டும்.

(4) புகைப்படங்கள், திரைப்படங்கள் போன்றவைகளின் மூலமும், மற்ற விளம்பரச் சாதனங்கள் மூலமாகவும் பொதுத்துறை நிறுவனங்களின் கொள்கைகள் பரப்பப்படவேண்டும்.

(5) பொதுமக்கள் மற்றும் நுகர்வோர் அனைவரும் ஒன்று கூடி, குழுக்களை அமைத்து, பொதுத்துறையின் நிருவாகம், மேலாண்மை, பொருள்களின் தரம், விலைகள் போன்றவற்றைத் திறனாய்வு செய்யவேண்டும்; எடுத்துக்காட்டாக, வாணிகச் சங்கங்கள், நுகர்வோர் சங்கங்கள் போன்றவை அறிவுரைக் குழுக்களாகச் செயற்பட்டு பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செயல்விளைவுகளை ஆராயலாம்.

(6) தணிக்கை முறை மேம்படுத்தப்பட வேண்டும். தணிக்கை முறையைத் தீர்மானிப்பதில் கருத்துவேறுபாடுகள் பலவுள்ளன. பொதுத்துறை நிறுவனங்களின் பொறுப்புடைமைக் கொள்கையை வலியுறுத்தும் வகையில் தணிக்கை முறை அமைய வேண்டும். (பல்வேறு வகையான தணிக்கை விதிமுறைகளைப் பற்றி விரிவாகக் கண்டுள்ளோம்).

(7) அமைச்சகத்தின் நடைமுறைகளில் ஒருங்கிணைப்பு தேவை. 1960ஆம் ஆண்டில், மதிப்பீட்டுக் குழு நாடாளுமன்றத்தில் இக் கருத்துடன் தொடர்புற்ற பல பரிந்துரைகளைச் சமர்ப்பித்தது. முக்கியமாக, 'ஒருங்கிணைப்புக் குழு' (Co-ordinating Committee) வொன்று அமைக்கப்படவேண்டுமென மதிப்பீட்டுக் குழு வலியுறுத்தியது.

(8) பொதுத்துறை நிறுவனமொன்றின் செயல்முறைகளையும், விளைவுகளையும் மற்ற நிறுவனங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து, குறைகளை அல்லது நிறைகளை அறிந்து தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்; அதுபோன்றே நமது நாட்டின் பொதுத்துறை நிறுவனங்களின் பணிகளை, மற்ற நாடுகளின் பொதுத்துறையுடன் ஒப்பிடவேண்டும். இதனால், பொதுத் துறையின் குறைபாடுகள் நீக்கப்பட்டு, நிருவாகமும் திறமையும் மேம்படுத்தப்பட வாய்ப்பு ஏற்படும்.

நிருவாகச் சீரமைப்புக் குழு (ARC), பொதுத்துறையின் பொறுப்புடைமைக் கொள்கையை விரிவாக ஆராய்ந்து பல பரிந்துரைகளை அளித்துள்ளது. முக்கியமாக நாடாளுமன்றம் பொதுத்துறையின் நடவடிக்கைகளின் மீது விவாதங்களையும் திறனாய்வையும் மேற்கொள்ள குறிப்பிட்ட சில நாட்களை ஒதுக்க வேண்டும் என வலியுறுத்தியது. மேலும், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின்மீது நாடாளுமன்றக் குழுவொன்று ஏற்படுத்தப்பட்டு, அவைகளின் நடவடிக்கைகள் விரிவான முறையில் ஆராயப்படவேண்டுமெனவும் கருத்தைத் தெரிவித்தது. இக் நாடாளு

மன்றக் குழு, பொதுத்துறையின் மீதான அறிக்கைகளை நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கும்.

அடுத்ததாக, பொதுத்துறை நிறுவனங்கள் நாடாளுமன்றத்தில் சமர்பிக்கும் ஆண்டறிக்கை மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. நாடாளுமன்றத்தின் உறுப்பினர்கள் இவ்வாண்டறிக்கைகளின் மூலமாகத்தான் பொதுத்துறையின் நடவடிக்கைகளை விரிவான முறையில் அறிந்து ஆராய முடியும். எனவே, ஆண்டறிக்கைகள் எளிமையாகவும், அனைத்து விவரங்களையும் கொண்டு விரிவுடையதாகவும் (Comprehensive) அமைய வேண்டும். ஆனால் நடைமுறையில் ஒரு சில பொதுத்துறை நிறுவனங்களின் ஆண்டறிக்கைகள்தான் இவ்வாறு அமைகின்றன. மற்றப் பொதுத்துறை நிறுவனங்களின் ஆண்டறிக்கைகளில் போதிய விவரங்களோ அல்லது எதிர்காலத் திட்டங்களோ குறிப்பிடப்படுவதில்லை. எனவே, 'பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் புள்ளி விவரச் சேகரிப்புப் பணியகம்' (The Bureau of Public Enterprises) அமைச்சகத்துடனும், பொதுத்துறை நிறுவனங்களுடனும் கலந்தாலோசித்து, 'முன்மாதிரியானவொரு ஆண்டறிக்கை'யைத் (Model form for the Annual Report) தயாரித்து அளிக்கவேண்டுமென நிருவாக மறுசீரமைப்புக் குழு வலியுறுத்தியது. ஒவ்வோர் ஆண்டறிக்கையும் பின்வரும் விவரங்களைக் கொண்டிருக்கவேண்டுமென இக் குழு கருதியது.

(1) பொருள்களின் உற்பத்தி அளவு, தரம் முதலியவைகளைப் பற்றியும், அடக்கச் செலவுகளைப் பற்றியும் விரிவான விவரங்கள்.

(2) உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட்ட ஆக்கக் கூறுகளின் (Ingredients) விவரங்கள்.

(3) நிறுவனத்தின் ஒரு துறைக்கும் மற்றொரு துறைக்கும் உள்ள ஒப்பீடு; ஒரு பொதுத்துறை நிறுவனம், மற்றொரு நிறுவனத்துடன் ஒப்பிடப்படுதல்; நமது நாட்டுப் பொதுத்துறை நிறுவனங்களின் செயல்முறைகள், மற்ற நாட்டுப் பொதுத் துறையின் நடவடிக்கைகளிலிருந்து எவ்வாறு மாறுபடுகின்றன போன்ற விவரங்கள்.

(4) எதிர்காலத் திட்டங்களைப் பற்றிய ஊக முடிவுகள்.

(5) நடைபெற்றுள்ள செயல்விளைவுகளின் சுருக்கம் போன்ற விவரங்கள் ஆண்டறிக்கையில் இடம் பெறவேண்டும்.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் புள்ளி விவரச் சேகரப் பணியகம் (The Bureau of Public Enterprises)

நமது நாட்டில் இப் பணியகம், 1965ஆம் ஆண்டில், ஏப்ரல் மாதத்தில் அமைக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்களாவன:

(i) பொதுத்துறையின் புள்ளி விவரங்களுக்கு மையப் பணியகமாகச் செயற்படுதல்.

(ii) பொதுத்துறையின் மேலாண்மைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு அளித்தல்.

(iii) மூலதனச் செலவுகளையும், அடக்கச் செலவுகளையும் குறைக்க, மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகளை அறிவுறுதல்.

(iv) பொதுத்துறையின் உற்பத்தித் திறனையும், இலாபத்தையும் அதிகரிக்கச்செய்ய வழிமுறைகளை உருவாக்குதல்.

(v) குறிப்பிட்ட கால இடைவெளிகளில் பொதுத்துறை நிறுவனங்களில் நடவடிக்கைகளை ஆராய்தல்.

(vi) பொதுத்துறையைப் பற்றிய அறிக்கைகளை, நாடாளு மன்றத்திலும் அரசுக்கும் சமர்ப்பித்தல் போன்றவைகளாகும்.

இப் பணியகம் அமைக்கப்பட்ட பிறகும்கூட, வேறு பல முகமை நிறுவனங்களும் (Agencies) பொதுத்துறையின் பல்வேறு வகையான செயல்முறைகளைக் கண்காணித்து வந்தன. எடுத்துக்காட்டாக, திட்டக் குழுவின் மேலாண்மைப் பிரிவு (Management Division of Planning Commission) பொதுத்துறை நிறுவனங்களின் திட்டங்கள் உருவாக்கப்படுவதையும், திட்டங்கள் மேற்கொள்ளப் படுவதையும் கண்காணித்தது ; 'தொழில் முன்னேற்றம் மற்றும் நிறும நடவடிக்கைகள் அமைச்சகத்தின், திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவு'(The Project Co-ordination Division of the Ministry of Industrial Development and Company Affairs) பொதுத்துறை நிறுவனங்களின் ஒருங்கிணைப்புப் பிரச்சினைகளைக் கவனித்துவந்தது ; இதுபோன்று பல முகமைப் பிரிவுகள் பொதுத்துறையின் நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்தன.

இவ்வாறு, பல்வேறு முகமைப் பிரிவுகள் இயங்குவது தவிர்க்கப்பட்டு, முக்கியமான மைய முகமைப் பணியகமாக, பொதுத்துறைப் புள்ளி விவரச் சேகரிப்புப் பணியகம் செயல்

புரிய அனுமதிக்கப்படவேண்டுமென நிருவாக மறுசீரமைப்புக் குழு வலியுறுத்தியது.

ஆகவே, பின்வரும் பரிந்துரைகளை நிருவாகமறு சீரமைப்பு குழு அறிவித்தது :

(1) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் புள்ளி விவரச் சேகரப் பணியகத்தின் (The Bureau of Public Enterprises) பொறுப்புகளுக்கேற்றவாறு அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும்; செயலாளர் (Secretary) பணிநிலையில் உள்ள ஒரு அதிகாரி, இப் பணியகத்தின் முழுநேரத் தலைவராக நியமிக்கப்படவேண்டும்.

(2) பணியகத்தின் தலைவர், பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகள் அனைத்தையும் விரிவான முறையில் அறிந்து பணி புரியவேண்டும்.

(3) திட்டக் குழுவின் மேலாண்மைப் பிரிவு, தொழில் முன்னேற்றம் மற்றும் நடவடிக்கைகள் அமைச்சகத்தின் ஒருங்கிணைப்புப் பிரிவு போன்ற முகமைப் பிரிவுகள் புரிந்துவரும் பணிகள் யாவும் புள்ளி விவரச் சேகரப் பணியகத்திற்கு மாற்றப்படவேண்டும்.

(4) புள்ளி விவரச் சேகரப் பணியகம் பின்வரும் பணிகளைப் புரியவேண்டும்.

(i) பொதுத்துறை நிறுவனங்களின் இயக்குநர்களை நியமிக்கும் பணியில், நிருவாக அமைச்சகத்திற்கு உதவி புரிவதற்காகத் தகுதிவாய்ந்த நபர்களின் பட்டியலைத் தயார்செய்து பராமரித்து வருதல்.

(ii) குறிப்பிட்ட கால இடைவெளிகளில், பொதுத் துறையைப் பற்றிய அறிக்கைகளைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

(iii) முக்கியமான பொருள்களைப் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரித்து வைக்கும் வங்கியாகவும், தீர்வகமாகவும் செயற்படுதல்.

(iv) தொழிலாளர்களின் நிதிநிலை பற்றிய விவரங்களையும் மற்ற நிபந்தனைகளையும் தொகுத்து (Compile) அளித்தல்

(v) பொதுத்துறையின் நடவடிக்கைகளை நாடாளுமன்றக் குழுக்கள் ஆராயும்போது, ஒருங்கிணைப்பு உதவிகளை அளித்தல்.

(vi) நிருவாக மறுசீரமைப்புத் துறையுடன், பணி ஆராய்ச்சி, செய்முறை ஆராய்ச்சி முதலிய நடவடிக்கைகளில் பிணைப்பை ஏற்படுத்துதல்.

(vii) குறிப்பிட்ட அமைச்சகத்திற்கும், நிதி அமைச்சகத்திற்கும் பொதுத்துறையின் நடவடிக்கைகளையும், செயல் விளைவுகளையும் கணிக்கும் பணியில் உதவி புரிதல்.

(viii) பொதுத்துறை நிறுவனங்களின் உயர்நிலை அதிகாரிகளின் குடியிருப்புகள், நகரக் குடியிருப்புகள் (Townships), அலுவலகக் கட்டிடங்கள் ஆகியவைகளின் பராமரிப்புச் செலவுகளைக் கட்டுப்படுத்தும் பணியில் அமைச்சகங்களுக்கு உறுதுணையாயிருத்தல்.

(ix) தேவைப்படும் நேரங்களில் பொதுத்துறை நிறுவனங்களுக்கு அறிவுரைகளை வழங்குதல்போன்ற பணிகள் மிக முக்கியமானவையாகும்.

முடிவாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தன்னாட்சியுரிமையும், பொறுப்புடைமைக் கொள்கையும் நாடாளுமன்றத்தினால் கட்டுப்படுத்தப்படவேண்டுமெனவும், அவைகளின் செயல்முறைகள் மற்றும் இலாப - இழப்புகள் போன்றவைகள் விரிவான முறையில் நாடாளுமனறத்தில் திறனாய்வு செய்யப்படவேண்டுமெனவும் கூறலாம். இதன்மூலம், பொதுத்துறை நிறுவனங்களில் திறமையான நிருவாக அமைப்பையும், மேம்பட்ட மேலாண்மை நடவடிக்கைகளையும், அதிக அளவிலான இலாபத்தையும், தொழிலின் விரிவான வளர்ச்சியையும் ஏற்படுத்தமுடியுமென உறுதியாகக் கூறலாம்.

8. பொதுத்துறைத் தொழிலமைப்பு களில் ஆளினர் மேலாண்மை

(Personnel Management in Public Enterprises)

பல்வேறு வகையான பணிகளை மேற்கொள்ளும் எண்ணிறைந்த தொழிலாளர்களுக்கு, வேலைவாய்ப்புகளை வழங்கும் நிலையங்களாகப் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் திகழ்கின்றன. இவ் வேலைவாய்ப்புகள் நாடு முழுவதும் பரவலாக அளிக்கப்படுகின்றன. இவ்வாறு எண்ணிறைந்த தொழிலாளர்களுக்குப் பணிகளை வழங்குவதன் மூலமாக, பொதுத்துறை நிறுவனங்கள் இரண்டு விதமான பங்குகளை வகிக்கின்றன. முதலாவதாக, பணியாளர்களின் திறமை அதிகபட்ச அளவில் இருக்குமாறு செய்தலும், இரண்டாவதாக, 'இந்திய அரசியல் சட்டத்'தில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பணியாளர்களுக்கு வழங்குதலுமாகும். சுருங்கக்கூறினல், அதிகபட்சத் திறமையை அடையும் வகையில் தொழிலாளர்களைப் பணியிலமர்த்துவதில் ஒரு முன்மாதிரி 'பணி வழங்குபவராக' பொதுத்துறைத் தொழிலமைப்புகள் விளங்கவேண்டும். அதிகபட்சத் திறமையை அடைவதற்கு, தகுதியான பணியாளர்களைப் பொருத்தமான பணிகளில் அமர்த்துதல், அவர்களுக்குச் சரியான தொழிற்பயிற்சி அளித்தல், அவர்களிடையே ஒழுங்குமுறையை வளர்த்தல் போன்ற படிகள் இன்றியமையாதவையாகும். மேலும், நியாயமான, மனிதாபிமான பணிநிலைகளை ஏற்படுத்தவும் பொதுத்துறை நிறுவனங்கள் முயலவேண்டும்.

தொழிலாளர்களைப் பணியிலமர்த்தல், அவர்களுக்குப் பதவி உயர்வளித்தல், வேலையிலிருந்து விலக்கல், அவர்களின் ஊதியங்களை நிர்ணயித்தல் போன்ற நடவடிக்கைகளில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மேலாண்மைக்கு முழுச்சுதந்திரம் தேவை என்ற கருத்து பலரிடையே நிலவுகிறது. பல நாடுகளில், இது போன்ற நடவடிக்கைகளில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் விரிவான தன்னுட்சியுரிமையைப் பெற்று விளங்குகின்றன.

ஆனல், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பொதுவான, ஒரு நிலைப்படுத்தப்பட்ட பணி நிபந்தனைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்ற கருத்தும் வலுப்பெற்றுள்ளது.

(1) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பணியாளர்கள் தாங்கள் சமுதாயத்தால் பெருமையுடன் நினைக்கப்படவேண்டும் என எண்ணுதல், (2) பல பொதுத்துறைத் தொழிலமைப்புகளிடையே, பணி நிபந்தனைகளில் பெருமளவு வேறுபாடுகள் இருப்பது பொருத்தமானதும் நியாயமானதும் அல்ல என்று கருதுதல், (3) திறமையுள்ள பணியாளர்களைப் பெறுவதில் பொதுத்துறை நிறுவனங்களுக்கிடையே ஏற்படும் போட்டியைத் தவிர்த்தல், (4) அதிக அளவு சுதந்திரம் அளிக்கப்பட்டால் உறவினருக்கும், வேண்டியவர்களுக்கும் தனிச் சலுகைகள் அளிக்கப்படலாம் அல்லது மற்றவர்களிடம் கைக்கூலி பெறப் படலாம் என்ற கருத்து நிலவுதல் போன்ற காரணங்களால், பொதுத்துறை நிறுவனங்களின் பணி வாய்ப்புகள், சிறந்த முறையில் கண்காணிக்கப்பட்டு கட்டுப்படுத்தப்படவேண்டுமெனக் கருதப்படுகிறது. எனவே, பணிவாய்ப்புகளிலும், பணியாளர்களைப் பணிகளில் அமர்த்தும் அதிகாரங்களிலும் பொதுத்துறை நிறுவனங்கள் கட்டுப்பாட்டுடன்கூடிய தன்னாட்சியுரிமையைப் பெறவேண்டும்.

மேற்கண்ட கருத்தைத் திறமையுடன் செயற்படுத்த பொதுத் துறைத் தொழிலமைப்புகளுக்கென, தனியானதோர் 'ஆளினர் குழு' (Personnel Commission) அமைக்கப்படவேண்டும். இக் குழுவில் இடம் பெறும் உறுப்பினர்கள், உற்பத்தித் தொழில், வாணிகம் போன்றவைகளில் சிறந்த அனுபவம் பெற்றவர்களாய் இருத்தல்வேண்டும். ஒவ்வொரு பொதுத்துறைத் தொழிலமைப்பும், தனக்குரிய ஆளினர் நிபந்தனைகளை இக் குழுவிடம் சமர்ப்பித்து, குழுவின் ஒப்புதலைப் பெறவேண்டும். இதன் மூலமாக, பொதுத்துறை நிறுவனங்களில் சிறந்த ஆளினர் மேலாண்மையை ஏற்படுத்தமுடியும்.

உள்ளமைப்பு (Internal Organisation)

ஒரு தொழிலமைப்பின் செயல்திறன் பெருமளவில், உயர் மட்ட அமைப்பைப் பொறுத்து அமையும். பொதுவாக, தொழிலமைப்புகளின் முதன்மையான அதிகாரங்கள் இயக்குநரவையிடம் அடங்கியுள்ளன. இயக்குநரவைக்கும், பொது மேலாளருக்குமிடையே பல்வேறு வகையான உறவுகள் ஏற்பட வாய்ப்புகளுண்டு. சில தொழிலமைப்புகளில் பொது மேலாளர் இயக்கு

நரவையின் உறுப்பினர்களுள் ஒருவராக இருப்பதில்லை. இருந்த போதிலும், தேவையான சந்தர்ப்பங்களில் இயக்குநரவைக் கூட்டங்களில் கலந்து கொள்வார். ஆனால் இவ்வேற்பாடு அவ்வளவு திருப்திகரமானதல்ல. தொழிலமைப்பின் அதிகாரி களுக்கெல்லாம் தலைவராக விளங்கும் பொது மேலாளர் அவசியம் இயக்குநரவையில் இடம் பெறவேண்டும். முடிந்தால் இயக்கு நரவையின் தலைவராவும் நியமிக்கப்படவேண்டும். இதன் மூல மாக, தேவையற்ற கருத்து வேறுபாடுகளையும், கால தாமதங் களையும் தவிர்த்துவிட முடியும். பொது மேலாளரின் பெருமையும் அதிகாரமும் ஒவ்வொரு வழிமுறையிலும் அதிகரிக்கப்படவேண் டும். முக்கியமாக, தொழிலமைப்பின் அன்றாட அலுவல்களில் இயக்குநரவை தலையிடாமல், பொதுமேலாளருக்குத் தேவையான முடிவுகளை மேற்கொள்ள முழுச்சுதந்திரம் அளிக்கப்படவேண்டும். அவ்வாறு அமையாமல் மாறான சூழ்நிலைகள் ஏற்பட்டால் தேவையற்ற பாதிப்பான விளைவுகள் ஏற்பட ஏதுவாகும்.

உயர்மட்ட அமைப்பு முறை, அனைத்துப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கும் பொதுவானதாக அமையலாம். ஆனால், இயக்குநரவைக்குக் கீழ் உள்ள அமைப்புகள், ஒவ்வொரு தொழி லமைப்பிற்கேற்றவாறு அமைக்கப்படவேண்டும். தொழிலமைப் பொன்றின் நோக்கங்கள், அதன் அளவு, உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தன்மை, தொழிலமைப்பின் இடவமைப்பு, சந்தை களின் அமைப்பு, ஆளினரின் திறமை, மற்றவகைத் தொழிலமைப் புகளுடன் இனமொத்தத் தொடர்பு, பொதுக் கட்டுப்பாட்டின் வீதம் ஆகியவைகளைச் சார்ந்து உள்ளமைப்பு முறை வேறுபட லாம். சிலவகைத் தொழிலமைப்புகளின் அதிகாரங்கள் மைய மட்டத்தில் குவிக்கப்பட்டும், மற்றவகைத் தொழிலமைப்பு களில் பன்முகப்படுத்தப்பட்டும் (Decentralised) அமைந்துள்ளன. எனவே, அனைத்துப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு மென, பொதுவானதோர் அமைப்பு முறையை ஏற்படுத்துவ தென்பது இயலாததொரு செயலாகும். இருந்தபோதிலும், அமைப்பு முறையை ஏற்படுத்தும்போது சில பொதுவான கொள் கைகளைக் கருத்திற்கொள்ளலாம். எல். உர்விக் (L. Urwick) என்பவர் பின்வருபவைகளைப் பொதுவான கொள்கைகளாகக் கொள்ளலாம் எனக் கருதுகின்றார்:

பொதுவானதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள்

(i) ஆட்சிமுறைப் பணிகளையும், செயல்முறைப் பணிகளை யும் எவ்விதக் குழப்பமுமின்றி, தனித்தனியே பிரித்தல்.

(ii) ஒவ்வொரு மட்டத்திலும் ஆற்றலும், ஊக்கமுமுடைய ஆட்சிமுறை மேலாண்மையை அமைத்தல்.

(iii) செயல்முறைப் பொறுப்புகளையும், பணிகளையும் போதுமான அளவில் பன்முகப்படுத்தல்.

(iv) தனிப் பொறுப்புகளை அறியச் செய்வதற்கும், தலைமைப் பணியை ஏற்பதற்கும், தேவையான வழிமுறைகளை ஒவ்வொரு மட்டத்திலும் ஏற்படுத்துதல்.

அமைப்பு முறையில் மிகவும் சிக்கலான பிரச்சினைகள் என்று கருதப்படுபவை, ஒருமுகப்படுத்துதலும் (Co - ordination), அதிகாரங்கள் ஒப்படைப்புமாகும் (Delegation). தொழிலமைப்பு அளவில் அதிகரிக்க அதிகரிக்க, இப் பிரச்சினைகள் அதிக அளவில் ஏற்பட்டு ஆட்சிமுறை நிருவாகத்தைக் கடினமானதாகவும், சிக்கல்கள் பொருந்தியதாகவும் மாற்றிவிடும்.

செயல்முறைகளின் ஒவ்வொரு கட்டத்திலும், திறமையையும் கற்பனையுமிக்க வகையில் மேலாண்மைக் கருவிகள் உபயோகிக்கப்பட்டு, பல்வேறு பிரிவுகளும் ஒருமுகப்படுத்தப்படவேண்டும். அதுபோன்றே, பல்வேறு வகைப்பட்ட குழுக்களிடையேயும் ஒருமுகப்படுத்தப்பட்ட நிலைமை ஏற்படவேண்டும். பேரளவுத் தொழிலமைப்புகளில் திட்டமிடுதல், வரவு - செலவுத் திட்டம், நிதித் திட்டம், அமைப்பு முறைகள் போன்றவைகளில், பணியாளர் குழுக்கள் தங்கள் கருத்துகளைத் தெரிவிப்பதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படவேண்டும். இதனால், உயர்மட்ட மேலாண்மை சிறந்த முடிவுகளை மேற்கொள்ளமுடியும்.

அடுத்ததாக, அமைப்பு முறையில் மிகவும் முக்கியமாகக் கருதப்படுவது 'அதிகார ஒப்படைப்பா'கும். போதுமான மற்றும் வரையறுக்கப்பட்ட 'அதிகார ஒப்படைப்புத் திட்டத்'தின் மூலமாகத்தான் உயர்மட்ட மேலாண்மை, சிறந்ததொழிற் கொள்கைகளையும், பொதுக்கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தமுடியும். பணியாளர்களிடம் போதுமான பொறுப்புகளுடன், தேவையான அதிகாரங்களும் ஒப்படைக்கப்பட்டால்தான், அவர்கள் திறமையுடன் செயலாற்ற முடியும். எனவே 'அதிகார ஒப்படைப்பு', பணியாளர்களின் திறமையை அதிகரிக்கச் செய்து அவர்களுக்குச் சிறந்த மேலாண்மைப் பயிற்சியை அளிக்கிறது. ஆனால், அதே நேரத்தில் போதிய கட்டுப்பாடும் இருக்கவேண்டுமெனக் கூறத் தேவையில்லை. பொறுப்புடைமைக் கொள்கையைப் பணியாளர்கள் பின்பற்றவேண்டும்.

செயல்முறை மற்றும் மேற்பார்வைப் பிரச்சினைகள்

தொழில் நடவடிக்கைகளில் முடிவுகளை மேற்கொள்வதும், அவைகளைக் கீழ்ப்பணியாளர்களுக்கு ஆணைகள் மூலமாக வழங்குதலுமே மேலாண்மைப் பணிகள் எனக் கருதப்படுகிறது. இவ்வாணைகள் வாய்வழி மூலமாகவோ அல்லது எழுத்து வடிவமாகவோ வழங்கப்படுகின்றன. கீழ்ப்பணியாளர்கள் இவ்வாறு வழங்கப்படும் ஆணைகளை எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்காமல் ஏற்றுக்கொள்ளவேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வகை மேலாண்மை, நிச்சயமாக செயல்முறைப் படுத்தப்படலாம் என்பது உண்மையே; ஆனால், எதிர்பார்க்கும் பலன்கள் ஏற்படாது. தலைமையேற்று நடத்தும் திறமையே ஒரு நல்ல மேலாண்மையின் உள்ளியல்பாகும். தலைமையேற்று நடத்துதல் என்றால், ஆணைகளை வழங்கும் பணியோடு முடிவடைந்து விடுவதில்லை; ஆனால், வழங்கப்படும் ஆணைகள் சரியானவையே என, கீழ்ப்பணியாளர்கள் ஏற்றுக்கொள்ளும் வகையில் அவர்களைத் திருப்திப்படுத்துவதும் மேலாளரின் பணியேயாகும். இதனால், பணியாளர்கள் அனைவரும் மனமுவந்து கீழ்ப்படிந்து பணிபுரிவர் என்பது உறுதி.

ஆணைகள் உயர்மட்ட மேலாண்மை அதிகாரிகளிடமிருந்து கீழ்மட்டப் பணியாளர்களுக்குச் செல்வதுபோன்றே, பணியாளர்களின் கருத்துகளும், திறனாய்வு விவரங்களும் மேல் நோக்கிச் செல்லவேண்டும். மனம் திறந்து தங்கள் கருத்துகளைத் தெரிவிக்கும் வகையில் பணியாளர்கள் அனைவரும் ஊக்கப்படுத்தப்படவேண்டும். ஏற்றுக்கொள்ள முடியாத ஆணைகளைப் பற்றிய கருத்துகளைத் தெரிவிப்பதற்குத் தேவையான வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டும். ஆனால், திறனாய்வுக் கருத்துகளை உயர்மட்ட அதிகாரிகளிடம் தெரிவிக்கக்கூடிய உரிமைகள் ஒழுங்குமுறையுடன் செயற்படுத்தப்படவேண்டும். எவ்வித முடிவுகளை மேற்கொள்ளலாம் எனக் கலந்துரையாடுவதில் எத்துணை அதிகமான சுதந்திரம் உள்ளதோ அந்த அளவிற்கு ஒழுங்குமுறையும் கடைப்பிடிக்கப்படவேண்டும்.

பின்தங்கிய நாடுகளிலுள்ள பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் பணிபுரியும் பணியாளர்கள், ஒரு முக்கியக் கருத்தை மனத்திற்கொள்ளுதல் அவசியமாகும். வழங்கப்பட்ட ஆணைகளை உடனடியாக மேற்கொண்டு செயல்படுவதே கீழ்ப்பணியாளர்களின் பணி என்ற தவறானதொரு கருத்து இந்நாடுகளில் நிலவுகிறது; மேலும், கீழ்ப்பணியாளர்களிடம், எவ்விதத் தொடக்க முயற்சியையோ அல்லது அவர்களிடமிருந்து சிறந்த கருத்து

களையோ எதிர்பார்ப்பதில்லை. இவ்வகை தவறான கருத்துகள் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செம்மையான நிருவாகத்திற்குகந்ததல்ல. கீழ்ப்பணியாளர்களின் பணிகளில் குற்றம் குறைகளைக் கண்டுபிடிப்பதை மட்டும் தங்கள் பணியாகக் கொள்ளாமல், அவர்களின் திறமையை மேம்பாடடையச் செய்வதையும் தங்கள் குறிக்கோளாக உயர்மட்ட அதிகாரிகள் கொள்ளவேண்டும். அனுபவத்தினால் தோன்றும் சிறந்த கருத்துகளை, கீழ்ப்பணியாளர்கள் தெரியப்படுத்தப் போதிய சுதந்திரம் அளிக்கப்பட்டால்தான் அவர்களின் திறமை மேம்பாடடையும். அவர்களுக்குத் தங்கள் பணிகளில் பற்றுதலும் ஊக்கமும் ஏற்படும். எனவே, உயர்மட்ட அதிகாரிகளுக்கும், கீழ்ப்பணியாளர்களுக்குமிடையே சிறந்த 'தொடர்பு முறை' அமையவேண்டுமென வலியுறுத்திக் கூறலாம்.

பணியாளர்களைப் பணியிலமர்த்தல்

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பணியாளர்களைப் பணியிலமர்த்துவதில் போதிய தன்னாட்சியுரிமையைப் பெற்றுள்ளன. இது தொடர்பாக மத்திய அரசு, 1961ஆம் ஆண்டில் ஒரு சுற்றறிக்கையும் அனுப்பியுள்ளது; ஆனால் அச் சுற்றறிக்கையில் கூறப்பட்ட வழிமுறைகள் கட்டாயப்படுத்தப்படவில்லை. எனவே, பல பொதுத்துறைத் தொழிலமைப்புகள் எவ்வித முறையான வழிகளையும் பின்பற்றவில்லை. 1964ஆம் ஆண்டில் 'மதிப்பீட்டுக் குழு' தன்னுடைய ஐம்பத்திரண்டாவது அறிக்கையில் பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள், தங்களுக்கெனத் தனியாக, பணியிலமர்த்தும் கொள்கைகளையோ வழிமுறைகளையோ வகுத்துக்கொண்டிருக்கவில்லை என எடுத்துக் கூறியது; மேலும் மத்திய அரசிற்குப் பல பரிந்துரைகளையும் சமர்ப்பித்தது. 1964ஆம் ஆண்டில் மத்திய அரசு, மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கென, பணியிலமர்த்தும் கொள்கைகளை வகுத்து இக் கொள்கைகளுடன் சில பணியிலமர்த்தும் முறைகளையும், பணி வழிமுறைகளையும், 'முன்மாதிரியாக' உருவாக்கியது. அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களும் இக் கொள்கைகளைப் பின்பற்ற அரசு பல்வேறு நடவடிக்கைகளையும் மேற்கொண்டது.

குறிப்பிட்ட பதவிக்குரிய தகுதிகளை வரையறுப்பதிலும், பணிப் பகுப்பாராய்ச்சியிலும் (Job Analysis) போதிய கவனம் செலுத்தப்படாமையே பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் நிலவும் ஒரு முக்கியக் குறைபாடாகும். இதன் காரணமாக, பல நிறுவனங்களில் சில குறிப்பிட்ட பதவிகளில் தேவைக்கதிகமான

தகுதிகளுள்ள பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எடுத்துக் காட்டாக, தகுதிப் பத்திரங்களுடையவர்களுக்கு (Diploma holders) வழங்கப்படவேண்டிய பணிகள், பட்டதாரிகளுக்கு (Degree holders) வழங்கப்பட்டுள்ளதைக் கூறலாம். அடுத்த முக்கியக் குறைபாடாக, தேவைக்கதிகமான எண்ணிக்கையில் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளதைக் கூறலாம். பணியாளர் தேவையைத் திட்டமிடுதலில் போதிய கவனம் செலுத்தப் படாமையால் மேற்கண்ட குறைபாடு ஏற்படுகிறது.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் பணியாளர்களை நியமிப்பதற்கென தனியானதொரு 'ஆளினர் குழுமம்' (Personnel Commission) அமைக்கப்படவேண்டுமென ஒரு கருத்து நிலவு கிறது. இக் கருத்தை, மதிப்பீட்டுக் குழு ஒவ்வொரு முறையும் வலியுறுத்தி வந்துள்ளது. இதன் மூலமாக, அனைத்துப் பொதுத் துறை நிறுவனங்களிலும் ஒரேமாதிரியான சிறந்த திறமை யுள்ள பணியாளர்கள் நியமிக்கப்படலாம் எனவும், வீண்செலவு கள் தவிர்க்கப்பட்டு நேரம் மிச்சப்படுத்தப்படுமெனவும் மதிப் பீட்டுக் குழு எடுத்துரைத்தது.

எனினும், இவ்வாறு 'மையக் குழுமம்' (Central Commission) ஏற்படுத்துவதில் கருத்து வேறுபாடுகளும் உள்ளன. தனியான தொரு மையக் குழுமம் அமைக்கப்பட்டு, பொதுத்துறை நிறுவனங் களின் பணியாளர்கள் அக் குழுமத்தின் மூலமாகப் பணியிலமர்த் தப்பட்டால், பொதுத்துறை நிறுவனங்களின் தன்னாட்சியுரிமை மிகவும் பாதிக்கப்பட்டுவிடும் என்று கருதப்படுகிறது. அது போன்றே, பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு மிகவும் உடனடியாகத் தேவைப்படும் பணியாளர்களும் மற்ற அதிகாரி களும் நியமிக்கப்படுவதில் கால தாமதம் ஏற்பட்டு, நிருவாகச் சீர்கேட்டை ஏற்படுத்தும் என்றும் கருதப்படுகிறது.

வளர்ச்சியுற்ற நாடுகளில் பொதுத்துறைத் தொழிலமைப்பு களின் பணியிலமர்த்தும் கொள்கைகளிலிருந்து, வளர்ச்சி யடைந்துவரும் நாடுகளாகிய இந்தியா போன்ற நாடுகளில் பொதுத்துறை நிறுவனங்களின் பணியிலமர்த்தும் கொள்கைகள் முற்றிலும் மாறுபடுகின்றன. ஏனெனில், வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் போதிய கல்வி வசதிகள், தொழிற்பயிற்சி வசதிகள், அனுபவம் நிறைந்த தொழிலாளர்கள், தொழில் நுணுக்க நுண்ணறிவு ஆகியவை பின்தங்கிய நிலைகளிலிருப்பவையாகும். மேலும், பெரும்பாலான தொழிலாளர்கள் விவசாயத் தொழிலை மேற்கொண்டவர்களாயிருப்பனரேயன்றி, தொழிற் சாலைகளில் பணிபுரியும் அனுபவத்தைப் பெற்றிருக்கமாட்டார்கள்.

எனவே, உடனடியாகத் தேவைப்படும் தொழிலாளர்கள் திறமை மிகுந்தவர்களாக அமைவதில்லை. பணியிலமர்த்தப்பட்டு, போதிய பயிற்சி அளிக்கப்பட்ட பிறகே தொழில் திறமையை அவர்கள் பெறமுடியும். இவ்வாறாக, பின்தங்கிய நாடுகளில் செயற்படும் பொதுத்துறைத் தொழிலமைப்புகள், மேற்கண்ட விவரங்களைக் கருத்திற்கொண்டு, ஏற்றதொரு பணியிலமர்த்தும் கொள்கையை உருவாக்கி அதன்படி பணியாளர்களை நியமிக்க வேண்டும்.

உயர்நிலை அதிகாரிகளின் நியமனம்

உயர்நிலையில் மூன்றுவித ஆளினர் முக்கியமாகத் தேவைப் படுகின்றனர். அவர்கள் முறையே,

(i) நிருவாக அதிகாரங்கள் கொண்ட இயக்குநர் குழு,

(ii) தொழிலமைப்பின் நுணுக்கமான விவரங்களை அறிந்த உயர்மட்ட மேலாளர்கள்,

(iii) உயர்மட்ட தொழில்நுட்பவ ல்லுநர்கள் ஆகியோராகும்.

ஆனால் இவ்வுயர்மட்ட அதிகாரிகளை நியமிப்பதில் பல நடைமுறைச் சிக்கல்கள் உள்ளன; ஏனெனில், கல்வி அறிவும் மற்றத் தகுதிகளும் அதிக அளவில் கொண்டவர்களுக்குக்கூட, போதிய தொழில் அனுபவ அறிவு ஏற்பட்டிருக்காது. தேவையான அனுபவம் வாய்ந்த தொழில் நுட்ப அறிவு பொருந்திய அதிகாரிகளைத் தேர்ந்தெடுத்தல் என்பது மிகவும் கடினமானதொரு செயலாகும். மேலும், உயர்மட்ட அதிகாரிகள் தேவையான தகுதிகள், தலைமையேற்கும் திறமை, நிதி நடவடிக்கைகளில் அனுபவம், அமைப்புத் திறன், தீர்ப்பளிக்கும் திறமை, தொழில்நுட்ப அறிவு, துணிவாக முடிவுகளை மேற்கொண்டு உடனுக்குடன் அவைகளைச் செயலாற்றும் திறமை, குன்றாத ஆர்வம் போன்ற எண்ணிறைந்த தகுதிகளைப் பெற்று விளங்கவேண்டும். ஆனால், நடைமுறையில் இத் தகுதிகள் அனைத்தையும் கொண்ட உயர்மட்ட அதிகாரிகள் கிடைப்பது அரிது. எனவே, கிடைக்கக்கூடிய பணியாளர்களில், மேற்கண்ட தகுதிகளில் அதிகபட்ச அளவுடன் திகழ்பவர்களைத் தேர்ந்தெடுத்து, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் உயர் மட்ட அதிகாரிகளாக நியமனம் செய்யவேண்டும்.

இளநிலைப் பணியாளர்களின் நியமனம்

பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் பணியாற்றும் இள நிலைப் பணியாளர்கள் இருவகைகளில் அமைந்துள்ளனர். முதலாவது வகையில் ஆர்வமும் துடிப்பும், போதிய தொழிற்பயிற்சி

யும், தொழில் அனுபவமும் கொண்டு விளங்கும் பணியாளர்கள் இடம்பெறுகின்றனர். இதற்கு முற்றிலும் எதிர்மாறாக, திறமையின்மையும், கைக்கூலி பெற்று நிருவாகச் சீர்கேடுகளை ஏற்படுத்தும் பணியாளர்கள் இரண்டாவது வகையில் அடங்குகின்றனர். இதன் காரணமாக, பல பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நிருவாகம் பொதுமக்களால் கடுமையாக விமர்சிக்கப்படுகிறது.

எனவே, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் 'பணியிலமர்த்தும்' முறைகள் உடனடியாக மாற்றப்பட்டு சீரமைக்கப் படவேண்டும். இப்பொழுது பின்பற்றப்படும் வழிகள் மிகவும் பழைமையான முறைகளேயாகும். வளர்ந்துவரும் பொருளாதாரத்திற்கும், விரைவான முன்னேற்றமடைந்து வரும் பொதுத்துறைக்கும் ஏற்றவகையில் பணியிலமர்த்தும் முறைகள் அமைந்திடவேண்டியது மிகவும் அவசியமாகும். அப்பொழுதுதான் தொழிலமைப்பின் பிரச்சினைகளில் விரைவான முடிவுகளும், திறமையான நிருவாகமும், அதிக இலாபமும், சீரான முன்னேற்றமும் ஏற்பட ஏதுவாகும்.

பணியிலமர்த்தும் வழிகள் (Sources of Recruitment)

அடிப்படையில், பணியிலமர்த்தும் வழிகள் இரண்டு வகைப்படும். அவைகள் முறையே,

(i) நிறுவனத்தின் உள்ளமைப்பிலிருந்தே பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுதலும்,

(ii) வெளியிலிருந்து புதிதாகப் பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுதலுமாகும்.

மேற்கண்ட இரு முறைகளிலும், தனித்தனியே பல நன்மைகள் ஏற்படுகின்றன. அவைகளைச் சுருக்கமாகக் கீழே காண்போம் :

(1) உள்ளமைப்பிலிருந்து பணியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதன் நன்மைகள்

(அ) தொடர்ந்து ஏற்படும் வேலை வாய்ப்பின் காரணமாக தொழிலமைப்பு உறுதிப்படுகிறது.

(ஆ) பணியாளர்களிடையே ஒருவித வேலைப் பாதுகாப்பு ஏற்பட வகைசெய்கிறது.

(இ) பணியாளர்களிடையே பற்றுறுதியைத் (Loyalty) தோற்றுவிக்கிறது.

(ஈ) முக்கியமானப் பொருள் வழங்கும் வாடிக்கையாளர்களிடம் ஏற்பட்ட தொழில் தொடர்பு நீடிக்க வாய்ப்பு ஏற்படுகிறது.

(உ) அதுபோன்றே, மிக முக்கியமான நுகர்வோர்களுடன் ஏற்பட்ட தொடர்பும் நீடிக்கிறது.

(ஊ) நிறுவனத்தின் தேவைகள், நடவடிக்கைகள், விதிமுறைகள் ஆகியவற்றை முற்றிலும் தெரிந்து செயலாற்றும் பணியாளர்களே நீடிக்கின்றனர்.

(எ) மற்றக் கீழ்ப்பணியாளர்களிடையே, தங்களுக்கும் இதுபோன்ற பணி உயர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை வேர்விடுவதால் அவர்கள் ஊக்கமுடன் செயல்புரிவர்.

சுருங்கக் கூறினல், நிறுவனத்தின் உள்ளமைப்பிலிருந்தே பணியாளர்களை உயர்மட்டப் பதவிகளுக்குத் தேர்ந்தெடுப்பதன் மூலம், மற்றப் பணியாளர்களிடையே சிறந்த ஒழுங்குமுறையை வளர்க்க முடியும்.

(2) வெளியிலிருந்து புதிதாகப் பணியாளர்களை நியமிப்பதனல் ஏற்படும் நன்மைகள்

(அ) புதிய கோணங்களிலிருந்து பிரச்சினைகளை அணுகக் கூடியப் பணியாளர்கள் நியமிக்கப்படுவர்.

(ஆ) புதிய, விரிவான அனுபவமும், திறமையும் கொண்ட பணியாளர்கள் கிடைப்பர்.

(இ) பழைமையான வழிமுறைகள் மாற்றியமைக்கப்பட்டு, நவீன முறைகள் பின்பற்றப்பட்டு, தொழிலமைப்பு வளர்ச்சியுறும்.

மேற்கண்டவாறு இரு முறைகளிலும் நன்மைகள் பல இருப்பதால், எம் முறை சிறந்தது என முடிவு செய்வது எளிதான செயலல்ல. இருந்தபோதிலும், நிறுவனத்தின் உள் அமைப்பிலிருந்தே பணியாளர்கள் உயர் பதவிகளுக்கு உயர்த்தப்படும்போது, அனைத்துப் பணியாளர்களிடையேயும் ஊக்கம் பெருக்கெடுக்கிறது. மேலும், அவர்களிடையே கடும் உழைப்பும், திடசிந்தனையும், ஒழுங்குமுறையும் ஏற்படுகிறது. எனவே, இம்முறையில் பணியாளர்கள் பணியிலமர்த்தப்படுதலே சாலச் சிறந்தது எனக் கூறலாம். ஆனல், சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நிறுவனத்தின் உள்ளமைப்பில் போதிய அனுபவமும், தகுதியும் வாய்ந்த பணியாளர்கள் இல்லாவிடில், வெளியிலிருந்து புதிதாக அதிகாரிகளை நியமித்தல் தவிர்க்கமுடியாததாகிவிடுகிறது.

எனவேதான், பொதுத்துறை நிறுவனங்கள் பல நேரங்களில் விளம்பரங்களின் மூலமாகவும், வேலைவாய்ப்புப் பதிவு அலுவலகங்களின் மூலமாகவும், நிதி நிறுவனங்களின் மூலமாகவும் புதிய பணியாளர்களைத் தேர்ந்தெடுக்கின்றன.

இந்திய எண்ணெய்க் கூட்டுருவில் பணியிலமர்த்தும் முறை (Method of Recruitment at Indian Oil Corporation)

நமது நாட்டின் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஒன்றாகிய 'இந்திய எண்ணெய்க் கூட்டுரு'வில் பணியிலமர்த்தும் வழிகள் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்.

முதலாவதாக, மனித சக்தியை முழுமையான அளவில் உபயோகிக்கத் தேவையான இயல்முறைத் திட்டங்கள் தீட்டப்படுகின்றன. மேலும், மனித சக்தியைத் திட்டமிடுவதில் பல ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முடிவில், தேவையான பணியாளர்களின் எண்ணிக்கை, துல்லியமாக நிர்ணயிக்கப்படுகின்றன. இதன் பிறகே, பணியிலமர்த்தும் வேலை தொடங்கப்படுகிறது.

இந் நிறுவனத்தின் 'சந்தையிடுகைப் பிரிவு'க்குத் (Marketing Division) தேவையான பணியாளர்கள் இரு வகைகளில் நியமிக்கப்படுகின்றனர். முதலாவதாக, உள்ளமைப்பில் பணி புரியும் பணியாளர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படுகிறது. இரண்டாவதாக, வெளியிலிருந்து நேரடியாகப் புதிய பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவையன்றி, சில சமயங்களில் குறிப்பிட்ட தகுதி பொருந்திய அதிகாரிகள், மத்திய அரசினுல் பகராண்மையின் (Deputation) அடிப்படையில் நியமிக்கப்படுகின்றனர்.

பணியாளர்களின் நேரடித் தேர்வு போதிய விளம்பரங்களின் வாயிலாக நடத்தப்படுகிறது. இந் நிறுவனத்தின் எழுத்தர்களும், தொழிலாளர்களும் (Clerks and Labourers) பின்வரும் வழிகளில் நேரடியாக நியமிக்கப்படுகின்றனர்.

(i) உள்ளூர் தினசரிகளில் விளம்பரங்கள் செய்யப்படுவதன் மூலமாகவும்,

(ii) வட்டார வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகவும்,

(iii) இந் நிறுவனத்தின் எண்ணெய்ச் சுத்திகரிப்புப் பிரிவின் வாயிலாகவும்,

(iv) அயல்நாட்டு எண்ணெய் நிறுவனங்களின் மூலமாகவும் நியமிக்கப்படுகின்றனர்.

உயர் அதிகாரிகள் பின்வரும் வழிகளில் நியமிக்கப்படு கின்றனர்:

(i) அகில இந்திய தினசரி மற்றும் வார இதழ்கள்.

(ii) மறுகுடியேற்றம் மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகம்.

(iii) இந் நிறுவனத்தின் எண்ணெய் மற்றும் சுத்திகரிப்புப் பிரிவு (உபரி அதிகாரிகள்).

(iv) அயல்நாட்டு எண்ணெய் நிறுவனங்கள்.

மேற்கண்டவாறு, இந்திய எண்ணெய்க் கூட்டுருவின் கீழ்ப் பணியாளர்களும், உயர் அதிகாரிகளும் நேரடியாகவும், பதவி உயர்வுகளின் மூலமாகவும் நியமிக்கப்படுகின்றனர். மற்ற வகைப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளும் ஏறத்தாழ மேற் கண்ட பணியிலமர்த்தும் வழிமுறைகளையே பின்பற்றிவருகின்றன. ஆனால், நிறுவனங்களின் நடவடிக்கைகள், தொழிலின் தன்மை, நிதி நிலைமை, நிருவாக அமைப்பு, நாட்டின் முன்னேற்றத்தில் அவை களின் பங்கு ஆகியவைகளுக்கேற்ப பணியிலமர்த்தும் கொள் கைகள் சிறிதளவு மாறுபடுகின்றன.

வட்டார அடிப்படையில் வேலைவாய்ப்பு

சமீபத்திய ஆண்டுகளில் பொதுத்துறைத் தொழிலமைப்பு களின் மேலாண்மைக் குழுவிற்கும், வட்டாரங்களின் பொதுமக் களுக்குமிடையேயான உறவு சுமுகமானதாக அமையாதது மிகவும் கசப்பானதோர் உண்மையாகும். இதற்கு முக்கியக் காரணங் களாக விளங்குபவை, பிரிவினைக் கொள்கைகளும், இனவேறு பாடுகளுமாகும். எடுத்துக்காட்டாக, பின்தங்கிய மாநிலமாகிய ஒரிஸ்ஸாவில், அம் மாநிலத்தைச் சார்ந்த பொதுமக்களின் நலம் புறக்கணிக்கப்பட்டு, மற்ற மாநிலத்தைச் சார்ந்தவர்களுக்கு, அம் மாநிலத்தில் அமைக்கப்பட்ட பொதுத்துறைத் தொழி லமைப்புகளில் அதிக வேலைவாய்ப்புகள் கொடுக்கப்பட்டன என்ற குற்றச்சாட்டு கூறப்பட்டது. மேலும், திறமைவாய்ந்த ஒரிஸ்ஸாவைச் சார்ந்த தொழிலாளர்கள் முப்பது சதவீதம்தான் பணியிலமர்த்தப்பட்டனர் எனவும், மீதியுள்ள 70% தொழி லாளர்கள் சென்னை, மேற்கு வங்காளம், பீகார் போன்ற மாநிலங்களைச் சார்ந்தவர்களாயிருந்தனர் எனவும் கூறப்பட்டது. எனவே, எந்த அளவில் வட்டார அடிப்படையிலான வேலை வாய்ப்புகள் அமையவேண்டுமென்ற வினவை மேற்கண்ட பிரச்சினை எழுப்புகிறது.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் அதிகாரிகளும், தொழிலாளர்களும் மத்திய அரசால் பணியிலமர்த்தப்படுவதால், வட்டாரங்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கென வேலை வாய்ப்புகளை ஒதுக்குவதோ அல்லது சலுகைகள் காட்டுவதோ இயலாத காரியமாகும். மேலும், குறிப்பிட்ட வட்டாரத்தைச் சார்ந்த தொழிலமைப்புகளில், மற்ற வட்டாரங்களைச் சார்ந்த தொழிலாளிகள் அல்லது அதிகாரிகள் பணியிலமர்த்தப்படக் கூடாது எனக் கூறுவது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 16ஆம் பிரிவுக்கு முரண்பாடாக அமையும். ஆனால், மாநில அரசுகளால் தோற்றுவிக்கப்படும் தொழிலமைப்புகளில், மூன்று மற்றும் நான்காம் பிரிவைச் சார்ந்த தொழிலாளர்கள் அம் மாநிலத்தின் மொழி, சமூகப் பிரச்சினைகள், பொருளாதார அமைப்பு ஆகியவைகளை நன்கு உணர்ந்தவராக அமைவதே சாலச் சிறந்ததாகும். நாடாளுமன்றத்தின் மதிப்பீட்டுக் குழு தன்னுடைய 16வது அறிக்கையில், பொதுத்துறைத் தொழிலமைப்புக்களில், தேர்ச்சிபெறாத் தொழிலாளர்கள் (Unskilled Labourers) அனைவரும் அவ் வட்டாரங்களைச் சார்ந்தவர்களாகவும், பகுதி-தேர்ச்சி பெற்ற (Semi-skilled) தொழிலாளிகளில் ஒரு பகுதியினர் அவ்வட்டாரங்களைச் சார்ந்தவர்களாயும், எஞ்சியுள்ளவர்கள் மற்ற மாநிலங்களிலிருந்து தருவிக்கப்பட்டவர்களாயும் அமையவேண்டும் எனவும், மேற்பார்வை புரியும் அதிகாரிகள் அனைவரும் நாட்டின் பல பகுதிகளைச் சார்ந்தவர்களாயும் இருக்கவேண்டுமெனக் கூறியது.

போதிய பயிற்சி பெற்ற மனிதச் சக்தியின்மையின் காரணமாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் நிருவாகத் திறமையின்மை ஏற்பட்டு, அவைகளின் வளர்ச்சி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது. திட்டமிடுதல், நிதி நடவடிக்கைகள், கணக்குப் பதிவியல், ஆளினர் மேலாண்மை போன்றவைகளில் தேர்ச்சி பெற்றவர்களாயும், தகுதி பெற்றவர்களாயுமுள்ள ஆளினரே, உயர் மட்ட அதிகாரிகளாய் நியமிக்கப்படுதல் வேண்டும். இதனால் கீழ்க்கண்ட பிரிவுகளைச் சார்ந்த அலுவலர்களுக்கு அதிகத் தேவை ஏற்படுகிறது.

(i) பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் நிபுணர்கள்.

(ii) உரிமை பெற்ற தணிக்கையர், அடக்கக் கணக்காயர் (Cost Accountants), மேலாண்மைக் கணக்கியல் (Management Accountancy) வல்லுநர்கள்.

(iii) ஆளினர் மேலாளர்கள் (Personnel Managers), தொழிலாளர் நல்வாழ்வு அதிகாரிகள் (Labour Welfare Officers)

(iv) மூலப்பொருள்கள் மேலாண்மை வல்லுநர்கள் (Experts in Materials Management) மற்றும்

(v) உற்பத்தித் திறன், ஆலைச்செலவு போன்றவைகளில் சிறந்த பயிற்சிபெற்ற வல்லுநர்கள்.

மேற்கண்ட பிரிவுகளைச் சார்ந்த உயர்மட்ட அதிகாரிகளைப் பெறுவதில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பலவகையான இடர்ப்பாடுகளைச் சந்திக்கவேண்டியுள்ளது. வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் பொருளாதார, சமூக அரசியல் மற்றும் தொழில் துறைகளின் தேவைகளைச் சமாளிக்கும் வகையில் கல்வியின் தரமும், முறையும், மிகுந்த அளவில் முன்னேறியுள்ளன. இந் நாடுகளைச் சார்ந்த பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும், மற்றக் கல்வி நிலையங்களும் தொழில் வல்லுநர்களையும், பயிற்சிபெற்ற மேலாளர்களையும் வழங்குவதில் பெரும் பங்கு வகிக்கின்றன. பொதுத்துறை மற்றும் தனியார் துறைத்தொழிலமைப்புகளுக்குத் தேவையான அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிப்பதிலும், தொழில் நுட்பம், தனிப்பயிற்சி போன்றவைகளிலும், நவீனத் திட்டங்களைச் செயற்படுத்தும் வகையில் மேம்பாடடைந்த கல்வி நிலை, முன்னேற்றமடைந்த நாடுகளில் காணப்படுகிறது. ஆனால், இதற்கு முற்றிலும் மாறாக நமது நாட்டின் கல்வி முறை அமைந்துள்ளது. கல்விக் களத்தில் தலையேற்றுள்ள பல்கலைக் கழகங்கள் கூட, தொழில்துறை மேலாளர்களுக்கும், தொழில் வல்லுநர்களுக்கும் பயிற்சியளிக்கக்கூடிய திட்டங்களைச் செயற்படுத்தவில்லை.

எனவே, விரைவான வளர்ச்சியடைந்து வரும் நமது எண்ணிறைந்த பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு, பல நிலைகளிலும் தேவைப்படும் தகுதி வாய்ந்த மேலாளர்களுக்கும், மற்ற அதிகாரிகளுக்கும் மிகுந்த அளவிலான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதில் வியப்பேதுமில்லை. இக் குறையைக் களைவதற்குப் பொதுத் துறைத் தொழிலமைப்புகளின் மனித சக்தியைப் பெற, போதுமான பயிற்சித் திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். தனியார் துறையைவிட பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மேலாளர்களுக்குச் சிறந்த பயிற்சி மிகவும் அவசியம்; ஏனெனில், பொதுத் துறையில் மேலாண்மையும், இடர் ஏற்பும் (Risk bearing) அதிக இடைவெளியில் உள்ளன. பயிற்சித் திட்டத்தின் முதற் படியாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு ஒட்டு மொத்தமாகத் தேவைப்படும் மனித சக்தி கணிக்கப்படவேண்டும். ஆனால், நமது பொதுத்துறை நிறுவனங்களில், துல்லியமாக மனித சக்தியைக் கணக்கிடப் போதிய பயிற்சி பெற்ற வல்லுநர்கள் இல்லை. எனவே, மத்திய அரசு, ஒரு 'வல்லுநர் குழு'வின்

உதவியுடனும், 'செயற்படுத்தப்பட்ட மனித சக்தியின் ஆராய்ச்சி நிலையத்'தின் (Institute of Applied Manpower Research) ஒத்துழைப்புடனும், பொதுத்துறை நிறுவனங்களுக்குத் தேவையான மனித சக்தியைத் துல்லியமாகக் கணக்கிடவேண்டும்.

ஒரு சில பொதுத்துறை நிறுவனங்களே, தமக்கெனத் தனியாகப் பயிற்சி நிலையங்களை அமைத்துள்ளன. ஆனால், அவைகளும் தேவைக்கதிகமான பயிற்சி வசதிகள், அளவுக்கதிகமான இயக்க அடக்கச்செலவு (Operating Cost) போன்ற பிரச்சினைகளால் அல்லலுற்று வருகின்றன. எடுத்துக்காட்டாக, தேவைக்கதிகமான பயிற்சி வசதிகளைக்கொண்ட 'தேசிய நிலக்கரி முன்னேற்றக் கூட்டுரு'வின் இரண்டு பயிற்சி நிலையங்கள் மூடப்பட்டதைச் சுட்டிக்காட்டலாம். மதிப்பீட்டுக் குழு, இக் காரணத்தினால்தான் ஒருமுகப்படுத்தப்பட்ட, முழுமையாக்கப்பட்ட பயிற்சித் திட்டங்கள் பொதுத்துறையில் செயற்படுத்தப்படவேண்டுமென வலியுறுத்தியது.

சமீபத்திய ஆண்டுகளில் தனியார்துறையின் பல்வேறு முகமை நிறுவனங்கள், பயிற்சித் திட்டங்கள் பலவற்றை நடைமுறைப்படுத்தியுள்ளன. அகமதாபாத்திலுள்ள 'மேலாண்மைப் பயிற்சி நிலையத்'தில் (Institute of Management) பலவகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அதுபோன்றே, ஐதராபாத்தில் உள்ள 'நிருவாக அலுவலர் கல்லூரி'யிலும் (Administrative Staff Collage) பயிற்சித் திட்டங்கள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், திட்டக் குழுவின் மேலாண்மைப் பிரிவு பலவகைப்பட்ட தொழிற்பயிற்சிக் கூடங்களை அமைத்தும், பல தொழிற் கருத்தரங்குகளை நடத்தியும் பயிற்சித்திட்டங்களைநிறைவேற்றியுள்ளது. மத்திய அரசின் நிதி அமைச்சகம் (Ministry of Finance) செலவுக் கணக்காயர்களுக்கென (Cost Accountant) தனியானதொரு பயிற்சி நிலையத்தைத்தொடங்கியுள்ளது. பொதுத்துறைத் தொழிலமைப்புகளும் மேற்கண்ட பயிற்சித் திட்டங்கள் பலவற்றுடன் தொடர்பு கொண்டிருந்த போதிலும், அவைகளின் ஈடுபாடு எதிர்பார்க்கப்பட்ட அளவில் அமைந்திடவில்லை.

ஒருமுகப்படுத்தப்பட்ட பயிற்சித் திட்டம் (Co-ordinated Training Programme)

ஆளினரின் பயிற்சித் திட்டத்தை மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகள் முறையே,

(i) தொழில் நுட்பமில்லா மேலாண்மை ஆளினர்.

(ii) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மேலாண்மைக்குத் தேவையான தனிப் பயிற்சிபெற்ற ஆளினர், மற்றும்

(iii) புதிய வழிகாட்டும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கும் தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படும் வல்லுநர்கள், சிறப்புப் பயிற்சிபெற்ற ஆளினர் ஆகியோராவர்.

மேற்கண்டவைகளில் முதல் இரண்டு பிரிவுகளையும் சார்ந்த ஆளினர் பயிற்சிக்கென, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தனியான பயிற்சி நிலையங்களைத் தோற்றுவிக்கத் தேவையில்லை. ஏனெனில், நாம் முன்பே கண்டவாறு பல்வேறு வகையான பயிற்சி நிலையங்கள் தனியார்துறையில் அமைக்கப் பட்டுள்ளன. பொதுத்துறை நிறுவனங்களின் ஆளினரும், அப் பயிற்சி நிலையங்களின் மூலமாகவே தொழிற் பயிற்சியைப் பெறலாம். ஆனால், மூன்றாவது வகையான ஆளினருக்கென, தனிப்பயிற்சி நிலையங்கள் பொதுத்துறையில் ஏற்படுத்தப்படுதல் மிகவும் அத்தியாவசியமானதாகும்.

தற்பொழுது, பல்வேறு பயிற்சி நிலையங்கள் நாட்டில் செயற்பட்டாலும்கூட, சிலவகைச் சிறப்புப் பயிற்சியை எந் நிறுவனமும் அளிக்க முன்வருவதில்லை. எனவே, குறிப்பிட்ட அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன், 'பொதுத்துறைத் தொழிலமைப்புகளின்மீதான புள்ளி விவரச் சேகரப் பணியகம்' இப் பயிற்சித் திட்டங்களைப் பரிசீலனை செய்யவேண்டும். இதன் மூலம் பல்வேறு பயிற்சி நிலைகளில் ஏற்படும் இரு மடங்கான செலவினங்களைக் குறைத்து, சிறப்புப் பயிற்சித் திட்டங்களை விரிவானதாகவும், பயனுள்ளதாகவும் அமைத்தல் ஏதுவாகும். புள்ளி விவரச் சேகரப் பணியகம் அமைச்சகங்களின் பிரதிநிதிகளுடனும், பொதுத்துறை நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் கலந்தாலோசித்து, பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்குத் தேவையான பயிற்சித் திட்டங்கள், அத் திட்டங்கள் அமைக்கப்பட வேண்டிய வழிமுறைகள், அவைகளின் தரம், தன்மை ஆகியவற்றை நிர்ணயித்தல்வேண்டும். பயிற்சி வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையில், ஒரே விதமான தொழிலில் ஈடுபட்டிருக்கும் பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தும், தங்கள் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்திக் கொள்ளலாம். பயிற்சித் திட்டங்களின் தொடக்கக் காலத்தில், பொதுத்துறை நிறுவனங்கள் மற்றவகைப் பயிற்சி நிலையங்களின் உதவிகளைப் பெறலாம். இதன்மூலமாக அயல்நாட்டு உதவியைச் சார்ந்திருக்காமல், பயிற்சி நிலையில் தன்னிறைவைப்பெற்று அதிக அளவில் வெளிநாட்டுச் செலவாணியை மிச்சப்படுத்தலாம்.

பதவி உயர்வுக் கொள்கை

பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் தொழிலாளர்கள் தங்கள் பதவி உயர்வுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றனர். கீழ்மட்டத்திலிருந்து உயர்மட்டப் பணி நிலைகளுக்குப் பதவி உயர்வு பெற ஆர்வத் துடிப்புக் கொண்டுள்ளனர். எனவே ஆளினரின் திறமையையும், தொழிலமைப்பின்மீது ஒருவித ஆர்வப் பிடிப்பையும் ஏற்படுத்த பதவி உயர்வு இன்றியமையாததாகிறது.

பொதுத்துறைத் தொழிலமைப்புகள், குறிப்பாக அரசு நிறுமங்கள், தங்களுக்கெனப் பதவி உயர்வுக் கொள்கைகளை வகுத்துக்கொள்வதில் தனிச் சுதந்திரம் பெற்றுள்ளன. 1964ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில், மத்திய அரசு, பொதுத்துறை நிறுவனங்களுக்கென பொதுவான மாதிரி வழிமுறைகளையும், கொள்கைகளையும் அறிவித்தும்கூட, அவைகள் பதவி உயர்வில் மாறுபட்ட கொள்கைகளையே கொண்டு விளங்குகின்றன. பல பொதுத்துறை நிறுவனங்களில், பதவி உயர்வுக் கொள்கைகள் வகுக்கப்படவேயில்லை. மற்றச் சில தொழிலமைப்புகளில் பதவி உயர்வு தனி அதிகாரிகளால் ஏற்படுத்தப்படுகிறது; வேறு சில நிறுவனங்களில் துறைக் குழுக்களின் பரிந்துரைகளின் அடிப்படையில் பதவி உயர்வுகள் அளிக்கப்படுகின்றன. 'பொதுப்பணிக் குழு'வின் (Public Service Commission) பரிந்துரைகளின் அடிப்படையில் பதவி உயர்வு அளிக்கும் பொதுத்துறை நிறுவனங்களும் இருக்கின்றன. இதுபோன்ற பல்வேறு வகையான பதவி உயர்வுக் கொள்கைகள் பின்பற்றப்படுவதால், பொதுத்துறைத் தொழிலமைப்புகளிடையே நிருவாகத் திறமையின்மையும், குழப்பமும், முரண்பாடுகளும் மலிந்து, ஆளினரின் குழு ஆர்வத்தையும் ஒழுங்குமுறையையும் வெகுவாகப் பாதிக்கிறது.

எனவே, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நிருவாகத் திறமையையும், ஆளினரிடையே ஒழுங்குமுறையையும் ஏற்படுத்த திட்டமிடப்பட்ட, நிறைவான பதவி உயர்வுக் கொள்கைகள் வகுக்கப்படவேண்டுவது மிகவும் அவசியமாகும். ஒரு தொழிலமைப்பின் பதவி உயர்வுக் கொள்கை கீழ்க்காணும் இரு அடிப்படைச் சலுகைகளைக் கொண்டு விளங்கவேண்டும். முதலாவதாக, பதவி உயர்வுக் கொள்கை போதிய வாய்ப்புகள் பொருந்தியதாகவும், குறிப்பிட்ட நியாயமான கால இடைவெளிகளில் ஏற்படும் இயல்புடையதாகவும் அமையவேண்டும். இரண்டாவதாக, தகுதிவாய்ந்த, தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களைப் பொறுப்பு வாய்ந்த உயர் பதவிகளில் அமர்த்திட மேலாண்மைக்

குழுவுக்கு உதவிபுரியும் வகையில் பதவி உயர்வுக் கொள்கை அமையவேண்டும்.

பதவி உயர்வுக் கொள்கை, மற்றத் தொழிலாளர்களின் மனத்தில் எவ்விதக் குழப்பத்தையோ அல்லது ஐயப்பாட்டையோ எழுப்பும் வகையில் அமைந்துவிடக்கூடாது. எவ்வித பார பட்சமுமின்றி, தொழிலாளர்களின் திறமையொன்றையே அடிப்படையாகக்கொண்டு இக் கொள்கை அமையவேண்டும். மேலும், பதவி உயர்வுக்கான வாய்ப்புகளும், வழிமுறைகளும் தெளிவாக வகுக்கப்பட்டு, தொழிலாளர்களிடையே தெரியப் படுத்தப்படவேண்டுவது மிகவும் அவசியமாகும். பதவி உயர்வு பெறக்கூடிய தொழிலாளர்களின் பெயர்களை, அவர்களின் பணி யின் அடிப்படையில் பட்டியலிட்டு, அவர்களிடையே சுற்றறிக்கை யாக அனுப்பலாம். இதன் மூலமாக, அக் குறிப்பிட்ட தொழி லாளர்கள், தங்கள் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் மிகவும் அருகாமையில் உள்ளது என்பதை அறிந்து மகிழ்ச்சியுற்று, மிக வும் ஆர்வத்துடனும், பொறுப்புடனும் பணியில் ஈடுபடுவர். மற்றத் தொழிலாளர்களும், தங்களுக்கும் இதுபோன்ற வாய்ப்பு கள் எதிர்காலத்தில் நிச்சயம் உண்டு என்ற நம்பிக்கையுடன் செயற்படுவர்.

நமது நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் விரை வான வளர்ச்சியுற்று, அதிகப் பதவி உயர்வு வாய்ப்புகள் ஏற் பட்டபோதிலும், பல்வேறு காரணங்களால் உயர்மட்டப் பதவி கள், தனியார் துறையிலிருந்து ஒப்பந்தத்தின் அடிப்படையிலோ அல்லது பகராண்மையின் அடிப்படையிலோ வரும் அதிகாரி களுக்குத்தான் வழங்கப்படுகின்றன.

இப்பொழுது அனைத்து நாடுகளிலும், நவீன தொழிலமைப்பு களில் பின் வருபவைகளின் அடிப்படையில், பதவி உயர்வுக் கொள்கை அமையவேண்டுமென ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(1) பதவியில் முற்பட்டவர் அல்லது பிற்பட்டவர் என்ற பாகுபாடன்றி, நன்னடத்தை, திறமை, தகுதி ஆகியவைகளின் அடிப்படையில் பதவி உயர்வுக் கொள்கை அமையவேண்டும்.

(2) ஆளினரின் நடத்தை, பணி செய்யும் முறை ஆகியவை களைத் தொடர்ந்து கண்காணித்து வரும் அதிகாரிகளால் பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும்.

(3) குறைந்த மூன்று உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு, அக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்

படையில் பதவி உயர்வு வழங்கப்படவேண்டும். ஒவ்வோர் ஆளினரின் பதவி உயர்வின்போதும், எந்த அடிப்படையில் அவருக்குப் பதவி உயர்வு வழங்கப்படுகிறது எனவும், அவரைவிட பதவியில் முற்பட்டவருக்கு வழங்கப்படாமல், அக் குறிப்பிட்ட நபருக்கு ஏன் பதவி உயர்வு வழங்கப்படுகிறது எனவும் அக் குழு விவரங்களை எழுத்தின்மூலம் தெரிவிக்க வேண்டும்.

(4) இரகசியக் குறிப்பின் (Confidential Record) அடிப்படையில் பதவி உயர்வு நிர்ணயிக்கப்படும்போது, ஒரு குறிப்பிட்ட நபரைப் பற்றி பாதிப்பான குறிப்புகள் இருந்தால், அந் நபருக்கு, தவறுகளைத் திருத்திக்கொண்டு திறமையை வளர்த்துக் கொள்ள போதிய எச்சரிக்கையும், வாய்ப்பும் அளிக்கப்பட்டுள்ளனவா என ஆராயப்படவேண்டும்.

(5) எவ்வித எச்சரிக்கையும் அல்லது வாய்ப்பும் அளிக்கப்பட்டிருக்காவிடில், அக் குறிப்பிட்ட நபர் திறமையில்லாதவர் என முடிவு செய்யப்பட்டு விடாமல், அவருக்குப் போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டு, பதவி உயர்வு வழங்கப்படவேண்டும்.

மேற்கண்ட கொள்கைகளைக் கருத்திற்கொண்டு, பின்வரும் விதிமுறைகளின்படி பதவி உயர்வு அளிக்கப்படலாம்.

(i) பொது மேலாளர், உயர்மட்ட நிருவாகிகள், கீழ்மட்ட நிருவாக அதிகாரிகள் ஆகியோரின் பதவி உயர்வு, அவ்வதிகாரிகளைப் பற்றிய இரகசியக் குறிப்புகள், அவர்களின் திறமை, நன்னடத்தை, மனிதப் பண்பு ஆகியவைகளின் அடிப்படையில் அமையவேண்டும்.

(ii) முதலாவது பிரிவின்கீழ் (Class I) பணிபுரியும் கீழ்மட்டப் பணியாளர்கள் உயர்மட்டத்திற்குப் பதவி உயர்வு செய்யப்படும் போது, 'பணியில் முற்பட்டவர்' என்ற அடிப்படையும், போதிய பயிற்சி மற்றும் திறமை போன்ற கருத்துகளும் கருதப்பட வேண்டும்.

(iii) இரண்டாம் பிரிவைச் சார்ந்த (Class II Personnel) ஆளினர், முதல் பிரிவைச் சார்ந்த பதவிகளுக்கு உயர்த்தப்படும் போது, ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அளவில் மட்டும் உள் நிருவாகப் பணியாளர்களுக்குப் பதவி உயர்வும், மீதியுள்ளவர்கள் நேரடியாக வெளியிலிருந்தும் பதவியலமர்த்தப்படவும் வேண்டும்.

(iv) மூன்றும் பிரிவுப் பணியாளர்கள் (Class III Employees) இரண்டாம் பிரிவைச் சார்ந்த பதவிகளுக்கு உயர்த்தப்படும் போது, இரகசியக் குறிப்புகள், பணிக் குறிப்புகள், பணியில் முற்பட்ட தன்மை, தேவையான தகுதி, குறிப்பிட்ட பணியைச் செவ்வனே செய்யக்கூடிய திறமை, மனிதப் பண்பு, தலைமை யேற்று நடத்தும் திறன், நேர்முகப் போட்டியில் அவர்களின் திறமை போன்றவைகள் முக்கியமானவைகளாகக் கருதப்பட வேண்டும். மூன்றும் பிரிவைச் சார்ந்த பணிகளின் தன்மையும், இரண்டாம் பிரிவைச் சார்ந்த பணிகளின் வழிமுறைகளும் முற்றி லும் மாறுபடுவதால் மேற்கண்ட கருத்துகள் மிகவும் இன்றி யமையாதவைகளாகும்.

(v) நான்காம் பிரிவைச் சார்ந்த பணியாளர்களுக்கு, (Class IV Employees) அவர்களின் திறமை, நன்னடத்தை ஆகிய வைகளின் அடிப்படையில் அதிக அளவிலான பதவி உயர்வு வாய்ப்புகள் அளிக்கப்படவேண்டுவது மிகவும் அவசியமாகும். நான்காம் பிரிவுப் பணியாளர்கள், மூன்றுவது பிரிவுக்குப் பதவி உயர்வு செய்யப்படுவதற்குத் தேவையான அடிப்படைக் கொள்கை, அனைத்துப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளிலும் ஒரேவித மாக அமைந்திருத்தல் அவசியம்.

(vi) கீழ்மட்டத் தொழிலாளர்கள், அடுத்த உயர் பதவிக்குப் போட்டியிடும்போது, அவர்களின் வயது வரம்பிற்குப் போதிய சலுகைகள் அளிப்பதுடன், நேரடியாகப் பணியிலமர்த்தப்படும் உரிமையும் அளிக்கப்படவேண்டும். இதன்மூலம், திறமைமிக்க கீழ்மட்டத் தொழிலாளர்கள் விரைவில் உயர் பதவிகளை அடைய வாய்ப்புக்கள் ஏற்படும்.

பணி முன்னேற்றத் திட்டங்கள் (Career Development Schemes)

நமது நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பதவி உயர்வு நடவடிக்கைகள் நிறைவு தருவனவைகளாக அமைந் திருக்கவில்லை ; இதற்கு முக்கியக் காரணம் வன்மையுள்ள பணி முன்னேற்றத் திட்டங்கள் எவையும் பின்பற்றப்படாததேயாகும். தேசிய நிலக்கரி முன்னேற்றக் கூட்டுரு போன்ற ஒருசில பொதுத் துறை நிறுவனங்கள் மட்டுமே, சில பணி முன்னேற்றத் திட்டங் களைச் செயற்படுத்தியுள்ளன. பேரளவுத் தொழிலமைப்புகளில் பணி முன்னேற்றத் திட்டங்களின் மூலமாகத்தான், சிறந்த தொழில் நுட்ப வல்லுநர்களைப் பதவிகளில் அமர்த்தமுடியும். மேலும், ஒரு தொழிலமைப்பில் பணிபுரியும் பணியாளர்களுக்கு, அவர்களுக்குப் போதிய பதவி உயர்வுகள் கிடைக்குமென்றும், என்றுவது ஒருநாள் அந் நிறுவனத்தின் உயர்நிலைப் பதவிகளை

அவர்கள் அடையமுடியுமெனவும், ஆழ்ந்ததொரு நம்பிக்கை ஏற்படவேண்டும். அப்போதுதான், தொழிலமைப்பின் இலாப, நட்டத்திலும், வளர்ச்சியிலும் அவர்களுக்கு ஓர் ஆர்வப்பிடிப்பு ஏற்படும். எனவே, ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் தத்தம் தொழிலாளர்களுக்குப் போதிய பயிற்சியும், பதவி உயர்வு வாய்ப்புகளுமுடைய பணி முன்னேற்றத் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டும்.

மனித சக்தியைத் திட்டமிடுதல் (Man Power Planning)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் வெற்றியை நிர்ணயிப்பதில் முக்கியப் பங்கை வகிப்பது இம் மனித சக்தியைத் திட்டமிடுதலாகும். எந்தவொரு திட்டத்திலும் எதிர்காலத்திற்குத் தேவையான வழிவகைகள் செய்யப்படவேண்டும். மனித சக்தித் திட்டமும் இதற்கு விதிவிலக்கல்ல. தொழிலமைப்பின் வெற்றிகரமான நடவடிக்கைகள் தொடர்ந்து ஏற்படும் வகையில் திட்டங்கள் அமையவேண்டும். எனவே, உயர்நிலை மேலாண்மை நிறுவனத்தின் வளர்ச்சிக்குத் தேவைப்படக்கூடிய மேலாளர்களையும், மற்றப் பணியாளர்களையும் கணக்கிடுதல் வேண்டும். நிருவாக ஆளினரின் எதிர்காலத் தேவைகள் பின்வரும் முறைகளில் கணிக்கப்படுகின்றன;

(i) பதவிகளின் எண்ணிக்கையை நிர்ணயிக்க, ஆண்டு மதிப்பீடுகளை மேற்கொள்ளுதல்.

(ii) நீண்ட கால மதிப்பீடுகள்.

(iii) குறைந்த அளவு தேவைப்படும் ஆளினர் தேவைகளை நிர்ணயித்தல் மற்றும்,

(iv) குறிப்பிட்ட பதவிகளின் மதிப்பீடுகள் போன்றவைகளாகும்.

ஒவ்வோர் ஆண்டும், உயர்நிலை மேலாண்மைக் குழுவும் இயக்குநர்களும் ஒன்று சேர்ந்து, தொழிலமைப்பின் நிலைமை, எதிர்காலத்தின் வளர்ச்சி, அவ் வளர்ச்சியினுல் ஏற்படக்கூடிய பதவிகள் போன்றவைகளை ஆராய்ந்து, வரும் ஆண்டுகளில் தொழிலமைப்பிற்குத் தேவைப்படும் மனித சக்தியைக் கணக்கிடவேண்டும். மேலும், புதிய பதவிகளில் அமர்த்தப்படும் ஆளினருக்குத் தேவையான தகுதிகள், திறமை, பயிற்சி போன்ற அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகளும் முன்கூட்டியே முடிவுசெய்யப்படுகின்றன. இதனுல் தொழிலமைப்பு விரைவான இடர்ப்பாடில்லா வளர்ச்சியை அடையமுடியும்.

மனித சக்தித் திட்டத்தின் மூலம், மிகச் சிறந்த அளவில் பணியாளர்களின் திறமைகளைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். ஆனால், 'இம் மனித சக்தித் திட்டம்' அனைத்துப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கும் ஒரே மாதிரியாக அமைதல் மிகவும் அவசியமாகும். ஏனெனில், கல்விமுறை வசதிகள், பொருளாதார முன்னேற்றம், மக்கள்தொகை போன்ற பிரச்சினைகள், அனைத்துப் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் பொதுவானதாக அமைந்துள்ளன. எனவே, மனித சக்தித் திட்டத்தை, நாட்டிலுள்ள தொழில் நிறுவனங்கள் அனைத்துக்கும் பொதுவானதாக வகுப்பது மத்திய அரசின் தலையாய கடமைகளுள் ஒன்றாகும்.

மனித சக்தித் திட்டத்தில் பின்வரும் படிகள் மிகவும் முக்கியமானவைகளாகும்:

(i) முதலாவதாக மனித சக்தி தேவைப்படும் காலம் நிருணயிக்கப்படவேண்டும். எடுத்துக்காட்டாக, முதலாண்டு முடிவில், இரண்டாவது ஆண்டு முடிவில், மூன்றாவது ஆண்டு முடிவில் என்பதுபோன்று நிருணயிக்கப்படவேண்டும்.

(ii) நடப்பு ஆண்டின் எண்ணிக்கையிலிருந்து வரப்போகும் ஆண்டில் அல்லது ஆண்டுகளில் ஏற்படக்கூடிய ஆளினரின் இறப்பு, பதவி ஓய்வு, கட்டாய ஓய்வு போன்றவைகளைக் கணக்கிட்டு, கழிக்கவேண்டும். இதன்மூலம் எதிர்காலத்திற்குத் தேவையான மனித சக்தியை அறியமுடியும்.

(iii) ஆளினர் பற்றாக்குறை ஏற்பட்டால், அப் பற்றாக்குறையை நேரடியாகப் பணியிலமர்த்தல் மூலமாகவோ அல்லது பதவி உயர்வு மூலமாகவோ சரிக்கட்டத் திட்டங்கள் தீட்டப்படவேண்டும்.

(iv) புதிய ஆளினருக்குப் பயிற்சி அல்லது பணி முன்னேற்றத் திட்டம் தேவையா என முடிவு செய்யப்படவேண்டும்.

(v) மேற்கண்ட நிலைக்கு மாறாக ஆளினர் உபரியாக இருப்பதாகக் கணக்கிடப்பட்டால், அவ்வதிகப்படியான பணியாளர்களைக் கட்டாய ஓய்வு, பதவியிலிருந்து விலக்குதல் அல்லது தற்காலிக வேலை நீக்கம் போன்ற முறைகளில் பணிகளிலிருந்து நீக்கவேண்டும்.

நமது பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் பெரும் பான்மையானவைகளில், நிறைவான மனித சக்தித் திட்டமின்மை யால், தேவைக்கதிகமான பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஆனல், இவ்வாறு உபரியாகப் பணிகளில் உள்ள ஆளினரைக் குறைக்க எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது வருத்தம் தரும் உண்மையாகும். இந்துஸ்தான் எஃகு நிறுவனம், இந்திய உரக் கூட்டுரு போன்ற ஒருசில பொதுத் துறை நிறுவனங்கள் மட்டும் இவ்வதிகப்படியான பணியாளர் களைக் கணக்கிட்டு, தேவையான நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளன.

பின்வரும் காரணங்களால் தேவைக்கதிகமான பணியாளர் கள், பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் பணிகளிலமர்த்தப் பட்டுள்ளனர்.

(i) இயல்முறையில் அமைந்த மனித சக்தித் திட்டம் பின் பற்றப்படாமை.

(ii) தொடக்கக் காலத்தில், தேவைக்கேற்ப பணியாளர்களை நியமிக்காமல், அதிக எண்ணிக்கையில் பணியி லமர்த்தல்.

(iii) குறுகியகால எல்லைக்குள், கட்டுமானப் பணிகளை முடிக்கும் நோக்கத்துடன் எண்ணிறைந்த தொழிலாளர் களைப் பணிகளிலமர்த்தல்.

(iv) அரசுத் துறைகளில் உள்ளது போன்ற நிருவாக அமைப்பை ஏற்படுத்தும் நோக்கத்துடன், அதிக அளவில் தேவையற்ற அதிகாரிகளை நியமித்தல்.

(v) பொருத்தமான பணி நிலை நடவடிக்கைகளை நிர்ணயிக்கா மல், வழிமுறையாக வருகின்ற முறைகளையும், சிக்கன மற்ற முறைகளையும் பின்பற்றிப் பணியாளர்களை நியமித்தல்.

(vi) தேவையானவர்களுக்குச் சலுகைகள் அளிக்கும் நோக் கத்துடன், தேவையற்ற பணிகளில் தொழிலாளர்களை நியமித்தல், மற்றும்

(vii) நிருவாக மற்றும் ஆளும் கட்சியின் தலையீடுகளினல், தேவையற்ற பணியாளர்கள் நியமிக்கப்படுதல் போன்ற வைகளாகும்.

எனவே, மேற்கண்ட பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண, தொழிலமைப்புகள் தொடக்கக் காலத்திலிருந்தே போதிய

கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றி, ஆளினரின் எண்ணிக்கை தேவைக்கதிகமாகாமல் கண்காணித்து வரவேண்டும். சிறந்த மனித சக்தித் திட்டத்தைப் பின்பற்றவேண்டும்.

தேவைக்கதிகமான பணியாளர்கள் நிறைந்துவிட்ட தொழிலமைப்புகள், எவ்வழியிலாவது முயன்று ஆளினரின் எண்ணிக்கையைக் குறைக்கவேண்டும். அப்போதுதான் உற்பத்திப் பொருள்களின் அடக்கச் செலவு, இயக்க அடக்கச் செலவு போன்றவைகள் கட்டுப்படுத்தப்படலாம். புதிதாக ஏற்படும் பதவிகளிலும், இயற்கையான பதவி ஓய்வால் ஏற்படும் பணியிடங்களிலும் வேறு பணியாளர்களை நியமிக்காமலும், பதவியை விட்டுச் செல்ல விரும்பும் பணியாளர்களுக்குச் சலுகைகள் வழங்கியும், கீழ்ப்பணியாளர்களின் பணி எண்ணிக்கையைப் படிப்படியாகக் குறைத்தும், உபரியாகவுள்ள பணியாளர்கள் சரிக்கட்டப்படவேண்டும்.

தொழில் நுட்ப வல்லுநர்களின் இடப்பெயற்சி (Flight of Technical Experts)

நமது பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் பெரும்பான்மையானவை, தொழில் நுட்ப வல்லுநர்களின் இடப்பெயற்சியால் பெரிதும் அல்லலுறுகின்றன. அதிக அளவில், பொதுத்துறை நிறுவனங்களின் மேலாளர்களும், தொழில் நுட்ப அதிகாரிகளும் தனியார்துறை நிறுவனங்களுக்குச் சென்றுவிடுகின்றனர். இதற்குப் பல்வேறு வகையான காரணங்கள் உள்ளன. அவைகளில் முக்கியமானவைகள் பின்வருபவைகளாகும்:

(i) ஓரளவு பயிற்சி பெற்ற தொழில் நுட்ப வல்லுநர்கள் அதிக அளவில், பல்வேறு தொழிலமைப்புகளிலும் தேவைப்படுகின்றனர். அவர்களின் அளிப்புநிலை, தேவைநிலையைக் காட்டிலும் மிகவும் குறைந்த நிலையில் உள்ளது.

(ii) பொதுத்துறையில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் தொழில் நுட்ப வல்லுநர்களுக்குப் போதிய பணிப் பாதுகாப்பு அளிக்கப்படவில்லை. எனவே, அவர்கள் தனியார்துறையில் வாய்ப்புகள் ஏற்படும்போது அங்குச் சென்றுவிடுகின்றனர்.

(iii) பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்குள் ஊதியம், மேலூதியம் (Bonus) போன்றவைகள் முற்றிலும் மாறுபடுகின்றன.

(iv) தனியார்துறை நிறுவனங்களிலுள்ளது போன்று பொதுத்துறை நிறுவனங்களில் அதிக பதவி உயர்வு வாய்ப்புகள் இருப்பதில்லை.

(v) சிறந்த ஆளினர் முன்னேற்றத் திட்டங்கள் பொதுத் துறையில் பின்பற்றப்படுவதில்லை.

(vi) தனியார்துறை நிறுவனங்களிலுள்ளது போன்று பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் 'பணி நிறைவு' (Job Satisfaction) அமைவதில்லை.

இக் காரணங்களால் பொதுத்துறையில் பணியாற்றும் தொழில் வல்லுநர்களும், அதிகாரிகளும், தனியார்துறை நிறுவனங்களால் ஈர்க்கப்பட்டு விடுகின்றனர். குறிப்பாக, கனரக மின்சாதனங்கள் நிறுவனம்,போபால் (Heavy Electricals, Bhopal), நெய்வேலி நிலக்கரிக் கூட்டுரு (Neyveli Lignite Corporation) இந்திய எண்ணெய்க் கூட்டுரு (Indian Oil Corporation), இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனம் (Hindustan Machine Tools) போன்ற பொதுத்துறை நிறுவனங்கள், தொழில் நுட்ப வல்லுநர்களின் இடப்பெயர்ச்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. கனரக மின்சாதனங்கள் நிறுவனத்தில், அயல்நாடுகளில் பயிற்சிபெற்றுத் திரும்பிய (நிறுவனத்தின் செலவில்) தொழில் நுட்ப வல்லுநர்கள் பலர், அவர்கள் எழுதிக் கொடுத்திருந்த உறுதிமொழிப் பத்திரத்தையும், ரூ. 20,000 நட்ட ஈட்டையும் பொருட்படுத்தாமல், தனியார்துறை நிறுவனங்களுக்குச் சென்று விட்டனர் என்பது வியப்புக்குரிய ஆனல் உண்மையான செய்தியாகும். இதுபோன்ற குறைபாடுகளைத் தவிர்க்கவேண்டுமானல், பொதுத்துறைத் தொழிலமைப்புகள், தங்களுக்கென சிறந்ததொரு பயிற்சித் திட்டத்தையும், பயிற்சி முடிவடைந்தவுடன் பணியாளர்களுக்கு நிரந்தரப் பணி நிலையையும், அதிக ஊதியத்தையும், மற்ற வசதிகளையும் ஏற்படுத்தி, தனியார் துறைக்குச் சமமாக தொழில் வல்லுநர்களைக் கவரவேண்டும். சமீபத்திய ஆண்டுகளில், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பல இலாபமீட்டியதாலும், திறமையுடன் நிருவகிக்கப்பட்டதாலும், படிப்படியாக தனியார்துறைத் தொழில்கள் நாட்டுடைமையாக்கப்பட்டுக்கொண்டு வருவதாலும், திறமைபெற்ற தொழில் வல்லுநர்கள் பலர் பெரும் விருப்பத்துடன் பொதுத்துறையை நாடி வந்துள்ளனர் என்பது நம்பிக்கையூட்டக்கூடியதாக அமைந்துள்ளது.

ஆளினர் துறைகள் (Personnel Departments) : பொதுத் துறையில் ஆளினர் துறையின் மேலாளர்களாக, மத்திய அரசு

அல்லது மாநில அரசுகளின் அதிகாரிகள் பகராண்மையின் அடிப் படையில் நியமிக்கப்படுகின்றனர். எனவே, பல சமயங்களில் ஆளினர் மேலாளர்கள் போதிய தகுதிகளைப் பெற்றிருப்ப தில்லை. ஒரு சில பொதுத்துறைத் தொழிலமைப்புகள் மட்டும் ஆளினர் மேலாளர்களுக்குத் தேவையான பயிற்சியை அளித் துள்ளன. மற்றத் தொழிலமைப்புகளின் ஆளினர் துறையின் மேலாளர்கள், தொழில் நுட்பத்தையோ, தொழிலாளர் உறவையோ அல்லது மனித சக்தியைத் திட்டமிடும் முறை களையோ அறிந்திருப்பதில்லை. இதனால், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் ஆளினர் துறைகள், தனியார்துறை ஆளினர் துறைகளைப்போன்று திறமையுடன் செயல்புரிவதில்லை. எனவே, திறமையான ஆளினர் நிருவாகத்திற்கு, ஆளினர் துறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, தகுதி வாய்ந்த நபர்கள் ஆளினர் மேலாளர்களாக நியமிக்கப்படவேண்டும்.

வேலைவாய்ப்பு: 1956ஆம் ஆண்டின் தொழிற் கொள் கைக்குப் பிறகு, பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் வேலை வாய்ப்புகள் அதிக அளவில் பெருகி வருகின்றன. தனியார்துறை யைவிட, பொதுத்துறையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. 1973ஆம் ஆண்டில் 1,794 இலட்சம் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளதில், 111·89 இலட்சம் (62·5%) தொழி லாளர்கள் பொதுத்துறையில் பணியிலமர்த்தப்பட்டனர். மீதி யிருந்த 67·5 இலட்சம் தொழிலாளர்களே (37·5%) தனியார் துறை நிறுவனங்களில் பணிபுரிந்தனர். ஆனால், 1961ஆம் ஆண்டில் கூடுதல் வேலைவாய்ப்பளிக்கப்பட்ட 120·9 இலட்சம் தொழிலாளர்களில், 70·50 இலட்சம் (58·3%) தொழிலாளர் கள் மட்டும் பொதுத்துறையில் பணிபுரிந்தனர். எனவே, 1961-ல் 58·3 சதவீதமாக இருந்த வேலைவாய்ப்பு, 1973-ல் 62.5 சதவீதமாக உயர்ந்தது. ஆனால் தனியார்துறையிலோ 1961-ல் 41·7 சதவீதத்திலிருந்து, வேலைவாய்ப்பு 1973-ல் 37·5 சதவீதத்திற்குக் குறைந்துவிட்டது. பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் அளிக்கப்பட்டுள்ள வேலைவாய்ப்புகளின் மதிப்பீடு கீழ்க்காணும் 'அட்டவணை—1' ல் கொடுக்கப் பட்டுள்ளது.

அதுபோன்றே, 1960-'61-ல் 70·50 இலட்சமாக இருந்த வேலைவாய்ப்பு, 1972-'73-ல், 111·89 இலட்சமாக உயர்ந்தது; இது 60% வளர்ச்சியாகும். 1960-61-ல், வேலைவாய்ப்பளிக் கப்பட்ட 70·50 இலட்சம் தொழிலாளர்களில், 20·90

இலட்சம் தொழிலாளர்கள் மத்திய அரசு நிறுவனங்களிலும், 30·14 இலட்சம் பணியாளர்கள் மாநில அரசுகளின் நிறுவனங் களிலும், 7·73 இலட்சம் தொழிலாளர்கள் அரைகுறை அரசு நிறுவனங்களிலும் (Quasi Government Undertakings), எஞ்சி யிருந்த 11·73 இலட்சம் தொழிலாளர்கள் சிறுநிலப் பொது நிறுவனங்களிலும் (Local Body Enterprises) பணியிலமர்த்தப் பட்டனர். இவ் விவரங்களை, பிரிவுகளின் அடிப்படையில் பாகு படுத்தப்பட்டிருக்கும் 'அட்டவணை-2'ல் காணலாம். பொதுத் துறையின் பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த தொழிலமைப்புகளை ஒப்பிடும்போது, சுரங்கத் தொழில், உற்பத்தித் தொழில், மின்சாரம், வாயு, வாணிகத் தொழில் போன்றவைகளில் வேலை வாய்ப்புகள் அதிகரித்திருப்பதையும், போக்குவரத்து, செய்தித் தொடர்பு போன்றவைகளில் வேலைவாய்ப்புகள் குறைந்திருப் பதையும் காணலாம்.

அட்டவணை - 1

பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் அளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு களின் மதிப்பீடு:- (நபர்கள் ஆயிரத்தில்)

1	2	3	4	5	6	7
பிரிவு	1960-61	1965-66	1968-69	1969-70	1970-71	1972-73
(1) மத்திய அரசு	2,090	2,636	2,713	2,725	2,771	2,833
(2) மாநில அரசுகள்	3,014	3,723	3,901	3,997	4,152	4,265
(3) அரை குறை அரசு நிறுவனங்கள் (Quasi Government Establishments)	773	1,318	1,655	1,794	1,929	2,168
(4) சிறுநிலப் பொது நிலையங் கள் (Local Public bodies)	1,173	1,701	1,825	1,858	1,878	1,922
கூடுதல்	7,050	9,378	10,095	10,374	10,731	11,189

அட்டவணை – 2

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பல்வேறு பிரிவுகளில் வேலை வாய்ப்பு:- (எண்ணிக்கை இலட்சங்களில்)

தொழிலமைப்புகளின் பிரிவு	1961	1971	1973
1. தோட்டப்பண்ணை, காட்டுத்துறைத் தொழில்	1.80	2.76	2.83
2. சுரங்கத் தொழில்	1.29	1.82	2.55
3. உற்பத்தித் தொழில்	3.69	8.06	8.70
4. கட்டுமானத் தொழில்	6.03	8.80	9.15
5. மின்சாரம், வாயு, நீர் முதலியவைகளுடன் தொடர்புற்ற தொழில்கள்	2.24	4.34	4.58
6. வாணிகத் தொழில்	0.94	3.28	3.74
7. போக்குவரத்து மற்றும் செய்தித்தொடர்பு	17.24	22.16	22.49
8. மற்றவகைப் பணிகள்	37.27	56.07	57.85
கூடுதல்	70.50	107.31	111.89

(Source: Economic Survey 1972-73, Govt. of India)

ஒழுங்குமுறை (Discipline)

சமீபத்திய ஆண்டுகளில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பணியாளர்களிடையே ஒழுங்குமுறையும், கட்டுப்பாடும் சிறந்த முறையில் அமையவில்லை எனப் பரவலான கருத்து நிலவுகிறது. இதற்கு முக்கியக் காரணமாக விளங்குவது, பல ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பட்ட ஒழுங்குமுறை விதிகள், இன்றளவும் மாற்றப்படாததேயாகும். மாறிவரும் சூழ்நிலைகளுக்கேற்ப விதிமுறைகளும் மாற்றியமைக்கப்படவேண்டும்.

ஒழுங்குமுறை என்ருல், தொழிலமைப்பின் விதிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும் கட்டாயமாகப் பின்பற்றுவதே யாகும் எனக் கருதப்பட்டு வந்தது. இது மிகவும் பழைமையான கருத்தாகும். விரைவான முன்னேற்றமடைந்துவரும் பொருளாதார நிலைகளுக்கேற்ப இக் கருத்தும் மாற்றப்படவேண்டும்.

அதாவது, ஒழுங்குமுறை என்றால், பணியாளர்கள் தாமாகவே விருப்பத்துடன் முன்வந்து, தொழிலமைப்பின் விதிமுறைகளுக் கேற்ப கட்டுப்பாட்டுடன் பணிபுரிவதைக் குறிக்கவேண்டும்.

பல சமயங்களில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் தொழிலாளர்களிடையே ஒழுங்குமுறை குலைவதற்குக் காரணம் அவர்களிடையே உள்ள குறைபாடுகளும், அக் குறைபாடுகளைக் களைவதற்கு நியாயமான வழிகள் உதவமாட்டா என்ற தவறான எண்ணமுமேயாகும். எனவே, பணியாளர்களிடையே ஒருவிதப் பாதுகாப்பு எண்ணத்தையும், நேர்மையையும் வளர விடுவதன் மூலமாக, ஒழுங்குமுறையை ஏற்படுத்தமுடியும். இரயில் துறைப் பணியாளர்களைப் பற்றி ஆராய்ந்த மதிப்பீட்டுக் குழு, ஒழுங்கு முறையை ஏற்படுத்தப் பின்வரும் கருத்துகளைப் பரிந்துரைத்தது.

(i) தொழிலாளர்களுக்கு நியாயமான சலுகைகள் வழங்கப் படுதல் மட்டுமல்லாமல், அப்படி வழங்கப்படுதல் வெளிப்படையாகத் தெரியும்படி அமையவேண்டும்.

(ii) தொழிலாளர்களுக்கு வழங்கப்படவேண்டியவைகளை எவ்வளவு விரைவாக முடியுமோ, அவ்வளவு விரைவில் வழங்கிவிடவேண்டும்.

(iii) தொழிலாளர்களின் குறைகளைக் களைவதில் காலதாமதம் ஏற்படக்கூடாது; ஒவ்வொரு நிலையிலும் அவர்களின் குறைகளைக் களைய ஒரு காலக்கெடு நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(iv) மத்திய அமைச்சகத்தைச் சார்ந்த அமைச்சர், இயக்கு நர்கள், பொது மேலாளர்கள், துறைத் தலைவர்கள் ஆகியோர் தொழிலாளர்களின் குறைகளை நேரில் கேட் பதற்கு, குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குதல் வேண்டும்.

மேற்கண்ட பரிந்துரைகளைத் தன்னுடைய இருபத்திநான்கா வது அறிக்கையில், மதிப்பீட்டுக் குழு எடுத்துரைத்துள்ளது.

ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு பணியாளர்களிடையே சிறப் பாக அமைய வேண்டுமானால், அவர்களுக்கு ஒழுங்குமுறையைப் பற்றி போதிய கல்வி அறிவு அளிக்கப்படவேண்டும். தொழி லாளர்களுக்குச் சிறப்பு விரிவுரைகளின் மூலமும், சிறிய கைப் புத்தகங்கள் மூலமாகவும் தொழிலமைப்பின் விதிமுறை களைப் பற்றி விவரித்துக் கூறவேண்டும். தொழிலாளர்களிடையே நிலவும் நம்பிக்கையின்மையும், குறிக்கோளின்மையும்கூட

ஒழுங்குமுறையைப் பாதிக்கின்றன. ஒவ்வொரு பொதுத்துறைத் தொழிலமைப்புக்கும் பல குறிக்கோள்கள் இருந்தும்கூட, அவைகள் தொழிலாளர்களுக்கு விவரித்துக் கூறப்படுவதில்லை. இதன் காரணமாக ஒழுங்கின்மை தோன்ற வாய்ப்புகள் ஏற்படுகின்றன.

மேலும், தொழிலாளர்களுக்கும் மேலாண்மைக் குழுவுக்குமிடையே சுமுகமான உறவு நீடிப்பதும், ஒழுங்குமுறையை நிலைநாட்டத் தேவையான அம்சமாகும். கலந்துரையாடல், பரஸ்பர நம்பிக்கை போன்றவைகளின் மூலமாக, மேலாண்மைக் குழுவுக்கும், தொழிலாளர்களுக்குமிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளையும், சிறு பூசல்களையும் (Small Disputes) உடனுக்குடன் களைய வேண்டும். இரு தரப்பினரிடையே மகிழ்ச்சிகரமான உறவு நீடிப்பது ஒழுங்குமுறைக்கு இன்றியமையாததாகும். உயர் நிலை அதிகாரிகள் ஒவ்வொருவரும், தத்தம் கீழ்ப்பணியாற்றும் பணியாளர்களைஅன்புடனும், ஆதரவுடனும் நடத்துவதன் மூலமாகவும், அடிக்கடி அவர்களுடைய குறைகளைக் கேட்டறிவதன் மூலமாகவும், நெருங்கியதொரு உறவை ஏற்படுத்தலாம். அது போன்றே, தொழிற்சங்கங்களும் நிருவாகத்திற்கு உதவிபுரியும் வகையில், தொழிலாளர்களிடையே ஒழுங்குமுறையின் முக்கியத்துவத்தைப் பற்றியும், கட்டுப்பாட்டின் நன்மைகளைப் பற்றியும் விரிவாகப் பரப்புதல் வேண்டும். தேவையற்ற பிரச்சினைகளை ஏற்படுத்தி அடிக்கடி மேலாண்மைக் குழுவிற்கு இடர்ப்பாடுகளை ஏற்படுத்தாமலும், தொழிற்சங்கத் தலைவர்கள் நடந்துகொள்ள வேண்டும். தொழிலாளிகளின் பிரதிநிதிகளுக்கு மேலாண்மைக் குழுவில் வாய்ப்புகள் அளிப்பதன் மூலமும், தொழிலமைப்பில் சிறந்த ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட முடியும்.

இறுதியாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் ஒழுங்குமுறை விதிகள் மிகவும் விரிவானதாகவும், தேவையற்ற சிக்கல்கள் நிறைந்ததாகவும் உள்ளன. எனவே, தொழிலாளர்களுக்கு எளிதான முறையில் விளங்கக்கூடிய வகையில் ஒழுங்குமுறை விதிகள் மாற்றியமைக்கப்படவேண்டும். இதனால், பொதுத்துறையில் சிறந்த ஒழுங்கும், கட்டுப்பாடும் நிலவமுடியுமென உறுதியாகக் கூறலாம்.

9. பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஊக்கத் திட்டங்கள்

(Incentive Schemes in Public Enterprises)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் வெற்றிக்கு, தொழிலாளர்கள் ஆதாரம்; தொழிலாளர்களுக்கு ஊதியம் ஆதாரம். எனவே, ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் ஆற்றல் மிக்கத் தொழிலாளர்களைப் பணிக்கு அமர்த்துவதிலும், தக்க ஊதியமளித்து அவர்களுக்கு மன நிறைவையும், ஊக்கத்தையும் புகட்டவிழைவதிலும் கவனம் செலுத்தவேண்டும். முதலாவதாக, சிறந்தவொரு ஊதிய முறை வகுக்கப்படவேண்டும். அவ்வூதிய முறை பின்வரும் அம்சங்களைப் பெற்றிருக்கவேண்டும்:

(i) அது நிறுவனத்திற்கு ஆற்றலும், தகுதியும் பெற்ற பணியாளர்களைப் பெற்றுத்தரவேண்டும்.

(ii) பணியாளர்கள் தமக்கு நியாயமான வாழ்க்கை நிலையை அமைத்துக்கொள்ளும் வகையில் ஊதியம் போதுமானதாக அமையவேண்டும்.

(iii) ஊதியம் நிலையானதாகவும், அனுபவத்திற்கேற்ப உயர்வதாகவும் இருக்கவேண்டும்.

(iv) உழைப்புக்கேற்ப ஊதியம் உயரவேண்டும்.

(v) ஊதிய வேறுபாடு திறமையைச் சார்ந்து இருக்க வேண்டும். ஊதிய முறை எளிமையானதாகவும், நிறுவனத்தின் இயல்பைப் பொறுத்தும் அமையவேண்டும்.

ஆனால், நிறுவனத்தின் தொடர்ந்த வெற்றிக்கு, மேற்கண்ட சிறப்பு அம்சங்களைக் கொண்ட ஊதிய முறை மட்டும் போதுமானதல்ல. தொழிலாளர்களுக்கு, ஊதியத்துடன் ஊக்க ஊதியங்களும் அளிக்கப்படவேண்டும். அப்போதுதான், நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் மிகவும் ஆர்வத்துடன் பணியிலீடுபட்டு, உற்பத்தியைப் பெருக்கி நிறுவனத்தை வெற்றிப் பாதையில் நடத்திச்செல்வர். எனவேதான், பொதுத்

துறைத் தொழிலமைப்புகளில் பல்வேறு வகையான ஊக்கத் திட்டங்கள் (Incentive Schemes) செயற்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வூக்கத் திட்டங்கள், ஒருவித தூண்டுவிசையைப் போல் அமைந்து தொழிலாளர்களின் திறமையை மேன்மேலும் அதிகரிக்கச் செய்கிறது.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளில், ஊக்கத் திட்டங்கள் இரு வகைகளில் செயற்படுத்தப்படுகின்றன. முதலாவது வகை பணஞ்சார்ந்த ஊக்கத் திட்டங்கள் (Monetory Incentives). இவ்வகையில், கொடை ஊதியம், இலாபத்தில் பங்கு (Profit Sharing), மற்ற வாழ்வு நலன்கள் (Amenities), தனியான மற்றும் குழு ஊதியங்கள், பதவி உயர்வும் - ஊதிய ஏற்றமும் போன்றவைகள் அடங்கும். இரண்டாவது வகையில், தொழிலாளர்கள் பாராட்டப்படுதல், மேலாண்மைக் குழுவில் தொழிலாளர்களுக்கு இடமளித்தல் போன்ற பணஞ்சாராத ஊக்கத் திட்டங்கள் இடம் பெறுகின்றன. இவ்வகை ஊக்கத் திட்டங்களினால், தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரிக்கிறது. உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் உற்பத்தியையும் தொழிலாளர்களின் ஊதியத்தையும் அதிகரிக்கச் செய்யவேண்டியதன் அவசியத்தை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் வலியுறுத்திற்று. அதைத் தொடர்ந்து பெரும்பான்மையான பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் பல நிலைகளிலும் ஊக்கத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன.

ஊக்கத் திட்டங்களின் நோக்கங்கள்

ஊக்கத் திட்டங்கள், பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயற்படுத்தப்படுகின்றன:

1. உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.
2. தொழிலாளர்களின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்.
3. அடக்கச் செலவைக் குறைத்தல்.
4. தொழிலாளர்களின் கவனக் குறைவைக் களைதல்.
5. தொகைப் பட்டியலைக் குறைத்தல் (to reduce inventory).

பெரும்பான்மையான பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் மேற்கண்ட நோக்கங்கள் அனைத்தையுமோ அல்லது ஒருசிலவற்றையோ அடிப்படையாகக் கொண்டு, ஊக்கத் திட்டங்கள் செயற்படுகின்றன.

வல்லுநர்களின் கருத்துகள்

1966ஆம் ஆண்டில், பொதுத்துறைத் தொழில்களின் நிலையம் (Institute of Public Enterprises) இராஞ்சி, புதுடில்லி, ஐதராபாத் ஆகிய இடங்களில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஊக்கத் திட்டங்கள் என்ற தலைப்பில் தொடர்ச்சியாகப் பல கருத்தரங்குகளை (Seminars) நடத்திற்று. அக் கருத்தரங்குகளில் எண்ணிறைந்த பொருளாதார மற்றும் பொதுத்துறை வல்லுநர்களும், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பலவற்றின் மேலாண்மைப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டு, ஊக்கத் திட்டங்களைப் பற்றியும், அவைகளில் உள்ள பிரச்சினைகளைப் பற்றியும் விரிவாக விவாதித்தனர். நடைமுறையிலுள்ள பல ஊக்கத் திட்டங்கள் திறனாய்வு செய்யப்பட்டன. மேலும், ஊக்கத் திட்டங்களைப் பற்றிய கருத்துகள், பொருளாதாரம், பொறியியல், ஆளினர் மேலாண்மை, தொழிலாளர்கள் ஆகிய பல கோணங்களிலிருந்தும் ஆராயப்பட்டன. நுகர்வோர் கோணத்திலிருந்தும் ஊக்கத் திட்டங்கள் பரிசீலிக்கப்பட்டன. அவைகளில் சில முக்கியக் கருத்துகளைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. பொது மேலாண்மைக் கோணத்திலிருந்து ஊக்கத் திட்டங்களை அணுகுதல்

திரு. எஸ். கீரா (S. Khera) பொது மேலாண்மைக் கண்ணோட்டத்தில் ஊக்கத் திட்டங்களைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார் :

(i) தொழிலமைப்பிலுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் ஊக்கத் திட்டங்களின்கீழ் கொண்டுவரப்படவேண்டும்.

(ii) ஊக்கத் திட்டங்கள் உற்பத்தித் திறன் அதிகரிப்பை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், இலாப அதிகரிப்பையும் ஏற்படுத்தவேண்டும்.

(iii) மேலாண்மைக் குழுவில், தொழிலாளர்களுக்கு இடமளித்தல் எவ்வாறு என ஆராயப்படவேண்டும்.

2. ஊக்கத் திட்டங்கள் பற்றி பொருளியல் ஆய்வாளரின் கண்ணோட்டம்

பேராசிரியர் வி. வி. இராமநாதம் (V. V. Ramanadham) ஊக்கத் திட்டங்களின் பிரச்சினைகளை, பொருளாதாரக் கண்கொண்டு நோக்கும்போது, ஊக்கத் திட்டங்களின் நோக்கங்கள் கீழ்க்கண்டவாறு அமையுமெனக் கூறுகிறார்:

(i) உற்பத்தித் திறனை அதிகரித்தல்.

(ii) அடக்கச் செலவைக் குறைத்தல்.

(iii) அதிக இலாபமீட்டுதல்.

பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில், மேற்கண்ட நோக்கங்கள் மூன்றும் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்றுள்ளன. எடுத்துக்காட்டாக, உற்பத்தி அதிகரித்தால், அடக்கச் செலவு குறைந்து அதிக இலாபம் ஏற்படுதல் நிச்சயம். ஆனால் சில நேரங்களில் உற்பத்தி அதிகரித்தாலும்கூட, அடக்கச் செலவு குறைவடையாது; அல்லது அடக்கச் செலவு குறைந்தாலும் இலாபம் அதிகரிக்காது. அதுபோன்ற சந்தர்ப்பங்களில் ஒரு சில தொழிலாளர் குழுக்கள், ஊக்க ஊதியத்தைப் பெறுவதற்குத் தகுதி பெற்றும்கூட, அந் நிறுவனம் அவ்வூக்க ஊதியத்தை அளிக்க முடியாத நிலை ஏற்படலாம். எனவே, பின்வரும் பரிந்துரைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என பேராசிரியர் இராமநாதம் கூறுகிறார் :

(அ) ஊக்கத் திட்டங்கள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று தொடர்புற்று அமையவேண்டும்.

(ஆ) உற்பத்தி அதிகரித்தும் அடக்கவிலைக் குறையவில்லை என்றாலோ அல்லது மற்றப் பிரச்சினைகள் எழும்போதோ, ஊக்கத் திட்டங்கள் மாற்றியமைக்கப்படும் வகையில் நெகிழ்ச்சியுடையவைகளாக அமையவேண்டும்.

மேலும் அவர், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் அனைத்தும் ஒரே வகையான ஊக்கத் திட்டங்களைப் பின்பற்ற வேண்டுமெனக் கூறுவது தவறான கருத்து எனவும், ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும் தமக்கேற்ற முறையில் ஊக்கத் திட்டங்களைச் செயற்படுத்தவேண்டுமெனவும் கூறுகின்றார்.

இறுதியாக, கலப்புப் பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றுவதால், நமது பொதுத்துறை நிறுவனங்களும், தனியார்துறை நிறுவனங்களும் ஒரே வகையான சிறப்பியல்புகளைக் கொண்ட ஊக்கத் திட்டங்களைப் பின்பற்றலாமென்றும், அவைகளிடையே ஊக்கத் திட்டங்கள் மாறுபட்டுத்தான் அமையவேண்டுமென்றக் கட்டாயமில்லை எனவும் தெரிவிக்கிறார்.

3. ஊக்கத் திட்டங்களைப் பொறியியலாளர்களின் (Engineers) கண்ணோட்டத்தில் ஆராய்தல்

திரு. பி. கே. தாஸ் (P. K. Das) பொறியியல் கண்கொண்டு ஊக்கத் திட்டங்களை ஆராய்ந்து பின்வரும் கருத்துகளைக் கூறுகிறார்.

ஊக்கத் திட்டங்களைப் பொறியியலாளர்கள் சரியான முறையில் வரவேற்பதில்லை என்ற கருத்து பரவலாக நிலவுகிறது என்றும், இக் கருத்து முற்றிலும் தவறானது எனவும் கூறுகிறார். இயந்திரப் பொறிகளின் உற்பத்தித் திறனுக்கு ஓர் அதிகபட்ச வரம்பு இருக்கின்றது; எனவே, எவ்வித ஊக்கத் திட்டங்களினாலும், அவற்றின் உற்பத்தித் திறன் அதிகரிக்காது எனக் கருதப்படுகிறது. ஆனால், போதுமான உராய்வைத் தவிர்க்கக் கூடிய எண்ணெய்களைப் பயன்படுத்துதல் மூலமும், புதிய நுட்பமான முறைகளைப் பின்பற்றுவதன் மூலமும் இயந்திரப் பொறிகளின் உற்பத்தித் திறனை நிச்சயமாக அதிகரிக்கச் செய்யலாம். அதுபோலவே, பொறியியலாளர்களின் திறமையும், சிறந்த ஊக்கத் திட்டங்களின் மூலம் அதிகரிக்கப்படலாம்; ஏனெனில், ஊக்கத் திட்டமென்பது ஒருவித இயைபியக்கம் ஊக்கி (Catalysts) போன்றதே. மேற்கண்டவாறு திரு. பி. கே. தாஸ் ஊக்கத் திட்டங்களைப் பற்றி தன் கருத்துகளைக் கூறுகிறார்.

ஊக்கத் திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், முன்னேற்றுவதிலும் பொறியியலாளர்கள் பெரும்பங்கு வகிக்கின்றனர். ஊக்கத் திட்டங்கள் அனைத்துமே பயன்களின் அல்லது முடிவுகளின் அடிப்படையில் இயங்குகின்றன. எனவே, நிறுவனங்களில் இப் பயன்கள் அல்லது முடிவுகள் அளவிடப்படவேண்டுவது மிகவும் இன்றியமையாததாகும். ஆனால், தொழிலமைப்புகளில் இத்தகைய பயன்களை அளவிடுதல் மிகவும் சிக்கலான ஒரு பிரச்சினையாகும். இங்குதான், பொறியியலாளர்களின் பணி அவசியமாகிறது. தொழில் நடவடிக்கைகளின் முடிவுகளை எளிமையானதும், சிக்கனமானதுமான வகையில் அளவிட சிறந்த வழிமுறைகளைப் பொறியியலாளர்கள் கண்டுபிடிக்கவேண்டும். அப்போதுதான் ஊக்கத் திட்டங்கள் எளிதாகச் செயற்படுத்தப்பட முடியும். அடுத்ததாக, தொழிலாளர்களின் திறமையும் ஊதியமும் எவ்வாறு எதிரிணைப்படுத்தப்படவேண்டும் (Correlation) எனவும் பொறியியலாளர்கள் முடிவு செய்யவேண்டும். இந் நிலையில், ஊக்கத் திட்டங்களை முன்னேற்றப் பொறியியலாளர்கள், பொருளாதார ஆய்வாளர்கள் மற்றும் மனோதத்துவ நிபுணர்கள் ஆகியோரைக் கொண்ட குழு செயற்படவேண்டும்; மேலும்,

(i) மனித முயற்சியால் அதிகபட்சம் உற்பத்தி எந்த அளவு வரை உயரக்கூடும்.

(ii) எந்த அளவில் தொழிலாளர்களுக்குக் கூடுதல் ஊதியம் அமையவேண்டும்.

(iii) கூடுதல் ஊதியம், திறமையை வளர்க்கக்கூடிய வகையில் ஊக்கத் திட்டமாக அமையக்கூடுமா?

(iv) எந்த அளவு வரை, கூடுதல் ஊதியம் சிக்கனமானதாக அமையும் என்பனபோன்ற கருத்துகளும் அக் குழுவால் ஆராயப்படவேண்டும்.

இறுதியாக, ஊக்கத் திட்டங்கள் தொழிலமைப்புகளின் வளர்ச்சிக்கேற்றவாறு மாற்றியமைக்கப்படவேண்டுவது மிகவும் அவசியமாகும். அவ்வாறு மாற்றியமைக்கப்படாவிடில், தொழிலாளர்களின் திறமைக்கேற்றவாறு, ஊக்க ஊதியம் அமைய வாய்ப்பேற்படாது. எனவே, இயந்திரப்பொறிகள், மூலப் பொருள்கள், உற்பத்தி முறைகள், பொருள்களின் தரம் போன்றவைகளில் ஏற்படும் மாறுதல்களுக்கேற்ப, பொறியியலாளர்கள் ஊக்கத் திட்டங்களை அடிக்கடி மாற்றியமைக்க வேண்டும். இவ்வாறு, ஊக்கத் திட்டங்களைப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் செயற்படுவதில் பொறியியலாளர்கள் முக்கியப் பங்கை ஏற்கின்றனர் என திரு. பி. கே. தாஸ் கூறுகிருர்.

4. ஊக்கத் திட்டங்களை ஆளினரின் கண்ணேட்டத்தில் ஆராய்தல் (The Personnel approach to the Incentive Schemes)

திரு. ஏ. கே. முகர்ஜி (A. K. Mukarji) என்பவர், ஒரு புகழ் பெற்ற தனியார்துறைத் தொழிலமைப்பின் தலைமை ஆளினர் அதிகாரியாகப் பணிபுரிந்தவர். அவர் பொதுத்துறை நிறுவனங்களில் செயற்படும், ஊக்கத் திட்டங்களைப் பணியாளர்களின் கண்ணேட்டத்தில் ஆராய்ந்து பின்வரும் கருத்துகளைத் தொகுத்தளிக்கிருர்.

முதலாவதாக, ஊக்கத் திட்டங்களின் படிவங்களை (Norms) முடிவுசெய்வதே மிக முக்கியப் பிரச்சினையாகும்; இப் பிரச்சினை பொதுத்துறை, தனியார்துறை ஆகிய இருவகைத் தொழிலமைப்புகளுக்கும் பொதுவானதாகும். அடுத்ததாக, பல பொதுத்துறைத் தொழிலமைப்புகளில், ஆளினரிடையே ஊக்கத் திட்டங்களைப் பற்றிய தவருன கருத்துகள் நிலவுகின்றன. எடுத்துக்காட்டாக, கடும் உழைப்பினுல் தொழிலாளர்கள் ஊக்க ஊதியங்களைப் பெற்ருல், அவர்களுடைய ஊதியம் குறைக்கப் பட்டுவிடும் என்றவொரு கருத்து அவர்களின் மனத்தில் ஆழமாகப் பதிந்துள்ளது. இதனுல் ஊக்கத் திட்டங்கள் பல வெற்றியடைவதில்லை. எனவே, ஊக்கத் திட்டங்களை வகுக்கும் போது, ஆளினர், மேலாளர் பின்வரும் கருத்துகளை மனத்திற் கொள்ளவேண்டும்.

(i) தொழிலுறவும் (Industrial Relations) அதன் முன்னேற்றமும்.

(ii) தொழிலாளர்களின் சமூக மற்றும் பொருளாதார அமைப்பு முறை.

(iii) தொழிலாளர்களின் குழுக்களிடையே நிலவும் உறவு.

(iv) தொழிலாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்குமிடையேயான உறவு.

(v) பணியின்மீது தொழிலாளர்களுக்கு ஏற்படும் ஆர்வம் அல்லது சலிப்பு (Monotonous).

ஆனல், ஆளினர் துறையின் வெற்றி, ஒரு நிறுவனத்தின் பொதுக் கொள்கையையும், ஆளினர் துறையின் பணிகளுக்கு அது கொடுக்கும் முக்கியத்துவத்தையும் பொறுத்துள்ளது. ஒரு நிறுவனத்தின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதற்கு, கீழ்க்காணும் அம்சங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

(i) தொழிலாளர்களுடன் நீண்ட கால உடன்படிக்கைகளை ஏற்படுத்திக்கொள்ளுதல். இதனல், சிறந்த தொழிலுறவு ஏற்பட்டு, நிறுவனம் விரைவான வளர்ச்சியடையும்.

(ii) பணி மதிப்பீட்டின் அடிப்படையில் ஊதியத்தை நிர்ணயம் செய்தல்.

(iii) தொழிலாளர்களின் திறனை மதிப்பிடுதல்.

(iv) தொழிற் கொள்கைகளை நிர்ணயிக்கும்போது, தொழிலாளர்களின் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்தல்.

(v) தொழிலாளர்களுக்கு நிறைவு தரும் வகையில் பணிச் சூழ்நிலைகளை ஏற்படுத்துதல்.

(vi) பணியாளர்களின் பயிற்சி, பணியிலமர்த்தும் முறை ஆகியவைகளின் முன்னேற்றம் காணல்.

(vii) ஏற்றதொரு கொடை ஊதியத் திட்டத்தைச் (Bonus Plan) செயற்படுத்துதல்.

மேற்கண்ட அம்சங்களின் அடிப்படையில் ஊக்கத் திட்டங்கள் ஏற்படுத்தப்பட்டு, பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் செயற்படுத்தப்பட்டால் உற்பத்தி அதிகரித்து, அடக்கச் செலவு குறைவடைந்து இலாபம் பன்மடங்காக அதிகரிக்கும்.

சில பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஊக்கத் திட்டங்கள்

1. இந்துஸ்தான் எஃகு ஆலையில் ஊக்கத் திட்டம் (Incentive Scheme in Hindustan Steel Ltd.)

(அ) வரலாறும், நோக்கங்களும்

முதன் முதலாக 1959ஆம் ஆண்டில் ரூர்கேலா மற்றும் பிலாய் ஆகிய இடங்களில் எஃகு ஆலைகள் தொடங்கப்பட்டன. பிறகு, 1961ஆம் ஆண்டில் வேறு பல பிரிவுகளும் தொடங்கப் பட்டன. ஆனால், எதிர்பார்த்த அளவில் உற்பத்தி அமைய வில்லை. எனவே, 1961ஆம் ஆண்டில், முதன் முறையாக ஊக்கத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. அதற்கு 'இந்துஸ் தான் எஃகு ஆலை கொடையூதியத் திட்டம்' எனப் பெயரிடப் பட்டது. ஒரே சமயத்தில் பிலாய், ரூர்கேலா, துர்காபூர் ஆகிய மூன்று இடங்களில் செயற்பட்ட ஆலைப் பிரிவுகளிலும் இத் திட்டம் செயற்படுத்தப்பட்டது. ஊக்கத் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டபோது, ஆலைப் பிரிவுகளின் உற்பத்தித் திறன் பின்வரும் சதவீதத்தில் அமைந்திருந்தது:

துர்காபூர் எஃகு ஆலை = 16·8%

ரூர்கேலா எஃகு ஆலை = 20·6%

பிலாய் எஃகு ஆலை = 40·2 %

எனவே, துர்காபூர் ஆலையில் 83.2 சதவீதமும், ரூர்கேலா ஆலையில் 79.4 சதவீதமும், பிலாய் ஆலையில் 59.8 சதவீதமும் உற்பத்தித் திறன் பயன்படுத்தப்படவில்லை என்பது தெளிவா கிறது.

நோக்கங்கள்

(i) மேற்கண்ட மூன்று ஆலைப் பிரிவுகளையும் சார்ந்த தொழிலாளர்களின், பொறியியலாளர்கள், தொழில் நுட்ப வல்லுநர்கள் ஆகியோரை ஊக்குவித்தல், மற்றும்

(ii) குறுகிய காலத்தில், அதிக உற்பத்தியை ஏற்படுத்து தல் ஆகிய நோக்கங்களுடன் ஊக்கத் திட்டம் செயற் படுத்தப்பட்டது.

(ஆ) ஊக்கத் திட்டத்தின் வகை

ஊக்கத் திட்டத்தைச் செயற்படுத்தவேண்டும் என முடிவு செய்யப்பட்ட பிறகு, அத் திட்டம் எவ்வகையில் அமையவேண்டு மென்ற பிரச்சினை எழுந்தது. தனி நபர் திட்டமாக அமைய

வேண்டுமா அல்லது குழுக்களின் திட்டமாக (Group Plans) அமையவேண்டுமா? அப்படி குழுக்களின் அடிப்படையில் திட்டங்கள் அமையவேண்டுமானால் குழுக்களின் அளவு என்ன? அதன் படிவங்களை எவ்வாறு நிர்ணயிப்பது? இதுபோன்ற பல வினாக்கள் எழுப்பப்பட்டன.

பல பிரச்சினைகளையும் ஆராய்ந்த பிறகு, குழுக்களின் அடிப்படையில் ஊக்கத் திட்டங்களைச் செயற்படுத்துவதென முடிவு செய்யப்பட்டது. இக் குழு என்பது ஒரு பிரிவில் பணிபுரியும் தொழிலாளர்களைக் குறிக்கும். எடுத்துக்காட்டு: இரும்பு உருக்கும் பிரிவைச் சார்ந்த தொழிலாளர்களின் குழு, உலோகக் கட்டி உருவாக்கும் பிரிவின் தொழிலாளர் குழு (Blooming Mill Section Employees) போன்ற குழுக்களாகும். இக் குழுக்களுக்குத் தனித் தனியாக கொடையூதியத் திட்டமும், குறி எண்களும் (Target Figures) நிர்ணயிக்கப்பட்டன. இரும்பு உருக்கும் பிரிவைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு, அவர்களுடைய உற்பத்தியின் அடிப்படையில் கொடையூதியம் நிர்ணயம் செய்யப்பட்டது. ஆனால், மற்றப் பிரிவுகளைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அவர்களுடைய பிரிவின் உற்பத்தியும், மற்றப் பிரிவுகளின் உற்பத்தியும் ஒருங்கிணைந்ததாகக் கணக்கிடப்பட்டது. சிக்கனமற்ற ஊக்கத் திட்டம் அமைந்துவிடாமலிருக்கவும், சரிசம உற்பத்தியை அனைத்துப் பிரிவுகளிலும் ஏற்படுத்தவும் மேற்கண்ட பிரிவுகள் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டன. ஊக்கத் திட்டங்களைச் செயற்படுத்தும் நோக்கத்துடன், இரும்பு ஆலையின் நடவடிக்கைகள் பின்வரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன: I. உற்பத்தித் துறை, II. பராமரிப்புத் துறை, III. பணித்துறை, மற்றும் IV. பொதுத் துறை (General Group). II, III & IV துறைகளை, உற்பத்திச் சாராத துறைகள் என அழைக்கலாம்.

(இ) ஊக்கத் திட்டங்களின் அளவு

அடிப்படை ஊதியத்தில் 10 சதவீதத்திற்குக் குறையாமலும், 50 சதவீதத்திற்கு அதிகமாகாமலும் கொடை ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது. ஒரு தொழிலாளி 100 சதவீதம் உற்பத்தித் திறனை அடைந்துவிட்டால், அவருக்கு அடிப்படை ஊதியமும், பிறகு அதில் 50 சதவீதம் கொடை ஊதியமும் சேர்த்து வழங்கப்படும். ஊக்கத் திட்டங்களின் அளவு அப்போது நிலவிய கூலி அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது. எனவே, அடிப்படைக் கூலி அல்லது சம்பளம் மாறுவதற்கேற்ப கொடை ஊதியத்தின் அளவும் மாற்றி அமைக்கப்படும்.

உற்பத்தி அளவு குறிப்பிட்ட குறி எண்ணுக்குள் இருந்தால், எவ்விதமான கொடை ஊதியமும் அளிக்கப்படமாட்டாது. ஆனால், குறி அளவைவிட உற்பத்தி அதிகரித்தால், தொழிலாளர்கள் 50 சதவீதம் வரை கொடை ஊதியம் பெற வாய்ப்புண்டு.

(ஈ) உற்பத்திச் சார்ந்திராத துறைகளுக்கு ஊக்கத் திட்டங்கள்

மேற்கண்ட ஊக்கத் திட்டங்கள், உற்பத்தித் துறைகளுக்கு மட்டும்தான் பொருந்தும். எனவே, உற்பத்தியில் ஈடுபடாத மற்றவகைத் துறைகளில் ஊக்கத் திட்டங்கள் எவ்வாறு செயற்படுகின்றன எனக் காண்போம்.

உற்பத்தியில் ஈடுபடாத துறைகளில், பணியின் தன்மையை அடிப்படையாகக் கொண்டு ஊக்கத் திட்டங்கள் செயற்படுகின்றன. ஆராய்ச்சி, போக்குவரத்து, மூலப்பொருள்கள், பாதுகாப்பு, நீர் அளிப்பு, மின்சாரம் வழங்கல் போன்ற பணிகளில் ஈடுபட்டுள்ள துறைகள் உற்பத்திச் சாராத துறைகளாகும். இத் துறைகளில் நிறைவேற்றப்பட்டுள்ள பணிகளின் தன்மையைப் பொறுத்து கொடை ஊதியம் நிர்ணயிக்கப்படுகிறது.

பராமரிப்புத் துறையில், இயந்திரத் தொகுதிகள், வாகனங்கள் போன்றவைகள் பராமரிக்கப்பட்டிருக்கும் முறையின் அடிப்படையில் கொடையூதியம் நிர்ணயிக்கப்படுகிறது. சாதாரணமாக, இத் துறையைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு, உற்பத்தித் துறைத் தொழிலாளர்களைவிடக் குறைவான சதவீதத்தில் ஊதியம் கணக்கிடப்படுகிறது.

(உ) ஊக்கத் திட்டங்கள் செயற்படும் கால அளவு

பொதுவாக, ஊக்கத் திட்டங்கள், ஒரு வாரம் முதல் ஒரு ஆண்டு வரையில் நிறைவேற்றப்பட்ட பணிகள் அல்லது உற்பத்தியின் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றன. பல பிரிவுகளில், ஒவ்வொரு மாதமும் அடிப்படை ஊதியமும் அத்துடன் ஊக்க ஊதியமும் அளிக்கப்படுகின்றன. இதனால், சிக்கல் குறைந்து நிருவாகத்தில் சிக்கனம் ஏற்படுகிறது.

(ஊ) மேலாண்மைக் குழுவின் அதிகாரம்

தேவையான நேரங்களில், ஊக்கத் திட்டத்தின் அளவையோ அல்லது கணக்கிடப்படும் கால அளவையோ மாற்றி அமைக்க

மேலாண்மைக் குழுவிற்கு முழு அதிகாரமுண்டு. அதுபோன்றே, உற்பத்திக்கும் கொடையூதியத்திற்குமிடையேயான எதிரிணை சதவீதத்தை நிர்ணயிக்கும் உரிமையும் மேலாண்மைக் குழுவிற்குண்டு. உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் தரம் குறைந்தவைகளாக இருந்தால், அவைகள் மொத்த உற்பத்தியிலிருந்து கழிக்கப்பட்டுக் கணக்கிடப்படும்.

(எ) கொடை ஊதியம் பெறத் தேவையான தகுதி

ஒரு தொழிலாளி கொடையூதியம் பெறவேண்டுமானல் அவர் தொடர்ந்து பணியாற்றியிருக்கவேண்டும். பணிபுரிந்த நாட்களுக்கு மட்டும்தான் கொடையூதியம் கணக்கிடப்படும். பின்வரும் சந்தர்ப்பங்களில் தொழிலாளிக்குக் கொடையூதியம் அளிக்கப்படுவதில்லை.

(i) பணியில் சேர எடுத்துக்கொள்ளும் நாட்கள்.

(ii) பகராண்மையின் அடிப்படையில் வேறு பணிகளுக்கு அனுப்பப்பட்ட நாட்கள்.

(iii) பயிற்சி முகாமிற்குச் சென்ற நாட்கள்.

(iv) மேலாண்மையின் ஆணையின் காரணமாக, பணியிலிருந்து நீக்கப்பட்ட நாட்கள்.

(ஏ) இத் திட்டத்தின் சாதனை

இந்துஸ்தான் எஃகு ஆலையில் ஊக்கத் திட்டம் செயற்படுத்தப்பட்ட பிறகு, கணிசமான அளவில் உற்பத்திப் பெருகியது. எனவே, ஊக்கத் திட்டத்தின் நோக்கம் சிறப்பாக நிறைவேறிற்று எனக் கூறலாம்.

2. சிங்கரேணி நிலக்கரிச் சுரங்க நிறுவனத்தின் ஊக்கத் திட்டங்கள் (Incentive Plans in the Singareni Collieries)

(அ) வரலாறு

சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களில், உற்பத்தித் திறனையும், உற்பத்தியையும் அதிகரிப்பதற்காக ஊக்கத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. 1950ஆம் ஆண்டில் ஒரு மாற்று நேரத்தில் (Shift) உற்பத்தித் திறன் 0·24 டன் நிலக்கரியாக இருந்தது. இது மிகவும் குறைவான உற்பத்தித் திறனாகும்.

எனவே, ஊக்கத் திட்டங்களின் மூலமாக உற்பத்தித் திறனை 1·00 டன் நிலக்கரியாக உயர்த்தத் திட்டமிடப்பட்டது.

(ஆ) ஊக்கத் திட்டத்தின் நோக்கங்கள்

(i) உற்பத்தித் திறனையும், உற்பத்தியையும் அதிகரித்தல்.

(ii) அதிகப்படியான உற்பத்தியினால் கிடைக்கக்கூடிய இலாபத்தை, தொழிலாளர்களுக்குப் பிரித்து வழங்குதல் மூலம் அவர்களின் ஊதியத்தை அதிகரித்தல்.

(iii) அடக்கச் செலவைக் குறைத்தல், மற்றும்

(iv) சுமுகமான தொழிலுறவை ஏற்படுத்துதல் ஆகியவைகளே ஊக்கத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதன் நோக்கங்களாகும்.

மேலும், ஐந்தாண்டுத் திட்டங்களில் நிலக்கரி உற்பத்தியின் குறி எண்கள் (Targets) உயர்த்தப்பட்டதால், ஊக்கத் திட்டங்களின் மூலமாக, அதிகப்படியான உற்பத்தியை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டது. நிலக்கரி உற்பத்தியின் குறி எண்கள், ஐந்தாண்டுத் திட்டங்களில் பின்வருமாறு உயர்த்தப்பட்டது.

நிலக்கரி உற்பத்தியின் குறி எண்கள்

ஆண்டு	குறி எண் (மில்லியன் டன்களில்)
1955	1·5
1958	2·0
1961-62	3·0
1965-66	4·1 (முதலில் 1965—66ஆம் ஆண்டிற்குக் குறி எண் 5·5 மில்லியன் டன்களாக நிர்ணயிக்கப்பட்டு, பிறகு 4·1 டன்னாகக் குறைக்கப்பட்டது).

(இ) ஊக்கத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்ட முறை

தொழிலியலாளர்களாலும், நிபுணர்களாலும் இயல்முறையின் அடிப்படையில் வகுக்கப்பட்டு, ஊக்கத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. ஒவ்வொரு நிலக்கரிச் சுரங்கத்தைச் சார்ந்த தொழிலாளர்களுக்கும், தனித்தனியே வேலைப்பளு நிர்ணயிக்கப் பட்டு, அதன் அடிப்படையில் ஊக்கத் திட்டங்கள் அமைக்கப் பட்டன. சுமுகமான தொழிலுறவை ஏற்படுத்தவும், தொழிற்

பூசல்களைத் (Industrial Disputes) தவிர்க்கவும் ஊக்கத் திட்டங்கள் தொழிற்சங்கத் தலைவர்களின் ஆலோசனைக்குப் பிறகே செயற்படுத்தப்பட்டன. தொழிற்சங்கத் தலைவர்கள் அனைவருமே ஊக்கத் திட்டங்களை ஆதரித்தனர் என்பதை நாம் ஈங்கு நினைவு கூர்தல் வேண்டும்.

சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களில், பலவிதமான பணி நிலைகளிலும், படிப்படியாக ஊக்கத் திட்டங்கள் அறிமுகப் படுத்தப்பட்டன. முதன்முதலாக 1951ஆம் ஆண்டில், கோத்த கூடத்தில் (Kothagudam) அமைந்துள்ள நிலக்கரிச் சுரங்கப் பிரிவில் ஊக்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, பிறகு படிப் படியாக மற்றப் பிரிவுகளுக்கும் விரிவாக்கப்பட்டது.

நிலக்கரியைத் தோண்டி எடுக்கும் சுரங்கத் தொழிலாளர் களிடையே, முதலில் ஊக்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன: ஏனெனில், சுரங்கத் தொழிலுக்கு அவர்களே முதுகெலும்பு போன்றவராவர். மேலும், உற்பத்தியை அதிகரிக்க, முதல் படியாக அதிக நிலக்கரி, சுரங்கங்களிலிருந்து தோண்டி எடுக்கப் படவேண்டும்; பிறகுதான் சுத்திகரிப்பு வேலை தொடங்கப்படும். 1966ஆம் ஆண்டில், மொத்தத் தொழிலாளர்கள் 2,620-ல், 75 சதவீதத் தொழிலாளர்கள் ஊக்கத் திட்டங்களின்கீழ் கொணரப் பட்டனர்.

சிங்கரேணி நிலக்கரிச் சுரங்க நிறுவனத்தில், குழுக்களின் அடிப்படையில் ஊக்கத் திட்டங்கள் அமைக்கப்பட்டன. வேலைப் பளுவின் அடிப்படையில், தொழிலாளர்கள் பல குழுக்களாகப் பிரிக்கப்பட்டனர். இக் குழுக்கள் தொழிலியல் துறை வல்லுநர் களால் நிர்ணயிக்கப்படுகின்றன. குழுக்கள் சிறியதாக அமையும்போது, அதிக அளவில் ஊக்க ஊதியம் கிடைக்கும். மேலும், சிறிய குழுக்களில் திறமையற்ற தொழிலாளர்களை இனம் கண்டு, தனியாகப் பயிற்சி அளிக்க முடியும்.

(ஈ) ஊக்கத் திட்டங்களின் சாதனை

சிங்கரேணி நிலக்கரிச் சுரங்கங்களில் ஊக்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதன் விளைவாக, உற்பத்தி படிப்படியாக அதிகரித்தது. 1965ஆம் ஆண்டில், அதுவரை ஏற்பட்டிராத வகையில் 4·85 இலட்சம் டன் நிலக்கரி உற்பத்தி செய்யப் பட்டது. மேலும், பின்வருமாறு ஆண்டுக்கு ஆண்டு நிலக்கரி உற்பத்தி அதிகரித்தது.

நிலக்கரி உற்பத்தி

ஆண்டு		உற்பத்தி (டன்களில்)
1953	......	27,265
1954	......	1,32,604
1955	......	2,53,739
1956	......	2,95,317
1957	......	3,19,377
1958	......	3,14,996
1959	......	3,68,623
1960	......	4,34,408
1961	......	4,68,924
1962	......	4,80,998
1963	......	4,64,748
1964	......	4,80,269
1965	......	4,85,035
1966	......	4,00,830

Source : நிறுவனத்தின் புள்ளி விவரம்.

ஊக்கத் திட்டங்களின் செம்மையான செயற்பாட்டின் காரணமாக, தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் அதிகரித்தது. 1950ஆம் ஆண்டில் 0·24 டன்னாக இருந்த உற்பத்தித் திறன் (ஒரு மாற்று நேரத்தில்) 1965-ல் 0·45 டன்னாக உயர்ந்தது. பின்வரும் அட்டவணை உற்பத்தித் திறன் அதிகரித்ததை விவரிக்கிறது.

ஆண்டு		ஒரு மாற்று நேரத்தில் உற்பத்தித் திறன் (டன்களில்)
1950	......	0·24
1960	......	0·54
1961	......	0·51
1962	......	0·49
1963	......	0·49
1964	......	0·42
1965	......	0·45

மேற்கண்ட அட்டவணையில் 1960ஆம் ஆண்டிற்குப் பிறகு சில ஆண்டுகளில் மொத்த உற்பத்தித் திறன் குறைந்தபோதிலும் தனி நபர்களின் உற்பத்தித் திறன் அதிகரித்திருந்தது.

3. பாரத மின்னணுச் சாதனங்கள் உற்பத்தி நிறுவனத்தில் ஊக்கத் திட்டங்கள் (Incentive Schemes in Bharat Electronics Ltd.)

மொத்த உற்பத்தியையும், தனி நபர்களின் உற்பத்தித் திறனையும் அதிகரிக்கச் செய்ய, பாரத மின்னணுச் சாதனங்கள் உற்பத்தி நிறுவனத்தில் உற்பத்தி ஊக்கத் திட்டம் (Production Incentive Scheme) அறிமுகப்படுத்தப்பட்டது. தொழிலாளர்களின் சராசரித் திறமையின் அடிப்படையில் கொடை ஊதியம் கணக்கிடப்பட்டது. பின்வருமாறு, கொடை ஊதியக் கணக்கீடு அமைந்திருந்தது.

ஆலையின் மொத்த உற்பத்தித் திறனின் சதவீதம்	ஆண்டு முடிவில் தொழிலாளருக்கு அளிக்கப்படும் தொகை
70% க்கும் கீழ்	இல்லை
70%க்கும் அதிகம், ஆனால்80% க்கும் கீழ் ...	ரூ. 60/-
80% ,, ,, 90% ,, ...	ரூ. 85/-
90% ,, ,, 100% ,, ...	ரூ. 110/-
100% ,, ,, ———	ரூ. 144/-

ரூ. 600/- மாத ஊதியம் அல்லது அதற்கும் குறைவாக ஊதியம் பெறும் தொழிலாளர்கள் அனைவருக்கும் மேற்கண்ட அட்டவணையின் அடிப்படையில் கொடை ஊதியம் அளிக்கப்பட்டது. இவ்வூக்கத் திட்டத்தின் விளைவாக நிறுவனத்தின் உற்பத்தி விரைவாக அதிகரித்தது.

மேற்கண்ட பொதுத்துறைகளில் மட்டுமல்லாமல், இந்தியத் தொலைபேசி உற்பத்தி நிறுவனம், பிராகா கருவிகள் கூட்டுரு (The Praga Tools Corporation Ltd.), திருவாங்கூர் இரசாயன உர உற்பத்தி நிறுவனம், போக்குவரத்து நிறுவனங்கள், இந்திய உரக் கூட்டுரு, இந்துஸ்தான் பூச்சிக்கொல்லி மருந்துகள் உற்பத்தி நிறுவனம் போன்ற எண்ணிறைந்த பொதுத்துறைத் தொழிலமைப்புகளிலும் பல்வேறு வகையான ஊக்கத் திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு, வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றன. ஊக்கத் திட்டங்களின் காரணமாகத்தான் பல பொதுத்துறை நிறுவனங்களில் உற்பத்தி அதிகரித்து, அதிக அளவில் இலாபமேற்பட்டுள்ளது எனக் கூறலாம்.

10. பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் தொழிற்பூசல்களும், தொழிலுறவும்

(Industrial Disputes and Industrial Relation in Public Enterprises)

தொழிற்பூசல்கள் (Industrial Disputes)

பொதுத்துறை நிறுவனங்களில், மேலாண்மைக் குழுவினருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே பல சந்தர்ப்பங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, தொழிற் பூசல்களாக உருவெடுக்கின்றன. தொழிற்புரட்சியின் விளைவாக ஏற்பட்டதே இத் தொழிற்பூசலாகும். தொழிலமைப்பு அளவில் வளர்ச்சியடையும் போது, பலவிதமான பிரச்சினைகள் தோன்றுகின்றன. அவைகளில் முக்கியமான பிரச்சினை தொழிற்பூசல்களாகும். இதன் விளைவாக, வேலைநிறுத்தங்கள், (Strikes), கதவடைப்புகள் (Lock-out) போன்ற விரும்பத்தகாத நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு, தொழிலமைப்புகள் பாதிக்கப்படுகின்றன.

'1947ஆம் ஆண்டு தொழிற்பூசல்கள் சட்டம்' (Industrial Disputes Act, 1947) *தொழிற்பூசல் என்ற சொல்லுக்குப் பின் வருமாறு வரைவிலக்கணம் தருகிறது. "தொழிலாளருக்கும் பணிவாய்ப்பளிப்பவருக்குமிடையேயோ அல்லது தொழிலாளர் களுக்கிடையேயோ ஏற்படும் பூசல் அல்லது கருத்து வேறுபாடு களுக்கு, தொழிற்பூசல் எனப் பொருள்."*

எனவே, தொழிற்பூசல்கள், தொழிலாளர்களுக்கும் தொழிலமைப்புகளின் மேலாண்மைக் குழுவினருக்குமிடையே மட்டுமன்றி தொழிலாளிகளிடையேகூடத் தோன்ற வாய்ப்புகள் உண்டு. இருந்தபோதிலும், நடைமுறையில் தொழிற்பூசல்கள் என்றால், தொழிலாளருக்கும், மேலாண்மைக் குழுவினருக்குமிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளையே குறிக்கும்.

தொழிலமைப்பொன்றின் வளர்ச்சிக்கு, அது தனியார்துறையைச் சார்ந்ததாக இருந்தாலும் அல்லது பொதுத்துறையைச் சார்ந்ததாக இருந்தாலும், சுமுகமான தொழிலுறவு தொழிலாளர்களுக்கும், மேலாண்மைக் குழுவுக்குமிடையே ஏற்படவேண்டும். வேலை நிறுத்தங்கள், கதவடைப்புகள் போன்ற நடவடிக்கைகள் உற்பத்தியைப் பாதித்து, இரு சாராருக்குமிடையே கருத்து வேறுபாடுகளைத் தோற்றுவிக்கின்றன. எனவேதான், தொழிலமைப்புகளில், தொழிற்பூசல்களைக் குறைப்பதற்கு நமது மத்திய அரசு பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மற்ற முன்னேற்றமடைந்துள்ள நாடுகளில் தொழிலுறவை வலுப்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நமது நாட்டில், முதல் உலகப்போர் முடிவடையும்வரை எவ்விதத் தொழிற்பூசலும் ஏற்படவில்லை. ஆனால், முதல் உலகப் போரின் விளைவாக விலைவாசிகள் அதிகரித்ததால் தொழிலாளர்கள் அதிக ஊதியம் கேட்டனர்; ஆனால் அதிகக் கூலி அளிக்கப்படாததால் வேலைநிறுத்தத்தை மேற்கொண்டனர். பிறகு 1926 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 'தொழிற் சங்கச் சட்டம்' (Trade Union Act, 1926) வேலை நிறுத்தங்களை மேற்கொள்ள, தொழிலாளர்களுக்குப் போதிய வாய்ப்புகளை அளித்தது. இதன் காரணமாக 1937ஆம் ஆண்டில் பம்பாய், அகமதாபாத், கான்பூர், சென்னை போன்ற முக்கிய நகரங்களில் தொடர்ச்சியாகப் பல வேலை நிறுத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. பிறகுதான் '1937ஆம் ஆண்டின் தொழிற்பூசல் சட்டம்' இயற்றப்பட்டது.

இரண்டாம் உலகப்போருக்குப் பிறகு, நமது நாட்டில் தொழிற்பூசல்கள் அதிக அளவில் தோன்ற ஆரம்பித்தன. இதனால், தொழிலமைப்புகளின் உற்பத்தி மிகவும் பாதிக்கப்பட்டு, பல தொழில் நிறுவனங்கள் நலிவடைந்தன; ஒரு சில நிறுவனங்கள் மூடப்பட்டன. குறிப்பாக, 1967ஆம் ஆண்டுக்குப் பிறகு எண்ணிறைந்த வேலை நிறுத்தங்களும் மற்றத் தொழிற்பூசல்களும் ஏற்பட்டு, பல வேலைநாட்கள் வீணடிக்கப்பட்டன. முக்கியமாக, தனியார்துறைத் தொழிலமைப்புகளைவிட, பொதுத்துறைத் தொழிலமைப்புகளே தொழிற்பூசல்களால் மிகவும் பாதிக்கப்பட்டன. பின்வரும் அட்டவணையிலிருந்து, 1961ஆம் ஆண்டிலிருந்து 1973ஆம் ஆண்டுவரை ஏற்பட்ட தொழிற்பூசல்களையும், வீணடிக்கப்பட்ட வேலை நாட்களையும், அதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் அறியலாம்.

விவரங்கள்	1961-1962	1966-1967	1969-1970	1970-1971	1972-1973
1. தொழிற்பூசல்கள்	1,357	2,556	2,627	2,889	2,137
2. ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை (ஆயிரத்தில்)	512	1,410	1,827	1,828	1,227
3. இழந்த வேலை நாட்கள் (ஆயிரத்தில்)	4,919	13,846	19,048	20,563	12,750

தொழிற்பூசல்களுக்கான காரணங்கள்

பின்வரும் காரணங்களால் தொழிற்பூசல்கள் தோன்றுகின்றன.

1. அதிகக் கூலி தேவைப்படுதல்

தொழிற்பூசல்கள் ஏற்பட மிக முக்கியக் காரணம், அதிகக் கூலி தேவை என்ற கோரிக்கையாகும். தொழிலாளர்களின் வாழ்க்கைச் செலவுகளுக்கேற்றவாறு ஊதியம் நிர்ணயிக்கப் படாததால், இப் பூசல்கள் ஏற்படுகின்றன. போதிய கூலி அளிக்கப்படாதபோது, தொழிலாளர்கள் மனநிறைவடைவதில்லை. இதனால், கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, தொழிற்பூசல்களாக உருவாகின்றன.

2. கொடையூதியம் தேவை என்ற கோரிக்கை

அடுத்ததாக, தொழிலாளர்கள் கொடையூதியம் கேட்கும்போது, மேலாண்மைக் குழுவினருக்கும், தொழிலாளர்களுக்குமிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு, தொழிற்பூசல்கள் ஏற்பட வழிவகுக்கின்றன. தொழிலமைப்பு இலாபமீட்டும் போது அந்த இலாபத்தில் தொழிலாளர்களுக்கும் பங்களிக்கப் படவேண்டுமென்ற கருத்து இயற்கையாகத் தோன்றி, தொழிலாளர்களை வேலை நிறுத்தம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்துவிடுகிறது.

3. சிறந்த பணிச் சூழ்நிலைகள் தேவைப்படுதல்

குறைந்த வேலை நேரம், அதிக விடுமுறை நாட்கள், ஆலைகளில் போதிய பாதுகாப்பு வசதிகள், மருத்துவ வசதிகள், சிற்றுண்டி விடுதி வசதிகள், கழிவறை வசதிகள் போன்ற வசதிகள் விரி

வாக்கப்பட்டு, முன்னேற்றப்படவேண்டுமெனத் தொழிலாளர்கள் கோரிக்கைகளை எழுப்பும்போதும் பூசல்கள் தோன்றுகின்றன.

4. தொழிற்சங்கங்களை அங்கீகரிக்க மறுத்தல்

மேலாண்மைக் குழுவினர், தொழிலாளர்களின் தொழிற் சங்கங்களை அங்கீகரிக்க மறுக்கும்போது தொழிற்பூசல்கள் எழுகின்றன.

5. வேலை நீக்கம் அல்லது ஆட்குறைப்பு மேற்கொள்ளப்படுதல்

தேவையற்ற தொழிலாளர்களை ஆட்குறைப்பு செய்யும் போதும், ஒழுங்குமுறைத் தவறும் பணியாளர்களை வேலை நீக்கம் செய்யும்போதும், திரும்பவும் அவர்களைப் பணியில் சேர்க்க வேண்டும் என மற்றத் தொழிலாளர்கள் கோரிக்கை எழுப்பு கின்றனர்; இதனுல் தொழிற்பூசல்கள் தோன்றுகின்றன.

6. அரசியல் காரணங்கள்

பல பொதுத்துறை நிறுவனங்களில், தொழிலாளர் சங்கங் களில் அரசியல் கட்சிகளின் ஊடுருவல் ஏற்பட்டு, அதன் காரண மாகத் தொழிலாளர்களிடையே குழப்பங்களும் பூசல்களும் ஏற்பட்டு, தொழிற்பூசல்களாக உருவெடுக்கின்றன. தங்கள் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ள அரசியல் கட்சிகள் தொழிற்சங்கங்களைத் தங்கள் கருவிகளாகப் பயன்படுத்துவதே இத்தகைய பூசல்கள் ஏற்படக் காரணமாகும்.

மேற்கண்ட காரணங்களுள், அதிகக் கூலி, கொடையூதியம் ஆகியவைகளைக் கோருவதன் காரணமாகத்தான் 45% தொழிற் பூசல்கள் தோன்றுகின்றன. பின்வரும் அட்டவணை தொழிற் பூசல்கள் தோன்றக் காரணமாக அமையும் கோரிக்கைகளின் சதவீதத்தை விவரிக்கிறது.

காரணங்கள்	ஆண்டுகள்				
	1961-1962	1966-1967	1968-1969	1969-1970	1971-1972
	(சதவீதத்தில்)				
(1) கூலி மற்றும் பஞ்சப் படிகள்	30·4	35·8	38·4	36·0	37·1
(2) கொடையூதியம்	6·9	13·2	9·4	10·0	10·6

அட்டவணை (தொடர்ச்சி)

1	2	3	4	5	6
(3) ஆட்குறைப்பு	29·3	25·3	28·2	26·6	25·6
(4) விடுமுறை, வேலை நேரம் முதலியவை	3·0	2·4	1·9	2·2	2·1
(5) ஒழுங்குமுறையின்மை	...	...	3·2	3·8	3·8
(6) மற்றக் காரணங்கள்	30.4	23·3	18·9	21·4	20·8

பின்வரும் அட்டவணை, 1971-'72-ல் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஏற்பட்ட தொழிற்பூசல்களின் எண்ணிக்கையையும், வேலைநாட்கள் இழப்பையும் காரணங்களின் அடிப்படையில் பாகுபடுத்திக் காட்டுகிறது.

காரணங்கள்	தொழிற் பூசல்களின் எண்ணிக்கை	ஈடுபட்ட தொழிலாளர்களின் எண்ணிக்கை	இழந்த வேலை நாட்களின் எண்ணிக்கை
(1) கூலி மற்றும் படிகள்	152	1,70,496	15,41,766
(2) கொடையூதியம்	21	47,292	1,84,075
(3) ஆளினர் பிரச்சினைகள்	56	29,010	97,460
(4) ஆட்குறைப்பு	5	1,503	4,841
(5) விடுமுறை, வேலைநேரம் போன்றவை	12	11,675	27,557
(6) ஒழுங்குமுறையின்மை	1	3,840	52,532
(7) மற்றக் காரணங்கள்	132	99,340	3,43,189
(8) காரணம் தெரியாதவைகள்	6	404	1,990
கூடுதல் ...	385	3,63,560	22,53,410

(Source : Indian Statistics & India 1975)

1970-'71, 1971-'72ஆம் ஆண்டுகளில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் ஏற்பட்ட வேலை நாட்களின் இழப்பை, பின்வரும் அட்டவணை விளக்குகிறது.

தொழிலமைப்பின் வகை	1970-'71	1971-'72
(1) விவசாயம், மீன்வளம், வனத்துறை முதலியன.	34,974	24,690
(2) சுரங்கத் தொழில்	3,36,058	4,36,433
(3) உற்பத்தித் தொழில்	4,15,819	2,77,872
(4) கட்டுமானத் தொழில்	1,58,824	57,490
(5) மின்சாரம், வாயு முதலியன.	4,71,068	6,58,067
(6) வாணிகத் தொழில்	99,359	24,092
(7) போக்குவரத்து, செய்தித் தொடர்பு	5,02,932	7,53,543
(8) பணிகள்	43,060	21,223
கூடுதல் ...	20,62,214	22,53,410

Source : Indian Statistics.

1970-'71, 1971-'72 ஆகிய ஆண்டுகளில், பொதுத்துறையில் ஏற்பட்ட கதவடைப்புகள் பற்றிய விவரங்கள் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளன.

தொழிலமைப்பின் பிரிவு	1971-'72			1972-'73		
	கதவடைப்பின் எண்ணிக்கை	ஈடுபட்ட தொழிலாளர்கள்	இழந்த வேலை நாட்கள்	கதவடைப்பின் எண்ணிக்கை	ஈடுபட்ட தொழிலாளர்கள்	இழந்த வேலை நாட்கள்
(1) விவசாயம், மீன்வளம் முதலியன	...	—	—	...	...	...
(2) சுரங்கத் தொழில்	1	5,103	11,994	...	...	...
(3) உற்பத்தித் தொழில்	3	19,709	1,51,002	1	22	374

அட்டவணை (தொடர்ச்சி)

4) கட்டு மானம்	...	...	...	...	...	...
(5) மின்சாரம், வாயு முதலியன	...	...	....	...	...	...
(6) வாணிகம்	...	...	...	1	25	1,075
(7) போக்கு வரத்து, செய்தித் தொடர்பு	—	...	...	1	17,129	2,25,654
(8) பணிகள்	2	250	1,172	...	...	...
(9) மற்றவை	—	...	...	...	...	—
கூடுதல் ...	6	25,062	1,64,168	3	17,176	2,27,103

மேற்கண்ட அட்டவணைகளில் காணப்படும் விவரங்களி லிருந்து, தொழிற்பூசல்களினால் ஏற்படும் வேலை நாட்களின் இழப்பையும், அதனால் ஏற்படக்கூடிய உற்பத்திப் பாதிப்பையும் அறியமுடிகிறது. எனவே, தொழிற் பூசல்களை அறவே தவிர்க்க அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படவேண்டும். அம்முயற்சி களைப் பற்றிச் சிறிது பார்ப்போம்.

தொழிற்பூசல்களைத் தீர்க்கும் முறைகள் (Methods of Settling Industrial Disputes)

நமது நாட்டில், 1947ஆம் ஆண்டின் தொழிற்பூசல்கள் சட்டம் கீழ்க்கண்ட முறைகளில், தொழிற்பூசல்களைத் தீர்க்க வகைசெய்கிறது.

1. தொழிற் குழுக்கள்

நூற்றுக்கணக்கான தொழிலாளர்களைக்கொண்ட தொழிற் குழுக்கள் (Works Committee) அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக் களில் மேலாண்மைக் குழுவின் பிரதிநிதிகளும், தொழிலாளர் களின் பிரதிநிதிகளும் சரிசமமாக நியமிக்கப்படுகின்றனர். இதன் முக்கிய நோக்கம், அன்றாட அலுவல்களில் இரு சாராருக்குமிடையே ஏற்படும் கருத்து வேறுபாடுகளையும், பூசல் களையும் தீர்த்து, சுமுகமான உறவை ஏற்படுத்துவதாகும். பொதுவான சில பிரச்சினைகளையும் இக் குழுக்கள் தீர்த்து வைக்கின்றன. 1971ஆம் ஆண்டில் 916 தொழிற் குழுக்கள் பொதுத்துறை நிறுவனங்களில் இயங்கி வந்தன.

2. இணக்க(ப்படுத்தும்) அதிகாரிகள் (Conciliation Officers)

இவ்வதிகாரிகள், கருத்து வேறுபாடுகளை ஆரம்ப நிலைகளிலேயே களைந்து, இரு சாராருக்குமிடையே இணக்கத்தை ஏற்படுத்துகின்றனர். இவ்வதிகாரிகள் குறிப்பிட்ட வட்டாரங்களின் அடிப்படையிலோ அல்லது தொழிலமைப்புகளின் அடிப்படையிலோ மத்திய அரசால் நியமிக்கப்படுகின்றனர். குறிப்பிட்ட கால இடைவெளிகளில் இவ்வதிகாரிகள் தொழிற்பூசல்களைப்பற்றியும், அவைகள் தீர்க்கப்பட்ட விவரங்கள் குறித்தும் அரசுக்கு அறிக்கைகளைச் சமர்ப்பிக்கின்றனர்.

3. இணக்கக் குழுக்கள் (Board of Conciliation)

இக் குழுவில் தொழிலாளர் பிரதிநிதிகளும், மேலாண்மைக் குழுவின் பிரதிநிதிகளும் சரிசமமாக இடம்பெறுகின்றனர்; இக் குழுவிற்கு, சுயச்சார்புடைய தலைவர் ஒருவரும் நியமிக்கப்படுகிறார். இக் குழுவுக்கு அறிவிக்கப்படும் தொழிற்பூசல்கள், உறுப்பினர்களால் தீர்த்துவைக்கப்படுகின்றன. இக் குழு, தொழிற்பூசல்கள் பற்றிய அறிக்கைகளை அரசுக்குச் சமர்ப்பிக்கிறது.

4. தொழிலாளர் நீதி மன்றங்கள் (Labour Courts)

ஆட்குறைப்பு, வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற தொழிற்பூசல்களைத் தீர்த்துவைக்க, தொழிலாளர் நீதிமன்றங்கள் மாநில அரசுகளால் அமைக்கப்பட்டுள்ளன.

5. முறைமன்ற விசாரணை (Court of Enquiry)

இணக்கப்படுத்தும் அதிகாரிகளால் வெற்றிகரமாகத் தொழிற்பூசல்களைத் தீர்த்துவைக்க முடியாவிடில், அரசு முறைமன்றங்களை அமைத்து விசாரணையை மேற்கொள்கிறது. இம் முறைமன்றத்தில் ஒன்று அல்லது இரண்டு நபர்கள் இடம் பெறுவர்.

6. தொழிற் தீர்ப்பாயங்கள் (Industrial Tribunal)

இத் தொழிற் தீர்ப்பாயங்கள் இரண்டு நிலைகளில் அமைக்கப்படுகின்றன. முதலாவது வகை, கூலி, கொடையூதியம் போன்றவைகளைத் தீர்த்துவைக்க மாநில அரசுகளால் அமைக்கப்படும் தீர்ப்பாயங்களாகும். உயர் நீதிமன்றத்தின் நீதிபதி, இத் தீர்ப்பாயத்திற்குத் தலைமை வகிப்பார். இரண்டாவது வகை, அகில இந்திய அளவில் மத்திய அரசு, தேசியத் தொழிற் தீர்ப்பாயத்தை அமைக்கிறது. மாநில அரசுகளின் அதிகாரங்களுக்கு

அப்பாற்பட்ட தொழிற்பூசல்கள் இத் தேசிய தொழிற் தீர்ப்பாயத்தால் தீர்த்துவைக்கப்படுகின்றன.

மற்ற முறைகள் : தொழிற்பூசல்கள் ஏற்பட்ட பிறகு அவைகளைத் தீர்த்துவைப்பதைவிட, வருமுன் காப்பதே மிகவும் சிறந்ததாகும். எனவே, நியாயமான ஊதியம், கொடையூதியம், மற்ற வசதிகள் போன்றவைகளை வழங்குவதன் மூலமாக, தொழிற்பூசல்களைத் தவிர்க்கலாம் ; பின்வரும் முறைகள் பின்பற்றப்படலாம்.

1. ஊதியக் குழுக்கள் (Wage Boards)

நியாயமான ஊதியத்தை நிர்ணயிக்க, ஊதியக் குழுக்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. 1968ஆம் ஆண்டுவரை 19 தொழிலமைப்புகளில் இத்தகையக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக் குழுக்களின் பரிந்துரைகளை, தொழிலமைப்புகள் தன்னிச்சையாகப் பின்பற்றுகின்றன. இதனால் தொழிற்பூசல்கள் தவிர்க்கப்படுகின்றன.

2. கொடையூதியம் வழங்கல் (Payment of Bonus)

கொடையூதியம் வழங்குதலை முறைப்படுத்துவதற்காக 1961ஆம் ஆண்டில் 'கொடையூதியக் குழு' அமைக்கப்பட்டது. இது தன்னுடைய அறிக்கையை 1962ஆம் ஆண்டில் சமர்ப்பித்தது. இக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், '1965ஆம் ஆண்டில் கொடையூதியம் வழங்கல் சட்டம்' (Payment of Bonus Act, 1965) இயற்றப்பட்டது. இச் சட்டத்தின்படி, தொழிலாளர்களுக்கு, குறைந்தபட்சம் அடிப்படை ஊதியத்தில் 4 சதவீதமும், அதிகபட்சம் 20 சதவீதமும் கொடையூதியம் வழங்கப்படல் வேண்டும். 1972ஆம் ஆண்டில் இச் சட்டம் மாற்றியமைக்கப்பட்டது. புதிய சட்டத்தில், எந்த ஒரு தொழிலமைப்பும், 8·33 சதவீதத்திற்குக் குறையாமல் தொழிலாளர்களுக்குக் கொடையூதியம் வழங்கவேண்டும்.

3. கூட்டு மேலாண்மை அவைகள் (Joint Management Councils)

தொழிலமைப்புகளுடன் வலுவானதொரு பிடிப்பை ஏற்படுத்தி, சிறந்த தொழிலுறவை நிலைநாட்ட, தொழிலாளர்களுக்கு மேலாண்மைக் குழுவில் இடமளிக்கப்படவேண்டும். இதனால், மனோதத்துவ அடிப்படையில் தொழிலாளர்கள் தாங்களும் தொழிலமைப்பின் நிருவாகத்தில் ஈடுபட்டுள்ளோம் என்ற எண்ணம் ஏற்பட்டு, ஆர்வத்துடன் இணைந்து செயற்படுவர். எனவேதான், 1958ஆம் ஆண்டில், அரசு இத்தகைய 'கூட்டு

மேலாண்மை அவை' (Joint Management Council) திட்டத்தை ஏற்படுத்திற்று. இத் திட்டத்தினுல், தொழிலுறவு சுமுகமான முறையில் அமைய வாய்ப்பேற்படும். தற்போது 31 பொதுத் துறைத் தொழிலமைப்புகளில் இக் 'கூட்டு மேலாண்மை அவை' கள் வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றன. (தனியார்துறையில் 49 நிறுவனங்களில் இவ்வகையான அவைகள் செயற்படுகின்றன).

மேலும், ஒவ்வொரு பொதுத்துறைத் தொழிலமைப்பின் மேலாண்மைக் குழுவிலும் தொழிலாளர் பிரதிநிதிகள் இடம் பெறவேண்டுமென, அரசு புதிய திட்டமொன்றை அறிமுகப் படுத்தியுள்ளது.

4. தொழிற் தீர்ப்பாயங்கள் (Industrial Tribunals)

வேலை நிறுத்தங்களைத் தவிர்ப்பது அரசின் முக்கியக் கடமைகளுள் ஒன்ருகும். எனவே, தொழிற் தீர்ப்பாயங்களை ஏற்படுத்துவதன் மூலம், இத்தகைய தொழிற்பூசல்களைக் களைய அரசு முடிவு செய்தது. மாநில அரசுகளாலும், மத்திய அரசாலும் இத்தகைய தொழிற் தீர்ப்பாயங்கள் அமைக்கப்படுகின்றன.

5. தன்னியலான நடுநிலைத் தீர்ப்பும், கிரியின் அணுகுமுறையும் (Voluntary Arbitration and The Giri Approach)

1950ஆம் ஆண்டு தொழிற்பூசல்கள் சட்டம், தொழிலாளர் மேல்முறையீடு தீர்ப்பாயம் (Labour Appellate Tribunal) ஒன்றை அமைக்க வகைசெய்தது. ஆனல், 1952ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில், நைநிடாலில் (Nainital) நடைபெற்ற 'இந்தியத் தொழிலாளர்கள் மாநாட்டி'லும் (Indian Labour Conference), 1953ஆம் ஆண்டு புதுடில்லியில் நடைபெற்ற மாநிலத் தொழிலாளர் நல அமைச்சர்கள் மாநாட்டிலும், அன்னளில் மத்திய தொழிலாளர் நல அமைச்சராகப் பணிபுரிந்த திரு. V. V. கிரி, இக் கருத்தை எதிர்த்தார்; தொழிலாளர் மேல்முறையீடு தீர்ப்பாயம் என்ற அமைப்பை நீக்கவேண்டுமெனவும் கூறினர். அதற்குப் பதிலாக தன்னியலான நடுநிலைத் தீர்ப்பை ஏற்படுத்தவேண்டுமென திரு. கிரி கூறினர். இத் திட்டத்தில், தொழிலாளர்களுக்கும், மேலாண்மைக் குழுவுக்குமிடையே தன்னியலான உடன்படிக்கைகள் ஏற்பட வகை செய்யப்படும். திரு. கிரியின் கருத்துப் படி, கட்டாயமாகத் தீர்ப்பு வழங்கும் முறை நிலையான தொழிலமைதியையும், சுமுகமான தொழிலுறவையும் ஏற்படுத்தாது. எனவேதான், அவர் தன்னியலான நடுநிலைத் தீர்ப்புகளும், உடன்படிக்கைகளும் ஏற்படவேண்டும் எனக் கூறுகிருர்.

மேற்கண்ட முறைகளைப் பின்பற்றுவதன் மூலமாக, தொழிற் பூசல்களை அறவே நீக்கி, சுமுகமான தொழிலுறவை ஏற்படுத்த முடியும். மேலும், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தொழிற் பூசல்களைத் தீர்ப்பதிலும், சுமுகமான தொழிலுறவை ஏற்படுத்து வதிலும், ஒரு முன்மாதிரியாகப் பணியாற்றி, மற்றத் தனியார் துறைத் தொழிலமைப்புகளுக்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

11. அயல்நாடுகளில் பொதுத் துறைத் தொழிலமைப்புகள்

(Public Enterprises in Foreign Countries)

நமது நாட்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் அமைப்பு முறை, நிதித்திட்டம், தன்னாட்சியுரிமை, பொறுப் புடைமை ஆகிய சிறப்பியல்புகளைப் பற்றி விரிவாக முந்தையப் பகுதிகளில் கண்டோம். இதுபோன்றே, மற்ற நாடுகளில் பொதுத் துறைத் தொழிலமைப்புகளின் சிறப்பியல்புகளை இப் பகுதியில் காண்போம். அயல்நாடுகளின் பொதுத்துறை நிறுவனங்களை ஆராய்வது மிகவும் பயனுடையதாய் அமையும். மற்ற நாடுகளில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பொறுப்புடைமை, அமைச்சகத்தின் கட்டுப்பாடு, நாடாளுமன்றத்தின் கட்டுப்பாடு, தணிக்கை முறைகள் ஆகியவைகளை ஆராய்வது பொதுத்துறை யைப் பற்றி முழு அளவில் அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கும்.

எனவே, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, பிரான்ஸ், அமெரிக்கா, ஜப்பான், ருஷ்யா, யோகோஸ்லேவியா போன்ற சில முக்கிய அயல்நாடுகளில், பொதுத்துறையின் அமைப்பு முறை, நிதிநிலை, அமைச்சகத்தின் கட்டுப்பாடு, நாடாளுமன்றத் தின் பொறுப்புடைமை, தணிக்கைக் கட்டுப்பாடு ஆகியவைகளைப் பற்றி ஆராய்வோம்.

1. இங்கிலாந்து நாட்டில் பொதுத்துறை

(Public Enterprises in England)

நாம் முன்பே கண்டபடி, பொதுவாக, பொதுத்துறை நிறு வனங்கள் ஐந்து வகையான அமைப்பு முறைகளில் தோற்று விக்கப்படுகின்றன. ஆனால், பெரும்பான்மையான நாடுகளில் மூன்று வகையான தொழிலமைப்புகள்தான் மிக முக்கிய மானவைகளாகக் கருதப்பட்டு, பின்பற்றப்படுகின்றன. அவை : (i) பொதுக் கூட்டுரு அமைப்பு முறை (ii) கூட்டுப் பங்கு நிறும முறை (iii) துறைவழி நிருவாக அமைப்பு முறை.

(அ) பொதுத்துறையின் அமைப்பு முறை (Organisation of Public Enterprises)

இங்கிலாந்து நாட்டைப் பொறுத்தவரை, பொதுத்துறைத் தொழில்கள் இரண்டு வகை அமைப்பு முறைகளில்தான் தோற்றுவிக்கப்படுகின்றன. அவை முறையே, (i) துறைவழி நிருவாக முறையும் (ii) பொதுக் கூட்டுரு முறையுமாகும். தபால் தந்தித் துறை, துறைவழி நிருவாக முறையில் இயங்கும் மிகப் பெரிய தொழிலமைப்பாகும். பெரும்பான்மையான மற்றத் தொழிலமைப்புகள் அனைத்தும், பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் ஏற்படுத்தப்பட்டவைகளே.

பொதுக் கூட்டுருக்களின் சிறப்பியல்புகள்

இங்கிலாந்து நாட்டில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறை பின்வரும் சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளது.

(i) முழு உரிமையும் அரசைச் சார்ந்ததாகும்; சில நேரங்களில் கடன் பத்திரங்களின் மூலம் பொதுமக்களிடமிருந்து நிதி திரட்டப்படுகிறது.

(ii) தனிச்சட்டங்களின் மூலம் தோற்றுவிக்கப்பட்டவை; எனவே, இங்கிலாந்து நாட்டின் நிறுமச் சட்டத்திற்குட்பட்டு இயங்காது.

(iii) தனிச்சட்ட நிலையைக் கொண்டது ; அதாவது, பிறர் மீது வழக்குத் தொடுக்கவும், (பிறர் பொதுக் கூட்டுருவின் மீது வழக்குத் தொடுக்கவும்) உரிமையுண்டு.

(iv) நிதிநிலையில் தற்சார்பு இயல்பைக் கொண்டது; அரசின் கருவூலத்திலிருந்து கடன் பெறவும், பொதுமக்களிடமிருந்து கடன் பெறவும் உரிமையுண்டு; பொருள்களை விற்பதன் மூலமும் வருவாயை ஈட்டிக்கொள்ளலாம். நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டிலிருந்து பொதுக் கூட்டுருவின் நிதி நடவடிக்கைகள் விலக்களிக்கப்பட்டுள்ளன.

(v) தொழிலாளர்கள் அனைவரும் சாதாரண குடிமக்களே; பொதுக் கூட்டுருவே தொழிலாளர்களைப் பல்வேறு பணிகளில் நியமிக்கிறது.

மேற்கண்டவைகளில் இறுதியாகக் கூறப்பட்ட நான்கு சிறப்பியல்புகளும், பொதுக் கூட்டுருவை வாணிகஞ் சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் செயற்பட வாய்ப்பளிக்கும் வகையில்

இயற்றப்பட்டன. அன்றாட நடவடிக்கைகளில், பொதுக் கூட்டுரு வாணிகக் கொள்கைகளைப் பின்பற்றலாம். அதாவது, தனியார் துறைத் தொழிலமைப்புகளைப் போன்றே செயற்படும் உரிமையுண்டு.

இயக்குநரவை (Board)

ஒவ்வொரு பொதுக் கூட்டுருவும், பொறுப்புவாய்ந்த அமைச்சரால் நியமிக்கப்படும் இயக்குநரவையைக் கொண்டுள்ளது. தொழிலின் தன்மையைப் பொறுத்து இயக்குநரவை அளவில் பெரிதும் மாறுபடுகிறது. பலதரப்பட்ட நிலைகளிலிருந்து உறுப்பினர்கள் இந்த அவைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களும், அரசின் அமைச்சர்களும் தான் இந்த அவையின் உறுப்பினர் பதவியில் நியமிக்கப்பட முடியாது. மேலும் உறுப்பினர்களின் நியமனத்தில் அமைச்சரின் முடிவே இறுதியானதும், அதிகாரபூர்வமானது மாகும்.

ஒவ்வோர் இயக்குநரவையும் முழுநேர மற்றும் பகுதிநேர உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. பெரும்பான்மையான முழுநேர உறுப்பினர்கள், தொழிலமைப்பைப்பற்றி சிறந்த அறிவைப் பெற்றவர்களாகவும், இயக்குநர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள், மேலாண்மையர்கள், கணக்காயர்கள், தொழிற்சங்கத் தலைவர்கள் போன்று செயற்பட்டு அனுபவமுடையவர்களாகவும் உள்ளனர். பகுதிநேர உறுப்பினர்கள் அனைவரும், மற்றத் தொழிலமைப்புகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும், புதிய கருத்துகளைக் கூறுபவர்களாகவும் உள்ளனர். எனவே, பொதுக் கூட்டுருவின் இயக்குநரவை ஏறத்தாழ தனியார்துறைத் தொழிலமைப்புகளின் இயக்குநரவையைப் போன்றே அமைந்துள்ளன.

(ஆ) நிதி நிலைமை

போதுமான மூலதனம் பெறும் நோக்கத்துடன், ஒவ்வொரு பொதுத்துறைத் தொழிலமைப்பும் தற்சார்புடைய நிதித்திட்டங்களைப் பின்பற்றுகிறது. அரசுக் கருவூலத்தின் அனுமதியுடன் முன்னேற்றத் திட்டங்களுக்காகக் கடன்களைப்பெறும் அதிகாரம், நாட்டுடைமையாக்கப்பட்ட தொழிலமைப்புகளுக்குண்டு. கடன் தொகைக்கு நாடாளுமன்றம் வரையளவை நிர்ணயிக்கிறது. வியாபாரச் செலவுகள், தேய்மானம், வட்டி முதலியவைகளை நடைமுறை வருமானத்தைக் கொண்டு ஈடுசெய்யவேண்டும். நாட்டுடைமையாக்கப்பட்ட பிறகு பல தொழிலமைப்புகள், கடன்கள் பெற்றதன் மூலம் முன்னேற்றத் திட்டங்களை மேற்கொண்

டுள்ளன. 1956ஆம் ஆண்டுவரை, நீண்டகாலக் கடன்களைக் கடன் பத்திரங்களை வெளியிடுவதன் மூலமாகப் பொதுக் கூட்டுருக்கள் பெற்றன. ஆனால் தேசிய நிலக்கரிக் குழு (National Coal Board) மட்டும், கருவூலத்திலிருந்து நேரடியாகக் கடன் பெற்றது. ஒரு சில தொழிலமைப்புகள் வாணிக வங்கிகளிடமிருந்து, தற்காலிகக் கடன்களையும் பெற்றிருந்தன. 1956ஆம் ஆண்டு நிதிச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு அனைத்துப் பொதுக் கூட்டுருக்களும், அரசின் கருவூலத்திலிருந்து நேரடியாகக் கடன்பெற வகை செய்யப்பட்டுள்ளது. பொதுக் கூட்டுருவின் கணக்குகள், வாணிகஞ் சார்ந்த கொள்கைகளின் அடிப்படையில் பராமரிக்கப் படுகின்றன. ஆண்டு அறிக்கையுடன் கணக்குகளும் நாடாளு மன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன; குறிப்பிட்ட துறையின் அமைச்சர் கணக்குகளையும், ஆண்டறிக்கையையும் சமர்ப்பிக்கும் பொறுப்புடையவர்.

(இ) பொதுத்துறையின்மீது, அமைச்சகக் கட்டுப்பாடு (Ministerial Control of Public Enterprises)

இங்கிலாந்து நாட்டில் நாட்டுடைமைச் சட்டம் (Nationalisation Act) அமைச்சர்களுக்கு, நாட்டு நலனைப் பாதிக்கும் கொள்கைகளில், பொதுக் கூட்டுருக்களுக்குத் தேவையான ஆணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் வழங்கியுள்ளது. தொழிலமைப்புகளைக் கட்டுப்படுத்த வேறு சில அதிகாரங்களும் வழங்கப்பட்டுள்ளன.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நடவடிக்கைகள் அன்றாட நடவடிக்கைகள் எனவும், பொதுக்கொள்கை நடவடிக்கைகள் (General Policy Transactions) எனவும், இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதில், நிறுவனங்கள் தன்னாட்சியுரிமையைப் பெறுகின்றன. ஆனால், பொதுக் கொள்கை நடவடிக்கைகள், அமைச்சரவையின் கண்காணிப்புடன் மேற்கொள்ளப்படுகின்றன. குறிப்பிட்ட துறையின் அமைச்சருக்கும் பொதுத்துறை நிறுவனங்களுக்குமிடையே நெருக்கமானதும், தொடர்ந்து வருவதுமான பிணைப்பு உள்ளது.

நிதி அதிகாரங்கள் (Financial Powers)

மூலதனப் பங்குகளை வெளியிடல், கடன் பெறுதல், மூலதனச் செலவுகளை மேற்கொள்ளுதல் போன்ற நடவடிக்கைகள் கட்டாயமாக அமைச்சகத்தின் முன் அனுமதியுடன்தான் மேற்கொள்ளப்படவேண்டும். தற்காலிகக் கடன்களுக்கு, வரையளவை அமைச்சர்தான் நிர்ணயிக்கிறார். அவ் வரைமுறைக் குட்பட்டுதான் தொழிலமைப்புகள் கடன்பெற முடியும்.

நடைமுறையில், பொதுத்துறை பெறக்கூடிய எவ்விதக் கடனும் அமைச்சகத்தின் அனுமதியின் அடிப்படையில்தான் அமைகிறது. மேலும், முக்கிய முன்னேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட அமைச்சகத்தின் இசைவு தேவை.

மற்ற அதிகாரங்கள்

பொதுக் கூட்டுருவின் உறுப்பினர்கள் அமைச்சரால் நியமிக்கப்படுகின்றனர். அவர்களின் ஊதியம், பணிநிபந்தனைகள் போன்றவைகளும் அமைச்சரால்தான் தீர்மானிக்கப்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில், உறுப்பினர்களைப் பதவியிலிருந்து விலக்கவும் அமைச்சருக்கு அதிகாரமுண்டு. பொதுக் கூட்டுருவின் நுகர்வோர் குழுக்களையும் அமைச்சரே ஏற்படுத்துகிறார்.

ஒவ்வொரு பொதுத்துறைத் தொழிலமைப்பும், குறிப்பிட்ட துறை அமைச்சரிடம் அவ்வப்பொழுது சொத்துகளைப் பற்றிய விவரங்களையும், மற்ற நடவடிக்கைகளைப் பற்றிய விவரங்களையும் சமர்ப்பிக்கவேண்டும். பொதுக் கொள்கைகள் அமைச்சரின் ஆலோசனையுடன் பொதுக் கூட்டுருவால் தீர்மானிக்கப்படுகின்றன.

(ஈ) நாடாளுமன்றக் கட்டுப்பாடு (Parliamentary Control)

நாட்டுடைமையாக்கப்பட்ட தொழிலமைப்புகளின் கொள்கைகளில் நாடாளுமன்றம் பொதுக் கண்காணிப்பைச் செலுத்துகிறது. நீண்டகாலக் கடன்கள் நாடாளுமன்றத்தின் இசைவுடன் தான் பெறப்படவேண்டும். பொதுத்துறை நிறுவனங்களைக் கண்காணிக்க மூன்று வகை முக்கிய முறைகளை நாடாளுமன்றம் பின்பற்றுகிறது; அவைகள் முறையே (i) வினாக்கள் (ii) விவாதங்கள் (iii) குழுக்கள் ஆகியவைகளாகும்.

(i) வினாக்கள் : நாடாளுமன்றத்தில் வினாக்களின் மூலமாக, குறிப்பிட்ட துறையின் அமைச்சரிடமிருந்து, பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றிய விவரங்கள் பெறப்படுகின்றன. ஆனால், அன்றாட நடவடிக்கைகளைப் பற்றி வினாக்கள் அமைவது சரியல்ல எனக் கருதப்படுகிறது.

(ii) விவாதங்கள்: பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகளின் மீது, உறுப்பினர்களால் விவாதங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இம் முறை மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

(iii) குழுக்கள் : மேற்கண்ட இரு முறைகளைத் தவிர, குழுக்களை அமைப்பதன் மூலமாகவும், நாடாளுமன்றம் நாட்டுடைமை

யாக்கப்பட்ட நிறுவனங்களைக் கட்டுப்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, 'தேர்ந்தெடுக்கப்பட்ட குழு'வைக் (Select Committee on Nationalised Industries) கூறலாம். தொழிலமைப்புகளின் அறிக்கைகளையும், கணக்குகளையும் இக் குழு விரிவாக ஆராய்கிறது. இக் குழுவில், பொதுமன்றத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 13 உறுப்பினர்கள் இடம்பெறுகின்றனர். பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் அன்றாட நடவடிக்கைகளில், இக் குழு குறுக்கிடாது; மாறாக, அவைகளின் முக்கிய நடவடிக்கைகளைக் கவனித்து, தேவைப்படும் கருத்துகளைத் தெரிவிப்பதே இதன் நோக்கம் எனக் கூறப்பட்டது. தேவையான ஆவணங்களைப் பெற்று ஆராயவும், அதிகாரிகளின்மீது விசாரணைகளை மேற்கொள்ளவும் இக் குழுவிற்கு அதிகாரங்கள் உண்டு. ஆனால், தொழிலகங்களில் நேரடி ஆய்வை (Direct Inspection) இக் குழு மேற்கொள்வதில்லை. தொழிலமைப்பின் பிரதிநிதிகளும், தொடர்புடைய அமைச்சர்களும் தனித்தனியே இக் குழுவால் ஆராயப்படுகின்றனர்.

(உ) தணிக்கைமுறைக் கட்டுப்பாடு (Audit Control)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் சட்டங்கள், முறையான கணக்குகளை அவை வைத்திருக்கவேண்டுமென வலியுறுத்துகின்றன. தொழிலமைப்பின் கணக்குகள், அமைச்சரால் நியமிக்கப்படும் வழக்கமான தணிக்கையரால் தணிக்கை செய்யப்படுகிறது. (தணிக்கையர், தலைமைத் தணிக்கையரால் நியமிக்கப்படவில்லை என்பதை நினைவுகொள்ளவேண்டும்). ஆனால், அரசின் பொறுப்புறுதியுடன், தொழிலமைப்பு கடன்கள் ஏதும் பெற்றிருந்தால், நாடாளுமன்றத்தின் சார்பாக, தலைமைக் கணக்கு ஒழுங்குமுறைப் படுத்துநர் மற்றும் தணிக்கையரால் கணக்குகள் தணிக்கை செய்யப்படும். அமைச்சருக்கு வழங்கப்படும் கணக்குகளுடன், தொழிலகம் தணிக்கை அறிக்கையையும் இணைக்கவேண்டும்.

2. ஆஸ்திரேலியாவில் பொதுத்துறை (Public Sector in Australia)

(அ) அமைப்பு முறை

ஆஸ்திரேலியாவிலும், பொதுத்துறை நிறுவனங்கள் துறைவழி நிருவாக முறையிலும், பொதுக் கூட்டுரு முறையிலும்தான் அமைக்கப்படுகின்றன. ஆனால், பெரும்பான்மையான தொழிலமைப்புகள், தனிச்சட்ட நிலையுடன் தோற்றுவிக்கப்படுகின்றன. ஆஸ்திரேலியாவில் இயங்கும் தபால் நிறுவனம், துறைவழி நிருவாகத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஆஸ்திரேலிய

தேசிய வான்வழிகள் குழு (The Australian National Airlines Commission), ஆஸ்திரேலிய அலுமினியம் உற்பத்திக் குழு (The Australian Aluminium Production Commission), ஆஸ்திரேலிய அணுசக்திக் குழு (The Australian Atomic Energy Commission) போன்றவை பொதுக் கூட்டுரு அமைப்பு முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். ஒரு சில கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை நிறுவனங்களும் உண்டு.

ஆஸ்திரேலியாவின் மக்கள் பொதுவுரிமை அரசு பல பொதுத் துறை நிறுவனங்களைச் செவ்வனே அமைத்து நிருவகித்து வருகிறது. அவைகளுள் மிக முக்கியமானவை ஆஸ்திரேலிய ஒலி பரப்புக் குழு (Australian Broadcasting Commission), ஆஸ்திரேலிய தேசிய வான்வழிகள் குழு, ஸ்நோவி மலைச்சாரல் நீர்மின் நிறுவனம் (The Snowy Mountains Hydro-Electric Authority) போன்ற தொழிலமைப்புகளாகும். இவைகளின் அமைப்பு முறைகளைச் சுருக்கமாகக் காண்போம்.

(i) ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் குழு (Australian Broadcasting Commission)

இத் தொழிலமைப்பில் ஏழு ஆணையர்கள் (Commissioners) உள்ளனர். அவர்களில் ஒருவர் பெண் ஆணையராக இருக்க வேண்டும். மற்றவர்கள், கருவூல அதிகாரி, தலைமைத் தபால் துறைத் தலைவரின் அலுவலக அதிகாரி போன்றவர்களாவர். அவர்களின் ஊதியங்கள், சட்டங்களின் மூலம் நிர்ணயிக்கப் படுகிறது.

(ii) ஆஸ்திரேலிய தேசிய வான்வழிக் குழு (Australian National Airlines Commission)

இக் குழுமத்தில் ஐந்து ஆணையர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்களுள் ஒருவர் தலைவராகப் பணிபுரிவார். மற்ருேர் ஆணையர் துணைத் தலைவராக நியமிக்கப்படுவார். தலைவர் ஐந்து ஆண்டுக் காலமும், துணைத் தலைவர் நான்காண்டுக் காலமும், மற்ற ஆணையர்கள் மூன்ருண்டுக் காலமும் பணிபுரிவர். தலைவர் மற்றும் துணைத் தலைவரின் ஊதியங்கள் ஆளுநர்-தலைவராலும் (Governor-General), மற்றவர்களின் ஊதியம் சட்டத்தாலும் நிர்ணயிக்கப்படுகின்றன.

(iii) ஸ்நோவி மலைச்சாரல் நீர்-மின் நிறுவனம் (Snowy Mountains Hydro-Electric Authority)

ஒரு தலைவரையும், இரு துணைத் தலைவர்களையும் உயர்நிலை மேலாண்மைக் குழுவிற்கொண்டு இந் நிறுவனம் செயற்

படுகிறது. இவர்கள் ஆளுநர்-தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். தலைவரின் பதவிக் காலம் ஏழு ஆண்டுகள்; அவருடைய ஊதியம் ஆளுநர்-தலைவரால் நிர்ணயிக்கப்படுகிறது.

(ஆ) நிதித் திட்டங்கள்

ஒரு சில நிறுவனங்களைத் தவிர, மற்றவகைத் தொழிலமைப்புகள் நிதி நிலைகளில் தற்சார்பு கொண்டு செயற்படவில்லை. மூலதனத்தைத் திரட்ட நாடாளுமன்றத்தின் இசைவைப் பெறவேண்டும். தேவைப்படும் கடன்களைக் கருவூலத்திலிருந்தும், இணைநிதித் தேவைகளை மக்கள் பொதுவுரிமை அரசின் (Common Wealth Govt.) வங்கியிலிருந்து மேல்வரைப்பற்று (Over Draft) மூலமாகவும் பெறுகின்றன. ஒரு சில பொதுத்துறை நிறுவனங்கள் மட்டுமே வரவு-செலவுத் திட்டத்திற்குட்பட்டு, தற்சார்பு நிதித் தேவைகளைப் பெற்றுள்ளன.

மக்கள் பொறுப்புரிமை அரசின் கூட்டுருக்களின், நிதி நிருவாகச் சிறப்பியல்புகளைப் (பொதுவானது) பின்வருமாறு கூறலாம்.

(i) ஒவ்வொரு கூட்டுருவும், தனித்தனியே வங்கிக் கணக்கு வைத்துக்கொள்ளலாம்.

(ii) குறிப்பிட்ட துறை அமைச்சரிடம் ஆண்டு மதிப்பீடுகளைக் கூட்டுருக்கள் சமர்ப்பிக்கவேண்டும்.

(iii) கருவூலத்தின் அனுமதியுடன், கூட்டுருக்கள் தேய்மானத்திற்கும், சேமிப்பு நிதிகளுக்கும் வகைசெய்து கொள்ளலாம்.

(iv) ஒவ்வொரு கூட்டுருவும், பாராளுமன்றத்தில் ஆண்டு அறிக்கையையும், கணக்குகளின் பட்டியல்களையும் சமர்ப்பிக்கவேண்டும்.

(இ) அமைச்சரவைக் கட்டுப்பாடு (Ministerial Control)

அனைத்துப் பொதுக் கூட்டுரு நிறுவனங்களும் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிற்குள் இயங்குகின்றன. ஆஸ்திரேலிய தேசிய வான்வழிகள் குழு, ஆஸ்திரேலிய ஒலிபரப்புக் குழு ஆகியவைகளின் அமைப்பு முறைகளிலும், பராமரிப்பு நடவடிக்கைகளிலும் பின்பற்றவேண்டிய வழிமுறைகளை அரசு வழங்குகிறது. சில கூட்டுருக்களின் சட்டங்கள், தொழிலமைப்பைப் பற்றிய விவரங்கள் அவ்வப்பொழுது அமைச்சருக்குத் தெரிவிக்கப்படவேண்டுமென வலியுறுத்துகின்றன. குறிப்பிட்ட வரையளவுக்கு அதிக

மாகச் செலவாகும் நடவடிக்கைகள் அமைச்சரின் அனுமதியுடன் தான் மேற்கொள்ளப்படவேண்டும். மாத ஊதியம் £2,500க்கும் அதிகமாகப் பெறும் அதிகாரிகள், அமைச்சரின் இசைவுடன் தான் நியமிக்கப்படவேண்டும். அதுபோன்றே, குறிப்பிட்ட வரையளவைவிட மதிப்பு அதிகமாகும் ஒப்பந்தங்களுக்கு அமைச்சரின் அனுமதி பெறப்படவேண்டும். ஸ்னோவி மலைச் சாரல் நீர்மின் நிறுவனம் ஒவ்வொரு மாதமும் அமைச்சரிடம் கணக்குகளைச் சமர்ப்பிக்கவேண்டும். தொழிலமைப்புகளின் இயக்குநரவையில் அரசு அதிகாரி ஒருவர் உறுப்பினராக நியமிக்கப்படுகிறார்; இதன்மூலம் அமைச்சரின் கட்டுப்பாடு வலிவு படுத்தப்படுகிறது.

(ஈ) நாடாளுமன்றக் கட்டுப்பாடு (Parliamentary Control)

மக்கள் பொறுப்புரிமை அரசுச் சட்டத்தின் மூலம் தோற்று விக்கப்பட்ட தொழிலமைப்புகள் அனைத்தும், கருவூலம் இசை வளிக்கும் வழிமுறைகளில் கணக்குகளைப் பராமரிக்கவேண்டும். அரசின் தலைமைத் தணிக்கையர் வழங்கும் கணக்குகளின் மீதான சான்றிதழ் அல்லது அறிக்கை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவேண்டும்.

பொதுக் கூட்டுரு நிறுவனங்களின் நிதி நடவடிக்கைகளை நாடாளுமன்றம் ஆராய, இம் முறை மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது. ஆஸ்திரேலியாவின் மூன்று முக்கிய வங்கிகளும் கூட, (அரசின் வங்கி, அரசின் வணிக வங்கி, அரசின் சேமிப்பு வங்கி) நாடாளுமன்றத்தில் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவேண்டும். ஆண்டு அறிக்கையின் மீது அமைச்சர் வழங்கும் வழி முறைகளை நாடாளுமன்றத்தில் விளக்கவேண்டும் என ஆஸ்திரேலிய ஒலி பரப்புக் குழுமம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இக் குழுமத்தின் ஒலிபரப்பு நடவடிக்கைகளை ஆராயவென, நாடாளுமன்றக் குழு வொன்றும் அமைக்கப்பட்டுள்ளது.

(உ) தணிக்கைமுறைக் கட்டுப்பாடு (Audit Control)

துறைவழி நிருவாக முறை, பொதுக் கூட்டுரு முறை அல்லது கூட்டுப் பங்கு நிறும முறையில் அமைக்கப்பட்ட தொழிலமைப்பு களின் கணக்குகள், தலைமைத் தணிக்கையரால் தணிக்கை செய்யப்படுகிறது. தணிக்கை முடிந்தவுடன் தொழிலமைப்புப் பற்றிய ஒழுங்குமுறையின்மை போன்ற கருத்துகளை, குறிப்பிட்ட துறையின் அமைச்சருக்குத் தலைமைத் தணிக்கையர் தெரிவிக்க வேண்டும். தலைமைத் தணிக்கையர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற தணிக்கையர், பொதுத்துறைத் தொழிலமைப்புகளின்

கணக்குகள், ஆவணங்கள் முதலியவைகளைத் தணிக்கை செய்வதற்காக, தேவையான சந்தர்ப்பங்களில் ஆவணங்களின் படிவங்கள் (Copies) எடுத்துக்கொள்ளலாம். மேலும், நிறுவனத்தின் உறுப்பினர்கள், அதிகாரிகள் அல்லது தொழிலாளர்களிடமிருந்து தணிக்கைக்குத் தேவையான விவரங்களைப் பெறும் அதிகாரமும் தலைமைத் தணிக்கையருக்குண்டு. கூட்டுருவின் ஆண்டு நிதி அறிக்கை முதலில் தலைமைத் தணிக்கையருக்கே அனுப்பப்படுகிறது; பிறகு, கணக்குகள் சரியான முறையில் உள்ளனவா என, தணிக்கையர் குறிப்பிட்ட துறை அமைச்சருக்கு அறிவிப்பார். ஆண்டு நிதி அறிக்கை, கருவூல அதிகாரி அனுமதிக்கும் வடிவமைப்பில் தயாரிக்கப்படவேண்டும்.

3. கனடாவில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள்

(அ) அமைப்பு முறை

கனடாவில் 'அரசுரிமைக் கூட்டுரு'க்கள் (Crown Corporations) மிகவும் புகழ்பெற்றவையாகும். சமீப காலங்களில் கனடா நாட்டு அரசின் பல அதிகரித்ததன் காரணமாகப் பொதுத்துறை நிறுவனங்களை நிருவகித்து, மேலாண்மை புரிய இவ் வகை அமைப்பு முறைகள் ஏற்றதாகக் கருதப்படுகின்றன. நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் தனிச் சட்டங்களின் மூலம் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தொழிலமைப்புகளின் அதிகாரங்கள், பொறுப்புகள், நோக்கங்கள் முதலியன குறிப்பிட்ட சட்டங்களின் மூலமாக வகைசெய்யப்படுகின்றன.

கனடாவில் அனைத்துப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளும், 'அரசுரிமைக் கூட்டுரு'க்கள் (Crown Corporations) என்ற முறையில் தோற்றுவிக்கப்படுகின்றன. இவ் வகைத் தொழிலமைப்புகள், அமைச்சரின் மூலமாக நாடாளுமன்றத்திற்குப் பொறுப்புடையவையாகும். 1951ஆம் ஆண்டின் 'நிதி நிருவாகச் சட்டம்' (Financial Administration Act, 1951) இவ் வகைத் தொழிலமைப்புகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்தது. அவைகள் முறையே (i) துறைவழிக் கூட்டுருக்கள் (ii) முகமைக் கூட்டுருக்கள் மற்றும் (iii) தன்னுரிமை பெற்றக் கூட்டுருக்கள் (Departmental Agency and Proprietary Corporations). முதலாவது வகை துறைக் கூட்டுருக்கள், நிருவாகக் கண்காணிப்பு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தும் பொறுப்புகளையுடையன. இரண்டாவது வகை 'முகமைக் கூட்டுரு'க்கள் (Agency Corporations), அரையளவான வாணிகக் கொள்கையுடன் (Quasi - Commercial) பணிகளையும்,

வாணிகத்தையும் மேற்கொள்கின்றன; அரசின் சார்பாகவும் நடவடிக்கைகள் அமைகின்றன. 'தன்னுரிமை பெற்றக் கூட்டுரு'க் கள் (Proprietary Corporations) மூன்றும் பிரிவைச் சார்ந்தன வாகும். வாணிகம், உற்பத்தி ஆகிய தொழில்கள் இவ்வமைப்பு முறையில் தோற்றுவிக்கப்படுகின்றன; எவ்வித ஒதுக்கீடுகளும் இன்றி இவைகள் செயற்படுகின்றன.

இயக்குநரவைகள்

கூட்டுருக்கள், இயக்குநரவைகளால் (Board of Directors) நிருவகிக்கப்படுகின்றன. இயக்குநர்கள் அமைச்சரவையால் நியமிக்கப்படுகின்றனர். அமைச்சர் நிருணயிக்கும் கால அளவுக்கு இவர்கள் பணிநிலை அமைகிறது. சில நேரங்களில் பகுதிநேர இயக்குநர்களும் நியமிக்கப்படுகின்றனர்; அவர்களின் பதவிக் காலம் மூன்றாண்டுகளாகும். இயக்குநரவை அளவில் பெரிதும் மாறுபடுகிறது. தனி நபர் கொண்ட அவையிலிருந்து, இருபத்தி ரெண்டு இயக்குநர்களைக் கொண்ட அவை வரை, பல்வேறு அளவு களில் இயக்குநரவைகள் இயங்குகின்றன. ஒரு சில சந்தர்ப்பங் களில் இயக்குநரவைகளில், முழுநேரப் பணிபுரியும் இயக்குநர் களின் எண்ணிக்கையைவிட, பகுதிநேர இயக்குநர்களின் எண்ணிக்கை அதிக அளவில் அமைந்துவிடுகிறது. அதுபோன்ற நேரங்களில் செயற்குழுக்கள் (Executive Committee) அமைக்கப் பட்டு, அன்றாட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. கனடா நாட்டின் பொதுத்துறையின் முக்கியச் சிறப்பியல்பு, அனுபவம் வாய்ந்த அதிகாரிகள் மேலாண்மைக் குழுவில் இடம் பெறுவதாகும்.

(ஆ) நிதிக் கட்டுப்பாடு

துறைவழிக் கூட்டுருக்கள் (Departmental Corporations) அரசின் துறைகளாகவே இயங்குவதால், நிதிநிலைப் பிரச்சினைகள் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை. மற்ற இருவகைத் தொழிலமைப்பு களாகிய முகமைக் கூட்டுருக்களும், தன்னுரிமைக் கூட்டுருக்களும் மூன்று முறைகளில் நிதியைப் பெறுகின்றன. பொது நிதிகள், தனியார் முதலீடுகள், கூட்டுருவின் வருவாய் என மூன்று வகையில் மூலதனத்தைப் பெறுகின்றனர். பெரும்பான்மையான தொழிலமைப்புகள் 'பொதுநிதிகள்' மூலமாகத்தான் நிதிவசதி களைப் பெறுகின்றன. ஒருசில நிறுவனங்கள், வணிக வங்கிகளிட மிருந்தும் கடன்களைப்பெற்று மூலதனத்தைத் திரட்டுகின்றன. போதிய வருவாயுடன், இலாபகரமாகச் செயற்படும் நிறுவனங் களுக்கு, தற்சார்பு இயல்புகொண்ட நிதி வசதிகள் ஏற்படு கின்றன. மேலும், பல நிறுவனங்களுக்கு அரசு மானியங்களையும், கடன்களையும் வழங்கியுள்ளது.

(இ) அமைச்சகக் கட்டுப்பாடு

கனடா நாட்டுப் பொதுத்துறை நிறுவனங்களின் நடவடிக்கைகள் அனைத்தும், அமைச்சகக் கட்டுப்பாட்டிற்குள் மேற்கொள்ளப் படுகின்றன. பின்வரும் அதிகாரங்களை அமைச்சரவை (Cabinet) பெற்றுள்ளது.

(1) இயக்குநரவையின் இயக்குநர்களை நியமித்தல் மற்றும் நீக்குதல்.

(2) இயக்குநரவை இயற்றிய விதி-முறைகளுக்கு இசைவளித்தல்.

(3) 25,000க்கும் அதிகமாகும் செலவுகளை மேற்கொள்ள அனுமதி வழங்குதல்.

(4) அதிக மதிப்பீடுகளைக்கொண்ட மூலதன ஒப்பந்தங்களுக்கு இசைவளித்தல்.

(5) குறுகிய காலக் கடன்களையும், முன் நிதி வசதிகளையும் வழங்குதல்.

1951ஆம் ஆண்டின் நிதி நிருவாகச் சட்டம், பிரிவு 79ன் படி, நிதி அமைச்சர் பொதுக் கூட்டுருக்களின் நிதி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தும் உரிமையைப் பெற்றுள்ளார். நிறுவனங்கள் பராமரிக்கும் வங்கிக் கணக்கிற்கும், மற்றக் கணக்குப் பதிவுகளுக்கும் அனுமதியை வழங்கி, வழிமுறைகளையும் வலியுறுத்துகிறார். பொதுத்துறையின் பிரதிநிதியாக, நாடாளுமன்றத்தில் அமைச்சர் செயற்படுகிறார். அனைத்து நிறுவனங்களும், மூலதன முதலீட்டு மதிப்பீடுகளை அரசின் அனுமதியுடன்தான் மேற்கொள்ள வேண்டும்.

(ஈ) நாடாளுமன்றக் கட்டுப்பாடு (Parliamentary Control)

இங்கிலாந்தில் உள்ளது போலவே, கனடாவிலும் வினாக்கள், விவாதங்கள், குழுக்கள் ஆகியவைகளின் மூலமாக, நாடாளுமன்றக் கட்டுப்பாடு செலுத்தப்படுகிறது. மேலும், பலவகைப் பட்ட கணக்குகளையும், அறிக்கைகளையும் நிறுவனங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதால், அவைகளின் செயல்முறைகளை ஆராயும் வாய்ப்பும் நாடாளுமன்றத்திற்கு ஏற்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள், தொழிலமைப்புகளின் செயல் முறைகளைப் பற்றிய வினாக்களை எழுப்பி, குறிப்பிட்ட துறையின் அமைச்சர் மூலமாக விவரங்களைப் பெறலாம். ஒவ்வொரு பொதுத்துறைத் தொழிலமைப்பின், நிதியாண்டுக்குரிய மூலதன வரவு-செலவுத் திட்டத்தை, நாடாளுமன்றத்தில் அமைச்சர்

சமர்ப்பிக்கவேண்டும். பொதுத்துறைக்கு வழங்கப்பட்டுள்ள கடன்களைப் பற்றிய அறிக்கையை, நிதி அமைச்சர் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன் வைக்கவேண்டும்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், பொதுக் கூட்டுருக்களின் ஆண்டறிக்கையின்மீது விவாதங்களை எழுப்பலாம். நாடாளுமன்றம், குழுக்கள் மூலமாகவும் அரசுரிமை பெற்ற நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஆராய்கிறது. எடுத்துக்காட்டாக, 'பொதுக் கணக்குக் குழு'வைக் (Public Accounts Committee) கூறலாம்.

(உ) தணிக்கைமுறைக் கட்டுப்பாடு (Audit Control)

தலைமைத் தணிக்கையரை, அனைத்து அரசுரிமை நிறுவனங்களுக்கும் தணிக்கையராகப் பணிபுரியுமாறு, 1951ஆம் ஆண்டின் நிதி நிருவாகச் சட்டம் வலியுறுத்துகிறது. நிறுவனங்களின் தனிச் சட்டங்கள், தணிக்கையரின் நியமனத்திற்கு வகைசெய்கின்றன. அப்படி வழிவகையில்லாவிடில், அமைச்சரவையே தணிக்கையரை நியமிக்கிறது. நிறுவனங்களின் கணக்குகள், தலைமைத் தணிக்கையரால்தான் தணிக்கை செய்யப்படவேண்டுமென்ற விதிக்கு, பல சந்தர்ப்பங்களில் விலக்களிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, கனடா நாட்டு தேசிய ரெயில் துறையின் (National Railways) கணக்குகள், தனியார் தணிக்கையரால் தணிக்கை செய்யப்படுகின்றன.

4. பிரான்சில் பொதுத்துறை
(Public Sector in France)

(அ) அமைப்பு முறை: பிரான்சில், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பின்வரும் நான்கு முறைகளில் அமைக்கப்படுகின்றன.

(i) அரசின் நேரடியான நிருவாகத்தில் அமைக்கப்படும் தொழிலமைப்புகள்.

(ii) நாடாளுமன்றத்தில் இயற்றப்படும் தனிச் சட்டங்கள் மூலம் தோற்றுவிக்கப்படும் தொழிலமைப்புகள்.

(iii) நிறுமச் சட்டத்தின் மூலம், அரசுரிமையுடன் அமைக்கப்படும் தேசியக் கூட்டு நிறுமங்கள் (National Companies).

(iv) தனியார்துறையும் - அரசும், கூட்டுரிமையுடன், நிறுமச் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்படக்கூடிய நிறுமங்கள்,

முக்கியத் தொழிலமைப்புகளுக்கு மையக் குழுக்கள்

ஒவ்வொரு முக்கியத் தொழிலமைப்பிற்கும், ஒரு மையக் குழு அமைக்கப்படுகிறது. உற்பத்தித் திட்டங்கள், மதிப்பீட்டின்படி மேற்கொள்ளப்படுகின்றனவா என இம் மையக் குழுக்கள் ஆராய்கின்றன. எடுத்துக்காட்டாக, பிரான்சில் சிறந்த முறையில் செயற்படும் நிலக்கரித் தொழில் மையக் குழுவைக் கூறலாம். முன்னேற்றத் திட்டங்கள், உற்பத்தித் திட்டங்கள் போன்றவற்றை ஆராய்ந்து அனுமதி அளிப்பதும், இயந்திரக் கருவிகள் வாங்க நிதியுதவி அளிப்பதும், தொழில் நுட்பப் பயிற்சிக்கு வகை செய்வதும், தொழில் நுட்ப ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் இம் மையக் குழுவின் நோக்கங்களாகும். எனவே, இக் குழு நிருவாக மற்றும் மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இதுபோன்ற குழுக்கள், எரிவாயு, மின்சாரம் போன்ற தொழிலமைப்புகளிலும் அமைக்கப்பட்டுள்ளன.

முப்பகுதிகளைக் கொண்ட இயக்குநரவை (Tripartite Board of Directors)

ஒவ்வொரு தொழிலமைப்பிற்கும் ஒரு நிருவாக இயக்குநரவை உள்ளது. இயக்குநரவையில் அரசு, தொழிலாளர்கள், நுகர்வோர் ஆகிய மூன்று வகைப் பிரிவுகளிலிருந்தும் பிரதிநிதிகள் நியமிக்கப்படுகின்றனர்; இது பிரான்ஸ் நாட்டுப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும். அக் குறிப்பிட்ட பிரிவுகளைச் சார்ந்தவர்களின் பரிந்துரையின் அடிப்படையில் இயக்குநரவையின் உறுப்பினர்களை அமைச்சர் தேர்ந்தெடுக்கிறார். இயக்குநர்கள், ஒரு தலைவரைத் தங்களுக்குள் தேர்ந்தெடுக்கின்றனர். சில நேரங்களில் தலைவர்கள் அரசால் நியமிக்கப்படுவதுமுண்டு. இத் தலைவர் ஊதியத்தின் அடிப்படையில் பணிபுரிகிறார். மற்ற உறுப்பினர்கள், பகுதிநேரப் பணியாளர்களாக, எவ்வித ஊதியமுமின்றிப் பணிபுரிகின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இவ்வியக்குநரவையில் இடம் பெறமுடியாது; உறுப்பினர் பதவியிலிருந்து விலகி ஐந்து ஆண்டுகள் வரையிலும் கூட, இயக்குநரவையின் உறுப்பினராக முடியாது. பொதுத்துறைக்கு அதிகபட்ச தன்னாட்சியுரிமையை ஏற்படுத்துவது, முதலாளித்துவக் கொள்கையைத் தவிர்ப்பது, அதிகார இன நிருவாகத்தைக் களைவது போன்றவை இயக்குநரவைகளின் முக்கிய நோக்கங்களாகும்.

பின்வருபவை அவற்றின் முக்கியமான பணிகளாகும்.

(i) கொள்முதல், விற்பனை போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(ii) தொழிலமைப்புக்குத் தேவைப்படும் கடன்களைப் பெறுதல்.

(iii) கூலிகள், ஊதியங்கள் ஆகியவைகளை நிர்ணயித்தல்.

(iv) நிருவாக வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்தல்.

(v) காப்பு நிதிக்கு ஒதுக்கீடுகள் செய்தல்.

(vi) நிதிச்செலவுகளை நிர்ணயித்து மதிப்பிடுதல் போன்றவைகளாகும்.

சில குறிப்பிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரின் அனுமதியைப் பெறவேண்டும்.

(ஆ) நிதித் திட்டங்கள்

பிரான்சின் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் முக்கியமான இரு வழிகளில் மூலதனத்தைத் திரட்டுகின்றன; ஒன்று அரசின் நேரடியான நிதி உதவியாகும். மற்றொரு முறை, தனியார் நிதி நிறுவனங்களிலிருந்து நிதி உதவிகளைப் பெறுவதாகும். பொதுமக்களுக்குப் பங்குக்கோவை (Stocks) களை வெளியிடுதல் மூலமாக, நாட்டுடைமையாக்கப்பட்ட தொழிலமைப்புகள், மூலதனத்தைப் பெற அனுமதிக்கப்படவில்லை. நிறுவனங்களின் கடன்கள் பெறும் வழிமுறைகளும் அரசால் தீர்மானிக்கப்படுகின்றன. இருவகையாகக் கடன் முறைகள் பிரிக்கப்படுகின்றன; (i) கருவூலத்திலிருந்தும் கடன்களைப் பெறலாம். (ii) மூலதனச் சந்தையிலிருந்தும் நேரடியாகக் கடன்களைப் பெறலாம். தொழிலமைப்புகள், மூலதனச் சந்தையில் நேரடியாகக் கடன்களைப் பெறும்போது, அரசு அக் கடன்களுக்குப் பொறுப்புறுதி அளிக்கிறது. பொருளாதாரச் சந்தர்ப்பங்களுக்கேற்ப இம் முறைகள் பின்பற்றப்படுகின்றன.

1948ஆம் ஆண்டில், இரண்டு முக்கிய நிதிகள் ஏற்படுத்தப்பட்டன. அவைகளாவன: (i) தேசிய நெருக்கடிநிலை நிதி (National Emergency Fund) (ii) நவீனப்படுத்துதல் மற்றும் சாதன நிதி (Modernisation and Equipment Fund).

தேசிய நெருக்கடிநிலை நிதி, பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத் திட்டங்களுக்குக் கடன்களை வழங்கும். அதுபோன்றே, நவீனப்படுத்துதல் மற்றும் சாதன நிதி மூலமும் கடன்கள் வழங்கப்படுகின்றன.

கடனுதவி தேவைப்படும் நிறுவனங்கள், அதற்குரிய விண்ணப்பங்களை நிதி அமைச்சருக்கு அனுப்பிவைக்கவேண்டும்.

நிதி அமைச்சகத்தால் அமைக்கப்படும் குழு, இக் கடன்கோரும் விண்ணப்பங்களை ஆராய்ந்து, அமைச்சகத்திற்குத் தன்னுடைய கருத்துகளைப் பரிந்துரைக்கிறது. இதன் அடிப்படையில் நிதி அமைச்சகம் முடிவெடுக்கிறது; நிதி அமைச்சகத்தின் முடிவே இறுதியானதாகும்.

(இ) அமைச்சகக் கட்டுப்பாடு

அனைத்துப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளும் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டவைகளாகும். பிரான்சில், பொதுவாக அமைச்சகத்தின் கட்டுப்பாடு பின்வரும் முறைகளில் ஏற்படுத்தப்படுகிறது.

முதலாவதாக, பணியாளர்களின் நியமனத்தைக் கட்டுப் படுத்தும் அதிகாரத்தை அமைச்சகம் பெற்றுள்ளது. தொழி லமைப்புகளின் முக்கியப் பதவியாகிய 'தலைமை இயக்குநர்' பதவிக்கு, அமைச்சகத்தின் முடிவின்படி அதிகாரி நியமிக்கப் படுகிறார். இயக்குநரவையின் அரசுப் பிரிவு உறுப்பினர்கள் அமைச்சகத்தால்தான் நியமிக்கப்படுகின்றனர்.

இரண்டாவதாக, அமைச்சகம் 'மாநில ஒழுங்குமுறைப் படுத்துநர்' (State Comptroller) மூலமாகவும் கட்டுப்பாட்டைச் செலுத்துகிறது. ஒவ்வொரு தொழிலமைப்பிலும் ஒரு ஒழுங்கு முறைப்படுத்துநர் நியமிக்கப்படுகிறார். அவர் பொருளாதார மற்றும் நிதி நடவடிக்கைகளை ஆராய்ந்து, அமைச்சருக்குப் பரிந் துரைகளை அனுப்புகிறார்.

மூன்றாவதாக, நிருவாக முடிவுகள் அனைத்தும், அமைச்சகத் தின் முன் அனுமதியுடன்தான் மேற்கொள்ளப்படவேண்டும். முக்கியமாக, கட்டுமானப் பணிகளை (Construction Works) மேற்கொள்ள அமைச்சகத்தின் அனுமதி தேவை.

(ஈ) நாடாளுமன்றக் கட்டுப்பாடு

பிரான்சின் நாடாளுமன்றம், பல வழிகளிலும் பொதுத் துறைத் தொழிலமைப்புகளைக் கட்டுப்படுத்துகிறது. இவைகளில் பல, நாடாளுமன்றத்தின் நடைமுறை வழிகளேயாகும். நாடாளு மன்ற விவாதங்கள், வினாக்கள், வரவு-செலவுத் திட்டம், முதலீட்டுத் திட்டங்களுக்கு அனுமதியளித்தல் போன்ற முறை கள் பொதுவாகப் பின்பற்றப்படுகின்றன. மிக முக்கியமான முறை, பொதுத்துறையின்மீதான சிறப்புக் குழுக்கள் அமைக்கப் படுவதாகும்.

மின்சாரம், எரிவாயு, நிலக்கரி, ரெயில்துறை போன்ற பேரளவு நாட்டுடைமையாக்கப்பட்ட நிறுவனங்களின் முதலீட்டுத் திட்டங்களை ஆராய்வதில் நாடாளுமன்றம் சிறப்பு அதிகாரங்களைப் பெற்றுள்ளது. ஒவ்வோர் ஆண்டிற்கும் பொதுவான திட்டங்களை மேற்கொள்ள இசைவளிக்கப்படுகிறது. முதலீடுகளின் மீதான அதிகபட்ச செலவுகளையும் நிர்ணயிக்கிறது.

வினாக்கள்

நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளில் முக்கியமானதாகக் கருதப்படுவது இவ் வினாக்களாகும். உறுப்பினர்கள் வினாக்களின் மூலம், பொதுத்துறையைப் பற்றிய விவரங்களை அறிகின்றனர். ஆனால், அன்றாட நடவடிக்கைகளின் மீதான வினாக்களுக்கு அமைச்சர் பதில் கூற மறுக்கலாம்.

நிரந்தரக் குழுக்கள் (Permanent Commissions)

ஏறத்தாழ 19 நிரந்தரக் குழுக்கள் நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. இக் குழுக்களில் பல, பொதுத்துறையின் நடவடிக்கைகளை ஆராய்கின்றன; தொழிலமைப்புகளின் முன்னேற்றத்தைக் கண்காணித்து அறிக்கைகளை வெளியிடுகின்றன.

பொதுத்துறையின்மீது சிறப்புக் குழுக்கள் (Special Committees on Public Enterprises)

நாடாளுமன்றம், 1947 ஆம் ஆண்டில், பொதுத்துறையின் மீதான சிறப்புக் குழுக்களை அமைத்தது. அனைத்து உற்பத்தி மற்றும் வணிகப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளையும், அரசு 30%க்கும் அதிகமாகப் பங்குகளைப் பெற்றுள்ள நிறுமங்களையும், அவைகளின் துணை நிறுமங்களையும் இக் குழுக்கள் ஆராய்கின்றன. பொதுத்துறை நிறுவனங்களின் தொழில்நுட்ப, நிருவாக மற்றும் நிதிச் சாதனைகளை, நாடாளுமன்றத்திற்கு இக் குழுக்கள் அறிவிக்கின்றன. கடந்த கால நடவடிக்கைகளை மட்டுமல்லாமல், எதிர்காலத் திட்டங்களையும் ஆராய்கின்றன. தேவையான ஆவணங்களையும், மற்ற விவரங்களையும் நிறுவனங்களிடமிருந்து பெற அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

(உ) தணிக்கைக் கட்டுப்பாடு

பொதுத்துறை நிறுவனங்களைத் தணிக்கை செய்வதற்கென, தனியானதொரு குழுவே பிரான்சில் உள்ளது. (Commission de Verification des Comptes). சாதாரண நிதித் தணிக்கையைவிட

விரிவான முறையில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. பொதுத்துறையின் நடவடிக்கைகளைப் பற்றிய கருத்துகளையும், தீர்ப்புகளையும் இக் குழு வெளியிடுகிறது. இக் குழு, தன்னுரிமை பெற்று, தலைவர் மற்ற உபதலைவர்களுடனும் (ஐந்து தலைவர்கள்) செயற்படுகின்றது. ஆராய்ச்சியை மேற்கொள்ளுவதற்கு வசதியாக, தொழிலமைப்புகளை நான்கு பிரிவாகப் பின்வருமாறு பாகுபடுத்துகிறது.

(i) எண்ணெய் மற்றும் இயக்கு சக்தியுடன் தொடர்புடைய நிறுவனங்கள்.

(ii) கடன் வழங்கும் மற்றும் காப்பீட்டுத் தொழில் நிறுவனங்கள்.

(iii) போக்குவரத்து மற்றும் செய்தித் தொடர்பு நிறுவனங்கள்.

(iv) தொழில்நுட்பம், இரசாயனம், மற்றும் பிறவகைத் தொழிலமைப்புகள்.

இவ்வாறு, பிரிவுகளை ஏற்படுத்திய பிறகு, விரிவான முறையில் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. நிறுவனங்களின் கணக்குப் பதிவு முறைகள், வங்கிக் கடன்கள், நிதி நடவடிக்கைகள் போன்றவற்றில், இத் தணிக்கைக் குழு தன்னுடைய கருத்துகளைத் தெரிவிக்கிறது.

5. அமெரிக்க ஐக்கிய நாட்டில் பொதுத்துறை

(அ) அமைப்பு முறை

அமெரிக்க நாட்டில், 1945ஆம் ஆண்டு இயற்றப்பட்ட 'அரசுக் கூட்டுருக்களின் கட்டுப்பாட்டுச் சட்டத்'தின் (Government Corporation Control Act, 1945) கீழ், பொதுத்துறைத் தொழில்கள் கட்டுப்படுத்தப்படுகின்றன. இருவகைத் தொழிலமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன: அவைகள் முறையே : (i) அரசுரிமை பெற்ற கூட்டுருக்கள், (ii) கலப்புரிமை கொண்ட கூட்டுருக்கள் (Wholly Owned and Mixed-Ownership Corporations).

இயக்குநரவை

அமெரிக்க நாட்டின் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் இயக்குநரவைகள் முக்கியப் பங்கை வகித்துவந்தன. ஆனால், தற்பொழுது இக் கருத்து மாறி, ஒரு நபர் நிருவாகக் குழு அல்லது ஒரு நபர் நிருவாகக் குழுவும், ஆலோசனைக் குழுக்களும் ஏற்படுத்தப்படுகின்றன. குறிப்பாக, வங்கித் தொழில், நிதிவசதி

அளிக்கும் தொழில் தவிர, மற்றவகைத் தொழிலமைப்புகளில் இம்முறையே பின்பற்றப்படுகின்றது.

டென்னஸீ பள்ளத்தாக்கு நிறுவனம் (Tennessee Valley Authority), ஏற்றுமதி-இறக்குமதி வங்கி (Export-Import Bank) போன்ற பொதுத்துறைத் தொழிலமைப்புகள் முழுநேரப் பணி இயக்குநர்களைக் கொண்டுள்ளன. அரசு பயிர்க் காப்பீட்டுக் கூட்டுரு (The Federal Crop Insurance Corporation), பனமா கால்வாய் கூட்டு நிறுமம் (Panama Canal Company) போன்ற நிறுவனங்கள், பகுதிநேரப் பணி இயக்குநர்களைக் கொண்டு செயற்படுகின்றன. பொது அதிகாரிகளும், தனிப்பட்ட நபர்களும், இயக்குநர்களாகப் பகுதிநேரப் பணிபுரிகின்றனர்.

'கூட்டுறவுத் துறைக்கான வங்கி'கள் (The Banks For Co-operatives) போன்ற கலப்புரிமை பெற்ற நிறுவனங்களும், பகுதிநேர இயக்குநரவையால் நிருவகிக்கப்படுகின்றன.

(ஆ) நிதித் திட்டங்கள்

சுயச்சார்பு வருவாய் (Self-Sustaining Income), கருவூலத்திலிருந்து கடன் பெறுதல் ஆகிய முறைகளில் பொதுத்துறை நிறுவனங்கள் நிதி வசதிகளைப் பெறுகின்றன. ஒரு சில தொழிலமைப்புகளைத் தவிர, மற்றவகை நிறுவனங்களுக்கு ஆண்டு ஒதுக்கீடுகள் ஏதும் அரசால் அளிக்கப்படுவதில்லை. அரசு பயிர்க் காப்பீட்டுக் கூட்டுரு, டென்னஸீ பள்ளத்தாக்குக் கூட்டுரு போன்ற தொழிலமைப்புகள், ஆண்டுதோறும் அரசின் நிதி ஒதுக்கீடுகளைப் பெற்று செயற்படுகின்றன.

பொதுத்துறை நிறுவனங்கள், முடிந்த வரையில் தற்சார்பு நிதி வசதிகளைக் கொண்டு செயற்படவேண்டுமென்ற கருத்து அமெரிக்காவில், அரசாலும்; பொதுமக்களாலும் வலியுறுத்தப் படுகிறது. செயல்முறை அடக்கச் செலவுகள், தேய்மானம், வட்டி போன்ற செலவுகளை, பணிகளின் மீதான கட்டணங்களின் மூலம் வசூலிக்கலாம் என்ற கருத்தும் நிலவுகிறது.

கலப்புரிமைக் கூட்டுருக்கள் எவ்வித வரவு-செலவுத் திட்டக் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டவை அல்ல. ஆனால், 'அரசு தேசீய அடமானக் கூட்டு நிறுவனம்' (Federal National Mortgage Association) மட்டும் இதற்கு விதி விலக்காகும். முற்றிலும் அரசுரிமை பெற்றக் கூட்டுருக்கள், வாணிகஞ் சார்ந்த வரவு-செலவுத் திட்டங்களைச் சமர்ப்பிக்கவேண்டும் என சட்டம் கூறுகிறது. வழக்கமான நிதி அறிக்கைகள், முக்கியத் திட்டங்களுக்

கான மதிப்பீடுகள், நிருவாகச் செலவுகள், கடன்கள், கருவூலத்திற்குத் திருப்பிச் செலுத்தவேண்டியுள்ள மூலதன நிதிகள் போன்ற விவரங்கள் வரவு-செலவுத் திட்டத்தில் இடம்பெற வேண்டும். இத் திட்டத்திற்கான பொது அனுமதியைக் கூட்டுருக்கள் பெறவேண்டும்.

(இ) அமைச்சகக் கட்டுப்பாடு

அமெரிக்க நாட்டில், பொதுத்துறையின்மீதான அமைச்சகக் கட்டுப்பாடு இரு முக்கியப் பண்புக் கூறுகளைக் கொண்டுள்ளது.

(i) கட்டுப்பாடுகள் பொதுவான இயல்புடையதாய் இருக்க வேண்டும்; குறிப்பாக அமையக்கூடாது.

(ii) கட்டுப்பாடுகள் ஆக்கமுறை (Positive) இயல்பைக் கொண்டிருக்கவேண்டும்; எதிர்மறையாய் (Negative) அமையக்கூடாது.

மேற்கண்ட இரு சிறப்பியல்புகளையும் அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவைக் கட்டுப்பாடு அமைகிறது.

பொதுத்துறைத் தொழிலமைப்புகள், தேசியக் கொள்கைகள் அல்லது வெளிநாட்டுக் கொள்கைகளைப் பாதிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு மட்டும்தான் அரசின் அனுமதியைப் பெறவேண்டும். மற்றவகை அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்ள எவ்வித முன் அனுமதிகளும் தேவையில்லை. பொதுத்துறை வெளியிடும் பொதுக்கடன் பத்திரங்களுக்குக் கருவூலம் இசைவளிக்கும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது. இதனால், பொதுக் கடன் பெறுதல் எளிதாக அமைகின்றது. விலைகளை நிருணயித்தல், அதிகாரிகளை உயர்நிலைப் பணிகளில் நியமித்தல், பயிற்சித் திட்டங்கள், ஆண்டறிக்கைகள் போன்றவைகளுக்கு அமைச்சகத்தின் முன் அனுமதி தேவையில்லை. சட்டங்களையும், விதிமுறைகளையும் பின்பற்றுதல் மட்டும் கட்டுப்பாடாகக் கருதப்படாமல், அரசும், பொதுத்துறை நிறுவனங்களும் நிலையான கொள்கைகளைக் கடைப்பிடித்து, கூட்டுறவுடன் செயற்படுவதே கட்டுப்பாட்டின் நோக்கமாகக் கருதப்படுகிறது.

பொதுத்துறையின் செயல் விளைவுகளுக்கு நாட்டின் ஜனாதிபதியே பொறுப்பேற்கிறார். எனவே, பொதுத்துறை நடவடிக்கைகளுக்கு வழிமுறைகளை அமைக்கவும், கண்காணிப்பை மேற்கொள்ளவும் ஜனாதிபதி அளவற்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார். ஆனால், கலப்புரிமை நிறுவனங்கள், ஜனாதிபதி

யின் கட்டுப்பாடுகளிலிருந்து ஓரளவு சுதந்திரம் பெற்று செயற்படுகின்றன.

அரசு நிறுவனங்களின் நிருவாக அதிகாரிகள், இயக்குநர்கள் போன்றவர்களை நியமிக்கவும், நீக்கவும் ஜனாதிபதி அதிகாரம் பெற்றுள்ளார். ஒரு சில சந்தர்ப்பங்களில், நிறுவனத்தின் தலைமைப் பொறுப்பேற்றுள்ள அதிகாரியே மேற்கண்ட நியமனங்களைச் செய்யும் அதிகாரத்தைப் பெறுகிறார்.

வரவு-செலவுக் கட்டுப்பாட்டின் மூலமாக, பொதுத்துறைகளின் மீது தொடர்வியல்பு கொண்ட கட்டுப்பாடு செலுத்தப்படுகிறது.

(ஈ) நாடாளுமன்றக் கட்டுப்பாடு

அமெரிக்க நாட்டின் காங்கிரஸ் கட்சி, நாடாளுமன்றத்தில் மிக விரிவான முறையில் பொதுத்துறையின் நடவடிக்கைகளை ஆராய்கிறது. அரசு நிறுவனங்களை ஆராய்வதில் தன்னுடைய முழு அதிகாரங்களையும் நாடாளுமன்றம் பயன்படுத்துகிறது.

'காங்கிரஸ் குழுக்கள்' போன்ற சிறப்புக் குழுக்களும், நாடாளுமன்றத்தால் நியமிக்கப்பட்டு, பொதுத்துறையின் செயல்கள் ஆராயப்படுகின்றன. நிறுவனங்களின் தணிக்கை அறிக்கைகள் நாடாளுமன்றத்தின் குழுக்களால் பரிசீலிக்கப்படுகின்றன. மேலும், 'அரசின் செயல்முறைகளின் குழு'வும் (Govt. Operations Committee), நாடாளுமன்றக் குழுக்களும் பொதுத்துறையின் நடவடிக்கைகள் அனைத்தையும் ஆராயும் அதிகாரத்தைப் பெற்றுள்ளன. ஆனால், கூட்டுருவின் தன்னாட்சியுரிமை பாதிக்கப்படாத வகையில் நாடாளுமன்றக் கட்டுப்பாடு செயற்படுத்தப்படுகிறது.

(உ) தணிக்கைக் கட்டுப்பாடு

அமெரிக்க நாட்டின் தலைமைத் தணிக்கையர், அரசுக் கூட்டுருக்களின் ஆண்டுத் தணிக்கையை மேற்கொள்கிறார். ஆனால், சாதாரண தணிக்கையைப் போன்று ஒவ்வொரு செலவும் விதிமுறைக்கேற்றவாறு மேற்கொள்ளப் பட்டுள்ளதாவென ஆராயும் நோக்குடன் இத் தணிக்கை மேற்கொள்ளப்படுவதில்லை. மாறாக, பொதுத்துறை நிறுவனங்களைப் பற்றிய பரிந்துரைகளையும், மற்றக் கருத்துகளையும் மட்டும் அரசிடம் தலைமைத் தணிக்கையர் சமர்ப்பிக்கிறார்.

மிகவும் சிக்கலான கொள்கைப் பிரச்சினைகள்கூட, தணிக்கை அறிக்கையில் கூறப்படுகிறது. எனவே, தணிக்கையின் முக்கிய

நோக்கமே, அரசின் கொள்கைகளுக்கேற்ப, பொதுத்துறை நிறுவனங்கள் செயற்படுகின்றனவா என ஆராய்வதாகும்.

தணிக்கை அறிக்கைகள், அரசுக்கு மட்டுமல்லாமல் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கும் பெரும்பயன்களை அளிக்கும் வகையில் அமைகின்றன.

கூட்டுரு அமைப்பு முறையில்லாத மற்ற வகை அரசு நிறுவனங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குமுறைப்படுத்துநர் மற்றும் தலைவர் (Comptroller-General) தணிக்கை செய்கிறார்; இத்தணிக்கை விரிவுடையதாய் அமைகிறது. இந் நிறுவனங்கள் பின்பற்றவேண்டிய கணக்குப் பதிவு முறை, கொள்கைகள், வரையளவுகள் போன்றவற்றை ஒழுங்குமுறைப்படுத்துநர்-தலைவர் ஆணைகள் மூலம் வழங்க அதிகாரமுண்டு. ஆனால், கூட்டுரு அமைப்பு முறையிலான அரசு நிறுவனங்கள் இவ்வதிகாரத்திற்குக் கட்டுப்படமாட்டா.

6. ஜப்பான் நாட்டில் பொதுத்துறை
(Public Sector in Japan)

(அ) அமைப்பு முறை: ஜப்பானில், பொதுத்துறைத் தொழில்கள் பின்வரும் நான்கு முக்கிய முறைகளில் அமைக்கப்பட்டுள்ளன:

(i) கோஷா (Kosha)
(ii) கோடான் (Kodan)
(iii) எய்டான் (Eidan)
(iv) சிறப்புக் கூட்டுருக்கள் (Special Corporations)

இவைகளைப் பற்றிச் சுருக்கமாகக் காண்போம்

(i) கோஷா (Kosha) (Public Corporations)

பொதுக் கூட்டுரு அமைப்பு முறையே கோஷா என அழைக்கப்படுகிறது. பொதுவாக இக் கோஷா நிறுவனங்கள், அரசின் முழு உரிமையுடன் அமைக்கப்படுகின்றன. பல முக்கியத் தொழில்கள் இவ்வமைப்பு முறையில் செயற்படுகின்றன. எடுத்துக்காட்டாக, தேசிய ரெயில் துறை, தந்தி-தொலைபேசித் துறைகள், அணுசக்தி எரிபொருள் கூட்டுரு (Automic Fuel Corporation), ஜப்பான் ஒலிபரப்புக் கூட்டுரு (Japan Broadcasting Corporation) ஆகியவைகளைக் கூறலாம். இத் தொழிலமைப்பின் நிருவாகம் இயக்குநரவையால் மேற்கொள்ளப்படுகிறது; சில நேரங்களில், நிருவாகக் குழுக்களும் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு

பொதுக் கூட்டுரு தொழிலமைப்பும் ஒரு தலைவர், உப-தலைவர், இயக்குநர்கள் ஆகியவர்களைக் கொண்டுள்ளன. தலைவர் அமைச்சகத்தாலும், உப-தலைவர், இயக்குநர்கள் ஆகியோர் தலைவராலும் நியமிக்கப்படுகின்றனர்.

(ii) கோடான் (Kodan)

தனியார்துறையினரின் சக்திக்கு அப்பாற்பட்டு விளங்கும் தொழில்களை அமைப்பதற்காக, இப் பொது நீதிமன்றத் தன்மையுடைய அமைப்பு முறை ஏற்படுத்தப்பட்டது. ஏறத்தாழ பொது நிருவாக அல்லது பொதுப் பயன் நிறுவனங்களைப் போன்று, 'கோடான்' தொழிலமைப்புகள் செயற்படுகின்றன. ஜப்பான் நாட்டில், தற்பொழுது பின்வரும் கோடான் தொழிலமைப்புகள் இயங்கி வருகின்றன.

(1) வீட்டு வசதிக் கூட்டுரு.

(2) அய்ச்சி நீர்ப்பாசன முன்னேற்றக் கூட்டுரு (The Aichi Irrigation Development Corporation).

(3) விவசாய முன்னேற்றக் கருவிகள் கூட்டுரு.

(4) ஜப்பான் நெடுஞ்சாலைப் போக்குவரத்துக் கூட்டுரு.

(5) காட்டிலாக்கா முன்னேற்றக் கூட்டுரு (The Forestry Development Corporation).

முதலிய நிறுவனங்கள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

கோடான் அமைப்பு முறையில் தலைவர், உப-தலைவர், இயக்குநர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் செயற்குழுவில் இடம்பெற்றுள்ளனர். தலைவரும், மேற்பார்வையாளர்களும் அமைச்சரால் நியமிக்கப்படுகின்றனர்; இயக்குநர்களும், உப-தலைவரும் அமைச்சரின் அனுமதியுடன், தலைவரால் நியமிக்கப்படுகின்றனர்.

(iii) எய்டான் (Eidan)

தற்பொழுது ஜப்பான் நாட்டில், 'எய்டான்' அமைப்பு முறையில், 'தலைநகர விரைவான மாற்றக் கூட்டுரு' (Metropolitan Rapid Transit Corporation) மட்டும்தான் செயல்படுகிறது. பொதுக் கூட்டுரு அமைப்பு முறையிலமைந்த இந் நிறுவனம், ஜப்பான் நாட்டின் 'சுரங்கப் பாதை'யைப் (Sub-Way) பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. மேலாண்மை, நிருவாகக்

குழுவொன்றால் மேற்கொள்ளப்படுகிறது. தலைவர், உப-தலைவர், இயக்குநர்கள், மேற்பார்வையாளர்கள் ஆகியோர் இக் குழுவில் இடம் பெற்றுள்ளனர். அனைவரும் அதிகாரம் பெற்ற அமைச்சரால் நியமிக்கப்படுகின்றனர்.

(iv) சிறப்புக் கூட்டுருக்கள் (Special Corporations)

தனிச் சட்டத்தின் மூலம், கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறையில் தோற்றுவிக்கப்படும் தொழிலமைப்புகளே 'சிறப்புக் கூட்டுரு'க்களாகும். பின்வரும் 'சிறப்புக் கூட்டுரு'க்கள் தற்பொழுது இயங்கி வருகின்றன:

(1) டோக்கியோ முன்னேற்ற நிறுமம் (வரையறுக்கப்பட்டது).
(2) மின்சார சக்தி முன்னேற்ற நிறுமம் (வரையறுக்கப்பட்டது).
(3) பன்னாட்டுத் தந்தி மற்றும் தொலைபேசி நிறுமம் (வரையறுக்கப்பட்டது.)
(4) ஜப்பான் வான்வழி நிறுமம் (வரையறுக்கப்பட்டது).
(5) பெட்ரோலிய வள முன்னேற்ற நிறுமம் (வரையறுக்கப்பட்டது).

மேற்கண்ட நிறுமங்களின் செயற்குழு அதிகாரிகள் அமைச்சகத்தால் நியமிக்கப்படுகின்றனர். அதிகாரிகளைப் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம், பிரதம அமைச்சருக்கோ அல்லது அதிகாரம் பெற்ற அமைச்சருக்கோ உண்டு.

(ஆ) நிதித் திட்டங்கள்

'கோஷா' அமைப்பு முறையிலான நிறுவனங்கள் பொதுவாக அரசுரிமை பெற்று விளங்குகின்றன. எனவே, இத்தொழிலமைப்புகளின் மூலதனம் அரசால் வழங்கப்படுகிறது. ஆனால், ஜப்பான் ஒலிபரப்புக் கூட்டுரு மட்டும் இதற்கு விதிவிலக்காகும்; ஏனெனில், அரசு எவ்வித மூலதன உதவியையும் வழங்கவில்லை.

கூட்டுப் பங்கு நிறும முறையிலான சிறப்புக் கூட்டுருக்களின் பங்குகளாகப் பிரிக்கப்பட்டு, அப் பங்குகள் அரசாலும், தனியார்துறை முதலீடு செய்பவர்களாலும் வாங்கப்படுகின்றன. பொதுக் கூட்டுருத் தொழிலமைப்புகள், முறையான வரவு-

செலவுத் திட்டத்துடன் செயற்படவேண்டுமென, சட்டத்தின் மூலம் வகை செய்யப்பட்டுள்ளது. தேவை மாற்றங்கள், பொருளாதார மாற்றங்கள், எதிர்பாரா விளைவுகள் ஆகிய வற்றிற்கு ஏற்ற வகையில் வரவு-செலவுத் திட்டம் அமைய வேண்டும்.

(இ) அமைச்சகக் கட்டுப்பாடு

ஜப்பான் நாட்டின் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தன்னுட்சியுரிமையைப் பெற்றிருந்தாலும்கூட, அரசுக் கட்டுப் பாட்டிற்கும் உட்பட்டுதான் செயற்படுகின்றன. அனைத்து வகைப் பொதுத்துறை நிறுவனங்களையும் அதிகாரம் பெற்ற அமைச்சர் கண்காணிக்கிறார். தேவைப்படும் ஆணைகளை வழங்கு தல் மூலமாக, அமைச்சர் பொதுத்துறை நிறுவனங்களிடமிருந்து செயல்முறை அறிக்கைகளைப் பெறும் அதிகாரத்தைப் பெற்றுள் ளார்; மேலும், அதிகாரிகள் மூலமாக நிறுவனங்களின் செயல் முறைகள், கணக்குகள், மற்ற ஆவணங்கள் ஆகியவைகளை ஆராயும் அதிகாரமும் அமைச்சருக்குண்டு.

கோடான் வகைத் தொழிலமைப்புகள், அடிப்படை வாணிகத் திட்டங்களைச் செயற்படுத்த அமைச்சரின் முன் அனுமதியைப் பெறவேண்டும். ஒவ்வொரு வாணிக ஆண்டுத் தொடக்கத்திலும், வரவு-செலவுத் திட்டம், செயல்முறைப் பணி-நிரல், நிதித் திட்டம் ஆகியவைகளை அமைச்சரிடம் சமர்ப்பித்து இசைவைப் பெற வேண்டும். அக் குறிப்பிட்ட அமைச்சர், நிதி அமைச்சரின் முன் அனுமதியுடன் இசைவளிக்கிறார். இவ்வாறு நேரடியானக் கட்டுப் பாடுகளைத் தவிர, ஒரு சில மறைமுகக் கட்டுப்பாடுகளும், ஆலோசனைகள் மூலம் ஏற்படுத்தப்படுகின்றன.

கோஷா அமைப்பு முறையின் வரவு-செலவுத் திட்டம், அத் துறையுடன் தொடர்புடைய அமைச்சரிடம் சமர்பிக்கப்பட்டு அவருடைய இசைவைப் பெறவேண்டும்; நிதி அமைச்சரின் முன் அனுமதியுடன் அமைச்சர் இசைவை அளிக்கிறார்.

(ஈ) நாடாளுமன்றக் கட்டுப்பாடு

ஜப்பானில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள், டையட் (Diet) என்றழைக்கப்படும், அரசியல் மன்றத்தின் (நாடாளு மன்றம்) கட்டுப்பாட்டிற்குட்பட்டு இயங்குகின்றன. எடுத்துக் காட்டாக, கோஷா அமைப்பு முறை நிறுவனங்களின் வரவு-செலவுத் திட்டத்தின் மீதான மதிப்பீடுகள், அரசியல் மன்றத்தில் ஆராயப்படுகின்றன; முடிவு செய்யப்பட்ட கணக்குகளும் சமர்ப்

பிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன. தபால்துறை, தந்தி—தொலை பேசித் துறை, தேசிய ரெயில்துறை, போன்ற நிறுவனங்கள் தத்தம் பணிகளுக்கான கட்டணங்களை மன்றத்தின் இசைவு பெற்றே நிருணயிக்கலாம்.

7. ருஷ்ய நாட்டில் பொதுத்துறை
(Public Sector in the U.S.S.R.)

(அ) அமைப்பு முறை

பொதுத்துறைக்கு மிகச் சிறந்த முறையாக, பொதுக் கூட்டுருக்கள் ருஷ்யாவில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. முதலில் அரசின் நேரடி நிருவாக முறையில் பொதுத்துறை நிறுவனங்கள் தோற்றுவிக்கப்பட்டன; பிறகு அம்முறை கைவிடப்பட்டு, பொதுக் கூட்டுரு அமைப்பு முறை பின்பற்றப்படுகிறது. உற்பத்தித் தொழில், வாணிகம், செய்தித் தொடர்பு, போக்குவரத்து, நூல்கள் வெளியிடுதல் போன்ற எண்ணிறைந்த தொழில்கள், பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் தோற்றுவிக்கப்பட்டு வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றன. ருஷ்ய நாட்டில் பொழுதுபோக்கு அல்லது மனமகிழ் மன்றங்கள்கூட, பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் நடத்தப்படுகின்றன.

1927ஆம் ஆண்டின் பொதுக் கூட்டுருக்களின் சட்டம், தொழிலமைப்புகள் சட்டமுறை நிறுவனங்களாகத் தோற்றுவிக்கப்பட அனுமதியளிக்கிறது. தொழிலமைப்புகளைப் பொதுக் கூட்டுரு முறையில் அமைக்கவேண்டுமென அரசின் துறையால் தீர்மானிக்கப்பட்டது. முக்கிய நோக்கம், அவைகளின் பணிகள் செவ்வனே அமையவேண்டுமென்பதாகும். பொதுக் கூட்டுரு அமைப்பு முறையை ஏற்படுத்த ருஷ்ய நாடாளுமன்றத்தின் சட்டம் தேவையில்லை; தொடர்புடைய அரசின் துறையினுடைய அனுமதி பெற்றால் போதும். ஆனல், பதிவு செய்யப்படாமல் தொழிலமைப்புகள் பணிகளை மேற்கொள்ளமுடியாது. 1940ஆம் ஆண்டுச் சட்டம், நிதி அமைச்சரை பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் அமைப்பு முறைகளுக்குப் பொறுப்பாளராக இயங்க வகைசெய்கிறது.

இயக்குநர்கள் (Directors)

ஒவ்வொரு பொதுக் கூட்டுருவின் தலைவராகவும் ஒரு இயக்குநர் (Single Director) பணியாற்றுகிருர். இயக்குநர், உயர் அதிகாரிகள், தலைமைக் கணக்காயர், தலைமைப் பொறியியல் அதிகாரி ஆகியோர் அரசின் துறையால் நியமிக்கப்படுகின்றனர்.

இயக்குநர் முழுப் பொறுப்பையும் ஏற்று, கீழ்நிலைப் பணியாளர்களுக்கு ஆணைகளை வழங்குகிறார். 1958ஆம் ஆண்டிலிருந்து 'நிரந்தரக் குழுமம்' ஒன்று ஏற்படுத்தப்பட்டு பொதுத்துறையின் நடவடிக்கைகள் கண்காணிக்கப்படுகின்றன. திட்டம், மேலாண்மை போன்ற நேரடிப் பிரச்சினைகளை இக் குழு ஆராய்கிறது. மேலும், பல புறமுகமை நிறுவனங்களும் பொதுத்துறையை ஆராய்ந்து கட்டுப்படுத்துகின்றன. எடுத்துக்காட்டாக, வங்கிகள், நிதி ஆராய்வு நிறுவனங்கள் ஆகியவைகளைக் கூறலாம்.

(ஆ) நிதி நிலைமை

ஒவ்வொரு பொதுத்துறை நிறுவனமும், தன்னுடைய இலாப-நட்டக் கணக்குகளைத் தயாரித்து, தற்சார்பு நிதி உதவிகளைப் பெற அனுமதிக்கப்பட்டுள்ளது; வாணிகஞ் சார்ந்த திறமையுடன் நடைபெறுகின்றன. நடைமுறை முதல் அரசால் அளிக்கப்படுகிறது. மூலதன முதலீட்டுச் செலவுகளையும் அரசு ஈடுசெய்கிறது.

மிக முக்கியமான நிதி, தொழிலமைப்பால் ஈட்டப்படும் வருவாயும், வரவு-செலவுத் திட்டமுமாகும். 1955க்குப் பிறகு, மாநில வங்கியிலிருந்து, மூன்று ஆண்டுக் காலத்திற்கு, குறுகிய காலக் கடன்களைப்பெறவும், தொழிலமைப்புகள் அனுமதிக்கப்பட்டுள்ளன. அரசின் பொது வரவு - செலவுத் திட்டத்தின் வருவாய், பொதுத்துறை நிறுவனங்கள் ஈட்டும் இலாபமேயாகும். பொதுத்துறைத் தொழிலமைப்புகள், வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் தன்னுட்சியுரிமை பெற்றுள்ளன.

(இ) அமைச்சகக் கட்டுப்பாடு

வட்டாரப் பொருளாதாரக் குழுக்கள் (Regional Economic Councils)

1957ஆம் ஆண்டுவரை, ருஷ்யாவில் நிறுவனங்கள் 'உற்பத்தித் தொழில்' அடிப்படையில் அமைக்கப்பட்டன. அதாவது, போக்குவரத்துத் தொழில் போக்குவரத்து அமைச்சகத்தின் கீழும், துணி உற்பத்தி அதற்குரிய அமைச்சகத்தின் மூலமும் தொழில்கள் அமைக்கப்பட்டன. அனைத்து அமைச்சகங்களும் மாஸ்கோ நகரத்தில் இயங்கி வருகின்றன. இவ்வமைப்பு முறையில் பலவிதமான இடையூறுகள் ஏற்பட்டன. எனவே, 1957ஆம் ஆண்டில், உற்பத்தித் தொழிலமைப்புகளனைத்தும் மாற்றியமைக்கப்பட்டன. அமைச்சகங்களுக்குப் பதிலாக, 105 வட்டாரப் பொருளாதாரக் குழுக்கள் அமைக்கப்பட்டன. இப்

புதிய முறை, 1957ஆம் ஆண்டில் குருஷ்சேவ் அவர்களால் அறிவிக்கப்பட்டு அமைச்சகங்கள் ஒழிக்கப்பட்டன. இதன் மூலமாக, தீவிரமான முறையில் பொதுக் கூட்டுரு அமைப்பு முறை நிறுவனங்கள் கண்காணிக்கப்படுமெனக் கருதப்பட்டது.

இக் குழுவின் பணிகளைப் பின்வருமாறு காணலாம். முதலாவது பணி திறமைமிகுந்த செயற்பாடுகளை ஏற்படுத்துவதாகும். ஒரு குறிப்பிட்ட வட்டாரத்தில் இயங்கும் தொழிலமைப்புகள் அனைத்தும், அப் பகுதிப் பிரிவின் குழுவின் கட்டுப்பாட்டில் இயங்கும். ஆனால், நகராண்மை அமைப்புகளும் கூட்டுறவுத் துறைகளும் இவற்றில் அடங்கமாட்டா. உற்பத்தித் திட்டங்களைச் செயற்படுத்துதல், மூலப்பொருள்களைப் பெறுதல், தொழில் நுட்பங்களை விரிவுபடுத்துதல் போன்ற பணிகளையும் இக் குழு மேற்கொள்கிறது. முக்கியமான திட்டங்கள் அனைத்தும் அமைச்சரவையின் அனுமதியுடன் மேற்கொள்ளப்படும்.

(ஈ) தணிக்கைமுறைக் கட்டுப்பாடு

ருஷ்ய நாட்டின் நிதி அமைச்சகம் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் கணக்குகளைத் தணிக்கை செய்கிறது. தனியார் தணிக்கையர் இல்லை.

8. யோகோஸ்லேவியாவில் பொதுத்துறை
(Public Sector in Yogoslavia)

யோகோஸ்லேவியா நாட்டின் அரசு, 'மக்கள் பொறுப்புரிமைக் குடியாட்சி'யாகும் (Federal People's Republic). ஜனநாயகச் சமதர்ம சமுதாயத்தை அடிப்படை நோக்கமாகக் கொண்டுள்ளது. பொதுவுடைமைக் கருத்துகள் பின்பற்றப்படுகின்றன.

இந் நாட்டின் பொருளாதாரத்தில் இரு துறைகள் உள்ளன. அவைகள் முறையே :

(i) தனியார்துறை – விவசாயம், கைத்தொழில், கட்டிடத் தொழில் ஆகியவை தனியார்துறையில் இயங்குகின்றன.

(ii) சமுதாயத்துறை (Social Sector)-மற்றப் பொருளாதாரத் தொழிலமைப்புகள் இத் துறையில் அடங்கும்.

இவைகளில், பொருளாதாரத் தொழிலமைப்புகள் (பொதுத்துறை) தொழிலாளர்களின் தற்சார்பு - நிருவாகக் குழுக்களால் நடத்தப்படுகின்றன. திட்டங்கள், செயல் நிரல்கள் (Programmes), உற்பத்தி அமைப்பு, விலை ஏற்றங்கள், வாணிக நிபந்தனைகள்,

உற்பத்திக் காரணிகளைப் பயன்படுத்தல், வருவாயைப் பகிர்தல் போன்றவை தொழிலாளர்களின் தற்சார்பு - நிருவாகக் குழுக்களால் தீர்மானிக்கப்படுகின்றன. இக் குழுவின் உறுப்பினர்கள், நிறுவனத்தின் உறுப்பினர்களால் இரண்டு ஆண்டுக்காலத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். நிருவாகக் குழு இயக்குநர்களை நியமிக்கிறது. இவ்வியக்குநர்கள் நான்கு ஆண்டுக் காலம் பதவி வகிப்பர்.

இயக்குநர், நிறுவனத்தின் நடவடிக்கைகளின் வழிகாட்டியாய் விளங்குகிறார்; குழுவின் முடிவுகளைச் செயற்படுத்துகிறார். இவ்வாறு, பொருளாதார மேலாண்மையில் அரசிற்கு எவ்வித நேரடிப் பங்குமில்லை. நாட்டின் உள்ளமைப்பை ஏற்படுத்துவது, கூடுதல் மூலதனத் திரட்டை ஏற்படுத்துவது, பொருளாதாரத் திட்டம் வகுத்தல், பொருளாதார முன்னேற்றத்திற்கேற்ற சூழ்நிலைகளை உருவாக்குதல் போன்றவைகளே அரசின் கடமைகளாகும்.

தொழிலமைப்புகளின் நடவடிக்கைகள், 'சமூக மேற்பார்வைக் குழுக்'களால் (Social Supervisory Bodies) ஆராயப்பட்டு கட்டுப் படுத்தப்படுகின்றன.

12. நமது நாட்டின் முக்கியப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளும், அவற்றின் பணிகளும்

(Some Important Public Enterprises and their functions in our Country)

நமது நாடு, விடுதலை பெற்றபோது நாட்டின் தொழில் வளர்ச்சி மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்தது. 1947க்கு முன் ஆட்சி செலுத்திய அந்நிய அரசு, நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை. எனவே, நமது நாட்டில் ஒரு சில தொழிலமைப்புகளே பொதுத் துறையில் இயங்கி வந்தன; தனியார்துறையும் சரியான முறையில் வளர்ச்சியுற்றிருக்கவில்லை.

இதன் காரணமாக, சுதந்திரம் பெற்றவுடன் நாட்டின் தொழில்வளத்தைப் பெருக்குவது இந்திய அரசின் தலையாய கடமையாகியது. எந்த ஒரு நாடும், தொழில் முன்னேற்றத்தைப் பெறாமல் பொருளாதாரத்தில் விரைவான வளர்ச்சியைப் பெற முடியாது என்ற கருத்தை உணர்ந்து, நமது அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது. நேரடியாக, தொழில் நடவடிக்கைகளில் அரசு ஈடுபடுவதன் மூலமும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தை விரைவுபடுத்தலாம் என அரசு உணர்ந்து செயற்பட்டது.

1948, 1956, 1973 ஆகிய ஆண்டுகளில், தொழிற்கொள்கைகளை வகுத்து, அரசு சீரான தொழில் வளர்ச்சிக்கு வழி வகுத்தது. பொருளாதார மேம்பாட்டைப் பெறுவதில் அரசின் பங்கை உணர்ந்து, 1956ஆம் ஆண்டு முதல், 'திட்டமிட்டப் பொருளாதார'க் கொள்கைகளையும் அரசு அறிவித்தது; கலப்புப் பொருளாதாரக் கொள்கை பின்பற்றப்பட்டது. சமதர்ம சமுதாயத்தை உருவாக்க அரசு முடிவுசெய்தது. இதற்கு உறு

துணை புரியும் வகையில் பல தனியார்துறைத் தொழிலமைப்பு கள் நாட்டுடைமையாக்கப்பட்டன.

சுதந்திரத்திற்குப் பின் துவங்கிய முதல்கட்டத் தொழில் வளர்ச்சித் திட்டத்தில், பொருளாதார மேம்பாட்டுக்குத் தேவை யான மின்சாரம், இரும்பு, எஃகு, இரசாயன உரம், அலுமினியம், சிமெண்ட் போன்ற அத்தியாவசியப் பொருள்களின் உற்பத் திக்கு அதிகக் கவனம் செலுத்தப்பட்டது. இதற்கான அத்தியா வசிய இயந்திரக் கருவிகள், சாதனங்கள் யாவும் அயல்நாடு களிலிருந்து பெருமளவில் இறக்குமதி செய்யப்பட்டன. ஐந்தாண்டுத் திட்டங்களில், நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; குறிப்பாக, பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு ஆதரவு அதிக அளவில் கொடுக்கப் பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம்தான், நமது நாட்டுத் தொழில் வளர்ச்சியின் இரண்டாவது கட்டமாகும். அப்போதுதான், மூலதன இயந்திரக் கருவிகள் மற்றும் சாதனங் கள் உற்பத்திக்காகத் தொழிலமைப்புகள் நிர்மாணிக்கப்பட்டன. மேலும், தற்சார்பு வளர்ச்சிக்குத் தேவையான அடித்தளமும் அமைக்கப்பட்டது. அரசின் கொள்கைக்கேற்ப பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் நிறுவப்பட்டன. அவைகளில் பல இன்று கனரகத் தொழில்களாகவும் வளர்ந்துள்ளன.

முதல் ஐந்தாண்டுத் திட்டத் தொடக்கத்தில் 5 பொதுத்துறை நிறுவனங்களே அமைக்கப்பட்டிருந்தன. இரண்டாவது திட்டத் தின் தொடக்கத்தில் இவ்வெண்ணிக்கை 21 ஆகவும், மூன்றாவது திட்டத் தொடக்கத்தில் 48 ஆகவும், திட்டமுடிவில் 85 ஆகவும் அதிகரித்தது. 31-3-1972 இல் செயற்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை 101 ஆகும். 1975ஆம் ஆண்டில் இவ்வெண்ணிக்கை 127 ஆக உயர்ந்துள்ளது.

மேற்கண்ட புள்ளி விவரங்களிலிருந்து பொதுத்துறையின் விரைவான வளர்ச்சியை அறிய முடிகிறது. பல போற்றத்தகும் பணிகளையும், சாதனைகளையும் பொதுத்துறைத் தொழிலமைப்பு கள் புரிந்துள்ளன. அவைகளைப் பற்றிய விவரங்களை அறியும் வரை, பொதுத்துறையைப் பற்றிய நமது அறிவு முழுமை பெறாது. எனவே, இப் பகுதியில் நமது நாட்டுப் பொதுத்துறைத் தொழில் களையும், அவற்றின் பணிகளையும் விரிவாகக் காண்போம்.

முக்கியப் பொதுந்துறைத் தொழிலமைப்புகள்

நமது நாட்டில் பொதுத்துறைத் தொழில்கள் மூன்று வகை அமைப்பு முறைகளில் தோற்றுவிக்கப்படுகின்றன. அவை

முறையே, (i) துறைவழி நிருவாக முறை (ii) பொதுக் கூட்டுரு அமைப்பு முறை (iii) கூட்டுப் பங்கு நிறும அமைப்பு முறை ஆகியவைகளாகும். 1975-'76 இல், இவ்வமைப்பு முறைகளில் பொதுத்துறை நிறுவனங்கள் பின்வருமாறு தோற்றுவிக்கப் பட்டுள்ளன.

நிறுவனங்களின் அமைப்பு முறை	எண்ணிக்கை
(i) துறைவழி நிருவாக முறைகள்	31
(ii) பொதுக் கூட்டுரு அமைப்பு முறைகள்	27
(iii) கூட்டுப் பங்கு நிறுமங்கள்	69
கூடுதல் ...	127

இவைகள் ஒவ்வொன்றையும் பற்றி ஆராய்வது இயலாத காரியமானாலும்கூட, இவைகளில் ஒரு சில முக்கியத் தொழி லமைப்புகளையும், அவைகளைப் பற்றிய செயல்முறைகளையும் காண்போம்.

முக்கியப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பட்டியல்

நமது நாட்டில், பொதுத்துறை நிறுவனங்கள் பல்வேறு அமைச்சகத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. அவைகளில், சில முக்கிய நிறுவனங்களின் பட்டியல் கீழே கொடுக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு அமைச்சகம் (Ministry of Defence)

(1) *பாரத மண் கிளறிவிடும் (சாதனங்கள் உற்பத்தி) நிறுமம் (வரையறுக்கப்பட்டது)* (Bharat Earth Movers Ltd.)

(2) *பாரத மின்மங்கள்* (வரையறுக்கப்பட்டது) (Bharat Electronics Ltd.)

(3) *கார்டன் ரீச் தொழிற்சாலை (வரையறுக்கப்பட்டது)* (Garden Reach Workshops Ltd.)

(4) *கோவா கப்பல் தளம் (வரையறுக்கப்பட்டது)* (Goa Shipyard Ltd.)

(5) இந்துஸ்தான் வான்கலங்கள் (வரையறுக்கப்பட்டது) (Hindustan Aeronautics Ltd.)

(6) பிராகா கருவிகள் (வரையறுக்கப்பட்டது) (Praga Tools Ltd.)

அணுசக்தித் துறை (Department of Atomic Energy)

(7) இந்திய மின்னணுச் சாதனங்கள் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Electronics Corporation of India Ltd.)

(8) இந்திய மண் உயிரகைகள் (வரையறுக்கப்பட்டது) (Indian Rare Earths Ltd.)

(9) இந்திய யுரேனியக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Uranium Corporation of India Ltd.)

செய்தியறிவுப்புத் துறை (Department of Communications)

(10) இந்தியத் தொலைபேசி உற்பத்திகள் (வரையறுக்கப்பட்டது) (Indian Telephone Industries Ltd.)

(11) இந்துஸ்தான் தந்திமுறைத் தட்டெழுத்துப் பொறிகள் (வரையறுக்கப்பட்டது) (Hindustan Teleprinters Ltd.)

கல்வி மற்றும் இளைஞர் பணிகள் அமைச்சகம் (Ministry of Youth Services and Education)

(12) இந்திய தேசிய ஆராய்ச்சி முன்னேற்றக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (National Research Development Corporation of India Ltd.)

நிதி அமைச்சகம் (Ministry of Finance)

(13) இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation of India)

(14) மத்திய மீன்வளக் கூட்டுரு (Central Fisheries Corporation)

(15) மத்தியப் பண்டகச்சாலை கூட்டுரு (Central Warehousing Corporation)

(16) இந்திய உணவுக் கூட்டுரு (Food Corporation of India)

(17) இந்தியப் பால்வளக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Indian Dairy Corporation Ltd.)

(18) இந்திய நவீன ரொட்டிகள் தயாரிப்பு நிறுவனம் (வரையறுக்கப்பட்டது) (Modern Bakeries (India) Ltd.)

(19) தேசிய் விதைகள் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (National Seeds Corporations Ltd.)

(20) இந்திய அரசு விவசாயப் பண்ணைகள் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (State Farms Corporation of India Ltd.)

வெளிநாட்டு வாணிக அமைச்சகம் (Ministry of Foreign Trade)

(21) ஏற்றுமதிக் கடன் பொறுப்புறுதிக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Export Credit Guarantee Corporation Ltd.)

(22) இந்தியக் கைத்திறத் தொழில், கைத்தறி ஏற்றுமதிக் கூட்டுரு (The Handicrafts and Handlooms Exports Corporation of India Ltd.)

(23) இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கூட்டுரு (The Indian Motion Pictures Exports Corporation Ltd.)

(24) இந்தியக் கனிப்பொருள் உலோக வாணிகக் கூட்டுரு (The Minerals and Metals Trading Corporation of India Ltd.)

(25) இந்திய அரசு வாணிகக் கூட்டுரு (The State Trading Corporation of India Ltd.)

(26) தேசிய நெசவுக் கூட்டுரு (National Textile Corporation Ltd.)

நல்வாழ்வு குடும்பநலத்துறை முதலியவைகளின் அமைச்சகம் (Ministry of Health, Family Planning etc.)

(27) இந்துஸ்தான் வீட்டுவசதித் தொழிற்சாலை (வரையறுக்கப்பட்டது) (Hindustan Housing Factory Ltd.)

(28) இந்துஸ்தான் இரப்பர் (வரையறுக்கப்பட்டது) (Hindustan Latex Ltd.)

(29) வீட்டுவசதி, நகர முன்னேற்ற நிதிக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Housing and Urban Development Finance Corporation Ltd.)

(30) தேசியக் கட்டிடங்கள் கட்டுமானக் கூட்டுரு (National Buildings Construction Corporation Ltd.)

உள்நாட்டு வாணிகம், தொழில் முன்னேற்றம் மற்றும் நிறும நடவடிக்கைகள், அமைச்சகம் (Ministry of Industrial Development Internal Trade and Company Affairs.)

(31) பாரத கனரக மின்சாதனங்கள் (வரையறுக்கப் பட்டது) (Bharat Heavy Electricals Ltd.)

(32) இந்திய சிமெண்ட் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Cement Corporation of India Ltd.)

(33) (இந்திய) கனரக மின்சாதனங்கள் (வரையறுக்கப் பட்டது) (Heavy Electricals (India) Ltd.)

(34) இந்துஸ்தான் கம்பிவடங்கள் (வரையறுக்கப்பட்டது) (Hindustan Cables Ltd.)

(35) இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் (வரையறுக்கப் பட்டது) (Hindustan Machine Tools) .

(36) இந்துஸ்தான் காகிதக் கூட்டுரு (Hindustan Paper Corporation.)

(37) இந்துஸ்தான் போட்டோ உற்பத்தி நிறுமம் (வரையறுக்கப்பட்டது) (Hindustan Photo Films Manufacturing Company Ltd.)

(38) இந்துஸ்தான் உப்புகள் நிறுவனம் (வரையறுக்கப் பட்டது) (Hindustan Salts Ltd.)

(39) இந்திய இயந்திரக் கருவிகள் கூட்டுரு (வரையறுக்கப் பட்டது) (Machine Tools Corporation of India Ltd.)

(40) தேசியத் தொழில் முன்னேற்றக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (National Industrial Development Corporation Ltd.)

(41) தேசிய கருவிகள் நிறுவனம் (வரையறுக்கப்பட்டது) (National Instruments Ltd.)

(42) தேசியச் செய்தி அச்சிடும் காகிதத் தொழிற்சாலை (வரையறுக்கப்பட்டது) (National Newsprint and Paper Mills Ltd.)

(43) தேசிய சிறுதொழிற் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (National Small Industries Corporation Ltd.)

(44) இந்தியத் தோல் பதனீடு, காலணிகள் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Tannery and Foot Wear Corporation of India Ltd.)

(45) சம்பஹர் உப்புகள் நிறுவனம் (வரையறுக்கப் பட்டது) (Sambhar Salts Ltd.) .

செய்தித்துறை, ஒலிபரப்பு அமைச்சகம் (Ministry of Information and Broadcasting.)

(46) திரைப்பட நிதிக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Film Finance Corporation Ltd.)

நீர்ப்பாசன சக்தி அமைச்சகம் (Ministry of Irrigation and Power

(47) தேசியத் திட்டங்கள் கட்டுமானக் கூட்டுரு (National Projects Construction Corporation.)

(48) கிராமப்புற மின்மயக் கூட்டுரு (Rural Electrification Corporation.)

(49) (இந்திய) நீர், சக்தி முன்னேற்ற ஆலோசனைப் பணிகள் நிறுவனம் (Water and Power Development Consultancy Services)

(50) மறுவாழ்வு தொழிற் கூட்டுரு (Rehabilitation Industries Corporation Ltd.)

நாடாளுமன்ற நடவடிக்கைகள், கப்பல் போக்குவரத்து அமைச்சகம் (Ministry of Parliamentary Affairs, Shipping and Transport)

(51) மத்திய உள்நாட்டு நீர்வழிப் போக்குவரத்துக் கூட்டுரு (Central Inland Water Transport Corporation)

(52) மத்திய சாலைப் போக்குவரத்துக் கூட்டுரு (Central Road Transport Corporation Ltd.)

(53) இந்துஸ்தான் கப்பல்தளம் (Hindustan Shipyard)

(54) இந்தியக் கப்பல் போக்குவரத்துக் கூட்டுரு (Shipping Corporation of India Ltd.)

பெட்ரோலியம், இரசாயனம், சுரங்கங்கள், உலோகங்கள் அமைச்சகம் (Ministry of Petroleum, Chemicals Mines and Metals)

(55) பாரத அலுமினிய நிறுமம் (வரையறுக்கப்பட்டது) (Bharat Aluminium Company Ltd.)

(56) இந்துஸ்தான் தாமிர நிறுவனம் (வரையறுக்கப் பட்டது) (Hindustan Copper Ltd.)

(57) *இந்துஸ்தான் துத்தநாக நிறுவனம் (வரையறுக்கப் பட்டது)* (Hindustan Zinc Ltd.)

(58) *தேசிய நிலக்கரி முன்னேற்றக் கூட்டுரு* (National Coal Development Corporation)

(59) *தேசியக் கனிப்பொருள் முன்னேற்றக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது)* (National Mineral Development Corporation Ltd.).

(60) *நெய்வேலி நிலக்கரிக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது)* (Neyveli Lignite Corporation Ltd.)

(61) *கொச்சின் சுத்திகரிப்பு ஆலை* (Cochin Refineries Ltd.)

(62) *இந்தியப் பொறியாளர்கள் நிறுவனம் (வரையறுக்கப் பட்டது)* (Engineers India Ltd.)

(63) *திருவாங்கூர் உரங்கள், இரசாயனங்கள் நிறுவனம் (வரையறுக்கப்பட்டது)* (Fertilizers and Chemicals Travancore Ltd.)

(64) *இந்திய உரக் கூட்டுரு* (Fertilizer Corporation of India Ltd.)

(65) *இந்துஸ்தான் நோய்த் தடுப்புகள் நிறுவனம் (வரையறுக்கப்பட்டது)* (Hindustan Antibiotics Ltd.)

(66) *இந்துஸ்தான் பூச்சிக்கொல்லி மருந்துகள் நிறுவனம் (வரையறுக்கப்பட்டது)* (Hindustan Insecticides Ltd.)

(67) *இந்திய மருந்துகள், மருந்து வழங்கிடுகள் நிறுவனம் (வரையறுக்கப்பட்டது)* (Indian Drugs and Pharmaceuticals Ltd.)

(68) *இந்திய எண்ணெய்க் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது)* (Indian Oil Corporation)

(69) *சென்னை உரத் தொழிற்சாலை (வரையறுக்கப்பட்டது)* (Madras Fertilizers Ltd.)

(70) *சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலை* (Madras Refineries Ltd.)

(71) *எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுரு* (Oil and Natural Gas Commission)

இரும்பு, கனரகப் பொறியியல் அமைச்சகம் (Ministry of Steel and Heavy Engineering)

(72) பாரதத் தகடுகள், கொள்கலங்கள் உற்பத்தி நிறுவனம் (வரையறுக்கப்பட்டது) (Bharat Heavy Plate and Vessels Ltd.)

(73) கனரகப் பொறியியற் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Bharat Heavy Engineering Corporation Ltd.)

(74) இந்துஸ்தான் இரும்பு உற்பத்தி நிறுவனம் (Hindustan Steel Ltd.)

(75) துங்கபத்ரா இரும்பு உற்பத்திப் பொருள்கள் நிறுவனம் (Thungabhadra Steel Products Ltd.)

சுற்றுலா மற்றும் விமானப் பயண வசதி அமைச்சகம் (Ministry of Tourism and Civil Aviation)

(76) இந்திய விமானக் கூட்டுரு (Air India)

(77) இந்திய சுற்றுலா வளர்ச்சிக் கூட்டுரு (Indian Tourism Development Corporation)

(78) இந்திய வான்வழிகள் கூட்டுரு (Indian Airlines)

மேற்கண்டவாறு, நமது நாட்டில் பல்வேறு அமைச்சகங்களின் கட்டுப்பாட்டிற்குக்கீழ், பொதுத்துறை நிறுவனங்கள் அமைக்கப்பட்டு, செயற்பட்டு வருகின்றன. நாம் முன்பே கண்டவாறு, ஏறத்தாழ, நமது நாட்டில் 198 பொதுத்துறைத் தொழிலமைப்புகள் உள்ளன. எனினும், எடுத்துக்காட்டுக்காக, அவைகளில் மிக முக்கியமான 78 நிறுவனங்கள் மட்டும் மேற்கண்ட பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

சில முக்கியப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் பணிகளும் செயல்முறைகளும் (Functions and Operations of some important Public Enterprises)

1. இந்திய விமான நிறுவனம் (Air (India)

இந்தியாவின் இடவமைப்பும், பரப்பும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விமானப் போக்குவரத்துக்கு மிகவும் ஏற்றதாகத் திகழ்கின்றன. இருந்தபோதிலும், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகுதான் நமது நாட்டின் விமானப் போக்குவரத்து வளர்ச்சியடைந்தது. 1920ஆம் ஆண்டில்தான் முதன்முதலாகப் பொது

மக்களுக்கான விமானப் பயணவசதி தொடங்கியது. 1927ஆம் ஆண்டு, பொதுமக்கள் விமானப் பயணத்துறை (Civil Aviation Department) அமைக்கப்பட்டது. 1929, 1932, 1933 ஆகிய ஆண்டுகளில், முறையே, 'இம்பீரியல் வான்வழி', 'டாடா வான் வழி', 'இந்திய தேசிய வான்வழி' ஆகிய நிறுமங்கள் அமைக்கப்பட்டன.

1946-ல், விமானப் பயணங்களை நடத்த விமானப் போக்கு வரத்து நிறுமங்கள், அரசிடமிருந்து உரிமம் (Licence) பெற வேண்டுமென அறிவிக்கப்பட்டது. பிறகு வெளிநாட்டு விமானப் போக்குவரத்தை நடத்துவதற்காகப் பன்னாட்டு இந்திய விமான நிறுவனம் (Air India International) அமைக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட விமானப் போக்குவரத்து விசாரணைக் குழு (Air Transport Enquiry Committee) விமான நிறுமங் களிடையே நிலவிய போட்டியைத் தவிர்க்க, விமான நிறுமங்களை இணைக்கவேண்டும் எனப் பரிந்துரைத்தது. ஆனால், விமான நிறுமங்கள் இணைய மறுத்ததால், 1953ஆம் ஆண்டு விமானப் போக்குவரத்து நாட்டுடைமையாக்கப்பட்டது.

வெளிநாட்டு விமானப் போக்குவரத்தை நடத்துவதற்காகப் 'பன்னாட்டு இந்திய விமானம்' (Air India International) என்ற பெயரிலும், உள்நாட்டுப் போக்குவரத்திற்காக 'இந்திய வான் வழிகள்' (Indian Air Lines) என்ற பெயரிலும் இரு கூட்டுருக்கள் அமைக்கப்பட்டன.

இந்திய விமானக் கூட்டுரு (Air India Corporation) 1953ஆம் ஆண்டில் ஜூன் மாதம் 15ஆம் தேதி அமைக்கப் பட்டது. இக் கூட்டுரு ஐந்து கண்டங்களின் நாடுகளாகிய (Continents) இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், சுவிட்சர் லாந்து, மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், ருஷ்யா, இத்தாலி, ஈரான், குவைத், ஜப்பான், ஹாங்காங், தாய்லாந்து, கென்யா, உகாண்டா, எதியோப்பியா, சிங்கப்பூர், மலேசியா, இந்தோ னேசியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கிடையே விமானப் பயணங்களை மேற்கொள்கிறது.

1969 – '70ஆம் ஆண்டில், அம்ஸ்டர்டாம் (Amsterdam), துபாய் போன்ற நாடுகளுக்கும், இக் கூட்டுருவின் விமானப் பணி விரிவாக்கப்பட்டது. இந்தியாவுக்கும் - இங்கிலாந்துக்கும் இடையே, ஒரு வாரத்திற்கு 15 பயணங்கள் 1969 முதல் மேற் கொள்ளப்படுகின்றன.

முந்தைய ஆண்டில் 3,31,051 ஆக இருந்த பயணம் செய்த பயணிகளின் எண்ணிக்கை, 1969-'70–ல் 4,02,609 ஆக உயர்த்தப்பட்டது. முதல் திட்டத்தில் 7·2 கோடி ரூபாயும், இரண்டாம் திட்டத்தில் 15·9 கோடி ரூபாயும் விமானப் போக்கு வரத்து முன்னேற்றத்திற்காகச் செலவிடப்பட்டன. மூன்றும் திட்டத்தில் 25·2 கோடி ரூபாயும், நான்காம் திட்டத்தில் 202 கோடி ரூபாய்களும் ஒதுக்கப்பட்டன. எனவே, பயணர் போக்கு வரத்தில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டதில் வியப்பேது மில்லை.

வருவாய்: செயல்முறை வருவாய் (நிகரம்) ரூ. 54·98 கோடியிலிருந்து, 61·17 கோடி ரூபாயாக உயர்ந்தது. தேய்மானம், வரிகள் போன்றவைகளுக்கு வகைசெய்த பிறகு, மொத்த நிகர இலாபம் 2·14 கோடி ரூபாயிலிருந்து, 2·27 கோடி ரூபாயாகவும் உயர்ந்தது. மேலும், இக் கூட்டுரு 1969-70, 1970-'71 ஆகிய ஆண்டுகளில் 6% பங்காதாயம் (Dividend) வழங்கியது.

2. பாரத அலுமினிய நிறுமம் (வரையறுக்கப்பட்டது) (Bharat Aluminium Company Limited)

1965ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் இக் கூட்டு நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. மகாராஷ்டிர மாநிலத்திலும், மத்தியப் பிரதேச மாநிலத்திலும் பணியாற்றிய அலுமினியத் திட்டங்களின் கட்டுமானம், மேலாண்மை, செயற்பாடு போன்றவைகளைக் கவனிப்பதற்காக இந் நிறுமம் அமைக்கப்பட்டது.

1965ஆம் ஆண்டில், ரத்தினகிரியில், கோய்னு (Koyna) மின்வழங்கும் திட்டத்தின் அடிப்படையில், ஹங்கேரி நாட்டின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்த அலுமினிய ஆலை தோற்றுவிக்கப்பட்டது. அதுபோன்றே கோர்பா (Korba) (மத்தியப் பிரதேசம்) என்ற இடத்திலும் இக் கூட்டு நிறுமத்தின்கீழ், ஒரு அலுமினியத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது. ஆண்டொன்றுக்கு 2,00,000 டன் அலுமினியத்தை உற்பத்தி செய்யக் கூடிய திறனுடன் இத் திட்டம் அமைந்துள்ளது. மேலும், ருஷ்ய நாட்டின் நிதி உதவியுடன், மேலும் பல திட்டங்கள் கோர்பா அலுமினிய நிறுமத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3. பாரத மண்கிளறும் கருவிகள் உற்பத்தி நிறுமம் (Bharat Earth Movers Limited- Bangalore)

1964ஆம் ஆண்டில், பெங்களூரில் இந் நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. கனரக மண்கிளறும் கருவிகளையும், சாதனங்

களையும் உற்பத்தி செய்வதும், ரெயில் பெட்டிகளைத் தயாரிப்பதும் இதன் முக்கிய நோக்கங்களாகும். இந்துஸ்தான் வான் கலங்கள் நிறுமத்தின் ரெயில்பெட்டி உற்பத்திப் பிரிவையும், மண்கிளறும் சாதனங்களின் உற்பத்திப் பிரிவையும் 1965ஆம் ஆண்டில் இந் நிறுவனம் மேற்கொண்டது.

ஜப்பான் நாட்டின் ஒத்துழைப்புடன் தவழ்ந்து செல்லும் டிராக்டர்களை (Crawler Tractor) இந் நிறுமம் உற்பத்தி செய்து வருகிறது. முதல் டிராக்டர் 1967ஆம் ஆண்டில் விற்பனைக்கு வந்தது. இந் நிறுமத்தின் ரெயில்பெட்டி உற்பத்தித் துறை, 1969–'70-ல், 270 ரெயில்பெட்டிகளை உற்பத்தி செய்தது.

இந் நிறுமத்தின் உபகருவிகளின் விற்பனை 210 இலட்ச ரூபாயிலிருந்து, 1969-'70-ல் 280 இலட்ச ரூபாயாக உயர்ந்தது. 1969–'70-ல் மொத்த விற்பனை 22·79 கோடி ரூபாயாகும். 1970ஆம் ஆண்டில் 35·7 இலட்ச ரூபாயைப் பங்காதாயமாக இந் நிறுமம் வழங்கியது. மேலும், ரெயில்பெட்டிகளின் உற்பத்தியை ஆண்டுக்கு 300 என்ற நிலையிலிருந்து, 400 ஆக அதிகரிப்பதற்கும் வளர்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டது.

கடந்த ஆண்டுகளில், இந் நிறுமத்தின் விற்பனைப் புரள்வில் (turnover) கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டு வருவதைப் பின் வரும் அட்டவணைமூலம் அறியலாம்.

விவரங்கள்	1967-'68	1968-'69	1969-'70
ரெயில் பெட்டிகள் (எண்ணிக்கை)	254	270	270
மண்கிளறும் கருவிகள் (எண்ணிக்கை)	154	316	331
விற்பனைப் புரள்வு (ரூபாய் இலட்சத்தில்)	1,392·69	2,150·78	2,286·21

(Source: Reports on the Working of Public Enterprises, 1969-'70)

4. பாரத மின்னணுச் சாதனங்கள் உற்பத்தி நிறுவனம், பெங்களூர் (Bharat Electronics Ltd., Bangalore)

1954ஆம் ஆண்டில், செய்தித்தொடர்புக் கருவிகளையும், உப உறுப்புகளையும் தயாரிக்கும் நோக்கத்துடன் இந் நிறுமம்

20

தோற்றுவிக்கப்பட்டது. இந் நிறுமத்தினுல் உற்பத்தி செய்யப்படும் கருவிகள் பாதுகாப்புத் துறையாலும், தபால்-தந்தித் துறை போன்ற அரசுத் துறைகளாலும் வாங்கப்படும். 1957ஆம் ஆண்டுமுதல், ஆண்டொன்றுக்கு 4·25 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்னணுக் கருவிகளை இந் நிறுமம் உற்பத்தி செய்யத் திட்டமிடப் பட்டது. ஆனால், 1962–'63ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி மதிப்பு 3·03 கோடி ரூபாயாகத்தான் இருந்தது. பிறகு, வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதால், 1969–'70-ல் இதன் உற்பத்தி மதிப்பு 24·11 கோடி ரூபாயாக உயர்ந்தது.

காவல்துறைக்குத் தேவையான கம்பியில்லாச் செய்தித் தொடர்புக் கருவிகள், செய்திகள் பெறும் கருவிகள் (Communication Receiver), டேப் ரிகார்டர்கள் போன்ற எண்ணிறந்த கருவிகள் இந் நிறுமத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றன. மேலும், எல்லைக் கண்காணிப்புக் கருவிகள், அதிகச் சக்திவாய்ந்த டிரான்ஸ்மிட்டர்கள், டெலிவிஷன் கருவிகள் போன்றவைகளைத் தயாரிக்கவும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. உத்திரப்பிரதேச மாநிலத்தில், ராடார் கருவிகளை உற்பத்தி செய்ய மற்றுமொரு நிறுமத்தைத் தோற்றுவிக்க மத்திய அரசின் அனுமதியும் கோரப்பட்டது.

5. பாரத கனரக மின் சாதனங்கள் நிறுமம் (Bharat Heavy Electricals Ltd., New Delhi)

1964ஆம் ஆண்டில், நவம்பர் மாதம் இந் நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கம், கீழ்க்காணும் மூன்று நிறுமங்களின் பணிகளையும் மேற்கொள்வதாகும்:

(i) உயர் அழுத்தம் கொண்ட எரிகலன் ஆலை, திருச்சிராப்பள்ளி (High Pressure Boiler Plant, Tiruchirapalli)

(ii) கனரக சக்தி உபகரணங்கள் தொழிற்சாலை, ஐதராபாத் (Heavy Power Equipment Plant, Hydrabad)

(iii) கனரக மின்சாதனங்கள் தொழிற்சாலை, ஹரிதுவார் (Heavy Electrical Equipment Plant, Hardwar)

உற்பத்தி: ஒவ்வோர் ஆண்டும், இந் நிறுமத்தின் உற்பத்தி அதிகரித்து வருகின்றது. 1968–'69ஆம் ஆண்டில் 35·26 கோடி ரூபாயாக இருந்த இதன் உற்பத்தி மதிப்பு, 1969–'70-ல் 44·61 கோடி ரூபாயாக உயர்ந்தது; இது ஏறத்தாழ 26 சதவீதமாகும்.

மிக முக்கியமான சாதனையாகக் கருதப்பட்டது. தமிழ்நாட்டில் எண்ணூர் அனல்மின் திட்டத்திற்குத் தேவைப்பட்ட 60 M.W. டர்போசெட் (Turbo-Set) என்ற இயந்திரத்தை இந் நிறுமத்தின் ஹைதராபாத் பிரிவும், கொதிகலனைத் திருச்சிப் பிரிவும் வழங்கியதாகும். மேலும், இந் நிறுவனம் போபால், ஹரிதுவார் போன்ற பிரிவுகளையும் அமைத்து, ஸ்விட்ச்கியர்கள், ட்ரான்ஸ்பார் மர்கள் போன்ற கருவிகளையும் உற்பத்தி செய்கிறது.

விற்பனை : 1969-'70-ல் விற்பனை இலாபமாக 37·6 கோடி ரூபாயை இந் நிறுமம் ஈட்டியுள்ளது. ஆனால், தேய்மானங் களுக்கு வகைசெய்த பிறகு 149·5 இலட்ச ரூபாய் இழப்பு ஏற்பட்டது.

ஏற்றுமதி : பல கருவிகளை இந் நிறுவனம் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்துள்ளது. மேற்கு ஜெர்மனிக்கும், போலந்து நாட்டிற்கும் அடைப்பான்கள் (Valves) என்கிற கருவியை வெற்றி கரமாக ஏற்றுமதி செய்துள்ளது. வேறு சில புதிய ஒப்பந்தங் களையும் ஏற்படுத்தியது. மலேயா நாட்டுடன் 2·25 கோடி ரூபாய் மதிப்புள்ள அடைப்பான்கள் ஏற்றுமதிக்கான ஒப்பந்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இத் துறையில் பல ஆண்டு களாக அனுபவம் பெற்ற நாடுகளாகிய அமெரிக்கா, இங்கி லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளுடன் போட்டியிட்டு, மேற் கண்ட ஒப்பந்தத்தை இந் நிறுவனம் பெற்றுள்ளது என்பது மிகவும் பெருமிதப்படவேண்டியதொரு நிகழ்ச்சியாகும். இதை ஒரு மாபெரும் சாதனை என்று வர்ணிப்பதில் எவ்விதத் தவறும் இருக்கமுடியாது.

பொதுத்துறையின் கனரகத் தொழிலமைப்புகள் வியப் பூட்டும் பல சாதனைகளைப் புரிந்துள்ளன. 1971-'72-ல் ரூ.208 கோடியாக இருந்த உற்பத்தி அளவு, 1973-'74-ல் ரூ. 409 கோடி யாக உயர்ந்தது. 1974-'75-ல் இந்த அளவு மேலும் உயர்ந்து ரூ. 557 கோடியாக ஆயிற்று. 1972-'73-ல் மட்டும் ரூ. 13 கோடி நட்டத்திலிருந்த பொதுத்துறை நிறுவனங்கள், 1974-'75-ல் ரூ. 31 கோடி இலாபம் ஈட்டின. கனரகத் தொழில்களின் மொத்த உற்பத்தி அளவு, 1975-'76-ல் ரூ. 725 கோடியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அவசரநிலைப் பிரகடனத்தைத் தொடர்ந்து ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டையும் ஒழுங்குமுறை களையும் பயன்படுத்தி, இந்த உற்பத்தி அளவை ரூ. 800 கோடி யாக உயர்த்தவும் நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன. மேலும், 1975ஆம் ஆண்டின் விலை அளவில் 10% செலவைக் குறைத்தும்,

அமைக்கப்பட்டு வரும் திட்டங்களைத் துரிதகதியில் முடித்து, இந்த நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடைவது என்றும் இக் கனரகத் தொழில் நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன.

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்கு, இந் நிறுமங்களைப் போன்ற கனரகத் தொழில்கள் நல்கும் ஆதரவு மிகவும் முக்கியமானது. 4ஆவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இறக்குமதியான 85% மின்துறை சாதனங்களும் இயந்திரங்களும், 5ஆவது திட்டக் காலத்தில் 85% மின் உற்பத்திக்கான இயந்திரங்களும் சாதனங்களும் இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டவைகளாக இருக்கும். 1973-'74 இறுதியில் 1·9 கோடி கி.வாட்டாக இருந்த மின் உற்பத்தித் திறன், 1978-'79-ல் 3·4 கோடி கி.வாட்டாக உயரும் என்று திட்டமிடப்பட்டுள்ளது. இச் சாதனை பெரும்பாலும் உள்நாட்டுச் சாதனங்களைக்கொண்டே ஏற்படுத்தப்படும்.

6. பாரத கனரகத் தகடு, கொள்கலன்கள் நிறுமம், விசாகப்பட்டணம் (Bharat Heavy Plate and Vessels Ltd., Visakhapatnam)

1966ஆம் ஆண்டு, ஜூன் மாதத்தில், இந் நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. உரத் தொழிற்சாலைகள், பெட்ரோலியம், இரசாயனத் தொழிற்சாலைகள் ஆகியவைகளின் தேவைக்கேற்ப, உபகரணங்களை இந் நிறுமம் உற்பத்தி செய்யும். இத் திட்டத்தின் மதிப்பீடு ரூ. 16·60 கோடியாகும்.

கனரக அழுத்தமுள்ளக் கொள்கலன்கள், காற்றைப் பிரிக்கும் கருவிகள், இரசாயன உரம், எண்ணெய்ச் சுத்திகரிப்பு, பெட்ரோலியப் பொருள்கள் ஆகிய தொழில்களுக்கான குழாய்கள் போன்ற சாதனங்களை, விசாகப்பட்டணத்திலுள்ள இந் நிறுமம் தயாரிக்கிறது.

உற்பத்தி: இந் நிறுமம் தன் உற்பத்தியை 1969ஆம் ஆண்டிலிருந்து தொடங்கியது. பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்குத் தேவையான இரசாயனப் பொருள்களும் மற்றச் சாதனங்களும் உற்பத்தி செய்யப்பட்டன. இரசாயனத் தொழிற்சாலை, இந்திய பெட்ரோ இரசாயனத் தொழிற்சாலை, பாரத அலுமினிய உற்பத்தி நிறுமம் ஆகிய தொழிலமைப்புகள், ரூ. 200 இலட்சம் மதிப்புள்ள பொருள்களை இந் நிறுமத்திலிருந்து பெற்றன. பல-படிநிலைகளைக் கொண்ட கொள்கலன்களை உற்பத்தி செய்ய

மற்ற நிறுவனங்களுடன் இணைந்து செயற்பட இந் நிறுமம் திட்டங்களை மேற்கொண்டது.

இலாபம் / நட்டம் : இந் நிறுமத்தின் அதிகாரம்பெற்ற மூலதனம் (Authorised Capital) ரூ. 7 கோடியாகும். மூலதனம் முழுமையும் வழங்கப்பட்டுவிட்டது. இம் மூலதனத்தை ரூ. 10 கோடியாக அதிகரிக்கும்படி, அரசை இந் நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

1969-'70-ல், இந் நிறுமத்தின் மொத்த உற்பத்தி ரூ. 6·49 இலட்சமாகும். ஆனால், இவ்வாண்டில் ரூ. 27·47 இலட்சம் நட்டம் ஏற்பட்டது. 1975-'76 ஆம் ஆண்டில்கூட, இந் நிறுமம் தொடர்ந்து நட்டத்தில் நடந்துவருகிறது.

7. இந்திய சிமெண்ட் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (Cement Corporation of India Ltd., New Delhi)

வளர்ந்துவரும் சிமெண்ட் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக, 1965ஆம் ஆண்டு ஜனவரி மாதம், இந்திய சிமெண்ட் கூட்டுரு தோற்றுவிக்கப்பட்டது. வெற்றிகரமான சோதனை ஓட்டங்களுக்குப் பிறகு, 1970ஆம் ஆண்டில், மத்தியப் பிரதேசத்தில் இக் கூட்டுருவின் முதல் தொழிற்சாலை தொடங்கப்பட்டது. இரண்டாவது தொழிற்சாலை, மைசூரில் 1971ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இவ்வாலைகளின் உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 2 இலட்சம் மெட்ரிக் டன் சிமெண்ட் ஆகும். மேலும் ஒரு தொழிற்சாலையை அஸ்ஸாம் மாநிலத்தில் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. நான்காவது திட்டமாக, இமாச்சலப் பிரதேசத்தில் ஆலையை அமைக்க அரசின் அனுமதிக்கு இந் நிறுமம் காத்திருக்கிறது.

8. மத்தியப் பண்டகசாலைக் கூட்டுரு, புதுடில்லி (The Central Warehousing Corporation, New Delhi)

1957ஆம் ஆண்டில், மார்ச் மாதம், 'விவசாயப் பொருள்கள் வளர்ச்சி மற்றும் பண்டகசாலைச் சட்டம், 1956'-ன் (Agricultural Produce Development and Warehousing Corporation Act, 1956) கீழ் அமைக்கப்பட்டது. பிறகு, 1962ஆம் ஆண்டுச் சட்டத்தின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

இக் கூட்டுருவின் முக்கியப் பணிகள்

(i) ஏற்ற இடங்களில் பண்டகசாலைகளைக் கட்டுதல், வாடகைக்கு நடத்துதல்.

(ii) விவசாயப் பொருள்கள், விதைகள், உரங்கள் ஆகியவை களைச் சேமிக்கப் பண்டகசாலைகளை நடத்துதல்.

(iii) மாநிலப் பண்டகசாலைகளின் மூலதனத் திட்டத்தில் பங்கேற்றல்.

(iv) விவசாயப் பொருள்களைக் கொள்முதல் செய்தல், விற்பனை செய்தல், சேமித்துவைத்தல், விதைகள், உரங் கள் போன்றவைகளைப் பகிர்வு செய்தல் போன்ற நடவடிக்கைகளில் அரசின் முகமை நிறுவனமாகச் செயல் படுதல் போன்றவையாகும்.

சேமிப்புத் திறன்: பண்டகசாலைக் கூட்டுருவின் சேமித்து வைக்கும் திறன் 11·24 இலட்சம் டன்னிலிருந்து, 1970ஆம் ஆண்டில் 12·73 இலட்சம் டன்னாக உயர்ந்தது. மத்தியப் பண்டக சாலைக் கூட்டுருவால் நிருவகிக்கப்படும் பண்டகசாலைகளின் எண்ணிக்கை 1969-ல் 108ஆக இருந்தது; 1970-ல் இவ் வெண்ணிக்கை 123 ஆக உயர்ந்தது.

இலாபம்: 1970ஆம் ஆண்டில் சேமிப்புக் கட்டணமாக ரூ. 347·2 இலட்சத்தை இக் கூட்டுரு பெற்றது; இது முந்தைய ஆண்டைவிட 26% அதிகமாகும். தேய்மானங்கள், வட்டி, வரி விதங்கள் ஆகியவைகளுக்கு வகைசெய்த பிறகு நிகர இலாப மாக ரூ. 46·7 இலட்சத்தை இக் கூட்டுரு ஈட்டியுள்ளது. (ஆனால் முந்தைய ஆண்டில் இலாபம் ரூ. 48·9 இலட்சமாக இருந்தது.)

9. இந்திய உரக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது), புதுடில்லி (Fertilizer Corporation of India Ltd., New Delhi).

1961ஆம் ஆண்டில் ஜனவரி மாதம், சிந்திரி உரம், இரசாயனத் தொழிற்சாலை, இந்துஸ்தான் இரசாயனம் - உரத் தொழிற்சாலை ஆகியவைகளின் இணைப்புடன் இக் கூட்டுரு தோற்றுவிக்கப்பட்டது. விவசாய உரங்களைப் பேரளவில் உற்பத்தி செய்யும் ஒரே கூட்டுருவாக உரக் கூட்டுரு விளங்கு கிறது. இதன் கூறுகள், மற்ற 6 இடங்களில் செயற்படுகின்றன. அவைகள் முறையே, (i) சிந்திரி, (ii) நங்கல், (iii) டிராம்பே, (iv) கொரக்பூர், (v) நாம்ரப், (vi) துர்காபூர் ஆகிய இடங்களாகும். இவைகளின் மொத்த உற்பத்தித் திறன், ஆண்டொன்றுக்கு 6 இலட்சம் டன்னுக்கும் அதிகமாகும். மேலும் தொழிலமைப்பு வளர்ந்து அனைத்துத் திட்டங்களும் செயற்படத் தொடங்கிய வுடன், இக் கூட்டுருவின் உற்பத்தித் திறன் ஆண்டொன்றுக்கு 35 இலட்சம் டன்னாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தீவிரமான ஆராய்ச்சி மற்றும் முன்னேற்றத் திட்டங்களை மேற்கொள்வதன்மூலம், இக் கூட்டுரு தொழில்நுட்பம், பொறியியல் திறன் போன்றவைகளில் தற்சார்பு பெற்று விளங்குகிறது. பல்வேறு இடங்களிலும் விற்பனைக் கிளைகளைக் கொண்டு, நாட்டின் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இக் கூட்டுரு அரிய தொண்டாற்றி வருகிறது.

பின்வரும் அட்டவணையிலிருந்து, இக் கூட்டுருவின் பல்வேறு அமைப்புகளின் உற்பத்தியை அறியலாம்.

இந்திய உரக் கூட்டுருவின் உற்பத்தி விவரம்

விவரங்கள்	1969-'70 (டன்)	1968-'69 (டன்)
சிந்திரி (Sindiri)		
(i) அமோனியம் சல்பேட் (Ammonium Sulphate)	2,91,000	2,65,830
(ii) இரு உப்பு (Double Salt)	42,727	49,167
(iii) யூரியா (Urea)	15,738	15,543
நங்கல் (Nangal)		
(i) கேன் 25% (CAN 25%)	3,16,175	3,09,241
(ii) கேன் 28% (CAN 28%)	2,577	—
(iii) கனரக நீர் (Heavy Water) Kgs.	15,846	14,281
டிராம்பே (Trombay)		
(i) யூரியா (Urea)	57,774	68,508
(ii) சல்பா (Sulpha)		
(20:20)	22,246	94,133
(18:18:9)	11,519	7,655
(15:15:15)	59,025	6,600
(20:10)	356	—
(15:7·5:15)	400	—
(14:10·5:14)	12,297	—

அட்டவணை (தொடர்ச்சி)

விவரங்கள்	1969-'70 (டன்)	1968-'69 (டன்)
கொரக்பூர் (Gorakpur)		
யூரியா	1,58,066	1,02,022
நாம்ரப் (Namrap)		
(i) அமோனியம் சல்பேட்	65,704	30,441
(ii) யூரியா	26,139	11,344

(Source : The Report on the Workings of Public Enterprises, 1969-'70)

விற்பனையும் இலாபமும்: 1969-'70-ல் விற்பனைப் புரள்வு ரூ. 65·80 கோடியாக இருந்தது. தேய்மானம், கடன்களின் மீதான வட்டி, பின் செலுத்து நடைமுறைச் செலவுகள் ஆகியவைகளுக்கு வகைசெய்த பிறகு ரூ. 227·5 இலட்சம் இலாபமீட்டப்பட்டது.

10. இந்திய உணவுக் கூட்டுரு, புதுடில்லி (The Food Corpo- ration of India)

1965ஆம் ஆண்டில் ஜனவரி மாதம், இந்திய உணவுக் கூட்டுரு ரூ. 100 கோடியைப் பொதுநிலை முதலாகக் (Equity Capital) கொண்டு துவக்கப்பட்டது. இந்திய அரசால் நியமிக்கப் படும் இயக்குநரவை இதன் நிருவாகத்துக்குப் பொறுப்பாகும். நமது நாட்டின் தானிய மொத்த வாணிகத்தை நாட்டுடைமை யாக்கவேண்டுமென, 1957ஆம் ஆண்டு அசோக்மேத்தா குழு என்று கூறப்படும் 'தானிய விசாரணைக் குழு' வலியுறுத்தியது. 1962 ஆம் ஆண்டு ஏற்பட்ட சீன ஆக்கிரமிப்பு, நமது பாதுகாப்பு அமைப்பை வலுப்படுத்தவேண்டுவதன் அவசியத்தை எடுத்துக் காட்டியதை அடுத்து, நமது படைகளை வலுப்படுத்தவும், போர்க் கருவிகளின் உற்பத்தியை விரிவுபடுத்தவும் உடனடிக் கவனம் செலுத்தப்பட்டது; தானியங்களைப் பெருமளவு இறக்குமதி செய்யவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவையனைத்தும், நாட்டில் தானியங்களின் விலைவாசியைக் கடுமையாக உயர்த்தி விட்டன. எனவே, இந் நெருக்கடி நிலையைச் சமாளிப்பது அரசின் கடமையாயிற்று. இம் மாபெரும் பொறுப்பைத் திறம்பட நிறை வேற்றுவதற்குத்தான், நமது அரசு இக் கூட்டுருவைத் தோற்று வித்தது.

முக்கிய நோக்கங்கள்

(i) அரசின் விலைக் கொள்கைக்கேற்றவாறு, உற்பத்தியாளரிடமிருந்தும், பொதுச் சந்தையிலிருந்தும் தானியங்களைக் கொள்முதல் செய்து, உற்பத்தியாளருக்கு நியாயவிலை கிடைக்குமாறு செய்தலும், குறைந்தபட்ச அளவுக்குக்கீழ் விலைகள் சரியாமல் காத்தலும்.

(ii) பொதுச் சந்தையில் தானிய விலை ஏறுமல் தடுக்க, தானியங்களைப் பேரளவில் தாக்குதலைச் சமாளிக்கும் அளவில் இருக்கும்படி (Buffer Stock) வைத்திருத்தலும். அதற்கென நாடு முழுவதும் பண்டகசாலைகளை அமைத்தலும்.

(iii) நாட்டில் தானிய விலைகளின் ஏற்றத்தைத் தடுக்க, உரிமம் பெற்ற சில்லறை வணிகர், கூட்டுறவு நிறுவனங்கள் ஆகியவைகளின் மூலம், தனது இருப்பிலிருந்து தேவையான அளவு தானியங்களை வழங்கச் செய்தல்.

(iv) நாட்டில் தானிய உற்பத்தி பெருகுவதற்கு வழி வகுத்தல்.

(v) தானியங்கள், உணவுப் பொருள்கள், இவற்றை அரைத்தல், பதனஞ் செய்தல், மாவு ஆலைகள், பதன அமைப்புகள் ஆகியவற்றை நிறுவ உதவிபுரிதல்.

1969ஆம் ஆண்டுமுதல், தானிய வாணிகத் துறையில் மத்திய அரசின் தனித்த முகமையகமாகச் (Sole Agency) செயற்படும் உரிமை பெற்றிருக்கிறது. ரெயில் மூலமாக நடைபெறும் தானியப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரமும் உண்டு. தானிய மொத்த வணிகர், ஆலை உரிமையர் (Millers) இவர்களிடமிருந்து இருப்பைக் கோரவும், உற்பத்தியாளர்களிடமிருந்து தானியங்களைக் கோரவும் போதிய அதிகாரங்கள் உண்டு. மேலும் தரைமட்ட விலைகளை (Floor Prices) அறிவிக்கவும் இக் கூட்டுருவுக்கு அதிகாரமுண்டு.

இதன் நடவடிக்கைகள்

(1) 1968ஆம் ஆண்டு இறுதியில், இது 15 மாநிலங்களில் செயற்பட்டு வந்தது. தானியங்கள், மற்றப் பருப்பு வகைகள், கடலெண்ணெய் போன்றவற்றையும் வாங்கிவிற்கிறது.

(2) பதனஞ்செய்த (Processed) உணவுகளை உற்பத்தி செய்து வழங்கும் பொறுப்புகளையும் இது மேற்கொண்டுள்ளது.

(3) 1970ஆம் ஆண்டு, பள்ளிக் குழந்தைகளுக்கு இலவசமாக உணவு வழங்க, பாலகர் (Balahar) என்னும் உணவை உற்பத்தி செய்தது.

(4) 1970ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் 62·5 இலட்சம் டன் அளவுள்ள பண்டக வசதியை இது பயன்படுத்தி வந்தது.

(5) 1960-70ஆம் ஆண்டு இக் கூட்டுரு 55 இலட்சம் டன் தானியங்களைக் கொள்முதல் செய்தது. விற்பனைப் புரள்வின் மொத்த மதிப்பு, 1969–'70-ல், ரூ. 1,443 கோடியாகும்.

(6) 1969–70ஆம் ஆண்டில் 43·80 இலட்சம் டன் உணவுப் பொருளை (ரூ. 279·32 கோடி மதிப்புடையது) இறக்குமதி செய்தது.

(7) தேய்மானம், வட்டி, வரிகள் போன்றவைகளுக்கு வகை செய்த பிறகு ரூ. 68·22 இலட்சம் நிகர இலாபமாக ஈட்டப்பட்டது.

முக்கியச் சாதனை : நாடு முழுவதும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவிற்குள், 40 நவீன அரிசி ஆலைகளை இக் கூட்டுரு அமைக்கத் திட்டமிட்டது. இவற்றில் சுமார் 25 ஆலைகள் தற்பொழுது பல்வேறு இடங்களில் நடைபெறுகின்றன. 1975 ஆம் ஆண்டின் முடிவில் ஏறத்தாழ 17 ஆலைகள் தொடங்கப் பட்டுவிட்டன. 1976 பிப்ரவரியில், இவ்வெண்ணிக்கை 21 ஆக உயர்ந்தது. இவ்வாண்டு முடிவிற்குள் மற்ற நான்கு ஆலைகளும் செயற்படத் தொடங்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால். இக் கூட்டுருவின் தற்போதைய பிரச்சினை நிதிப் பற்றுக்குறையாகும். அரசின் பொது வரவு-செலவுத் திட்டத்தில் நவீன ஆலைகளை அமைக்க நிதி ஒதுக்கீடுகள் செய்யப்படவில்லை.

நவீன அரிசி ஆலைகள் பல்வேறு மாநிலங்களிலும் வெற்றிகரமாகச் செயற்பட்டாலும், 1975–'76ஆம் ஆண்டில், தமிழ் நாட்டில் தஞ்சாவூரில் இயங்கும் ஆலையே அதிகபட்ச வருவாயை ஈட்டியுள்ளது; ஏறத்தாழ 1,845 டன் நெல் பதப்படுத்தப் பட்டுள்ளது. அதுபோலவே, ஆந்திரா, பஞ்சாப், கேரளா போன்ற மாநிலங்களில் செயற்படும் ஆலைகளும் மிகவும் வெற்றிகரமான முறையில் செயற்படுகின்றன. ருத்ராபூர் (Rudrapur)

அரிசி ஆலை, 1,152 டன் நெல்லைப் பதனப்படுத்தியுள்ளது. இருந்த போதிலும், இக் கூட்டுறு நிதிப் பற்றாக்குறை காரணமாக, மற்ற இடங்களிலும் நவீன அரிசி ஆலைகளை அமைக்க முடியவில்லை. ஒரு நவீன அரிசி ஆலையை அமைக்க, ரூ. 1·25 கோடி தேவைப் படுகிறது.

நவீன அரிசி ஆலைகளால் எண்ணற்ற நன்மைகள் ஏற்படு கின்றன. முதலாவதாக, நாட்டின் உணவு உற்பத்தி அதிகரிக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இரண்டாவதாக, நவீன அரிசி ஆலைகளில் நெல் பதனப்படுத்தப்படும்போது, அதிக அளவிலான அரிசி கிடைக்கிறது. மூன்றாவதாக, விவசாயிகள் நேரடியாக அரிசி ஆலைகளுடன் தொடர்புகொள்வதால், இடைத்தரகர்கள் நீக்கப் படுகின்றனர். நான்காவது நன்மை, அரிசி ஆலைகளால் உற்பத்தி செய்யப்படும் உப பொருள்களாகும் (By Products). நவீன அரிசி ஆலைகள் விரிவான முறையில் அமைக்கப்பட்டால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1,000 கோடி இலாபமேற்பட வாய்ப்புகள் உள்ளன.

புதிய பதன முறை : தமிழ் நாட்டில், திருவாரூரில் செயற்படும் நவீன அரிசி ஆலை, புதிய பதனப்படுத்தும் முறையை ஆராய்ந்து அறிந்துள்ளது. இப் புதிய முறையின்மூலமாக, உப பொருள்களி லிருந்து தாவர எண்ணெய் எடுக்கலாம் எனக் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. வழக்கமான பதனப்படுத்தும் முறையில் ஒருசில இயந்திரங்களை உபயோகிப்பதன் மூலம், மேற்கண்ட எண் ணெய்யை உற்பத்திசெய்ய முடியுமெனவும் கருதப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில், குற்றாலத்தில் இயங்கிவரும் நவீன அரிசி ஆலையில், இப் புதிய ஆராய்ச்சித் திட்டத்தை அறிமுகப் படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால், ஆண்டொன்றுக்கு ரூ. 48,580 இலாபம் கிடைக்கும் எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தொழில்நுட்பக் கருத்தைப் படிப் படியாக, 25 ஆலைகளில் பரப்பவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இறுதியாக, நமது நாட்டில் வழக்கமான முறையில் நெல் பதனப்படுத்தப்படும் ஆலைகள் 80,000 இருப்பதாகக் கணக் கிடப்பட்டுள்ளது. இக் கூட்டுறு, இந்த ஆலை உரிமையாளர் களுக்கு நவீனப் பதனப்படுத்தும் முறையின் அவசியத்தை விளக்கி, அதனால் ஏற்படும் சிக்கனங்களை அவர்கள் பெற வேண்டும் எனவும் வலியுறுத்தி வருகின்றது.

11. இந்தியக் கைத்திறத் தொழில் மற்றும் கைத்தறி ஏற்றுமதிக் கூட்டுரு (The Handicrafts and Handlooms Export Corporation of India Ltd., New Delhi)

இக் கூட்டுரு, இந்திய அரசு வாணிகக் கூட்டுருவின் துணையமைப்பாகும். நமது நாட்டின் கைத்தறித் துணி, கைத்தறிப் பொருள்கள் ஆகியவைகளின் ஏற்றுமதியைப் பெருக்குவதே இக் கூட்டுருவின் முக்கிய நோக்கமாகும். இப் பொருள்களுக்கு வெளி நாடுகளில் தேவையை ஏற்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது; சில்லறை விற்பனை வசதிகளுடன் வெளிநாடுகளில் கிளைகளைத் திறக்கிறது; நமது பொருள்களுக்கு வெளிநாடுகளில் விளம்பரம் தேடித்தருகிறது. இக் கூட்டுரு, இப் பொருள்களின் ஏற்றுமதியில் நேரடியாக ஈடுபடுவதோடு, இவ்வுற்பத்தியில் ஈடுபட்டுள்ள இந்திய உற்பத்தியாளர்களுக்குப் பண வசதி, கச்சாப் பொருள் போன்றவைகளைப் பெற்றுத் தருகிறது.

இதன் அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 1 கோடியாகும். ஆனால், ரூ. 65 இலட்சம் வரைதான் மூலதனம் அளிக்கப்பட்டுள்ளது.

(i) நேரடி வாணிக நடவடிக்கைகள் (ஏற்றுமதி)

இக் கூட்டுருவின் ஏற்றுமதி கணிசமான அளவில் அதிகரித்து வருகின்றன. 1968–'69ஆம் ஆண்டில் ரூ.1·45 கோடியாக இருந்த ஏற்றுமதி, 1969–'70-ல் ரூ. 2·24 கோடியாக உயர்ந்தது. ஏற்றுமதியைப்பற்றிய மற்ற விவரங்கள் வருமாறு :

விவரங்கள்	1969-'70 ரூ. (இலட்சத்தில்)	1968-'69 ரூ. (இலட்சத்தில்)
நேரடியாக ஏற்றுமதி செய்யப்பட்ட கைத்தறிப் பொருள்கள், கைத்தறித் துணிகள்	96	45
கண்காட்சி, விற்பனை நிலையங்கள் மூலமாக வெளிநாடுகளில் விற்பனை	128	100

(ii) ஏற்றுமதி முன்னேற்றம், வாணிக நடவடிக்கைகள்

நாட்டின் ஏற்றுமதியை அதிகரிக்கச் செய்ய, இக் கூட்டுரு தொடர்ந்து ஏற்றுமதி முன்னேற்ற நடவடிக்கைகளையும்,

வாணிக நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது. அமெரிக்கா, மேற்கத்திய ஐரோப்பிய நாடுகள் ஆகியவைகளில் முன்மாதிரி வழங்குதல் மூலமும், கண்காட்சிகளில் பங்குகொள்வதன் மூலமும் நமது நாட்டுப் பொருள்களுக்கு நல்ல விளம்பரத்தைத் தேடித் தருகிறது. புது விதங்களில் அழகு சாதன நகைகளைச் செய்து ஏற்றுமதி செய்து வருகிறது.

ஏற்றுமதி : 1967–'68-ல் இதன் மொத்த ஏற்றுமதி ரூ. 1·24 கோடியாகும்; 1969–'70-ல் அது ரூ. 2·24 கோடியாக வளர்ந்தது. 1970-ல் அதன் வாணிகப் புரள்வு ரூ. 2·77 கோடியாகும். முந்தைய ஆண்டைவிட இது 62% அதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது.

இலாபம் : 1968-'69-ல் நிகர நட்டம் ரூ. 2·04 இலட்சமாக இருந்தது ; ஆனால், 1970-ல் ரூ. 10,190 இலாபம் ஈட்டப்பட்டது.

12. இந்துஸ்தான் நோய்த்தடுப்பு மருந்துகள் உற்பத்தி நிறுமம், பூனா (Hindustan Antibiotics Ltd., Poona)

1954ஆம் ஆண்டு ஜூன் மாதம் இந் நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. பெனிசிலின், ஸ்ட்ரெப்டோமைசின் (Streptomycin) போன்ற நோய்த்தடுப்பு (Antibiotics) மருந்துகளை உற்பத்தி செய்ய இந் நிறுமம் அமைக்கப்பட்டது. 1955ஆம் ஆண்டில், இந் நிறுமம் தன் உற்பத்தியைத் தொடங்கியது.

உற்பத்தி: 1969–'70-ல், 83,133 கிலோ கிராம் எடையுள்ள பெனிசிலின் மற்றும் ஸ்ட்ரெப்டோமைசின் உற்பத்தி செய்யப்பட்டன. இது முந்தைய ஆண்டைவிட 18·3% அதிகமாகும். மேலும், ரூ. 2·49 இலட்ச ரூபாய் மதிப்புள்ள பெனிசிலின், ஹாமிசின் (Hamycin) போன்றவைகளை ஏற்றுமதி செய்தது.

விற்பனை : இதுவரை ஏற்பட்டிராத வகையில், 1969–'70-ல் விற்பனை அமைந்தது. 1968–'69-ல் ரூ. 6·33 கோடியாக இருந்த விற்பனை 1969–'70-ல் ரூ. 7·24 கோடியாக அதிகரித்தது. தேய்மானம், வரிவீதம் போன்றவைகளுக்கு வகைசெய்யப்பட்ட பிறகு, ரூ. 59 இலட்சம் நிகர இலாபமாக ஈட்டப்பட்டது. அதே ஆண்டில், நிறுமம் 10% பங்காதாயத்தை வழங்கியது.

1971–'72-ல் வைட்டமின் 'சி' (Vitamin 'C') தொழிற்சாலையை ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டு, ரூ. 118·04 இலட்சம்

செலவிடப்பட்டது. இந் நிதி வசதி தற்சார்புடையதாகும். நான்காவது திட்டத்தில், மேலும் பலவகை நோய்த்தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டு, செயற்படுத்தப் பட்டது.

13. இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுமம், பெங்களூர் (Hindustan Machine Tools Limited—H.M.T., Bangalore)

1953ஆம் ஆண்டில், இந் நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. முக்கிய நோக்கம், கைக்கடிகாரங்களையும், சிறிய கருவிகளையும் உற்பத்தி செய்வதாகும். இப் பொருள்களை உற்பத்தி செய்ய வென, நாட்டின் பல பாகங்களிலும் அமைக்கப்பட்ட ஐந்து கூறு களைக் கொண்டுள்ளது. விவரங்களைப் பின்வரும் அட்டவணை மூலம் அறியலாம்.

நிறுவனம்	இடம்	தற்போதைய உற்பத்தித் திறன் (Value of output)
(i) நிறுவனங்கள் I & II (H.M.T., I & II)	பெங்களூர் (மைசூர்)	ரூ. 10 கோடி
(ii) நிறுவனம் III (H.M.T.,III)	பிஞ்சூர் (ஹரியானா)	ரூ. 3·5 கோடி
(iii) நிறுவனம் IV (H.M.T., IV)	கலமாசேரி (கேரளா)	ரூ. 3·5 கோடி
(iv) நிறுவனம் V (H.M.T. V)	ஹைதராபாத் (ஆந்திரா)	ரூ. 3·5 கோடி
(v) கைக்கடிகாரத் தொழிற்சாலை	பெங்களூர் (மைசூர்)	ரூ. 3·5 கோடி

(Source: Reports on the Working of Public Enterprises, 1969-'70)

விற்பனை / இலாபம் / நட்டம்

1969-'70-ல் இந் நிறுமத்தின் விற்பனை ரூ. 16·67 கோடி யாக இருந்தது. தேய்மானம், வட்டி, முந்தைய ஆண்டுகளின் செலவுகள் போன்றவைகளுக்கு வகைசெய்த பிறகு, ரூ 0·85 கோடி நிகர நட்டம் ஏற்பட்டது. முந்தைய ஆண்டைவிட, நடப்பு ஆண்டில் (1969-'70) கைக்கடிகார விற்பனையும், மற்றக் கருவி

களின் விற்பனையும் கணிசமான அளவில் அதிகரித்தன. இயந்திரக் கருவிகளுக்குத் தேவையும் அதிகரித்தது.

ஏற்றுமதிகள் (Exports)

1969-'70-ல் ஏற்றுமதி செய்யப்பட்ட இயந்திரக் கருவிகளின் மதிப்பு ரூ. 110·00 இலட்சமாகும். நியூயார்க், ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் ஏற்றுமதி அலுவலகங்கள், முறையே 1966ஆம் ஆண்டிலும், 1968ஆம் ஆண்டிலும் அமைக்கப்பட்டன. பல நாடுகளிலும், இயந்திரக் கருவிகளின் விற்பனையை அதிகரிக்க முகவர்கள் நியமிக்கப்பட்டனர்.

புதிய பொருள்களின் உற்பத்தி

உற்பத்தித் திறனை முழு அளவில் பயன்படுத்த, பொருள்களின் வகைகள் அதிகரிக்கப்பட்டன. 1969-'70-ல் முதன் முதலில், பல மேம்பட்ட பயன்களுடைய கருவிகள் உற்பத்தி செய்யப்பட்டன. அவைகளில் பல தானியங்கிக் கருவிகளாகும்.

இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் உற்பத்தி நிறுமத்தின் (அனைத்து நிறுவனங்களின்) உற்பத்தியைப் பின்வருமாறு ஒப்பிடலாம்.

நிறுவனம்	இடம்	1969-'70	1968-'69
(i) நிறுவனம் I & II (H.M.T., I & II)	பெங்களூர் (மைசூர்)	ரூ. 583 இலட்சம்	ரூ. 509 இலட்சம்
(ii) நிறுவனம் III (H.M.T., III)	பிஞ்சூர் (ஹரியானா)	ரூ. 285 ,,	ரூ. 258 ,,
(iii) நிறுவனம் IV (H.M.T., IV)	கலமாசேரி (கேரளா)	ரூ. 236 ,,	ரூ. 179 ,,
(iv) நிறுவனம் V (H.M.T., V)	ஹைதராபாத் (ஆந்திரா)	ரூ. 172 ,,	ரூ. 153 ,,
(v) கைக்கடிகாரத் தொழிற்சாலை	பெங்களூர் (மைசூர்)	ரூ. 366 ,,	ரூ. 237 ,,

(Source: Reports on the Workings of the Public Enterprises, 1969-'70)

புதிய செயல் நிரல்கள் (New Programmes)

(i) காஷ்மீரில் உள்ள ஸ்ரீநகரில் ஒரு புதிய கைக்கடிகாரத் தொழிற்சாலை அமைக்கப்பட்டது.

(ii) பிஞ்சூர் நிறுவனம் (H.M.T., III) திருவாளர்கள் மோடோகோவ் (M/S. Motokov) என்ற தொழிலமைப்புடன் கூட்டாக இணைந்து, டிராக்டர்களை உற்பத்தி செய்ய அரசு அனுமதி வழங்கியது.

(iii) கலமாசேரி நிறுவனம் (H. M. T., IV) அச்சு இயந்திரங்களைத் தயாரிக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

மேற்கண்டவாறு மிகவும் வெற்றிகரமாக இந் நிறுமம் நடைபெற்று வருகிறது.

14. இந்துஸ்தான் புகைப்படச் சுருள் உற்பத்தி நிறுமம் (வரையறுக்கப்பட்டது) (Hindustan Photo Films Manufacturing Company Ltd., Otacamund)

தமிழ் நாட்டில், உதகமண்டலத்தில் புகைப்படச் சுருள் மற்றும் உப பொருள்களை உற்பத்திசெய்ய, 1960ஆம் ஆண்டு, நவம்பர் மாதம் இந்திய அரசால் தோற்றுவிக்கப்பட்டது. வெளிநாட்டு நிறுமம் ஒன்றுடன் இணைவாகச் செயற்பட ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. பிறகு, படிப்படியாக இந்திய அரசே முழு உற்பத்தியையும் மேற்கொண்டது.

1969-'70-ல், இந் நிறுமம் 22,49,315 மீட்டர் பரப்பளவு கொண்ட புகைப்படச் சுருளை உற்பத்தி செய்தது. 1968-'69ஆம் ஆண்டிலும், 1969-'70ஆம் ஆண்டிலும் இந் நிறுமத்தின் உற்பத்திநிலை பின்வருமாறு அமைந்திருந்தது.

விவரம்	1969-'70 மீ. பரப்பளவு	1968-'69 மீ. பரப்பளவு
(1) திரைப்படச் சுருள்	16,18,126	9,77,983
(2) திரைப்படச் சுருள் (ஒலி)	29,899	1,68,480
(3) ஊடுருவிச் சுருள் (X-ray Film)	3,56,679	1,68,480
(4) சுருட்டப்பட்ட சுருள் (Roll Film)	724	—

அட்டவணை (தொடர்ச்சி)

விவரம்	1969-'70 மீ. பரப்பளவு	1968-'69 மீ. பரப்பளவு
(5) 35 மி.மி. (நெகடிவ்) (35 m. m. Negative)	2,146	—
(6) புகைப்படக் காகிதம்	1,41,898	1,00,352
(7) மற்ற வகைகள்	99,804	—
கூடுதல் ...	22,49,276	12,46,315

(Source: Reports on the Workings of Public Enterprises, 1969-'70)

உற்பத்தி, விற்பனை, ஏற்றுமதி

வெள்ளி வெடி உப்புத் தொழிற்சாலை (Silver Nitrate Plant) ரூ. 1 கோடி மதிப்புள்ள 30·3 டன் எடையுள்ள வெள்ளி வெடி உப்பை உற்பத்தி செய்துள்ளது. 1969-'70-ல் விற்பனை ரூ. 372·12 இலட்சமாக இருந்தது. மேலும், இலங்கை ஹாங்காங் போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. குறிப்பாக, இலங்கையிலிருந்து குறிப்பிட்ட கால இடைவெளி களில் விற்பனை ஆணைகளைப் பெற்று வருகிறது.

15. இந்துஸ்தான் இரும்பு உற்பத்தி நிறுமம்: (Hindustan Steel Limited, Ranchi)

1954ஆம் ஆண்டில், ரூர்கேலா இரும்பு உற்பத்தி நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. 1957-ல் பிலாய், துர்காபூர் ஆகிய இரும்பு ஆலைகளின் மேலாண்மையும் இந் நிறுமத்திற்கு மாற்றப் பட்டது. ஆரம்பத்தில் ரூ. 100 கோடியாக இருந்த இந் நிறுமத் தின் மூலதனம், ரூ. 600 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. 1970ஆம் ஆண்டில், இந் நிறுமத்தின் மொத்த முதலீடு ரூ. 1,063 கோடியாக இருந்தது. இதில் முதல் ரூ. 557 கோடியும், கடன் ரூ. 505·8 கோடியுமாக இருந்தது.

நிதி: 1969-'70-ல், இந் நிறுமத்தின் பல்வேறு பிரிவுகள், தேய்மானம், வட்டி போன்றவைகளுக்கு வகைசெய்த பிறகு, ரூ. 10·47 கோடி நிகர நட்டத்தை ஈட்டின. 1968-'69-ல் இந் நட்டம் ரூ. 39·91 கோடியாக இருந்தது.

விற்பனை: 1969-'70-ல் இந் நிறுமம், இதற்குமுன் ஏற் பட்டிராத வகையில் ரூ.3,218 மில்லியன் மதிப்புள்ள விற்பனையை

21

ஏற்படுத்தியது. முந்தைய ஆண்டைவிட, இது 21·3% அதிக மாகும்.

ஏற்றுமதி: 1969-'70-ல் 455·6 மில்லியன் மதிப்புள்ள இரும்பை ஏற்றுமதி செய்து ஒரு சாதனையைப் புரிந்துள்ளது. வெளிநாடுகளுடன் நேரடியாகவே தொடர்புகொண்டு, பொருள்களை ஏற்றுமதி செய்ததன் காரணமாக ரூ. 22 மில்லியன் முகமைக் கழிவு மிச்சப்படுத்தப்பட்டது. அதிக அளவிலான ஏற்றுமதி ருஷ்ய நாட்டிற்கும், நியூசிலாந்து நாட்டிற்கும் மேற் கொள்ளப்படுகின்றன.

இந் நிறுமனத்தின் மற்றப் பிரிவுகள்

(i) ரூர்கேலா எஃகு ஆலை (ஒரிஸ்ஸா)

1·8 மில்லியன் இரும்பு உற்பத்தியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் தோற்றுவிக்கப்பட்டது இப் பிரிவு. மேற்கு ஜெர்மனி நாட்டு அரசின் தொழில் நுட்பம், நிதி உதவிகளுடன் இந் நிறுமம் அமைக்கப்பட்டது. 1969-'70-ல், 0·79 மில்லியன் மதிப்புள்ள விற்பனைக்குரிய இரும்பு உற்பத்தி செய்யப்பட்டது. 1975-'76-ல், ரூ. 28 கோடி இலாபம் எதிர்பார்க்கப்படுகிறது.

(ii) பிலாய் எஃகு ஆலை (மத்தியப் பிரதேசம்)

இவ்வாலை மத்தியப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது. 3,27,000 டன் உற்பத்தித் திறனுடன் இவ்வாலை செயல் படுகிறது. 1·495 மில்லியன் டன் எடையுள்ள, விற்பனைக்குரிய இரும்பு 1969-'70-ல், இப் பிரிவில் உற்பத்தி செய்யப் பட்டது. 1975-'76-ல் ரூ. 38 கோடி இலாபம் எதிர்பார்க்கப் படுகிறது.

(iii) துர்காபூர் எஃகு ஆலை (மேற்கு வங்காளம்)

மேற்கு வங்காளத்தில் அமைந்துள்ளது இப் பிரிவு. 1969-'70-ல், 0.494 மில்லியன் டன் எடையுள்ள, விற்பனைக்குரிய எஃகு இப் பிரிவில் உற்பத்தி செய்யப்பட்டது.

16. இந்துஸ்தான் தந்தி — தட்டெழுத்துப் பொறிகள் உற்பத்தி நிறுமம்-சென்னை (Hindustan Teleprinters Ltd., Madras)

தந்தி-தட்டெழுத்துப் பொறிகளையும், மற்ற உப கருவிகள் உறுப்புகளை உற்பத்தி செய்யவும், 1960ஆம் ஆண்டு, டிசம்பர் மாதத்தில், சென்னையில் இந் நிறுமம் தோற்றுவிக்கப்பட்டது. இத்தாலிய நாட்டின் ஒத்துழைப்புடன் உற்பத்தி தொடங்கப் பட்டது. 1968-'69-ல், 5,010 தந்தி - தட்டெழுத்துப் பொறி

களும், 1969-'70-ல் 5,310 தந்தி - தட்டெழுத்துப் பொறிகளும் உற்பத்தி செய்யப்பட்டன. பலவகைப்பட்ட தந்தி-தட்டெழுத்துப் பொறிகளைத் தயாரிக்கத் தேவையான உப உறுப்புகள் உற்பத்தியில், இந் நிறுமம் தன்னிறைவு பெற்று விளங்குவது குறிப்பிடத்தக்கது. ஆண்டொன்றுக்கு ரூ. 8·18 இலட்சம் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை இந் நிறுமம் மிச்சப்படுத்துகிறது.

விற்பனை, ஏற்றுமதி : 1969-'70-ல், ரூ. 345·98 இலட்சம் விற்பனையை இந் நிறுமம் ஏற்படுத்தியுள்ளது. நிரந்தரச் சொத்துக்களின்மீது தேய்மானம் ஏற்படுத்தப்பட்டபிறகு, ரூ. 66·35 இலட்சம் இலாபமீட்டப்பட்டுள்ளது ; பொதுநிலை முதலின்மேல் 12% பங்காதாயத்தை (9·84 இலட்சம்) வழங்கியுள்ளது. குவைத், நேபாளம் போன்ற நாடுகளுக்கு ரூ. 4·73 இலட்சம் மதிப்புள்ள கருவிகளையும், உறுப்புகளையும் இந் நிறுமம் ஏற்றுமதி செய்துள்ளது. 1969-'70-ல் தொழிலாளர்களுக்கு 20% பரிவாதாரத் தொகையாக (Ex-Gratia) ரூ. 8·00 இலட்சத்தை அளித்துள்ளது.

சமீபத்திய சாதனை (20 அம்சத் திட்டம்)

பிரதமரின் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின்படி இந் நிறுமம் உற்பத்தி மட்டத்தில், நிருவாகத்தில் தொழிலாளர்களும் பங்குபெறும் முறையைத் துவக்கியுள்ளது. இம் முறையின் முதல் கட்ட நடவடிக்கையாக உற்பத்தி மட்டத்தில் தொழிலாளர்கள்—நிருவாகத்தினர் கொண்ட 5 குழுக்களும், கூட்டு நிருவாகக் குழு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளன. உற்பத்தி மட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள 5 குழுக்களிலும், குழு ஒன்றிற்கு 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் 6 உறுப்பினர்கள் தொழிலாளர்களின் பிரதிநிதிகள். கூட்டு நிருவாகக் குழுவிலும் 12 உறுப்பினர்கள் இருப்பார்கள். அவர்களில் 6 உறுப்பினர்கள் தொழிலாளர் பிரதிநிதிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்திய மின்மயங்கள் கூட்டுரு (Electronics Corporation of India) வின் வெற்றிக்கும் இந் நிறுமம் மிகவும் உதவிபுரிந்துள்ளது. மேலும், நாட்டின் தந்தி—தட்டெழுத்துப் பொறிகளின் தேவையை இந் நிறுமம் பூர்த்தி செய்கிறது. ஆண்டொன்றுக்கு ஏறத்தாழ 6,000 கருவிகளை உற்பத்தி செய்கிறது.

17. இந்திய மருந்துகள், மருந்து வழங்கீடுகள் நிறுமம் (Indian Drugs and Pharmaceuticals Ltd., New Delhi)

ஏழை எளிய மக்களுக்குக் குறைந்த விலையில் நிறைந்த பலன்களை விரைந்து அளிக்கக்கூடிய மருந்து வகைகளையும், மருத்துவக்

கருவிகளையும் இந்தியாவிலேயே உற்பத்தி செய்வது அவசியம் என நமது பாரத அரசு கருதியது. அந்த உயரிய நோக்கத்துடன் ஐ.டி. பி. எல். (I. D. P. L.) என்றழைக்கப்படும் இந் நிறுமத்தை அரசு ஏற்படுத்தியது. 1961 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இந் நிறுமம் அமைக்கப்பட்டது. பின்வரும் பிரிவுகளையும், உற்பத்தித் திறனையும் ஐ. டி. பி. எல். கொண்டு செயற்படத் துவங்கியது.

பிரிவுகள்	இடம்	உற்பத்தித் திறன்
(i) நோய்த்தடுப்பு மருந்துகள் உற்பத்தி நிலையம்	ரிஷிகேஷ்	290 டன் நோய்த் தடுப்பு மருந்துகள்.
(ii) செயற்கை மருந்துகள் உற்பத்தி நிலையம்	ஹைதராபாத்	850 டன் மருந்துகள்.
(iii) அறுவை சிகிச்சைக் கருவிகள் உற்பத்தி நிலையம்	சென்னை	2·5 மில்லியன் அறுவை சிகிச்சைக் கருவிகள்.

இதற்கு முன்பே, தடுப்பு மருந்துகள், கலவை மருந்துகள். அறுவை சிகிச்சைக் கருவிகள், தாவர இரசாயனப் பொருள்கள், சுரப்பிகள் போன்ற பொருள்களை உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகளை அமைக்கும் நோக்கத்துடன் சோவியத் ருஷ்ய நாட்டுடன், 1959ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் நாள், நமது அரசு ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டது. அதன்படி, தேவையான இயந்திரங்களை இறக்குமதி செய்துகொள்ளவும், ருஷ்ய நாட்டு நிபுணர்களை வரவழைத்துக்கொள்ளவும், செலவுகளை மேற்கொள்ள ரூ. 9·52 கோடி கடனுதவி வழங்கவும் ருஷ்ய நாடு ஒப்புக் கொண்டது. முதன் முதலில் 'தேசியத் தொழில் முன்னேற்றக் கூட்டுரு'தான், (N. I. D. C.) இந்தத் திட்டங்களை நிறைவேற்று வதில் ஈடுபட்டது. பிறகுதான் ஐ. டி. பி. எல் என்ற இந் நிறுமம் அமைக்கப்பட்டது. ருஷ்ய நாட்டுடன் ஏற்பட்ட ஒப்பந்தத்தின் உரிமைகளும், கடமைகளும் இந்த நிறுமத்திடமே ஒப்படைக்கப்பட்டன.

அமைப்பு முறை : இந் நிறுவனத்தின் தலைமை நிலையம் புது டில்லியில் இயங்குகிறது. மேற்கண்டவாறு ரிஷிகேஷ், ஹைதரா

பாத், சென்னை ஆகிய இடங்களில் இந் நிறுமத்தின் உற்பத்தி நிலையங்கள் நடைபெறுகின்றன.

(i) நோய்த்தடுப்பு மருந்து உற்பத்தி நிலையம்—ரிஷிகேஷ்

ஆண்டுதோறும் ஏறத்தாழ 290 டன் நோய்த்தடுப்பு மருந்துகளை உற்பத்தி செய்யும் அளவுக்கு இந் நிலையம் இயங்கி வருகிறது. இதன் செலவுக்கான முதலீட்டுத் தொகை ரூ. 27·50 கோடியாகும். இத் தயாரிப்பு நிலையத்தின் அமைப்பு வேலை 1962-ல் ஆரம்பிக்கப்பட்டு, 1968-ல் முடிக்கப்பட்டது. இன்றியமையாத பல மருந்துகளை இந் நிலையம் தயாரிக்கிறது. 'ஸ்டெரப்போமைசின் சல்பேட்', 'மெட்ரோசைக்லின்', கேப்சூல்ஸ்', 'பென்சைல் பெனிசிலின் சோடியம்', 'ஆம்பிசில்லியன் ஊசி மருந்து', 'அட்சிம்' போன்ற மருந்துகள் மிகவும் முக்கியமானவைகளாகும்.

(ii) செயற்கை மருந்துகள் உற்பத்தி நிலையம்—ஹைதராபாத்

இந் நிலையத்தின் அமைப்பு வேலைகள் 1962ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, 1968-ல் முடிவடைந்தன. இத் திட்டத்திற்கான முதலீட்டுத் தொகை ரூ. 22 கோடியாகும். ஏறத்தாழ 850 டன் வரை மருந்துகளைத் தயாரிக்கும் வகையில் இந்த நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. விரைவாகக் குணம் அளிக்கக்கூடிய பல மருந்துகள் இங்குத் தயாரிக்கப்படுகின்றன. அவைகளில் சில: அனுல்ஜின் மாத்திரைகள், செமிசால் மாத்திரைகள், வைட்டமின் 'பி' காம்பளக்ஸ் மாத்திரைகள், வைட்டமின் 'சி' மாத்திரைகள், 'சல்பாடைமின்' மாத்திரைகள் எனப் பலவகைப்பட்டவை. ஒவ்வோர் ஆண்டும் இவற்றின் தயாரிப்புச் சக்தியும், விற்பனை வேகமும் அதிகமாகிக்கொண்டே வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

(iii) அறுவை சிகிச்சைக் கருவிகள் தயாரிப்பு நிலையம் - சென்னை

இன்றைய மருத்துவ உலகில், அறுவை சிகிச்சை தலையாய இடத்தினை வகிக்கிறது. அதற்கெனத் தேவைப்படும் பலவகையான கருவிகளை உற்பத்தி செய்ய, ரூ. 4·65 கோடி முதலீட்டுடன் இத் தயாரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

1965ஆம் ஆண்டு, செப்டம்பர் மாதத்திலிருந்து, இத் தயாரிப்பு நிலையம் கருவிகளை உற்பத்தி செய்யத் தொடங்கியது. ஏறத்தாழ 25 இலட்சம் கருவிகளைத் தயாரிக்கும் திறன் பெற்றுள்ளது. இக் கருவிகள், மருத்துவத் துறையில் பல பிரிவுகளுக்கும் பயன்படுகின்றன.

கண் சிகிச்சை, காது சிகிச்சை, பல் சிகிச்சை, நரம்பு சிகிச்சை ஆகிய பலவகைப்பட்ட சிகிச்சைகளுக்கும் இக் கருவிகள் பயன்படுத்தப்படுகின்றன. ஒரே நாளில் 1,900 முதல் 2,000 கருவிகளை உற்பத்தி செய்யும் வகையில் இந் நிலையம் திறன் பெற்றுள்ளது.

சாதனைகள்

நமது நாட்டில் தனியார்துறைகளோடு போட்டியிட்டு அதிக இலாபத்தை இந் நிறுவனம் ஈட்டி வருகிறது. 1974-'75ஆம் ஆண்டில் மட்டும், ஏறத்தாழ ரூ. 2,50,000 இலாபத்தை ஈட்டியுள்ளது. இதனுடைய விற்பனைப் புரள்வும் மிக அதிக அளவில் அதிகரித்து வருகிறது. கீழ்க்காணும் புள்ளி விவரங்களிலிருந்து, இந் நிறுவனத்தின் விற்பனை அதிகரிப்பை அறியலாம்.

ஆண்டு			மொத்த விற்பனை (ரூபாய் இலட்சத்தில்)
1969—'70	...	...	481·11
1970—'71	...	...	1,379·42
1971—'72	...	...	2,335·79
1972—'73	...	...	2,792·92
1973—'74	...	...	2,766·63
1974—'75	...	...	4,584·45

1974-'75ஆம் ஆண்டில் மட்டும், அதற்கு முந்தைய ஆண்டைவிட 65·7% அதிக விற்பனை ஏற்பட்டுள்ளது. மருந்துகளைப் பொறுத்தவரை அஞல்ஜின், வைட்டமின் பி—2, போலிக் ஆசிட், நிகோடினமைட் ஆகியவை சென்ற ஆண்டில் அதிகமாக விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந் நிறுவனம் பல நவீன மருந்து வகைகளையும் அறிமுகம் செய்து சாதனை புரிந்துள்ளது. ஹைதராபாத்தில் இயங்கும் நிலையத்தின் உற்பத்தித் திறனை 1,988 டன்னிலிருந்து 3,386 டன்னுக்கு உயர்த்த, அண்மையில் மைய அரசு அனுமதி வழங்கியுள்ளது.

இந் நிறுவனத்தின் மாபெரும் சாதனைகளில் தமிழ்நாடு, கேரளம் ஆகிய இரு மாநிலங்களும் இணைந்த தென்மண்டலம்

(Southern Region) பெரும் பங்கு வகித்துள்ளது. இந்தியாவில் உள்ள மற்ற மண்டலங்களைவிட, பொதுவாக, மிகச் சிறந்த முறையில் பணியாற்றியமைக்காகக் கடந்த மூன்று ஆண்டுகளாகத் தொடர்ந்து சுழற்கோப்பைப் பரிசைத் (Rolling Trophy) தட்டிக்கொண்டு வந்துள்ள பெருமையும் இத் தென்மண்டலத்தையே சாரும். இம் மண்டலத்தின் விற்பனை 1970-'71-ல் ரூ. 75 இலட்சம். ஆனால், 1974-'75-ல் ரூ. 388 இலட்சத்திற்கு விற்பனை அதிகரித்துள்ளது. இது ஒரு மகத்தான சாதனையாகும்.

இந் நிறுவனம் தற்பொழுது இருதய நோய், நரம்புத் தளர்ச்சி முதலிய நோய்களுக்கும் நவீன மருந்துகளைத் தயாரிப்பதிலும் நாட்டம் செலுத்தி வருகிறது. சமுதாயப் பொது நன்மையையும் கருத்திற்கொண்டு இந் நிறுமம் செயல்படுகிறது. அண்மையில், தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்டப் பகுதிகளுக்கென, ரூ. 2 இலட்சம் மதிப்புள்ள 'மல்டிவைட்டமின்', பி. காம்பளக்ஸ் ஆகிய மாத்திரைகளை நன்கொடையாக வழங்கியுள்ளது.

18. இந்திய அரசு வாணிகக் கூட்டுரு (வரையறுக்கப்பட்டது) (State Trading Corporation of India Ltd.)

இந்த நிறுமம் அரசுக்குச் சொந்தமானதாகும். 1956ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் நாள் இந்திய நிறுமச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது. பதிவானபோது இதன் மூலதனம் ரூ. 1 கோடியாக இருந்தது; பிறகு 1969-'70-ல் ரூ. 5 கோடியாக உயர்ந்தது. இதன் நிருவாகம் அதன் இயக்குநரவையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அன்றாட அலுவல்களை இந்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள நிருவாக இயக்குநர் கவனிப்பார்.

இதன் நோக்கங்கள்

(i) இந்தியாவின் ஏற்றுமதியைப் பெருக்குதல் மற்றும் வகையகற்சி செய்தல்.

(ii) இன்றியமையாப் பொருள்களைக் குறைந்த விலைக்கு இறக்குமதி செய்தல்.

(iii) அரசு வேண்டும்பொழுது நாட்டில் பற்றுக்குறையாக உள்ள பொருள்களை இறக்குமதி செய்தல்.

(iv) உணவுப் பொருள்களை உள்நாட்டில் வழங்குதல்.

நடவடிக்கைகள்

(i) நீண்ட கால ஒப்பந்தங்களின் அடிப்படையில், பேரளவு ஏற்றுமதிக்கு வகை செய்வது.

(ii) தற்பொழுது ஏற்றுமதியாகும் பொருள்களுக்கும், புதிய பொருள்களுக்கும் சந்தையைப் பெருக்கி, புதிய சந்தைகளை உருவாக்குதல்.

(iii) வெளிநாடுகளில் வாணிக நிலையங்கள், விற்பனை வாடிகள் (Sales Depots), அலுவகங்கள் போன்றவைகளை அமைப்பது.

(iv) ஏற்றுமதி வாய்ப்பு மிக்க பொருள்களின் உற்பத்தியை உள்நாட்டில் பெருக்க, நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(v) பொதுவுடைமை நாடுகளுடன் வாணிக உடன்படிக்கைகள் செய்துகொண்டு, நமது ஏற்றுமதியைப் பெருக்குவதும், வெளிநாட்டுச் செலாவணி இருப்பில் சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்வதும்.

(vi) வெளிநாடுகளிலிருந்து உரம், முதற்கருவிப் பொருள்கள், தொழில்முறைக் கச்சாப் பொருள்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்து, பண்டமாற்றுப் போரத்திற்கு வழி வகுப்பது.

(vii) இன்றியமையாக் கச்சாப் பொருள்கள், பற்றுக்குறையாகவுள்ள பொருள்கள் ஆகியவற்றைப் பேரளவில் இறக்குமதி செய்வது.

(viii) ஏற்றுமதி வாய்ப்புள்ள பொருள்களின் உற்பத்தி குன்றாமல் காப்பதும், அவற்றின் உற்பத்தியாளர்களுக்கு நியாய விலையை வழங்குவதும், இதற்காக விலையாதரவு நடவடிக்கைகள், அடிதாங்கி இருப்பு நடவடிக்கைகள் (Buffer Stock Operations) ஆகியவைகளை மேற்கொள்ளுதல்.

(ix) தனியார்துறை ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான உதவிகளை வழங்குதல்.

இக் கூட்டுரு 1969-'70ஆம் ஆண்டு முடிய 14 ஆண்டுகள் செயற்பட்டுள்ளது. இடையில் 1963ஆம் ஆண்டில், கனிப் பொருள்கள், உலோகங்களின் வாணிகம் பிரிக்கப்பட்டு, அதற்காகவே அமைக்கப்பட்ட 'இந்தியக் கனிப்பொருள், உலோக வாணிகக் கூட்டுரு'விடம் ஒப்படைக்கப்பட்டது.

சாதனைகள்

(i) 1956-'57-ல் ரூ. 9·2 கோடியாக இருந்த இதன் வாணிகப் புரள்வு, 1969-'70-ல் ரூ. 211·5 கோடியாக வளர்ந்தது.

(ii) 1956-'57-ல் இதன் நேரடி ஏற்றுமதி ரூ. 5·8 கோடி; 1969-'70-ல் இது ரூ. 55 கோடியாக உயர்ந்தது.

(iii) அரசுக்கு இதன் மூலம் ஏற்பட்ட வருவாய் ரூ. 44 கோடியாகும்.

(iv) 1968-'69 வரை, தனக்கென்று ரூ. 13·4 கோடிக்குக் காப்பு நிதியை ஏற்படுத்தியுள்ளது.

(v) 'சிற்றளவுத் தொழில்களுக்கு ஏற்றுமதி உதவித் திட்டம்' (Export Aid to Small Industries) என்ற தனித்திட்டத்தை உருவாக்கி, அதன் மூலமாக சிற்றளவுத் தொழிலாண்மையருக்குப் பல வழிகளிலும் உதவி நல்கி வருகிறது.

(vi) ஏறத்தாழ 17 நாடுகளில் அலுவலகங்களைத் திறந்து, உலகச் சந்தையின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கிறது.

(vii) ரெயில் தளவாடங்கள், பொறியியற் பொருள்கள், இரசாயனப் பொருள்கள், மருந்துகள், காலணி, டோபா (Wigs) போன்ற நுகர்வோர் பொருள்கள், கடல்மீன், பழங்கள், பழரசம், அரிசி, பருப்பு மற்றும் பல வேளாண்மைப் பொருள்களும் இந் நிறுவனத்தால் ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

(viii) நாட்டின் பொருளாதார மற்றும் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாத கச்சாப்பொருள்கள், முதற்கருவிப் பொருள்கள் ஆகியவற்றை நியாயமான விலைகளில் இறக்குமதி செய்கிறது. பேரளவு இறக்குமதியின் சிக்கனங்களால் வெளிநாட்டுச் செலாவணி மிச்சப் படுத்தப்படுகிறது.

இவ்வாறு, பொதுத்துறை நிறுவனங்களில் ஒன்றான இதன் முன்னேற்றம் பாராட்டுதற்குரியதாக இருக்கிறது.

19. இந்தியக் கனிப்பொருள், உலோக வாணிகக் கூட்டுரு (The Minerals and Metals Trading Corporation of India Ltd.)

1963ஆம் ஆண்டு, அக்டோபர் முதல் நாள் இக் கூட்டுரு தன் பணியைத் தொடங்கிற்று. முக்கிய நோக்கம், நம் நாட்டின் கனிப்பொருள்களின் ஏற்றுமதிக்கு அதிகக் கவனம் செலுத்துவதாகும். 1963ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், 'அரசு வாணிகக் கூட்டுரு' இரு கூறாகப் பகுக்கப்பட்டு, கனிப்பொருள், உலோகம் தொடர்புற்ற அதன் வாணிகப் பகுதி, 'இந்தியக் கனிப் பொருள் உலோக வாணிகக் கூட்டுரு' என்ற இப் புதிய

அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டது. இதன் அனுமதித்த முதல் ரூ. 5 கோடி; செலுத்திய முதல் ரூ. 3 கோடி.

நோக்கங்கள்

(i) நாட்டின் கனிப்பொருள் ஏற்றுமதியைப் பெருக்கி விரிவுபடுத்துதல்.

(ii) இந்திய அரசின் இறக்குமதிக் கொள்கைக்கேற்ப, இன்றியமையா உலோகங்களை இறக்குமதி செய்தல்.

ஏற்றுமதிகள் : இந் நிறுவனத்தின் 75% ஏற்றுமதி இரும்புத் தாதுப் பொருள்களாகும். மற்றும் மங்கனத்தாது, இரும்பு அடங்கிய மங்கனம், நிலக்கரி ஆகியவைகளும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. வேறு சில கனிப்பொருள்களின் ஏற்றுமதியை வளர்க்கும் பொறுப்பும் இதனிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. 1969-'70-ல் இந் நிறுவனம் 105·4 இலட்சம் டன் எடையுள்ள இரும்புத் தாதுவை ஏற்றுமதி செய்துள்ளது. இது முந்தைய ஆண்டைவிட 19% அதிகமாகும். ஜப்பான் நாட்டு எஃகு ஆலைகளுடன் ரூ. 467 கோடி மதிப்புள்ள, 612·2 இலட்சம் டன் இரும்புத் தாதுவை ஏற்றுமதி செய்ய, ஒரு நீண்டகால ஒப்பந்தமும் இந் நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 1969-'70-ல் இந் நிறுவனம் ரூ. 1·13 இலட்சம் டன் இரும்பு அடங்கிய மங்கனக் (Ferro-Manganese) கனிப்பொருளை ஏற்றுமதி செய்துள்ளது.

இறக்குமதிகள் : இரும்பு அடங்கிய உலோகங்களும், செம்பு, துத்தநாகம், ஈயம் போன்ற இரும்பு அடங்கியிரா உலோகங் களும் இதன் முக்கிய இறக்குமதிகளாகும். 1970ஆம் ஆண்டி லிருந்து உரம், உர உற்பத்திக்கான கச்சாப் பொருள்கள் இவற்றை இறக்குமதி செய்யும் பொறுப்பும் இதனிடம் விடப் பட்டுள்ளது.

சாதனைகள் : இந் நிறுவனம், நமது நாட்டுக் கனிப்பொருள் களுக்கு வெளி நாடுகளில், புதிய சந்தைகளை ஏற்படுத்தித் தந்துள்ளது. 1964-'65-ல் இதன் வாணிகப் புரள்வு ரூ. 68 கோடியாகும். 1969-'70-ல் இது ரூ. 137·63 கோடியாக உயர்ந்து, 1970-'71-ல் ரூ. 253 கோடியாக வளர்ந்துள்ளது. 1964 '65ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, இது ஏறத்தாழ நான்கு மடங்கு வளர்ச்சியாகும். 1969-'70-ல் இதன் மொத்த வருவாய் ரூ. 143·22 கோடியாகும். இது முந்தைய ஆண்டைவிட 27% அதிக மாகும். 1968-'69-ல் ரூ. 80 கோடியாக இருந்த இதன் ஏற்றுமதி,

1969–'70-ல், ரூ. 91 கோடியாக வளர்ந்து, 13% உயர்வை ஏற்படுத்தியது.

1969–'70-ல் இதன் நிகர இலாபம் ரூ. 81·3 இலட்சமாகும். அதே ஆண்டில், இந் நிறுவனம் 7% பங்காதாயத்தை (ரூ. 21 இலட்சம்) நேர்மை முதலின்மீது வழங்கியது.

கனிப்பொருள்களைத் தொடர்ந்து ஏற்றுமதி செய்வதன் மூலமாக, 'பொன் போன்ற மதிப்புள்ள, வெளிநாட்டுச் செலாவணியை, அரசிற்கு ஈட்டித் தருகிறது இந் நிறுவனம். 1973–'74-ல் ரூ. 175 கோடி மதிப்புள்ள கனிப்பொருள்களை ஏற்றுமதி செய்து, ரூ. 125 கோடியாக இருந்த அரசின் வருமானம், இந் நிறுவனத்தால் ரூ.140 கோடியாக 1974–'75-ல் உயர்த்தப்பட்டது.

இறக்குமதிப் பொருள்களும் படிப்படியாக வளர்ந்து வருகிறது. தொடக்கத்தில் தாமிரம் மட்டும்தான் இந் நிறுவனத்தால் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனால், 1974–'75-ல், 50 வகையான கச்சாப் பொருள்களையும், கனிப்பொருள்களையும் இறக்குமதி செய்தது. உர உற்பத்திக்குத் தேவையான கச்சாப் பொருள்கள் அனைத்தும், இந்நிறுவனத்தினால் இறக்குமதி செய்யப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

20. இந்திய எண்ணெய்க் கூட்டுரு (புதுடில்லி) (Indian Oil Corporation)

இந்திய எண்ணெய் நிறுமத்துடன், இந்தியச் சுத்திகரிப்பு ஆலையை இணைத்ததன் மூலமாக, 1964ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் நாளில், 'இந்திய எண்ணெய்க் கூட்டுரு' தோற்றுவிக்கப் பட்டது. இந் நிறுமம் இரு முக்கியப் பிரிவுகளைக் கொண்டுள்ளது.

அவையாவன :

(i) சுத்திகரிப்பு, குழாய்வழிப் பிரிவு.

(ii) சந்தைப்படுத்தும் பிரிவு ஆகியவைகளாகும்.

இந் நிறுவனம், சில வெளிநாட்டு எண்ணெய் நிறுமங்களின் கூட்டுறவுடன் 'இந்திய எண்ணெய்க் கலப்பு நிறுமம்' என்ற அமைப்பையும் (Indian Oil Blending Ltd.) ஏற்படுத்தியுள்ளது. 1969–'70-ல், இப் பிரிவு மிகவும் வெற்றிகரமாக இயங்கியுள்ளது. பம்பாய் நகரில் ஒரு 'கிரீஸ்' தயாரிக்கும் நிலையத்தையும்,

சென்னையில் 'லியூப் எண்ணெய் ஆலை'யையும் (Lube Oil Plant) ஏற்படுத்தியுள்ளது.

இந் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் நடவடிக்கைகளையும் பின்வருமாறு காணலாம்.

(i) எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம், கௌஹாத்தி (அஸ்ஸாம்)

ருமேனியா நாட்டின் உதவியுடன் 1959-ல் இந்த நிலையம் தொடங்கப்பட்டது. 7·5 இலட்சம் குருடாயில் எண்ணெய்யைத் தூய்மைப்படுத்தி, மண்ணெண்ணெய், டீசல் எண்ணெய், எரி எண்ணெய் போன்றவைகளாகப் பாகுபடுத்தும் திறனை இந் நிலையம் பெற்றுள்ளது. 1962ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில், இது தன் உற்பத்தியைத் தொடங்கிற்று. 1969–'70-ல் 7·65 இலட்சம் டன் குருடாயில் எண்ணெய்யைப் பதனப்படுத்தித் தூய்மைப்படுத்தியுள்ளது. இந் நிறுவனம் விமானங்களுக்குரிய எரி எண்ணெய்யை, 1969 நவம்பர் மாதத்திலிருந்து உற்பத்தி செய்யத் தொடங்கியுள்ளது.

(ii) எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம், பரானி (பீகார்)

இந் நிலையம், பீகார் மாநிலத்திலுள்ள பரானி என்ற இடத்தில் தோற்றுவிக்கப்பட்டது. குருடாயில் எண்ணெய்யைத் தூய்மைப்படுத்தி, பல உப பொருள்களாகப் பாகுபடுத்துவதே இதன் முக்கியப் பணியாகும். ருஷ்ய நாட்டின் உதவியுடன், 1961ஆம் ஆண்டிலிருந்து மேற்கண்ட பணிகளை இந் நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இதன் திட்டமிட்ட மூலதனம் ரூ. 4,452·73 இலட்சமாகும். 1969–'70-ல், ரூ. 256·19 இலட்சம் செலவுடன், 3 மில்லியன் டன் உற்பத்தித் திறனுடையதாக இந் நிறுவனம் விரிவாக்கப்பட்டது. 1968–'69-ல் 17·67 இலட்சம் டன் குருடாயிலும், 1969–'70-ல் 20·87 இலட்சம் டன் குருடாயிலும் இந் நிலையத்தால் தூய்மைப்படுத்தப்பட்டன.

(iii) எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம், ஜவகர்நகர் (குஜராத்)

ஆண்டொன்றுக்கு 2 மில்லியன் டன் குருடாயிலைத் தூய்மைப்படுத்தும் நோக்கத்துடன், 1965ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் நாள் இந் நிலையம் அமைக்கப்பட்டது. இந்திய எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் கூட்டுருவிடமிருந்து இப் பணி மாற்றப்பட்டு இந் நிலையத்திடம் ஒப்படைக்கப் பட்டது. முதல் உற்பத்தித் திட்டத்தை 1965ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்திலும், இரண்டாம் கட்டத்தை 1966ஆம் ஆண்டு மே மாதத்திலும் இந் நிலையம் தொடங்கியது.

மேலும், 1967ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் ரூ. 249·83 இலட்ச மதிப்பீட்டுச் செலவுடன், இந் நிலையம் தன்னுடைய மூன்றாவது திட்டப் பணியை அறிமுகப்படுத்தியது.

1968–'69-ல் 25·58 இலட்சம் டன் குருடாயிலும், 1969–'70-ல் 33·98 இலட்சம் டன் குருடாயிலும் தூய்மைப் படுத்தப்பட்டன. மேலும், தொடர்ந்து மூன்றும் முறையாக ரூ. 2,500 ரொக்கப் பரிசுடன், தேசியப் பாதுகாப்புப் பரிசும் அரசால் இந் நிலையத்திற்கு வழங்கப்பட்டது. இது மிகவும் பாராட்டுதற்குரிய ஒரு சாதனையாகும்.

(v) எண்ணெய்ச் சுத்திகரிப்பு நிலையம்-ஹால்டியா (மேற்கு வங்காளம்)

சில வெளிநாட்டு எண்ணெய் நிறுமனங்களின் ஒத்துழைப் புடன், 2·5 மில்லியன் டன் குருடாயில் எண்ணெய்யைத் தூய்மைப்படுத்தும் நோக்கத்துடன் இந் நிலையம் அமைக்கப் பட்டது. ஆண்டொன்றுக்கு ரூ. 67·50 கோடி மதிப்புள்ள எண்ணெய் இங்குத் தூய்மைப்படுத்தப்படும்.

இந் நிறுவனத்தின் விற்பனைகள் : 1969–'70-ல் 10·46 மில்லியன் கிலோ லிட்டர் எண்ணெய் விற்பனை செய்யப்பட்டது. இது முந்தைய ஆண்டைவிட 25% அதிகமாகும். இந்தியாவில் பெட்ரோலியம் பொருள்களை அதிக அளவில் விற்பனை செய்யும் ஒரே நிறுவனமாக இக் கூட்டுரு திகழ்கின்றது. 1969–'70-ல் மேலும் 417 விற்பனை வாடிகள் அமைக்கப்பட்டன; 1969–'70-ல் மொத்தம் 2,681 விற்பனை வாடிகள் இந் நிறுவனத்தால் அமைக்கப்பட்டிருந்தன.

ஏற்றுமதி : 1969–'70ஆம் ஆண்டில் ரூ. 545 இலட்சம் மதிப்புள்ள 4,04,702 டன் மதிப்புள்ள பெட்ரோலியப் பொருள்களை இந் நிறுவனம் ஏற்றுமதி செய்துள்ளது. 1970–'71-ல் மேலும் 4 இலட்சம் டன் பெட்ரோலியப் பொருள்களை ஏற்றுமதி செய்து, ரூ. 572 இலட்சம் மதிப்புள்ள வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டவும் திட்டமிட்டது.

21. இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு (I. F. C.) (Industrial Finance Corporation of India)

1948ஆம் ஆண்டின் 'இந்தியத் தொழில் நிதிக் கூட்டுருச் சட்டத்தின் (Industrial Finance Corporation Act, 1948) மூலமாக இக் கூட்டுரு தோற்றுவிக்கப்பட்டது. இதன் முக்கிய நோக்கங்கள், இந்தியத் தொழிலமைப்புகளுக்கு நீண்டகால

மற்றும் நடுத்தர காலக் (Medium Term) கடன்களை வழங்குவதாகும்.

1955ஆம் ஆண்டிலும், 1957ஆம் ஆண்டிலும், 'இந்தியத் தொழில் நிதிக் கூட்டுருச் சட்டம்' இரு முறை மாற்றியமைக்கப் பட்டது. மீண்டும், 1960ஆம் ஆண்டில், இக் கூட்டுருவுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும் வகையில் மாற்றியமைக்கப்பட்டது. 1960ஆம் ஆண்டு திருத்தப்பட்ட சட்டத்தின் மூலமாக, இக் கூட்டுரு தொழிலமைப்புகளின் மூலதனத்தில் நேரடியாகப் பங்குகொள்ளலாம்.

மூலதனம்: ரூ. 5,000 மதிப்புள்ள (ஒவ்வொன்றும்) 20,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு, ரூ. 10 கோடி மதிப்புள்ள அதிகாரம் பெற்ற மூலதனத்தைக் கொண்டுள்ளது இக் கூட்டுரு. இதில் வழங்கப்பட்ட மூலதனம் ரூ. 5 கோடியாகும். இக் கூட்டுருவின் பங்குகளைப் பின்வருமாறு, மற்றத் தொழிலமைப்புகள் பெற்றுள்ளன.

(i)	மத்திய அரசு—	ரூ.	1 கோடி மதிப்புள்ள பங்குகள்
(ii)	ரிசர்வ் வங்கி—	ரூ.	1 ,,
(iii)	வணிக வங்கிகள்	ரூ.	1·25 ,,
(iv)	நிதி வழங்கும் நிறுவனங்கள்	ரூ.	1·25 ,,
(v)	கூட்டுறவு வங்கிகள்	ரூ.	50 இலட்சம் மதிப்புள்ள பங்குகள்.

பிறகு, 1962ஆம் ஆண்டில் மேலும் ரூ. 2 கோடி மதிப்புள்ள மூலதனம் திரட்டப்பட்டது. 1964ஆம் ஆண்டில், 'இந்தியத் தொழில்வள வங்கி' (Industrial Development Bank) தோற்றுவிக்கப்பட்டு, மத்திய அரசு, ரிசர்வ் வங்கி ஆகியவைகளின் பங்குகள் இவ் வங்கிக்கு மாற்றப்பட்டன; மேலும், 50% மதிப்புள்ள வழங்கப்பட்ட மூலதனத்தைப் பெறவும், தொழில் நிதிக் கூட்டுரு அனுமதிக்கப்பட்டது. இவ்வாறு 1970ஆம் ஆண்டில், இதன் வழங்கப்பட்ட மூலதனம் ரூ. 8·34 கோடியாக உயர்ந்தது.

அமைப்பு முறை: இக் கூட்டுருவின் நிருவாகம் இயக்குநரவையிடம் விடப்பட்டுள்ளது. இயக்குநரவை, பின்வருமாறு அமைக்கப்பட்டுள்ளது.

(i) ஒரு தலைவர் — மத்திய அரசால் நியமிக்கப்படுகிறார்.

(ii) 4 இயக்குநர்கள் — மத்திய அரசால் நியமிக்கப்படுகின்றனர்.

(iii) 2 இயக்குநர்கள் — ரிசர்வ் வங்கியால் நியமிக்கப்படுகின்றனர்.

(iv) 2 இயக்குநர்கள் — வணிக வங்கிகளால் நியமிக்கப்படுகின்றனர்.

(v) 2 இயக்குநர்கள் — மேற்கண்ட நிறுவனங்களைத் தவிர, மற்றப் பங்குதாரர்களால் நியமிக்கப்படுகின்றனர்.

(vi) 2 இயக்குநர்கள் — விதிமுறைகளுக்கேற்ப, கூட்டுறவு வங்கிகள் நியமிக்கின்றன.

மத்திய அரசு, ரிசர்வ் வங்கி ஆகியவைகளின் சார்பாக இந்தியத் தொழில்வள வங்கி இயக்குநர்களை நியமிக்கிறது. மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டு, இயங்குநரவை இக் கூட்டுருவை நிருவகிக்கின்றது. இயக்குநரவைக்கு உதவி புரிவதற்கென ஒரு 'மையக் குழு'வும், 'ஆலோசனைக் குழுக்'களும் அமைக்கப்பட்டுள்ளன. பொறியியற் துறை, இரசாயனத் துறை, நெசவுத்துறை, சர்க்கரை ஆலைகள், மற்றவகைத் தொழிலமைப்புகள் என ஐந்து பிரிவிற்கும், ஒவ்வோர் ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசின் பொறுப்புறுதி : 2½ சதவீதம் பங்காதாயம் வழங்கப்படுவதற்கும், பங்குத் தொகைகளைத் திரும்ப அளிக்கவும் மத்திய அரசு பொறுப்புறுதி அளித்துள்ளது. 1962ஆம் ஆண்டின் கூடுதல் மூலதனத்திற்குப் பங்காதாயம் 4% என நிருணயிக்கப்பட்டது.

பணிகள் : இக் கூட்டுருவின் சட்டத்தில், பிரிவு 23, பின் வரும் பணிகளை இக் கூட்டுரு மேற்கொள்ளவேண்டுமெனக் கூறுகிறது.

(i) தொழிலமைப்புகள், பொதுச்சந்தையில் வெளியிடும் பங்குகளுக்குப் பொறுப்புறுதியை இக் கூட்டுரு அளிக்கிறது.

(ii) தொழிலமைப்புகளால் வெளியிடப்படும் பங்குகளுக்கு, இக் கூட்டுரு ஒப்புறுதி (Under writing) அளிக்கிறது.

(iii) 25 ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்தக்கூடிய கடன் களையும், முன்பணத்தையும் தொழிலமைப்புகளுக்கு இக் கூட்டுரு வழங்குகிறது; தொழிலமைப்புகள் வெளி யிடும் கடன் பத்திரங்களையும், பிணைப் பத்திரங்களையும் (Bonds) வாங்குதல் மூலமாகவும் இக் கூட்டுரு கடன் வசதிகளை ஏற்படுத்தித் தருகிறது.

(iv) இறக்குமதி வாணிகர்களின் பின் செலுத்துச் செலவு களுக்குப் பொறுப்புறுதி அளித்தல் மூலமாக நிதி வசதி அளிக்கிறது.

(v) மத்திய அரசிற்கும், உலக வங்கிக்கும் (World Bank) முகமையகமாகப் பணிபுரிந்து, தொழிலமைப்புகளுக்கு நிதி வசதிகளை வழங்குகிறது.

(vi) வாணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் ஆகியவை தொழிலமைப்புகளுக்கு வழங்கும் கடன்களுக்குப் பொறுப்புறுதி அளிக்கிறது.

இக் கூட்டுருவின் செயல்முறைகளும், சாதனைகளும்

இந்தியத் தொழிலமைப்புகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் பணியில் 1948ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து இக் கூட்டுரு ஈடுபட்டுள்ளது; ஏறத்தாழ 27 ஆண்டுகளைப் பூர்த்திசெய்து வெற்றியுடன் செயற்பட்டு வருகிறது. நேரடி யாக மூலதனத்தில் பங்குபெறுவதிலிருந்து, பல்வேறு வகை யான கடன்களுக்குப் பொறுப்புறுதி அளிக்கும் வரையில், பலவித உதவிகளை அளித்துள்ளது. அவைகளில் மிக முக்கிய மானவைகளைப் பின்வருமாறு காணலாம்.

30-6-1974-ல், இக் கூட்டுருவின் நிதி ஆதாரங்களின் அமைப்பு.

(ரூபாய் கோடியில்)

(1) வழங்கப்பட்ட முதல்	10·00
(2) காப்பு நிதி	20·46
(3) பத்திரங்கள் வெளியிட்டதன் மூலமாகப் பெற்ற கடன்	93·17
(4) மத்திய அரசிடமிருந்து பெற்ற கடன்	66·06
(5) ரிசர்வ் வங்கியிடம் பெற்ற கடன்	0·78

அட்டவணை (தொடர்ச்சி)

(ரூபாய் கோடியில்)

(6) இந்தியத் தொழில்வள வங்கி வழங்கிய கடன்	5·00
(7) வெளிநாட்டுக் கடன்	46·26
(8) முதலீடுகள் விற்பனை முதலியவை	110·54
கூடுதல்	352·27

(Source: I. F. C. I. Annual Report –1974)

30—6—1974-ல் நிதிச் செயல்முறைகள்

நடவடிக்கைகளின் விவரம்	அனுமதிக்கப் பட்ட நிகரத் தொகை (ரூபாய் கோடியில்)	வழங்கப்பட்ட தொகை
1. கடன்கள் (Loans)		
இந்தியப் பணம்	327·52	278·56
வெளிநாட்டுச் செலாவணி ...	54·62	46·26
	382·14	324·82
2. ஒப்புறுதி அளித்தல் (Underwriting)		
பொதுநிலைப் பங்குகள்	16·77	9·06
முன்னுரிமைப் பங்குகள்	9·21	6·93
கடன் பத்திரங்கள்	10·13	8·41
	36·11	24·40
3. நேரடிப் பங்குபெறுதல்		
பொதுநிலைப் பங்குகள்	1·38	1·00
முன்னுரிமைப் பங்குகள்	0·25	0·23
கடன் பத்திரங்கள்	1·82	1·82
	3·45	3·05

அட்டவணை (தொடர்ச்சி)

நடவடிக்கைகளின் விவரம்	அனுமதிக்கப் பட்ட நிகரத் தொகை	வழங்கப்பட்ட தொகை
	(ரூபாய் கோடியில்)	
4. பொறுப்புறுதியளித்தல் (Guarantees)		
பின் செலுத்தங்கள் (Deferred Payments)	28·87	28·42
வெளிநாட்டுக் கடன்களுக்கு ...	23·33	23·33
	52·20	52·75

(Source : I. F. C. I. Annual Report—1974)

மற்ற சாதனைகள்

(i) 1974 ஜூன் மாதம் வரையில் இக் கூட்டுரு அளித்துள்ள மொத்த நிதி உதவி ரூ. 473·90 கோடியாகும். இவைகளில் ரூ. 404·02 கோடி உதவி வழங்கப்பட்டுவிட்டது; வழங்கப்படாமல் இருக்கும் நிலுவை ரூ. 223·67 கோடி.

(ii) 1974 ஜூன் வரை 671 தொழிலமைப்புத் திட்டங்களுக்கு இக் கூட்டுரு உதவி புரிந்துள்ளது. அதாவது, திட்டங்களின் மொத்த மதிப்பில் 19·68% உதவியை இக் கூட்டுரு அளித்துள்ளது.

(iii) புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட தொழிலமைப்புகளுக்கு ரூ. 307·58 கோடி நிதி உதவி புரிந்துள்ளது.

(iv) 114 சர்க்கரை ஆலைத் திட்டங்களுக்கு இக் கூட்டுரு உதவி அளித்துள்ளது. மற்றும் இரும்பு எஃகு ஆலைகள், காகிதத் தொழிற்சாலை, இயந்திர உற்பத்தி, சிமென்ட், உலோகம், ரப்பர், மின் இயந்திரக் கருவிகள் போன்ற உற்பத்தித் தொழிலமைப்புகளுக்கும் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(v) ஆந்திரா, அஸ்ஸாம், பீகார், மத்தியப்பிரதேசம், ஒரிஸ்ஸா, இராஜஸ்தான், உத்திரப்பிரதேசம் போன்ற பின்தங்கிய மாநிலங்களிலுள்ள தொழிலமைப்புகளுக்கு மட்டும் 37·9% நிதி உதவியை இக் கூட்டுரு அளித்துள்ளது.

(vi) 23·4% நிதி உதவியை, 122 கூட்டுறவுத் துறைத் திட்டங்கள் பெற்றன; இதன் மதிப்பு ரூ. 111·06 கோடியாகும்.

(vii) மிகவும் முக்கியமான உதவியாக, தொழிலமைப்புகளுக்கு வெளிநாட்டுச் செலாவணிக் கடன்களை இக் கூட்டுரு வழங்கியுள்ளது.

(viii) 30-6-'74 வரையில் 9 பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு, ரூ. 9·92 கோடி மதிப்புள்ள நிதி உதவியை அளித்துள்ளது.

(ix) வெளிநாட்டு உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையில், உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளின் கட்டுமானப் பணிகளுக்கும் இக் கூட்டுரு நிதி உதவி புரிந்து வருகின்றது.

(x) 1973ஆம் ஆண்டில் 'மேலாண்மை வளர்ச்சி நிறுவனம்' (Management Development Institute) அமைக்கப்பட்டு, தொழிலமைப்புகளின் பிரதிநிதிகளுக்கு நிதி மேலாண்மை, சந்தைப்படுத்துதல், வங்கி நடவடிக்கைகள் போன்றவைகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

(xi) பின்தங்கிய மாநிலங்களில் அமைக்கப்பட்டுள்ள தொழிலமைப்புகளுக்கு முதலிடம் அளித்து நிதி உதவிகளை மேற்கொள்வதன் மூலமாக, நாட்டில் சரிசம தொழில் வளர்ச்சியை ஏற்படுத்திட இக் கூட்டுரு தொடர்ந்து முயன்று வருகிறது.

(xii) முன்பு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல்வேறு பொருள்கள் இக் கூட்டுருவின் நிதி உதவியால் நமது நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன; இவ்வாறு வெளிநாட்டுச் செலாவணியை இக் கூட்டுரு மிச்சப்படுத்தி வருகிறது.

22. இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு (Life Insurance Corporation of India)

ஆயுள் காப்பீட்டுத் தொழிலில் முற்றுரிமையைப் பெற்று விளங்குகிறது இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு. 'இந்திய ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருச் சட்டம்-1956'ன்கீழ், இக் கூட்டுரு தோற்றுவிக்கப்பட்டது. இதற்குமுன் நடந்துவந்த 243 காப்பீட்டு நிறுமங்கள் இக் கூட்டுருவுக்கு மாற்றப்பட்டன.

இக் கூட்டுரு பின்வரும் நான்கு நோக்கங்களைக் கொண்டு செயற்படுகிறது.

(i) காப்பீட்டுத் தொழிலின் முக்கியத்துவத்தை கிராமப் புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் பரப்புதல்.

(ii) நாட்டு மக்களின் சேமிப்பை ஒன்று திரட்டுதல்.

(iii) காப்பீடு முனைமம் செலுத்துநர்களின் நலனைக் காத்தல்.

(iv) தொழிலமைப்புகளின் பங்குகளில் முதலீடு செய்தல்.

நாட்டில் காப்பீட்டுத் தொழிலை வளர்ப்பதில் மிகவும் ஊக்கத்துடன் பணிபுரிந்து வருகிறது இக் கூட்டுரு. மேலும், சாதாரணக் குடிமக்களிடமிருந்தும், குறைந்த வருமானம் பெறும் பணியாளர்களிடமிருந்தும்கூட சேமிப்புகளை ஒன்று திரட்டுகிறது. காப்பீட்டுத் தொழிலை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பினும், அதிக நிதி வசதிகளைப் பெறுவதால், இக் கூட்டுரு நாட்டிலுள்ள பல்வேறு தொழிலமைப்புகளுக்குப் பல விதங்களில் நிதி உதவி அளித்துவருவது குறிப்பிடத்தக்கதாகும். பின்வரும் அட்டவணை இக் கூட்டுருவின் வளர்ச்சியை அறியும் வகையில் அமைந்துள்ளது.

ஆண்டு முடிவில் தொழில்	இந்தியாவில்		வெளிநாடுகளில்		கூடுதல்
	ஒப்பந்தங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	மேல் ஊதியம் காப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)	ஒப்பந்தங்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்)	மேல் ஊதியம், காப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)	மேல் ஊதியம், காப்பீட்டுத் தொகை (ரூபாய் கோடியில்)
(i) 31-3-1966	114·10	4,282	1·79	112	4,394
(ii) 31-3-1967	119·98	4,593	1·24	131	4,724
(iii) 31-3-1968	126·43	5,116	1·16	124	5,240
(iv) 31-3-1969	133·45	5,606	1·08	119	5,725
(v) 31-3-1970	139·39	6,303	1·02	122	6,425

(Source : India 1971-'72)

1956ஆம் ஆண்டில், ரூ. 1,250 கோடி மதிப்புடன், 50 இலட்சம் ஒப்பந்தமாக இருந்த நிலை, 1971-'72-ல் ரூ. 8,202 கோடி மதிப்புள்ள 157 இலட்சம் ஒப்பந்தங்களாக உயர்ந்துள்ளது. அதுபோலவே, 1956-'57-ல் திரட்டப்பட்ட ரூ. 28 கோடி சேமிப்பு, 1972-'73-ல் ரூ. 292 கோடியாக உயர்ந்தது. நாட்டின் மொத்த சேமிப்பில் இது 7·5 சதவீதமாகும்.

இக் கூட்டுருவின் முதலீட்டுக் கொள்கை

பின்வரும் நோக்கங்களுடன் இதன் முதலீட்டுக் கொள்கை அமைந்துள்ளது.

(i) சமுதாயநலன் பயக்கும் திட்டங்களுக்கு அதிக நிதி உதவி அளித்தல்.

(ii) பெரும்பான்மையான தொகையை அரசு அல்லது மற்றப் பத்திரங்களில் முதலீடு செய்தல்.

(iii) ஊக வாணிகங்களிலும், இழப்பாபத்துகள் நிறைந்த தொழில்களிலும் முதலீடு செய்வதைத் தவிர்த்தல்.

(iv) மேம்பட்ட நிலையிலுள்ள தொழிலமைப்புகளின் மூல தனத்தில் நேரடியாகப் பங்கு பெறுதல் அல்லது அவைகள் வழங்கும் கடன் பத்திரங்களுக்குப் பொறுப் புறுதி அளித்தல்.

நிதி நடவடிக்கைகளில் வல்லுநர்களையும், இயக்குநர்களையும் கொண்ட 'முதலீட்டுக் குழு' (Investment Committee) ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. முதலீட்டைப் பற்றிய முடிவுகள் இக் குழுவால் மேற்கொள்ளப்படுகின்றன.

1958ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட முதலீட்டுக் கொள்கை யின் அடிப்படையில், இக் கூட்டுரு பின்வரும் சதவீதங்களில் தன்னுடைய முதலீடுகளைச் செய்கிறது.

(i)	அரசுப் பத்திரங்கள்	...	25%
(ii)	அரசுப் பத்திரங்களும், பிறவகை அனுமதிக்கப்பட்ட பத்திரங்களும்	...	25%
(iii)	அரசு நிறுமங்களின் பங்குகள்	...	35%
(iv)	முதலீட்டுக் குழுவின் முடிவிற்கேற்ப மற்றவகை முதலீடுகளின்மீது	...	15%

மேலும், ஒரு நிறுமத்தின் மூலதனத்தில், 30 சதவீதம் வரை பொதுநிலை முதல் பங்குகளை இக் கூட்டுரு பெறவும் அதிகார முண்டு.

1972ஆம் ஆண்டில், மார்ச் மாதத்தில் இக் கூட்டுருவின் மொத்த முதலீடுகள் ரூ. 1,952·60 கோடி மதிப்புள்ளவையாக இருந்தன. இதில் 74·6 சதவீதம் பொதுத்துறைத் தொழி லமைப்புகளிலும், 10·9 சதவீதம் கூட்டுறவுத் துறையிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. வீட்டுவசதி, குடிநீர் வசதி,

தொழிற்பேட்டைகள் அமைத்தல், மின்சார நிறுவனங்கள் போன்றவைகளில் 24·14% முதலீடு செய்யப்பட்டிருந்தது.

1974-'75-ல் மாறுதல் செய்யப்பட்ட முதலீட்டுக் கொள்கை யின்படி, மொத்த முதலீட்டுத் தொகையில் 50 சதவீதம் அரசுப் பத்திரங்களிலும், 25 சதவீதம் சமூகப்பணித் திட்டங் களிலும் (வீட்டுவசதி, குடிநீர் வழங்கும் திட்டம் போன்றவை), 25 சதவீதம் முதலீட்டுக் குழுவின் முடிவுகளின்படியும் இக் கூட்டுருவின் முதலீடுகள் அமையும்.

பின்வரும் அட்டவணை, பல்வேறு ஆண்டுகளில் ஆயுள் காப்பீட்டுக் கூட்டுருவின் முதலீடுகள் எவ்வாறு அமைந்திருந்தன எனக் காட்டுகிறது.

முதலீடுகள்	1955	1966	1978
	(ரூபாய் கோடியில்)		
(i) அரசுப் பத்திரங்களின்மீது	180·2	573·6	1,167·4
(ii) வீட்டுவசதி போன்றவை களுக்குக் கடன் அளித்தது.	—	110·7	641·8
(iii) நிறுமங்களின் பங்குகள், கடன்பத்திரங்கள் ஆகிய வைமீது முதலீடு	51·6	180·3	234·9
(iv) அடைமானங்களின் மீதான கடன்கள்	14·6	38·7	70·1
(v) ஒப்பந்தங்களின் மீதான கடன்கள்	28·0	74·3	182·3
(vi) வீடுகள் போன்ற சொத்துக் களின் மீதான கடன்	16.7	32·0	46·4
(vii) மற்றச் சொத்துகள்	34·6	85·2	167·0
கூடுதல் ...	325·7	1,094·8	2,509·9

நிறுமங்களின் மூலதனத்தில் பங்கு பெறுவதன் மூலமாக, இயக்குநர்களை நியமிக்கும் அதிகாரம் இக் கூட்டுருவிற்குக் கிடைக்கிறது. இதன்மூலமாக, நிறுமங்களின் நடவடிக்கைகளில் கண்காணிப்பைக் காப்பீட்டுக் கூட்டுரு ஏற்படுத்துகிறது. இது நிறுமங்களின் சீரான நிருவாகத்திற்கு வழி வகுக்கிறது.

23. இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கூட்டுரு (The Indian Motion Pictures Exports Corporation Limited)

திரைப்பட உற்பத்தியில் ஜப்பான் நாட்டிற்கு அடுத்த நிலையில், உலகத்திலேயே இரண்டாவது பெரிய நாடாகத் திகழ்வது நமது நாடாகும். ஆண்டுதோறும் இங்கு 300 லிருந்து 350 படங்கள் வரை தயாரிக்கப்படுகின்றன. இவ்வுற்பத்தியில் செய்யப்படும் முதலீடு ஏறத்தாழ ரூ. 110 கோடியாகும். 12 இந்திய மொழிகளில் படங்கள் தயாரிக்கப்பட்டாலும், ஏற்றுமதி வாய்ப்பு இந்தி, தமிழ் இவ்விரு மொழிகளில் தயாரிக்கப்படும் படங்களுக்கே முக்கியமாக உண்டு. ஏறத்தாழ 90 நாடுகளுக்கு நமது படங்கள் ஏற்றுமதியாகின்றன.

இந்தியத் திரைப்பட. ஏற்றுமதியில் வாணிக ஏற்றுமதியாளர்களும், உற்பத்தி ஏற்றுமதியாளர்களும் ஈடுபட்டுள்ளனர். இவர்களோடு கூடவே, இத் துறையில் இன்னும் சிறப்பாகச் செயற்பட 1963 செப்டம்பர் மாதத்தில் இந்திய நிறுமச் சட்டத்தின்கீழ், 'இந்தியத் திரைப்பட ஏற்றுமதிக் கூட்டுரு' பதிவு செய்யப்பட்டது. 1967 ஏப்ரல் மாதத்திலிருந்து இதுவும் இந்திய அரசு வாணிகக் கூட்டுருவின் (S.T.C.) துணையமைப்பாக இயங்கி வருகிறது.

திரைப்படங்களை உற்பத்தி செய்வது, வாங்குவது, ஏற்றுமதி செய்வது, வெளிநாடுகளில் நமது படங்களைச் சந்தையிடுவதற்கும், திரையிடுவதற்கும் வசதிகளைப் பெருக்குவது ஆகியவை முக்கிய நோக்கங்களாகும்.

நம் திரைப்படங்களுக்கு வெளிநாடுகளில் வழி வழியாகவுள்ள சந்தைகளைப் பெருக்குவதற்கும், புதிய சந்தைகளை உருவாக்கித் தருவதற்கும் இது பாடுபடுகிறது.

வெளிநாடுகளில் நமது திரைப்படங்களுக்கு உள்ள சந்தை நிலை, ஏற்றுமதி வாய்ப்பு இவற்றை ஆராய்வதற்காகவும், இக் கூட்டுருவின் வழங்கு மையங்களை அந் நாடுகளில் அமைப்பது பற்றிக் கண்டறிவதற்காகவும் இது 1970-'71-ல், பல்வேறு நாடுகளுக்குத் தனது தூதுக்குழுக்களை அனுப்பியது. 1969-'70-ல் இது ஈட்டிய வெளிநாட்டுச் செலாவணியின் மதிப்பு ரூ. 32·37 இலட்சமாகும்; 1970-'71-ல் இத் தொகை ரூ. 45 இலட்சமாக உயர்ந்தது.

24. தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுரு (Damodar Valley Corporation)

'தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுருச் சட்டம் 1948-'ன் மூலமாக இக் கூட்டுரு தோற்றுவிக்கப்பட்டது. முக்கிய நோக்கம், பீகாரிலும், மேற்கு வங்காளத்திலும் தாமோதர் பள்ளத்தாக்கை வளர்ச்சியுறச் செய்வதாகும். இது சட்டநிலை பெற்று, பொதுவான முத்திரையுடன் செயற்படுகிறது. நிருவாகக் குழுவில் ஒரு தலைவரும், இரண்டு உறுப்பினர்களும் மத்திய அரசால், மாநில அரசுகளின் ஆலோசனையுடன் நியமிக்கப்படுகின்றனர். ஆனால் இவ்வுறுப்பினர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாகவோ, சட்ட மன்ற உறுப்பினர்களாகவோ இருக்கக்கூடாது. பின்வரும் பணிகளை இக் கூட்டுரு மேற்கொள்கிறது :

(i) நீர்ப்பாசனத் திட்டங்களை உருவாக்கி, செயற்படுத்துதல்.

(ii) குடிநீர் வழங்குதல், கழிவுநீர் வெளியேற்றம் ஆகிய திட்டங்களை மேற்கொள்ளுதல்.

(iii) மின்சக்தி உற்பத்தி, பகிர்வு போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(iv) வெள்ளச் சேதங்களைக் கட்டுப்படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளுதல்.

(v) தாமோதர் ஆற்றில் நீர்ப்போக்குவரத்தை ஏற்படுத்துதல்.

(vi) பள்ளத்தாக்கில் மண் அரிப்பைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

(vii) பொது நல்வாழ்வைக் காக்கும் நடவடிக்கைகள் உருவாக்கப்படுதல்.

(viii) விவசாயம், உற்பத்தித் தொழில், பொருளாதார முன்னேற்றங்களைத் தாமோதரப் பள்ளத்தாக்குப் பகுதிகளில் ஏற்படுத்துதல்.

இவ்வாறு பலநோக்குப் பணிகளை மேற்கொள்ளும் இக் கூட்டுருவிற்குத் தேவையான அதிகாரங்கள் போதிய அளவில் அளிக்கப்பட்டுள்ளன. நிதி நடவடிக்கைகளில் தன்னுட்சியுரிமை வழங்கப்பட்டுள்ளது. பொதுக் கூட்டுரு அமைப்பு முறையில் செயற்படும் பொதுத்துறைத் தொழில்களில் மிக முக்கியமானதாக இக் கூட்டுரு கருதப்படுகிறது.

சாதனைகள்

தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுரு, இதுவரை ஏற்பட்டிராத அளவில், 1975-'76-ல் ரூ. 11 கோடி இலாபமீட்டியுள்ளது.

1975-'76-ல் ரூ. 19·5 கோடி சுயச்சார்பு நிதி வசதிகளைத் திரட்டியுள்ளது. 1976-'77ஆம் ஆண்டின் முதலீட்டு மதிப்பு ரூ. 30 கோடியாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும், மின்சாரக் கட்டணத்தில் எவ்வித மாறுதலும் இருக்காது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொகரோவிலும் (Bokaro), துர்காபூரிலும் (Durgapur) துணை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் 2 புதிய நிலையங்கள் சந்ராபுரா (Chandrapura)விலும், துர்காபூரிலும் அமைக்கப்பட்டு வருகின்றன; வெகுவிரைவில் அவைகளும் செயற்பட ஆரம்பித்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தாமோதர் பள்ளத்தாக்கின் பணிகள் (ஒரு கண்ணோட்டம்)

(1) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் உயிர் மூச்சாக (Life - breathe) இக் கூட்டுரு உற்பத்தி செய்யும் மின்சார சக்தி விளங்குகிறது.

(2) நாட்டின் 75 சதவீத நிலக்கரி, இப் பள்ளத்தாக்கு உற்பத்தி செய்யும் மின்சாரத்தைப் பயன்படுத்தி சுரங்கங்களிலிருந்து எடுக்கப்படுகின்றன.

(3) நாட்டின் முக்கியமான 7 இரும்பாலைகளில், 5 ஆலைகளுக்கு இக் கூட்டுரு மின்சாரம் வழங்குகிறது.

(4) ரெயில்துறையின், கிழக்குப் பிராந்தியப் பிரிவின் தேவையில் பெரும்பான்மையான பங்கை இக் கூட்டுரு ஈடுசெய்கிறது.

(5) பொதுத்துறையின் சாதனைகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கி, நம்பிக்கையூட்டும் வகையில் செயற்பட்டு வருகிறது இக் கூட்டுரு.

25. சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பாலை (வரையறுக்கப்பட்டது) (Madras Refineries Limited, Manali, Madras)

1965ஆம் ஆண்டு, டிசம்பர் 30ஆம் நாள் சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பாலை தோற்றுவிக்கப்பட்டது. நமது பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தியால் 1967-ல் அடிக்கல் நாட்டப்பட்டு, முன்னாள் ஜனாதிபதி திரு. வி. வி. கிரி அவர்களால், 1969ஆம் ஆண்டில் உற்பத்தி தொடங்கிவைக்கப்பட்டது. பொதுத்துறை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலைகளுள், 9வது ஆலையாக இது தன் உற்பத்தியை 1969ஆம் ஆண்டில் துவக்கிற்று.

இதன் முக்கியப் பணி, தூய்மையற்ற நிலையில், பாரசீகம் போன்ற நாடுகளிலிருந்து எண்ணெய்க் கப்பல்கள் மூலம் வரும்

குருடாயில் எண்ணெய்யைத் தூய்மைப்படுத்தி, பதனப்படுத்தி பல உபபொருள்களைத் தயாரிப்பதாகும். எண்ணெய்க் கப்பல்கள் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சியவுடன், கப்பலில் கொண்டு வரப்படும் எண்ணெய், முப்பது அங்குல அளவுள்ள குழாய்கள் மூலமாக ஐந்து மைல் நீளத்திற்கு அனுப்பப்பட்டு, தொழிற்சாலையை அடைகின்றன. பெட்ரோல், டீசல் எண்ணெய், எரிவாயு, தொழிற்சாலைகள் பயன்படுத்தும் எண்ணெய், இரசக்கற்பூரத் தைலம், தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் எரிபொருள், இயந்திரங்களின் உராய்வைத் தடுக்கும் எண்ணெய் போன்ற 11 வகையான பொருள்கள் இங்கு உற்பத்தியாகின்றன. விண்ணிலும், மண்ணிலும் வாகனங்கள் ஊர்ந்து செல்லத் தேவைப்படும் எண்ணெய் இவ்வாலையால் தயாரிக்கப்படுகிறது. முன்பு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்த கந்தகம், இப்பொழுது இவ்வாலையில் தயாரிக்கப்பட்டு நாட்டின் முழுத் தேவையையும் ஈடுசெய்கிறது.

இதன் சாதனைகள் (1976 மார்ச் மாதம் வரை)

(1) உற்பத்தி தொடங்கியபின், மூன்றும் ஆண்டிலேயே 100 சதவீதம் உற்பத்தித் திறனை ஏற்படுத்தியது.

(2) வீட்டு உபயோகத்திற்கான சமையல் எரிவாயு (L. P. Gas) 6,50,000 சிலிண்டர் உற்பத்தியிலிருந்து 19,50,000 சிலிண்டர் (Cylinders) உற்பத்திக்கு உயர்ந்தது.

(3) 1969-'70-ல் ரூ. 27 கோடியாக இருந்த வாணிபப் புரள்வு 1974-'75-ல் ரூ. 200 கோடியாக அதிகரித்தது.

(4) ரெயில்துறையின் தேவையான 'அச்சு எண்ணெய்' (Axle Oils) களின் உற்பத்தி மூலம் ரூ. 60 இலட்சம் மதிப்புள்ள வெளிநாட்டுச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

(5) இந்திய எண்ணெய்க் கூட்டுரு நிறுமத்தின் மூலமாக, இந்தோனீசியா போன்ற நாடுகளுக்கு, உயர்ந்த தரம் வாய்ந்த 'அஸ்பால்ட்' (Asphalt) ஏற்றுமதி செய்யப்பட்டதால், ரூ. 240 இலட்சம் வெளிநாட்டுச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

(6) எரிபொருளின் சிக்கனங்களால், ஆண்டொன்றுக்கு ரூ. 1 கோடிக்கும் அதிகமாக மிச்சம் பிடிக்கப்படுகிறது.

(7) கச்சா நீரின் (Raw Water) நுகர்வு, 3·2 m. g. p. d. யிலிருந்து 2·6 m. g. p. d. ஆகக் குறைந்துள்ளது.

(8) பெட்ரோல் சுத்திகரிப்பாலைகளுடன் 'தேசியப் பாதுகாப்புப் பரிசை'த் தொடர்ந்து 1973ஆம் ஆண்டிலும், 1974ஆம் ஆண்டிலும் பெற்றுள்ளது. அமெரிக்க நாட்டின் 'தேசியப் பாதுகாப்புக் குழு' (National Safety Council - U. S. A.) திறமைச் சான்று விருதை இந் நிறுமத்திற்கு அளித்துள்ளது.

(9) சிரியா முதலிய நாடுகளுக்கு இந் நிறுமத்தின் வல்லுநர்கள் அனுப்பப்பட்டு, தொழிலறிவு அந் நாடுகளுக்கு அளிக்கப்படுகிறது.

(10) மற்ற எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கு இந் நிறுமம், தொழில் நுட்பப் பயிற்சியை அளிக்கிறது. 1975-ல் 290 பயிற்சி பெறுநர், பயிற்சி பெற்றுள்ளனர்.

(11) தொழிலாளர்களுக்கு ஊக்கத் திட்டங்கள், பாதுகாப்பு ஆலோசனைகள், மருத்துவ வசதிகள், ஆயுள் காப்பீட்டு வசதிகள் போன்றவை அளிக்கப்படுகின்றன.

(12) 1974-'75-ல் இந் நிறுமத்தில் 450 தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

13. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் சாதனைகள்–ஒரு கண்ணோட்டம்

(Achievements of Public Enterprises)

கடந்த சில ஆண்டுகளில் இந்தியப் பொருளாதார நடவடிக்கைகளில் விரைவான மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தில், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் கடந்த பத்து ஆண்டுகளில் முக்கியப் பங்கை வகித்து வருகின்றன. உற்பத்தி, பொருளாதார நடவடிக்கைகளில் விரைவாக முன்னேறி, புத்துணர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்முறைகளில் மாபெரும் வெற்றியைப் பொதுத்துறை நிறுவனங்கள் ஏற்படுத்தித் தந்துள்ளன. குறிப்பாக, கடந்த மூன்று ஆண்டுகளில் போற்றத்தகும் சாதனைகள் பலவற்றைப் பொதுத்துறை புரிந்துள்ளது. எனவே, பொதுத்துறையின் அவசியத்தைப் பற்றியோ அல்லது அவைகளின் இலாபமீட்டும் திறன் பற்றியோ இரு கருத்துகள் இருக்க முடியாது.

முதலீடுகளின் அளவுகளிலும், பொருள்களின் வகையகற்சியிலும் பொதுத்துறை நிறுவனங்கள் வியக்கத்தக்க வகையில் முன்னேற்றமடைந்துள்ளன. நமது நாடு சுதந்திரமடைந்த பிறகு ஏற்பட்ட தொழில் வளர்ச்சியின் சாதனையில் முக்கியப் பங்கை பொதுத்துறை நிறைவேற்றியுள்ளது என்றால் அது மிகையாகாது. ஐந்தாண்டுத் திட்டங்களின் மதிப்பீடுகளை நிறைவேற்றி வைத்த பெருமையும் பொதுத்துறையையே சாரும். இன்று நமது நாடு தொழில் நுட்பத் துறையில் மிகவும் முன்னேறிய நாடாகக் கருதப்படுகிறது என்றால், அதற்கு மூலகாரணமாக விளங்குவது பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் வளர்ச்சியேயாகும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியபோது நமது நாட்டில் செயற்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் எண்ணிக்கை 5; ஆனால் இற்றைய நாளில் 127 பொதுத்துறை

நிறுவனங்கள், நாட்டின் பல பாகங்களிலும் அரும்பணிகளாற்றி வருகின்றன. சமதர்ம சமுதாயத்தை உருவாக்கும் சரிசம தொழில் வளர்ச்சியை ஏற்படுத்தவும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கவும், முக்கியப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதிலும், ஏற்றுமதியைப் பெருக்கி வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டவும், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவும் என எண்ணிறைந்த அரசின் கொள்கைகளுக்கு உறுதுணையாக நின்று, பொதுத்துறை செயற்பட்டு வந்துள்ளது; வருகிறது.

பொதுத்துறையின் மீதான முதலீட்டின் வளர்ச்சி

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின்மீது அரசு செய்த முதலீடு படிப்படியாக வளர்ந்துள்ளது. முதலாண்டு ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 29 கோடியாக இருந்த முதலீடு 1975-ல் ஏறத்தாழ ரூ. 7,000 கோடியாக வளர்ந்துள்ளது. பின்வரும் அட்டவணையிலிருந்து, முதலீட்டின் படிப்படியான வளர்ச்சியை அறியலாம்.

ஆண்டு முடிவு	மொத்த முதலீடு (ரூபாய் கோடியில்)
(1) முதல் ஐந்தாண்டுத்திட்டம் தொடங்கிய போது	29
(2) இரண்டாம்	81
(3) மூன்றும்	953
(4) மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில்	2,415
(5) நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் தொடங்கியபோது	3,902
(6) 31-3-1971-ல்	4,682
(7) 31-3-1972-ல்	5,052
(8) 31-3-1973-ல்	5,571
(9) 31-3-1974-ல்	5,750
(10) 31-3-1975-ல்	6,000

பொதுத்துறைத் தொழிலமைப்புகள், பணிகளில் வகையகற்சியை (Diversity) மேற்கொண்டுள்ளன. வான்வழிப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்து, ரெயில்துறை, எண்ணெய், வாயு, இயந்திரக்கருவிகள், கைக்கடிகாரங்கள், நிலக்கரி, உணவுப் பொருள் விநியோகம், உணவகத் தொழில் (Hotel Business), உர உற்பத்தி, கைத்தறித் தொழில்களின் ஏற்றுமதி போன்ற எண்ணிறைந்த பொருள்களையும், பணிகளையும் உற்பத்தி செய்யவும், வழங்கவும் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தோற்றுவிக்கப் பட்டுள்ளன. மேற்கண்ட ஒவ்வொரு துறையிலும் செய்யப் பட்டுள்ள முதலீட்டையும், அதன் சதவீதத்தையும் பின்வருமாறு காணலாம்.

(1971–'72-ல் உள்ளபடி)

	பொதுத்துறைத் தொழில் அமைக்கப்பட்டிருக்கும் துறை	முதலீடு (ரூபாய் கோடியில்)	சதவீதம்
(1)	இரும்பு, எஃகு	1,694	32
(2)	கப்பல் கட்டுதல், பொறியியற் துறை	1,022	22·2
(3)	இரசாயனம்	614	12·2
(4)	பெட்ரோலியம், எண்ணெய்	394	7·6
(5)	சுரங்கத்தொழில், உலோகம்	484	9·4
(6)	வான்வழி, கப்பல் போக்குவரத்து	320	6·3
(7)	வாணிகம்	354	7·0
(8)	ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு	5	0·1
(9)	மற்றவகைத் தொழில்கள்	165	3·2

அரசின் அதிகரித்த வருமானம்

கடந்த 25 ஆண்டுகளில், பொதுத்துறையின் வளர்ச்சியையும், கடவடிக்கைகளையும் ஆராயும்போது, அரசின் வருமானம் எந்த அளவு உயர்ந்துள்ளது என்பது தெளிவாகிறது. குறிப்பாக

1972–'73ஆம் ஆண்டிலிருந்து பொதுத்துறைத் தொழில்களின் இலாபமீட்டும் திறனில் ஒரு திருப்புமுனை ஏற்பட்டது. 1971-'72ஆம் ஆண்டில் ரூ. 19·0 கோடி நட்டம் ஏற்பட்ட பொதுத் துறையில், 1972-'73-ல் ரூ. 19·8 கோடி இலாபம் ஏற்பட்டது. அதாவது ஏறத்தாழ ரூ. 37·0 கோடி நிகர இலாபம் ஏற்பட்டது. 1973–'74ஆம் ஆண்டில் இலாபம் மேலும் அதிகரித்து, ரூ. 64·2 கோடியாக உயர்ந்தது. 1974–'75-ல் ரூ. 150 கோடி இலாபம் எதிர்பார்க்கப்பட்டது. இவ்வாறு பொதுத்துறையின் மூலமாக அரசின் வருவாய் அதிகரித்தது.

மூலதனத்தின் மீதான மீள்வரவு (Return on Capital)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் மீது, அரசால் ஏற்படுத்தப்பட்ட முதலீடுகளின் மீதான மீள்வரவும் படிப் படியாக அதிகரித்து வருகின்றது. 1973–'74ஆம் ஆண்டில், பொதுத்துறையின் மீதான முதலீடு ரூ. 5,256 கோடி. அதே ஆண்டில் பொதுத்துறை ஈட்டிய இலாபம் ரூ. 273 கோடியாகும். (வட்டி, பின்செலுத்து செலவுகள் போக). எனவே, மூலதனத் தின் மீதான மீள்வரவு 5·2 சதவீதமாக அமைந்தது. சமூகப் பணிச் செலவுகளும், நகர்ப்புற அமைப்புச் செலவுகளும் ஏற்படாமலிருந்தால் (ரூ. 52·5 கோடி இவ் வகையில் செலவு செய்யப்பட்டது), இந்த மீள்வரவு வீதம் 6·8 ஆக இருந்திருக்கும். இதுபோன்றே 1972-'73-ல் ரூ. 5,299 கோடியாக இருந்த பொதுத்துறையின் விற்பனைப் புரள்வு, 1973–'74ஆம் ஆண்டில் ரூ. 6,777 கோடியாக உயர்ந்தது; இது 28 சதவீதம் அதிகரிப் பாகும். 1974–'75ஆம் ஆண்டு முடிவில் ரூ. 7,000 கோடி விற்பனைப்புரள்வு ஏற்படும் எனவும் மதிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மீள்வரவும் 1974–'75-ல் 7% அளவில் இருக்குமென கணக்கிடப்பட்டது.

வேலைவாய்ப்புகளின் அதிகரிப்பு

பொதுத்துறையின் மீதான முதலீடு வளர, வளர அவைகள் மூலமாக ஏற்படுத்தப்பட்ட வேலைவாய்ப்புகளும் அதிகரித்தன. 1971–'72-ல் 0·70 மில்லியன் அளவில் இருந்த வேலைவாய்ப்புகள், 1973-'74-ல் 1·31 மில்லியனாக உயர்ந்தது; இது ஏறத்தாழ 41 சதவீதம் அதிகமாகும். 1973–'74-ல் ஒரு தொழிலாளியின் சராசரி ஆண்டு ஊதியம் ரூ. 5,982 ஆக மதிப்பிடப்பட்டது.

பின்வரும் அட்டவணைகளிலிருந்து, பொதுத்துறையின் வளர்ச்சி பற்றிய விவரங்கள் அனைத்தையும் அறியலாம்:

அரசின் அதிகரித்த வருமானம்

ஆண்டு	பங்காதாயம்	மூலதனத்தின் மீதான வட்டி	வருமான வரி	உள்நாட்டு வரி	கூடுதல்
	(ரூபாய் மில்லியன்களில்)				
1969-'70	120	1,040	190	3,470	4,820
1970-'71	140	1,040	230	3,940	5,350
1971-'72	150	1,210	410	4,380	6,150
1972-'73	160	1,240	630	5,140	7,170
1973-'74	130	1,110	840	5,630	7,710
கூடுதல் ..	700	5,640	2,300	22,560	31,200

(Source: Industrial Economist.)

பொதுத்துறையின் ஐந்து ஆண்டுக் கால வளர்ச்சி
(1969-'70 முதல் 1973-'74 வரை) ஓர் ஒப்பீடு

(ரூபாய் மில்லியன்களில்)

விவரங்கள்	1969-'70	1970-'71	1971-'72	1972-'73	1970-'74
(1) முதலீடு ...	43,010	46,280	50,520	55,710	62,870
(2) விற்பனைப் புரள்வு ..	39,960	33,090	39,740	52,990	67,770
(3) மொத்த இலாபம் (வட்டி, வரிகள் உள்பட) ..	1,390	1,460	1,720	2,450	2,780
(4) நிகர இலாபம் (வட்டி, வரிகள் நீங்கலாக) ...	(–) 50 (நட்டம்)	(–) 30 (நட்டம்)	(–) 190 (நட்டம்)	180	640
(5) சுயச்சார்பு நிதி வசதிகள் ...	1,940	2,040	2,150	2,600	3,870
(6) மூலதனத்தின் மீதான மீள்வரவு (%)	0·42	0·39	0·39	0·51	0·52
(7) வேலைவாய்ப்பு (எண்ணிக்கை மில்லியன்களில்) ..	0·613	0·660	0·701	0·932	1·31

அட்டவணை (தொடர்ச்சி)

(ரூபாய் மில்லியன்களில்)

விவரங்கள்	1969-'70	1970-'71	1971-'72	1972-'73	1973-'74
தொழிலாளர்களுக்கான செலவுகள் :					
(i) ஊதியம், கூலி முதலியன	2,90 0	3,610	4,150	5,410	7,860
(ii) சமூக நலன்கள், வீட்டு வசதி போன்றவைகளின் மீதான செலவுகள்	290	340	340	410	530
கூடுதல் ...	3,190	3,950	4,490	5,820	8,390

(Source : Industrial Economist)

கனரகத் தொழிலில் பொதுத்துறையின் சாதனைகள்

பல பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இன்று கனரகத் தொழில்களாக வளர்ந்துள்ளன. அவைகளில் சில பின்வருமாறு :

(i) பாரத கனரக மின்மயங்கள் உற்பத்தி நிறுவனம்.
(ii) கனரகப் பொறியியற் கூட்டுரு.
(iii) சுரங்கத்தொழில், துணைத்தொழிற்கருவிகள் கூட்டுரு.
(iv) இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள்.
(v) பாரத கனரகத் தகடு, கொதிகலன்கள்.
(vi) திரிவேணி கட்டுமான அமைப்புகள்.

ஆரம்பத்திலிருந்தே கனரகத் தொழில், ஏற்கெனவே இருக்கக்கூடிய உற்பத்தித் திறனைப் பயன்படுத்தவேண்டுமென்றும், அல்லது குறைந்த அளவு இயந்திரக் கருவிகளையே வாங்கி நடத்தப்படாத நிறுவனங்களில் முழு உற்பத்தித் திறனைப் பயன்படுத்தவேண்டுமென்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த இலட்சியத்தை அடைவதற்காக அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டது. பல கனரகத் தொழிலமைப்புகள் பொதுத்துறையில் அமைக்கப்பட்டன. அவைகளில் முக்கியமானவற்றை மேலே கண்டோம்.

நிறுவனங்களில் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில் திறமையாகச் செயல்படவேண்டுமென்றும், உற்பத்திச் செல

வைக் கணிசமாகக் குறைக்கும்படியும் அரசு வற்புறுத்தும். அதே நேரத்தில், நிதிவசதி, பொருள்களின் விலை, மேல் ஊதியம் போன்ற நடைமுறை முடிவுகளில் தன்னுட்சியுரிமையும் அளிக்கப் பட்டது. பொதுத்துறை நிறுவனங்களில், நிருவாக அமைப்பைத் தொழில்நுட்ப அடிப்படையில் அமைக்கவும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டன. அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன. இதனால் நல்ல பல பயன்கள் ஏற்பட்டன. 1971-'72-ல் ரூ. 208 கோடி யாக இருந்த உற்பத்தி அளவு, 1973-'74-ல் ரூ. 409 கோடிக்கு உயர்ந்தது. 1974-'75-ல் இந்த அளவு மேலும் உயர்ந்து ரூ. 557 கோடியாக ஆயிற்று. 1972-'73-ல் மட்டும் ரூ. 13 கோடி நட்டத்திலிருந்த பொதுத்துறை, 1974-'75-ல் ரூ. 31 கோடி இலாப மீட்டியது. கனரகத் தொழிலில், மொத்த உற்பத்தி அளவை 1974-'75-ல் ரூ. 725 கோடிக்கு நிர்ணயித்துள்ளது. அவசர நிலைக்குப் பின் ஏற்பட்டுள்ள கட்டுப்பாட்டைப் பயன படுத்தி, இந்த உற்பத்தி இலக்கை ரூ. 800 கோடியாக உயர்த்தவும் நிறுவனங்கள் முடிவுசெய்துள்ளன.

இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்குக் கனரகத் தொழில் கள் கொடுக்கும் ஆதரவு மிகவும் முக்கியமானது. படிப்படியாக, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் இயந்திரங் களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டு வெளிநாட்டுச் செலாவணி மிச்சப்படுத்தப்படும். இன்னும் ஒரு சில ஆண்டுகளில், கனரகத் தொழிலில் நமது நாடு சுயச்சார்பு பெற்றுவிடும் என்பதில் ஐயமில்லை.

மின்னணுச் சாதனங்கள் உற்பத்தியில் பொதுத்துறையின் சாதனைகள் (Achievements of Public Sector in Electronics)

இன்று பாதுகாப்பு, போக்குவரத்து, வாணிகம், மருத்துவம், அனல் மின்சக்தி, விண்வெளி ஆராய்ச்சி ஆகிய துறைகளில் மின்னணுக் கருவிகள் (Electronic Equipments) முக்கியப் பங்கை வகிக்கின்றன. பாதுகாப்புத் தேவைகளுக்கான ராடார், நவீன செய்தித் தொடர்பு போன்ற மின்மியக் கருவிகள் இப்போது நமது நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றன.

தொழில்துறை மின்னணுச் சாதனங்கள் ஆராய்ச்சியில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் மிக முக்கியமான பங்கை வகித்து வருகின்றன. பொதுக் கூட்டுரு முறையிலமைந்த நிறுவனங்களும், துறைவழி நிருவாக அமைப்பு முறையிலமைந்த நிறுவனங்களும் சேர்ந்து, மொத்த மின்மயங்கள் உற்பத்தியில் 50 சதவீதத்திற்கு மேல் உற்பத்தி செய்து வருகின்றன.

நாட்டின் செய்தித் தொடர்பு சாதனங்கள், மற்றக் கருவிகள் ஆகியவற்றின் உற்பத்தி, உள்நாட்டுத் தொழில் நுட்பத்தைக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. செய்திப் போக்குவரத்து மின்மய சாதனங்கள் அனைத்தும், 'இந்தியத் தொலைபேசிக் கருவிகள் நிறுவனம்', 'பாரத மின்மயங்கள் நிறுவனம்' ஆகிய இரண்டு பொதுத்துறை நிறுவனங்களாலும் உற்பத்தி செய்யப் படுகின்றன. வெளிநாட்டிற்கும் இக் கருவிகளும், சாதனங்களும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. 1974-'75-ல் இவ்விரண்டு நிறுவனங்களின் உற்பத்தி அளவு முறையே ரூ. 60 கோடி, ரூ. 54 கோடியாக இருந்தது. தற்சார்பு பெறுவதற்காக 'இந்திய மின் மயங்கள் கூட்டுறு' அமைக்கப்பட்டது. (E. C. I. L.) இப் பொதுத் துறை நிறுவனம் உள்நாட்டுத் தொழில்நுட்பத்தை அடிப்படை யாகக்கொண்டே உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. 1967ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட இந் நிறுவனம், ஒரு சில ஆண்டு களில் 30 சதவீத உற்பத்தியை ஏற்படுத்தியது. 1974-'75ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி ரூ. 20 கோடியாக இருந்தது. இந்தியத் தந்தி-தட்டெழுத்துப் பொறிகள் நிறுவனமும், மற்ற நிறுவனங் களும் இத் தொழில் வளர்ச்சிக்குக் கணிசமாக உதவியுள்ளன. இந் நிறுவனங்கள் அதிக அளவில் மின்மயங்கள் கருவிகளை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து, வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுகின்றன. 1968-ல் மின்மயங்களின் ஏற்றுமதி ரூ. 3 கோடி யாக இருந்தது; அது 1974-'75-ல் ரூ. 9·26 கோடியாக உயர்ந் துள்ளது. வானொலி மற்றும் டெலிவிஷன் பெட்டிகள், தகவல் ஆராயும் கருவிகள், தகவல் தொடர்புக் கருவிகள் போன்றவை அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அடுத்த 5 ஆண்டு களில், ரூ.17 கோடி மதிப்புள்ள ராடார் சாதனங்களை ஏற்றுமதி செய்வதற்கான ஒப்பந்தம் ஒன்றை, பாரத மின்னணுச் சாதனங் கள் உற்பத்தி நிறுவனம் ஏற்றுக்கொண்டுள்ளது பாராட்டுதற் குரிய சாதனையாகும். மேலும், தென் ஆப்பிரிக்கா போன்ற நாடு களுக்குத் தொலைபேசி மாற்ற அமைப்புகளை ஏற்றுமதி செய்ய, இந்தியத் தொலைபேசி உற்பத்தி நிறுவனம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. இவ்வாறு நாட்டின் மின்மயங்கள் தொழில், தற்போது தற்சார்பு நிலையை நோக்கி விரைவாக முன்னேறிக் கொண்டிருக்கிறது; அதில் பொதுத்துறை பெரும்பங்கை வகிக் கிறது.

எண்ணெய் வளத்தில் ஆராய்ச்சிப் பணி

நமது நாட்டிலுள்ள தொழிற்சாலைகளுக்கும், மற்றப் போக்கு வரத்து வாகனங்களுக்கும் அதிக அளவில், பெட்ரோல், டீசல் எண்ணெய் முதலியவைகளும், மற்றப் பெட்ரோலியப் பொருள்

களும் தேவைப்படுகின்றன. நாட்டுத் தேவையின் பெரும்பான்மையான பெட்ரோலியப் பொருள்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன. இதனுல் அதிக அளவில் வெளிநாட்டுச் செலாவணி தேவைப்படுகிறது. எனவே, ஓரளவிற்காவது நாம் பெட்ரோலியப் பொருள்களின் உற்பத்தியை அதிகப்படுத்துவது அவசியமாகிறது. புதிய எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்படுவதற்குத் தொடர்ச்சியாக ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளவேண்டும். இப் பணியைச் செம்மையான முறையில் செய்து வருகிறது. பொதுத்துறை அமைப்பான 'இந்திய எண்ணெய், இயற்கை வாயுக் கூட்டுரு' (O. N. G. C.). இதன் தலையாய சாதனையாக பம்பாய் கடற்கரையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள எண்ணெய்க் கிணறுகளைக் கூறலாம். நிலத்திற்கடியில் கிடைப்பதைவிட, கடல் நீருக்கடியில் அதிக எண்ணெய் ஊற்றுகள் இருப்பது இந் நிறுவனத்தால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பம்பாய் கடல் பகுதியிலும், கட்சத் தீவுகள், வங்காளம், காவேரி டெல்டா பகுதிகளிலும் எண்ணெய்க் கிணறுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பம்பாய் கடல் பகுதியில் (Bombay High) நமது நாட்டின் தேவையைக் கணிசமான அளவில் பூர்த்திசெய்யக்கூடிய எண்ணெய்க் கிடைக்குமென நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. 1975ஆம் ஆண்டில், ஏப்ரல் மாதத்தில் பாரதப் பிரதமர் திருமதி. இந்திரா காந்தி, பம்பாய் கடற்கரையில் நான்காவது எண்ணெய்க் கிணற்றில் உற்பத்தி ஆராய்வைத் தொடங்கி வைத்தார். இதுவரை, பம்பாய் கடற்பகுதியில் 10 எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 1976ஆம் ஆண்டில், இங்கு 2 மில்லியன் டன் குருடாயில் எண்ணெய் உற்பத்தி செய்யப்படும் என்றும், இது 1980ஆம் ஆண்டில் 10 மில்லியன் டன் அளவில் அதிகரிக்கும் எனவும், இந்திய எண்ணெய், இயற்கை வாயுக் கூட்டுரு மதிப்பிட்டுள்ளது. இப் பணியை மேற்கொள்ளவென, இக் கூட்டுரு அமெரிக்க நிறுவனமொன்ருல் தயாரிக்கப்பட்ட 'சாகர் சாம்ராட்' (Sagar Samrat) என்ற விலை உயர்ந்த கப்பலைப் பயன்படுத்தி வருகிறது. மேலும், இக் கூட்டுரு காவேரி ஆற்றுப் படுகைகளில் எண்ணெய் ஆராய்ச்சியை மேற்கொள்ள, 'அன்வேஷாக்' (Anveshak) என்ற நவீன கப்பலையும் பயன்படுத்தி வருகிறது.

பம்பாய் கடற்பகுதியில், எண்ணெய் உற்பத்தி செய்யும் வேலை வெற்றிகரமாக நடந்துவிட்டால், நாம் எண்ணெய் உற்பத்தியில் தன்னிறைவு பெறமுடியும் என உறுதியாக

நம்பலாம். இவ் வெற்றி, பொதுத்துறையின் மணிமகுடத்தில் மற்றொரு வைரக்கல்லாக ஒளிவிடும் என்பதில் ஐயமில்லை.

பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் உச்ச எல்லையைக் கடந்த இலாபங்கள்

நமது நாட்டில், தனியார்துறைத் தொழிலமைப்புகளோடு போட்டியிட்டு, அதிக இலாபத்தை அடைகிற வகையில் பொதுத் துறை நிறுவனங்கள் தழைத்து வருகின்றன. பொதுத்துறை என்றாலே, இலாபமீட்டும் திறன் ஏற்படாது என்ற தவறான கருத்து பரவலாக நிலவி வந்தது. அக் கருத்தைத் தவறெனஎடுத்துக்காட்டும் வகையில், இற்றைய நாட்களில் பொதுத்துறை உச்ச எல்லையைக் கடந்த இலாபத்தை ஈட்டியுள்ளது.

1974-'75ஆம் ஆண்டில் ரூ. 313 கோடியாக இருந்த பொதுத் துறைத் தொழிலமைப்புகளின் இலாபம், 1975-'76-ல் ரூ. 350 கோடியாக இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இத் தகவலை சமீபத்தில் புதுடில்லியில் நடைபெற்ற பத்திரிகையாளர் கருத் தரங்கில், 'பொதுத்துறைத் தொழில்களின் புள்ளி விவரச் சேகரப் பணியகத்'தின் (Bureau of Public Enterprises) தலைமை இயக்குநர் (Director-General) டாக்டர் அஜித் மஜூம்தார் (Dr. Ajit Mazoomdar) அறிவித்தார்.

1974-'75ஆம் ஆண்டின் மத்தியப் பொதுத்துறைத் தொழி லமைப்புகளின் ஆண்டறிக்கையில் (The Annual Report of the Central Public Sector Enterprises) பல முக்கியக் கருத்துகளும் காணப்பட்டன. ஏறத்தாழ அனைத்துப் பொதுத்துறை நிறுவனங் களும் 45 சதவீதத்திலிருந்து 54 சதவீதம் உற்பத்தித் திறனைப் பெற்றுள்ளன. அவைகளின் நிகர இலாபத் திறனும் கணிசமான அளவில் அதிகரித்துள்ளது. இரும்பு, ஈயம், மங்கனீயம், எண்ணெய், மருந்துகள், உரம், இயந்திரக் கருவிகள், புகைப் படச்சுருள், கனரக மின்சாதனங்கள் போன்ற பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நடவடிக்கைகளில் முந்தைய ஆண்டை விட முன்னேற்றம் காணப்பட்டது. பொதுத்துறைத் தொழில் களின் மொத்த உற்பத்தி 1973-'74-ல் ரூ. 6,795 கோடியாக இருந்தது; 1974-'75-ல் இது 9,980 கோடி ரூபாயாக உயர்ந் துள்ளது.

குறிப்பாக, கனரகத் தொழில் அமைச்சகத்தின்கீழ் நடை பெறும் 15 பொதுத்துறைத் தொழிலமைப்புகள், எதிர் பார்த்ததைவிட அதிக அளவில் இலாபமீட்டியுள்ளன. இதனால் ஊக்கமடைந்த இவ்வமைச்சகம், 1976-'77ஆம் ஆண்டில்

முன்பு ரூ. 777 கோடியாக இருந்த மதிப்பீட்டை ரூ. 850 கோடியாக உயர்த்தியுள்ளது.

இதில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது, முதன் முறையாக ரூ. 25 இலட்சம் இலாபத்தைக் கனரகப் பொறியியற் கூட்டுரு ஈட்டியுள்ளதாகும். அதுபோலவே, இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் உற்பத்தி நிறுவனத்தின் காலமசேரி நிலையம் சென்ற ஆண்டு வரை நட்டத்தில் நடந்து வந்தது; ஆனால் 1974-'75-ல் அதன் உற்பத்தி 55% அதிகரித்துள்ளது. வேறு பல பொதுத் துறைத் தொழிலமைப்புகளும் பாராட்டத்தக்க வகையில் இலாபமீட்டியுள்ளன. எடுத்துக்காட்டாகக் கீழ்வருபவைகளைக் கூறலாம்.

(i) இந்திய மருந்துகள் மற்றும் மருந்து வழங்கீடுகள் நிறுவனம் (ஐ. டி. பி. எல்) 1974-'75-ல் ரூ. 2·50 கோடி நிகர இலாபம் ஈட்டியுள்ளது.

(ii) இந்தியத்தொலைபேசி உற்பத்தி நிறுவனம், 1974-'75-ல் ரூ. 8·65 கோடி மொத்த இலாபத்தையும், ரூ. 63·51 கோடி விற்பனைப் புரள்வையும் ஏற்படுத்தியுள்ளது.

(iii) சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலை (மணலி) 1974-'75-ல் ரூ. 200 கோடி வாணிகப் புரள்வை ஏற்படுத்தியுள்ளது.

வரப்போகும் ஆண்டுகளில், இன்னும் பல பொதுத்துறை நிறுவனங்கள் இலாபமீட்டக்கூடிய வகையில் செயற்படும் என நம்பிக்கையுடன் எதிர்பார்க்கப்படுகிறது.

14. பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செயல்முறைகளில் உள்ள குறைபாடுகளும், அவற்றை நீக்கும் வழிமுறைகளும்

செயல்முறைகளில் உள்ள குறைபாடுகள்

நாம் முன் பகுதியில் கண்டவாறு, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இலாபமீட்டி, திறமையுடன் நடைபெற்றபோதிலும், அவைகளின் செயல்முறைகளிலும், நிருவாகத்திலும் பல குறைபாடுகள் தோன்றுகின்றன. அவைகளைச் சுருக்கமாகப் பின் வருமாறு காண்போம்.

1. குறைபாடுள்ள உற்பத்தித் திட்டங்கள்

திட்டங்களின் வகை செய்யப்பட்ட குறியிலக்குகளை அடைவது பொதுத்துறைத் தொழிலமைப்பின் நோக்கங்களுள் ஒன்றாகும். குறிப்பிட்ட காலத்தில் பொருள்கள், இயந்திரங்கள், கருவிகள் ஆகியவைகளை அவைகள் வழங்கவேண்டுமென எதிர் பார்க்கப்படுகிறது. ஆனால், பல பொதுத்துறைத் தொழிலமைப்புகள் உற்பத்திச் செயல் நிரல்களைப் பின்பற்றுவதில்லை. இதற்கு முக்கியக் காரணம், ஒழுங்கற்ற முறையிலும், செயல்படுத்தப்பட முடியாத வகையிலும் குறியிலக்குகள் நிர்ணயிக்கப்படுவதும், குறைபாடுள்ள உற்பத்தித் திட்டங்கள் உருவாக்கப்படுவது மாகும். சில நேரங்களில் குறியிலக்குகள் உயர்ந்தபட்ச அளவிலும் அல்லது மிகக் குறைந்த அளவிலும் தீர்மானிக்கப் படுகின்றன. தொழிலமைப்பின் உற்பத்தித் திறனுக்கேற்றவாறு உற்பத்தித் திட்டங்கள் தயாரிக்கப்படுவதில்லை. இதனால் சில நேரங்களில் உற்பத்தித் திட்டத்தைத் தாண்டுகிறது அல்லது திட்டத்தைவிட வெகுவாகக் குறைந்து விடுகிறது. திறன் முழுவதும் உபயோகிக்கப்படாவிடில் திறமையின்மையும், தேவையற்ற செலவுகளும் ஏற்படும்.

2. திட்டங்களைச் செயற்படுத்துவதில் தாமதம்

பல சமயங்களில் பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் திட்டங்கள் செயற்படுத்தப்படுவதில் தாமதமேற்படுகிறது. அதனால் பொருளாதார முன்னேற்றம் திட்டமிட்டபடி ஏற்படுவதில்லை. அதிக அளவிலான மூலதனம் பயன்படுத்தப்படாமல் தேக்கமடைகிறது.

3. மிகுதியான மூலதனம் (Over Capitalisation)

பல தொழிலமைப்புகள், தேவைக்கதிகமான மூலதனத்தைப் பெற்றுள்ளன. மூலதனச் செலவுகள் நியாயமற்ற முறையிலும், உற்பத்தித் திறனுக்குப் பொருந்தா வகையிலும் மேற்கொள்ளப் படுகின்றன. இந்துஸ்தான் இரும்பு நிறுமம், கனரகப் பொறியியற் கூட்டுரு, கனரக மின்சாதனங்கள், உரக் கூட்டுரு போன்ற பொதுத்துறை நிறுவனங்கள் தேவைக்கு மிகுதியான மூலதனத்தைக் கொண்டுள்ளன. இதனால் அதிக அளவில் நட்டங்கள் ஏற்பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. தவறான திட்டங்கள், கச்சாப்பொருள்கள் வாங்குவதில் போட்டியின்மை, விலைமதிப்புள்ள ஒப்பந்தங்கள், மோசமான தொழிற்சாலை இடவமைப்பு, திட்டங்களைச் செயற்படுத்துவதில் தாமதம் போன்ற காரணங்களால் மிகுதியான மூலதனம் ஏற்படுகிறது.

4. வரம்புமீறிய மேற்செலவுகள் (Extravagant Over-head Costs)

உற்பத்திக்குப் பயன்படாத நிருவாகச் செலவுகள், கட்டிடங்கள், விருந்தினர் விடுதிகள், வீடு வசதிகள், நகரமைப்புத் திட்டங்கள் போன்ற செலவுகள் வரம்புமீறி அமைவது நமது நாட்டுப் பொதுத்துறையில் அதிக அளவில் காணப்படும் ஒரு குறைபாடாகும்.

5. மிகுதியான பணியாளர்கள் நியமிக்கப்படுதல்

தேவையான பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்கள் சரியான முறையில் மதிப்பிடப்படாமையால் பல பொதுத் துறை நிறுவனங்களில் வரம்புமீறிய அளவில் பணியாளர்கள் நியமிக்கப்படுகின்றனர். இதனால், நடைமுறைச் செலவுகள் அதிகமாகி, பொருள்களின் அடக்க விலையும் அதிகரித்து விடுகிறது.

6. குறைபாடுள்ள ஆளினக் கோட்பாடு (Defective Perssonel Policy)

பொதுத்துறைத் தொழிலமைப்புகளில், மாறுதல்களுக்கேற்ப ஆளினக் கோட்பாடு அமைவதில்லை. பணியாளர்களைத் தேர்ந்

தெடுக்கும் முறையும், அவர்களின் பயிற்சி முறையும் தனியார் துறையிலுள்ளது போல் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கவில்லை. போதிய தொழில் அனுபவம், திறமை, ஊக்கம் ஆகிய தகுதிகளைக் கொண்ட அதிகாரிகள் உயர்நிலைப் பதவிகளில் நியமிக்கப்படுவதில்லை. மற்றப் பணியாளர்கள் நியமிக்கப்படும் முறைகளும் பழைமையானதாகவும், குறைபாடுகள் கொண்டதாகவும் இருக்கின்றன; மேலும், பாரபட்சம் காட்டப்படுதல், விருப்பு - வெறுப்புகளைச் செயற்படுத்தல் போன்ற குறைபாடுகளும் உள்ளன.

7. தொழிலுறவு சுமூகமாக அமையாமை

தனியார்துறைத் தொழிலமைப்புகளில் உள்ளதுபோல், பொதுத்துறையில் தொழிலாளர்கள் - நிருவாகத்தினர் உறவு சுமூகமாக அமைவதில்லை. இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் போன்ற ஒரு சில பொதுத்துறை நிறுவனங்களைத் தவிர, மற்ற நிறுவனங்களில் அடிக்கடி தொழில் தகராறுகளும், வேலை நிறுத்தம், கதவடைப்பு போன்ற அமைதியின்மை நடவடிக்கைகளும் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுகிறது. இதனால் உற்பத்தி வெகுவாகப் பாதிக்கப்படுகிறது.

8. விலைக் கோட்பாடு

பல சந்தர்ப்பங்களில், பொதுத்துறையின் விலைக் கொள்கை நுகர்வோர் நலனைக் காக்கும் வகையில் தீர்மானிக்கப்படுவதில்லை. உற்பத்தி நடவடிக்கைகளில் போதிய கட்டுப்பாடுகள் பின்பற்றப்படாததால், அடக்கச் செலவு அதிகரித்து, பொருள்களின் விலைகளும் உயர்ந்து விடுகின்றன. இதனால் நுகர்வோர் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எடுத்துக்காட்டாக, ரெயில் துறை, தபால் - தந்தித் துறை போன்ற பொதுப்பயன் நிறுவனங்களின் விலைகளையும், பணிக் கட்டணங்களையும் உயர்த்திக் கொண்டே செல்வதைக் குறிப்பிடலாம்.

9. மூலதனத்தின்மீது போதிய மீள்வரவின்மை (No Adequate Return on Capital)

பேரளவு மூலதனம் வழங்கப்பட்டும்கூட, பல பொதுத்துறை நிறுவனங்கள் போதுமான வருவாயை ஈட்டத் தவறி விடுகின்றன. இதனால் அரசின் வருவாய் பெருமளவில் குறைந்துவிடுகிறது. மேலும், விலைகள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றவே தவிர, நட்டம் தவிர்க்கப்படுவதில்லை.

10. அமைப்பு முறை

இயக்குநரவைகளின் அமைப்பு முறைகளில் பல செயல் முறைக் குறைபாடுகள் ஏற்படுகின்றன. மேலாண்மை இயக்குநரும், மற்ற இயக்குநர்களும் அரசால் நியமிக்கப்படுகின்றனர்; ஆனால், இவர்களில் பெரும்பாலான அதிகாரிகள் எவ்வித நிருவாகத் திறமையும், போதிய ஆர்வமுமின்றிச் செயற்படுகின்றனர். மேலும், தன்னாட்சியுரிமை கொள்கையளவில்தான் பின்பற்றப்படுகிறதேயன்றி நடைமுறையிலில்லை. இதனால், திறமையுடன் பணிபுரியக்கூடிய ஒரு சில இயக்குநர்களும், அரசின் வரம்புமீறிய குறுக்கீட்டால் ஆர்வமிழக்கின்றனர். அமைச்சர்களின் ஆணைகளை நிறைவேற்றவும், அவர்களின் அதிகாரத்திற்குட்பட்டுச் செயல்படுவதற்குமே இவர்களுக்கு வழக்கமான பணியாகி விடுகிறது.

11. தீவிரமில்லா நாடாளுமன்றக் கட்டுப்பாடு

கொள்கையளவில், பொதுத்துறைத் தொழிலமைப்புகள் பொதுப் பொறுப்புடைமையைப் பெற்றிருந்தாலும், நடைமுறையில் நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு பணிபுரிவதில்லை. தன்னாட்சியுரிமை என்பது அன்றாட அலுவல்களிலும், நிருவாகச் செயல்முறைகளிலும்தான் ஏற்படவேண்டுமே தவிர, தொழிலமைப்புகள், நாடாளுமன்றத்தின் கட்டுப்பாட்டில் செயற்படுவது இன்றியமையாததாகும். ஆனால், நமது நாட்டில் பொதுத்துறையின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த போதிய அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்படவில்லை. பல சந்தர்ப்பங்களில் பொதுத்துறையின் நட்டம், தேவையற்ற செலவுகள், கொள்கை மாற்றங்கள் போன்றவை நாடாளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்படாமல் மறைக்கப்பட்டுள்ளன.

குறைபாடுகளை நீக்கும் வழிமுறைகள்

மேற்கண்ட பகுதிகளில், பொதுத்துறையைப் பற்றிய விவரங்கள் பலவற்றை ஆராய்ந்தோம். அதன் அடிப்படையில், நாம் இரு நியாயமான, வெளிப்படையான கருத்துகளைக் கூறலாம். அவையாவன:

(i) சில பொதுத்துறைத் தொழிலமைப்புகள் திறமையுடன் நிருவகிக்கப்பட்டு, தனியார்துறையுடன் ஒப்பிட்டுக் கூறும் அளவில் செயற்படுகின்றன.

(ii) பல பொதுத்துறைத் தொழிலமைப்புகள், போதிய திறமையுடனும், பொறுப்புடனும் நிருவகிக்கப்படுவ

தில்லை. பல்வேறு காரணங்களால் உற்பத்தித் திறனில் 50 சதவீதத்தைத்தான் பயன்படுத்துகின்றன. அவைகளில் பல, தொடர்ந்து நட்டத்தில் நடைபெற்று வருகின்றன.

இதற்கு முக்கியக் காரணம் நாம் மேலே கண்ட குறைபாடுகளேயாகும். எனவே, தகுந்த வழிமுறைகளை மேற்கொள்வதன் மூலமாக இக் குறைபாடுகளை அகற்றமுடியும் என்பதும், நட்டத்தில் நடைபெறும் தொழிலமைப்புகளை, சீரான வளர்ச்சியுறுமாறும், இலாபத் திறன் கொண்டதாகவும் மாற்றமுடியுமென்பதும் தெளிவாகிறது. அவ் வழிமுறைகளைப் பற்றிச் சிறிது காண்போம்.

(1) பொதுத்துறைத் தொழில்கள், வாணிகஞ் சார்ந்த கொள்கைகளுடன்தான் செயற்படவேண்டுமெனக் கட்டாயப் படுத்தப்படவேண்டும். இவ் வாணிகக் கொள்கை, பொதுத் துறையின் நடவடிக்கைகளை நியாயமான முறையில் கணக்கிடக் கூடிய, அளவுகோலாக நிர்ணயிக்கப்படலாம். தேவைகளும், தேவை நெகிழ்ச்சிகளும் ஊகத்துடன் கணிக்கப்படவேண்டும்; உற்பத்தித் திட்டம் தொழிலின் உற்பத்தித் திறனுக்கேற்றவாறும், தேவைக்கேற்றவாறும் அமையவேண்டும். ஆய்வறிவு சார்ந்த மேலாண்மையின் பண்புக் கூறுகளாகிய, திட்டமிடுதல், நேரம் நிர்ணயித்தல், அடக்க விலைக் கட்டுப்பாடு, வரவு-செலவுத் திட்டக் கட்டுப்பாடு ஆகியவை அறிமுகப்படுத்தப்படவேண்டும்.

(2) பொதுத்துறையின் தன்னாட்சியுரிமைக் கொள்கைக்குத் தகுந்த மதிப்பு கொடுக்கப்படவேண்டும். தீரமான முடிவுகள், திறமையான நிருவாகம் போன்றவைகளுக்கு ஊக்கத் திட்டங்கள் ஏற்படுத்தப்படவேண்டும். அரசின் குறுக்கீடுகள் தவிர்க்கப் படவேண்டும். இயக்குநர்களுக்கு உடனுக்குடன் முடிவுகளை மேற் கொள்ளும் அதிகாரம் வழங்கப்படவேண்டும்.

(3) தொழிலில் போதிய அனுபவத் திறமை, ஆர்வம், விரைவான முடிவுகளை மேற்கொள்ளும் பொது அறிவு போன்ற தகுதிகள் நிறைந்த அதிகாரிகளே இயக்குநர்களாகவும், உயர் நிலைப் பதவிகளிலும் நியமிக்கப்படவேண்டும்.

(4) தொழிலாளர் நலத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் முன் மாதிரியாக இயங்கவேண்டும். மேலாண்மையில் தொழிலாளருக்குப் பங்கு, முடிவுகள் மேற்கொள்ளப்படுவதில் தொழிலாளர்களுடன்

ஆலோசனை, நியாயமான ஊதியங்கள், இலாபத்தில் பங்களித்தல், மேல் ஊதியம் வழங்குதல் போன்ற நவீனத் திட்டங்களைப் பொதுத்துறை செயற்படுத்தவேண்டும். இதன்மூலமாகத் தொழிலுறவு சீர்ப்பட வாய்ப்புகள் ஏற்படும்.

(5) நுகர்வோர் நலன் பாதிக்கப்படாத வகையில் திறமை அதிகரிக்கப்பட்டு, அடக்கச் செலவுக் கட்டுப்பாடு, ஆக்கக் கூறுகளின் கட்டுப்பாடு ஆகியவைகளின் மூலமாக வருமானம் உயர வழிவகுக்கவேண்டும். இதனால், அரசிற்குப் போதிய வருமானமும், தொழிலமைப்பிற்கு மிகுதியான ஊக்கமும் ஏற்படும்.

(6) பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் செயல்விளைவுகள் நாடாளுமன்றம் அல்லது அதனால் அமைக்கப்படும் குழுக்களால் ஆராயப்படவேண்டும். பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் நிதி நடவடிக்கைகள், செலவுகளின் ஒழுங்குமுறைமை, நியாயமான அடக்கச் செலவுகள், பணிகளின் தன்மை, பொறுப்புகளின் தரம் ஆகியவை நாடாளுமன்றத்தின் தொடர்ச்சியான கவனக் கண்காணிப்பிற்குட்பட்டு மேற்கொள்ளப்படவேண்டும்.

கடின உழைப்பு — கட்டுப்பாடு — தெளிந்த கண்ணோட்டம் — திடசிந்தனை — இவையே நம் நாட்டினை உயர்த்தும் கோட்பாடுகள் என்றார் நம் பாரதப் பிரதமர் திருமதி. இந்திராகாந்தி அவர்கள். இக் கோட்பாடுகளின் அடிப்படையில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் செயற்பட்டால், கோடி கோடி மக்களுக்கு நன்மைகள் பலவற்றை நல்கமுடியும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

பிற்சேர்க்கை

அட்டவணை - 1

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத்துறையின் முதலீடுகள்

பல்வேறு துறைகளின் தலைப்பு	முதலீடு (ரூபாய் கோடியில்)
(1) விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புற்றவைகள்	2,728
(2) நீர்ப்பாசனம், மற்றும் வெள்ளக் கட்டுப்பாடு	1,087
(3) மின்சாரம்	2,448
(4) கிராம மற்றும் சிறுதொழில்கள்	293
(5) உற்பத்தி, கனிப் பொருள்கள்	3,338
(6) போக்குவரத்து, செய்தித் தொடர்பு முதலியன	3,237
(7) கல்வி வளர்ச்சி	823
(8) விஞ்ஞான ஆராய்ச்சி	140
(9) நல்வாழ்வுத் துறை	434
(10) குடும்பக் கட்டுப்பாடு	315
(11) குடிநீர் வழங்கல்	407
(12) நகர்ப்புறக் குடியிருப்பு முன்னேற்றம்	237
(13) சமூக நலம்	41
(14) பின்தங்கிய வகுப்பைச் சார்ந்தவர்கள் முன்னேற்றம்	142
(15) தொழிலாளர் நலன் மற்றும் பயிற்சி	40
(16) மற்றத் திட்டங்கள்	192
கூடுதல்	15,902

(Source : Fourth Five Year Plan – Summary)

அட்டவணை – 2

ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பொதுத்துறையின் முதலீடுகள்

(ரூபாய் கோடியில்)

பல்வேறு துறைகளின் தலைப்பு	திட்ட முதலீடு	கூடுதலில் சதவீதம்
(1) விவசாயம்	4,730	20·1
(2) நீர்ப்பாசனம்	2,681	—
(3) மின்சாரம்	6,190	16·3
(4) சுரங்கத் தொழில், உற்பத்தித் தொழில் முதலியன	8,939	24·0
(5) கட்டுமானப் பணிகள்	25	0·1
(6) போக்குவரத்து, செய்தித் தொடர்பு முதலியன	7,115	19·2
(7) வாணிகம்	205	0·6
(8) குடியிருப்பு வசதி மற்றும் மனைகள் அபிவிருத்தி	600	1·6
(9) வங்கி, காப்பீடு முதலிய தொழில்கள்	90	0·2
(10) பொது நிருவாகம், பாதுகாப்பு முதலியன	98	0·3
(11) மற்றவகைப் பணிகள்		
(i) கல்வி வளர்ச்சி	1,726	4·6
(ii) விஞ்ஞான ஆராய்ச்சி	419	1·1
(iii) நல்வாழ்வு	796	2·1
(iv) குடும்பக் கட்டுப்பாடு	516	1·4
(v) சத்துணவுத் திட்டம்	400	1·1
(vi) நகர்ப்புற முன்னேற்றம்	543	1·5
(vii) குடிநீர் வழங்கல்	1,022	2·8
(viii) சமூக நலம்	229	0·6
(ix) பின்தங்கிய வகுப்பு முன்னேற்றம்	226	0·6
(x) தொழிலாளர் நலம்	57	0·1
(xi) மற்ற வகைப் பணிகள்	275	0·7
(12) மலைவாசிகள் ,ஆதிவாசிகள் முன்னேற்றம்	500	1·3
கூடுதல் ...	37,250	100·0

(Source : Yojana, December, 1973)

அட்டவணை - 3

மாநிலங்களின் அடிப்படையில் பொதுத்துறையின் முதலீடு- மார்ச் 1969-ல் இருந்தபடி.

(ரூபாய் கோடியில்)

மாநிலங்கள்	முதலீடு மார்ச், 1969 முடிய	மொத்த முதலீட்டில் சதவீதம்	1969-'74ல் முதலீடுகளின் திட்டம்
(1) ஆந்திரப்பிரதேசம்	86·9	2·5	35·49
(2) அஸ்ஸாம்	64·1	1·9	26·46
(3) பீகார்	621·2	17·9	726·92
(4) குஜராத்	86·7	2·5	51·32
(5) கேரளா	101·4	2·9	49·62
(6) மத்தியப் பிரதேசம்	543·2	15·7	100·13
(7) மகாராஷ்டிரம்	100·9	2·9	135·00
(8) கர்நாடகம்	78·4	2·3	7·00
(9) ஒரிஸ்ஸா	423·2	12·2	4·6
(10) ஹரியானா	7·1	—	இல்லை
(11) பஞ்சாப்	34·7	—	இல்லை
(12) இராஜஸ்தான்	27·2	0·8	72·6
(13) உத்திரப்பிரதேசம்	137·0	4·0	22·11
(14) தமிழ்நாடு	262·2	7·6	36·41
(15) இமாச்சலப் பிரதேசம்	1·7	—	இல்லை
(16) மேற்கு வங்காளம்	411·4	11·9	38·58
(17) ஒதுக்கீடு செய்யப் படாத தொகை	—	—	826·20
கூடுதல் ...	3,463·1		

(Source : Commerce Year Book - 1972 - A Hand Book of Information in Public Enterprises)

அட்டவணை - 4

1951ஆம் ஆண்டிலிருந்து பொதுத்துறையின் வளர்ச்சி

முடிவுற்ற ஆண்டு	தொழிலமைப்புகளின் எண்ணிக்கை	முதலீடு செய்யப்பட்ட தொகை (ரூபாய் கோடியில்)
ஏப்ரல் 1, 1951	5	29
ஏப்ரல் 1, 1956	21	81
ஏப்ரல் 1, 1961	48	953
மார்ச் 31, 1966	74	2,415
மார்ச் 31, 1967	77	2,841
மார்ச் 31, 1968	83	3,333
மார்ச் 31, 1969	85	3,902
மார்ச் 31, 1972	101	5,052
மார்ச் 31, 1973	113	5,571
மார்ச் 31, 1974	120	5,750
மார்ச் 31, 1975	127	6,000

அட்டவணை – 5

நடவடிக்கைகளின் அடிப்படையில் பாகுபடுத்தப்பட்ட பொதுத் துறைத் தொழிலமைப்புகள் 31-3-1973-ல் இருந்தபடி

தொழிலமைப்பின் தன்மை	முதலீடு (ரூபாய் மில்லியனில்	விற்பனைப் புரள்வு ரூபாய் மில்லியனில்)	வேலை வாய்ப்பு
(1) கட்டுமான நிலையில் உள்ளத் தொழிலமைப்புகள்	1,128·5	—	3,649
(2) இரும்பு	18,399·2	6,046·4	1,49,692
(3) உலோகங்கள்	6,665·2	1,642·5	1,48,413
(4) பெட்ரோலியம்	3,783·5	12,034·1	38,522
(5) இரசாயனப் பொருள்கள்	6,491·4	2,025·0	51,868
(6) கனரகப் பொறியியல்	6,573·8	1,834·0	73,838

அட்டவணை (தொடர்ச்சி)

தொழிலமைப்பின் தன்மை	முதலீடு (ரூபாய் மில்லியனில்)	விற்பனைப் புரள்வு (ரூபாய் மில்லியனில்)	வேலை வாய்ப்பு
(7) மற்றவகைப் பொறியியல்	1,225·0	1,470·4	58,512
(8) போக்குவரத்துச் சாதனங்கள்	1,896·9	1,701·7	77,560
(9) நுகர்வோர் பொருள்கள்	484·3	221·9	9,887
(10) விவசாயக் கருவிகள்	79·9	68·1	4,042
(11) வாணிக மற்றும் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள்	2,925·8	21,734·9	59,596
(12) போக்குவரத்துப் பணிகள்	4,291·6	2,785·3	37,815
(13) ஒப்பந்தம் மற்றும் கட்டுமானப்பணிகள்	157·7	676·1	24,207
(14) தொழில் வளர்ச்சி மற்றும் தொழில் நுட்பப்பணிகள்	59·9	60.7	2,050
(15) சிறு தொழில் வளர்ச்சி	296·4	130·0	2,025
(16) சுற்றுலாப் பணிகள்	137·1	91·4	4,553
(17) நிதி நிறுவனங்கள்	582·4	58·2	420
(18) மறுசீரமைப்புப்பணிகள்	285·8	66·15	2,712
(19) காப்பீட்டுத்தொழில்	315·0	—	55,363
கூடுதல் ...	55,707·0	52,647·2	8,04,732

(Source: Public Enterprises in India - A Perspective View, Praxy Fernandes)

பொதுத்துறைத் தொழிலமைப்புகள் (பிற்சேர்க்கை)
சில சமீபத்திய புள்ளி விவரங்கள்-ஒரு கண்ணோட்டம்

1976-'77ஆம் ஆண்டில் பொதுத்துறைத் தொழிலமைப்புகள் மேலும் விரிவான முறையில் அமைக்கப்பட்டன. மத்திய அரசு தொடர்ந்து பொதுத்துறைத் தொழிலமைப்புகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருகின்றது. அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த தொழில்களான எரி எண்ணெய், இரும்பு, நிலக்கரி போன்றவைகளில் புதிய முதலீடுகள் மத்திய அரசால் செய்யப்பட்டுள்ளன.

கடந்த சில ஆண்டுகளில், பெரும்பான்மையான பொதுத்துறைத் தொழிலமைப்புகள் இலாபகரமாகவே இயங்கி வருகின்றன. 1976-'77ஆம் ஆண்டில் 92 பொதுத்துறைத் தொழிலமைப்புகள் ஈட்டியுள்ள மொத்த இலாபம் ரூ. 602 கோடியாகும். இவற்றில் இந்திய எண்ணெய்க் கூட்டுரு (Indian Oil Corporation) மட்டும் ரூ. 100 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. மற்றும், இரும்புத் தொழிலைச் சார்ந்த பொதுத்துறைத் தொழிலமைப்புகள் ரூ. 80 கோடி இலாபம் ஈட்டியுள்ளன. அதுபோலவே, பாரத் ஹெவி எலக்ட்ரானிக் நிறுவனம் (Bharat Heavy Electronics) ரூ. 60 கோடி இலாபமீட்டி ஒரு சாதனையைப் புரிந்துள்ளது.

இருந்தபோதிலும், உர உற்பத்தி, நிலக்கரி போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ள 43 பொதுத்துறைத் தொழிலமைப்புகள், 1976-'77ஆம் ஆண்டில் ரூ. 127 கோடி நட்டமடைந்துள்ளன. ஆனால், அனைத்துப் பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் இலாப – நட்டக் கணக்கைப் பார்க்கும்போது ரூ. 475 கோடி நிகர இலாபம் ஈட்டப்பட்டுள்ளது தெளிவாகும். அதாவது,

1976-'77 ஆம் ஆண்டில் 92 பொதுத்துறைத் தொழிலமைப்புகள் ஈட்டிய இலாபம்	ரூ. 602 கோடி
1976-'77ஆம் ஆண்டில் 43 பொதுத்துறைத் தொழிலமைப்புகள் அடைந்த நட்டம்	ரூ. 127 கோடி
எனவே நிகர இலாபம்	ரூ. 475 கோடி

மேலும், 1976-'77ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் தேதி முடிவில், பொதுத்துறைத் தொழிலமைப்புகளில் செய்யப்பட்ட

முதலீடு ரூ. 11,100 கோடியாகும். இது, முந்தைய ஆண்டுகளில் செய்யப்பட்ட முதலீடுகளைப்போன்று இரு மடங்காகும். கடந்த நான்கு ஆண்டுகளில் (1974 முதல் 1977 வரையில்) பொதுத் துறைத் தொழிலமைப்புகளின் உற்பத்தித் திறன் மூன்று மடங்காகவும், இலாபம் ஈட்டும் திறன் ஐந்து மடங்காகவும் உயர்ந்திருக்கின்றன. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில், பொதுத் துறைத் தொழிலமைப்புகள் அனைத்தும் சேர்ந்து ரூ. 1260 கோடியும், ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் ரூ. 1,825 கோடியும், உள்நாட்டு வகை வளமாக (Internal Resources) ஈட்டியுள்ளன.

இவ்வாறு, பலவகைப்பட்ட பொருள்களைத் திறமையுடன் உற்பத்தி செய்யும் நமது பொதுத்துறைத் தொழிலமைப்புகள், தற்போது தனியார்துறைத் தொழிலமைப்புகளுடன் உற்பத்தித் திறனிலும், இலாபமீட்டும் திறனிலும் போட்டியிடும் அளவிற்குச் சிறந்து செயற்பட்டு வருகின்றன. 1977ஆம் ஆண்டு இறுதியில் அறிவிக்கப்பட்ட, மத்திய அரசின் தொழிற் கொள்கையிலும் (Industrial Policy announced in December, 1977) பொதுத் துறைத் தொழிலமைப்புகள் அதி முக்கியப் பங்கு வகிக்கின்றன என்பது பாராட்டுதற்குரியதாகும். வரும் ஆண்டுகளில், நாட்டின் விரைவான பொருளாதார வளர்ச்சிக்கு, பொதுத்துறைத் தொழிலமைப்புகள் தம் சீரிய பணியைச் செம்மையாகப் புரிய வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

(Source : The Annual Report of the Bureau of Public Enterprises, 1976-'77)

மேற்கோள் நூற்பட்டியல்

(Bibliography)

(1)	Bhushan, Y. K.	—	Fundamentals of Business Organisation and Management
(2)	Davar, S. R.	—	Business Organisation and Industrial Management
(3)	Guptha, K. R.	—	Issues in Public Enterprises
(4)	Jaiswal, S. L.	—	The Public Sector in India
(5)	Keshava, G. P.	—	Readings in the Operational Problems of Public Enterprises
(6)	Kuchhal, S. C.	—	Financial Management
(7)	LaximiNarain	—	Efficiency Audit of Public Enterprises in India
(8)	Mallaya, N. N.	—	Public Enterprises in India
(9)	Mehta, V. D. and Maheshwari, P. D.	—	Public Undertaking and Labour in India
(10)	Nabagopal. Das	—	The Public Sector in India
(11)	Ramanadham, V. V.	—	The Structure of Public Enterprises in India
(12)	Satyanarayana, J.	—	Incentives and Productivity in Public Enterprises
(13)	Shukla, M. C.	—	Business Organisation and Management
(14)	Sinha, J. C. and Mugali, V. N.	—	Principles and practice of Business Organisation
(15)	Tandon, B. C.	—	Economic Planning

கலைச்சொற்கள்

A

Accountant — கணக்காயர்
Accountability — பொறுப்புடைமை
Administration — நிருவாகம்
Administrative Control — நிருவாகக் கட்டுப்பாடு
Administrative Reforms Commission — நிருவாக மறுசீரமைப்புக் குழு
Agent — முகவர்
Air Transport — வான்வழிப் போக்குவரத்து
Amalgamation — இணைப்பு, சேர்ப்பு
Analysis — பகுப்பாராய்ச்சி
Annual Report — ஆண்டறிக்கை
Anomaly — முரண்பாடு
Antibiotics — நோய்த்தடுப்பு மருந்துகள்
Auditor — தணிக்கையர்
Auditor General — தலைமைத் தணிக்கையர்
Audit Programme — தணிக்கைச் செயல்நிரல்
Audit Report — தணிக்கை அறிக்கை
Authorised Capital — அதிகாரம்பெற்ற முதல்
Authority — ஆணையுரிமை
Autonomy — தன்னாட்சியுரிமை
Average Policy — சராசரித் திட்டாவணம்

B

Backery Products — ரொட்டிப் பொருள்கள்
Bharat Electronics Corporation — பாரத மின்னணுச் சாதனங்கள் உற்பத்திக் கூட்டுரு
Bonded Ware-house — பிணையமீந்த பண்டகச் சாலை
Bonus — கொடையூதியம்
Budget — வரவு-செலவுத் திட்டம்
Buffer Stock — தாக்குதலைத் தாங்கும் சரக்கிருப்பு

Bureaucracy	—	அதிகார இனச் செயல்முறை
Business Organisation	—	தொழிலமைப்பு
Buyer	—	வாங்குநர்

C

Cable	—	கடல்தந்தி
Capital Formation	—	முதலாக்கம்
Capital Market	—	முதல்-சந்தை
Cash Credit	—	ரொக்கக் கடன்
Central Government	—	மத்திய அரசு
Central Advisory Council of Industries	—	மத்திய அறிவுரைத் தொழிற் குழு
Central Bank	—	மைய வங்கி
Chambal Control Board	—	சம்பல் கட்டுப்பாட்டுக் குழு
Chief Accountant	—	தலைமைக் கணக்காயர்
Circular	—	சுற்றறிக்கை
Collateral Security	—	துணைப் பிணையம்
Commission	—	ஆணைக்குழு
Committee	—	குழு
Communication	—	தொடர்புமுறை
Company	—	நிறுமம்
Complete Monopoly	—	முழு முற்றுரிமை
Confidential Report	—	இரகசிய அறிக்கை
Constituent	—	ஆக்கக்கூறு
Controller and Auditor-General of India	—	இந்திய தலைமைக் கணக்கு ஒழுங்குமுறைப்படுத்துநர் மற்றும் தணிக்கையர்
Co-ordination	—	ஒருமுகப்படுத்துதல்
Cost	—	அடக்கச் செலவு

D

Dairy	—	பால் பண்ணை
Damodar Valley Corporation	—	தாமோதர் பள்ளத்தாக்குக் கூட்டுரு
Debates	—	விவாதங்கள்
Decentralisation	—	பன்முகப்படுத்துதல்
Deflation	—	பணத்தளர்வு
Delegation	—	அதிகார ஒப்படைப்பு

Deputation	—	பகராண்மை
Deferred Payment	—	பின் செலுத்தம்
Definition	—	வரைவிலக்கணம்
Democratic Socialism	—	மக்களாட்சி சார்ந்த பொதுவுடைமை
Depreciation	—	தேய்மானம்
Design	—	வடிவமைப்பு
Development	—	மேம்பாடு
Direct Cost	—	நேர்முகச் செலவு
Director General	—	தலைமை இயக்குநர்
Directorate of Resettlement and Training	—	மறு குடியேற்றம் மற்றும் பயிற்சி இயக்குநர் அலுவலகம்
Director General of Supplies and Disposals	—	அளிப்பு மற்றும் வழங்கு தலைமை இயக்குநர்
Director of Commercial Audit	—	வாணிகத் தணிக்கை இயக்குநர்
Discipline	—	ஒழுங்குமுறை
Discriminating Price Policy	—	வேறுபாடுடைய விலைக் கோட்பாடு
Dividend	—	பங்காதாயம்
Divisible profit	—	பகிர்தகு இலாபம்
Diversify	—	வகையகற்சி செய்

E

Efficiency Audit	—	திறமைத் தணிக்கை
Elasticity of Demand	—	தேவை நெகிழ்வு
Electronic Equipments	—	மின்னணுச் சாதனங்கள்
Engineer	—	பொறியியலாளர்
Estimates Committee	—	மதிப்பீட்டுக் குழு
Equity Shares	—	பொதுநிலைப் பங்குகள்
Executor	—	நிறைவேற்றுநர்
Ex-gratio Payment	—	பரிவாதார ஊதியம்

F

Factory	—	ஆலை
Ferro Manganese	—	இரும்பு அடங்கிய மங்கனம்
Financial Year	—	நிதியாண்டு

Financial Forecast — நிதி முன்கணிப்பு
Fiscal Commission — நிதிக் கூட்டுரு
Fixed Asset — நிலைச் சொத்து
Flexible — நெகிழ்வுடைய
Floor Price — தரைமட்ட விலை
Fluctuation — ஏற்றிறக்கம்
Food Corporation of India — இந்திய உணவுக் கூட்டுரு
Foreign Trade — அயல்நாட்டு வாணிகம்
Freight — சரக்குக் கட்டணம்
Fuel — எரிபொருள்

G

General Manager — பொது மேலாளர்
Guarantee — பொறுப்புறுதி

H

Handicrafts and Handlooms Export Corporation of India — இந்தியக் கைத்தறித்தொழில் ஏற்றுமதிக் கூட்டுரு
Head Office — தலைமையகம்
Heavy Engineering Corporation — கனரகப் பொறியியல் கூட்டுரு
High Pressure — உயர் அழுத்தம்
Hindustan Antibiotics — நோய்த்தடுப்பு மருந்துகள் உற்பத்தி நிறுவனம்
Hindustan Copper Ltd. — இந்துஸ்தான் தாமிர நிறுவனம்
Hindustan Latex Ltd., — இந்துஸ்தான் இரப்பர் நிறுவனம்
Hindustan Machine Tools Ltd., — இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் நிறுவனம்
Hotel — உணவகம்

I

Incentive Bonus — ஊக்கக் கொடையூதியம்
Incentive Schemes — ஊக்கத் திட்டங்கள்
Indian Airlines Corporation — இந்திய வான்வழிக் கூட்டுரு
Indian Industrial Commission — இந்தியத் தொழிற் குழு
Industrial Developmet Bank of India — இந்தியத் தொழில்வள வங்கி
Industrial Revolution — தொழிற் புரட்சி

Industrial Policy	—	தொழிற் கொள்கை
Industrial Conference	—	தொழிற் கருத்தரங்கு
Industrial Tribunal	—	தொழிற் தீர்ப்பாயங்கள்
Industrial Disputes	—	தொழிற்பூசல்கள்
Industries (Development and Regulation) Act, 1951	—	1951ஆம் ஆண்டின் தொழில் (விரிவுபடுத்தும் மற்றும் கட்டுப்படுத்தும்) கொள்கை
Industrial Finance Corporation of India	—	இந்தியத் தொழில் நிதிக் கூட்டுரு
Inflation	—	பணவீக்கம்
Infra structure	—	உள்ளமைப்பு
Insurance	—	காப்பீடு
Internal Savings	—	அகச் சேமிப்புகள்
International Trade	—	பன்னாட்டு வாணிகம்
International Market	—	பன்னாட்டுச் சந்தை
Integral Coach Factory	—	இணைப்புப் பெட்டித் தொழிற் சாலை
Investment	—	முதலீடு
Iron Ore	—	இரும்புத் தாது
Irrigation	—	நீர்ப்பாசனம்
Investment Trust	—	முதலீட்டுப் பொறுப்புரிமைக் குழு

J

Job Security	—	வேலைப் பாதுகாப்பு அல்லது பணிப் பாதுகாப்பு
Joint Sector	—	கூட்டுத் துறை
Joint Management Council	—	கூட்டு மேலாண்மை அவை

L

Labour Government	—	தொழிற் கட்சி அரசு
Laissez-faire	—	தலையிடாமை
Large Scale Production	—	பேரளவு உற்பத்தி
Licence	—	உரிமம்
Life Assurance	—	ஆயுள் காப்பீட்டுறுதி
Life Insurance Corporation	—	ஆயுள் காப்பீட்டுக் கூட்டுரு
Lock - out	—	கதவடைப்பு
Localisation	—	தொழில் இடச் செறிவு
Location	—	இடவமைப்பு
Loyalty	—	விசுவாசம்

M

Management Accountancy	—	மேலாண்மைக் கணக்கியல்
Managing Director	—	மேலாண்மை இயக்குநர்
Manufacturing Account	—	தயாரிப்புக் கணக்கு
Marginal Cost of Production	—	இறுதிநிலை உற்பத்திச் செலவு
Marketing	—	சந்தையிடுகை
Maximum Level	—	உயர்ந்தபட்ச நிலை
Mineral	—	கனிப்பொருள்
Minerals and Metals Trading Corporation	—	இந்தியக் கனிப்பொருள்கள் உலோக வாணிகக் கூட்டுரு
Mining	—	சுரங்கத் தொழில்
Ministry	—	அமைச்சகம்
Mixed Economy	—	கலப்புப் பொருளாதாரம்
Monopoly	—	முற்றுரிமை
Multipurpose Projects	—	பலநோக்குத் திட்டங்கள்

N

National Coal Development Corporation of India	—	இந்தியத் தேசிய நிலக்கரி வளர்ச்சிக் கூட்டுரு
National Small Industries Corporation	—	தேசியச் சிறு தொழில்கள் கூட்டுரு
National Research and Development Corporation	—	தேசிய ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக் கூட்டுரு
Neutrality	—	நடுநிலைமை

O

Oil and Natural Gas Commission of India	—	இந்திய எண்ணெய் இயற்கை வாயுக் கூட்டுரு,
Operating Cost	—	இயக்கஅடக்கச் செலவு
Optimum Level	—	மிகச் சிறந்த நிலை
Out-put	—	உற்பத்தி
Over-Draft	—	மேல்வரைப் பற்று
Over-heads	—	மேற்செலவுகள்

P

Parliamentry Control	—	நாடாளுமன்றக் கட்டுப்பாடு
Payment of Bonus Act, 1965	—	1965 ஆம் ஆண்டின் கொடை ஊதியம் வழங்கும் சட்டம்
Personnel	—	ஆளினர்
Patronage Dividend	—	ஆதரவுப் பங்காதாயம்

nning Commission — திட்ட ஆணைக்குழு
icy — கொள்கை
'ort-Trust — துறைமுகப் பொறுப்பாண்மைக் குழு
'rice Policy — விலைக் கொள்கை
-'rivate Sector Industries — தனியார்துறைத் தொழிலமைப்புகள்
Process — பதனஞ் செய்தல்
Projects — திட்டங்கள்
Profit Sharing — இலாபத்தில் பங்களித்தல்
Propriety Cost — ஒழுங்குமுறைமைச் செலவு
Prospectus — தகவலறிக்கை
Public Accountability — பொதுப் பொறுப்புடைமை
Public Accounts Committee — பொதுக் கணக்குகள் குழு
Public Enterprises — பொதுத்துறைத் தொழிலமைப்புகள்
Publicity — பரப்புகை
Public Utility Concerns — பொதுப்பயன் நிறுவனங்கள்
Public Trust — பொதுப் பொறுப்பாண்மைக் குழு

R

Rätionalisation — சீரமைப்பு
Recommendations — பரிந்துரைகள்
Recruitment — பணியிலமர்த்தல்
Region — வட்டாரம்
Regional Economic Councils — வட்டாரப் பொருளாதாரக் குழுக்கள்
Regional Monopoly — வட்டார முற்றுரிமை
Rehabilitation — மறுவாழ்வு
Reserve bank of India — இந்திய ரிசர்வ் வங்கி
Returns on Capital — மூலதனத்தின் மீதான மீள்வரவு
Revolving Fund — சுழல் நிதி
Risk — இடர், இழப்பாபத்து
Risks-bearing — இடர் ஏற்பு

S

Scientific Plan — இயல்முறைத் திட்டம்
Sector Corporation — துறைக் கூட்டுரு

Singareni Collieries — சிங்கரேணி நிலக்கரிச் சுரங் நிறுவனம்
Speculation — ஊக வாணிகம்
Standard — வரையளவு
State Trading Corporation — இந்திய அரசு வாணிகக் கூட்டுரு
Stock — பங்குத் தொகுப்பு
Strike — வேலை நிறுத்தம்
Subordinates — கீழ்ப் பணியாளர்கள்
Subsidiary — துணையமைப்பு
Subsidy — மானியம்
Supplementary Audit — இணைக்கூட்டுத் தணிக்கை

T

Target — குறி எண்
Technical — தொழில் நுட்பம்
Tender — ஒப்பந்தப்புள்ளி
Tennessee Valley Authority — டென்னசீப் பள்ளத்தாக்கு ஆணைக்குழு
The Administrative Reforms Commission — நிருவாக மறுசீரமைப்புக் குழு
The Board of Scientific and Industrial Research — விஞ்ஞான மற்றும் தொழிலமைப்பு ஆராய்ச்சிக் குழு
The Bureau of Public Enterprises — பொதுத்துறைத் தொழிலமைப்புகளின் புள்ளி விவரச் சேகரிப்புப் பணியகம்
The Study Team on Public Sector — பொதுத்துறையின் மீதான ஆய்வுக் குழு
The Taxation Enquiry Commission — வரி விசாரணைக் குழு
Tripartite Board of Directors — முப் பகுதிகளைக் கொண்ட இயக்குநரவை
Turn-over — வாணிகப் புரள்வு

U

Unskilled Workers — தேர்ச்சிபெறாத் தொழிலாளர்கள்

W

Welfare State — நலங்காக்கும் அரசு